கலைமகள்

மலர் 1980
Regd. No. M. 2748
Supplement to Kalaimagal Dated 1-11-80



பைசன் பனியன் தர நிர்ணயம் செய்யப்பட்டது.

மானேஜிங் பார்ட்னர்: மில்லர் T. ராமசாமி

ஷோ-ரூம்: 145, லாயிட்ஸ் ரோடு, சென்னை - 600086 போன்: 82880; ராஜவீதி, ஒப்பணக்கார வீதி மூலை, கோயமுத்தூர்-1 போன்: 24973; 4-A, P. C. குவார்டர்ஸ், பிராட்வே, சென்னை-1; 188, சம்பகிரோடு, மல்லேஸ்வரம், பெங்களூர்.3., படேல் ரோடு கிராஸ்கட் ரோட் சந்திப்பு, காந்திபுரம், கோவை.

வாசகர்களுக்கு மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

The gift idea that always clicks.

Gifting the Agfa Camera is another way of saying "Smile please!" Agfa Cameras are available from Rs. 85/- upwards. There is a camera to suit every pocket. These cameras are made to international standards and are available from over 1300 AGIL dealers all over India.

Click III

Isoly–II

GIVE A SMILE. GET A SMILE.

1st for everything in photographics

Agfa® AGIL

AGFA-GEVAERT INDIA LIMITED

Registered Office: Merchant Chamber, 41 New Marine Lines, Bombay 400 020 • Branches: Bombay New Delhi • Calcutta • Madras • ® Registered Trademarks of Agfa-Gevaert, Antwerp/Leverkusen.

SIMOES/AGI/1680

எஃகு மலருது-ஜாம்ஷெட்பூர் மண்மீது, மக்கள் மலர்ச்சிக்கு.



எஃகு விளைவிக்கும்
கரங்களால் எழில்ரோஜா...
யாருக்காக
விளைகின்றோம்--
சோலையில் ரோஜாவும்
ஆலையில் எஃகும்
மக்களுக்காகவே—இங்கு
மலர்வது எதற்கும்
மக்களே சந்நிதி, யாவும்
மக்கள் நிதி!

பண்டைய நாளே
இந்த ஒளி கண்டோர்
டிஸ்கோ; அதுமுதலே
தரமோங்கி, உற்பத்தித்
திறமோங்கி வருகுது
இங்கே--70 வயதுத்
தொழிற்சாலை இதன்
முதுமைக்கு இளமை
முறுக்கேற்றும் வளமைப்
பணி யாருக்கோ?

மக்களுக்கு--எஃகு
உபயோகிப்பார்க்கு,
எஃகுத் தொழிலாளருக்கு,
இந் நாட்டுக்கு...

இவ்வளவும் எதற்காக?...
மக்கள் நிதி இதுவே
எனக் கண்டு அதனை
மிக்கப் பெருக்கி
மக்களிடமே சேர்ப்பித்து
வரும் அறுபதினாயிரம்
ஊழியர்களுக்கு அதுவே
வாழ்வு---அதுதான்
டிஸ்கோ. பேணி
வளர்த்தால் பெருகும்
வளர்ச்சி எதற்கும்
உண்டு; எஃகுக்கு,
மலருக்கு, மக்களுக்கு.

எழுபதாண்டுகளாகத் தழைத்தோங்கும் கற்பகப் பொற்கனவு-ஜாம்ஷெட்பூர்.

டிஸ்கோ

லின்டாஸ்-TISCO-15-2317 TM

தீபாவளி
வாழ்த்துக்கள்
TVS
சதர்ன் ரோட்வேஸ் லிமிடெட்
லக்ஷ்மி பில்டிங், உசிலம்பட்டி ரோடு,
கோச்சடை, மதுரை 625 016
கிளைகள்: சென்னை, கோயம்புத்தூர், பெங்களூர், சேலம்,
மதுரை, செகந்திராபாத், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விஜயவாடா.
SAA SRL/1394

அருள்ஒளி விளங்கிட ஆணவம் எனும்ஓர்
இருள்அற என்உளத்து ஏற்றிய விளக்கே!

துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்உளத்து ஏற்றிய விளக்கே!

மயல்அற அழியா வாழ்வுமேன் மேலும்
இயல்உற என்உளத்து ஏற்றிய விளக்கே!

இடுவெளி அனைத்தும் இயல்ஒளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே!

- திருஅருட்பா

விளம்பர உதவி:

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

73-ஏ, ரேஸ்கோர்ஸ் ரோடு,

கோயமுத்தூர்-641018.

பொறியைத் தட்டியதுமே...

காம்ப்டாலக்ஸ் துணிகளின் டிசைன்களைத் தனித்தொளிரச் செய்கிற்து பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் வகையிலே.

தங்கத்திலே மேலும் அதிக ஜொலிப்பு— காம்ப்டாலக்ஸ் மூலம்.

காம்ப்டாலக்ஸ், அழியா நுகர் பொருள்களை ஒளிரச் செய்கிறது.

HTB-PEI-6203

காம்ப்டாலக்ஸ், எடுத்துப் பொருத்திடக் கூடிய, எத்தேவைக்கும் ஏற்ற ஒளிமூலமாகும். ஷேடுகளோ, இணைப்புகளோ தேவையில்லை. பொருத்துங்களேன், பொறியைத் தட்டியதும், அதன் விற்குந் திறனை அறியலாமே!

PHILIPS

காம்ப்டாலக்ஸ்

எத்தேவைக்கும் ஏற்ற அக்ஸெண்ட்லைட்.

பிலிப்ஸ்

50 ஆண்டுகளாக இந்தியாவில்

மகிழ்ச்சி தரும்
இப்பண்டிகை போல்
மகிழ்ச்சி தரும் பரிசு பாரத் டிவி



20" Solid State Plain BT 202



20" Urvashi Solid State



20" Solid State BT 888



20" Plain Hybrid

The only TV to incorporate
Aviation Electronics Technology
using most accurate circuitry, for total reliability.

Super Sound
Super Clarity
Super Service

Bharat TV

A feast to your eyes
A lullaby to your soul

offices: Hyderabad, Bombay, Calcutta, Madras.

வளர்ந்து வரும் எங்கள் நிறுவனம் வளர்வது உங்கள் நம்பிக்கையில்



சுந்தரம் பைனான்ஸ்—வளமையின் வரலாறு

சுந்தரம் பைனான்ஸ், 1954ல், இரண்டு லட்ச ரூபாய்கள் மூலதனத்துடன் சிறிய அளவில் துவக்கப்பட்டது. இன்று, 26 ஆண்டுகளுக்குப் பின், செலுத்தப் பட்ட மூலதனம் ரூ. 200 லட்சங்களாக வும், ஒதுக்கீடுகள் ரூ. 172 லட்சங்களாக வும் வளர்ந்திருக்கின்றன. கம்பெனியின் மொத்த சொத்துக்கள் 1979, டிசம்பர் 31ந் தேதியில் ரூ. 45 கோடிகளுக்கும் அதிகமாக வளர்ந்தன.

வாடிக்கையாளர் சிறியவராயிருப்பினும் சரி, பெரியவராயிருப்பினும் சரி, அவருக்கு முழுமையான சேவை அளிப்பதை இந்நிறுவனம் தொடக்கத்திலிருந்து தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இன்று, இந்நிறுவனத்துடன் 6700 வாடிக்கையாளர்களும், 23,000க்கும் மேற்பட்ட டெபாசிட்தாரர்களும் தொடர்பு கொண்டுள்ளனர்.

வளர்ந்து வரும் நம்பிக்கை—அதன் இனிய விளைவுகள்

ஒவ்வொரு வருடமும், சுந்தரம் பைனான்ஸிற்கு அதிகமான வாடிக்கையாளர்களும், டெபாசிட்தாரர்களும் வந்து கொண்டிருக்கின்றனர். காரணம், கடந்த ஆண்டுகளில் இந்நிறுவனம், சேவை மற்றும் நம்பகத்தன்மை இவற்றின் மூலம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது.

அது மட்டுமல்ல, கடந்த ஆண்டுகளில் இக் கம்பெனியின் பங்குகளின் மதிப்பு மிக அதிக அளவு உயர்ந்திருக்கிறது—வளர்ந்து வரும் நம்பிக்கைக்கு, நிச்சயமானதோர் அறிகுறி.

இவ்வளமை நீங்கள் அளித்த பரிசு

நீங்கள் எங்கள் வளர்ச்சிக்கு உதவியளித்தது மட்டுமல்ல, நாங்கள் சாலைப் போக்குவரத்துத் தொழிலுக்குப் பணிபுரிய ஆதரவளித்திருக்கிறீர்கள். மேலும், உங்களுக்குச் சேவை செய்ய வாய்ப்பளித்திருக்கிறீர்கள்.

சுந்தரம் பைனான்ஸ், இந்தியாவிலேயே மிகப் பெரிய தவணை முறைப் பண உதவி நிறுவனமாகத் திகழ்வதில் வியப்பொன்றும் இல்லை.

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்

180, மவுண்ட் ரோடு, சென்னை 600 006.

SAA/SFI/1170

PALAYAKAT COY. PVT. LTD. MADRAS MADRAS.
REGD. TRADE MARK
பளயகாட்ஸ்
சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்
மதராஸ் பளயகாட் கம்பெனி(பி) லிட்.
88, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600001
CHARI


தீபமதின் ஒளியதனில்
தீவினைகள் அகலக் காண்போம்!
ஞாலமதின் எண் திசையும்
மின் விசைகள் பெருகச் செய்வோம்!
BHEL
அஞ்ஞானமாகிய இருளினின்று
ஞானமாகிய ஒளியிலக்கு
அழைத்துச் செல்ல கோருகிறது மறை.
நாட்டின் இருளகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும்
திருச்சி BHEL நிறுவனம், இந் நன்னாளில்
நாட்டின் கல்லாமை இருள், வறுமை இருள்
அகல, தன் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறது.
BHEL
மக்களுக்கு
சக்தி
பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
திருச்சிராப்பள்ளி-620 014
பதிவு பெற்ற அலுவலகம்
18-20 கஸ்தூரிபா காந்தி மார்க்,
புது டெல்லி-110 001
SAA/BHEL/1417



Just like a seed, technology too needs the right climate to grow up.

Especially when it is the kind of sophisticated technology the Amalgamations Group of Industries have built up themselves and acquired through their association with world-renowned organisations like Perkins Engines Ltd., U.K., Massey-Ferguson Ltd., Canada, Associated Engineering Ltd., U.K., Ambrose Shardlow & Co. Ltd. of G.K.N. Group, U.K., L.M. Van Moppes & Sons Ltd., U.K., Gould Inc., U.S.A. and Repco Ltd., Australia.

Amalgamations provide the right soil for technology to grow up. Our technical skill and expertise are helping us play a key role in the country's economic growth.

Our products go out to over 87 countries of the world. Which is a tribute to our technological standards.

Simpson & Co. Ltd.
Addison & Co. Ltd.
Addisons Paints & Chemicals Ltd.
Amco Batteries Ltd.
Amalgamations Repco Ltd.
Bimetal Bearings Ltd.
India Pistons Ltd.
Indiapistons-Repco Ltd.
Reichhold Chemicals India Ltd.
Shardlow India Ltd.
Tractors and Farm Equipment Ltd.
L.M. Van Moppes Diamond Tools India Ltd.
The Wheel & Rim Co. of India Ltd.
Associated Printers (Madras) Ltd.
Associated Publishers (Madras) Ltd.
(Proprietors of 'The Mail')
George Oakes Ltd.
Higginbothams Ltd.
The Madras Advertising Co. Ltd.
Simpson & General Finance Co. Ltd.
Speed-A-Way Ltd.
Sri Rama Vilas Service Ltd.
T. Stanes & Co. Ltd.
Stanes Tyre & Rubber Products Ltd.
Stanes Motors (South India) Ltd.
The United Coffee Supply Co. Ltd.
Indian Cashewnuts and Plantations Ltd.
Stanes Amalgamated Estates Ltd.
Wallace Cartwright & Co. Ltd., U.K.
Malaysia Pistons Sdn. Bhd., Malaysia
The United Nilgiri Tea Estates Co. Ltd.

AMALGAMATIONS LIMITED

861, Anna Salai
Madras-600 002

MAC/AMAL/101A/78

அனைவருக்கும் எங்கள் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

முழு நிலவின் பவனிபோல்
கலை நிலவின் ஒளிவீசும்
கவின்மிகு பட்டுப்புடவைகளும்
காணக் கிடைக்காத கணக்கற்ற
ஜவுளி ரகங்களும் தேர்ந்தெடுக்க
உங்களின் கீதாவுக்கு விஜயம்
செய்யுங்கள்.

உவகைதரும் உன்னத
ஜவுளிகளின் இருப்பிடம்.

கீதா சில்க் & சாரி பஜார்

31, N.S.B. ரோடு,
திருச்சி 620 002.

பட்டுப்பகுதி
ஏர்கண்டிஷன் வசதியுடன்

CROWN/GS/362

வாழ்த்துகள்!

பாங்க் ஆ:ப் பரோடா கி:ப்ட் செக்
புதுமையான வாழ்த்து!

அன்பளிப்புகளைத் தேர்ந்தெடுப்பதை விட மிக வசதியானது. பணமாக அளிப்பதைவிட மிகப் பாங்கானது.

பாங்க் ஆ:ப் பரோடாவின் எந்தக் கிளைக்கு வேண்டுமானலும் வாருங்கள். விசேஷமான கி:ப்ட் செக்கைப் பெற்றுக் கொள்ளுங்கள். திருமணம், பிறந்தநாள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சி களில் நீங்கள் அன்பளிப்பாக வழங்க, ரூ. 101, ரூ. 51, ரூ. 21 மற்றும் ரூ. 11 ஆகிய மதிப்பினங்களில் இந்தச் செக் கிடைக்கிறது. இதனைப் பெறுவோர் (பாங்க் ஆ:ப் பரோடாவில் அவர் கணக்கு வைத்திருக்கும் அவசியமில்லை) இந்தச் செக்கை எந்தக் கிளையிலும் பணமாக்கலாம் அல்லது எந்த ஒரு பாங்கிலும் தம் கணக்கில் போடலாம்.

பாங்க் ஆ:ப் பரோடா கி:ப்ட் செக்-புதுமையான வாழ்த்து!

பாங்க் ஆ:ப் பரோடா
(இந்திய அரசுக்குச் சொந்தமானது)

ULKA/BOB/GC/2-TAM

கால வண்ணம்

நீல வானின் நித்திலபழம் பந்தர்கீழ்
கோல எழில் காட்டிக் கூடி மகிழ்ந்தான்
பாலை நிலத்தில் பாயும் நதியானான்
வாலைக்குமரி என் வாழ்வின் ஒளியானான்

விலையிலா இன்பம் வாரித் தந்தபின்
அலையுறு நெஞ்சில் அனலைத் தெழித்தான்
இலையுதிர் காலத்தில் எனைவிட்டுச் சென்றான்
கொலைகழல் மன்னவன் மீண்டும் வருவானோ?

ஒவ்வொரு
காலத்திற்கும்
உகந்த வண்ணம்
அப்கோலைட்
ஸூப்பர் அக்ரிலிக்
எமல்ஷன்
தருமே திண்ணம்!

எஷியன்
பெயிண்ட்ஸ்

ஒவ்வொரு முறையும் ஒரு டன் அதிகம்
ஒவ்வொரு ஆண்டும் ரூ 20,000 அதிகம்

இந்தியாவின் முதன் முதலான 13 டன்னர் அசோக் டஸ்கர், ஒவ்வொரு முறையும் சரக்கெடுத்துச் செல்லும்–போது ஒரு டன் அதிகமாகவே எடுத்துச் செல்கிறது. **அதனுல் ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ரூ. 20,000 அதிமாகக் கிடைக்கிறது.**

அசோக் லேலண்டின் ஆராய்ச்சிப் பகுதியின் கண்டுபிடிப்பான அசோக் டஸ்கர், மேலும் ஒரு டன் அதிக சரக்கெடுத்துச் செல்லும் வகையில் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. ஆனுல் அதேசமயம் அனுமதிக்கப்பட்ட ஆக்ஸில் பளுவான 8 டன்களை மீறவும் இல்லை.

ஒவ்வொரு முறையும் சரக்கெடுத்துச் செல்லும்-போது ஒரு டன் அதிக அளவில் சரக்கெடுத்துச் செல்வதால் எவ்வளவு வருமானம் என்பதை கணக்கெடுத்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 வரையில் அதிகமாகக் கிடைப்பதைக் காணலாம்.

அதிக அளவில் சரக்கேற்றிச் செல்லும் வசதி

சரக்குகளை ஏற்றிச் செல்லும் பகுதி நீண்டு, அகன்று இருப்பதால் அதிக பளுவானதும் பெரிதுமான சரக்குகளையும் வசதியாக இதில் ஏற்றிச் செல்லலாம்.

அதிக சக்தியளிக்கும் எஞ்ஜின்

டஸ்கரில் பொருத்தப்பட்டுள்ள எஞ்ஜின் மிக சக்தி வாய்ந்தது. நிமிடத்திற்கு 2400 சுற்று வேகம் கொண்ட AL 400 125 BHP எஞ்ஜின் பொருத்தப்பட்டிருப்பதால், நிமிடத்திற்கு 1600 சுற்று உந்து வேகத்திலேயே மீட்டருக்கு 41.5 கிலோ எடையை விரைவாக எடுத்துச் செல்லும் சக்தியைப் பெற்றிருக்கிறது. இதனுல் ஏற்படும் பலன்கள்: வண்டிக்கு அதிக அளவில் சரக்குகளை இழுத்துச்செல்லும் சக்தி, அதிக அளவில் வீணுகும் சக்தி தடுக்கப்படுதல், மற்றும் ஏற்றும் எடைக்கேற்ப விரையும் தன்மை.

இவைமட்டுமா! அசோக் லேலண்ட் பொறியியல் வல்லுநர்களின் ஆராய்வின்படி தயாரிக்கப்படும் எஞ்ஜின்களில் அமைந்துள்ள பிஸ்டன்கள் விசேஷ முறையில் தயாரிக்கப்-பட்டவை, லேனர்கள் உறுதியாக்கப்பட்டவை, அதிகநாள் உழைப்பவை, குறைந்த அளவில் எஞ்ஜின் ஆயிலைப் பயன் படுத்தக்கூடியவை.

மற்றைய சிறப்புகள்

37.5 சென்டிமீட்டர் குறுக்களவு கொண்ட பெரியதும், உறுதியானதுமான கிளட்ச்—எஞ்ஜின் தரும் உந்து வேகத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்டது.

அதிக அளவிலான பிரேகிங் சக்தி—வண்டியின் அதிக டிரைவிங் சக்திக்கேற்ப, மொத்த பிரேகிங் இடம் 3580 சதுர சென்டி மீட்டர்கள்.

உறுதியான, பெரிதான முன் ஆக்ஸில் பீம்கள், முன் ஆக்ஸில் பேரிங்குகள், புரொபல்லர் ஷாஃப்ட்கள் மற்றும் ஆக்ஸில் ஆர்ம்கள் — அனைத்தும் கூடுதல் பளுவினை ஏற்றிச் செல்வதற்-கென்றே வடிவமைக்கப்பட்டவை.

அசோக் லேலண்ட்
-வளர்ச்சியெனும் சக்கரத்தின் நளப்விலா சுழற்சி

அசோக் லேலண்ட் லிமிடெட்
எண்ணூர், சென்னை 600 057

SAAJ/AL/1268

1911ம் ஆண்டில், தென் இந்தியாவில், முதன்முதலாக பயணிகள் பஸ் போக்கு வரத்தை டிவிஎஸ் தொடங்கியது. அன்று தொடங்கிய பணி முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்கிறது. வளர்ந்து, விரிந்து, முழுமையான பணியின் மூலம் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பும் நம்பிக்கையும் பெற்று, அவர்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது.

உங்கள் தேவை எதுவானாலும் டிவிஎஸ்ஸை அணுகுங்கள்... கார், லாரி மற்றும் பஸ் வாங்கவோ, தேவையான சீரிய தரம் மிக்க மோட்டார் உறுப்புகளைத் தேர்ந்தெடுக்கவோ, மேலும், உங்கள் வண்டிகளில் காணப்படும் எந்த விதமான பழுதுகளையும் சீர் செய்யவோ, தென்னிந்தியா முழுவதும் உள்ள டிவிஎஸ் விற்பனை மற்றும் பணி நிலையங்களை நாடுங்கள். அவைகள் உங்களுக்குத் தேவையான பணிபுரியக் காத்திருக்கின்றன.

டிவிஎஸ்ஸில் உங்களுக்குக் கிடைப்பது தரமான சேவை. இவ்வித சேவையே நூற்றுக் கணக்கான திருப்தியடைந்த வாடிக்கையாளர்களின் இதயங்களில் டிவிஎஸ்ஸிற்கு நீங்காத இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. அவர்களில் பலர் பல ஆண்டுகளாக டிவிஎஸ்ஸிற்குத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றனர்.

டிவிஎஸ்ஸிற்கு வருகை தாருங்கள். உங்கள் இதயத்திலும் நாங்கள் இடம் பெறுவதைக் காண்பீர்கள்.

TVS

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி.வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்.

டிவிஎஸ் தொடங்கியது சிறியதொரு பஸ் போக்கு வரத்து நிறுவனம்... இன்று அமைத்திருப்பதோ வாடிக்கையாளர்களின் இதயங்களுக்கு ஒரு சீரிய பாதை.



SAA/TVS/904

ADDISON
ESTABLISHED-1873

Leaders in Cutting Tool Technology

Vast experience in design, development and manufacture of a wide and varied range of Cutting Tools has made ADDISON the principal supplier of Engineers' Cutting Tools to all the major Industries in India and to many in Europe, U.S.A. and Canada.



Range includes

Bore type Milling Cutters-Form Relieved and Non Form Relieved, Shank-type Cutters, Reamers, Core Drills, Taper Shank and Straight Shank Twist Drills, Ground Thread Screwing Taps and Carbide -Tipped Multipoint Tools. Tools manufactured to ISS-BSS and Special Tools to customers' specifications.

Addison & Company Ltd.,

(A Unit Company of the Amalgamations group &
A member of the Gauge & Tool Makers' Association, U.K.)

Mount Road, Madras 600 002

Branches at : Bangalore, Bombay, Calcutta, Ernakulam, Kanpur, Ludhiana, Madras and New Delhi
J.N.Marshall & Co - Bombay, Ahmedabad, Rajkot and Pune

MAC/ADD/119

JFM

Hearty Deepavali Greetings

Gram : MAIDA *Phone : 23514*

Jupiter Flour Mills (P) Limited

24, SUBJAIL ROAD, TRICHY-620 008



Manufacturing :

"JUPITER BRAND"

MAIDA, SOOJI,

ATTA AND BRAN

Factory :

SENTHANNIPURAM

TRICHY - 620004

Managing Directors : **N. Subramania Chettiar,** *Ex M.L.A.*

R. M. Krishnamurthy

Manufacturers of Superior Brand

Best Quality

30 Tons Automatic Avery Lorry Weigh BRIDGE

நாகசுந்தரம்

நிச்சயமாக நிற்க வேண்டிய இடங்களில் நம்பகமான பிரேக் உறுப்புகள்

பிரேக்ஸ் இந்தியா கர்லிங் மோட்டார் உறுப்புகளை உபயோகித்து சாலைகளில் உங்கள் பாதுகாப்பை நிச்சயமாகப் பெறுங்கள்.

TVS

பிரேக் பராமரிப்பினைப் பற்றிய புத்தகத்தை இலவசமாகப் பெறுவதற்கு, உங்களுடைய பெயர் மற்றும் முகவரியை எங்களுக்குத் தெளிவாக எழுதுங்கள்.

பிரேக்ஸ் இந்தியா லிமிடெட்

பாடி, சென்னை 600 050

SAA/BI/011



सर्वेऽत्र सुखिनः सन्तु सर्वे सन्तु निरामयाः।
सर्वे भद्राणि पश्यन्तु न कश्चित् दुःखमाप्नुयात्॥

தீபாவளி வாழ்த்துக்கள்
ஸ்டேட் பாங்க்

CHAITRA-SBI-664 TAM

21 லட்சம் புதிய நபர்கள், கடந்த ஆண்டில், டெட் கட்டியை உபயோகித்தார்கள்

இதற்கு முக்கிய காரணம்— டெட் தரும் சிறப்பான சலவை

இன்று முன்னைவிட ஏராளமான மக்கள் டெட் கட்டியின் சிறப்பான சலவையை விரும்புகிறார்கள், இது பளிச்சிடும் வெண்மை தருகிறது. அதிக நாள் உழைக்கிறது, மிகவும் சிக்கனமானது என்கிறார்கள்.

சிறந்த டிடர்ஜெண்ட் கட்டிகளின் வளர்ச்சி	
	புது வாடிக்கையாளர்கள்
டெட் கட்டி	**21,00,000**
இதற்கடுத்த சிறந்த கட்டி	14,00,000
மொத்தம் 49,00,000 புது வாடிக்கையாளர்கள்	
ஆதாரம்: ரிடெய்ல ஸ்டோர் ஆடிட ரிபோர்ட்: ஜனவரி— டிசம்பர் 1979 உபயோகத்துக்கு ஆதாரம்: 1 கட்டி, மாதம் ஒன்றுக்கு. ஒரு நபருக்கு.	

21,00,000 புது நபர்கள் டெட் கட்டி உபயோகிக்கத் தொடங்கிவிட்டார்கள். நீங்கள் தொடங்கிவிட்டீர்களா?

டெட் கட்டி

உபயோகியுங்கள்
வெண்மையை நாடுங்கள்

Shilpi-DM-14A/80 Tam

தமிழ்—
அகத்தின்
அழகு
முகத்திலே
தெரியும் !
நரசுஸ்
காபி
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ஜீவனுள்ள ஒரே காபி
நரசுஸ்
"தெர்மலோ" காபி
நரசுஸ் அளிக்கும் 53-வது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
ADWAVE NC/1498

கோத்ரெஜ்® ஸ்டோர்வெல்!®

கொடுக்கும் பணம் கொஞ்சம் கூடுதல் எனினும், கிடைக்கும் பயன்கள் கொஞ்சம் கூடவே!



கூடுதல் உறுதி. நிறைந்த பாதுகாப்பு. தேர்ந்தெடுக்க அதிகமான வாய்ப்புகள். நீடித்த உழைப்பு.

கூடுதல் உறுதி:
தரமான எஃகில் தயாரானது. துருப் பிடிக்காது. ஸ்டீல் அலமாரிகளில் அதி நேர்த்தியான மெருகு கொண்டது.

நிறைந்த பாதுகாப்பு:
கதவிலும் லாக்கரிலும் தகர்க்க முடியாத கோத்ரெஜ் பூட்டு. மறைவான கீல்கள். கதவை மேலும் கீழும் இறுக மூட வைக்கும் மும்முனைப் பூட்டுமுறை அமைப்பு.

தேர்ந்தெடுக்க அதிக வாய்ப்பு:
மேலும் கீழுமாக அட்ஜஸ்ட் செய்யக்கூடிய ஷெல்ப்புகள். டை பார், துணி தொங்கவிடும் ராட், லாக்கர், ஆளுயரக் கண்ணாடி, உங்கள் தேவைக்கு ஏற்றபடி இணைத்துப் பெறலாம்.

நீடித்த உழைப்பு:
மூன்று தலைமுறைகளுக்கு உழைக்கும். மேலும் உழைக்க உருவாக்கப்பட்டது.

மாடல்கள்: ஸ்டோர்வெல் வார்ட்ரோப் (படத்தில் கண்டபடி) காம்பாக்ட் மற்றும் மைனர். இப்போது கோத்ரெஜ் ஸேஃப்மைராவும் கிடைக்கிறது.

படங்களுடன் கூடிய விளம்பர பத்திரத்திற்கு எழுதவும்:
கோத்ரெஜ் & பாய்ஸ் மானு. கம். பிரை. லிட்.,
விற்பனைப் பிரிவு, பிரோஜ்ஷா நகர், பம்பாய்-400 079.

உன்னதமான தயாரிப்புகளுக்கு ஒப்பற்றது— கோத்ரெஜ்® Godrej®

ULKA/GBS/1/80 TAM

SOUTHERN RAILWAY

Southern Railway Administration wishes all its patrons a very happy Deepavali.

All passengers are hereby requested not to carry Crackers, Fire Works and other inflammable goods with them while travelling by trains since such Carriage endangers not only their own lives but also that of their co-passengers.

Carriage of explosives by passenger trains is prohibited under sections 59 and 107 of the Indian Railways Act and persons contravening these provisions are liable for prosecution.

Issued by : Chief Public Relations Officer
Southern Railway, Madras-3

For that new sparkling look of the 80's

Addisons the pioneers in paints offer their Acrylac auto finishes in an array of pleasing shades - Fire mist, Teal mist, Sherwood green, Dark green, Jade green, Glacial blue, Comet blue, Tunisian tan, Copper mist and Bronzini gold.

Backed by Addisons intensive research and development - these scintillating finishes effectively resist acid, alkali, oil, petrol and corrosion.

With Addisons Acrylac you can be sure that your car needs minimum of polishing, while retaining superb gloss and superior durability.

Addisons Acrylac

for the fresh look of the 80's.

Addisons Paints & Chemicals Ltd.,
Sembiam, MADRAS-600 011.

Introducing in Madras, Bangalore & Hyderabad Only.

Addisons
Acrylac- AUTO FINISHES

MAC/APC/001

TIIC
ESTD. 1949

டிஐஐஸி

வைப்புத் தோகைகளை கீழ்க்கண்டவாறு ஏற்கிறது/புதுப்பிக்கிறது

அசல் மற்றும் வட்டி, முழுதும் நிபந்தனையின்றி தமிழ்நாடு அரசாங்கத்தால் உத்திரவாதமளிக்கப்படுகிறது.

காலம்	வட்டி விகிதம் (ஒரு ஆண்டுக்கு)
5 ஆண்டுகளுக்கு மேல்	10%
3 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 5 ஆண்டுகள் (உட்பட) வரை	$8\frac{1}{2}$%
ஒரு ஆண்டு மற்றும் அதற்குமேல் மற்றும் 3 ஆண்டுகள் (உட்பட) வரை	7%

மற்ற விவரங்களுக்கு
தயவு செய்து
தொடர்பு கொள்ளவும்

நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு
தொழில் முதலீட்டுக் கழகம்
'அருள் மனை'
27, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி எண்: 83078
டெலக்ஸ்: MIIC-7164
தந்தி: "MINDVEST"

DIPR



A 'Franc' Discussion

Make a 'mark' in the export market.

Export was a risky business involving a lot of trouble.

ECGC covers risks which commercial insurers don't and ensures payment of claim generally after 4 months.

War, revolution, civil disturbances, change in import regulations, moratorium on payments by the buyers government, buyer's insolvency or protracted default to pay for goods accepted and failure to accept goods for no fault of yours.

These are just some of the risks covered by ECGC.

Over Rs.777 lakhs paid as claims during 1979 substantiate our claim as being of 'sterling' worth.

Those with a 'yen' for details contact:

EXPORT CREDIT & GUARANTEE CORPORATION LIMITED
(A Government of India Enterprise)
REGD. OFFICE: Express Towers, 10th Floor, Nariman Point, Bombay 400 021.
Regional Offices: Bombay ★ Calcutta ★ New Delhi ★ Madras

Padmaja 2A

தீபாவளி வாழ்த்துக்கள்!

வளமான வாழ்விற்கு செல்வமே உறுதுணை.
செல்வத்தின் நாயகியான லக்ஷ்மியின்
அருள் பெற்று, சேமிப்புக் கணக்கை
லக்ஷ்மி விலாஸ் பாங்கில் துவக்கிடுவீர்.

லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : கரூர் 639001
நிர்வாக அலுவலகம் : சென்னை 600 086

Tel: "SPIDER" Phone: 20160

பொன்னான நன்னாளாம்

இத் தீபாவளித் திருநாளில்

எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

Spider BANIANS

SHOW ROOMS

ஸ்பைடர் ஷோரூம்
104-A, காமராஜ் சாலை,
திருப்பூர் - 638604

ஸ்பைடர் ஷோரூம்
உரிமைபெற்ற விற்பனையாளர்
ராஜாராம் டெக்ஸ்டைல்ஸ் ஆர்ட்ஸ் காலேஜ்
பஸ் ஸ்டாண்ட், மேட்டுப்பாளையம். எதிர்ப்புறம், மதராஸ்-600002

ஸ்பைடர் ஷோரூம்
141 அண்ணா சாலை,

தயாரிப்பாளர்:

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி

பூர்ண உரிமையாளர்:

P. சகுந்தலா பழனிசாமி

104-A, காமராஜ் சாலை, திருப்பூர் - 638604.

தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
தி லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
ADWAVE/LM/1401

WISHES THE PATRONS A HAPPY DEEPAVALI

Interest free instalment plan !



Solidaire

Televisions

Stereo Systems

AS400 AS800

Since 40 years at your service

S.C.Shah

158, Mount Road, Madras-600 002.
Phone: 83375, 88671

4, Whites Road, Royapettah,
MADRAS-600 014.

8, SARATHI MANSION
Vellore-632004 Phone: 21590 22198

When you wear your best clothes, Pond's thinks you should also wear your best face

Help your face look its most beautiful. Touch it with the softness of Pond's Face Powder. It'll give you a smooth, flawless glow that will last for hours. And hours...

Pond's Face Powder: You'll look as beautiful as it feels.

Pond's

CP 1462

கலைமகள்
தீபாவளி மலர்
1980

மூவண்ணச் சித்திரக் கோவை

சிரஞ்சீவிச் செல்வர்
பார்வதி திருமணம்
கந்தர்வ லோகம் - பாரதியார்

மூவண்ணத்தில்: ஸ்ரீகாஞ்சி காமகோடி ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்

முகப்புப் படம்:
திருத்தணிகை முருகன்

போட்டோ வரிசை:
அவசரம் அவசரமான காட்சிகள்

வண்ணப் போட்டோக்கள்

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் -
புறத்தூய்மைக் காட்சிகள்
ரக்ஷாபந்தன் - காட்சிகள்
ஆடலழகி வாசவதத்தை -
நடன நாடகம்

28 கதைகள்
\+ 7 கட்டுரைகள்
\+ கவிதைகள்
\+ சிறுவர் பகுதி
\+ தீபாவளி ஹாஸ்யங்கள்

அட்டைப் படம்:
மன ஊஞ்சலும்
மர ஊஞ்சலும்

ஜம்போ சேமிப்புத் திட்டம்
தேனீ வைப்புத் திட்டம்
திருமகள் திருமணத் திட்டம்
எங்கள் சேமிப்புத் திட்டங்கள் :
அஷ்டலட்சுமி
அருள்வது நவநிதி!
அண்டினோர் வாழ்வில்
இன்பத் தீப ஒளி!
அனைவர் வாழ்விலும்
அவ்வொளி பரவிட
இனிய தீபாவளி
இன்பத் திருநாளில்
ஏற்றிப் போற்றி
வாழ்த்தி
வணங்குகிறது
கரூர் வைஸ்யா
பாங்க் லிட்..
பதிவு அலுவலகம்: கரூர்.
சேர்மன்.
K.V. இராகவாச்சாரி,

மலரும் மணமும்

ஒளி வரிசையினால் சிறப்புப் பெறுவது தீபாவளி. தீபாவளி என்பதற்கு ஒளிவரிசை என்பதுதான் பொருள். ஆனால் தீபாவளியில் ஒளியின் சிறப்பைவிட ஒலியின் சிறப்புத்தான் மிகுதியாக இருக்கிறது. பட்டாசுகளும் அதிர் வெடிகளும் காதைப் பிளக்கின்றன. படார், படார், டமார், டமார் என்ற ஒலியே வீதியெங்கும் முழங்கக் காது செவிடுபடுகிறது. குழந்தைகளும் கிழவர்களும், ஆண்களும் பெண்களும், ஏழைகளும் செல்வர்களும் ஒருங்கே மகிழ்ச்சியில் திளைக்கும் நாள் இந்தத் திருநாள். விடிவதற்கு முன்பே எண்ணெய் நீராடிப் புத்தாடை புனைந்து, இனிய பண்டங்களை துகர்ந்து, முகத்தில் ஒளி பரவ, அகத்தில் ஆனந்தம் துளும்ப, மக்கள் கொண்டாடும் இனிய நாள் இது; விருந்துணவை உண்டு களிக்கும் ஒளித் திருநாள்.

இந்தத் தீபாவளித் திருநாளில் இந்த வண்ண மலரைத் தமிழ் மக்களின்முன் சமர்ப்பிக்கிறோம். இந்த மலருக்குக் கட்டுரைகளாலும் கதைகளாலும் கவிதைகளாலும் பலர் சுவையூட்டியிருக்கிறார்கள். ஓவியர்களும் நிழற்படக்காரர்களும் இதைப் பொலிவுடையதாக்கி யிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எங்கள் நன்றி.

ஸ்ரீமத் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளைப் பலவகைத் திருக்கோலங்களில் இதில் தரிசித்து, பார்வதியின் திருமணத்தைக் கண்டு, யாக்ஞவல்கியராகிய சிரஞ்சீவிச் செல்வரைப் படக்கோவையில் பார்த்து, பாரதியாருடைய கந்தர்வலோகக் காட்சிகளை வீட்டில் இருந்தபடியே அநுபவித்து, உபகுப்தருடைய வரலாற்றைக் காட்டும் நடன நாடகத்தையும் கண்குளிரக் காணலாம்.

எதிலும் அவசரம், எதற்கும் அவசரமாக வாழ்வது இந்தக் காலம். இப்படி உள்ள அவசரக் கோலங்களைக் காட்டும் நிழற்படக் கோவை ஒன்றை இந்த மலரில் கண்டு இன்புறலாம்.

கட்டுரைகளும் கவிதைகளும் கதைகளும் மலரில் இலக்கிய மணத்தைப் பரப்பி விருந்தளிக்கின்றன. இதோ இலக்கிய விருந்து! உள்ளே புகுந்து நுகர்ந்து மகிழ்ந்து திளைத்து இன்புற்று வாழ்த்துங்கள்!

— ஆசிரியர்

அழகுக்கு மூலாதாரமான
அலங்கார ஆடை. அதனுள்
இழையாகவே மிளிர்ந்து
சிறக்கும் சிக்கனம். அதுவே
சீதாலெட்சுமி பேப்ரிக்ஸ்
நவநாகரிக பேஷன் உலகுக்கு உகந்த
பாலியஸ்டர் சூட்டிங், ஷர்ட்டிங்
வகைகளா? எப்போதும் குளுமை தந்து
நிற்கும் தரம் சிறந்த லாங்-கிளாத்,
கேஸ்மெண்ட் பருத்தி வகைகளா?
பெண்மைக்குப் பேரழகு தந்து பாராட்டு
பெறத் தகுந்த டிசைன்களில் பல
வண்ணப் புடவைகளா? பாரம்பரியத்தைப்
பேணி, எளிமைக்கும் சிக்கனத்துக்கும்
சின்னமான 8, 4 முழம் வேஷ்டிகளா?
வீட்டுக்கும் நாட்டுக்கும் ஏற்றவை—
சீதாலெட்சுமி பேபரிக்ஸ்
சீதாலெட்சுமி மில்ஸ் லிமிடெட்
திருநகர், மதுரை 625 006
SITALAKSHMI
FABRICS
சீதாலெட்சுமி—
அத்தனை வகை
ஆடைகளுக்கும்
அத்தாட்சியான
முத்திரை
UIPC:SF:172

இல்லங்கள் எல்லாம் கலை வண்ணம் தங்கிட
உள்ளங்கள் எல்லாம் உவகையால் பொங்கிட
தீப ஒளியும் கலை ஒளியும்
எங்கும் எதிலும் என்றும்
பளிச்சிட தீபத்திருநாளன்று
பூம்புகார் வழங்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்!
வியப்பூட்டும் சிலையழகும்
விழிப்பூட்டும் கலையழகும்
கலந்து
இல்லங்களை
கலைக் கூடங்களாக்கும்
இணையில்லா
கலைப் பொருட்களஞ்சியம்
பூம்புகார்
கைநுட்பக் கலைத்திறன் பொருட்கள் களஞ்சியம்
பம்பாய் • புதுடெல்லி • பெங்களூர் • சென்னை
மற்றும் இதர தமிழக நகரங்களில்
தமிழ்நாடு கைநுட்பத் தொழில் வளர்ச்சி இணையகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
சென்னை 600 006
FDS HDC 3319

பார்த்தீங்களா...

வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது

ரானிபால்®

துவைத்த துணிகளை அலசுவதற்குமுன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிது ரானிபால் சேர்த்து விடுங்கள். பிறகு பாருங்கள்...சலவையின் வெண்மை—ரானிபால் தரும் வெண்மை பளிச்சிடுவதை! வெண்மையான துணிகள் எதுவாயிருப்பினும்—பருத்தி, செயற்கை இழை அல்லது கலப்பு இழை, எதுவானாலும்—ரானிபால் பளிச்சிடச் செய்கின்றது!

தவறாமல் ரானிபால் உபயோகியுங்கள்... வெண்மையைக் காணுங்கள், காட்டுங்கள்!

பருத்தித் துணிகளுக்கு ரானிபால்® செயற்கை இழை மற்றும் கலப்பு இழைத் துணிகளுக்கு ரானிபால் ®எஸ்

Shilpi-DM-34/80 Tam

OK. See for yourself what the country's leading automotive manufacturers think of Clevite bearings:

Make	% of vehicles fitted with Clevite
Ambassador	60
Ashok Leyland	100
Ford 3600	100
International	100
Jeep	100
Massey Ferguson	100
Premier	50
Tata	100



The most telling testimonial to the quality of an automotive part is when it is selected by the hard-nosed vehicle manufacturer himself. As original equipment.

And Clevite bearings, as you can see, have been selected by not just one, but virtually every leading vehicle manufacturer today. As well as by the makers of Cummins engines.

There is good reason for this: Clevite bearings are made in collaboration with the makers of Clevite bearings in the USA*—the internationally acknowledged leaders in bearing technology. And they are made with sophisticated knowhow and technology no other manufacturer can match. The result: bearings that outclass every other in the market. In terms of sheer performance. And long life.



No wonder Clevite has been India's No. 1 selling bearing. Every year Ever since 1964.

CLEVITE India's No 1 bearing. No 1 performer. No 1 seller.

BIMETAL BEARINGS LTD Coimbatore-641 018

* In technical collaboration with Engine Parts Division of Gould Inc. USA


தித்திக்கும் திருநாளில்—இன்பத்
தீபங்கள் ஏற்றிடுவோம்
Simpson & Co Ltd
சிம்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட்
861/862 அண்ணா சாலை, சென்னை - 600 002
வாகன, தொழிலக மற்றும் டிராக்டர்களுக்குத் தேவையான
பெர்க்கின்ஸ் என்ஜின்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பாளர்கள்.

இப்பொழுது ஸ்டாண்டர்ட்-20 கொடுக்கும் பணத்துக்கு அதிக பெறுமானத்தோடு புதிய அமைப்புகளுடன் கிடைக்கிறது

புதிய பலம் தரும் அமைப்புகள்

புதிய சௌகர்யம் தரும் அமைப்புகள்

புதிய சிக்கனம் தரும் அமைப்புகள்

11 கிலோ மீட்டர் வரை 1.6 டன் எடை ஏற்றிய பிறகும் ஓடுகிறது.





ஸ்டாண்டர்ட்-20 233D மினி லாரி

STAMPRO

ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்,
134, மவுண்ட் ரோடு, சென்னை 600 002.

FDSSMP 2757 TAM

விநியோகஸ்தர்கள் : தி யூனியன் கம்பெனி [மோட்டார்ஸ்] பிரைவேட் லிமிடெட்., 118, மவுண்ட் ரோடு, சென்னை-600002.

Dr. A. மதுரம் குரு மருந்துகள்

100 வருடங்களுக்கு மேல் புகழ் பெற்றது

விரைவில் குணமடையச் சக்தி வாய்ந்த

குரு தைலம் குரு பல்பொடி

தற்சமயம் பிளாஸ்டிக் டப்பாக்களில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

Dr. B. மதுரம் & சன்ஸ்

குரு மருந்துசாலை, திருச்சிராப்பள்ளி - 17.

—நாகசுந்தரம்


கட்டிடங்களின் வெளிப்புறம்
கவர்ச்சியாகக் காட்சி அளிக்க
அக்சார்செம்
சிமெண்ட் பெயிண்ட்!
உள்புறம் அழகாகத் தோன்ற
புதிய அக்சார்செம்
அக்சார் டிஸ்டெம்பர்!
Agsar
DISTEMPER
நீண்டகாலம் நிறம் மங்காது விளங்க அக்சார்செம்!



தித்திக்கும் தீபாவளித் திருநாளில் ஆனந்தாவின்
புடைவைகளை அணிந்து மகிழும் அனைவருக்கும்
ஆனந்தா தங்களது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது.
ஆனந்தா
கார்ப்பரேஷன்
திருமணப் பட்டுப் புடைவைகளுக்குச் சிறந்த இடம்
போன்: 24763
39, N.S.B ரோடு, திருச்சி-2.

கோகுல்
அளிக்கும்...
நறுமணம் கமழும்
இனிய
தீபாவளி
வாழ்த்துக்கள்!

இந்தியாவின்
முதன்மையான
சந்தணப் பவுடர்கள்
கோகுல்
ஸாண்டல்வுட்
பவுடர்
மற்றும்
ஸான்டால் பவுடர்

IS:3959
CM/L.NO.8223

தயாரிப்பாளர்கள்:
டி.எஸ்.ஆர். & கோ, மதருஸ்
சென்னை 600 089

ADWAVE/TSR/1500

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்

நந்தி அகர்பத்தியின்
புதிய தயாரிப்பு

ராஜ போக
வாழ்க்கைக்கு

ஷாஹின்ஷா

நறுமண
ஊதுபத்திகள்

பி. வி. அஸ்வந்தையா & பிரதர்ஸ்
பெங்களூர்

TRADE MARK
NANDI
REGISTERED NO. 168265

BVA 8083

உங்கள் இல்லங்களுக்குத்
தேவைப்படும்

சென்டெக்ஸ்

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், அலங்காரத் துணிகள், டவல்கள், டெர்ரி டவல்கள், மற்றும் திரைச் சீலைகள், கைத்தறிப் புடைவைகள், வேட்டிகள் ஆகியவைகளுக்கு எங்களுடைய

உம்மிடியார்ஸ்
ஷாப்பிங் சென்டர்
(எல். ஐ. சி. கட்டிடம் எதிரில்)
162, அண்ணா சாலை, சென்னை-2

மற்றும்

9&10 யூனிட்டி பில்டிங்
(தாஜ்மஹால் ஹோட்டல் எதிரில்)

அபிட்ஸ், ஹைதராபாத்,
நீலகிரிஸ் டெக்ஸ்டைல்ஸ்
11, பிரிகேட்ரோடு, பெங்களூர் - 560001
ஷோ ரூம்களுக்கு வருகை தாருங்கள்

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

தபால் பெட்டி எண்: 32, சென்னிமலை-638051
தமிழ்நாடு, இந்தியா

M. P. நாச்சிமுத்து, B.A., B.L.,
தலைவர்

FOR TOTAL RELIABILITY IN
HIGH TENSILE FASTENERS:
'TVS'
Yes, for years, the name 'TVS' has been synonymous with total reliability in quality high tensile bolts, screws and nuts.
Precision engineered, cold forged and heat treated–the standard and special fasteners are manufactured to meet specific requirements.
What's more, Sundram Fasteners plans production to suit delivery commitments which will optimize your procurement efficiency. The result: a big saving in inventory costs.
Cars, trucks, buses, three-wheelers, scooters, motorcycles, tractors, industrial engines, tillers, diesel locomotives and earth-moving equipment are fitted with TVS fasteners as OE. They are also used in other non-automotive engineering applications.
'TVS' high tensile fasteners conform to Indian, ISO, American, British and DIN standards. Fasteners are also made to customers' specifications.
Available in diameters from 6 mm (¼") to 24 mm (1"), and in lengths from 12 mm (½") to 200 mm (8").
Sundram Fasteners—a single source for all your standard and critical special fasteners needs.
Where fastening is critical
'TVS' the first choice
Manufactured by:
Sundram Fasteners Limited
PADI, MADRAS 600 050
PHONE: 632701 GRAMS: SUNLOC
TELEX: 041-7549 FASN IN
SAA/SFL/3115

அருள்மிகு
சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
திருத்தணி, செங்கற்பட்டு மாவட்டம், தமிழ்நாடு.

தொலைபேசி எண்கள்:

அலுவலகம்	..225	மலைக்கோயில்	.. 243
தங்கும் விடுதி	..387	மலைப்பாதை	.. 396
சரவணப் பொய்கை விடுதி	..303	நிர்வாக அதிகாரி குடியிருப்பு இல்லம்	247

திருமுருகன் உறையுஞ் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

நினைத்ததை அளித்திடும்
மனத்தினை உருக்கிடும்
வழித்துணை வந்திடும் திருத்தணி
முருகனின் இன்னருள் பெற்றிட
வாரீர்! வாரீர்!!

இத்தலம்

சென்னை—பம்பாய் இருப்புப் பாதையில்	
அரக்கோணம் சந்திப்பிலிருந்து வடக்கே	14 கி.மீ.
சென்னை—திருப்பதி பாதையில்	84 கி.மீ.
திருப்பதியிலிருந்து தெற்கே	54 கி.மீ.
காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே	44 கி.மீ.

தரிசனம் விபரம்: காலை 6 மணிமுதல் 9 மணிவரை

விசுவரூப தரிசனம்	காலை 6 மணி
காலை சந்தி அபிஷேகம்	,, 8 மணி
உச்சிக்காலம்	,, 10 மணி
சாயரட்சை	மாலை 5 மணி
அர்த்தசாமம் (பள்ளியறை பூசை)	இரவு 8 மணி

தங்கத் தேர் உற்சவக் கட்டணம் ரூ. 303/-

கல்யாண உற்சவக் கட்டணம் ரூ. 250/-

விழாக் காலங்கள்

1. ஸ்ரீ வள்ளியம்மன் திருமணப் பெருவிழா .. பிப்ரவரி — மார்ச்சு
2. சிவன்ராத்திரி 1008 சங்காபிஷேகம் .. பிப்ரவரி — மார்ச்சு
3. ஸ்ரீ தெய்வயானையம்மன் திருமண விழா .. ஏப்ரல் — மே
4. ஆடிக்கிருத்திகை தெப்பத் திருவிழா .. ஆகஸ்ட்
5. ஸ்ரீகந்தசஷ்டிப் பெருவிழா .. நவம்பர்
6. திருப்புகழ் திருப்படி திருவிழா .. டிசம்பர் 31

தங்கும் வசதி — பணிச் செலவு 24 மணி நேரத்திற்கு

பொருள்	எண்ணிக்கை	பணிச் செலவு ரூ.	நபர்கள்	கூடுதல் நபர்கள்	பணிச் செலவு கூடுதல் நபர் 1-க்கு ரூ.
சரவணப் பொய்கை விடுதி	37	7	4	3	1
பெரிய அறைகள்	7	10	5	3	1
சிறிய அறைகள்	41	8	5	3	1
மிகச் சிறிய அறைகள்	8	5	2	1	1
குடியிருப்பு இல்லங்கள்	91	18	6	4	1
பெரிய அறைகள்	..	10	4	..	..
சிறிய அறைகள்	..	8	2	1	1
குளிர்சாதன இல்லங்கள்	2	30	6	3	1
நாகவேடு சத்திர அறைகள்	25	1	5	..	..
சிறிய அறைகள் (மலைப்பாதை)	48	5	3	2	1

திரு பி. ஜோதி நாயுடு,
அறங்காவலர்க் குழுத் தலைவர்

பொ. கந்தசுவாமி, பி. எஸ்சி.
உதவி ஆணையர் / நிர்வாக அதிகாரி.

திரு எம். முனுசாமி   திரு எஸ். சண்முகம்   திரு சி. இராஜகோபால்   திரு கே. கிருஷ்ணன்
அறங்காவலர்கள்

திருத்தணிகை முருகன்

போட்டோ : பாபா

திருத்தணிகை முருகன்

'ஜோதி'

மாமயில் ஏறி வருவாண்டி; - அன்பர்
　　வாழ்த்த வரங்கள் தருவாண்டி;
ஓமெனும் மந்திர உருவனடி; - ஆனல்
　　உருவம்இல் லாத அருவனடி,

ஆயிரம் கோடி கதிரவன்போல் - ஒளி
　　ஆரும் திருவுருத் தேசனடி;
பாயிர நான்மறை உட்பொருள் - ஆகிப்
　　பரவும் திருத்தணி வாசனடி,

பிரணவம் என்னும் மயிலுடையான்; - கையில்
　　பிறங்கிய ஞான அயிலுடையான்;
சரணம் அடைந்தவர் போற்றுபவன்; - சிவன்
　　தனக்கும் உபதேசம் சாற்றுபவன்,

வள்ளிக்கு வாய்த்த மணவாளன்; - பல
　　மாட்சி அமைந்த குணவாளன்;
வெள்ளத் தனைய அருளாளன் - எங்கும்
　　மேவி நிறைந்த பொருளானன்,

காலம் இடம்என்னும் எல்லையெலாம் - அவன்
　　கடந்து திகழ்ந்திட வல்லவனும்;
சீலம் மிகக்கொளும் பத்தர்பலர் - புகழ்
　　செப்பிட வேமகிழ் உத்தமனும்,

சூரனை மாமயில் ஆக்கினவன்; - அன்பர்
　　சொல்லும் புகழினைத் தேக்கினவன்;
மாரனை வெல்லும் எழிலுடையான்; - மிக்க
　　மாட்சியார் ஐந்து தொழிலுடையான்,

பூம்பொழில் சேர்தணிக் குன்றுடையான்; - நிறை
　　பூரண மாம்பொருள் என்றடியார்
தாம்புகழ் கின்றமெய்த் தெய்வம்அவன் - திருத்
　　தாளை வணங்கியே உய்குவமே!



இறைவன் ஒருவன்தான் குற்றமில்லாத குணக்குன்று. மனிதப்பிறவி எடுத்த நாம் அனைவரும் ஏதாவது ஒரு சிறிதாவது குற்றம் உடையவர்களாம். செம்பு கலவாத அணிகலமே இல்லை. அதுபோல் குற்றமில்லாத மனிதர்கள் இல்லை.

திருஞானசம்பந்தர், காந்தி அடிகள் போன்ற மகான்களிடத்திலும் ஒரு சிறிது குற்றம் உண்டு. ஆனால் குற்றம் புரிந்தவர்கள் ஆண்டவனிடத்திலும், ஆன்றோர்களிடத்திலும் குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். ஒப்புக்கொண்டால் நம் குற்றங்களை இறைவன் மன்னிப்பான். 'புரிபிழை பொறுக்கும் சாமி'' என்கின்றார் அருணகிரிநாதர்.

பட்டினத்துச் சுவாமிகள் பிழை பொறுக்குமாறு ஆண்டவனை வேண்டுகின்ற முறையில் ஒரு தமிழ்ப் பாடல் பாடியிருக்கிறார். ஆனால் அவர் பிழை செய்யாதவர்.

''இந்த ஊனெடுத்தபின் செய்த தீவினை யாதொன்றுமில்லை'' என்று அவரே கூறுகின்றார்.

''கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி, நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ்செழுத்தைச் சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும், எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே.'' இதனை அபராதக்ஷமை என்று கூறுவர்.

குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதால் மன்னிப்புக் கிடைக்கும் என்ற நியதியை அடியிற் கண்ட வரலாறு விளக்கும்.

ஒரு சிறைச்சாலையில் பல குற்றவாளிகள் இருந்தார்கள். அந்நாட்டை ஆளுகின்ற அரசர் பெருமான் மாறுவேடம் பூண்டு அந்தச் சிறைச்சாலையைப் பார்வையிட வந்தார். சிறை அதிகாரிக்கு மட்டும் இவர் மன்னர் என்று தெரியும். சிறை அதிகாரியுடன் மன்னர் சிறைச்சாலைக்குள் சென்று பார்வையிட்டார். ஒரு கைதியைப் பார்த்து, ''உன் பேர் என்ன? நீ ஏன் சிறைக்கு வந்தாய்?'' என்றார்.

''ஐயா! என் பெயர் குப்புசாமி. நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. நீதிபதிக்குப் பல வீடுகள் இருந்தன. நான் அவருடைய வீட்டில் குடியிருக்கிறேன். என்னைக் காலி பண்ணச் சொன்னார். வாடகைக் கட்டுப்பாட்டின்படி நான் காலி பண்ண முடியாது என்றேன். நீதிபதி என் மேல் ஒரு குற்றத்தைக் கற்பித்து, இந்தச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டார்'' என்றான் அந்தக் கைதி.

மற்றொரு கைதியைப் பார்த்து, ''உன் பெயர் யாது? நீ என்ன குற்றம் செய்து இங்கு வந்தாய்?'' என்று கேட்டார்.

''ஐயனே! என் பெயர் ராமமூர்த்தி. நான் நிரபராதி. காவல் துறை அதிகாரி என்னிடம் கடனைகப் பணம் கேட்டார். நான் தர மறுத்தேன். பக்கத்து வீட்டு ஜன்னல் வழியே நான்கு சாராயப் புட்டிகளை விட்டு நான் சாராயம் காய்ச்சி விற்பதாகக் குற்றம் சாட்டி என்னை இங்கு அனுப்பி விட்டார்கள்'' என்றான் அவன்.

''நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?'' என்று மூன்றாவது கைதியைக் கேட்டார் மன்னர்.

''புண்ணியவானே! என் பெயர் புருஷோத்தமன், என் அடுத்த வீட்டில் தாசில்தார் குடியிருந்தார். அவருடைய மனைவிக்கும் என் மனைவிக்கும் மனத்தாங்கல். இருவருமே சண்டை போட்டுக் கொண்டார்கள். ஆற்றங்கரையில் ஓர் அநாதைப் பிணம் கிடந்தது. மனைவிக்கு அடிமையான தாசில்தார், சலவைத் தொழிலாளி வீட்டில் நான் சலவைக்குக் கொடுத்திருந்த துணியை வாங்கிக் கொண்டு போய் அப் பிணத்தின் வாயில் அடைத்து துப்பறிபவரைக் கொண்டு அத்துணி என் துணி என்றும் அக்கொலை நான்தான் செய்தேன் என்றும் நிரூபித்து என்னை அநியாயமாகத் தண்டிக்குமாறு செய்தார். அரசாங்கம் செய்த அநியாயத்தால் இங்கு வந்து அல்லல் படுகிறேன்'' என்றான் அவன்.

''நீ யார்? உனக்கு ஏன் தண்டனை கிடைத்தது?'' என்று அடுத்த கைதியைக் கேட்டார் மன்னர்.

''ஐயா, என் பெயர் வேங்கடாசலம். ஒரு வழக்கறிஞர் மகன் என் மகனுடன் நட்புக்கொண்டான். 'தீயவனோடு நீ நட்புக் கொள்ளாதே' என்று என் மகனைக் கண்டித்தேன். இதனால் என்னிடம் பகைமை கொண்ட வக்கீல் ஐயா, என் மீது திருட்டுக் குற்றத்தைச் சாட்டி உத்தமனாகிய என்னை அக்கிரமமாகத் தண்டிக்குமாறு செய்துவிட்டார். நான் சிறிதும் குற்றம் செய்தேனில்லை.''

இப்படியே எல்லாக் கைதிகளும் கூறினார்கள். முடிவில் ஒரு கைதியைப் பார்த்து, ''அப்பா! உன் பெயர் என்ன? நீ ஏன் சிறைச்சாலைக்கு வந்தாய்?'' என்று மன்னர் வினவினார்.

''ஐயா! என் பெயர் குமாரசுவாமி. நான் பரம ஏழை. என் மனைவி சிக்கனம் இல்லாதவள்; வரவுக்கு மேல் செலவழிப்பவள். எனக்கு ஆறு பெண் குழந்தைகள். ஐந்து ஆண் குழந்தைகள். இப்பொழுது என் மனைவி ஆறு மாதம் கர்ப்பம். தாய்தந்தையர்கள் இருக்கிறார்கள். தங்கை விதவையாகி வீட்டில் இருக்கிறாள். அத்தையாகிய ஒரு கிழவியும் இருக்கிறாள். பெரிய குடும்பம். சிறிய வருவாய். அரை வயிற்றுக்கும் உணவு கிடைக்கவில்லை. களவு என்பதைக் கனவிலும் கருதக் கூடாது. வறுமையிலும் செம்மையாக இருக்க வேண்டும். பட்டினிக் கொடுமையால் நான் மதிகெட்டு எங்கள் ஊர்ப் பெருநிலக்கிழார் ஒருவருடைய வயலில் அறுவடை செய்து குவித்திருந்த நெற்களஞ்சியத்தில் நெல்திருடிவிட்டேன். அவ்வாறு திருடியது பெருந்தவறு. அதனால் குற்றம் செய்த என்னை அரசு தண்டித்தது. நான் செய்த பிழையால் இங்கு வந்தேன். விளக்கெண்ணெய் குடித்தால் பேதி ஆகும். மாம்பழம் அதிகம் தின்றால் வயிற்று வலி வரும். குற்றம் செய்தவர் தண்டிக்கப்படுவார். செய்த குற்றத்துக்காகத் தண்டனையை அனுபவிக்கிறேன்'' என்று கண்ணீர் வடித்துக்கொண்டே கூறினான்.

இதனைக் கேட்ட மன்னர் மனம் உருகினார்.

மன்னர் சிறை அதிகாரியைப் பார்த்து மிகுந்த கோபக் குறியைக் காட்டி உரத்த குரலில் கூறுகின்றார்:

''சிறை அதிகாரியே! இச்சிறையிலுள்ள இத்தனை பேர்களும் பரம யோக்கியர்கள். குற்றம் செய்யாதவர்கள். குணசீலர்கள். இவன் மட்டுமே குற்றம் செய்தவன். யோக்கியர்களுக்கு நடுவே ஒரு அயோக்கியன் இருக்கக் கூடாது.

''அடேய்! குமாரசாமி! நீ களவாணிப் பயல். இங்குள்ள அத்தனை பேரும் மிக்க உத்தமர்கள். திருட்டுப்பயலாகிய நீ இந்த உத்தமர்களுடன் இருப்பது பிழை. ஆதலால் இப்போதே நீ வெளியே போ! சீக்கிரம் போய் விடு. சிறை அதிகாரியே, இவனை வெளியே அனுப்பி விடும்'' என்று சாதுர்யமாகக் கூறிச் சென்றார்.

சிறை அதிகாரி, குமாரசுவாமியைச் சிறையிலிருந்து வெளியே அனுப்பி விட்டார். குற்றத்தை ஒப்புக் கொண்டவனுக்கு மன்னிப்பும் விடுதலையும் கிடைத்தன.

ஆதலால் நாம் இறைவனிடம் நமது குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிக்குமாறு வேண்டுதல் புரிய வேண்டும். அதனால் நமக்கு ஆன்ம விடுதலை கிடைக்கும்.

தீபாவளி ஸ்பெஷல்
உங்க வீட்லே ரெண்டு பொண்ணுக்குத் தலை தீபாவளியாச்சே! என்ன ஒரு கலாட்டாவையும் காணும்?
சீர் செனத்தியை வாங்கிண்டு அவ அவ மாமியார் வீட்டுக்குப் போயிட்டா. எங்க வீட்டுக்காரர் ரெண்டு பொண்ணுக்குச் செஞ்சிட்டுக் காசிக்கே போய்ட்டார்! போற வழி தெரியாம நான் முழிக்கிறேன்!
ஏங்க, அடுத்ததாவது நமக்குத் தலை தீபாவளியா இருக்குமாங்க!
டைரக்டர்
யார் கண்டா? கொலை தீபாவளியா வந்தாலும் வரலாம்.
காஞ்சி, கொள்ளேகாலம், மைசூர், பனாரஸ், ஆரணி, பாம்பே, அகமதாபாத் எல்லாம் எடுத்துப் போடுங்க!
சுப்பு...
ஜவுளிக் கடை வைக்கப் போறீங்களா, அம்மா?
பொண், மாட்டுப் பொண், பேத்தி, கொள்ளுப் பேத்தி, பிள்ளை, பேரன்னு அஞ்சு டஜன் இருக்குதுங்களே!
என்னடி, ஜார்ஜெட்டா, காஞ்சியா, பனாரஸா, தீபாவளிக்கு என்னடி வேணும்?
ஏதாயிருந்தாலும் துண்டு துண்டாக் கொண்டு வராதீங்க. முழுசாவே இழுத்துண்டு வந்துடுங்க.
என்ன இப்படி இது மெதுவாப் போறது? நான் பறந்து போயிருந்தாக் கூட இத்தனை நாழி அவளோட தீபாவளியைக் கொண்டாடியிருக்கலாம்! முட்டாள்தனம், இந்தப் பிளேன்லே உட்கார்ந்தது!
நம்ம தலை தீபாவளி உனக்கு ஞாபகம் இருக்கோ?
போறுமே! மறக்க முடியுமோ அதை! நான் கொடுத்தனுப்பினேன்னு சுந்துப் பய கொடுத்த தேங்காய்ப் புண்ணாக்கை மைசூர்ப்பாகா நினைச்சுத் தின்னீங்களே! அப்பப்பா! அவா அடிச்ச லூட்டி!

உலகத்தின் மொத்த இருள் சூழ்ந்தாலும் ஒரு விளக்கின் ஒளியைப் போக்க முடியுமோ?



வறுமை, அறியாமை, பிணி என்னும் மூவகை இருளில் மூடிக்கிடந்த பின் தங்கிய இராமநாதபுர மாவட்டத்தை தொழில் என்னும் விளக்கின் மூலம் ஒளி கூட்டி அதன் பொருளாதார மேம்பாட்டிற்கு பாடுபடுகிறது ராம்கோ குரூப் நிறுவனங்கள். இந்த ஒளித் திருநாளான தீபாவளி நன்னாளில் மக்களிடம் மகிழ்ச்சி என்றென்றும் நிலைத் திருக்க அடிப்படையான நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் தன் சிறிய ஆனால் முக்கியமான பங்கைச் செலுத்துவதை தன் கொள்கையாகக் கருதி முழு முனைப்பும் தொலைநோக்கும் கொண்டு என்றென்றும் பாடுபட உறுதி கூறுகிறது ராம்கோ குரூப் நிறுவனங்கள்.

ராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்
மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்
ஸதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
ராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிட்.
சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ்
ஜெயராம் மில்ஸ் லிட்.
கௌரி ஹவுஸ் மெட்டல் ஒர்க்ஸ்
PAC ராமசாமி ராஜா பாலிடெக்னிக்
PACR கல்வி தர்ம ஸ்தாபனம்
ராஜா தர்ம ஸ்தாபனம்

ACIL/0144/80-TM

'இருக்கிறதம்மா, இவ்வுலகம்!'

தலைமைநீதிபதி மு.மு. இஸ்மாயீல்

நாம் எழுத்திலும், பேச்சிலும் பல சொற்களை வழக்குக் காரணமாகப் பயின்று வருகிறோம். அவற்றுக்குரிய பொருள்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்கில்லை. அப்படிப் புரிந்துகொள்ளாதது காரணமாகச் சிற்சில சந்தர்ப்பங்களில் எந்தப் பொருளை உணர்த்த விரும்புகிறோமோ, அதற்குப் பொருத்தமான சொல்லை நம்மால் எடுத்தாள முடிவதில்லை. மொழி என்பது எண்ணத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக உண்டான ஒரு கருவியே யாகும். அந்தக் கருவி அதற்குரிய செயலைச் செய்யாவிட்டால் அது உண்டான நோக்கமே நிறைவேறாமல் போய்விடும்; என்ற பொழுதிலும், நாம் ஒருவருக்கொருவர் உரையாடிக்கொண்டிருக்கும் போது நம்முடைய கருத்தை மற்றவருக்கு விளக்குவதிலும், மற்றவர் கருத்தை நாம் அறிந்துகொள்வதிலும் வெற்றியடையவே செய்கிறோம்.

சில சமயங்களில் இந்த வெற்றியை அடைவதற்கு ஒரு சொல்லுக்குப் பதிலாகப் பல சொற்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். ஆனால், எழுதும்போதும், பேசும்போதும் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயில்வோமானால், சிறப்பு மிக்க பேச்சும், எழுத்தும் அமையும்; அதே சமயத்தில் கருத்தும் தெளிவாக விளங்கும்.

இதனை விளக்குவதற்குப் பல மேற்கோள்களைக் காட்டமுடியும். பிறப்பு, இறப்பு, இவ்வுலகம், மறு உலகம், பூமி, ஆகாயம், நிலம், நீர் என்பன போன்ற சொற்களை மிகச் சாதாரணமாக அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்கத்தான் செய்கிறோம்.

ஆனால் இவற்றினுடைய பொருளைத் திட்டவட்டமாகப் புரிந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்கில்லை. பிறப்பு, இறப்பு என்னும்போது, இவை இரண்டும் இரு தொழில்களையோ, பண்புகளையோ உணர்த்தும் சொற்களாகவே அமைந்திருக்கின்றன.

ஒரு குழந்தை தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தவுடன், அது 'பிறந்தது' என்று கூறுகிறோம். அதே குழந்தை அப்பொழுதோ, பின்னர் வளர்ந்தோ மரணம் அடையும்போது, அது 'இறந்தது' என்று கூறுகின்றோம். ஆக, இந்தப் பிறப்பு, இறப்பு என்ற சொற்களிலிருந்து எதை உணர்ந்துகொள்கிறோம் என்றால், இரண்டு தொழில்களை அல்லது பண்புகளைத்தான் உணர்ந்துகொள்கிறோம் என்று சொல்ல வேண்டும். ''பிறப்பு'' என்பது தோற்றம். ஆக, முன்னால் நாம் கண்ணால் காணாத ஒரு குழந்தையைத் தாயின் வயிற்றிலிருந்து பிறகு காணுகிறோம்; ஆகவே அது தோற்றமாகின்றது. அதே குழந்தை அப்போதோ அல்லது பின்னர் வளர்ந்தோ இறக்கும்போது அது இறந்துவிட்டது என்று நாம் சொல்லுமிடத்து, அக்குழந்தை மறைந்துவிட்டது என்ற பொருளில் சொல்லவில்லை. அதற்கு நேர்மாறாக அந்த உயிரற்ற சடலத்தைப் புதைக்கவோ எரிக்கவோ செய்கிற வரையில் அவ்வுடலானது இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அது இறந்த உடலாக ஆகிறது. ஆக, 'இறப்பு' என்பதைப் 'பிறப்பு' என்ற சொல்லுக்கு நேரெதிர்ச் சொல்லாக நாம் இங்கே உபயோகப்படுத்துகிறோம் என்று சொல்ல முடியாது.

உயிர் என்ற ஒன்று அவ்வுடலிலிருந்து நீங்கியவுடன், குழந்தையாகவோ, வளர்ந்து மனிதனாகவோ இறந்துவிட்டான் என்று சொல்கிறோம். அவ்வுயிரற்ற உடல் சில காலம் இருக்கத்தான் செய்யும்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி காரணமாக, அவ்வுயிரற்ற உடலைப் பதப்படுத்திப் பல காலம் வைத்திருக்கச் செய்யலாம். அப்படி இருக்கும் பொழுது, 'இறப்பு' என்பதைப் 'பிறப்பு' அல்லது 'தோற்றம்' என்பதற்கு நேர்மாறாக 'மறைவு' என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த உடலிலிருந்து ஒன்று மறைந்துவிட்டது என்று வேண்டுமானால் சொல்லலாம். எனவே, பிறப்பு, இறப்பு என்பவற்றை நாம் சர்வ சாதாரணமாக எதிர்மாறான நிலையையோ அல்லது பொருளையோ உணர்த்தும் வகையில் பயன்படுத்தினாலும் உண்மையில் அப்படி அல்ல.

அத்தகையனவே இவ்வுலகம், மறு உலகம் என்ற சொற்களும், 'இவ்வுலகம் என்னும்போது எதைக் குறிக்கிறோம்? மறுஉலகம் என்னும்போது எதைக் குறிக்கிறோம்?' என்று சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒன்று மாத்திரம் நிச்சயம். இவ்வுலகம் என்பதைப் பற்றி நாம் என்ன தெரிந்துகொண்டிருக்கிறோமோ, அதைப் போல மறு உலகம் என்பதைப் பற்றி நாம் தெரிந்துகொண்டிருக்கவில்லை. இந்தப் பூவுலகம் என்னும்போது, இந்நிலத்தையோ, இப்பூமியையோ, அல்லது இப்பூமியில் நாம் வாழ்கின்ற விதத்தையோ குறிப்பாகக் கொண்டாலும், மறு உலகம் என்னும் பொழுது எதனைக் குறிக்கிறோம் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை; நாம் வாழ்கிற இம்மாதிரியான ஒரு நிலமோ அல்லது பூமியோ இருக்குமானால், அந் நிலத்திலோ, பூமியிலோ இது போன்ற ஒரு வாழ்வு இருக்குமா? அல்லது வேறு விதமான வாழ்வாக இருக்குமானால் அது எந்த விதத்தில் வேறுபட்ட வாழ்வு? இது பற்றி நிச்சயமாக நாம் தெரிந்திருக்கவும் இல்லை; ஆகையால் சொல்வதற்கு வழியும் இல்லை என்ற போதிலும், இந்த உலகம், மறு உலகம் என்ற சொற்களை ஏதோ எதிர்மாறான இரண்டினை உணர்த்தும் வகையில் பயன்படுத்தவே செய்கிறோம்.

அது போன்றனவே பூமி, ஆகாயம் என்று நாம் பயன்படுத்தும் சொற்களும். 'பூமி' என்னும் பொழுது ஏதோ இந்நிலத்தை, தரையைக் குறிப்பிடுகிறோம் என்று சொல்லலாம். ஆனால் 'ஆகாயம்' என்று சொல்லும்போது அப்படி ஒன்றை நாம் குறிப்பிடுகிறோம் என்று சொல்வதற்கில்லை. காரணம்: நாம் கண்ணால் காணுகிற அளவுக்கும் அதற்கு அப்பாலும் ஆகாயத்துக்கு எல்லை உண்டு, வரம்பு உண்டு என்று சொல்ல முடியாது. விண்வெளி என்றுதான் இப்பொழுது சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த விண்வெளி எந்த அளவுக்கு இப்பூமிக்கு அப்பால் பரந்து நிறைந்திருக்கிறது

என்று சொல்ல முடியாது. பூமியிலிருந்து மற்றக் கிரகங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தூரமும் எங்கோ ஓரிடத்தில் முடிவடைந்து, அந்த முடிவு காரணமாகப் பூமியை ஒரு வரையறைக்குட்பட்ட விண்வெளி சூழ்ந்துகொண்டிருக்கிறது என்றும் சொல்வதற்கில்லை.

அதுபோன்றனவே, நிலம், நீர் என்பன. கடற்கரையிலோ, நதிக்கரையிலோ, குளக்கரையிலோ நாம் நின்றுகொண்டிருக்கும்போது, நாம் நின்றிருக்கும் இடம் நிலமாகவும், நமக்கு எதிரில் இருப்பது நீராகவும் தென்படுகின்றன. ஆனால் அந்த நீருக்கடியில் நிலமே இருக்கச் செய்கிறது. எனவே நிலம், நீர் என்று நாம் பிரித்துச் சொல்லும்போது, அந்த நீரும் ஒரு நிலப் பகுதியின்மேல் இடம் பெற்றிருப்பதாக ஆகுமே தவிர, நிலத்துக்கு அப்பாற்பட்டது ஆகாது. நாம் எதை இப்போது நிலம் என்று சொல்கிறோமோ அதுவே தோண்டப்படுமேயானால் நீர் வெளிவர அதுவும் நீர்ப் பகுதியாக ஆகும். எனவே, நீரின் அடிமட்டம் நிலமும், நிலத்துக்குக் கீழே நீரும் இருக்க, இரண்டும் பின்னிக் கொண்டும் இணைந்தபடியும் இருக்கின்றன.

அது காரணமாக நிலம், நீர் என்று பிரித்துச் சொல்லும்போது, ஏதோ முழுமையாக வேறுபட்ட தனித்திருக்கிற இரண்டு பொருள்களை நாம் குறிப்பிடுகிறோம் என்று சொல்லிவிட முடியாது. என்றாலும் இவ்விதச் சிந்தனை எதுவுமின்றி இந்தச் சொற்களையெல்லாம் நம்முடைய அன்றாட வாழ்வில் மிகச் சாதாரணமாக, எவ்விதமான தங்குதடையுமின்றிப் பயன்படுத்திக்கொண்டேதான் வருகிறோம். அப்படிப் பயன்படுத்திக் கொண்டு வருவது தவறு என்று சொல்வதற்கில்லையாயினும், அப்படி நாம் ஆளும் சொற்களின் பொருளை உள்ளத்தே சிந்தித்துப் பார்க்க வேண்டுவது அவசியமே யாகும்.

இங்கு, 'உலகம்' என்ற ஒரு சொல்லினுடைய பொருளை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கலாம். 'உலகம்' என்ற சொல்லை எந்தப் பொருளிலே நாம் பயன்படுத்துகிறோம் என்பது முதலிலே தோன்றும் கேள்வியாகும். இவ்வுலகம், மறு உலகம் என்று நாம் முன்பு பார்த்ததிலேயே 'உலகம்' என்ற சொல் அடங்கியிருக்கிறது. அப்படி அடங்கியிருக்கும் 'உலகத்தை'க் காண்பதாயினும் சரி, அப்படி யில்லாமல் வெறுமனே 'உலகம்' என்று நாம் சொல்வதைக் காண்பதாயினும் சரி, அது எதைக் குறிக்கிறது என்று பார்ப்பது பயனுடையதாகும்.

வெறும் அகராதிகளையும், நிகண்டுகளையும் புரட்டிப் பார்ப்போமானால், 'உலகம்' என்ற சொல்லுக்குப் 'பூமி', 'நிலப்பகுதி' என்ற பொருள்களோடு வேறு பல பொருள்கள் இருப்பதையும் காண்போம்.

'ஆகாயம்' என்ற பொருள் இந்தச் சொல்லுக்கு உண்டு என்பதைப் பிங்கல நிகண்டிலிருந்து காணும்போது நாம் ஆச்சரியப்படவே செய்வோம். பூமிக்கு மாறானதாக ஆகாயத்தை எண்ணிக் கொண்டிருக்கும் நாம், 'உலகம்' என்ற சொல்லுக்கு இவ்விரண்டு பொருள்களுமே உண்டு என்னும்போது ஆச்சரியப்படுவது நியாயமே யாகும். அதற்கும் மேலாக, இச்சொல்லுக்கு, 'திக்கு' என்ற பொருளும் உண்டு. இவை யல்லாமலும், இச்சொல்லுக்கு 'மக்கள் தொகுதி' என்ற பொருள் வேறு இருக்கிறது. தொல்காப்பியம், சொல்லதிகாரம் 57-ஆவது சூத்திரம் அடியிற் கண்டவாறு உள்ளது.

''காலம், உலகம், உயிரே, உடம்பே,
பால்வரைதெய்வம், வினையே, பூதம்
ஞாயிறு, திங்கள், சொல், என
வருஉம்
ஆயிரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்,
பால்பிரிந்து இசையா, உயர்திணை
மேன.''

இதன் பொருள். 'காலம் முதலாகச் சொல்லப்பட்டன பத்தும், அதே தன்மையையுடைய பிறவுமாகிய அந்தப் பகுதிக்குள் வரும் சொற்கள் அனைத்தும், உயர்திணைச் சொல்லாயினும், உயர்திணைக்கண் பால் பிரிந்து இசையாமல் அஃறிணைப் பாலைச் சேர்ந்து இயங்கியே இசைக்கும்.'

இந்தச் சூத்திரத்தின் முதல் அடியிலேயே 'காலம்' என்ற சொல்லும், 'உலகம்' என்ற சொல்லும் இடம் பெற்றிருக்கின்றன. சேனாவரையர் தம்முடைய உரையில் இவ்விரண்டு சொற்களைப் பற்றிக் கூறும்பொழுது, 'காலம் என்பது காலக் கடவுளை; உலகம் என்றது ஈண்டு மக்கள் தொகுதியை' என்று கூறுகிறார். இப்படிச் சொல்லுமிடத்து, காலக் கடவுளும், மக்கள்

தொகுதியும் உயர்திணையின் பாற்பட்டவையாயினும் அவை அஃறிணையாகவே வழங்கும் என்பதற்கு எடுத்துக் காட்டாக, 'இதற்குக் காலம் ஆயிற்று', 'உலகம், பசித்தது' எனவும் கொடுக்கப் பெறுகின்றன. நச்சினார்க்கினியரோ தம்முடைய உரையில், ''இவற்குக் காலம் ஆயிற்று என்றது காலக் கடவுளை. உலகம் பசித்தது என்றது உலகத்தாரை'' என்று கூறுகின்றார். ஆக இவ்விருவருமே 'உலகம்' என்ற சொல்லுக்குக் கொடுக்கும் பொருள்கள் வேறுபடுகின்றன. சேனாவரையர் 'மக்கள் தொகுதி' என்கிறார். நச்சினார்க்கினியரோ 'உலகத்தார்' என்கிறார். எனினும், இவ்விருவருமே 'உலகம்' என்ற சொல்லுக்கு மக்களையே குறிப்பிடுகின்றார்கள். இது போலவே, இளம்பூரணர் தம் உரையில், 'உலகம் என்பது உலகத்தார் மேற்று, உடம்பு என்பது உடம்புடையார் மேற்று என்பது' என்கிறார்.

கல்லாடனார் உரையும், 'காலம் என்றது காலனை; உலகமென்றது உலகத்தாரை' என்றே கூறும். இதற்கு மாறாகத் தெய்வச்சிலையாரோ தம்முடைய உரையில், 'உலகம் என்பது மேலும் கீழும் நடுவுமாகி எல்லா உயிரும் தோற்றுவதற்கு இடமாகிய பொருள்' என்று கூறுகிறார். இதைவிடச் சிறப்புடைத்து என்னவென்றால், திருமுருகாற்றுப்படை அதன் தொடக்கத்திலேயே 'உலகம்' என்ற சொல்லை இன்னும் பரந்த பொருளில் பயிலும். அதில் இடம் பெற்றிருப்பது, 'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு' என்பது.

'உலகம்' என்ற சொல் எல்லா உயிர்களையும், அனைத்து ஜீவராசிகளையும் குறிக்கும். இந்தச் சொல்லாட்சியின் பொருள் என்னவென்றால், 'உயிர்கள் அனைத்தும் மகிழ மேருவை வலமாக எழுந்து திரிகின்ற பலரும் புகழாநின்ற ஞாயிறு அல்லது சூரியன்' என்பதுதான். சூரியனுடைய உதயத்தினாலே மகிழாத உயிரே இல்லை என்பது காரணமாக இந்த அடியிலே இடம் பெற்றிருக்கும் 'உலகம்' ஜீவராசிகள் அனைத்தையும் குறிப்பிடுவதாக இருக்கிறது. இதுவல்லாமல், மாறன் அலங்காரம் இந்தச் சொல்லை 'ஒழுக்கம்' என்ற பொருளில் ஆள்கின்றது. 'ஒழுக்க நடையே உலகம தாகும்' என்று சொல்லும் அது. கடைசியாக இந்தச் சொல்லுக்குரிய வேறொரு பொருளையும் பார்க்க வேண்டும். அந்தப் பொருளையும் பிங்கல நிகண்டே கொடுக்கிறது. அதுதான் உயிர்க் குணம் என்பது.

எனவே, 'உலகம்' என்ற இந்தச் சொல் முக்கியமாக மூன்றைக் குறிப்பதாகச் சொல்லாம். ஒன்று, இடம்; இரண்டு, அவ்விடத்திலே வாழும் உயிர்கள்; மூன்று, அந்த உயிர்களிடம் நிலவும் அல்லது நிலவ வேண்டிய உயர் குணம். ஆனால் நாம் வழக்கில் இந்தச் சொல்லை ஆளும் போது இத்தகைய உயர்ந்த பொருள் வேறுபாடுகளையெல்லாம் உள்ளத்தில் கொள்வதில்லை. ஆனால், நம் பழைய பெரும் கவிஞர்களே தங்கள் இறவாப் படைப்புகளை ஆக்கியபோது இத்தகைய சொற்களையெல்லாம் நாம் இன்று ஆளுவது போலச் சாதாரணமாக ஆளாமல், தாங்கள் கூற வந்த கருத்துக்குப் பொருத்தமாகவே ஆண்டிருக்கிறார்கள்.

சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமேயானால் நாம் கூட ஓர் உண்மையை உணரத்தான் செய்வோம். 'உலகம்' என்பது வெறும் பூமியாக, நிலப்பரப்பாக மாத்திரம் இருக்க முடியாது. அதுபோலவே, அதில் வாழும் உயிர்களாகவும் இருக்க முடியாது.

மேலும் அந்நிலப்பரப்பில் வாழும் உயிர்களுக்குச் சில உயர்ந்த பண்புகளும், ஒழுக்க சீலங்களும் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இன்றுகூட மழையின்மை காரணமாக நம்முடைய பூப்பரப்பிலுள்ள கொடி செடிகளனைத்தும் வாடி வதங்கிக் காய்ந்து அழிந்துவிட்டாலோ, வெள்ளம் அல்லது சூறுவளி காரணமாக நிலப்பரப்பிலுள்ள மரம் வீடு மனை அனைத்தும் அழிந்துவிட்டாலோ, பூகம்பம் காரணமாகப் பூமியின் மேலிருக்கும் அனைத்தும் சரிந்து இடிந்து ஒழிந்துவிட்டாலோ, அத்தகைய நிலப்பரப்பினால் எவ்விதப் பெருமையும் கொள்வதற்கில்லை. அது போலவே, அந்த நிலப்பரப்பில் உயிரினங்கள், மக்கள், விலங்குகள், தாவரங்களுங்கூட இருக்கலாம். ஆனால் அவற்றினுடைய வாழ்வு கட்டுப்பாடற்ற, வரையறைக்கு உட்படாத, ஓர் ஒழுங்குக்கு அடங்காத வாழ்வாக அமையுமேயானால் அதைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதற்கு இடம் இருக்காது.

இவ்வாறு நிலப்பரப்பிலே வாழ்கின்ற உயிரினங்களிடையே, குறிப்பாக மனிதர்களிடையே, நற்பண்பும், உயர்ந்த ஒழுக்கமும், சிறந்த சீலமும் மிளிருமேயானால் அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு, பெருமைப்படுவதற்கு இடம் உண்டு; அவர்கள் உயிர் வாழ்வதற்குப் பொருள் உண்டு; அவர்களைப் பற்றிப் புகழ் உண்டாவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, 'உலகம்' என்பது ஒரு நிலப்பரப்பையோ, உயிரினங்களையோ மாத்திரம் தனித்தனியாகக் குறிக்காமல், இம்மூன்றையும் சேர்த்துக் குறிப்பதாகத்தான் கொள்ள வேண்டும். அப்படிக் கொள்ளும்போதுதான், 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற திவாகர அடி பொருள் செறிந்ததாக ஆகிறது.

இந்த 'உயர்பண்பு', 'நற்குணம்' என்பவை பரம்பரையாக மக்களிடையே இருக்குமேயானால், அவையே அவர்களுடைய வழக்கமும், பழக்கமும் ஆகிவிடுவது காரணமாக மாறன் அலங்காரத்திலிருந்து பெறும் பொருளும் பொருத்தமாக ஆகும். எனவே, இந்த மூன்றும் ஒருங்கு சேர்ந்த ஒன்றைத்தான் 'உலகம்' என்று நாம் கூறுவது பொருத்தமாகும்.

'இத்தகைய உலகம் ஏன் வாழ்கிறது? ஏன் இருக்கிறது? ஏன் அதைப் பற்றிப் பேசுகிறோம்?' என்று ஒரு கவிஞன் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கேட்டிருக்கிறான். விடையும் கண்டிருக்கிறான். அவனுடைய கணக்குப்படி இந்த உலகம் இப்படி இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? தனக்குச் சாகா வரத்தைக் கொடுக்கக் கூடியதான, தன்னை இந்திர பதவிக்கு உயர்த்துவதான, ஒன்று கிடைக்குமாயின், அதை எந்த மனிதனும் தனியாக உண்ண மாட்டான். அதற்கு மாறாக அதைப் பிறரோடு பகிர்ந்து உண்ணவே செய்வான். காரணம், நலம் பயக்கக்கூடியது, இன்பம் விளைவிக்கக் கூடியது, மகிழ்ச்சி உண்டாக்கக் கூடியது எதுவாயினும் அது ஒருவருடைய ஏகபோக அநுபவத்துக்குரியதாக இல்லாமல் எல்லோராலும் பகிர்ந்து உண்ணக்கூடியதாக, அநுபவிக்கக்கூடியதாக, இருக்கவேண்டும் என்பதுதான். இன்றுங்கூட நாம் காண்கின்ற ஓர் உண்மையை நினைத்துப் பார்க்கலாம். நாம் செய்கிற ஒரு காரியம் காரணமாகப் பிறருடைய உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாகி, அந்த மகிழ்ச்சி அவருடைய முகத்திலே தெற்றென விளங்குமாயின், அதைவிட மகிழ்ச்சி அளிக்கக்கூடியது நமக்கு வேறொன்றும் இருக்க முடியாது. ஆக, நற்காரியங்கள், நற்பண்புகளுடைய மிகத் தெளிவான பலன் ஒன்று உண்டென்றால் அது பிறரை மகிழ்வுறச் செய்வது என்பதுதான். பிறருடைய மகிழ்ச்சியினாலே நாம் பெறுகிற இன்பத்துக்கு ஈடானதாக வேறோர் இன்பத்தை இவ்வுலகில் பெரும்பாலும் சொல்ல முடியாது.

அது போலவே, தாம் எந்த மக்களிடையே வாழ்கின்றனரோ அந்த மக்களிடத்தே வெறுப்புக் கொள்ள மாட்டார்கள். ஒருவருடைய செயலினால் பிறருக்குத் துன்பமும், துயரமும் உண்டாவதாக

இருந்தால் அந்தச் செயலைக் கண்டித்து அதைச் செய்பவருக்கு உபதேசம் செய்யலாம். அத்தகையவரைத் தண்டிக்க வேண்டிய அவசியம் வந்தவிடத்தும் அவரைத் திருத்துவதற்காகத் தண்டிக்க வேண்டுமே தவிர, அவரை வெறுக்கக் கூடாது. வெறுப்பிலிருந்து என்றுமே நலன் பிறவாது. ஒரு மனிதரை வெறுக்காமல் அவருடைய செயலை மாத்திரம் வெறுப்போமாயின் அவர் தம்முடைய தவற்றை உணர்ந்து திருத்திக்கொண்டு நல்லவர் ஆவதற்கு வாய்ப்புண்டு. ஆனால் அவரையே வெறுப்போமாயின் அந்த வெறுப்புக் காரணமாகத் தம்முடைய செயலைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே அவருக்கு உண்டாகாமல் போக, அவர் திருந்தி நல்லவராக வாழ்வதற்கு வாய்ப்பில்லாமற் போய் விடும். மூன்றாவதாக, ஒன்றையும் அவர்கள் செய்ய மாட்டார்கள். பிறர் அஞ்சக்கூடிய துன்பத்துக்குத் தாமும் அஞ்சி அதைத் தீர்ப்பதற்குச் சோம்பியிருக்க மாட்டார்கள். ஒருவர் துன்பம் தரும் ஒன்றினைத் துடைக்க அஞ்சுகின்றார் என்பதற்காக எல்லாருமே அதனைத் தீர்ப்பதற்குச் சோம்பியிருப்பார்களேயானால் அதை யாரும் தீர்க்கும் வாய்ப்பேயின்றி எல்லோருமே துன்பத்தில் உழல்கின்ற நிலைமை உண்டாகும். யாராவது ஒருவராயினும் துணிந்து அதனைத் தீர்க்க முயன்றால் தான் அதனால் பிறருடைய அச்சமும் துன்பமும் தீரும்.

நான்காவதாக, அத்தகைய மக்கள், புகழ் ஒன்று உண்டாகுமாயின் தம்முடைய உயிரையே அதற்காகக் கொடுப்பார்கள். அதற்கு மாறாக, பழி ஒன்று உண்டாகுமென்றால் உலகம் முழுவதையும் பெறுவதாக இருந்தாலும் அதனைப் பெற்றுக்கொண்டு பழியினை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஐந்தாவதாக அவர்கள் மனக் கவற்சி இல்லாதவர்கள், ஆறாவதாக, இவை அனைத்துக்கும் மேலாக, தமக்கு என்று முயலாது பிறர் பொருட்டே முயற்சியுடையவராக இருப்பர். இந்த ஆறு தன்மைகளையும் உடைய மக்கள் வாழ்தல் காரணமாகத்தான் இந்த உலகம் ஒன்று இருக்கிறது; இல்லாவிட்டால் இந்த உலகம் இருக்காது. இந்த அருமையான கருத்து, புறநானூற்றில்,

''உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி;
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழி எனின்
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகி,
தமக்கு என முயலா நோன்தாள்,
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே''

என்ற பாடலின் மூலம் விளக்கப் பெற்றிருக்கிறது. இப்பாடலிலே முதலிலே கூறப்படும் 'உயர் பண்பு' ''இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத் தமியர் உண்டலும் இலரே'' என்பது. இந்திரருடைய அமிழ்தம் என்பது மனிதர்களுக்குக் கிடைப்பது அவ்வளவு இலகுவல்ல. அப்படி அது கிடைப்பதாயிருந்தால், தெய்வத்தின் அருளினால் கிடைக்க வேண்டும், அல்லது தவத்தின் வலிமையினால் கிடைக்க வேண்டும். யாராவது ஒருவன் தான் செய்த தவத்தின் வலிமையினாலோ அல்லது இறைவனுடைய கருணையினாலோ இந்த அமுதத்தைப் பெறுவானேயானால் அது இனிது என்பதற்காகத் தனியே உண்டிட மாட்டான். 'தமியர்' என்ற சொல்லுக்குத் 'தனித்திருப்பவர்' என்று பொருள். ஆக, எவ்வளவோ முயற்சிக்கும், கஷ்டத்துக்கும் பிறகு தமக்கு மிக உயர்ந்த பொருள் ஒன்று கிடைக்குமாயின் அதைத் தாமே உண்ணாமல் பிறரோடு பகிர்ந்து உண்ணுகிற பண்பு முதன்மையாக வைக்கப்படுகின்றது. இரண்டாவது பண்பு, 'முனிவு இலர்' என்பது. 'முனிவு' என்ற தமிழ்ச் சொல்லுக்குக் 'கோபம்', 'வெறுப்பு' என்ற இரு பொருள்களுமே உண்டு. இருந்தாலும், 'வெறுப்பு' என்ற பொருளே இங்கே சிறந்ததாக அமையும். தொல்காப்பியம், சொல்லதிகாரம், 387—ஆவது சூத்திரம், 'முனைவு முனிவு ஆகும்' என்று கூறும். 'முனைதல்' என்ற சொல்லுக்குச் சங்க இலக்கியங்களில், 'வெறுத்தல்' என்ற பொருளே சிறப்புடையதாக அமைந்திருக்கிறது. ஆக, 'முனிவு இலர்' என்பதற்கு, 'வெறுப்பு இல்லாதவர்' என்று பொருள் கொள்ளுதல் சிறப்புடையது; 'கோபம் இல்லாதவர்' என்று பொருள் கொள்ளினும் தவறாகாது. மூன்றாவதாக, நாலாம் வரியில் இடம் பெற்றிருக்கும் 'துஞ்சல்' என்பதற்கு, 'தூங்குதல்', 'சோம்பியிருத்தல்', 'சோர்ந்திருத்தல்' என்ற பொருள்கள் உண்டு. 'துஞ்சல்' என்ற சொல்லுக்கு 'இறத்தல்' என்ற பொருளும் உண்டு, ஆனால் இங்கே, 'துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சி' என்ற சொல்லாட்சியில், 'தூங்குதல்', 'சோம்பியிருத்தல்', 'சோர்ந்திருத்தல்' என்ற பொருள்களே பொருந்தும்.

இவ்வெல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறப்புப் பெற்ற சொல்லாட்சி, 'புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்பதாகும். 'கொடுத்தல்', 'பெறுதல்' என்ற இரண்டையும் வைத்துக் கொண்டு இங்கே கவிஞர் பாடுகின்றார். நாம் கொடுத்தலில் மிகக் கண்டிப்பாக இருக்க விரும்புவோம். அதாவது, நமக்கு அதிகமாகத் தேவையில்லாத ஒன்றைத்தான் கொடுக்கத் தயாராக இருப்போம். அது போலவே, நமக்கு எது அதிகமாகத் தேவையோ அதைத் தான் பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்போம். அதற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டோம். இங்கே கவிஞர் இரண்டுக்கும் ஓர் எல்லையை வகுத்துவிடுகிறார். நாம் விரும்புகிற எதிலும் தம்முடைய உயிரை விட அருமையானது நமக்கு வேறெதுவும் இல்லை. அந்த உயிரைக் கூடக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள், புகழ் வரும் என்றால். அதுபோலவே, நாம் பெற விரும்புவதற்கு எல்லையே இல்லை. ஆசை என்பது அளவோடு நிற்குமாயின் அது உண்மையில் ஆசையே ஆகாது; தேவையாகவே ஆகிவிடும். அதற்கு மாறாக, சாதாரண மனித இயல்பு எதையும் தான் பெற்றுக் கொள்ள வேண்டும், எதுவும் தன்னிடம் இருக்க வேண்டும் என்பது தான். ஆனால், அது எப்படிக் கிடைக்கின்றது என்பது பற்றிக் கவலைப்படுவது இல்லை. ஒரு பொருளின் மேல் மனத்தை வைத்து விட்டால் அதை எப்படியாவது அடையவே வேண்டுமென்று விரும்புகிறோமே தவிர, அதை அடைகிற வழியைப் பற்றியோ, பின்பற்றுகிற வழியினால் உண்டாகும் விளைவைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. ஆனால், கவிஞர் இந்த வழிக்கு ஒரு விதி வகுக்கின்றார். அதுதான், பழி என்ற ஒன்று பலனாக விளையுமாயின் உலகம் முழுவதுமே கிடைப்பதாயிருப்பினும் அதனைப் பெற்று, அப் பழியைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது. கவிஞர் பாடும்பொழுது ஏதோ கற்பனை உலகிலே நடக்கக் கூடிய ஒன்றைப் பாடிவிட்டுப் போகிறார் என்று கொள்வது நமக்கும் பெருமையன்று; கவிஞனுக்கும் பெருமையன்று; நாம் பிறந்த நாட்டுக்கும், அந்நாட்டு மக்களின் பண்பிற்கும், கலாசாரத்துக்கும் பெருமை அன்று. எவ்வளவு உயர்ந்த வாழ்க்கை வழியை அவன் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றான் என்று பார்க்கும்போது, அவனுடைய உயர்ந்த உள்ளத்தை நாம் முழுமையாக உணர்ந்துகொள்வதோடு, அவனுடைய குறிக்கோளின் உச்ச நிலையையும் காணவே செய்கிறோம்.

இங்கே இடம் பெற்றிருக்கும், 'புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்' என்ற சொல்லாட்சியைக் கம்பன் மிக அருமையாக ஓரிடத்தில் ஆளுவான். அசோக வனத்தில் தன்னைக் கண்டுபிடித்த அநுமனிடத்தில் இராமனது வரலாற்றைச் சீதை வினவ, அவன் அதைப் பல பாடல்களில் எடுத்துக் கூறுவான். இராமன் சீதையைக் காணாமல் அவளைத் தேடிச் சென்றதையும், சீதையின் பிரிவினால் அவன் பட்ட துயரையும் விளக்குமிடத்து, அப்படிச் சீதையைத் தேடிக் கொண்டு சென்றபோது சடாயுவைச் சந்தித்ததைப் பின்வருமாறு கூறுவான்.

''அந் நிலை ஆய அண்ணல்
ஆண்டு நின்று அன்னை! நின்னைத்
துன் இருங் கானும் யாறும்
மலைகளும் தொடர்ந்து நாடி,
இன் உயிர் இன்றி ஏகும்
இயந்திரப் படிவம் ஒப்பான்,
தன் உயிர் புகழ்க்கு விற்ற
சடாயுவை வந்து சார்ந்தான்.''

பாடல், விளக்கம் தேவையற்ற எளிய சொற்களாலானது. நாம் இங்குக் கூர்ந்து நோக்கத்தக்கது

இறுதி அடியில் உள்ள, 'தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என்ற சொல்லாட்சிதான். ஏதோ புகழைப் பெறவேண்டும் என்பதற்காகச் சடாயு உயிரை விடவில்லை. இராவணனிடத்திலிருந்து சீதையைக் காப்பாற்றுவது தன் கடமை என்ற உணர்வில்தான் அவனோடு போர் செய்து சடாயு உயிர்நீத்தான். அவனைத்தான் அநுமன், 'தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என்றான்.

அடுத்துப் புறநானூற்றுப் பாடலில், 'அயர்வு இலர்' என்ற சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. இப்பாடலில் காணப்படும் 'அயர்வு இலர்' என்ற இந்தச் சொற்களுக்கு, 'மனக்கவற்சி இல்லார்' என்ற பொருளைப் பழைய உரையொன்று கூறுவதாகப் பதிப்புகளிலிருந்து தெரிகிறது; மனக்கவற்சி என்பதற்கு மனக்கவலை என்றுதான் பொருள். 'அயர்தல்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு, 'தளர்தல்', 'உணர்வு அழிதல்' என்ற பொருள்களோடு, 'விரும்புதல்' அதாவது, 'ஆசைப்படுதல்' என்ற பொருளும் உண்டு. இங்கே காணப்படும் 'அயர்வு' என்ற சொல்லுக்கு மனக்கவலை என்பதற்குப் பதிலாக, ஆசை என்று பொருள் கொண்டால் பொருள் சிறக்கும்: மனக்கவலை எப்போது உண்டாகிறது? தனக்குத் துன்பம் ஏற்படும் பொழுதோ, தான் எண்ணியது நிறைவேறாதவிடத்தோ கவலை பெரும்பாலும் உண்டாகிறது. ஆக, மனக்கவலை அற்றவர்களாக இருந்தார்கள் என்றால் அவர்களுக்குத் துன்பம் எதுவும் இல்லை, அவர்கள் முயன்றது எதுவும் தோல்வி அடைந்ததில்லை என்றுபொருளாகும். இங்கோ 'அயர்வு இலர், என்ற சொற்கள் 'துஞ்சலும் இலர்', 'பிறர் அஞ்சுவது அஞ்சி' என்ற சொற்றொடருக்குப் பின்னாலும், 'தமக்கு என முயலா நோன்தாள், பிறர்க்கு என முயலுநர்' என்ற சொற்றொடருக்கு முன்னாலும் அமைந்திருக்கின்றன. ஆக இங்கே, 'அயர்வு' என்பதற்கு 'மனக்கவற்சி' அல்லது 'மனக்கவலை' என்று பொருள் கொள்வது அவ்வளவு சிறக்கும் என்று தோன்றவில்லை. அதற்கு மாறாக, 'அயர்வு' என்பதை 'ஆசை' என்று கொண்டால் பொருள் சிறக்கவே செய்யும்.

காரணம் என்னவென்றால், இந்த நாட்டினுடைய தத்துவங்கள் அனைத்தும், ஆசையே எல்லாத்துன்பங்களுக்கும் மூலகாரணம் என்கின்றன. ஆசையை விடுதலே முக்திக்கு முதன்மையான வழி என்பது இந்நாட்டின் தொன்மைக் கொள்கை. தேவையைத் தேடிக் கொள்வது வேறு; தேவையற்றதன்மேல் ஆசைப்படுவது வேறு. ஆசை இல்லாவிடத்து மனத்தில் அமைதியும், நிறைவும் என்றும் பொங்கிக் கொண்டிருக்கும். இந்தக் கருத்தில் 'அயர்வு இலர்', அதாவது 'ஆசையில்லார்' என்று கவிஞர் பாடியிருக்கிறார் எனப் பொருள்கொள்வது தவறாகாது; சிறப்புடையதும் ஆகும்.

இவற்றுக்கும் மேலாகஇன்னும் ஒன்றையும் இந்தக் கவிஞர் கூறுகிறார். முன் குறிப்பிட்ட மாட்சிமை பெற்ற தன்மைகளை உடையவர்களாகித் தமக்கு என்று முயலாத, பிறர் பொருட்டென முயல்பவர்கள் என்று குறிப்பிடுகிறார். சொற்கள் எளிய சொற்கள்தாம். 'நோன் தாள்' என்பதில் இடம் பெற்றிருக்கும் 'தாள்' என்ற சொல்லுக்கு 'முயற்சி' என்றுதான் பொருள்.

இப்பொழுது பாட்டின் இறுதியில் இருக்கிற 'உண்மையானே' என்ற சொல்லைப் பாட்டின் தொடக்கத்திலே இருக்கிற 'உண்டால் அம்ம, இவ்வுலகம்' என்ற சொற்களோடு சேர்த்துப் பார்க்கும்போது காரண காரியம் நன்றாக விளங்கும்.

இத்தகைய மக்கள் 'உண்மையானே (இருத்தலினால்தான்), உண்டால் அம்ம இவ்வுலகம்' (இந்த உலகம் இருக்கின்றது.) அத்தகைய மக்கள் இல்லாவிட்டால் இந்த உலகம் இருக்காது. இங்கே ஓர் அற்புதமான நயத்தைக் காண்கிறோம்.

'உண்டால்' என்று பாடல் தொடங்குகிறது: 'உண்மையானே' என்று பாடல்முடிகிறது. 'உண்மை' என்ற சொல்லுக்கு 'உள்ளது', 'உளதாகை' என்று பொருள். அதாவது, உளதாகிற, அல்லது இருக்கிற தன்மை. இந்தப் பொருளில்தான் ஈற்றடியில் 'உண்மை' என்ற சொல் வருகிறது; இதே பொருளைக் கொண்டிருக்கும் சொல்லாக, 'உண்டு' என்ற சொல், முதலடியின் முதற்சொல்லாக அமைந்திருக்கிறது. ஒரே பொருளை உணர்த்தும் ஒரே சொல்லின் வினைவடிவைப் பாடலில் முதற்சொல்லாகவும், பெயர்வடிவைப் பாடலின் இறுதிச் சொல்லாகவும் அமைத்திருக்கும் திறன் வியந்து பாராட்டற்குரியது.

ஆகவே, இதை இப்படிப் பார்க்கும்போது 'உலகம்' என்ற சொல்லினுடைய பொருளை நாம் உணர்ந்து கொள்வதோடு, அந்த 'உலகம்' என்ற சொல்லில் அடங்கியிருக்கும் மக்களினுடைய தன்மையையும் பண்புகளையும், முயற்சிகளையும், குறிக்கோளையும் உணர்ந்து கொள்கிறோம். 'உண்டால் அம்ம' என்ற சொற்களில் இடம் பெற்றிருக்கும் 'அம்ம' என்ற இடைச்சொல் அசை நிலையாக வந்தது என்று உரையாசிரியர்கள் கூறுவார்கள். அதே சமயத்தில், 'அம்ம' என்ற சொல் அதிசயத்தைக் குறிக்கும் சொல்லாகும். 'இத்தகைய மக்கள் இருப்பதனால்தானே இவ்வுலகம் இருந்து கொண்டேயிருக்கின்றது!' என்று அதிசயத்தைக் கொள்ளினும் பொருத்தமே யாகும்: என்றும் உலகில் அநியாயமும், சுயநலமும், வஞ்சனையும் இருந்து கொண்டுதான் வந்திருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தில் இவை மிகுதியாகவோ அல்லது குறைவாகவோ இருந்திருக்கலாம். இவை முழுமையாக இல்லாத காலம் ஒன்று இருந்திருக்க முடியும் என்று சொல்வதற்கில்லை. ஆகவே, இக்கவிஞர் காலத்திலும், அத்தகைய அநியாயமும் சுயநலமும் வஞ்சனையும்இருந்திருக்கத்தான்வேண்டும். இவற்றையெல்லாம் பார்த்த கவிஞருக்கு, 'இவை யாவும் நிலவும் போது எப்படி இந்த உலகம் வாழ்கிறது!' என்ற வியப்புத் தோன்றியிருக்க வேண்டும். அப்பொழுதுதான், இப்பாடலில்குறிப்பிட்ட மக்கள் வாழ்வதனாலேதான் இவ்வுலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்ற உறுதி அவர் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும். இதைக் குறிக்குமாப்போலே முதல் வரியில் 'உண்டால்' என்ற சொல்லுக்குப் பின்னால் காணப்படும் 'அம்ம' என்ற சொல்லும், ஈற்றடியில், 'உண்மையான்' என்ற சொல்லுக்குப் பின்னால் காணப்படும் 'ஏ' என்ற எழுத்தும் அமைந்திருக்கின்றன. ஈற்றடியில் வந்திருக்கும், 'உண்மையானே' என்ற சொல்லாட்சிக்கு, 'இத்தகைய மக்கள் இருப்பதனால்தான், வேறு ஏதேனும் அல்ல' என்ற பொருள் தெளிவாக உண்டு. தமிழ் இலக்கண வழக்கப்படி 'ஏ' என்ற சொல் பிரிநிலை ஏகாரமாகவும், தேற்ற ஏகாரமாகவும் வரும். சிலவற்றில் ஒன்றைப் பிரித்துக் காண்பிக்க ஆளப்படும்போது பிரிநிலை ஏகாரமாகவும் வரும். ஒன்றை வற்புறுத்திச் சிறப்பித்துக் காண்பிக்க வரும்பொழுது தேற்ற ஏகாரமாகவும் வரும். 'இத்தகைய மனிதர்கள் இருப்பதனாலேயே இவ்வுலகம் வாழ்ந்து வருகிறது. வேறு எதனாலும் அன்று' என்று பொருள் கொள்வோமாயின் இந்த ஈற்றடியில் காணப்படும் ஏகாரம் பிரிநிலை ஏகாரமாகும். அப்படியில்லாமல், இத்தகைய மக்கள் இருப்பதே இவ்வுலகம் வாழ்வதற்குக் காரணம் என்று வற்புறுத்தி, சிறப்பித்துச் சொல்லும்போது அது தேற்ற ஏகாரமாகும்.

இதைப் பாடியவர் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்பவராகும். இவரைப் பற்றிய குறிப்பு மிகச் சிறிய அளவிலேயே கொடுக்கப் பெற்றிருக்கிறது. பரிபாடலிலுள்ள திருமாலுக்குரிய 15-ஆம் பாடலை இயற்றியவர் இவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர் பாண்டியர் குடியில் பிறந்தவர் என்றும், 'வழுதி' என்ற பெயரே இதைப் புலப்படுத்தும் என்றும், இளம் பிராயத்திலேயே பேரறிஞராக இருந்தது பற்றி இப்பெயரை அடைந்தனர்போலும் என்றும், ஒரு பெரியார்க்குச் சிறுப்பெரியார் என முற்காலத்தில் பெயர் வழங்கிற்று என்றும், 'கடலுள் மாய்ந்த' என்னும் அடை இறந்த பின்பு இவருடைய பெயரின் முன்னர் அமைக்கப் பெற்றது என்று சொல்லாமலேயே விளங்கும் என்றும், சோலைமலையிலுள்ள திருமாலைப் பாடியிருத்தல் பற்றிச் சமயத்தில் இவர் வைணவராக கருதப் பெற்றனர் என்றும், இவர் பாடிய இப்பாடல் சொல்லாலும் பொருளாலும் இனிமை வாய்ந்தது என்றும், புறநானூறு பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் கூறுவார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ஒருவர் பாடியது இன்றுங்கூட நாம் எண்ணி, சிந்தித்து, நம்முடைய வாழ்வில் இப்பண்புகள் தேவைப்படுவனவாக இருக்கின்றனவே என்று கவலைப்படுகிற நிலையில் இந்தப் பாடல் அமரத்துவம் பெற்றிருப்பதுதான் இதனுடைய ஒப்பற்ற சிறப்பாகும். ❋

வாழ்க்கையின் சிறு மகிழ்ச்சிகளுக்காக சேமிப்பது எப்படி ?

உங்கள் குழந்தைகளின் முகத்தில் காணும்
மகிழ்ச்சி, குடும்பத்தினருடன் உல்லாசப்
பிரயாணம்—இவை போன்ற சில
மகிழ்ச்சித் துளிகள் வாழ்க்கையின் சிறப்பு
அம்சங்களாகும். இன்று சேமிக்கும்
வசதியில் உள்ள நீங்கள் கனரா பாங்கில்
நிரந்தரா டெபாசிட் கணக்கை உடனே
தொடங்குங்கள்.

மாதந்தோறும் சேமிக்கும் சிறு தொகை
யானாலும், ஒரே தவணையில் செலுத்தப்
படும் கணிசமான தொகையானாலும் இத்
திட்டத்தில் சேமித்த தொகை
நிரந்தரமான மாத வருமானத்தைப் பெற
வழி செய்கிறது.

உங்கள் பாதுகாப்பான எதிர்காலத்திற்கு
உறுதியளிப்பது நிரந்தரா டெபாசிட்
திட்டம்.

விபரங்களுக்கு அருகில் உள்ள எமது
கிளைக்கு விஜயம் செய்யுங்கள். எமது
இதர சேமிப்புத் திட்டங்கள்: காமதேனு,
வித்யாநிதி, பாலக்ஷேமா முதலியன

நிரந்தரா டெபாசிட்

கனரா பாங்க்

(தேசியமாக்கப்பட்ட பாங்க்)
நாடெங்கிலும் 1200க்கும்
மேற்பட்ட கிளைகள் உள்ளன.

GROWING TO SERVE
SERVING TO GROW
CANARA BANK

maa CB 2 Tam.80

வருவது தேடி வரும்



சௌந்தரா கைலாசம்

பன்னிரண்டு கையானைப் பணியுங்கள்; பணிந்தவுடன்
பொன்திரண்டு வரும்;அதிலே பூக்கும் வயிரம்என்ருல்
கடவுளினைப் போய்த்தொழுதால் கைநிறையும் பொன்என்ருல்
இடம்நமக்குக் கோயிலிலே இருக்காது ஒருநாளும்!
ஆசைதரும் பட்டியலை அணுவளவும் மாற்ருமல்
ஓசையெதும் செய்யாமல் ஒப்புக்கொண் டாண்டவன்தான்
அப்படியே கொட்டி அளப்பாஞ? அவன்நந்தம்
சொற்படியே நடப்பாஞ? சுகங்கொடுக்கப் பார்ப்பாஞ?
நாம்
கேட்டதெலாம் தந்துவிடின் கிறுக்குப் பிடித்தலேவோம்.
ஊட்டமுள்ள தெதுவென்று உணர்ந்தவரா நாமெல்லாம்?
எதுநமக்கு ஒத்துவரும் என்பதவன் அறிவான்;
அதுநமக்குக் கொண்டுதரும் அருளைத் தினம்புரிவான்.
புரட்டி எடுத்துப் புடம்போட்டு, இருவினையை
விரட்டி அடிப்பான், வெற்றி வடிவேலன்!
காலே நமக்குக் கதியென்ருல் தாய்வயிற்றுச்
சூலே அறியாச் சுகத்திற்கு வழியமைப்பான்!
எதையும் பிளந்திடுவான்; இதயம் அளந்திடுவான்;
எதுவெனினும் உடன்படுவான்; ஏற்ற இடம்தருவான்;
செங்கதிரை வரவேற்கும் சேவலினைத் தூக்கிவைப்பான்;
வரும்முகில்கண் டாடுமயில் வாகனமாய் ஆக்கிவைப்பான்!
நாலுதரம் சொல்லிவிட்டு நடந்ததென்ன என்னவென்றே
எழுதரம் கேட்டிருந்தால் எதுவும் நடக்காது!
சினம்மாற மருள்மாறத் சிங்கார வேலன்பேர்
மனமாரச் சொல்லிடுவோம்; வருவது தேடிவரும்!

சுயரூபம்

—தமிழழகன்

கற்றவன் போல்பல கற்பனை பேசிக்
கருத்தையே கொட்டுகின்றேன்;—எனினும்
பெற்றதோர் ஞானப் பிழைப்புக்கொள் ளாமல்தான்
பேதைமை தட்டுகிறேன்;
நல்லவன் போல்பல நாடகம் ஆடியும்
நாளும்முன் னேறுகின்றேன்;—எனினும்
வல்ல தருணத்தின் வாய்ப்பில் விலங்கினும்
வஞ்சந்தான் நேருகின்றேன்.
தொண்டினுக் கேஇங்குத் தோன்றிய வன்போல்
துணிச்சலைக் காட்டுகின்றேன்;—எனினும்
வண்டினைப் போல்சுக வாழ்வுக்கு லாப
வணிகந்தான் தட்டுகின்றேன்.
எத்தனை யோபல வினங்கள் இப்படி
என்வசம் கொள்ளுகின்றேன்;—எனினும்
மெத்தன மாய்அவை மேல்வள ராவகை
மீளாமல் துள்ளுகின்றேன்.



பாலும் பலாவும்

த. நா. குமாரஸ்வாமி

நைரஞ்சரை ஆற்றங்கரையில் உள்ள ஊர் உருவேலா. முல்லே சார்ந்த நிலமானதால் செல்வமான ஆயர்கள் அங்கு வாழ்ந்தனர். பலதேவ கோஷன் இந்தக் கோவலர்களின் தலைவன். வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் அவனிடம் இருந்தன. முள் செறிந்த மரக்காடு ஆனதால் அவ்வூருக்கு அப் பெயர். நைரஞ்சரை ஆற்றில் அவ்வப்போது தான் நீத்தம் பெருகியோடும். பின் பனிக்காலமானதால் அதில் துடையளவே நீர். கல்லும் கரடுமான படுகையில் சலசல வென்று அது செல்லும் காதுக்கினிய ஓசை. பட்டப் பகல் வேளை. ஆற்றின் மீது கவிந்திருக்கும் ஒரு பசும்புதர் நிழலில் கரையருகில் அமர்ந்து இளமங்கையர் இருவர் சிரிப்பும் குதூகலமுமாய்ப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுள் மென்சாயல் ததும்பும் இளமைக்காரி சுஜாதா; பலதேவ கோஷனின் ஒரே மகள். அவளுடன் ஒன்றித் தோன்றுபவள் அவளுடைய ஆருயிர்த்தோழி நந்தினி; எளிய பார்ப்பனக் குடியில் பிறந்தவள். ஊரைப்பற்றிய செய்தியெல்லாம் அவளுக்கு மனப்பாடம். ஆயர் மடந்தை சுஜாதா, தன் மனத்துள் எதையும் மறைத்து வைப்பதில்லே. கணவனுடன் தான் ஊடிய கதையைக் கூடத் தன் தோழியிடம் கூறுவாள். நந்தினி ஒரு தவ மகள் போலவே இருந்தாள். நடுவயதினள். கல்வி நிமித்தம் தேசாந்தரம் சென்ற அவளுடைய கொழுநன் திரும்பவே இல்லே. வாழ்க்கையில் வெறுப்புற்று அவள் இந்நிலேக்கு வந்தாலும், ஊர் வம்பளப்பு மட்டும் அவளுக்குப் பிடிக்கும்.

சுஜாதா பிறந்தகம் வந்து ஓர் ஆண்டுக்கு மேலாகிறது. அவள் பெற்றெடுத்த செல்வ மகனுக்கு ஆண்டு நிறைவு வருவதால், அவள் தன் கணவன் வீட்டுக்குப் போக வேண்டிய நாள் குறுகியது. தன் அலேக் கூந்தலே விரித்துக் கோதிய வண்ணம் தோழியின் தோள்மீது சாய்ந்து, ''நந்தினி, இன்னும் ஒரு மாதந்தான். அப்புறம் உன்னே எப்போது பார்ப்பேனே?'' என்ருள்.

''எனக்கென்னவோ போகவே பிடிக்கவில்லே. உன்னேப் போல் அத்தனே பெரிய பட்டணத்தில் எந்தத் தோழி எக்னகு அகப்படப் போகிருள்?'' என்று கண்களில் நீர் துளிக்க வேதனேயைக் காட்டினுள் சுஜாதா.

''அடி அசடே, சுஜா, கணவன் தான் தெய்வத்தைவிட மேலானவன். உன்னேப் போன்ற ஒரு பொற்பாவையை அள்ளி அணேத்துக்கொள்ள அவனுக்கும் துடிப்பு இருக்குமல்லவா? நீ யக்ஷசுத்தி (மரத்து முனிக்குப் பொங்கல்) செய்துவிட்டு நல்ல நாள் பார்த்துப் புக்ககம் போ!'' என்று புத்தி கூறினுள் நந்தினி.

''நீ சொல்வது சரியே. அவருக்கும் தம் மகனேக் காண வேண்டுமென அவா இருக்குமல்லவா?'' என்று சுஜாதா தன் உயிரனேய தோழியைத் தழுவிக்கொண்டாள்.

அருகிலேயே அவள் கண்ணும் கருத்துமாய் வளர்த்த பில்லே நிற ஆ அவளே நோக்கி வந்தது.

''சுஜா, எத்தனே பாசமாக அதற்குச் சொரிந்து கொடுக்க எப்படித் தன் கழுத்தை நீட்டுகிறது, பார்! உன்னிடம் ஒன்று சொல்ல மறந்தே போய்விட்டேனே! சில நாட்களாக நான் கவனித்து வருகிறேன். காட்டிலிருந்து உலர்ந்த சுள்ளி பொறுக்கிக் கொண்டு வரும்போது, அங்கே ஓர் அரச மரம் இருக்கிறது. இருட்டுகிற வேளே. மெலிந்த உருவுடன் ஒரு சந்நியாசி அங்கே வட்டமிட்டுக்கொண் டிருந்தார். பல நாட்கள் அவரை இந்நிலேயில் பார்த்திருக்கிறேன். கண்கள் குழி விழுந்து ஏதோ ஏக்கத்துடன் அவர் அந்த இடத்திலேயே நடமாடிக் கொண்டிருந்தார். ஒரு நாள் நன்ருக அஸ்தமித்துவிட்டது. காட்டில் மரங்கள் சருகுகளே உதிர்த்து வெறுங்கிளேகளே நீட்டிக் கொண்டிருந்தன. உதிர்ந்த சருகுகளின்மீது நடந்து அவர் நகரவும், அவருடைய முகத்தை ஒரு மரத்து மறைவிலிருந்து நோக்கினேன். ஆகா! என்ன ஒளி அந்த முகத்தில்! என்ன துயரமோ? எதைத் தேடி அலேகிருரோ? ஒரு வேளே ஐந்து கிளேயாகப் படர்ந்திருக்கும் அந்த அரசமரத்து முனியோ என்று எனக்குச் சந்தேகம்'' என்ருள் நந்தினி.

வெளுத்ததெல்லாம் பாலென நினேக்கும் சுஜாதா, ''ஐயோ! நான் அந்த அரசமரத்தின் கீழ் எப்படியடீ பால் பொங்கல் வைப்பேன்?'' என்ருள்.

''நான் உன்னுடன் இருக்கும்போது இந்த அச்சம் எதற்கு? அந்த உருவம் முனியோ பிசாசோ அல்ல. ஏதோ யோக சித்தி பெற இடம் தேடி அலேந்து உலகை முற்றும் துறந்த முனிவராகத்தான் இருக்க வேண்டும். பங்குனி மாதம் இந்த அரசமரத்து முனிக்கும் பொங்கல் படைக்கவேண்டும்'' என்ருள் நந்தினி.

பங்குனி பிறந்தது. யக்ஷசுத்திக்கான நாள் குறிக்கப்பட்டது. சுஜாதாவின் தாய் இந்தப் பொங்கல் படையலேச் செய்ய வேண்டிய முறைகளேத் தன் மகளுக்கும் அவளுடைய தோழிக்கும் உணர்த்தினுள்.

பொங்கல் இடுவதற்கு முன்னுள் சுவையான பாலேச் சொரியும் ஐந்து நல்ல ஆவினத்தின் பாலேக் கறந்து, அந்தப் பாலேக் காய்ச்சிச் சிறந்த இனத்தைச் சேர்ந்த காராம் பசுவின் தீவனத்தில் கலந்து அதை உண்ணும்படி செய்யவேண்டும், அந்தக் காராவினேக் கறந்து எடுத்த பாலே வெள்ளிக் கலயத்தில் கொதிக்க வைத்து, ஆடை திரண்டெழும்போது உயர்வகைச் செஞ்சாலி அன்னத்தைக் கலந்து, தீஞ்சுவைக் கருப்பஞ்சாற்றைப் பெய்து முளிந்த பக்குவம் வரும்போது மணம் தரும் சரக்குகளே அதில் கூட்டிச் சமைக்க வேண்டும். அதைப் பொற்கிண்ணத்தில் இட்டு, யக்ஷசுத்தியாகப் படைக்கவேண்டும். பெற்ற குழந்தையின் நலனே விரும்பி இதனேச் செய்வதால் சுஜாதாவே இதனே ஆற்ற வேண்டும். சுஜாதா பங்குனி உத்தர நாளன்று இந்த நோன்பினே நடத்தச் சித்தமானுள்.

இளவேனிலின் வருகையை அறிவித்தன செந்தளிரும் பூவிணரும்,

கோதமர் தம் அரச வாழ்வையும், காதல் களிப்பைத் தந்த அழகிய மனைவியையும், பாசத்தால் பிணைக்கும் மதலைச் செல்வனை ராகுலனையும் விட்டுவிட்டு, பற்றுதல் அறவே ஒழிந்த உள்ளத்துடன் சிகையை மழித்துத் துவராடையணிந்து மனித சமூகத்தை அலைத்திடும் துயரினை அடியோடு களைந்து பேரின்ப வாழ்வைப் பெறுவதெப்படி என்று அறிய ஒரு பிக்ஷுவாக மாறிக் கடுமையான பாதையில் தன்னந்தனியே சென்றார்.

பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடாகிய துன்பங்களை எப்படி ஒழிப்பதென்று துறவோர் பலரை அணுகி ஆராய்ந்தார். அராள காலாராமரென்ற முனிவர், அவருக்கு யோக மார்க்கத்தைப் போதித்தார். அந்தக் கடுமையான சாதனை அவரை எலும்பும் தோலுமாக்கி உருக் குலைத்து விட்டது. பசி பட்டினி இருந்ததால் உடற் பிணிக்கு ஆளானார், கோதம பிக்ஷு. உருவேலா வனத்தை நாடி அங்கே கோரத்தவம் புரியும் ஐவர் காட்டியபடி தவங்கிடந்தும் மனத்தில் தெளிவு ஏற்படவில்லை. உடலை வருத்திச் செய்யும் யோகப் பயிற்சிகள் உடலுடன் மனிதனின் உள்ளத்தையும் நசுக்கி விடுமென்ற உண்மை அவருக்குப் புரிந்தது: அந்தத் தவசிகள் ஐவரும், இவன் பட்டினிக்கு அஞ்சியோடும் ஆளென்று கோதமரை இகழ்ந்தனர்: ஆனால் தம் முயற்சியை அவர் விடவில்லை.

'தன்னாலேயே தான் முன்னேற வேண்டும். தன்னையே தான் கட்டியாள்பவன் தனக்கே துணை நின்றவனாவான்' என்ற முடிவுக்கு வந்து, சிந்தனையில் ஆழ்ந்து காய்கிழங்குகளைப் புசித்து, பசி நோயைத் தடுத்து, உருவேலா நகரையடுத்த காட்டகத்தில் யார் கண்ணிலும் படாமல் அலையத் தொடங்கினார். இருட்டும் சமயத்தில் சற்று வெளியே வருவார். நைரஞ்சரை ஆற்றுப் பக்கம் எவரும் வராத வேளை பார்த்து அதில் நீராடி இரண்டு வாய் நீரைக் குடித்துப் பசி தீருவார். பனி நாளானதால் காட்டில் கனி வகைகளும் அழுகி விட்டன: அதனால் உதிர்ந்த சருகுகளைத் தின்று உயிர் வைத்திருந்தார் கோதம பிக்ஷு.

பங்குனி, சந்திரன் முழுக் கலையுடன் எழும் நாள். தாய் கூறியபடி சுஜாதா, ஐந்து ஆக்களின் பாலை உட்கொண்ட காராவின் பாலைத் தானே கறந்து வெள்ளிக் கலயத்தில் ஊற்றி அதன் மீது பொற்கிண்ணத்தை மூடி அர்ச்சனைக்கு மணமுள்ள அசோக மலரிணர்களைப் பறித்து மூங்கிற் கூடைக்குள் வைத்து, மாலை நேரத்துக்காகக் காத்திருந்தாள்.

நந்தினி வறட்டியுடன் வந்ததும் இருவரும் நைரஞ்சரை ஆற்றுத் துடையளவு நீருள் இறங்கி எதிர்க்கரையை அடைந்தனர். கரை மேட்டில் ஏறியதும் காடு. சற்று உட்புறமாகச் சென்றால் அந்தப் பழைய அரசமரம் எதிர்ப்படும். மற்ற மரங்கள் மறைப்பதால் அவ்வரசமரம் சட்டெனக் கண்ணிலே படாது:

தோழியர் இருவரும் சென்ற சமயத்தில் அங்கு எவருமே இல்லை. நந்தினி அடிக்கடி பார்த்திருக்கும் அந்தப் பிக்ஷுவையும் அங்கே காணவில்லை. வறட்டிகளைக் கோபுரம் போல் அடுக்கினாள் சுஜாதா. வீட்டிலிருந்து எடுத்து வந்திருந்த நெலிகோலால் புல் கற்றையில் தீயைக் கோலி வறட்டியில் பற்ற வைத்தாள். அந்த மெதுவான சூட்டில், வெள்ளிக் கலயத்திலுள்ள பால் கொதித்தது. உரிய சமயத்தில் செஞ்சாலியன்னத்தையும் கருப்பஞ்சாற்றையும் பெய்து சந்தன அகப்பையினால் கிளறினாள். மஞ்சள் நிறமாக அந்தப் பால் சோறு பொங்கிய போது, மணச் சரக்குகளைத் தூவினாள்.

நந்தினியை விளித்துச் சுஜாதா, "பொங்கல் சமைத்தாயிற்று. நீ சொன்ன அந்த முனிவரைக் காணோமே! இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் நம் ஊர்த் தோப்புக்கு மேலே வட்டமதி எழும். பூசனைக்கு எல்லாம் சித்தமாகிவிட்டன. ஆனால் அவர்தாம் இல்லை" என்று கூறினாள்.

"அவர் இந்த மாலை மங்கும் நேரங்களில் இங்கேதான் இடம்கொள்வார். நான் பல முறை கண்டிருக்கிறேன்: இன்று அவருக்கு என்ன நேர்ந்திருக்குமோ? வருவார் பாரேன்" என்று சொல்லி முடிப்பதற்குள் கோதம பிக்ஷு வந்தார். சுஜாதாவுக்கு ஒரே நடுக்கம். கோதமர் அவர்கள் அங்கிருப்பதைக் கவனிக்கவே இல்லை. அரசமரத்தின் கீழ்ப் புல்தரையில்

ஒரு புறம் படுத்துப் பசியினால் மெல்லக் கண்ணை மூடிக் கொண்டார். உடல் நிற்பதற்கான திராணியே போய்விட்டது. ஒரு வாரமாக அவருக்கு எந்தக் கிழங்கும் கிடைக்கவில்லை. வெறும் ஆற்று நீரையே பருகி வந்தார். தாங்காத களைப்பு.

"நந்தினி, பாவம்! எவ்வளவு களைப்பாகப் படுத்து விட்டார்! நாம் இவ்வளவு அருகில் இருந்தும் பாவம்!

அவர் எதையுமே கேட்கவில்லை. இந்தப் பாலமுதை அவருக்குத் தருகிறேனே! அவர் ஏற்பாரோ மாட்டாரோ?'' என்று சுஜாதா உள்ளம் நெகிழக் கூறுவதைக் கேட்டுத் தோழி நந்தினி, ''இந்த அரசமரத்தை நம்பி வாழும் முனிவர் இவரே. பாலன்னத்தை இவருக்குத் தருவோம். கட்டாயம் இவர் நாம் தருவதைத் தள்ளமாட்டார். தவறு எதுவும் நாம் செய்யவில்லை. பசிக்குப் பாலன்னம் தருகிறோம். அதனால் நமக்கும் ஒரு திருப்தி ஏற்படும், உரிய இடத்துக்கு இந்த அமுதம் போய்ச் சேருகிறதென்று. மெல்ல வா. நாம் அவரை வணங்கி, இந்தப் பாயசத்தை ஏற்குமாறு வேண்டுவோம்'' என்று கூறியபடி இருவரும் கோதம பிக்ஷுவை அணுகினர். சுஜாதா நந்தினியின் பின்னாலேயே சென்றாள். என்ன நடக்குமோ என்ற திகில் அவளுக்கு.

கோதமருக்கு அவர்கள் தம் அண்டையில் வந்து நிற்பதுகூடத் தெரியவில்லை. கொடிய பசி அவர் கட்புலனை மழுங்கச் செய்து விட்டது.

''யாரோ தெரியவில்லை நீங்கள். இந்த நாட்டில் உறையும் தவசியென்று நினைக்கிறோம். ஏ பிக்ஷு, நாங்கள் இந்த அரசமர முனிக்குப் படைக்க இப்பாலன்னம் செய்தோம். உங்களுக்கே இதைப் படைக்கின்றாள் இந்தப் பேதை சுஜாதா. ஏற்றருள்வீர். நீர் கொடிய பசியால் வாடுகிறீர். எழுந்து உளமுவந்து தரும் இந்த உணவைக் கொள்ளீர்'' என்று பக்தியுடன் சொன்னாள் நந்தினி.

சவமெனக் கிடந்த அந்தத் துறவி எழுந்து பக்கத்தில் நின்ற இருவரையும் நோக்கினார். வயிறு குடலுடன் ஒட்டியிருந்தது. கை விரல்கள் நடுங்கின. அவர் தரையில் கை ஊன்றி எழுந்திருக்கையில், ''யார் அம்மா? எனக்குப் பசிதான் பொறுக்க முடியாமல் இங்கே வந்து விழுந்து விட்டேன். நீங்கள் இத்தனை அன்புடன் எனக்குத் தரும் இந்த அமுதை நான் வெறுக்க மாட்டேன். கொடுங்கள், உண்கிறேன்'' என்றார் ஆயாசத்துடன்.

சரசரவென்று சுஜாதா வெள்ளிக் கலயத்தில் இருக்கும் அந்தப் பாயசத்தைப் பொற்கிண்ணத்திலே இட்டு, கோதமபிக்ஷு அருகில் வந்து அவர் அடிகளில் அசோக மலர்களை வைத்து வணங்கி, பால் கிண்ணத்தை அவர் முன் ஏந்தினாள். அபூர்வமான முறுவல் பிக்ஷுவின் முகத்தில். கிண்ணத்தைச் சுஜாதாவிடமிருந்து வாங்கி, சில கணம் கண்மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். ''என் பசியைப் போக்கிய இந்தப் பாலன்னம் உன் வீட்டில் என்றென்றும் பொங்கும். நீ சுபிட்சமாய் இருப்பாய், தாயே!'' என்று கருணையே பெருக்கெடுக்கும் உணர்வில் மங்கைமார் இருவரையும் பார்த்து ஆசி கூறினார். கிண்ணத்திலுள்ள அமுதத்தை வழித்துத் தின்றதும், அவர் பொற்கிண்ணத்தை ஆற்று நீரில் கழுவி எடுத்துவர ஆற்றை நோக்கி இறங்கினார்.

''வேண்டாம் ஐயா, நாங்கள் இந்த அன்னத்துடன் கிண்ணத்தையும் தந்துவிட்டோம்'' என்றாள் சுஜாதா.

''பொன்னும் மணியும் எதற்கம்மா எனக்கு? நான் முற்றும் துறந்தவன். எனக்கு அவா என்பதே இறந்து போய்விட்டது'' என்றார் கோதமர்.

''இந்தக் கிண்ணத்தை எது வேண்டுமானாலும் செய்யுங்கள். நாங்கள் இதை உங்களுக்கே அளித்துவிட்டோம்; திருப்பாதீர்கள். என் மனம் நோகும் ஐயா!'' என்றாள் சுஜாதா.

நந்தினி தன் தோழியின் பரந்த மனத்தை அன்றுதான் கண்டாள்.

கோதமர் ஆற்றுநீரில் அப்பொற் கிண்ணத்தைக் கழுவியதும் வானத்தை நோக்கி அதைக் காட்டிச் சலசலத்து ஓடும் நீரில் அதனை எறிந்து விட்டார். (இதுவே கடலில் மிதந்துபோய் மணிபல்லவத்தில் தங்கி மணிமேகலைக்கு அமுதசுரபியாக வாய்த்தது.)

இவ்வதிசயச் செயலைத் தோழியர் இருவரும் பார்த்துவிட்டு மெய் சிலிர்த்து நின்றனர். கோதம பிக்ஷு பசியாறியதும் வனத்துள் பரவிவரும் இருளில் மறைந்துவிட்டார்.

அன்று இந்த விந்தை நிகழ்ச்சியில் பெற்ற இன்பம் வேறு எந்நாளும் அவர்கள் பெற்றதில்லை. அன்று பசியைப் போக்கிய அந்தப் பாலமுதத்தின் மிச்சிலை அருட்பிரசாதமாக எல்லாரும் உண்டு களித்தனர்.

சுஜாதா, இந்த யக்ஷசுத்தி நிறைவேறியதும் குழந்தையுடன் தன் கணவன் வீட்டுக்குச் சென்றாள். அவள் தந்த அந்தப் பாலன்னத்தை உண்ட இரண்டு நாட்களுக்கெல்லாம் கோதம பிக்ஷுவுக்கு எங்கிருந்தோ அத்தனை வலிமை உடலில் ஊறத் தொடங்கியது. அவருடைய உடற்பிணி நீங்கியது. அவருடைய உள்ளத்தில் தீவிரம் படர்ந்தது, தாம் தேடிய பேருண்மையை ஆராயத் தொடங்கினார். அவருக்குப் புகலிடம் தந்த அந்த அரசமரத்தடியிலேயே தியானத்தில் அமர்ந்துவிட்டார். ''எனது உடல் உலர்ந்து, இரத்தம் வற்றி நான் மரித்தொழியினும் இறுதிப் பயனைக் காணாமல் இப்பெருமுயற்சியினைக் கைவிட மாட்டேன்'' என்ற உறுதியோடு நின்று நாற்பத்தொன்பது நாட்கள் பயங்கரமான மனப்புயலில் சிக்கி இறுதியில் சித்தத் தடுமாற்றமின்றி வெற்றியொளியைக் கண்டார்.

அவருடைய உள்ளத்தில் பதுங்கியிருந்து வெளிப்படாத எத்தனையோ ஆசைகள், எண்ணங்கள் அந்தத் தியான நிலையில் நீருள் கலங்கி எழும் பாசியைப் போல் அவரை மருட்டி இருளுக்கே இழுத்துச் செல்ல எழுந்தன. இத்தகைய மனக்குழப்பங்களை அந்த அரசமரத்தின் அடியில் மாரனுடைய பிள்ளைகளாகவும், பெண்களாகவும் கோதமரைச் சுற்றிக் கோஷமிட்டு அவருடைய சிந்தனைகளைச் சிதறடிக்கப் பார்த்தன. ஆனால் அவர் எதற்கும் கலங்காமல் ஸம்யக் ஸம்போதியை (முற்றும் உணர்தல்) எய்தி மாரனை வென்ற வீரரானார்; புத்தரானார். அன்று முழு நிலவு மகிழ்வித்த விசாக பூர்ணிமை.

புத்தபகவான் காசியை நோக்கி நடந்தார். அங்கே ஸத்ய சதுஷ்டயம், தசபாரமிதா ஆகியவற்றை மக்களுக்கெல்லாம் எடுத்தோதி அறவாழியைச் செலுத்திப் பெரிய சங்கத்தை நிறுவினார். அரசர்கள், வணிகர், வனிதையர் யாவரும் வேற்றுமையின்றிப் புத்த தருமத்தைத் தழுவினர். பெரிய பெரிய தியாகங்களைப் புரிந்து பிக்ஷுக்களாயினர். புத்தரின் வளர்ப்புத் தாய், தந்தை, மனைவி, மகன் யாவரும் அரச வாழ்வைத் துறந்து அவருடைய அருள் நிழலில் வந்து தங்கினர்.

இடம் விட்டு இடம் சென்று தாம் கண்ட உண்மைகளைப் புகட்டி வந்த அவருக்கு முதுமை தோன்றியது. எண்பது வயதாகியது. சங்காராமங்களில் தங்கி நல்லறம் வழங்கிக் கால் நடையாகவே சென்றார்.

புத்தர் தம் இறுதி குறுகுவதை உணர்ந்தார். 'ததாகதனுடைய வாழ்நாள் நிறைவை எட்டி விட்டது. அவன் இனிச் செய்வதற்கொன்றும் இல்லை. இனிச் சமாதி ஆற்றலாலேயே வாழ்வான். பிறத்தல் சாதல் என்ற இரு நிலைகளைக் கடந்தவனாகி விட்டான். இனிமேல் இல்லம் இல்லை. அவன் உறுப்புகள் யாவும் கலகலத்து விட்டன. ததாகதனின் வேட்கை யாவும் தணிந்துவிட்டன. நிர்வாணம் எய்துவான்' என்று அறிவித்தும் தம்மை நிழலெனத் தொடரும் பிக்ஷு ஆனந்தனிடம், ''இன்னும் ஒன்று உள்ளது. அந்தத் தச்சன் சந்தன் தன் வீட்டுக்கு அழைத்தான், பிக்ஷை செய்வதற்கு. எத்தனையோ நாட்களாயின. அவனை ஏமாற்றக் கூடாது. குசிநகருக்கு அழைத்துச் செல்'' என்று ஆக்ஞை செய்தார் புத்தர்.

''பகவ, தங்களுக்கு உடல்நலம் கெட்டிருக்கிறது. அவ்வளவு தொலைவு தாங்கள் நடந்து செல்ல முடியுமா?'' என்று ஆனந்தன் கூறியபோது, ''இல்லை. ததாகதன் தன் சொல்லைக் காப்பாற்றுவான். கிளம்பு'' என்றார் புத்தர்.

குசிநகருக்கு அவர் வரப்போகும் செய்தி பரவியது. அவ்வூர் மக்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம். எத்தனை நாட்களுக்குப் பிறகு பகவானின் திருப்பாதம் அம்மண்ணில் படியப் போகிறது! ஆனந்தன் முன் செல்ல, தளதளத்துப் போன உடலைச் சுமந்துகொண்டு புத்தர் ஆங்காங்கே மரநிழலில் தங்கி இளைப்பாறியபடி குசி நகரை அடைந்தார். அச்சமயம் அவருக்கு வயிற்றுளைச்சல் கண்டது. தண்ணீர்த் தாகம். ஆனந்தன் பிட்சா பாத்திரத்திலிருந்து நீரைத் தருவான்.

குசி நகரம் வந்து விட்டது. புத்த பகவானைக் கண்டதும் ஒரே குதூகல ஆரவாரம், சந்தன் ஓடி வந்து அவர் காலடியில் விழுந்து விக்கி விக்கி அழுதான். பகவான் அவன் தலையைத் தொட்டு, ''சந்தா, எழுந்திரு! ததாகதன் வார்த்தை பிசகாதவன்'' என்றதும், சந்தன் புத்த சங்கத்தாருக்குத் தானமாகத் தந்த சோலையில் சென்று தங்கினார்.

சந்தனுடைய வீட்டில் பிக்ஷைக்கு ஏற்பாடாகியது. சங்கத்தவர்களுக்கு மாபெரும் விருந்து. புத்தர் உண்பதற்குத் தனியாக எதுவும் இல்லை. அவர் பிக்ஷுக்களுடன் சேர்ந்தே உணவு கொண்டார். நெய்யில் பொரித்த பன்றி இறைச்சி கலந்த அதிரசம் பரிமாறப்பட்டது. பகவான் சீடன் தந்த உணவை விருப்பு வெறுப்பின்றி உண்டார். அன்று மாலையே அவர் திரும்பிச் செல்லவேண்டுமென்ற தம் விருப்பத்தை ஆனந்தனுக்குத் தெரிவித்தார். ஆனந்தனுக்கு அவர் அன்று குசி நகரிலேயே இருப்பது நல்லதெனத் தோன்றியது.

ஆனால் குருவின் கட்டளையை மீற முடியாமல், தள்ளாடி நடக்கும் பகவானுடன் கிளம்பினான். நகருக்கு அண்மையிலேயே அவருக்கு மீண்டும் வயிற்றுளைச்சல் கண்டது; நின்றுவிட்டார். தாகம் நாக்கை வறட்டவே தண்ணீர் கேட்டார். அச்சமயம் அருகில் இருந்த குகுஷ்டை என்ற ஓர் ஓடையின் நீரைக் கலக்கியபடி வணிகரின் வாத்து ஒன்று கடந்து கொண்டிருந்தது. இருநூறு சகடங்கள் சென்ற பின்பே, ஓடையில் கலங்கல் இல்லாத தூய நீர் கிடைத்தது. பிட்சையோட்டில் அதனை முகந்து தந்தான் ஆனந்தன். நன்றாக இருட்டிவிட்டது. வைகாசி மாதம் முழுநிலா உதயமாகிக் கொண்டிருந்தது. ஆனந்தனைத் தொட்டுப் புத்தபகவான், ''ஆனந்தா, அதோ தெரிகிறதே அந்த இரட்டைச் சால மரத்தண்டைத் ததாகதனை மெல்ல இட்டுச் செல். படுக்க வேண்டும் போல் இருக்கிறது'' என்று அவர் மெலிந்த குரலில் கூறினார்.

ஆனந்தனுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. இடுப்பில் கை கொடுத்து அவரை மெல்ல மல்லர்களுக்குச் சொந்தமான அந்தச் சால மரத்தடிக்கு இட்டுச் சென்று படுக்க வைத்தான். சிங்கம் பாயல் கொள்வது போல் அந்தச் சாக்கிய முனிவர், தம் ஒரு கைமீது தலையை வைத்தபடி கால்களைச் சேர நீட்டிப் படுத்தார். கைக்குறியால் ஆனந்தனைத் தம் அருகில் அழைத்து, ''ததாகதன் இன்று இரவு இருக்க மாட்டான். திடுமென இப்படிச் சந்தன் வீட்டில் உண்டு, பரிநிர்வாணம் அடைவதால் அவனைத் தூஷிப்பார்கள் மக்கள், அவனே ததாகதனுடைய மரணத்துக்குக் காரணமென்று. அது தவறு. அவன் தந்த உணவினால் தான் இந்த நிர்வாணப்பேறு கிடைத்தது. இதனால் அவன் துஷித லோகத்தை அடைந்து நற்பயனை அடைவான்.''

அரசமரத்தடியில் ததாகதன் ஸம்யக் ஸம்போதி அடையக் காரணமாய் இருந்தது, அன்று சுஜாதா அளித்த பால் அன்னமேயாம். இன்று சந்தன் பரிமாறிய இந்த அதிரசமே ததாகதருக்குப் பரிநிர்வாணம் அடைய வழி செய்தது. ''அவன் தந்ததே எல்லாவற்றிலும் மேலானது. இதனை அவனுக்குச் சொல்'' என்றதும் ததாகதர் அறத்தின் உடலாகிவிட்டார். 'இவ்வுலகில் எதுவும் நிலையற்றது. மிகவும் நெருங்கியுள்ள பொருளின் பற்றுதலிலிருந்து நாம் நீங்க வேண்டும். அதுவே பேரின்பத்துக்கு ஏதுவாகும்'. இது அவருடைய இறுதி மொழி. சூழவிருந்த சிரமண சிராவகர்கள் கோவென அழுதுவிட்டனர்.

ததாகத புத்தர் முகமலர்ச்சியுடன் தம் இறுதியை அடைந்தார். ❋

பெரும் செயல் ஒன்று செய்வோம்; அதை எந்த நாளும் காப்போம்

நா. மகாலிங்கம்

நாம் சுதந்தரம் பெற்று முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. சுதந்தரம் பெற்ற நாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வே நம்மில் பலருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

''பெரியவர்கள் காலத்தில் எல்லாம் சரியாக நடந்தது; இப்போது காலத்தின் கோலத்தால் எல்லாம் கெட்டுக் கிடக்கிறது'' என்று எத்தனையோ பேர் சொல்கிறார்கள்; கெட்டுக் கிடப்பதை மாற்றும் கடமைகளிலிருந்து தப்ப முயலுகிறார்கள்.

அடிமை நிலையிலேயே இருந்தால் பொறுப்பை ஆளுபவர்கள் தலையில் போட்டுவிட்டுத் தப்பிவிடலாம். அதனால் சிலர் சுதந்தரத்தைக் கூடக் கேலி செய்கிறார்கள்; சொந்த மொழியையும் புறக்கணிக்கிறார்கள்.

''எந்த நாட்டில் சுதந்தரம் இருக்கிறது? எந்த நாட்டில் சாதி பேதம் இல்லை? எந்த நாடும் சொர்க்கமாக இல்லை'' என்றுகூடச் சமாதானம் செய்துகொண்டு சோம்பலிலே 'தப்பிப்பவர்களும்' இருக்கிறார்கள்.

இன்னொரு சாரார் இருக்கிறார்கள் தன்மானம் என்ற பெயரால் பெரும் கூச்சலைப் போட்டுவிட்டு அதில் தப்பித்துக் கொள்கிறார்கள். கடமை உணர்வும் பொறுப்பும் இல்லாமல், கண்ணியம் இல்லாமல் நாட்டில் குழப்பம் செய்து வருகிறார்கள்.

தப்பிப்பது சுலபம்; பிரச்சினைகளை எதிர்த்து நின்று வெற்றி கொள்வதுதான் வீரம். இந்த மக்களுக்கு அறிவு புகட்டி இவர்களை உயர்த்த வேண்டாமா? இவர்களுக்கு இந்த நாடு எப்படிப்பட்ட உன்னதமான நாடு என்பதை உணர்த்தும் சரித்திர ஞானத்தைப் புகட்ட வேண்டாமா? சரித்திரமோ ஆங்கிலேயர் கையில் வெகுவாகத் திரிந்து போயிருக்கிறது; வரலாற்று உண்மைகள் மறைக்கப் பட்டிருக்கின்றன.

இதைப்பற்றி அரசுக்கு அக்கறையே இல்லையே என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை.

சுதந்தர உணர்வுள்ளவர்களும், சிந்தனையாளர்களுமே இதற்கு முயற்சி செய்ய வேண்டும். பல்கலைக் கழகங்களும் வரலாற்றாசிரியர்களும் இந்த நாட்டின் வரலாற்றை முழுமையாகப் பொறுப்புணர்வுடன் ஆய்ந்து ஆதார பூர்வமாக உண்மை வரலாற்று நூல்களை எழுதவேண்டும். தேசத்தின் உயர்வு பற்றிய செய்திகள் தினம் தினம் மக்கள் காதில் பட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

அதைப்பற்றிப் பேசுவதைக் கேட்பதன் மூலமாகவும், அந்த நூல்களைப் படிப்பதன் மூலமாகவுமே மக்கள் உள்ளத்தில் கம்பீர உணர்ச்சியை ஏற்படுத்தவும், தங்கள் கடமையை உணரும்படி செய்யவும் முடியும்.

ஒரு நாட்டின் உண்மை வரலாற்றைத் தெரிந்து கொள்வதன் மூலமாகவே அந்த நாட்டு மக்களின் அறிவு விசாலப்படும். அவர்களுக்குப் புத்துணர்வு ஏற்படும். அவர்கள் தங்கள் தாய் நாட்டை நேசிக்கவும், அதன் சுதந்தரம், ஜனநாயகம் இவற்றைக் காப்பாற்ற உழைக்கவும் ஆரம்பிப்பார்கள்.

பஞ்சபாண்டவர்களைப்பற்றி எல்லாருக்கும் தெரியும். அவர்கள் ஒரு சமயம் துரியோதன மகாராஜனிடம் சென்றார்கள். ''எங்களுக்கு ஐந்து ராஜ்யம் வேண்டும்; இல்லாவிடில் ஐந்து ஊர் வேண்டும்; அதுவும் இல்லாவிடில் ஐந்து வீடாவது வேண்டும்!'' என்று கேட்டார்கள்.

''உங்களுக்கு ஈயிருக்கும் இடமும் தரமாட்டேன்'' என்று சொல்லி விட்டான் துரியோதனன்.

பஞ்ச பாண்டவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. காண்டவ வனத்தைத் தகனம் செய்தார்கள். அங்கு இந்திரப் பிரஸ்தம் என்னும் புது நகரை நிர்மாணித்தார்கள்.

தில்லியில் பஞ்ச பாண்டவர்களின் இந்திரப்பிரஸ்தம் இருந்த இடத்திலேதான் இப்போது 'புரானாகிலா' என்னும் புராதன இடிந்த கோட்டை இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

பஞ்ச பாண்டவர்கள் காட்டிய வழியையே பிற்காலத்தில் வந்தவர்களும் பின்பற்றினார்கள். இந்தியாவின் பெரும்பகுதியையோ சிறு பகுதியையோ ஆண்ட மன்னர்கள் இந்திரப்பிரஸ்தத்தைச் சுற்றிப் பரந்து விரிந்து கிடக்கும் பெருவெளியில் தங்கள் புதிய தலைநகரங்களைக் கட்டினார்கள். இவ்வாறு கட்டிய ஏழு தலைநகரங்களின் சின்னங்கள் தில்லி என்று பொதுவான பெயருடன் இந்திரப் பிரஸ்தத்தைச் சுற்றிப் பரந்து விரிந்து கிடக்கும் விசாலமான வெளியில் இருக்கின்றன. எட்டாவது தலைநகரந்தான் ஆங்கிலேயர் நிர்மாணித்த இப்போது இருக்கும் புதுதில்லி.

தில்லியைச் சுற்றியிருக்கும் பழந் தலைநகரங்களில் மிகப் பழையது பிருதிவிராஜனுடைய தலைநகரம். அவன் இன்றும் உலகத்து மகா காதலர்களில் முதன்மைபெற்று நிற்பவன். ஈடு இணையற்ற வீரன்.

சென்ற முப்பது ஆண்டுகளில் எத்தனையோ முறை புதுதில்லிக்குச் சென்றிருக்கிறேன்; சமீபத்திலும், சென்றிருந்தேன். இந்த முறை பிருதிவிராஜனுடைய பழைய தலைநகரைப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது. அங்கே போயிருந்தேன். என்னுடன் ஒரு வரலாற்றுப் பேராசிரியரும் வந்திருந்தார்.

'குதுப் மினார்' என்னும் பெயருடையது இந்தியாவிலேயே மிகவும் உயரமான ஒரு கோபுரம்; அது, ''பிருதிவிராஜனுடைய நகரம் இருந்த இடம் இதுதான்'' என்று பறைசாற்றிக் கொண்டு அங்கே நிற்கிறது. பிருதிவிராஜன் தன் தலைநகரில் இருபத்து நாலு சிவன்கோயில்களைக் கட்டினான் என்று சரித்திரம் சொல்கிறது. பிருதிவிராஜன் போர்க் களத்தில் இறந்துபட்டு வீரசொர்க்கம் அடைந்த பிறகு, கோரி முகம்மதுவும், அவனுக்குப் பின்னால் வந்த பட்டாணிய அரசர்களும் உடைத்தல் நொறுக்கல் திருப்பணிகளை நிறையவே செய்தார்கள். ஆனாலும் பிருதிவிராஜனுடைய ஆலயச் சின்னங்களை அவர்களால் அடியோடு அழிக்கமுடியவில்லை. ஏறக்குறையத் தமிழ்நாட்டு ஆலயங்களைப் போலவே பிருதிவிராஜனுடைய ஆலயங்கள் அமைந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

சிற்ப வேலைப்பாடு பொருந்திய நூற்றுக்கணக்கான பிருதிவி ராஜன் காலத்து ஆலயத் தூண்கள் 'குதுப் மினார்' கோபுரத்தைச் சுற்றிலும் நிற்பதை இன்றைக்கும் காணலாம்.

பிருதிவி ராஜனின் ஆலயங்களை இடித்து அவற்றிலிருந்து எடுத்த கற்களை வைத்துக் கொண்டுதான் மசூதிகளும், சமாதிகளும், மினார்களும் கட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் பிருதிவிராஜனின் ஆலயத் தூண்களை உட்புறத்தில் ஆதாரமாக வைத்து மசூதிகளின் சுவர்களை எழுப்பியிருக்கிறார்கள். அந்தச் சுவர்கள் இடிந்து விழுந்த இடங்களில் பிருதிவி

ராஜன் கட்டிய ஆலயத் தூண்கள் வெளிப்பட்டுக் காட்சி தருகின்றன.

கோரி முகம்மது இயன்ற வரையில் அடித்தல் உடைத்தல் தொண்டு நடத்திய பிறகு, தில்லியில் தளபதி குத்புதீன் என்பவனைத் தன் பிரதிநிதியாக விட்டுச் சென்றான். கோரி முகம்மது அப்பால் போனவுடனே குத்புதீன் தானே தில்லிச் சக்கரவர்த்தி என்று பறைசாற்றிவிட்டுச் சிம்மாசனம் ஏறினான். தன் வெற்றிக்கு அறிகுறியாக, பிருதிவிராஜனுடைய அரண்மனையும் ஆலயமும் இருந்த இடத்தில் குதுப்மினார் எனும் கோபுரத்தைக் கட்டத் தொடங்கினான். குத்புதீன் ஆரம்பித்த கோபுரத்தை அவன் வம்சத்தைச் சேர்ந்த அல்டமிஷ் என்பவன் பூர்த்தி செய்தான் என்கிறார்கள்.

குதுப்மினார் கோபுரத்தைக் குத்புதீன் கட்டியதாகச் சில சரித்திர ஆசிரியர்களும், அல்டமிஷ் கட்டியதாக வேறு சிலரும் சொல்கிறார்கள். இரண்டு பேருக்கும் பொதுவாக, அவன் பாதி இவன் பாதி கட்டியதாகச் சிலர் கருதுகிறார்கள்.

''இவை எல்லாமே உண்மைக்கு மாறானவை. குதுப்மினாரைக் கட்டியவன் புகழ்பெற்ற பிருதிவிராஜன்'' என்றார் என்னுடன் வந்த வரலாற்றுப் பேராசிரியர். குதுப்மினாரையும் அதைச் சுற்றியுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடிந்த கட்டிடங்களையும் பற்றி விளக்கிச் சொன்னார் அவர்.

ஒரு கட்டிடத்தைக் காட்டி, ''இது பிருதிவி ராஜனுடைய அரண்மனை'' என்றார். அங்குள்ள வேறு சில பகுதிகளைச் சுட்டிக் காட்டி, ''இது அவன் ஆஸ்தான மண்டபம்'' என்றார். பிறகு பிருதிவி ராஜன் கட்டிய கோயில்கள் இருந்த இடங்களைக் காட்டினார். கோயில் தூண்களையும், அந்தத் தூண்களில் நமது பண்பாட்டைக் காட்டும் சிற்பங்கள் இருந்த இடங்கள் மட்டும் காலியாக இருப்பதையும் மிகுந்த துயரத்துடன் காட்டினார்.

சந்திரகுப்த விக்கிரமாதித்தனுடைய பிரசித்தி பெற்ற இரும்புத் தம்பத்தை வெகு பெருமையுடன் அவர் சுட்டிக் காட்டினார். பிறகு குதுப்மினாரைக் காட்டினார். ''பிருதிவி ராஜனின் புதல்வி தினம் தினம் இந்தக் குதுப்மினார் கோபுரத்தில் ஏறி யமுனை நதியைப் பார்ப்பாள் என்று வரலாற்றில் இருக்கிறது'' என்றார்.

''பிருதிவி ராஜன் கட்டிய கோபுரத்தின் மேல்பக்கத்தைச் சுரண்டி எடுத்துவிட்டு அவ்விடத்தில் தான் கட்டியதுபோல் அரபு எழுத்துக்களை எழுதியிருக்கிறான் குத்புதீன்'' என்றார். ''கட்டிடக் கலை நிபுணர்களைக் கொண்டு நுணுக்கமாக ஆராய்ந்தால் உண்மை வெளிப்படும்'' என்றும் அவர் அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்.

குதுப்மினாரைப் பற்றி அந்த நாளிலேயே பேராசிரியர் கல்கி அவர்கள் மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவர் ஆராய்ச்சி எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அவருக்கு இந்தச் சமயத்தில் நன்றி செலுத்தவேண்டும்.

பிருதிவி ராஜன் கட்டிய கோயில்களை மசூதியாகவும், மினார்களாகவும் மாற்றியது போலவே, இன்னும் பல இடங்களில் நம் கோயில்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. நம் கோயில்களில் பல இப்போது இருக்கும் இடத்தில் இருந்தவையே அல்ல என்பதற்கும் ஆதாரங்கள் உண்டு. அந்த வரலாற்று உண்மைகளை ஆய்ந்து வெளிப்படுத்த வேண்டும்.

இதைச் செய்யக் கூடியவர் யார்? நமது பல்கலைக் கழக வரலாற்றுத் துறைகளின் மூலமே இவற்றைச் செய்ய முடியும். நாடு சுதந்தரம் பெற்று முப்பதாண்டுகளுக்கு மேலாகியும் இத்துறையில் அவை கவனம் செலுத்தாமல் இருப்பது வருத்தமளிக்கும் விஷயம்.

இந்த நாட்டின் உண்மை வரலாற்றை வெளியிடும் முயற்சியை இனியேனும் தாமதமின்றி உடனே தொடங்க வேண்டும். வரலாற்றுத் துறையைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் இருக்கிறார்கள். இதில் அவர்களை ஈடுபடுத்தி ஆய்வு செய்யத் தூண்டவேண்டும். ஆங்கிலேயர்கள் எழுதி வைத்திருக்கும் வரலாறுகளில் பல உண்மைக்கு மாறுபட்டவை. அவற்றை மாற்றி நம் நாட்டின் உண்மையான வரலாற்றைப் படைக்க வேண்டும்.

காசியில் இப்போது இருக்கும் விசுவநாதர் கோயில் நம் முன்னோர் கட்டிய விசுவநாதர் கோயில் அல்ல என்கிற உண்மை பெரும்பாலோர்க்குத் தெரியுமோ, என்னவோ? முன்பு இருந்த விசுவநாதர் கோயில் வேறு. இப்போது இருக்கும் விசுவநாதர் கோயில் அதன் பெயரால் பிறகு அமைக்கப்பட்டது. நம் முன்னோர் அரும்பாடுபட்டு அமைத்த விசுவநாதர் கோயிலை இடித்து விட்டார்கள். அக் கோயில் கற்களைக் கொண்டே அந்த இடத்தில் ஒரு மசூதியைக் கட்டியிருக்கிறார்கள். நம் முன்னோர் கட்டிய விசுவநாதர் கோயில் இருந்த இடத்தில் இன்று மசூதிதான் இருக்கிறது. இந்த வரலாற்று உண்மைகள் வெளிப்பட வேண்டாமா?

சென்னை உயர்நீதிமன்றம் இருக்குமிடத்தில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது. வழிவழியாக வந்த எத்தனையோ ஞானிகள் வழிபட்ட புனிதத் திருக்கோயில் அது. அதை இடித்து விட்டுத்தான் அவ்விடத்தில் வெள்ளையர்கள் உயர்நீதிமன்றக் கட்டிடத்தைக் கட்டினார்கள். அன்று அடிமைகளாக இருந்ததனால் வாய்மூடி மௌனிகளாக இருந்தோம். சுதந்தரம் பெற்ற பிறகு இந்த உண்மையை எழுதியாவது வைக்க வேண்டாமா?

இப்போது இருக்கும் மயிலாப்பூர், கபாலீசுவரர் கோயில் முன்னோர் கட்டிய கோயில் அல்ல. திடுக்கிடாதீர்கள்! இந்தக் கோயிலில் ஞானசம்பந்தர் பாடவில்லை. ஞானசம்பந்தர் பாடலால் எலும்பு பெண்ணாக உயிர் பெற்றெழுந்த புனிதமான கபாலீசுவரர் கோயில் இன்று நாம் காணும் கபாலீசுவரர் கோயில் அல்ல.

பழைய கோயில் மயிலைக் கடற்கரை ஓரத்தில் இருந்தது. அந்தக் கோயிலை இடித்துவிட்டனர். அவ்விடத்தில் மாதா கோயிலை எழுப்பியுள்ளனர். இந்த வரலாற்று உண்மையை நம் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

புதுவையில் மிஷன் தெருவில் இப்போது மிகப் பெரிய மாதா கோயில் ஒன்று இருக்கிறது. முன்பு பெரிய சிவன் கோயில் இருந்தது. அந்தக் கோயிலில் எத்தனையோ ஞானிகளும் யோகிகளும் வழிபட்டார்கள். அவர்கள் தவத்தின் ஆற்றல் அங்கு நிலைத்து நின்றது; இப்போதும் நிற்கிறது. அந்தத் திருக்கோயிலை இடித்து விட்டார்கள். கற்களைக் கொண்டே அங்கு இப்போதுள்ள பெரிய மாதா கோயிலைப் பிரெஞ்சுக்காரர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இந்த வரலாற்று உண்மையை 'ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புச்' சொல்கிறது.

''இவ்வாறு எத்தனை எத்தனையோ கோயில்கள், எத்தனையோ ஞானிகளையும் தவமுனிவர்களையும் உருவாக்கிய புனிதக்கோயில்கள், அழிக்கப்பட்டு மசூதிகளாகவும், மாதா கோயில்களாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் ஆங்காங்கு இருக்கும் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை ஆசிரியர்கள் ஆராய்ந்து உண்மை வரலாற்றை வெளிப்படுத்தும் நூல்களை எழுதி வெளியிட வேண்டும்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார் என்னுடன் வந்த வரலாற்றுப் பேராசிரியர்.

அது போகட்டும். கொஞ்சம் குத்புதீனுடைய ஆட்சிக்கு வருவோம்.

குத்புதீன் முதல் முதலில் கோரி முகம்மதுவின் அடிமையாக இருந்து தன் அரசியல் வாழ்வைத் தொடங்கினான். அதனால் குத்புதீன் வம்சத்துக்குச் சரித்திரத்தில் அடிமை வம்சம் என்று பெயர் வழங்குகிறது. அந்த வம்சத்துக்குப் பிறகு தில்லியில் கில்ஜி வம்சமும், லோடி வம்சமும் தொடர்ந்தன. இப்ராஹிம் லோடியைப் பானிபட்டு யுத்தத்தில் தோற்கடித்துப் பாபர் மொகலாய வம்சத்தை நிறுவினார். மொகலாய வம்சத்தார் 1857-ஆம் ஆண்டில் நடந்த புரட்சிப் போர்வரையில் தில்லியில் நிலை பெற்றிருந்தார்கள்.

ஒவ்வொரு பட்டாணிய வம்சத்தாரும் மொகலாய வம்சத்தாரும் பழைய தலைநகரங்கள் பிடிக்காமல் தில்லிப் பெருவெளியில் புதிய புதிய நகரங்களைக் கட்டினார்கள். அரண்மனைகளையும், மசூதிகளையும் கட்டினார்கள். நகரங்களைச் சுற்றிக் கோட்டைகளைக் கட்டினார்கள். ஒவ்வொரு சுல்தானுக்கும் பாதுஷாவுக்கும் சேனாதிபதிக்கும், 'கப்ரஸ்தான்' என்று வழங்கும் சமாதிக் கட்டிடங்களையும் கட்டினார்கள். செத்துப்போனவர்களுக்காகக் கட்டிய கட்டிடங்கள் உயிரோடிருப்பவர்களுக்குக் குடியிருக்க இடமில்லாமல் செய்தன. நகரம் நாலு புறமும் விரிந்து கொண்டே சென்றது.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் தில்லியில் கட்டப்பட்ட தலை

நகரங்களில் இன்றுவரை இடிந்து பாழாகாமல் ஏறக்குறையப் புத்தம் புதியதாகத் தோன்றுவது ஷாஜஹாபாத் ஒன்றுதான்.

மொகலாய வம்சம் 1857-ஆம் ஆண்டில் அடியோடு மறைந்து போன பிறகு சில காலத்துக்குத் தில்லியின் புகழ் மங்கிக் கிடந்தது. பிறகு யாரோ ஓர் ஆங்கில தீர்க்கதரிசியின் உள்ளத்தில் தில்லியை மறுபடியும் இந்தியாவின் தலைநகரம் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அவர் இந்தியச் சரித்திரத்தில் தில்லி எதனாலே அவ்வளவு முக்கியத்துவம் அடைந்திருக்கிற தென்பதை ஆராய்ந்து பார்த்தார். இமயமலைக்கும் விந்திய மலைக்கும் மத்தியில் உள்ள ஆரியா வர்த்தம் அல்லது இந்துஸ்தானத்துக்குத் தில்லி நகர் அமைந்திருக்கும் இடந்தான் மையப் பகுதி என்பதை அவர் தெரிந்து கொண்டார்.



யமுனைக் கரையில் பரந்து விரிந்து கிடக்கும் மேட்டுப் பாங்கான வெளியில் தில்லி அமைந்திருக்கிறது. இங்கு ஒரு பெரிய நகர நிர்மாணத்துக்கு வேண்டிய பல வசதிகள் இருக்கின்றன. ஜீவநதியாகிய யமுனை நதி எப்போதும் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கிறது. மேட்டுப் பாங்கான நிலப் பிரதேசமாகையால் தண்ணீர் தங்குவதில்லை. ஆகையால் சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது.

தில்லியில் இருந்தபடி வடமேற்கே பஞ்சாபையும், தென் கிழக்கே பீஹார், வங்காளத்தையும், தெற்கே ராஜபுதனம், மாளவம் முதலிய பிரதேசங்களையும் நன்கு கண்காணித்துக் கொள்ளலாம். அலாவுதீன் கில்ஜி முதல் அவுரங்கசீப் வரையில் தில்லியிலிருந்து நாலு புறமும் படையெடுத்துச் சென்று தங்கள் நாட்டின் எல்லையைப் பெருக்கவும் அதை நிறுவகிக்கவும் சாத்தியமாயிற்று.

இதையெல்லாம் அறிந்துதான், அந்த ஆங்கிலேயத் தீர்க்கதரிசி பிரிட்டிஷ் ஆட்சியின் இந்தியத் தலைநகரத்தைக் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்றவேண்டும் என்றார். 1912-ஆம் ஆண்டில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது. அதிலிருந்து தில்லி நகரம் மறுபடியும் வரலாற்றில் தலைதூக்கிற்று. ஜனத்தொகை பெருகிற்று. 1921-ஆம் ஆண்டில் தில்லியின் ஜனத்தொகை ஒரு லட்சமாக இருந்தது. இப்போது அறுபது லட்சத்துக்கும் மேலே போய்விட்டது.

தில்லி நகரில் அரசாண்ட ஒவ்வொரு வம்சத்தாரும் ஒரு புது நகரைக் கட்டினார்கள் அல்லவா? அதுபோலவே பிரிட்டிஷாரும் புது தில்லி நகரத்தை நிர்மாணம் செய்தார்கள். பாரதத்தின் முதல் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு புது தில்லியை மேலும் சிறந்த முறையில் விரிவுபடுத்தினார். இந்த நாட்டின் உண்மையான வரலாற்றை எழுதும் பெரும் செயலுக்கு நல்ல அடிப்படையும் வகுத்துக் கொடுத்தார். அவருக்குப் பிறகு அதை யாரும் தொடரவில்லை என்பது வருத்தத்துக்குரியது.

புதுதில்லி நகரின் அமைப்பு வெகு நேர்த்தியானது. நேர் நேரான சாலைகள். சாலைக்கு இருபுறமும் வரிசை வரிசையான மரங்கள். ஒரே அளவாய், ஒரே உயரமாகச் சாலைகளில் இருபுறத்திலும் குடை பிடித்தது போல் தோன்றும் அரச மர வரிசைகளின் அழகையும், வேப்ப மர வரிசைகளின் அழகையும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

ஆங்காங்கு ஐந்தாறு சாலைகள் வந்து கூடுகின்றன. இத்தகைய சாலைச் சந்திப்புக்களில் வட்டவடிவமான புல்தரைகள் உள்ள புதுதில்லிக்குப் புதிதாகப் போகிறவர்களுக்கு அந்த வட்டப் புல் தரைகளில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாது.

விரிந்து பரந்து கிடக்கும் ஒரு கற்பாறை மேட்டில் முக்கியமான மத்திய அரசுக் கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன. இருபுறமும் தலைமைச் செயலகக் கட்டிடங்கள். ஒரு புறத்தில் பாராளுமன்றக் கட்டிடம். இவற்றின் நடு நாயகமாக ஜனாதிபதி வசிக்கும் ராஷ்டிரபதிபவன் மாளிகை.

புதுதில்லியை நிர்மாணிக்க வரைபடம் தயாரித்தவர்களும் அதைக் கட்டி முடித்தவர்களும் எத்தனையோ நூற்றாண்டுக் காலம் புதுதில்லி பிரிட்டிஷாரின் இந்தியத் தலைநகராக விளங்கப் போகிறதென்றே எண்ணியிருப்பார்கள். ஆனால் மனிதர் யாராலும் அறிய முடியாத தெய்வத்தின் சித்தம் வேறுவிதமாக இருந்தது. தில்லி நகரில் தோன்றிய எட்டாவது பிரிட்டிஷ் வல்லரசு எதிர்பாராத வண்ணம் அதிசீக்கிரத்திலேயே முடிவடைந்துவிட்டது.

ஆனால் இதற்கு முந்திய வல்லரசுகளைப் போலப் போர்கள், படுகொலைகள், பயங்கர இரத்த வெள்ளம், இவை மூலம் பிரிட்டிஷ் வல்லரசு முடிவடையவில்லை. அன்பும் ஆனந்தமும் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தோட நட்புறவுடன் 1947-ஆம் ஆண்டில் ஒரு நாள், 'சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில்' சூரியன் அஸ்தமித்தது. பிரிட்டிஷ் வல்லரசு முடிவுற்றது. புதுதில்லிக் கோட்டையின் கொடி மரத்தில் இந்தியக் குடியரசின் மூவர்ணக் கொடி ஏறிப் பறந்தது.

இந்தியாவின் இயற்கைத் தலைநகரமான தில்லியில் இப்போது உள்ள அரசு நம் இந்தியக் குடியரசு. இது அங்கு ஏற்பட்டிருக்கும் ஒன்பதாவது அரசாகும். இதிகாசமும் சரித்திரமும் போதிக்கும் பாடங்கள் தில்லியின் சுற்றுவட்டாரங்களில் கண் முன்னால் எல்லாருக்கும் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. முன்பிருந்த எட்டு வல்லரசுகளின் அழிவுக்கு அவை சாட்சியாகவும் இருக்கின்றன. அந்தச் சரித்திரப் பாடங்களின் படிப்பினையை உணர்ந்து இந்திய மக்களாகிய நாம் மிகக் கவனத்துடன் நடந்துகொள்ளவேண்டும். இப்போது தில்லியில் இருக்கும் அரசு, நம் சொந்தக் குடிஅரசு. இதை மனத்தில் கொண்டு தலைவர்கள் பொறுப்புடன் நீண்ட காலச் சிந்தனையுடனும் காரியங்கள் செய்யவேண்டும்.

காந்தி மகான் ஆசியாலும், அவருடைய பெரும் முயற்சியாலும் தில்லியில் நிறுவப்பட்டிருப்பது இந்தியக் குடியரசு. இந்தக் குடியரசு இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நீடித்து நிலைத்து நிற்கவேண்டும். இதற்குத் தேச மக்களுக்கு நம் நாட்டின் உண்மையான வரலாறு தெரிந்திருக்க வேண்டும். அதை முறையாகத் தொகுத்துப் பள்ளி நிலையிலேயே எதிர்காலக் குடிமக்களின் மனத்தில் பதிய வைக்கும் மாபெரும் பணியைச் செய்ய வேண்டும். அதை உடனடியாக நிறைவேற்றவும் வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அவர்கள் தங்கள் தேசத்தின் மீது மதிப்பும் பெருமிதமும் கொண்ட உண்மையான பாரத புத்திரர்களாக விளங்குவார்கள்; தேசத்தை நேசிப்பார்கள்; அதைப் போற்றிப் பாதுகாத்து உயர்த்துவார்கள்.

ஸ்ரீகாஞ்சி ஆசார்யாள் திருவடி தீண்டப் பெற்றுப் புனிதம் எய்தியுள்ள திருச்சிராப்பள்ளித் தேசீயக் கல்லூரியைச் சார்ந்த அற நிறுவனங்கள்

- சாரநாதன் கல்விக்கொடை நிறுவனம்
- பழைய மாணவர்கள் சங்கம்
- காமகோடி வித்யார்த்தி ஸதனம்

கலைமகள் வாசகர்களுக்கு,
ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசார்யாள்
பக்தர்களுக்கு, தேசீயக் கல்லூரியின்
பழைய மாணவர்களுக்கு,
இப்போதைய மாணவர், ஆசிரியர்
நிர்வாகத்தினர் ஆகியோர்க்கு,

தீபாவளி நன்னாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றன

**வைரவிழாக் கொண்டாடிய தேசீயக் கல்லூரி
ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் அநுக்கிரகத்துடன்
மேன்மேலும் வளர்ந்து வருகிறது.**

கல்லூரியின் பழைய மாணவர்
பாரதப் பெருநாட்டின் நிதி அமைச்சர்

திரு R. வேங்கடராமன் அவர்கள் புரவலர்
தலைவராக அமைந்து முதல்வர்
சாரநாதன் பெயரால் வைரவிழாக் கட்டிடம்
நிலையாக அமையப் பாடுபடுகிறார்.

**கல்லூரியைச் சார்ந்த நற்பணிகளுக்கு
உங்கள் ஆதரவை நாடுகிறோம்**

ஸ்ரீ தநப்யோ நம:



புறம் தூய்மையும் அகம் தூய்மையும் உடைய பெருமான்

அகத்தூய்மை உடைய பெருமக்களுக்குப் புறத்தூய்மை தாஞகவே அமைந்து, தேசு சுடர் விசிப் பிரகாசிக்கும். அகத்து ஞான ஒளி புறத்திலே ஜகஜ்ஜோதியாக ஒளிரும். அமுத மயமான ஞானச் செல்வம் அகத்திலே மலர்ந்தால் அன்பும் அருளும் கனிவுமாகப் புறத்திலே பிரகாசிக்கும். அத்தகைய ஞானச் செம்மல் நம் ஸ்ரீகாஞ்சி காமகோடி ஆசாரிய சுவாமிகள் அவர்கள். அவர்கள் திருவாக்கிலே தெளிவும் நயமும் எளிமையும் மலர்ந்து மணம் வீசுவதைக் கேட்ட அன்பர்கள் அறிவார்கள். அருளும் அன்பும் கனிவும் அவர்கள் திருப்பார்வையிலே கனிந்து, பக்தர்களை ஆசீர்வதிக்கின்றன.

சுவாமிகளின் அருட்பார்வை பட்டாலே போதும் என்று எண்ணி அவர்கள் சென்ற இடமெல்லாம் போய்த் தரிசனம் செய்து மகிழும் அன்பர்கள் பலர். எல்லாவற்றையுமே துறந்த ஞானியான அந்த மகான் ஸ்ரீ மடத்துப் பொறுப்புக்களையும், தம் இளவலிடம் ஒப்படைத்து, புண்ணிய பாரத பூமி எங்கும் தம் பாத தூளி படர யாத்திரை சென்ற வண்ணம் இருக்கிருர்கள்.





அவர்கள் எந்த மூலைக் காட்டில் இருந்தாலும் அங்கே சென்று ஆர்வத்துடன் தரிசித்து மகிழ்கிறார்கள். 'ராமர் இருக்கிற இடம் அயோத்தி' என்பார்கள். அது போல இந்தத் துறவரசர் எங்கே எழுந்தருளியிருந்தாலும் அது புனிதத் தலம் ஆகிவிடுகிறது. அவர்களுடைய திவ்ய திருஷ்டி பட்டால் ஜன்ம சாபல்யமாகும் என்று அன்பர்கள் நம்புகிறார்கள். ''புணர்ந்த பாவம் எல்லாம் பரிபூரணம் உணர்ந்த ஞானி விழிபட ஓடுமே!'' என்று சசிவர்ணபோதம் கூறுகிறது. வெளி நாட்டிலிருந்து வரும் அன்பர்களும் இந்தக் கருணை நோக்கில் படுவதற்காக ஏங்குகிறார்கள். யாரோ ஒரு மேல் நாட்டு இளைஞர், அவர்களுடைய அருகில் நெருங்காமலே தூரத்தில் இருந்தபடியே பார்த்துப் பார்த்துப் பரவசம் அடைந்ததைத் தேனம்பாக்கத்தில் பலர் கண்டிருப்பார்கள்.

அந்த மகானை அருகில் பார்த்துத் தரிசனம் செய்ய முடியாத பக்தர்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களின் ஏக்கத்தை மாற்றும் வகையில் பெரியவர்களின், காலை அநுஷ்டானங்களை விளக்கும் படங்களை இணைத்து வண்ணக் கோவையாக இங்கே அளித்திருக்கிறோம். தீபாவளித்



திருநாளில் புனிதத்தின் புண்ணியத் திருவுருவாக விளங்கும் சுவாமிகளின் திவ்ய தரிசனம் பக்தர்களுக்குக் கிடைத்தற்கரிய பேறாக இருக்கும்.

ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், காலையில் பக்தர்கள் தொடர, புறத்தூய்மை பெறும் திருமஞ்சனத்துக்காக ஆற்றங்கரை நோக்கிச் செல்கிறார்கள். காவிவண்ண உடைகளைக் களைந்து ஸ்நானத்துக்குத் தயாராகிறார்கள். சுவாமிகளுக்கு உதவக் காத்துப் புறத்தே பக்திப் பெருக்குடன் நிற்கிறார்கள் பக்தர்கள்.

ஞானப் பிழம்பான அந்தப் பெருமான் அருவியில் ஸ்நானம் செய்ய மெதுவாகத் தலையை நீட்டுகிறார்கள். வேகமாக விழும் தண்ணீரில் தம் திருமேனியைக் கொஞ்சங் கொஞ்சமாக நனைத்துக் கொள்கிறார்கள். குழந்தையைப்போல் அருவி ஸ்நானத்தை ரசித்துக் குளிக்கும் பாவத்தை அவர்கள் திருமுகம் காட்டுகிறது; திருமேனி முழுதும் தண்ணீர் படர்ந்துவழிய ஸ்நானம் செய்துமுடித்ததும் அங்கேயே தண்ணீரிலே நின்றுகொண்டு சுதர்சன சக்கரத்துக்கு





அபிஷேகம் செய்து வணங்குகிறார்கள். கரையேறி மாற்றுடை அணிந்ததும், நெற்றிக்குத் திருநீறு தரித்து, ஆற்றங் கரையிலேயே அநுஷ்டானத்தைத் தொடங்குகிறார்கள். கருங்கற்களின் மேல் பலகையை இட்டு அமர்ந்து ஜபம் செய்கிறார்கள். உலகம் மகிழ்ச்சி யாக விளங்குவதற்காகவே, முற்றும் துறந்த ஞானியான ஸ்ரீசுவாமிகள் ஜபமும் அநுஷ்டானங்களையும் செய் தருளுகிறார்கள்.

ஜபம் செய்து முடிந்ததும் சுவாமி களின் உள்ளத்தில் அன்பும் அருளும் பெருக்கெடுக்கின்றன. உலக மாயை களில் கட்டுண்டு துன்புறும் மக்கள் முன்னாலும் பின்னாலும் நிற்கின்றனர். ஸ்ரீமத் சுவாமிகளின் அருள் நோக்கு அவர்கள்பால் சென்று இதம் அளிக் கிறது. மனக்குறை நீங்கிய பக்தர்கள் பெருமகிழ்வுடன் சுவாமிகளைப் பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்று உபசரிக்கின்றனர். தங்கள் மனோரதம் நிறைவேற வேண்டும் என்ற கருத்தி லேயே, ஜோதிமயமாக வணங்கும் இறைவனுக்குக் கர்ப்பூர ஹாரதி எடுக்கிறோம். ஞானமயமாக, விளங்கும் பெரியவர்களுக்கும் பக்தர் கள் குழாம் சூழ, சுமங்கலிப் பெண்கள் கர்ப்பூர ஹாரதி எடுக்கிறார்கள். 'தங்களைத் தரிசிக்கும் பேறு பெற்ற நாங்கள் எத்தனை புண்ணியம் செய் திருக்க வேண்டும்!' என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் பக்தர்கள் பரவசம் அடை யும் காட்சியைப் பாருங்கள்!

வண்ணப்படம்: ஹரலிங்கம்

புதிய ஆசிரமம்



கி.வா.ஜகந்நாதன்

காலையில் எழுந்தது முதல் இரவு பத்து மணி வரையில் வேலம்மாளுக்கு வேலை இருக்கும். அந்த வீட்டில் சமையல் அவள்தான். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுபவள் அவள்தான். அவள் அண்ணி செல்லம்மாள் வேலையிடுவாளேயன்றி ஒரு துரும்பை எடுத்து அந்தண்டை போடமாட்டாள்.

இத்தனை வேலைகளைச் செய்வதற்கிடையில் வேலம்மாள் சாயங்காலம் கோவிலுக்குப் போய் மீனாட்சியைத் தரிசித்து வரத் தவற மாட்டாள். அது ஒன்றுதான் அவளுடைய சிரமத்தை எல்லாம் போக்கும் மருந்தாக உதவியது.

இவ்வளவு செய்தாலும் அண்ணிக்குத் திருப்தி இராது. ஏதாவது நொட்டை சொல்லிக்கொண்டேயிருப்பாள். அவளை வேலைக்காரி போல நடத்தினாளேயன்றி, ஒரு நல்ல வார்த்தை சொல்லமாட்டாள்; எங்காவது போனால் அவளைக் கூட்டிக் கொண்டு போகமாட்டாள்.

வேலம்மாளின் கழுத்தில் தாலி இருந்தது. ஆனால் அதைக் கட்டியவன் அங்கே இல்லை. எங்கே இருக்கிறானோ தெரியவில்லை. அவன் இருக்கிறானோ, இல்லையோ, அதுவே தெரியாது.

சில சமயங்களில் அவளுடைய அண்ணி அந்தத் தாலியைப் பற்றிச் சொல்லும் சொற்கள் அவளுடைய மனத்தைக் குத்தி வாங்கும். ''பன்னெண்டு வருஷமானாலே, தலைமுழுகித் தாலியை அறுத்தெறிய வேண்டியது தானே? இன்னும் இவளுக்கு என்ன தாலி வேண்டியிருக்குது?'' என்று கடிவாள்.

அப்பொழுது அவர்கள் கோயம்புத்தூரில் இருந்தார்கள். முருகன், அவன் மனைவி சின்னம்மாள், அவன் தாய், அவன் தங்கை வேலம்மாள் ஆகிய நான்கு பேர் இருந்த குடும்பம் அது. முருகன் ஒரு சிறிய ஜவுளிக்கடை நடத்தி வந்தான். வேலம்மாளுக்குக் கல்யாணம் ஆயிற்று. மாப்பிள்ளை வாட்ட சாட்டமாகத்தான் இருந்தான். அவன் பெயர் கந்தசாமி. அவனுக்குத் தாயும் இல்லை; தந்தையும் இல்லை. மைத்துனன் வீட்டில் இருந்துவந்தான். ஏதோ வேலை பார்த்தான். ஆனால் எந்த வேலையிலும் நிலையாக இருந்ததில்லை. அவன் மானி; பிறர் சொல்லும் சொல்லைப் பொறுக்க மாட்டான். அவன் வேலை செய்யும் இடத்தில் யாராவது நேர்மை தவறினால் அதை எடுத்துக் காட்டுவான். தன்னுடன் பணியாற்றுபவர்கள் முறை தவறி நடந்தால், அது பிடிக்காமல் கண்டிப்பான். 'யார் எப்படிப் போனால் நமக்கென்ன? நம் வேலையைப் பார்த்துக் கொண்டு போனால் சரி' என்று இருக்கத் தெரியாது. அதனால் அவனை யாருக்குமே பிடிக்காது. 'இவன் என்னவோ தர்மராசா அவதாரம் போலப் பேசறானே! நமக்கு ரெண்டு காசு வருதென்றால் இவனுக்கு ஏன் இப்படிப் பொறாமை?' என்று எண்ணுவார்கள். அவனிடம் முகம் கொடுத்துப் பேச மாட்டார்கள். அவனிடம் இருந்த நல்ல குணமே அவனுக்குப் பகையாக இருந்தது. அதனால் அவன் எங்கும் சேர்ந்தாற்போல் ஆறுமாசம் வேலை செய்ய முடியவில்லை. மற்றவர்கள் அவனை இருக்கும்படி விடுவதில்லை.

அடிக்கடி வேலையிலிருந்து நின்றுவிடும் கந்தசாமியிடம் அவன் மைத்துனனுக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாயின. கல்யாணமாகி இரண்டு வருஷமாகியும் அவனுடைய வாழ்க்கை நிலை கொள்ளாமல் இருப்பதைக் கண்டு மைத்துனன் சிடுசிடுத்தான். ''தண்ட சோற்றுத் தடிராமனாக உன் புருசன் இருக்கிறானே! எத்தனை நாள் இவனை வச்சுச் சோறு போடறது?'' என்று வேலம்மாளிடம் அடிக்கடி சொல்லுவான். ஒரு நாள் கந்தசாமி காதில் படும்படியாகவே அவன் பேசிவிட்டான்.

கந்தசாமி அன்று யாரிடமும் சொல்லாமல் போனவன்தான், திரும்பி வரவே இல்லை. வேலம்மாள் குமுறிக் குமுறி அழுதாள்; வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள். தெய்வம் கருணை செய்யவில்லை.

கோயம்புத்தூரில் அவள் அண்ணன் நடத்திய ஜவுளிக் கடையில் வியாபாரம் மந்தமாயிற்று. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பிறகு மதுரையில் சில நண்பர்கள் தைரியம் அளித்து அழைத்தமையால் அங்கே போய் அவர்களுடைய உதவியால் அங்கே கடையைத் திறந்தான். அதிர்ஷ்டம் அவன் பங்கில் இருந்ததனால் அங்கே வியாபாரம் பிடித்துக் கொண்டது. அதை விருத்தி செய்தான். பக்கத்து ஊர்களில் சில நெசவாளர்களுக்குப் பண உதவி செய்து தறி போடச் செய்து புடைவைகளை நெய்யச் சொல்லி வாங்கி வியாபாரம் செய்தான். இப்போது அவனுடைய கடையில் ஆறு பேர் வேலை செய்தார்கள்.

''மாப்பிளை இருந்தா அவனையும் கூட்டாளியாச் சேத்துக்கிட்டுக் கடை வியாபாரத்தைப் பெருக்கலாம். இப்ப அவன் எங்கே இருக்கானோ?'' என்று கூடச் சில நாள் சொல்வான். அதைக் கேட்டு வேலம்மாள் கொஞ்சம் ஆறுதல் பெறுவாள். ஆனால் அடுத்த கணமே அவள் மனசைக் குதறிப் போட்டு விடுவாள் அவள் அண்ணி; ''ஆமாம்! ஓடுகாலியை வச்சுக்கிட்டு வியாபாரஞ் செஞ்சா உருப்பட்டமாதிரிதான்! பொழைக்கத் தெரிஞ்சவங்களாயிருந்தா எங்காவது வேலைலே இருக்க மாட்டாங்களா? அதெல்லாம் உடம்பு வணங்கி வேலை செய்யறவங்களுக்குத்தான் நடக்கும். சும்மா சோத்தைத் தின்னிட்டுப் பொழுதுபோக்கறவங்களாலே என்ன உதவி செய்ய முடியும்? அவங்ககிட்டே இருக்கிற மூதேவி நம்ம கிட்டேயும் வந்துடுவா'' என்று அண்ணி பேசும்போது வேலம்மாள் நெஞ்சம் கலங்கிக் குமுறி அழும். 'இப்படி இடிபடறதுக்கு எங்கேயாவது குளத்திலே கெணத்துலே விழுந்து செத்துப் போகலாம்' என்று அவள் நினைப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

மதுரைக்கு வந்தபிறகு அவள் அண்ணனுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. வேலம்மாள் அந்தக் குழந்தைகளைப் பேணி வளர்த்தாள். அவர்களும், ''அத்தை, அத்தை!'' என்று அவளோடு ஒட்டிக் கொண்டார்கள். அந்தக் குழந்தைகளின் முகத்தைப் பார்த்துத் தன் துயரத்தை மறக்க எண்ணுவாள் அவள்.

யந்திரம் போல் வேலை செய்வதும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதுமாக அவள் பொழுதைக் கழித்தாள். 'யார் என்ன சொன்னாலும் அதைக் காதிலே போட்டுக்கொள்ளக் கூடாது' என்ற தீர்மானத்தோடு இருந்தாள். ஆனாலும் மனம் கேட்கிறதா? மனிதனுக்கு நம்பிக்கையும் ஆசையும் உடன் பிறந்தவை, கஷ்டப்படுகிறவன், 'எப்போதாவது நமக்கு விடியாதா?' என்று ஏங்கினாலும், 'எப்படியாவது நல்ல காலம் வரும்' என்ற நம்பிக்கையும் உடன் எழும். அதனால்தான் அவள் வாழ்

கிறான். இல்லாவிட்டால் கஷ்டப்படுகிறவர்கள் எல்லாரும் தற்கொலை பண்ணிக்கொண்டல்லவா செத்துப் போவார்கள்?

கடுஞ்சொல்லைக் கேட்டுக் கேட்டு வேலம்மாள் காதும் மனமும் மரத்துப் போய்விட்டன. குழந்தைகளைப் பார்க்கும்போதும் மீனாட்சி தரிசனத்தின்போதும் மட்டும் சிறிது அவளுக்கு ஆறுதல் பிறக்கும். அவளுக்கு நிரந்தரமான நல்வாழ்வு உண்டாக வழி உண்டா? எதிர்காலத்தில் திடீரென்று அவள் கணவன் வந்து குதிக்கப் போகிறானா? ஏன் வரக் கூடாது? மீனாட்சியம்மன் மனசு வைத்தால்எதுதான் நடக்காது?

இப்படி எண்ணினாலும் உடனே தன் அவலநிலையை நினைத்துக்கொள்வாள். பன்னிரண்டு வருஷங்களுக்கு மேல் ஆய்விட்டன. இனிமேலா அவன் வரப்போகிறான்? தன் தலை விதியை நொந்து கொண்டு இருப்பதைத் தவிர, அவளுக்கு வேறு போக்கில்லை.

கோயம்புத்தூரில் இருந்த போதாவது அம்மாள் இருந்தாள். அவளுடைய அரவணைப்பில் துக்கத்தை ஒருவாறு மறக்க முடிந்தது. மதுரைக்கு வருவதற்கு முன்பே அவள் இறந்துவிட்டாள். அவள் இறப்பதற்கு முதல் நாள் சொன்ன வார்த்தைகள் இன்னும் வேலம்மாள் காதில் ஒலிக்கின்றன.

''வேலம்மா! உன்னை நெனச்சால்தான் எனக்குக் கஷ்டமா இருக்குது. உன் கழுத்துத் தாலி இரும்புத் தாலியா இருக்கணும். என்னிக்காவது உன் புருஷன் வந்துடுவான். அந்த நம்பிக்கையிலே நான் உயிர் விடறேன்'' என்று அவள் மகளுக்குத் தேறுதல் வார்த்தை சொன்னாள். அவள் என்ன ரிஷியா, அல்லது நளாயினியா, சொன்ன வார்த்தை பலிப்பதற்கு?

தன் துக்கத்தையெல்லாம் அடக்கி வைத்திருக்கும் வேலம்மாளுக்கு மீனாட்சியம்மன் கோவில்தான் புகலிடம். அங்கே போய் அழுவாள். சாமி தரிசனத்துக்கு வருபவர்களில் தன் கணவனும் ஒருவனாக இருக்கக் கூடாதா என்று ஏங்குவாள்.

அவள் கணவன் தன் மைத்துனன் சொன்ன ஏச்சுச்சொல் பொறுக்காமல் போய்விட்டான். அவளால் அப்படிப் போகமுடியுமா? பாதுகாப்பு இல்லாமல் எங்கே வேண்டுமானாலும் ஆடவன் போகலாம். பல காலம் ஊரை விட்டு ஓடித் திரிந்துவிட்டு மறுபடியும் திரும்பி வந்தால் அவனைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளும். ஒரு பெண் அப்படிச் செய்ய முடியுமா? எங்கேனும் போய்விட்டுத் திரும்பி வந்தால், சந்தேகப்படாமல், பழி கூறாமல், அவளை வீட்டில் உள்ளவர்கள் வரவேற்பார்களா? சமுதாயத்தில் ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்பது இன்று நேற்றா இருக்கிறது? அது இப்போதைக்குப் போய்விடும் என்று சொல்வதற்காவது வழி உண்டா?

வேலம்மாள் என்ன என்னவோ எண்ணி மனம் குமுறிக் குமுறித் தேய்ந்து போனாள். அவள் வரவர மெலிந்து வருவது செல்லம்மாள் கண்ணுக்குத் தெரியாமலா இருக்கும்? அதைப் பற்றி அவள் கவலைப்படுவதில்லை. பெண்ணுக்காக ஆண்கள் இரங்குவார்களே அல்லாமல் மற்றொரு பெண் இரங்குவதில்லை. அது என்ன சாபத்தீடோ தெரியவில்லை.

கல்யாணமாகி இரண்டே ஆண்டுகள் கந்தசாமியுடன் வாழ்ந்தாள். அப்போது அவனுக்கு இருபத்தைந்து வயசு. அவளுக்கு இருபது. இப்போது அவள் முப்பத்திரண்டைத் தாண்டிவிட்டாள். அவனும் இப்போது வளர்ந்திருப்பான். திடீரென்று வந்தால் அடையாளம் தெரியாமல் போனாலும் ஆச்சரியம் இல்லை. இப்போது அவன் எப்படி இருப்பான்?

மனத்தில் கற்பனை பண்ணிப் பார்த்துக் கொள்வதிலே எல்லாருக்குமே ஆவல் உண்டு; திருப்தியும் உண்டாகும். வேலம்மாள் கற்பனையில் கந்தசாமி பெரிய பயில்வானாக வளர்ந்திருந்தான். நாற்பது வயசு ஆண்பிள்ளைக்கு ஒரு வயசா?

''எந்தராச்சியத்தைப் புடிக்க மகாராணி யோசிச்சிட்டிருக்காப்பல?'' என்ற வெடிகுண்டு அவள் கனவைக் கலைத்துவிடும். தூங்கினவள் திடுக்கிட்டு விழிப்பது போல நனவுலகத்துக்கு வந்து வேலையிலே ஈடுபடுவாள்.

அவளுடைய அண்ணன் அவளிடத்தில் வெறுப்புக் காட்டுகிறதில்லை. அன்பை வெளிப்படையாகக் காட்டுவதும் இல்லை. தன் மனைவியை அடக்கும் வழக்கமே அவனுக்குக் கிடையாது. எப்போதாவது வேலம்மாளுக்குச் சேலை வாங்கித் தருவான். ''கோயிலுக்குப் போறியே, இந்தா கற்பூரம் வாங்கிக் கொளுத்து'' என்று எப்போதாவது அரை ரூபாய், ஒரு ரூபாய் தருவான். அந்த அளவிலாவது அவன் செய்கிறதைத் தடுக்காமல் இருந்தாளே, அந்த மகாராசி, அதுவே பெரிது. அதை எண்ணிச் சிறிதளவு ஆறுதல் அடைவாள், அந்தப் பேதைப் பெண்.

அண்ணி சின்னம்மாள் வாயு தேகம். அவள் வர வரப் பெருத்துக்கொண்டு வந்தாள். கிட்டத்தட்ட வேலம்மாள் வயசுதான் அவளுக்கு. ஆனால் வேலம்மாள் கருவேலங்குச்சி போல ஆகிவிட்டாள். அவளோ ஒதியமரத்தைப் போலப் பெருத்திருந்தாள்.

சின்னம்மாளிடத்தில் ஒரு நல்ல குணம் இருந்தது. அவளுக்குச் சாமியார், ஜோசியம் சொல்கிறவர், ஆருடம் பார்க்கிறவர் என்றால் அவர்களைப் போய்ப் பார்த்து வருவாள். மீனாட்சியம்மன் கோவிலுக்கு வெள்ளிக்கிழமை போய் வருவாள். அன்றைக்காவது வேலம்மாளுடன் போகலாமே! ஊஹூம்! தனியாகவே போய் வருவாள்.

அன்று சின்னம்மாள் கோயிலுக்குப் போய் வந்தவள் ஒரு புதிய செய்தியைக் கொண்டு வந்தாள். ''அங்கே ஒரு சாமியார் வந்திருக்கார். கறு கறுன்னு தாடி. அவர் பல்லுத்தான் எத்தனை வெளுப்பு! அவர் ரொம்பச் சக்தியுள்ள சாமியாராம். அவர் எத்தினியோ அற்புத சக்தி படைச்சவராம்!'' என்று தன் கணவனிடம் சொன்னாள்.

''ஆமா! இந்தக் காலத்திலே எந்தச் சாமியாரையும் நம்பப்படாது. அதுவும் பொம்பிளைகள் எந்தச் சாமியோரோடும் பழகப்படாது. ஆபத்து வரும்'' என்றான் அவன்.

''உங்களுக்கு எதிலேயும் சந்தேகந்தான். நீங்க போய்ப் பாத்துட்டு

வாங்க. அப்பத் தெரியும். எத்தினி பேர் அவர் காலிலே விழுறுங்க, தெரியுமா? காரிலே வர்ற பெரிய மனுஷங்கள்ளாம் அவருக்கு முன்னே கையைக் கட்டி நிக்கறுங்க'' என்று மறுபடியும் சாமியாரின் பிரபாவத்தை விரித்தாள் சின்னம்மாள்.

அவள் சொன்னது வேலம்மாளின் காதில் விழுந்தது. அந்தச் சாமியார் சக்தியுள்ளவராக இருந்தால் அவராலே தனக்கு ஏதாவது நல்ல வழி பிறக்காதா என்று எண்ணினுள் அவள். 'இன்று அவரைப் பார்த்துவிட்டு வரவேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டாள். அவள் கோவிலுக்குப் போனுல் சாமி தரிசனம் செய்துவிட்டு, எங்காவது ஒரு மூலையில் சிறிது நேரம் இருந்து அழுதுவிட்டு வருவாள். வேறு எதையும் பார்க்கிறதில்லே. மதுரைக்கு வந்த புதிதில் தரிசிக்க வருகிறவர்களில் தன் கணவன் இருப்பானே என்று பார்த்ததுண்டு. இப்போது அந்த ஆசையெல்லாம் போய்விட்டது. தரிசனம் ஆனதும் தலையைக் குனிந்து கொண்டே வந்துவிடுவாள்.

'இன்று அந்தச் சாமியார் எங்கே இருந்தாலும் போய்ப் பார்த்துவிடுவது!' என்று தீர்மானித்துக் கொண்டு போனுள்.

அவள் அண்ணி சொன்னது உண்மைதான். அந்தச் சாமியாரை நாடிப் பலர் வந்தார்கள். அவரை வணங்கி ஆசி பெற்ருர்கள். அந்தக் கூட்டத்தில் பெண்களும் இருந்தார்கள். பெண்களோடு பெண்ணுக அவளும் சேர்ந்து கொண்டாள். அவர்கள் சாமியாரை வணங்கித் திருநீறு பெற்ருர்கள். வேலம்மாளும் வணங்கினுள். திருநீறு பெற்ருள். அவரவர் தம்முடைய குறைகளைச் சொல்லிக் கொண்டார்கள். வேலம்மாளும் தன் குறையை வாய்விட்டுச் சொல்ல வேண்டும் என்றே விரும்பினுள். ஆனுல் சொல்லத் தைரியம் இல்லே. சும்மா வந்துவிட்டாள்.

சாமியார் எங்கோ ஒரு மடத்தில் தங்கியிருந்தார். தினம் தவருமல் கோவிலுக்கு வந்தார். கோவிலில் அவருக்குத் தனியான மரியாதைகள் செய்தார்கள். அவருடன் எப்போதும் இரண்டு சிஷயர்கள் இருந்தார்கள். சாமியார் காவியாடை புனேந்தவர். அவருடைய சிஷ்யர்கள் வெள்ளே வேட்டிக்காரர்கள். அவருக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டார்கள். அவர்களில் ஒருவர் சாமியாருக்குச் சமைத்துப் போடுகிருராம். சாமியார் எங்கும் சாப்பிடுவதில்லேயாம். யாராவது பழம் தந்தால் வாங்கிக்கொள்கிருராம்.

இந்தச் சங்கதிகளே எல்லாம் செல்லம்மாள் விசாரித்துத் தெரிந்து கொண்டு வந்து தன் கணவனிடம் சொல்லும்போது வேலம்மாளும் அதைக் கேட்டாள். அந்தச் சாமியாரிடம் தனக்கு விடிவு காலம் உண்டா என்று கேட்க ஆசைதான். ஆனுல் அவ்வளவு பெரியவர்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் ஒரு பெண் பிள்ளே தைரியமாக அணுகிப் பேசுவது சுலபமாகத் தோன்றவில்லே.

அவளுடைய அண்ணன் முருகன் கூடச் சாமியாரைப் போய்ப் பார்த்தான். அவருக்குத் தன்னுல் என்ன செய்ய முடியும் என்று விசாரித்தான். சாமியார் காவி வேட்டி உடுத்துவார். நல்ல மல் துணியைக் காவியில் நனேத்து வழங்கலாம் என்ற யோசனே தோன்றியது. சாமியாரிடம் நேரே அதைச் சொல்லத் துணிவில்லே. அவருடைய சிஷ்யர் ஒருவரிடம் சொன்னுன். ''ஓ! தாராளமாகச் செய்யலாமே!'' என்ருர் வயசான சிஷயர். மற்ருெரு சிஷ்யர் நாற்பது வயசு மதிக்கத் தகுந்தவர், தாடியுடன் இருந்தார். அவரே சாமியாரிடம் அதிகமாக நெருங்கியிருப்பவர்.

முருகன் காவி வேட்டியைச் சாமியாரிடம் சமர்ப்பித்தான். ''நித்தியானந்தம், இதை எடுத்து வா'' என்று சாமியார் பணித்தார். தாடி வளர்த்திருந்த அந்தச் சிஷ்யர் அதை எடுத்துக் கொண்டார். முருகனைப் பார்த்து, ''உங்கள் பேர் என்ன?'' என்று கேட்டார் அவர். ''முருகன்'' என்ருன். ''நீங்கள் கோயம்புத்தூரில இருந்ததுண்டோ?'' என்று மறுபடியும் கேட்டார்.

''ஆம். உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எப்போதோ உங்களே அங்கே பார்த்ததாக ஞாபகம்.''

அன்று வீட்டுக்குப் போன முருகன் தான் சாமியாருக்குக் காவி வேட்டியைச் சமர்ப்பித்த விவரத்தைத் தன் மனேவியிடம் சொன்னுன்.

''அந்தச் சாமியாரோடே இருக்கும் நித்தியானந்தம் என்ற சிஷ்யர் என்னேக் கோயம்புத்தூரிலேபாத்திருக்கிருராம்'' என்பதையும் சொன்னுன்.

அன்றுமாலே வேலம்மாள் கோவிலுக்குப் போனுள். சாமியாரைப் பார்த்தாள். சாமியாருக்கு அன்று ஒருவர் பாதத்தை நீரால் கழுவிப் பூவும் சந்தனமும் இட்டு வழிபட்டார். அங்கே அந்தத் தண்ணீர் சற்றுத் தேங்கியது. அங்கிருந்து சற்றுத் தூரத்தில் போட்டிருந்த பீடத்துக்குப் போனுர் சாமியார். உடனிருந்த நித்தியானந்தம் தம் வேட்டியில் தண்ணீர் படாமல் இருப்பதற்காகச் சற்றே அதைத் தூக்கியபடியே சாமியாருடன் போனுர். அப்போது அகஸ்மாத்தாக நித்தியானந்தத்தின் காலேப் பார்த்தாள் வேலம்மாள். அவள் திடுக்கிட்டாள். அவள் உள்ளத்தே ஒரு பழைய நிகழ்ச்சி நிழற்படமாக விரிந்தது.

அவர்கள் கோயம்புத்தூரில் இருந்தபோது நடந்த நிகழ்ச்சி அது. கந்தசாமி வீட்டோடு இருந்த காலம். பரண்மேலே அவள் அண்ணன் ஏறி ஏதோ ஓர் இரும்புச் சாமானே எடுத்தான். கீழே நின்றிருந்த கந்தசாமியை அழைத்து அதை வாங்கிக் கொள்ளச் சொன்னுன். அவன் கொடுக்கும்போது கந்தசாமி அதைப் பிடிப்பதற்குள் அதை விட்டுவிட்டான். அது படார் என்று கீழே விழுந்து கந்தசாமியின் இடக்கால் கட்டை விரலேப் பதம் பார்த்துவிட்டது.

''ஐயோ!'' என்று கத்தினுன். கந்தசாமி, முருகன் கீழே பார்த்தான். அந்தக் கனமான இரும்

புச் சாமான் கட்டை விரல் நகத்தின் மேல் விழுந்து அதைக் குறுக்கே பிளந்து விரலில் ஆழமான காயத்தை உண்டாக்கி விட்டது. இரத்தம் குபுகுபுவென்று வந்துகொண்டிருந்தது. உடனே ஈரத் துணியைக் கொண்டு வந்து சுற்றினார்கள். டாக்டரிடம் காட்டிக் கட்டுப் போட்டார்கள். காயம் ஆற இரண்டு மாதங்கள் ஆயின. காயம் ஆறியும் கட்டைவிரல் நகம் பிளவுபட்டது ஒட்டவில்லை; அப்படியே நின்றுவிட்டது.

வேட்டியைத் தூக்கி நடந்த நித்தியானந்தத்தின் இடக் காலிலும் கட்டை விரலில் ஒரு பிளவு தெரிந்தது. அதைக் கண்டதும் வேலம்மாள் இன்னது என்று தெரியாத உணர்ச்சிக்கு உட்பட்டாள். 'இவர்..இவர்...; அவராக இருக்குமோ? கோயம்புத்தூரில் பார்த்ததாகச் சொன்னாராமே!' வேலம்மாள் நித்தியானந்தத்தை உற்றுக் கவனித்தாள். பன்னிரண்டு வருஷங்களுக்கு மேலானாலும் மூக்கும் முழியும் இனம் கண்டு கொள்ளச் செய்தன. தாடி இல்லாமல் இருந்தால் நன்றாகவே கண்டு கொள்ளலாம். ஆனால் தெளிவாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

தன் அண்ணனிடம் அதிகமாகப் பேசாதவள் விட்டுக்கு வந்தவுடன் அவனோடு தைரியத்தை வருவித்துக் கொண்டு பேசலானாள். ''அண்ணா, உன்னைக் கோயம்புத்தூரிலே பாத்தேன்னாரே; அவரை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''அவரை எப்படி எனக்குத் தெரியும்?''

''இல்லை, எனக்கு ஒண்ணு தோணுது. சொல்லட்டுமா?''

''சொல்லேன்.''

''அவர்...! அவர்... அவராக இருப்பாரோன்னு ஒரு சந்தேகம் தோன்றது.''

''எவர்?''

''அவர்தான், ஓடிப் போனாரே, அவர்.''

''என்ன உளர்றே? அவன் எங்கே? இவர் எங்கே? இன்னம் உனக்கு நப்பாசை இருக்குதா?'' என்று சொல்லிச் சிரித்தான்.

வேலம்மாளுக்குக் கண்ணீரே வந்துவிட்டது. ''இல்லை அண்ணா; நான் மீனாட்சியம்மனை வேண்டிக் கெடப்பது வீண் போகாதுன்னு நெனைக்கறேன். அவரோட கட்டைவிரல்லே அந்தப் பொளவு இருக்குது.''

''என்னது? கட்டை விரலிலே பொளப்பா!'' அவன் சற்றே சிந்தனையில் ஆழ்ந்தான். பழைய நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

''அண்ணா, எப்படியாவது அவரைப் பத்தி விசாரிச்சுத் தெரிஞ்சுண்டா நல்லதுன்னு தோணுது. அம்மா சொன்ன வாக்குப் பலிக்கும் போலே இருக்குது.'' இப்போது அவள் அழுதே விட்டாள்.

மறு வாழ்வு வருமென்ற நம்பிக்கையை இப்போது அவள் இழக்க மறுத்தாள்.

''பார்க்கலாம்! நீயும் வர்றியா? சாமியார் தங்கியிருக்கிற எடத்துலே போய் விசாரிக்கலாம்.''

அண்ணன் இவ்வளவு பரிவுடன் பேசுவான் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை. என்ன இருந்தாலும் உடன் பிறந்த பாசம் போகுமா?

''காவியாடை தந்த முருகன் வந்திருக்கிறார்'' என்று தெரிவித்தவுடன், ''உள்ளே வரச்சொல்'' என்று சாமியார் சொன்னார். முருகனும் வேலம்மாளும் உள்ளே புகுந்தனர். வேறு ஓர் அறையில் நித்தியானந்தம் சமைத்துக்கொண்டிருந்தார்.

''சாமி, உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி யோசனை கேட்க வந்திருக்கோம். உங்க சிஷ்யர் நித்தியானந்தத்தோட சில சமாசாரம் விசாரிக்க வேணும். அதுக்கு நீங்க உத்தரவு தரணும்'' என்றான் முருகன்.

''நித்தியானந்தத்தையா? அவனை என்ன விசாரிக்கணும்?''

''அவரோடே பூர்வோத்தரம் தெரிஞ்சா நல்லது. எங்க குடும்பத்தைச் சேர்ந்தவரா இருப்பாரோங்கிற சந்தேகம் வந்திருக்குது.''

''அப்படியா? அப்பா நித்தியானந்தம், கொஞ்சம் இங்கே வாயேன். உன்னைப் பத்தி விசாரிக்க இவங்க வந்திருக்காங்க!''

''என்ன சாமி, என்னையா?'' அவர் உள்ளே இருந்து வந்தார்.

''நீங்க கோயம்புத்தூரிலே இருந்ததுண்டோ?''

''அந்தப் பழைய சமாசாரம் எல்லாம் இப்ப எதுக்கு?''

''இல்லை, ஒரு சந்தேகம். அதுக்குத்தான் கேக்கறேன். உங்க காலிலே எப்பவாவது காயம்பட்டதுண்டோ?''

நித்தியானந்தம் பேசவில்லை. சாமியார் முருகன் கேட்ட கேள்விகளைக் கேட்டு, 'எதற்காக இப்படியெல்லாம் கேட்கிறார்?' என்று யோசித்தார்.

வேலம்மாள் நித்தியானந்தத்தை உற்றுக் கவனித்தாள். நெருக்கமாகப் பார்த்ததில் அவளுக்கு அடையாளம் புரிந்துவிட்டது. மற்றவர்கள் இருக்கிறார்களே என்பதையும் மறந்தவளாக நின்றாள் என்று நித்தியானந்தத்தின் காலிலே விழுந்து, ''என் தெய்வமே! இப்படி என்னைப் பரிதவிக்க விட்டுட்டுப் போகலாமா?'' என்று கதறினாள்.

நித்தியானந்தம் பின்னால் நகர்ந்து கொண்டார். சாமியார், ''என்னப்பா இதெல்லாம்?'' என்று கேட்டார். விஷயத்தை முருகன் விளக்கிச் சொன்னான்.

''இந்த விஷயமெல்லாம் நீ என்னிடம் சொல்லலையே! உனக்கு மனைவி இருக்காள் என்பதைச் சொல்லவே இல்லையே!''

''சாமி! என்னை மன்னிச்சுடுங்க! வாழ்க்கைலே வெறுத்துட்டு வந்த என்னை ஏத்துக்கிட்டீங்க! மறுபடியும் என்னை அந்தச் சிறையிலே தள்ளிடாதேங்க!'' அவர் நைந்த குரலில் பேசினார்.

''கந்தசாமி, என் தங்கச்சியை மறுபடியும் வாழ வை அப்பா!'' என்று கெஞ்சினான் முருகன்.

''என்னை வாழ வைக்க வேணுமா? நான் மறுபடியும் குடும்பச் சேத்திலே வந்து பொதைஞ்சு போகணுமா?''

சாமியார் அவனைக் கையமர்த்திச் சற்றே பேசாமல் இருந்தார். பிறகு வாய் திறந்தார்.

''இந்தா, நித்தியானந்தம், நான் சொல்றதைக் கேள். இந்தப் பொண்புள்ளையோட ஏக்கத்தைப் போக்கறது உன் கடமை. ஆனா என்னைப் பிரிஞ்சு போக உனக்கு மனசு இருக்காதுன்னு தெரியும். இதுக்கு என்ன செய்யலான்னு யோசிச்சு ஒரு முடிவுக்கு வரலாம். இந்தாம்மா, உன் பேர் என்ன? வேலம்மாவா? மீனாட்சியம்மன் உன் வயித்திலே பாலை வார்ப்பா. பயப்படாதே!'' என்று சொல்லி அவளுக்கும் அவள் அண்ணனுக்கும் விடை கொடுத்தனுப்பினார்.

''கண் வந்த குருடன் கண்ணை மறுபடியும் குத்திடாதீங்க'' என்று அழுதபடியே சொல்லி அவள் நகர்ந்தாள்.

அன்று இரவு முழுவதும் அவள் தூங்கவே இல்லை. சாமியாரும் தூங்கவே இல்லை. நித்தியானந்தம் என்கிற கந்தசாமியும் தூங்கவில்லை. சாமியாருக்கும் நித்தியானந்தத்துக்கும் வாக்குவாதம் நடந்தது. சாமியாரைத் தெய்வமாக எண்ணின கந்தசாமி அவர் சொன்னதை மறுக்க முடியுமா? சாமியாருக்கும் பெரிய தர்மசங்கடம். அவனுக்கு அவரைப் பிரிய மனம் இல்லாதது போல அவருக்கும் அவனைப் பிரிய மனம் இல்லை.

இரவெல்லாம் இதற்குத் தீர்வு காண்பதற்காக அவர் யோசித்துக் கொண்டே இருந்தார். ''மீனாட்சித் தாயே! நீதான் ஒரு வழி காட்ட வேண்டும்'' என்று மனம் உருகிப் பிரார்த்தித்தார். அப்போது பளிச் செ.. று ஒரு யோசனை தோன்றிற்று. மி.. ம் துணிவான யோசனைதான்.

றுநாள் முருகனும் வேலம்மாளும் வந்தனர். கந்தசாமியாகிய த்தியானந்தம் தலையைத் தொங் ப் போட்டுக் கொண்டிருந்தார். சாமியார் முருகனைப் பார்த்துக் கேட்டார். ''இந்த ஊரில ஒரு மடம் கட்டணும்னு ஏதாவது எடம் கெடைக்குமா'' என்றார்.

வேலம்மாள், தனக்கு ஒரு தீர்வு காணாமல் மடத்தைப் பற்றி விசாரிக்கிறாரே என்று எண்ணினாள். அவளுடைய கரைகடந்த ஆவலை அவர் அறியவில்லையே!

''எடம் கெடைக்கும். மடத்துக்கு ஒத்த கட்டிடமே கெடைக்கும். சாமி எதுக்குக் கேட்கறீங்க?''

''இல்லை, எங்க மடத்தை இந்த ஊருக்கே மாத்திக்கலாம்னு நெனைக்கறேன்.''

''ஏன்?''

எல்லாரும் வியப்பை அடையும்படி சதானந்த சுவாமிகள் தம்முடைய இட்டத்தை விளக்கினார். விரைவில் செயல்படுத்தினார். அடுத்த மாதம் நல்ல நாளில் மதுரையில் சதானந்த ஆசிரமம் திருக்கோவிலூரிலிருந்து இடம் பெயர்ந்து வந்துவிட்டது. கந்தசாமி நித்தியானந்தம் என்ற பெயரை மாற்றாமலே வேலம்மாளோடு வாழத் தொடங்கினார். மடத்தின் தொடர்பு அவருக்கு எப்போதும் போல் இருந்தது. அவரே சமையல் செய்தார்.

வேலம்மாளின் தாலி நிலைத்துவிட்டது.

*

வாயில்லாப் பூச்சிகள்

அகிலன்

இரவு எட்டு மணிக்கு மேலாகியும் கல்லூரியில் வேலை பார்க்கச் சென்ற சுகுணா வீட்டுக்குத் திரும்பவில்லை. பெற்ற மனம் பதற்றமடைந்தது. வங்கி ஒன்றிலே வேலை பார்க்கும் சுகுணாவின் தங்கை சாவித்திரியே ஆறு மணிக்கெல்லாம் திரும்பி விட்டாள்.

''எங்கே போயிருப்பா தெரியுமாடீ? சினிமாவுக்குப் போனாக்கூடச் சொல்லிட்டுப் போவாளே!'' என்று தன் இளைய மகளைக் கேட்டாள் மீனாட்சியம்மாள்.

சாவித்திரி அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. அவளுக்கு முப்பது வயது; சுகுணாவைவிட நாலு வயசு குறைவு.

சுகுணாவின் அலட்சியமான போக்கு அங்கே நாற்காலியில் உட்கார்ந்துகொண் டிருந்த அப்பா வைத்தீசுவரனுக்குக் கோப மூட்டியது.

''உன்னைத் தாண்டி கேக்கறு! சுகுணா எங்கே போயிருப்பானு தெரியுமோ?'' என்றார் வைத்தீசுவரன்.

தன் அப்பாவைச் சுட்டெரித்து விடுபவள்போல் பார்த்தாள் சாவித்திரி. அவள் பார்வையிலிருந்த கனல் அவரைத் திடுக்கிட வைத்தது. அந்தக் குடும்பத்தின் ஆட்சிப்பீடத்திலிருந்து அதன் சர்வாதிகாரியாக விளங்கிய வைத்தீசுவரனுக்கு இது வழக்கத்துக்கு மாறான அறைகூவல். 'ம்! நாலு காசு சம்பாதிக்கத் தொடங்கிட்டாலே இப்படி ஒரு அலட்சியம் வந்துடறது!' என்று நினைத்துக் கொண்டார்.

''தெரிஞ்சாச் சொல்லேண்டீ!''

''தெரியாது!'' என்று முகத்தில் அடிப்பதுபோல் பதில் சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் புகுந்தாள் சாவித்திரி.

சுகுணா வேலை பார்த்து வந்த பெண்கள் கல்லூரி அவர்கள் வீட்டுக்குப் பக்கத்தில்தான் கடற்கரையில் இருந்தது. நாலு மணிக்குக் கல்லூரி முடிந்தால், நாலரை ஐந்துக்கெல்லாம் வந்து விடுவாள்.

ஓரிரு மாதங்களாகச் சுகுணா அவ்வப்போது ஆறு மணியென்றும் ஏழு மணியென்றும் தாமதமாக வரத் தொடங்கினாள். உடன் வேலை பார்க்கும் தோழிகளோடு கடற்கரையில் பொழுது போக்கினாளாம். அப்போதெல்லாம் அவள் அப்பா வைத்தீசுவரனுக்கு அவளைக் கடிந்துகொள்ளத் தோன்றவில்லை. விவரம் தெரியாத பெண்ணல்ல சுகுணா. முப்பத்து நாலு வயசைத் தாண்டியவள். நடப்பது முப்பத்தைந்து. எம்.எஸ்.ஸி. படித்துவிட்டு, பத்து ஆண்டுகளாய்க் கல்லூரியில் கணக்குச் சொல்லிக் கொடுக்கிறாள். மாதந் தவறாமல் அப்பா கையில் கொண்டு வந்து ஆயிரத்து முந்நூறுக்கு மேல் கொடுப்பவளை எப்படிக் கடிந்து கொள்வது?

''இன்னிக்கு அவ வாசல்படியை மிதிக்கட்டும். சொல்றேன்!'' என்று குமுறினார் அப்பா. இன்றைக்கு அவர் அவளைச் சும்மா விடப் போவதில்லை. இந்த ஜன்மத்துக்கு அவளுக்கு நினைவில் இருப்பது போல் அவளைத் தண்டிக்கப் போகிறார்.

தனியார் துறை நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்த அவருடைய பிள்ளை சந்துருவும் வேலை முடிந்து வீடு திரும்பி விட்டான். சந்துருவுக்கு நாற்பது வயசிருக்கும். அவன் ஒருவனுக்குத்தான் அந்தக் குடும்பத்தில் கல்யாணம் நடந்திருக்கிறது. இரண்டு பெண் குழந்தைகள் அவனுக்கு.

சுகுணாவைக் காணாததால் ஏற்பட்ட அமளியில் சந்துருவோ அவன் மனைவி சீதாவோ அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. அப்பா அதைப் பற்றி அவனுக்கு ஏதாவது வேலை சொன்னால் அதைக் கேட்கலாம் என்றிருந்தான். ''கால காலத்திலே பண்ண வேண்டியதைப் பண்ணலேன்னா இப்படியெல்லாந்தான் நடக்கும்'' என்று தன் கணவன் காதில் மட்டும் விழும்படியாகச் சொல்லிவிட்டுத் தன் கைவேலையைப் பார்க்கலானாள் சீதா. ''அதெல்லாம் அப்பாவுக்குத் தெரியும்; நீ வாயை மூடு'' என்றான் சந்துரு.

மணி ஒன்பதாகிவிட்டது. இன்னும் சுகுணா வரவில்லை. தாயார் மீனாட்சியம்மாள் பதறத் தொடங்கினாள். தகப்பனாரின் கோபம் கொழுந்து விட்டெரிந்தது.

கல்யாணமாகாத வயசுப் பெண் ஒருத்தி இன்னும் வீட்டுக்குத் திரும்பவில்லை என்பதை எப்படி அக்கம் பக்கத்தில் வாய்விட்டுச் சொல்லி விசாரிப்பது? சுகுணாவுடன் அதே கல்லூரியில் வேலை பார்த்த திருமதி மரகதம் அடுத்த தெருவில் குடியிருந்தாள். கல்யாணம் செய்து கொண்டு கணவனோடும் குழந்தைகளோடும் வாழ்பவள் அவள்.

''மரகதத்தைக் கேட்டுப் பார்க்கலாம் வர்றேளா?'' என்று அழைத்தாள் மீனாட்சியம்மாள்.

''பொறு! சினிமாவுக்குப் போயிருந்தா ஒன்பதரைக்கெல்லாம் வந்துடுவாள். பார்க்கலாம்.''

வைத்தீசுவரன் யோசனை செய்தார். அன்றைக்கு முதல் தேதி. சம்பளம் வாங்கும் நாள். ஆயிரத்து முந்நூற்றுச் சில்லறையும் அப்படியே கொண்டு வந்து அப்பாவிடம் கொடுக்கும் வழக்கமுள்ளவள் சுகுணா. அந்தக் குடும்பத்தில் சந்துரு, சாவித்திரி எல்லோருமே அப்படித்தான். சம்பள நாளன்று மட்டும் அவர்கள் நேரே வீட்டுக்கு வந்துவிட வேண்டுமென்பது அவர் கட்டளை. 'கட்டளையை மறந்து கல்லூரியில் வேலை பார்க்கும் சிநேகிதிகளோடு சேர்ந்து சினிமாவுக்குப் போய்விட்டாளோ? வரட்டும், சொல்கிறேன்?'

அந்தக் குடும்பம் அப்பா குடும்பம். அவர் கிழித்த கோட்டை யாரும் அங்கே தாண்டுவதில்லை. மீனாட்சியம்மாள், சந்துரு, சுகுணா, சாவித்திரி முதலிய எல்லாருமே வாயில்லாப் பூச்சிகள். சந்துருவின் மனைவி சீதா மட்டும் இதற்கு விலக்கு. சந்துரு, சுகுணா, சாவித்திரி ஒவ்வொருவருக்குமே ஆயிரத்துக்கு மேல் சம்பளம். நானூறு ரூபாய் ஓய்வூதியமாய்ப் பெற்று வந்த வைத்தீசுவரன் சுமார் நாலாயிரம் ரூபாய்க்கு மேல் வரவு செலவு நடத்தி வந்தார். அவரவருக்கு வேண்டிய பணத்தை வேண்டிய போது அப்பாவிடம் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு செலவுக்குக் கணக்கும் சொல்ல வேண்டும்.

மணி பத்து ஆயிற்று. சினிமாவுக்குப் போயிருந்தால் சுகுணா இதற்குள் திரும்பியிருக்க வேண்டும். வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்ளத் தொடங்கினாள் மீனாட்சியம்மாள்.

''கிளம்புங்கோ! மரகதம் டீச்சரைக் கேட்டுப் பார்க்கலாம்.''

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, கால்களில் செருப்புகளை மாட்டிக் கொண்டு மனைவியோடு புறப்பட்டார் வைத்தீசுவரன். இந்த நிலைக்குத் தம்மைக் கொண்டு வந்த பெண்ணின் மீது அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'சே! என் பேரைக் கெடுக்க இப்படியும் ஒரு பெண்ணா?'

அடுத்த தெருவிலிருந்த மரகதத்தின் குடும்பத்தார் அனைவரும் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கப் போய் விட்டார்கள். கதவைத் தட்டிக் காலிங்பெல்லை அழுத்தி, எப்படியோ மரகதத்தையும் அவள் கணவரையும் எழுப்பி விட்டாள் மீனாட்சி அம்மாள்.

மரகதம் வந்து செய்தியைக் கேட்டாள். அவளுக்குக் கூடச் சுகுணா இன்னும் வீடு திரும்பாமல் இருந்தது வியப்பைத் தந்தது.

''காலேஜுக்கு இன்னிக்குச் சுகுணா வந்திருந்ததை நான் பார்த்தேன். 'கிளாஸ்' எடுத்த நேரம் போக அவளும் தேவகியுந்தான் ஒண்ணா இருப்பாங்க. ஒரு வேளை தேவகியோட வீட்டுக்குப் போயிருப்பாளோ என்னவோ? காலையிலே கூட அவுங்க ரெண்டு பேரையும் ஒண்ணாச் சந்திச்சேன்.''

தேவகியின் வீட்டு விலாசத்தை மரகதத்திடம் கேட்டபோது, அது அவளுக்குத் தெரியவில்லை.

''புரசவாக்கத்திலிருந்து அவ வர்றா; தெருவோ வீட்டு நம்பரோ தெரியாது.''

மீனாட்சியம்மாளுக்கும் வைத்தீசுவரனுக்கும் தேவகியை நன்றாகத் தெரியும். சுகுணாவுடனோ அல்லது சுகுணாவைத் தேடிக் கொண்டோ முன்பெல்லாம் அவள் அடிக்கடி வீட்டுக்கு வந்திருக்கிறாள். சுகுணாவைவிட ஏழெட்டு வயது பெரியவள். போன வருஷம் அவளுக்குக் கல்யாணம் நடந்ததிலிருந்து அதிகமாக அவளை வீட்டுப் பக்கம் காணோம்.

''கவலைப்படாதீங்க; தேவகிக்குத் தெரியாமல் சுகுணா எங்கேயும் போயிருக்க மாட்டா. விலாசம் தெரியாமல் இந்த நேரத்திலே உங்களால் தேவகியோட வீட்டைத் தேட முடியாது: சுகுணாவோட

அறையிலே டயரியோ நோட்டோ இருந்தா விலாசத்தைத் தேடிப் பாருங்க. விலாசம் கெடச்சா, காலையிலே அவள் வீட்டுக்குப் போங்க. இல்லேன்னா ஒன்பதரைக் கெல்லாம் காலேஜுக்கு வந்திடுங்க'' என்றாள் மரகதம்.

வீட்டுக்கு அவர்கள் இருவரும் திரும்பினார்கள். வைத்தீசுவரன், சுகுணாவின் அலமாரி, பெட்டி, புத்தகங்கள், நோட்டுக்கள் எல்லாவற்றையும் திறந்து தேவகியின் முகவரியைத் தேடினார். தேவகியும் சுகுணாவும் இருக்கும் அறை அல்லோல கல்லோலப் பட்டது. இவ்வளவு அமளி துமளியிலும் எப்படிச் சாவித்திரி மட்டும் நிம்மதியாகத் தூங்கினாள் என்று தெரியவில்லை. அவள் தூங்குகிறாளா? அல்லது தூங்குவது போல் பாசாங்கு செய்கிறாளா?

பெரியவர்கள் இருவருக்கும் இது எரிச்சலைத் தந்தது. ''அவளை எழுப்புடீ!'' என்று கத்தினார் வைத்தீசுவரன்.

படுக்கையில் கிடந்த சாவித்திரியின் தோளைப்பற்றி உலுக்கினாள் மீனாட்சி. ''ஏண்டி! எப்படி உன்னாலே தூங்க முடியறது? உன் அக்கா காணாமல் போயிட்டாடி! இன்னும் திரும்பலேயடி! அவ சிநேகிதி தேவகியோட விலாசம் தெரியுமா? தெரிஞ்சாச் சொல்லுடி!''

அம்மாவின் தொல்லை பொறுக்காமல் படுக்கையிலிருந்து எழுந்த சாவித்திரி கண்களைத் தேய்த்தபடியே, ''அவ ஒண்ணும் பச்சைக் குழந்தை இல்லே. எங்கே போயிடப் போறா?'' என்று கேட்டுவிட்டு, ''என்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்று முணுமுணுத்தாள். பிறகு சோம்பல் முறித்தபடியே கொட்டாவி விட்டுக் கொண்டு மீண்டும் படுக்கையில் விழுந்தாள். போர்வையை இழுத்துவிட்டு நன்றாக முகத்தை மூடிக் கொண்டாள்.

பெற்றோர் படுகிற அவஸ்தையைப் பார்த்த பிள்ளையாண்டான் சந்துரு, ''ஏம்பா, போலீஸிலே புகார் குடுத்தா என்ன?'' என்று கேட்டேன்.

''மானம் போகுமேடா!'' என்ற வைத்தீசுவரன், அந்த யோசனையையும் அடியோடு கைவிட்டு விடாமல், ''எல்லாம் நாளைக்குத் தேவகியோட பேசின பிறகு செய்துக்கலாம்'' என்றார்.

ஏனோ தேவகியை முதல் முறை பார்த்ததிலிருந்தே வைத்திசுவரனுக்கு அவளைப் பிடிக்கவில்லை. அவள் கலகலப்பாகப் பேசினாள்; சிரித்தாள்; குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யாரிடமும் அவள் வேற்றுமை பாராட்டவில்லை. சுகுணாவுக்கு மட்டுமே அவள் சிநேகிதி என்றாலும் மற்றவர்களையும் அவள் தன் பேச்சாலும் பழக்கத்தாலும் கவரத் தொடங்கினாள்.

அவளுடைய இந்தச் சுபாவந்தான் வைத்தீசுவரனுக்குப் பிடிக்கவில்லை. அவர் குடும்பத்தில் யாருமே வாய் திறந்து தேவையில்லாமல் பேச மாட்டார்கள், சிரிக்க மாட்டார்கள். 'அசட்டுத்தனமாய்'க் கலகலப்பாகப்


தீபாவளி வாழ்த்துக்கள்
தன்னிகரில்லா தாயன்பை
சேர்த்துக் குழைத்தது
விஜயாஸ்ப்ரே
Vijayaspray
The answer to a mother's prayer
Vijayaspray
Milk Food For Babies
ஆந்திரா டெய்ரி
தடையில்லா வளர்ச்சி
5 வருடங்களில் சிறப்பான வளர்ச்சி பெற்ற பால்வள நிறுவனம்
தி ஆந்திரபிரதேஷ் டெய்ரி டெவலப்மெண்ட் கார்பொரேஷன் லிமிடெட் ஹைதராபாத்
FDS APDDC 2893A TAM

பழகமாட்டார்கள். வாயில்லாப் பூச்சிகளாய் அளவுக்கு மீறிய கட்டுப்பாட்டோடு நடந்துகொள்வதுதான் அவர்கள் பழக்கம். 'உம்' மென்று முகத்தை வைத்துக் கொண்டிருப்பதே குடும்பக் கௌரவம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

'இந்த ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் இவள் குலைத்துவிடுவாள் போலிருக்கிறதே!' என்று அப்போதே பயந்தார் வைத்தீசுவரன். அவர் பயந்தது நடந்து விட்டது. 'வயசுப் பொண் ராத்திரியிலே வெளியிலே தங்கறான்னா என்ன துணிச்சல் அவளுக்கு?'

இரவு இரண்டு மணிவரையில் அந்த வீட்டில் எரிந்த விளக்குகள் அதற்கு மேல் அணைந்துவிட்டன. சந்துரு தன்னுடைய அறைக்குள் நுழைந்தபோது, அவன் காதோடு காதாக, ''நம்மகத்திலே பொண் காணாமல் போனாப்பலே வேறே யாரோட அகத்திலேயாவது புள்ளை காணாமல் போயிருப்பான்; நீங்க பேசாமல் தூங்குங்கோ!'' என்றாள் அவள் மனைவி.

''சீ! வாயை மூடு!'' என்று தணிந்த குரலில் அவளைக் கடிந்து கொண்டவன், சீதா சொல்வதிலும் உண்மையிருக்குமோ என்றெண்ணிக் கலங்கினான்.

''உங்கப்பாதான் சுகுணாவுக்குப் பதினஞ்சு வருஷமா ஜாதகம் பார்க்கிறாரே, அந்தப் பொண்தான் என்ன செய்வா? உலகத்திலே இருக்கிற ஒரு ஜாதகம் கூடவா பொருந்தி வரலே? எனக்குத் தெரிஞ்சு இது வரை இருபது வரனைத் தட்டிக் கழிச்சாச்சு! வரன் கெடைக்கிறது. குதிரைக் கொம்பா இருக்கிற இந்தக் காலத்திலே, இந்த ஆத்திலே இப்படி ஓர் அக்கிரமம் நடந்துண்டிருக்கு!'' என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

சந்துருவுக்கு இது சுருக்கென்று தைத்தது. இதுவரை அப்பாவுக்கு அடங்கிய பிள்ளையாகவே, ஒரு வகையில் மனித இயந்திரமாகவே, காலத்தைக் கடத்தி விட்டவன் அவன். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று நாற்பது வயது வரை ஓட்டி விட்டான். குடும்பப் பொறுப்பு, குடும்ப நிர்வாகம், வரவு செலவு, கொடுக்கல் வாங்கல் எல்லாமே அவன் அப்பாதாம். அவன் மனைவி கொஞ்சம் வாய்த்துடுக்கு என்பதற்காகவும் நிறைய வரதட்சணை கொடுத்து அவள் சந்துருவைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாள் என்பதற்காகவும் அவளுக்கு அங்கே தனிச் சலுகை உண்டு. கிட்டத்தட்டச் சந்துரு சம்பாதிக்கும் பணத்தின் அளவைத் கணக்குப் பார்த்து, தங்களுக்காக ஆகும் குடும்பச் செலவு போகப் பாக்கியை அவள் தன் மாமனாரிடமிருந்து கறந்து விடுவாள். இப்படி ஒரு குடும்பத்தில் எப்படிப் புத்திசாலித்தனமாகப் பிழைக்க வேண்டுமென்பது அவளுக்கு அத்துப்படியாகியிருந்தது. சிறுகச் சிறுகத் தன் பெண்களின் கல்யாணத்துக்கென்று பாத்திரம் பண்டங்கள் வாங்கிச் சேகரிக்கத் தொடங்கினாள். தங்க நகைகள் கூட அவ்வப்போது செய்து வைக்க முற்பட்டாள்.

'ஆனால் முப்பது வயசும் முப்பத்தஞ்சு வயசும் ஆன என்னோட தங்கைகளுக்கு?' சந்துரு பெருமூச்சு விட்டான்.

முதல் முறையாக அன்று அவனுடைய மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டித் திறந்துவிட்டாள், அவன் மனைவி சீதா. அவனுக்கு உறக்கம் வரவில்லை. சகோதர பாசம் அவன் கண்களைக் கலங்க வைத்தது. சுகுணாவின் அழகு, வயது, படிப்பு, உழைப்பு, வருமானம் இவ்வளவையும் அவன் எண்ணிப் பார்த்தான். சீதாவைப் போல் குடியும் குடித்தனமுமாய்க் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு தன் கணவனுடன் வாழ்ந்திருக்க வேண்டியவள் அல்லவா அவள்? இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தகப்பனாகிவிட்ட அவன் தன்னுடைய நிலையை நினைத்து அவமானப்பட்டான்.

பெண்களைப் பெற்ற ஒவ்வொருவரும் வரனைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது வரன்கள் சுகுணாவைத் தேடி முன்பெல்லாம் வந்து கொண்டிருந்தார்கள். அவளுடைய அழகும் படிப்பும் மட்டுமல்லாமல் அவளுடைய மாதச் சம்பளமும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும். முப்பதுக்கு மேல் அவளுக்கு வயதான பின்னர் அவளை நாடி வரும் வரன்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

அப்படி வந்த ஒரு சிலவற்றையும் வழக்கம் போலவே, 'நட்சத்திரம் சரியில்லை; லக்கினம் ஒத்து வரவில்லை; கோத்திரப் பொருத்தமில்லை' என்று சாக்குப் போக்குச் சொல்லியே தட்டிக் கழித்து வந்தார், அப்பா. ஜாதகப் பொருத்தம் பார்ப்பதில் மற்ற ஜோதிடர்களை அவர் நம்பியதாகத் தெரியவில்லை. தாமே ஒரு கைதேர்ந்த ஜோதிடர் என்றும் சொல்லிக் கொண்டார்.

வருடம் தவறாமல் ஒரு மாதகாலமாவது அவர் மீனாட்சியம்மாளை அழைத்துக் கொண்டு புண்ணிய தீர்த்தம், கோயில், குளம் என்று வெளியூர்களுக்குக் கிளம்பிச் செல்வார். தமிழ்நாட்டுக் கோயில்கள், காசி, கயா, ஹரித்வார், பத்ரிநாத், புரி, பிருந்தாவனம் என்று எங்கெல்லாமோ போய் வருவார். க்ஷேத்திராடனத்தில் அப்படி ஒரு பைத்தியம் அவருக்கு. தாராளமாகச் செலவு செய்து வசதியாகத் தம் பயணத்தைக் கவனித்துக் கொள்வார்.

தூக்கம் வராமல் சந்துரு புரண்டு புரண்டு படுத்தான். அவனுடைய தூக்கத்தைத் தொலை தூரத்துக்கு விரட்டியடித்த அவன் மனைவி சீதா, அருகிலேயே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். சுகுணாவுக்கும் சாவித்திரிக்கும் மட்டும் ஆசாபாசங்கள் விட்டா போய்விடும்?

மாதந் தவறாமல் இரண்டு பெண்களும் அப்பாவிடம் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கல்யாணம் செய்து வைக்க அப்பா நினைத்திருந்தால் அதற்கான முன்னேற்பாடுகளை இதற்குள் அவர் செய்து வைத்திருக்க வேண்டும். நகை நட்டுகள், பாத்திரம் பண்டங்கள் வாங்கியிருக்க வேண்டும். கல்யாணத்துக்கோ அத்துடன் வரும் மற்றச் செலவுகளுக்கோ பணம் சேமித்து வைத்திருக்க வேண்டும். அதற்காக அவர் தம் கையை அறுத்துக் கொண்டு கஷ்டப்பட வேண்டியதில்லை. அந்தப் பெண்களின் சம்பாத்தியத்தில் மிச்சப்படுத்தியே இவ்வளவும் செய்திருக்கலாம்.

'ஆனால் ஒருவேளை, இப்படியும் இருக்குமோ? அப்பா! அவர்களுடைய வருமானத்தை வைத்துக்கொண்டு கடைசி வரை தம் காலத்தை வசதியாக ஓட்டிவிடலாமென்று நினைக்கிறாரோ? சே! அப்பா நல்லவர். இப்படிச் சுயநலமாக இருக்க மாட்டார்.' பொழுது விடிந்தது. இமையோடு இமை மூடவில்லை, சந்துரு.

வழக்கமாக ஐந்து மணிக்கெல்லாம் வீட்டு வேலைக்கு வந்துவிடும் நாகம்மாள் அன்று பார்த்து வேலைக்கு வரவில்லை. நாகம்மாளுக்கு ஒரே பிள்ளை. நாலு வீடுகளில் கடுமையாக வேலை பார்த்து எப்படியோ அந்தப் பிள்ளையைப் பி.ஏ. வரையிலும் படிக்க வைத்து விட்டாள். அவளால் படிக்க வைக்கத்தான் முடிந்ததே தவிர, அவனுக்கு வேலை தேடிக் கொடுக்க முடியவில்லை. வேலையில்லாப் பட்டதாரியாகப் பத்து வருடங்கள் அலைந்து திரிந்த அவன், காலையில் வீடு வீடாகச் சென்று செய்தித்தாள் போட்டான். தாயார் வேலைபார்த்த வீடுகளுக்கு மாதச் சாமான்கள் வாங்கிப் போட்டான்; யார் என்ன வேலை சொன்னாலும் தட்டாமல் செய்தான். கடைசியில், வேலையில்லாப் பட்டதாரி என்ற முறையில் அவனுக்கு ஒரு புதுக் குடியிருப்பை ஒட்டி அரசாங்கம் ஒரு பெட்டிக்கடை ஒதுக்கியிருந்தது: கடையில் வியாபாரம் செய்ய முனைந்துவிட்டான்.

''என்னோட பிள்ளை கடையிலே சுமாரா வியாபாரம் நடக்குதம்மா. நான் கூட வேலையை விட்டு நின்னுக்கலாம்னு பாக்கறேன். என் வயசான காலத்திலே அவனுக்குப் பொங்கிப் போட்டாப் போதும்னு தோணுது'' என்று இரண்டு நாட்களுக்கு முன் மீனாட்சியம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் நாகம்மாள்.

ஆனால் பத்து வருடமாக அந்தக் குடும்பத்துக்குப் பாடுபட்ட நாகம்மாள், முதல் நாள் வந்தபோது கூட ஏதும் சொல்லாமல், இப்படித் திடீரென் நின்று விடுவாள் என்று மீனாட்சியம்மாள் எதிர்பார்க்கவில்லை. மாமியும் மருமகளும் சேர்ந்து காலை நேரத்து வீட்டு வேலைகளைக் கவனிக்க முற்பட்டார்கள்.

சந்துரு அன்று தன் அலுவலகத்துக்குச் செல்வதாக இல்லை. அன்று ஒரு நாள் விடுமுறை கேட்டு ஒரு கடிதம் எழுதி வைத்தான். யாரிடமாவது அதைக் கொடுத்து அனுப்ப வேண்டும்.

காலையில் எழுந்து குளித்து விட்டுக் காபி குடித்தான். பிறகு தன் அப்பாவிடம் வந்து, ''புறப்படுங்க; சுகுணாவைத் தேடிக் கண்டு பிடிக்கணும்'' என்றான்.

''நீ ஆபீஸுக்குப் போ; நான் காலேஜுக்குப் போய்த் தேவகியிடம் விசாரிக்கிறேன். சுகுணா காலேஜுக்கு வந்திருக்காளான்னு பார்க்கிறேன்.''

''நானும் வர்றேன்'' என்றான் பிடிவாதம் தொனிக்கும் குரலில்.

''என்னடா இது?''

''ஆமா, கௌம்புங்க சீக்கிரம்.''

அவனுடைய குரலில் ஒலித்த உறுதி வழக்கத்துக்கு மாறுபட்டதாக அவருக்குத் தோன்றியது. அந்தக் குடும்பத்தின் வாயில்லாப் பூச்சிகளில் ஒன்றாக இழைந்தவன் எப்படி இன்று மாறிப் போனான்!

ஒன்பது மணிக்கெல்லாம் அப்பாவும் பிள்ளையும் கல்லூரிக்குப் போய் விட்டார்கள். சென்ற சிறிது நேரம் கழித்துத் தேவகி அங்கு வந்தாள். அவளோடு சுகுணாவைக் காணவில்லை.

ஒரு மரத்தடியின் தனிமையில் நின்றுகொண்டு அவர்கள் பேசினார்கள்.

''நேத்தியிலிருந்து சுகுணா வீட்டுக்குத் திரும்பலே; உங்களைக் கேட்டாத் தெரியும்னு வந்திருக்கோம்'' என்றான் சந்துரு.

வியப்போடு அப்பாவையும் பிள்ளையையும் உற்றுப் பார்த்தாள் தேவகி. ''அப்படின்னா உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?''

''என்ன விஷயம்?'' பதறினான் சந்துரு.

''ஏன், சாவித்திரிக்கு எல்லாம் தெரியுமே!''

''சாவித்திரி ஒண்ணுமே சொல்லலே. நீங்க சொல்லுங்க'' என்றான் சந்துரு.

''சுகுணாவுக்கு நேத்திக்கே கல்யாணம் நடந்தாச்சு. அவளும் அவள் புருஷனும் பெங்களூருக்குப் போயிருக்காங்க. ஒருவாரம் காலேஜுக்கு லீவு போட்டிருக்கா. இவ்வளவும் உங்க சின்னத் தங்கை சாவித்திரிக்கு நல்லாத் தெரியும்.''

வாயடைத்துப் போய் நின்றார் வைத்தீசுவரன்.

சந்துரு கேட்டான். ''மாப்பிள்ளை யார்னு சொல்ல முடியுமா?''

''உங்க வீட்டிலே வேலை பார்த்த நாகம்மாளோட மகன் ரத்தினம்.''

''அடி, பாவி!'' என்று அலறினார் வைத்தீசுவரன்.

சந்துருவுக்கே இது தாங்கிக் கொள்ள முடியாத அதிர்ச்சிதான். அவன் கண்களிலிருந்து சொட்டுச் சொட்டாய் நீர் உதிர்ந்தது. ஊர் கூடி, உற்றம் சுற்றம் கூடி, மேளதாளம் ஊர்வலம் விருந்துகளோடு மிகச் சிறப்பாக நடைபெற்ற தன் கல்யாணத்தையும் அவள் கல்யாணத்தையும் அவன் ஒப்பிட்டுப் பார்த்தான். 'அதுவும் ஒரு வேலைக்காரியோட மகனையா அவன் கல்யாணம் பண்ணிக்கணும்?' செய்தியை ஜீரணிப்பது அவனுக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது.

''ரத்தினத்தை எனக்கும் தெரியும். யோக்கியமான பிள்ளை; கடுமையான உழைப்பாளி; சுகுணா அந்தப் பிள்ளையோட சந்தோஷமா வாழப்போறா; அவளுக்குப் பொறக்கிற குழந்தை குட்டிகளுக்கு அவர் செய்ய வேண்டிய கடமைகளைப் பொறுப்போட செய்வார்'' என்றாள் தேவகி.

தேவகி கடைசியாகச் சொன்ன சொற்கள் வைத்தீசுவரனின் நெஞ்சில் ஈட்டிகளாய்ப் பாய்ந்தன.

சந்துரு பேச நா எழாமல் தடுமாறினான்; ''எங்கேயிருந்தாலும் சுகுணா சந்தோஷமாக வாழட்டும்!''

சந்துரு வானத்தை நோக்கிக் கை கூப்பினான்.

''என்னடா சொன்னே? இதை இப்படியே விடப்போறேன்னு நெனைச்சியா?'' தாவிக் குதித்தார் வைத்தீசுவரன்.

''வாங்கப்பா போகலாம்!'' என்று தன் வாழ்க்கையில் முதல் முறையாக அப்பாவை அதட்டினான் பிள்ளை. ''போய் முதல் வேலையாச் சாவித்திரிக்கு ஒரு வரனைப் பார்ப்போம். இந்தத் தை மாசத்துக்குள்ளே அவளுக்குக் கல்யாணம் நடந்தாகணும். வரன் பார்க்கிற வேலையையும் ஜாதகம் பார்க்கிற வேலையையும் நான் கவனிச்சுக்கறேன். நீங்க சிரமப்பட வேண்டாம்.''

சந்துருவின் பேச்சு அவருக்கு வெறும் பேச்சாக ஒலிக்கவில்லை. அந்தக் குடும்பத்தின் வரலாற்றில் ஒரு தலைகீழ் மாற்றம் நடந்துவிட்டது. வாயில்லாப் பூச்சிகளாக அவரால் வளர்க்கப் பெற்றவர்கள் இப்போது வாய் பெற்று விட்டார்கள்!

✻

திரு A. முருகேச முதலியார்

ஸ்தாபகர், நியூடன் அண்டு கம்பெனி

பிளாக் மேக்கர்ஸ் &

நியூடன் டைப் பவுண்டரி

வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் உளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

**ஆப்டோன், லைன், மூவர்ணப் பிளாக்குகளுக்குத்
தென்னிந்தியாவில் புகழ்பெற்ற ஸ்தாபனம்**

*குறித்த நேரத்தில் திருப்தியான முறையில்
பிளாக்குகள் தயாரித்துத் தரப்படுகின்றன.*

கலைமகள் மலரில் வெளியாகியுள்ள
லைன்-இரண்டு கலர் லைன் பிளாக்குகள் எல்லாம்
நாங்கள் செய்து அளித்தவை.

விவரங்களுக்கு:

நியூடன் அண்டு கம்பெனி

56, வாலாஜா ரோடு, மதராஸ்-600002

டெலிபோன்: ஆபீஸ்: 842832
வீடு: 843879

ஸ்தாபகம்: 1932

Sumeet amazes housewives
"It's a complete kitchen machine -now even more amazing with a wider range of performance!"
Sumeet is first of its kind! Has easy-to-clean hygienic stainless steel jar with see-through acrylic dome. Unique attachments for dry/wet grinding, whipping, blending, liquidising; and now for mincing/grating too! Also for kneading flour, and even mixing cake batter!... Sumeet can run non-stop for 30 minutes.
New! Meat Mincer/ Vegetable Grater is unique– first of its kind!
A simple yet ingenious blade that comes with the stainless steel jar. Specially developed to mince meat in 1 minute; grate carrots, onions, coconut, nuts in seconds; crush ice quick-as-a-wink...Simply fantastic!
See what else you can do with Sumeet
Dry grind masalas in 3½ minutes!
Wet grind dal in 3½ minutes!
Grate carrot in seconds!
Whip up lassi/fruit juice in just 1 minute!
Grind chutney in 2 minutes!
Knead atta in 2 minutes! Make cake batter in 3½ minutes!
Sumeet®
your complete kitchen machine
Free Demonstration: Look out for our offers and watch Sumeet in action
All parts patented.
OBM/2233/R4
Authorised whole sale dealers:
VIVEK & CO
Mylapore 76923
Purasawalkam 663545
T. Nagar 444129

அனைவருக்கும் எமது மனமார்ந்த

தீபாவளி

நல்வாழ்த்துக்கள்!

ஓரியண்ட்
லித்தோ
பிரஸ்

சிவகாசி

POST BOX No. 17
தந்தி: "YENPEYES"
போன்: 65, 124, 149

FOR EXCELLENCE

IN LETTERPRESS, LITHO,
OFFSET, ROTARY PRINTING

PEACOCK BRAND PRINTING INK

SPECIALISTS IN BLACK

Mfrs :

PUSHKALA INDUSTRIES

Office : 63, SEETHAMMA ROAD
MADRAS-600 018
Ph: 441469

Factory : MAHABALIPURAM ROAD
MADRAS-600 096
Ph: 411232

கட்டை விரல் நகத்தளவு பகுத்தும் பாரு!

பேராசிரியர் டாக்டர் பி. ராமமூர்த்தி

உடலின் எந்த மூலை முடுக்குப் பாகமாக இருக்கட்டும், நுட்பமும் நளினமும் நிறைந்ததாக இருக்கட்டும், எல்லாச் செயல்களையும் மூளையே கண்காணித்துச் செயல்படுத்துகிறது. இதயம் அதிகம் துடித்தாலும், பழுதுபட்டு மெதுவாகத் துடித்தாலும், அந்தச் செயலுக்கும் மூளையே காரணமாகிறது. பழுதுபட்ட இதயம் தாறுமாறாக இயங்கினாலும், அப்படியாவது அதை இயங்கவைப்பது மூளைதான். அதேமாதிரிதான் சுவாசிப்பதும்.

பஞ்ச பூதங்களினால் ஆன இந்த உடலை ஆட்டிப் படைக்கிற உணர்வுகளை உண்டாக்குவதும், மனிதன் சீரிய சிந்தனைகளைச் செய்து, சந்திரனுக்கு மனிதனை அனுப்பி, அதில் இறங்கச் செய்து, மீண்டும் பூமிக்கு ஜாக்கிரதையாக வரவழைத்த சாதனைக்கும் காரணம் மூளைதான்.

'பரப்பிரம்மம் ஒன்றே. அதில்தான் இறுதியில் எல்லா உயிர்களும் அடங்குகின்றன.' 'அஹம்ப்ரஹ்மாஸ்மி' என்ற அத்வைத நிலையை அடைய உதவுவதும் மனிதனின் சிரசில் அமைந்துள்ள மூளைதான். அதனால்தான் எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்று நம் முன்னோர் கூறியிருக்கின்றனர். பஞ்சேந்திரியங்கள் என்று சொல்லப்படுபவற்றில் நான்கு உடலின் மேல்பாகத்தில், முகத்தில் தான் அமைந்திருக்கின்றன.

மனச்சாட்சி என்று மார்பைத் தொட்டுச் சொல்கிறோம். அங்கே என்ன இருக்கிறது? உடல் முழுதுக்கும் இரத்தத்தைச் செலுத்தும் 'பம்ப்' போன்ற இதயந்தானே இருக்கிறது? மனம், மனசு என்று சொல்வதெல்லாம் வெறும் உருவெளித் தோற்றந்தான். மூளையின் செயற்பாட்டைத்தான் அப்படிச் சொல்கிறோம். நாம் உண்ணும் உணவு செரிப்பது, படிப்பது, நடக்கவோ ஓடவோ எண்ணுவது எல்லாம் மூளையின் கட்டளைப்படியே நடக்கின்றன.

நம் தலையில் இருக்கும் மூளையைப் போன்ற ஒரு பாகத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இறைவனின் அற்புதச் சிருஷ்டி இது. கம்ப்யூட்டர்கள் செயற்கரிய காரியங்கள் செய்கின்றன என்ற செய்தியறிந்து வியக்கிறோம்; பெரும் பெரும் கணக்குகளைத் துல்லியமாக அறிவிப்பதைக் கண்டு பிரமிக்கிறோம். ஆனால் மனித மூளையின் முழுத் திறமையையும் அறியாத காரணத்தால்தான் அப்படிப் பிரமிப்பும் வியப்பும் நமக்கு ஏற்படுகின்றன. மூளையின் முழுச் செயல்திறனும் வெளிப்படும்படி செய்தால், அப்படிப் பழக்கப்படுத்திக்கொண்டால், செயற்கரியன என்று நாம் இப்போது நினைக்கும் பல செயல்களைச் செய்யலாம்.

வேதகால ரிஷிகள் வேத மந்திரங்களைக் கண்டார்கள்; மந்திரத்ரஷ்டாக்கள் என்று அவர்களைச் சொல்கிறார்கள். ஞானதிருஷ்டியால் தொலைவில் நடக்கும் செயல்களை அவர்கள் அறிந்தார்கள் என்று நம் சாஸ்திரங்கள் கூறும்போது, நமக்கு நகைப்பாக இருக்கிறது. அவ்வளவும் உண்மை.

மூளையின் முழுத் திறனையும் வெளிக்கொணர்ந்து உபயோகப்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர்களாக இருந்தார்கள் அவர்கள். உடலின் செயல்களையெல்லாம், தூக்கம், பசி, வலி, ஆசை, கோபம் போன்ற உணர்வுகளை எல்லாம், அடக்கி ஆளும் மூளையை, நாம் சிறிய ஒரு முறையினால் நம் வசமாக்கிவிடலாம்.

மூளையின் முழுத் திறனும் செயல்படத் தொடங்கிவிட்டால், இந்த உடலே பிறகு அவசியம் இல்லை. உடலின் வேதனைகளும் அப்போது தோன்றமாட்டா. வேத காலத்து ரிஷிகள் அத்தகைய சீரிய வாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள்.

தம் உடலுக்கு நேர்ந்த இடையூறுகளையும் துன்பங்களையும் அறியாமல், ரமண பகவான் நம் கண் முன்பு வாழ்ந்து காட்டவில்லையா? ஜீவன்முக்தர்களாக எத்தனையோ மகான்கள் இன்றும் விளங்குகிறார்கள். இந்த உயர்ந்த நிலையை எய்த அவர்களுக்கு உதவியது தியானம். யோகாசனப் பயிற்சிகள் உடல் உரத்துக்கும், ஓரளவு மூளைக்கும் உபயோகமாக இருப்பவை என்று சொல்லலாம். ஆனால் தியானந்தான் மனித மூளையின் செயல்திறன் முழுவதையும் வெளிக்கொணர உபயோகமாகிறது.

''மூளையின் முழுத் திறனையும் வெளிக்கொணர்ந்து எல்லாரும் முனிவர்களாக வாழ்ந்து என்ன பிரயோசனம்?'' என்று பலர் கேட்கலாம். தியானம் செய்வது ரிஷிகள் ஆவதற்கு அல்ல. அது மிக மிக உயர்ந்த நிலை. அதை எட்டுவது சாதாரணமாக எல்லாராலும் இயலாது.

ஆனால் மனிதனின் உழைப்புத்திறன் அதிகரிக்கவும், காமம் குரோதம் போன்ற உணர்வுகளால் சண்டை சச்சரவுகள் ஏற்படாமல் இருக்கவும், கணவன் மனைவியரிடையே அன்பு மலரவும், தனயன் தந்தையரிடையே பாசம் மிகுதி ஆகவும், சமுதாய உணர்வு தோன்றவும் இந்தத் தியானம் உதவுகிறது.

விஞ்ஞான பூர்வமாக இந்த உண்மை நிறுவப்பட்டிருக்கிறது. மனித மூளை பலவற்றில் அறுவைச் சிகிச்சை செய்து, அவற்றின் தன்மைகளை அறிந்தவன் என்ற முறையில் கூறுகிறேன்; சுமார் நாற்பதாண்டுக் கால அநுபவத்தில் இப்படிச் சொல்கிறேன். தியானம் செய்யப் பழகினால் மனிதனின் செயல்திறன், உழைப்புத்திறன் மிகுதியாகின்றன என்பது உண்மை. இந்த உண்மை வெளிப்பட்டுப் பதினைந்து ஆண்டுகளுக்குமேல் ஆகிறது. மேலை நாடுகளில் 'மெடிட்டேஷன்' என்பது இளந் தலைமுறையினரிடையேகூடப் பரவி வருகிறது. ஆன்மிகச் சிறப்பு வாய்ந்த இங்கேதான், தியானத்தின் தாயகமான இந்தப் புனித பூமியில்தான், மறைந்த ஒன்று வேரூன்றவில்லை.

கடவுள் அளித்த மூளை மனித இனத்தில் எல்லாருக்கும் ஒன்று போலவே அமைந்திருக்கிறது. சிருஷ்டியில் எந்த வித மாறுபாடும் கிடையாது. மூளையில் ஆயிரம் மிலியன் லிவிங் செல்ஸ்-நரம்பு அணுக்கள் - இருக்கின்றன. இவற்றை நியூரான் (Neuron) என்று அழைப்பார்கள். பத்துப் பத்து மடங்காக இந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து பல செயல்களைக் கண்காணிக்கின்றன; அல்லது கட்டளை இடுகின்றன. இந்த மூளை அணுக்களின் செயல்திறனைப் அபிவிருத்தி செய்வதைப் பொறுத்தே மனிதத் தன்மை என்ற சுபாவமே அமைகிறது.

இளமையில் கல்வி கற்பதன் வாயிலாக இந்த அணுக்களின் திறமையை அபிவிருத்தி செய்கிறோம்; பல நூல்களைப் படித்து நம் அறிவை விருத்தி செய்து கொள்கிறோம் என்றால் இந்த மூளை அணுக்களின் திறனை வளர்க்கிறோம் என்றே பொருள். பல நூல்களை அந்தக் காலத்தில் மனப்பாடம் செய்தார்கள். இப்போதும் மாணவன் பரீட்சைச் சமயத்தில் பாடங்களை மனப்பாடம் செய்து பரீட்சை எழுதுகிறான். ஆனால் அந்தக் காலத்தில் இளமையில் உருப்போட்டதை ஆயுள் முழுதும் மறக்கமாட்டார்கள்; ஆனால் இன்றைய நிலை அப்படி இல்லை. இந்த முறையால் ஏற்படும் அறிவை மெமரி நாலட்ஜ் (Memory Knowledge) என்பார்கள். 'மேதா' என்ற இந்த முறையால் குறிப்பிட்ட அளவுதான் மூளை அணுக்களின் செயல்திறன் பெருகும்.

இப்படி மனப்பாடம் செய்து விருத்தி செய்து கொண்டதைச்

தியான நிலையில் யந்திரப் பதிவு (நிற்பது: கட்டுரையாசிரியர்)



பயா-ஃபீட் ஃபேக் முறை

சிந்தித்துப் பார்த்து, காரண காரிய முறையில் பலருடன் விவாதம் செய்து அறிவை விருத்தி செய்து கொள்வதுதான் உயர்ந்தது. இந்த முறையை 'ப்ரதிபா' என்பார்கள். 'மேதா' முறையில் ஞாபகசக்தி மட்டுமே பெருகும். தான் அறிந்ததை மேலும் மேலும் சிந்தித்து விவாதிப்பதால், மேலும் அறிவு விசாலம் அடையும்.

இந்தியாவில் சுமார் இருபத்தையாயிரம் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள்; ரஷியாவுக்கு அடுத்தபடி இங்கேதான். ஆனால் ஒரு ஸி. வி. ராமனுக்குப் பிறகு யாரும் அப்படி வர முடியவில்லையே! ஏன்? 'மேதா' முறைப் பயிற்சிதான் காரணம். 'பரீட்சைக்கு ஏதோ மனப்பாடம் செய்து எழுத வேண்டும். பரீட்சையில் வெற்றிபெற வேண்டும்' என்ற நோக்கத்தை வளர்த்துவிட்ட பாட முறைதான் இதற்குக் காரணம்.

ஒரு சிஷ்யன் பத்தாண்டுக் காலம் குருகுல வாசம் செய்தான் என்றால் சும்மாவா? குருவுக்குச் சிசுருஷை செய்தான் என்றால் நாம் இன்று எள்ளி நகைக்கிறோம். 'மாணவனுக்குப் படிப்பில் உண்மையில் அக்கறை இருக்கிறதா? கொடுப்பதை ஏற்றுக்கொள்ளும் திறன் இருக்கிறதா?' என்பதை அறியவும், பக்குவம் ஏற்படாவிட்டால் பக்குவம் உண்டாகும் வழியில் அந்த மாணவனை ஏவுவதும் அந்தக் காலக் குருகுல வாசக் கல்வி முறையில் நிலவின. படிக்கும்போது ஒருமைப்பாட்டோடு ஈடுபட வேண்டும் என்பதும் தியானத்தின் ஒரு நிலைதான்.

பிரம்மாண்டமான செயல் திறனை இயற்கையில் பெற்றிருக்கும் மூளையை நாம் எல்லாரும் எந்த அளவுக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறோம் என்பதை அறிந்தால் மிகவும் வேடிக்கையாக இருக்கும். மிகுந்த புத்திசாலி என்பவனே பத்துச் சதவீத அளவுதான் மூளையை உபயோகப்படுத்திக் கொள்கிறான். சாதாரண மனிதன் ஒரு சதவீதமேதான்.

செக்கு மாட்டைப் போல் பழக்கப்பட்ட ஒரே வேலையைச் செய்பவன், மூளையையே உபயோகப்படுத்தாமல், பழக்கம் காரணமாக உடல் உழைப்பை முடிக்கிறான். தியானத்தின் மூலம் மனத்தை நிலைக்கச் செய்து மூளையின் சக்தி முழுவதையும் வெளிக் கொணர்ந்த மந்த்ர த்ரஷ்டாக்களைப் போன்ற லட்சிய வாழ்வு வாழ வகை செய்யும் மூளையை நாம் பாழ்படுத்திவிடுகிறோம். அற்ப ஆசைக்கும் போட்டிக்கும் பொறாமைக்கும் இடம் கொடுத்து மகத்தான சக்தி பெற்ற மூளையைத் துருப்பிடிக்கச் செய்கிறோம். உடலுக்குப் பிராதான்யம் அளித்து அளித்து, அதன் விருப்பங்களைத் தீர்த்துத் தீர்த்து, அதனுடனேயே எரித்து விடுகிறோம்.

விருப்பு வெறுப்புக்களால் மனிதன் எத்தனை சண்டை சச்சரவுகளை உண்டாக்குகிறான்! 'ஆசையை ஒழிக்க வேண்டும்' என்று எத்தனையோ மகான்கள் அநுபவச் செறிவுடன் கூறியிருக்கின்றனர். காமம், குரோதம் முதலிய உணர்வுகளை மூளையின் நடுப் பாகத்தில் உள்ள ஒரு சிறு பாகமே உண்டாக்குகிறது. கட்டை விரல் நகத்தளவே உள்ள பாகம் அது: 'ஹைப்போதாலமஸ்' என்பது அதன் மருத்துவப் பெயர். உலகத்தில் நடக்கும் போட்டிகளுக்கும் சண்டைகளுக்கும் அந்தப் பாகமே காரணம்; பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை என்ற மூவகை ஆசைக்கும் பிறப்பிடம் அதுதான். பெண்ணாசையால் எத்தனை சாம்ராஜ்யங்கள் இடிந்து தரை மட்டமாகியிருக்கின்றன! மனிதனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் காட்டுவதே அந்தச் சிறு பாகந்தான்.

அந்தச் சிறு பாகத்தைக் கட்டி ஆளமுடியாதா? முடியும். தியானந்தான் அதற்கு ஒரே வழி. சுவாசிப்பதை, பிராணாயாமம் செய்யும்போது கட்டுப்படுத்தி விடவில்லையா? பிராணாயாமப் பயிற்சியைப் பழகப் பழக, சுவாசிப்பதைக் கட்டுப்படுத்த முடிகிறது அல்லவா? குளத்தில் முழுகும்போது மூச்சைப் பிடித்துக் கொண்டிருக்கப் பழகவில்லையா? இதே மாதிரி, தியானத்தின் மூலம் இந்த ஹைப்போதாலமஸ் என்ற பாகத்தின் கொட்டத்தை அடக்கிவிடலாம்.

மனிதனுக்கு ஆசை குறைந்துவிட்டாலே மனத்தில் அமைதி ஏற்படும். 'யோக: கர்மஸு கௌஸலம்' என்று கீதை கூறுகிறது. யோகத்தின் மூலம் கர்ம (செயல்கள்)ங்கள் குறைந்து திருப்தி பெறலாம்; யோகம் என்பது தியானந்தான்.

தியானம் என்றதும் ஏதோ முற்றும் துறந்த முனிவர்போல் தவம் செய்வது என்று பொருள் அல்ல. முற்றும் துறந்த முனிவர்கள் செய்யும் தவம் மிக உயர்ந்த நிலை. 'யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி' என்று பதஞ்சலி சூத்திரம், தவத்தின் ஒவ்வொரு நிலையையும் தொடக்கத்திலிருந்து கூறுகிறது.

ஒருவர் தியானம் செய்யும்போது அவருடைய மூளை அணுக்களின் செயல்திறன் பெருகுவதை நானே ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறேன். பல கம்பிகளை அவர் தலையில் இணைத்து, 'என்ஸபலோகிராப்' என்ற இயந்திரத்தில் பதிவு செய்து பார்த்தால், மூளை அணுக்கள் துரிதமாக வெளியிடும் ஆல்ஃபா அலைகளின் பெருக்கத்தைக் காணலாம். அதே யந்திரத்தில் சாதாரண நிலையிலுள்ள மனிதனின் மூளையைச் சோதித்தால் ஆல்ஃபா அலைகள் சற்றே வளைந்த கோடுகளாகவே தெரியும். ஆனால் தியானத்தின்போது அந்த அலைகள் மிகப் பெரிய வளைகோடுகளாகத் தெரியும்.

குழந்தைகளையும் தியானம் செய்யப் பழக்குவது நல்லது; அதனால் ஞாபக சக்தி பெருகும்; படிப்பிலும் விளையாட்டிலும் ஊக்கம் அதிகரிக்கும். தியானம் செய்யப் பழகிய குழந்தையின் மூளை அணுக்கள் வெளியிடும் ஆல்ஃபா அலைகளை, மீண்டும் அதன் மூளைக்கே செலுத்தி மூளை அணுக்களின் திறமையை மேலும் உயர்த்தும் சோதனையும் நடந்து வருகிறது. இதற்கு பயாஃபீட் ஃபேக் (Bio - Feed Back) என்று பெயர்.

நான் சொல்லும் 'மெடிட்டேஷன்' அல்லது தியானம் என்பது, அவரவர்கள் தங்கள் கடமைகளைச் செய்து கொண்டு, ஒரு நிமிஷம், ஐந்து நிமிஷம், பத்து நிமிஷம், கால் மணி, அரை மணி என்று தியானம் செய்து, அதன் வரம்பை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

மகான் மகேஷ் யோகி கூறுவது போல் ஏதாவது ஒரு நாமத்தை ஸ்மரித்துக்கொண்டு செய்வது, மனம் ஒன்ற மேலும் உதவியாக இருக்கும். மனம் ஒன்ற ஒன்ற மூளை அணுக்களின் செயல்திறன் அதிகரிக்கும்; நீங்கள் உழைக்கும் உழைப்பில் திறமையும் ஊக்கமும் நிச்சயம் பெருகும். குடும்பத்தினரிடையே சிறுசிறு விஷயங்களுக்கெல்லாம் கடுகடுத்துக் கொள்ளும் இயல்பு மறையும். கடுகடுப்புக் குறைந்தால் மகிழ்ச்சி பெருகுகிறது என்றுதானே அர்த்தம்?

முன் கோபமும் படபடப்பும் வெறுப்புமே நரம்புப் பலவீனங்களுக்கான காரணங்களில் முக்கியமானவை. அன்றாடம் கால்மணி நேரம் தியானம் செய்தால், அதாவது மனத்தை அலையவிடாமல் ஒருமுகப் படுத்தப் பழகிவிட்டால் இந்தக் குணங்களே மாறிவிடும். தியானத்தினால் மனத்தை அமைதிப்படுத்துவதன் மூலம் மூளையின் அணுக்கள், தங்கள் அபரிமித சக்தியைக் கண்ணுக்குப் புலனாகாத அதிர்வு நுண் அலைகளாக வெளிப்படுத்துகின்றன. இதற்கு ஆல்ஃபா அலைகள் என்று பெயர். தவ யோகிகளின் எதிரில் அமர்ந்திருந்தால் நமக்கும் ஒருவிதச் சாந்தி ஏற்படுவதாக உணர்கிறோமே, அதற்கு இதுதான் காரணம். ரமணபகவானைத் தூரத்திலிருந்து தரிசித்து மாத்திரத்திலேயே பலருக்கு என்றுமே அறியாத அமைதியும், மகிழ்ச்சியும் மனத்தில் உண்டானதாகக் கூறுகிறார்களே, அத்தகைய மகான்களின் மூளை அணுக்கள் வெளியிடும் அதிர்வு நுண்ணலைகளே அதற்குக் காரணம். இவை எல்லாம் விஞ்ஞான ஆராய்ச்சி பூர்வமாக நிரூபிக்கப்பட்டவை. மதத்தையும் இறைவனையும் இதில் சம்பந்தப்படுத்திக் குழப்பவே தேவையில்லை.

சாதாரண மனிதன் வாழ்வு சிறக்க, தியானம் நிச்சயம் உதவும். இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி முதலிய நோய்களுக்குத் தியானம் சிறந்த குணம் அளிக்கிறது. அன்றாடம் பத்து நிமிஷமோ, அரை மணியோ போதும். மனத்தை நிலைப் படுத்தப் பழகவேண்டும். முதலில் உழைப்பில் திறன் உண்டாகும். நாள் ஆக ஆக முன் கோபம், படபடப்பு போன்ற குணங்கள் குறையும். அதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்; வீட்டில் மகிழ்ச்சி பெருகினால் சமுதாயத்தில் அது எதிரொலித்து, நாட்டின் வளத்திலும் பிரதிபலிக்காதா? ❋

தீபாவளிக்கு

- கைத்தறிச் சேலைகள்
- வேஷ்டிகள்
- மில் ஜவுளிகள்
- சூட்டிங்குகள்
- பேன்ஸி சில்க்குகள்
- பிரிண்டட் சேலைகள்
- 2×2 பிளவுசுகள்

இதர எல்லாவிதமான தரமான ஜவுளிகள் குறைந்த விலைகளில் வாங்க நம்பிக்கையான ஒரே இடம்

நல்லி ஸ்டோர்ஸ்

(ஸ்ரீ நவசக்தி விநாயகர் கோவில் அருகில்)

லஸ், மயிலாப்பூர், சென்னை-600004.

ஒரு வெறுப்பின் மறுபுறம்..

நா. பார்த்தசாரதி

என்ன காரணத்தாலோ முதலிலிருந்தே அவள்மேல் அவர் மனத்தில் ஒரு வெறுப்புத் தோன்றிப் படர்ந்து விட்டது. நாளுக்கு நாள் அந்த வெறுப்பு அதிகமாகியதே ஒழியக் குறையவில்லை. அந்த வெறுப்பின் காரணத்தையோ மூலத்தையோ அவர் ஆராய்ந்ததில்லை.

சமய சந்தர்ப்பங்களும் அவள் காண்பித்த திறமைகளும் கூட அந்த வெறுப்பைத் தளர்த்தவோ மாற்றி அமைக்கவோ முடியவில்லை. அவளது அபரிதமான அழகையும் மிஞ்சிய வெறுப்பாயிருந்தது அது. ஒரு பிரபலமான தினசரியில் திரைப் படம், நாடகம், நாட்டியம் போன்ற நுண்ணிய கலைகளுக்கு விமர்சனம் எழுதும் 'ஆர்ட் க்ரிடிக்' அவர். அவருடைய விமர்சனங்களுக்கு ஒரு மரியாதை இருந்தது. அவர் இரண்டு வார்த்தைகள் புகழ்ந்து எழுத மாட்டாரா என்ற ஏக்கமும் கலைஞர்களிடையே இருந்து வந்தது. பெரும்பாலான கலைஞர்கள் அவரை அண்ணா என்றே பவ்யமாக அழைத்தனர்.

அதற்கு அவர் எழுதிவந்த தினசரியும் ஒரு காரணம். தேசிய அளவில் பரந்த செல்வாக்கும், சர்வதேச மரியாதையும் உள்ளதாயிருந்தது அது. அவரும் மூத்த அநுபவசாலியாயிருந்தார்.

புதிதாக வந்த சுகுணகுமாரியின் மேல் மட்டும் அவர் ஏன் அத்தனை வெறுப்பைக் காண்பித்து வந்தார் என்பது பெரும் புதிராயிருந்தது. பலருக்கு அது விளங்கவே இல்லை. படிப்படியாக முன்னேறிச் சுகுணகுமாரி நாடகத்தில் நடித்தபோது, ''இவள் நடிப்பது நாடகக் கலைக்கே அவமானம் உண்டாக்கக் கூடியது'' என்று எழுதினார் அவர்.

பின்பு அவள் நடனம் கற்று அரங்கேறியபோது, ''காக்கை வலிப்பு வந்தமாதிரி மேடை மேல் உதறி நடுங்கிக் கை கால்களை விதிர் விதிர்ப்பது எல்லாம் நடனம் ஆகி விடுவதில்லை'' என்று சுடச்சுட வெளுத்துக் கட்டியிருந்தார்.

நாடக அநுபவம், நாட்டியத் தகுதியாகிய இரண்டும் இளமையும் வனப்பும் கவர்ச்சியும் நிறைந்த உடலழகும் அவளைச் சினிமாவில் நாயகியாக நடிக்க வாய்ப்பளித்தபோது, ''இன்றைய சினிமா உலகம் எந்தத் தீமையையும் எந்த மோசத்தையும் எந்தச் சுமார் ரகத்தையும் ஏற்க முடியும். அது இப்போது சுகுணகுமாரியையும் ஏற்றிருக்கிறது'' என்று கடுமையாக எழுதினார் அவர்.

பிற இளம் விமர்சகர்கள் சிலரும், இளம் கலைஞர்களும், ''எல்லாவற்றையும் கடுமையாகத் தாக்கி எழுதினால் மற்றவர்களுக்குத் தம்மேல் பயமும் மரியாதையும் இருக்கும் என்ற எண்ணத்தில்தான் அவர் தாக்கி எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்'' என்று தங்களுக்குள் பேசிக் கொள்வது கூட உண்டு. அவர்கள் தம்மைப் பற்றி அப்படிப் பேசிக் கொள்வது அவருக்கும் தெரிந்துதான் இருந்தது. ஆனால் பெரும்பாலான இளம் பத்திரிகையாளர்கள் அவரை மதித்தனர். அவருக்கு அஞ்சினர்.

சில துணிச்சலான இளம் விமர்சகர்களும் கலைஞர்களும் அவருக்குக் 'கிழட்டுப் புலி' என்றுகூட ஒரு பட்டப் பெயர் சூட்டியிருந்தார்கள். சமயா சமயங்களில் தமக்குத் தாமே நினைத்துப் பார்க்கும்போது கூட அந்தக் காரணம் பொய் அல்ல என்று அவருக்கே தோன்றியது. ஆனால் உள்ளூறச் சில சந்தேகங்களும் அவருக்கே உண்டுதான். தாமாகவே மற்றவர்களிடம் பேசும்போது சவடாலாக ஏதாவது சொல்லி வந்தார். தம்முடைய பெருமையையும் மரியாதையும் உயர்த்திக்கொள்வதற்காகப் பிறருடைய பெருமையைக் குறைத்துச் சொல்லவும் அவர் தயங்கியதில்லை. அது ஒரு பழக்கமாகவே கூட ஆகியிருந்தது.

''இப்போ, புதுசா யாரோ ஒரு அழகான குட்டி, அவ பேரென்ன? சுகுண குமாரியோ சகுன குமாரியோ, யாரோ ஒருத்தி, அவ என்னைப் 'பர்ச்சேஸ்' பண்ணிடலாமுன்னு ப்ளாங் 'செக்' கொடுத்து ரகசியமா ஆளனுப்பினா, ஓய்! நானா மசிவேன்?'' என்பார்.

''என்னைத் தனியா மகாபலிபுரம் 'கோல்டன் ஸாண்ட்ஸ்' பீச் ஹோட்டலில் போய் 'வீக் எண்டு'க்குத் தங்கலாம்னு அவளே ஒரு தினுசாக் சிரிச்சுக்கிட்டே கூப்பிட்டாங்காணும்! அதுக்கு வேற ஆள் பாருடீன்னுட்டேன்'' என்று இன்னொரு சமயம் கூறுவார்.

ஐம்பத்தேழு வயது நிறைந்து தலை பூரண சந்திரன் மாதிரி பளீரென்று வழுக்கையாகிப் போன 'ஆர்ட் கிரிட்டிக்' ஜம்புநாதனா இப்படிப் பேசுகிறார் என்று பலருக்கு நம்ப முடியாமல் கூட இருக்கும்.

எந்தச் சமயத்தில் எப்படி மனநிலை இருக்கிறதோ அப்படி மற்றவர்கள் அவர் வாயில் அரைபடுவார்கள். சிலர் அவருடைய வாய்க்குப் பயந்தே அவரிடம் மரியாதையாக நடப்பதுபோல் நடித்தார்கள். பலர் நிஜமாகவே மதித்ததும் உண்டு.

ஆனால் உண்மையில் இளைஞர்கள் அவரைப் பற்றிக் கோபமாக இருந்தார்கள். சுகுணகுமாரியை அவர் கறுப்பா, சிவப்பா என்று கூட நேரில் பார்த்ததில்லை. படங்களில் பார்த்தபோது மிகமிக அழகாயிருந்தாள். அபரிமிதமான அழகுள்ளவர்கள் மேலெல்லாம் அவருக்கு இனம் புரியாததொரு புகைச்சல் உண்டு. காரணம் அவர் குரூபி. தெற்றுப் பல். முகம் நிறைய அம்மை வடு. ஒரு கண் கொஞ்சம் பூ விழுந்தாற் போல் மாறு கண்ணாகத் தெரியும்.

தம் அழகினால் பிறரைக் கவர்ந்து மயக்க முடியாத காரணத்தால் அவருக்குள் அடங்கிப் போன தாகங்கள், தாபங்கள் எல்லாம் பேச்சுக்

களாகவும் வம்புகளாகவும் வாயிலிருந்து புறப்பட்டன. யாரை அவர் அதிகமாகத் தாக்குகிருரோ அவர்களைப் பற்றியே நினைத்து நினைத்து அவர் உருகுகிருர் என்பது பிறருக்குத் தெரியாவிட்டாலும் அவருக்கே தெரியும். அவர் அந்தரங்கத்துக்கு அது மிக மிக நன்ருகத் தெரியும்.

கோடிக் கணக்கான ரசிகர்களை மகிழ்விக்கும் கனவுக் கன்னியான சுகுண குமாரியை அவர் தாக்கி விமர்சித்தாலும் உள்ளூற அவர் மனம் அவளுக்காக ஏங்கியது: அவளையே நினைத்தது. 'அவள் என்னைச் சரிக்கட்டுவதற்காக மகாபலிபுரத்தில் தனியே அந்தரங்கமாகத் தங்க அழைத்துப் போவதாகக் கூறினுள்' என்று கற்பித்து மகிழ்ந்து அதைப் பிறரிடமும் வாயரட்டை அடித்தார் அவர்.

இனிய அவரது அடிமன ஓட்டம் இப்படித்தான் இருந்தது. ஆனால் பிறர் என்னவோ அவரைப்பற்றி அப்படி நினைக்கவே இல்லை. காரணம் அவரது வயதுதான்; அவரது முதிர்ச்சிதான்.

அவரது முழுப் பெயர் வி.வி. ஜம்புநாதன். பத்திரிகை உலகில் வி.வி.ஜே. என்று இனிஷியல் எழுத்துக்களைச் சொன்னுலே போதும், அவ்வளவு தூரம் அவர் பிரபலமாகியிருந்தார்: எல்லாருக்கும் அவரைத் தெரிந்திருந்தது.

"வி.வி. ஜே. யை நேரே பார்த்தால் சுகுணகுமாரி அப்படியே கதறி அழுதுவிடப் போகிருள்"

நாயுடு ஹால்®
பிரேஸியர்கள்
உங்கள் அழகை
பூரிப்படையச் செய்கிறது
* சீரான அமைப்பு
* பொருத்த, வாகான பட்டைகள்
* உடம்பை தழுவும் கீழ்பட்டை
* இயற்கையான அமைப்பை
எழில்ாக காட்டுவது
NAIDU HALL
BRAS DESIGNED FOR FIT
SUPPORT & COMFORT
96 பாண்டிபஜார், தி. நகர்,
சென்னை-17.
போன்: 442882
RAJATHI



என்று சகப் பத்திரிகையின் விமர்சகர்கள் அவரிடம் கிண்டலாகக் கூறுவதும் உண்டு. அதனால் அவருக்கும் உள் மனத்தில் ஒரு பிரமை. என்றாவது எங்காவது சுகுணகுமாரியைச் சந்திக்க நேருவது போலவும், அவள் தன் முன் கதறியழுது, ''நான் உங்களுக்கு ஒரு கெடுதலும் பண்ணலீங்களே! ஏன் இப்படி என்னைக் கரிச்சுக் கொட்டறீங்க?'' என்று மன்றாடுவது போலவும் கற்பனை செய்தே மகிழத் தொடங்கிவிட்டார்.

ஆனால் அந்தக் கற்பனை நீண்ட காலம் நீடிக்கவில்லை. சில மாதங்கள் கழித்துச் சினிமா உலகுடன் தொடர்பு உள்ள வி.வி.ஜேக்குப் பிடித்தமான ஒரு சங்கீத வித்துவான் காலமானார். வி.வி.ஜே.யும் வேறு சில பத்திரிகையாளர்களும் அந்த வித்துவானின் வீடு சென்று அவருடைய மனைவியிடம் துக்கம் விசாரித்துக் கொண்டிருந்தபோது, அந்த இழவு வீட்டிலும் முண்டியடித்துக் கொண்டு நெருக்கும் ஒரு கூட்டம் புடை சூழச் சுகுணகுமாரியும் அங்கே துக்கம் கேட்க வந்து சேர்ந்தாள்.

அன்று அப்போது வி.வி. ஜே.யை அவள் கண்டு கொள்ளவே இல்லை. அவள் சரியாகப் பார்க்கவில்லையோ என்ற தயக்கத்தில் உடன் இருந்த ஓர் இளம் பத்திரிகையாளன்,

''சுகுணா அம்மா! ஸாரைத் தெரியுமில்லே? ஸார்தான் பிரபல....''

''ஸார் யாரு? தெரியாதுங்களே!''

''ஸார் பிரபல விமர்சகர். வி. வி. ஜே. இவர்தான்!''

''..........................''

''............விலே ஆர்ட் கிரிட்டிக்கா இருக்கார்.''

''அப்படிங்களா? எனக்குத் தமிழ் பேச வர மாதிரி படிக்க வராது. இங்கிலீஷும் படிக்கற பழக்கம் வரலே. தெலுங்கு மட்டும் எழுத்துக் கூட்டிப் படிப்பேன்.''

''..........................''

''ரொம்ப வணக்கமுங்க.''

உண்மையிலேயே பணிவாகத்தான் அவரை அவள் வணங்கினாள்.

படத்தில் பார்த்ததை விட நேரில் அதிரூப சுந்தரியாக விளங்கினாள் அவள்.

அதனால் ஏற்பட்ட மயக்கத்தை விட அவள் தம் விமர்சனங்களையோ தம்மையோ பற்றி அறிந்திராதவள் என்ற அதிர்ச்சியில் அயர்ந்தே போனார் வி. வி. ஜே.

அவளைப்பற்றித் துணிந்து தாம் தம்மைச் சுற்றியிருக்கும் இளம் பத்திரிகையாளர்களிடம் அடித்து வைத்திருந்த 'டூப்'களை எல்லாம் அவர்கள் முன்னாலேயே தற்செயலாகப் பொய்யாக்கிவிட்டாளே என்ற எரிச்சலும் கையாலாகாத்தனமான தொரு வெறுப்பும் மனத்தில் மூண்டன, அப்போது.

அந்த அழகின்முன் அவர் மனமும், அவரும் குன்றிப் போவதைத் தவிர வேறு வழியில்லை. பத்திரிகை உலகில் அவரைப் போல் ஜாம்பவானாக இருக்கும் ஓர் 'ஆர்ட் கிரிட்டிக்' இருப்பதே அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை!

அவள் 'ப்ளாங்க்' செக் அனுப்பித் தம்மைப் 'பர்ச்சேஸ்' செய்ய முடியாதது பற்றியும், மகாபலிபுரத்துக்குத் தனியே உடன் வரக் கூப்பிட்டது பற்றியும் தாம் கற்பனை செய்து அளந்த கதைகளுக்காக வெட்கப்பட்டு நண்பர்கள் முன்னால் அந்தக் கணமே தாம் செத்துவிட்டது போல உணர்ந்தார் அவர்.

ஒரு செளந்தரியத்தை நிந்தாஸ்துதி செய்தே வேறொரு விதமாக வழிபட்டு வந்திருக்கும் பலவீனத்தின் விளைவாகக் கட்டி விட்டு மகிழ்ந்த கதைகள் அவரையே இப்போது கூனிக் குறுகிக் கூச வைத்தன. அவரையே திரும்ப வந்து தாக்கிப் புடைத்தன. 'விமர்சகர் என்பவன் நடப்பது எப்படி என்று கற்றுக் கொடுக்க முயல்கிற ஒரு நொண்டி' என்று யாரோ எங்கோ கூறியிருப்பது வி.வி.ஜே.க்கு நினைவு வந்தது இப்போது.

தமது வெறுப்பின் மறுபக்கச் சுவர் அப்போது மடமடவென்று சரிவதை அக்கணத்தில் அவரே உணர்ந்தார்.

யாருடைய மறைவுக்கோ துக்கம் கேட்க வந்த இந்த இடத்தில் தமக்குத் தாமே அந்தரங்கமாகத் துக்கம் கேட்டுக் கொண்டு உள்ளூற அழுது ஒப்பாரி வைக்க வேண்டும் போலிருந்தது அவருக்கு. ஆனால் விம்பும் ஜம்பமும் அவரை அப்படி அழவிடாமல் இப்போதைக்குத் தடுத்துக் காப்பாற்றி வைத்தன. ❋

சிரஞ்சீவிச் செல்வர்

குருபாஞ்சால தேசத்தில் ஜமத்காரபுரம் என்ற நகரில் பிரம்மராதர் - சுநந்தை என்ற தம்பதிக்கு இறைவன் ஆசியால் பிறந்த ஒரே குழந்தை யாக்ஞவல்கியர். சிவபுராணங்கள் யாக்ஞவல்கியரைச் சிவனின் அம்சம் என்றும், வைஷ்ணவம் விஷ்ணு என்றும், ஸௌரம் சூரியன் அம்சம் என்றும் கூறுகின்றன. யாக்ஞவல்கியர் பிறந்ததும், குழந்தையைச் சுற்றி யாக அக்கினியே வல்கல வஸ்திரம் (மரவுரி) போல் திகழ்ந்ததால் யாக்ஞவல்கியர் என்ற பெயர் பெற்றார்.

தம் மாமன் வைசம்பாயனரிடம் வேதக் கல்வியைக் கற்றார். யஜுர் வேதத்தைக் கசடறக் கற்றார். அவர் வாழ்ந்த வர்த்தமானபுரம் என்ற ஊரில் சுப்ரியன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அரசன் கொடிய நோயால் துன்புற்றான். அவன் நோய் தீர, வைசம்பாயனர் அன்றாடம் தம் சிஷ்யர்கள் மூலமாக மந்திரித்த நீரை அனுப்பி வந்தார். அப்படியும் அவன் நோய் தீரவில்லை.

ஒரு நாள் மற்றச் சிஷ்யர்கள் இல்லாதபோது, யாக்ஞவல்கியர் மூலம், மந்திர நீரை, வைசம்பாயனர் மன்னனுக்கு அனுப்பிவைத்தார். அவரவர் கர்மவினையை அவரவரே அநுபவிக்க வேண்டும் என்ற கர்மவிதியில் நம்பிக்கை கொண்ட யாக்ஞவல்கியர் குருவின் கட்டளைக்குப் பணிந்து எடுத்துச் சென்றார்.

அரண்மனை உப்பரிகையில் நின்றிருந்த ராணியும் தோழிகளும், இவரைக் கண்டதும் பரிகாசமாகச் சிரித்தனர். ''இந்த நீரால் மன்னரின் நோய் அதிகமாகிறதே தவிரக் குறையவில்லை'' என்று கூறிக் கேலி செய்தனர். கோபம் கொண்ட யாக்ஞவல்கியர், மந்திர நீரை, காய்ந்து பட்டுப் போன மரங்களின்மேல் தெளித்தார். என்ன ஆச்சரியம்! அவை உயிர் பெற்றுத் தளிர்க்கத் தொடங்கின. இவர் கோபத்துடன் திரும்பிவிட்டார்.

மன்னன் இவர் பெருமையை அறிந்து, மறுநாளும் இவர்மூலமே நீரை அனுப்பிவைக்கச் சொன்னான். வைசம்பாயனர் எவ்வவவு கூறியும், யாக்ஞவல்கியர் அரண்மனை போக மறுத்துவிட்டார். ''குருவின் கட்டளையை மீறிய நீ என்னிடம் கற்ற வேதக் கல்வியைத் திருப்பிக் கொடுத்துவிடு'' என்று சீறினார் வைசம்பாயனர்.

தாம் கற்ற யஜுர்வேதம் முழுதையும் அக்கினிக் கங்குகளாக வெளியேற்றினார், யாக்ஞவல்கியர். குருவை விட்டுக் கிளம்பியவர் வேத மாதாவாகிய காயத்திரியை நோக்கித் தவமிருந்தார். அவள் அருளால், சூரியனிடமிருந்து சுக்ல யஜுர்வேதத்தைக் கற்று உலகில் பரப்பினார். பதினைந்து சிஷ்யர்களுக்கு, கோதாவரி தீரத்தில் தங்கி உபதேசித்தார். காண்வரும் மாத்யாந்தினரும் பயின்ற சாகைகள் இன்னும் வழக்கில் உள்ளன.

ஆச்வலாயன மகரிஷியின் புதல்வி காத்தியாயனியை மணந்துகொண்டார். இவருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர். இவருடைய ஞானமும் புகழும் எங்கும் பரவின.

இவருடைய பிரம்ம ஞானத்தையும், அறிவாற்றலையும் அறிந்த மித்ர ரிஷியின் புதல்வி மைத்ரேயி, இவரை மணக்க விரும்பினாள். இளம் பெண் ஒருவருடன் பழகிக் கல்வி பயின்றாலும் உலகம் தவறாக எண்ணும் என்று, காத்தியாயனியிடமே நேரில் வந்து, ''உன் கணவரைச் சரீர இச்சையாக மணக்க விரும்பவில்லை; அவருடைய பிரம்மஞானத்தைப் பெறவே மணக்கிறேன். உலகின் கண்களுக்குத் தவறாகத் தெரியாமல் இருக்கவும் எனக்குக் காப்பாக இருக்கவுமே மணக்கிறேன். அவரை மணக்க அநுமதி கொடு'' என்று வேண்டிக்கொண்டாள். அவள் சம்மதத்துடன் அவரை மைத்ரேயி மணந்தாள்.

வேத ஆராய்ச்சி செய்துகொண்டும், உலகியல் பற்று இல்லாமலும், காமம், குரோதம் போன்ற உணர்வுகளை வென்ற தவயோகியாகவும் வாழ்ந்தாள், மைத்ரேயி. 'யாக்ஞவல்கிய ஸ்மிருதி' என்ற அறநூலை மைத்ரேயியின் உதவியுடன் எழுதினார் யாக்ஞவல்கியர்.

பர்ணசாலையில், மைத்ரேயியும் யாக்ஞவல்கியரும் இரவு நெடுநேரம் ஆராய்ச்சி செய்தனர். ஒரு நாள் நல்ல மழை. நேரம் ஆகிவிட்டது; அங்கேயே யாக்ஞவல்கியர் இரவு தங்கிவிட்டார்; மறுநாள் காலையில் காத்தியாயனி, சிஷ்யர்கள்மூலம் தன் கணவர் இரவு மைத்ரேயியுடன் தங்கியதை அறிந்தாள். மைத்ரேயி, தன் வாக்கை மீறியிருப்பாளோ என்ற சந்தேகம் தோன்றியது காத்தியாயனிக்கு. மனக்கலக்கம் அவள் செய்கைகளில் பிரதிபலித்தது. இதை அறிந்தார் யாக்ஞவல்கியர்.

சில காலம் கழிந்தது; ஒரு நிலவு நாள். காத்தியாயனி தங்கியிருக்கும் பர்ணசாலைக்கே மைத்ரேயியை அழைத்துப் பேசிக்கொண்டிருந்தார் யாக்ஞவல்கியர். நேரம் அதிகமாகிவிடவே, மைத்ரேயியை வற்புறுத்தி அங்கேயே தங்கிவிடச் செய்தார்.

மைத்ரேயி குடிலின் ஒரு பகுதியில் படுத்திருந்தாள்; யாக்ஞவல்கியர், காத்தியாயனியிடம் அன்பாகப் பேசி, நிலவு காயும் பொழுதை இனிமையாகக் கழிக்க அழைத்தார். காத்யாயனி, பக்கத்தில் மைத்ரேயி இருப்பதைக் குறிப்பிட்டு இணங்க மறுத்தாள். ''அவள் கிடக்கட்டும், வெறும் ஜடம்'' என்று கூறினார், அலட்சியமாக. இனிமையாகக் கழிந்தது பொழுது. காத்யாயனி படபடப்புடன் எழுந்து போய், மெதுவாக எட்டிப் பார்த்தாள். மைத்ரேயி உணர்வற்றவள்போல் உட்கார்ந்திருந்தாள். அருகில் போய்ப் பார்த்தாள்; தொட்டுப் பார்த்தாள். 'சிலையாகிவிட்டாளோ?' என்று பயந்தாள் காத்தியாயனி. ''உலுக்கிப் பார்'' என்றார் யாக்ஞவல்கியர். உலுக்கிப் பார்த்தாள். நிஷ்டை கலைந்தவள்போல் மைத்ரேயி கண் விழித்தாள். அவளது தவவலிமையை உணர்ந்த காத்தியாயனி, அவள் கால்களில் விழுந்து வணங்கினாள்; தம் மனைவியின் சந்தேகம் தீர்ந்ததை அறிந்து மகிழ்ந்தார் யாக்ஞவல்கியர்.

இல்லறம் நடத்தப் பொருள் தேவைப்பட்டது. விதேக மன்னராகிய ஜனகர் ஒரு யக்ஞம் நடத்தினார். அந்த யக்ஞத்துக்கு யாக்ஞவல்கியரும் சென்றார்; கொம்பில் பொன் முடிச்சுகளைச் சுற்றிய ஆயிரம் பசுக்களை வெளியில் கட்டி, 'யார் பிரம்ம வித்தையில் சிறந்தவரோ, அவர் இந்தப் பசுக்களை ஓட்டிச் செல்லலாம்'' என்று கூறினார் ஜனகர்.

மற்றவர்கள் எல்லாம் யோசித்துக் கொண்டிருந்தார்கள். யாக்ஞவல்கியர் மட்டும், தம் சிஷ்யன் ஸௌம்பா என்பவனை அழைத்துப் பசுக்களைத் தம் குடிலுக்கு ஓட்டிப் போகும்படி கூறினார். ரிஷிகள் எல்லாரும் பிரமித்தனர். அவையில் இருந்த கார்க்கி என்ற வித்தகி மட்டும், ''என் இரண்டு கேள்விகளுக்கு விடையளித்தால் நீங்கள் சிறந்தவர் என்பது உண்மையாகும்'' என்று கூறித் தடுத்தாள்.

பரப்பிரம்ம விளக்கம் சம்பந்தமான அவள் கேள்விகளுக்கு யாக்ஞவல்கியர் தகுந்த விடையளித்தார். அவரை அவையினர் பாராட்டினர், 'பிரம்மரிஷி ஸாம்ராட், யோகேசுவரர்' என்றெல்லாம் பட்டங்கள் சூட்டி மகிழ்ந்தனர். ஜனகருக்கு ஞானோபதேசமும் செய்தார்.

வீட்டுக்கு வந்து செல்வம் முழுவதையும் காத்யாயனிக்கு அளித்தார். தம் ஞானச் செல்வத்தை மைத்ரேயி விருப்பப்படி அளித்துவிட்டுத் துறவறம் ஏற்றார். யாக்ஞவல்கியர் சிரஞ்சீவிகளில் ஒருவராக இன்றும் வாழ்கிறார். இந்தக் காட்சிகளை, திரு மணியம் செல்வன் அவர்களின் சித்திரங்கள், அடுத்த பக்கங்களில் வண்ணத்தில் பிரதிபலிக்கின்றன. ❋







பொன் நகையும், புன்னகையும்
என்றும் பொலிந்திட

எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

70 ஆண்டுகளாகத் தங்க, வைர வியாபாரத்தில் நம்பிக்கைக்குகந்த நிறுவனம் - பாபாலால்.

நாணயமான நிகரில்லா வேலைப்பாடு. நெஞ்சையள்ளும் கலைச்சிறப்பு. ஆபரண வகைகளில் உங்கள் எந்தத் தேவையையும் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறது-பாபாலால்.

வைரம், மாணிக்கம், மரகதம், நீலம், கோமேதகம், வேலைப்பாடு மிக்க தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், இன்னும் அருமையான பரிசு வகைகள் **(Cups, Caskets, Trophies, Replicas)**

ஒப்பில்லாத வேலைப்பாடுகளைக் காண எமது ஷோரூமுக்கு ஒரு முறை வருகை தாருங்கள்.

RELIABILITY ESTD 1910 QUALITY SERVICE

பாபாலால் அண்டு கம்பெனி

(ஸ்தாபிதம் 1910)

வைர, தங்க நகை வியாபாரிகள்,

ராட்டன் பஜார், சென்னை-600003.

தந்தி: "NECKLACE" போன்: 32396 & 39573

உங்கள் அன்பிற்கும் ஆதரவிற்கும் எங்களது நன்றி!

தமிழகத்தின் தலைசிறந்த தமிழ் தினசரி

தினமலர்

சென்னை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில்
ஒரே நேரத்தில் வெளியாகிறது

மதுரையில்

தினமலர்

உங்கள் தினமலர் மதுரைப் பதிப்பு அதிவிரைவில்
வெளியாகிறது. மதுரை, ராமநாதபுர வட்டார
வாசக அன்பர்களின் நெடுநாளைய அவா, அவர்கள்
ஆசி கொண்டு பூர்த்தி ஆகிறது.

•

ராமநாதபுரம் & மதுரை வட்டார
விளம்பரம் மற்றும் ஏஜன்ஸி விபரங்களுக்குக்
கீழ்க்கண்ட விலாசத்திற்கே தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

தினமலர்

ஸ்தாபகர்: T.V. RAMASUBBAIYER

(தமிழ் தினசரி)

தபால் பெட்டி எண்-1, பழங்காநத்தம் போஸ்ட்,
மதுரை-625 003

போன்: 24289
24323

உள்ளம் நினைத்து மறுகுதடி!

ஏ.எஸ்.ராகவன்

அப்பா கிழித்த கோட்டை அத்தை தாண்டி விட்டாளாம். 'அவள் முகத்திலே இனிமேல் விழிக்க மாட்டேன்' என்று சொல்லி விட்டார், அப்பா. "எப்போது அவள் என் பேச்சைக் கேட்க வில்லையோ, அப்போதே எனக்கும் அவளுக்கும் எல்லாக் கணக்கும் தீர்ந்து போச்சு" என்றார் அப்பா. அவருக்கு இரத்த அழுத்தம் மிகுதியாகி விட்டிருக்கும் போல் இருந்தது. "உனக்குத்தான் சொல்றேன். அவளுக்குப் பரிந்து கொண்டு ஏதாவது பேசினாயோ தெரியும் சேதி!" அம்மாவிடம் சீறிவிட்டு என்னைப் பார்த்து உறுமினார்: "டேய் சுண்டு, வாடா இங்கே!" வலக்கையால் என் இடக் கரத்தைப் பற்றிக் கொண்டார். "தெருவிலே, வாசலிலே எங்கேயாவது அவளைக் கண்டு பேசினாயோ தொலைச்சுப்புட்டேன் தொலைச்சு."

வார்த்தைக்கு வார்த்தை என் காது, கிரைண்டருக்குள் அகப்பட்ட உளுத்தம்பருப்பு மாதிரி அரைபட்டு அரைபட்டு ரத்த விளாறாக ஆகி விடும்போல் இருந்தது.

"இல்லேப்பா, இல்லேப்பா!" நான் அலறினேன்.

"சின்னவன் எங்கே?" அவர் சுற்று முற்றும் பார்த்தார்.

அவன் அங்கே இருந்தால்தானே? பரணில் ஏறிப் பதுங்கிக் கொண்டிருந்தான். மூச்சு விடவில்லை.

"குருவாயூரப்பன் மேலே ஆணை. இனிமேல் அவள் இந்த வீட்டுப்படி ஏறக் கூடாது. உனக்குத் தானடி சொல்கிறேன். எல்லாப் பாசத்தையும் வழித்துச் சுரண்டித் தூர எறிஞ்சிடு. மூக்கை மூக்கைச் சிந்திண்டு ஆகாத்தியம் செய்யாதே."

"சரி, சரி, விடுங்கோ" என்றாள் அம்மா.

"எதை விடச் சொல்றே?" அப்பா சீறினார்.

"அவள் யாரு? உங்கள் தங்கை தானே? உங்கள் கோபத்துக்கு அவள் கோபம் தாழ்ந்து போகாது. அவள் இனிமேல் இங்கே வரமாட்டாள்."

"அப்படியா? அவள் வரமாட்டாளேன்னு மூக்கைச் சிந்துறயா?"

"நான் ஒண்ணும் மூக்கைச் சிந்தல்லை. எனக்கு ஜலதோஷம்."

"ஜலதோஷம் இல்லேடீ அது, ஜன தோஷம்னு சொல்லு." அப்பா கட கட வென்று சிரித்தார். "இந்த உற்றார் உறவு, பந்தம் பாசம் எல்லாமே பெரிய தோஷம். அங்கே பாருடீ குருவாயூரப்பன் சிரிக்கிறான். காத்துக் காத்து வளர்த்தயேடா, பாவி, கடைசியிலே அவள் என்ன செய்து விட்டுப் போயிருக்கிறாள் பார்த்தாயடா?' என்கிறான். 'நீ மனுஷன் என்று தலையை இனிமேல் நிமிர்த்த முடியாதுடா, உனக்குத் தங்கையாக ஒருத்தி எமனாகப் பிறந்து விட்டாளேடா' என்று குத்திக் காட்டுகிறான்."

அம்மா உள்ளே போய் விட்டாள்.

நான் மாடிக்கு ஓடினேன்.

அத்தை என்ன செய்து விட்டாளென்று இத்தனை கோபம்?

பாவம், அத்தை! என்னிடம் அவளுக்கு உயிர். எனக்குத் தலை வாரி விடுவதிலிருந்து முகத்துக்குப் பவுடர் பூசி நெற்றிக்கு இட்டு, டிபன் பாக்சை எடுத்து வைத்துச் சீசன் டிக்கெட் இருக்கிறதா என்று சரி பார்த்துப் பேனாவுக்கு மை நிரப்பி... இனிமேல் இதை எல்லாம் யார் எனக்காகச் செய்வார்கள்? ஸ்கூலுக்குப் போகிற எனக்கு வாசல்படியில் நின்று தலைமறைகிற வரையில் 'பை—பை' என்று யார் கையை ஆட்டுவார்கள்?

அத்தை உனக்கு நிரந்தரமாகவே "டாடா" சொல்லிவிட்டேனா?

ஜன்னல் ஓரமாக நின்று தெருவைப் பார்த்தேன்.

இதே தெருவில் நாலு வீடு தாண்டி—மேலண்டை — சிற்றப்பா வேணு இருக்கிறார் இல்லையா—அவரும் கோபத்தில் சளைத்தவர் இல்லை— இந்த வம்சமே துர்வாசர் பரம்பரை— அந்தச் சிற்றப்பா வீட்டுக்குத்தான் அத்தை போய் விட்டாள். வேறே எங்கே அவள் போக முடியும்? இன்னமும் கல்யாணம் ஆகவில்லையே அத்தைக்கு!

அந்தக் கல்யாண விஷயமாகத்தான் ஏதோ தகராறு. என்ன தகராறு என்று தெரியவில்லை.

மொட்டை மாடிக்குப் போனால் சிற்றப்பா வீடு தெரியும். அத்தை ஒரு வேளை மாடிப் பக்கம் வந்தாலும் வருவாள். எனக்கு அவளைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. இருபத்து நான்கு மணி நேரங்கூட ஆகவில்லை. அதற்குள் அவளுடைய முகமே மறந்து விட்டாற் போல் இருக்கிறது.

ஆனால் மொட்டை மாடிக்குப் போகப் பயமாக இருக்கிறது. அப்பா பார்த்து விட்டாரோ, காது நம்முடையது இல்லை.

கீழே சரக், சரக் என்று செருப்புச் சத்தமும், தொடர்ந்து முன்

கதவு திறக்கிறபோது தவருமல் கேட்கிற நாதாங்கி ஓசையும், ஞடையை உதறிப் பிரிப்பதும் கேட்கின்றன. அப்பா கம்பெனிக்குப் புறப்படுகிருர். "நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். அந்த ஓடுகாலி இங்கே நுழையக் கூடாது தெரிகிறதா?" அப்பா எச்சரித்தவாறே தெருவில் இறங்குகிருர்.

எதிர் வீட்டுச் சாமா கண்ணை ஒரு சிமிட்டுச் சிமிட்டி உட்புறம் திரும்பி, கதவருகே நின்றிருந்த தம் சகதர்மிணியிடம், "நான் சொன்னேஞ இல்லையா? நேத்திக்கே புகைந்து கொண்டிருந்தது. இன்றைக்கு வெடித்து விட்டது. அந்தப் பொண் வைதேகி இப்படிச் செய்யும்னு எனக்கு அப்பவே தெரியும்!" என்கிருர்.

நான் பல்லைக் கடித்தேன்.

"தைரியம் இருந்தால் அப்பாவுக்கு நேராக இந்த வார்த்தையைச் சொல்வது தானே? சொன்ஞல் முகரக்கட்டை எல்லாம் பிய்ந்து போகாதா? அவர் பத்து வீடு தாண்டின பிறகு நமட்டுச் சிரிப்பும் நரித்தனமும் எதற்காக?"

நான் 'வெவ்வெவ்வே' என்று அவரைப் பார்த்து அழகு காட்டிவிட்டு மொட்டை மாடிக்கு ஓடிவிட்டேன்.

சிற்றப்பா வீட்டுப் பின் பக்கம் கிணற்றடி, மாட்டுக் கொட்டில், துவைக்கிற கல்; குறுக்கும் நெடுக்குமாய்த் துணிகள் உலர்த்தும் கொடிகள் எல்லாம் தெரிய, அத்தை மட்டும் கண்ணில் படவே இல்லை. கீழே வந்தேன்.

"ஏண்டா குட்டி போட்ட பூனை மாதிரி குறுக்கும் நெடுக்கும் சுத்தறே? பாடத்தை எடுத்துப் படியேன்" என்ருள் அம்மா.

"மாடியிலே இத்தனை நாழி படித்துக் கொண்டுதான் இருந்தேன்" என்று பொய் சொன்னேன்.

"சின்னவனுக்குக் கணக்குப் புரியல்லையாம். சொல்லிக் கொடேன்."

"அவன் ஒண்ணும் எனக்குச் சொல்லித்தர வேண்டாம். கணக்கெல்லாம் தப்புத் தப்பாய்ப் போடருன்" என்ருன் பரத்.

ஓங்கி ஓர் அறை விடலாமா என்றிருந்தது எனக்கு.

"நான் அத்தையிடம் போய்க் கணக்குக் கத்துக்கறேன்" என்ருன் அவன் தொடர்ந்து.

அம்மா கரண்டியைக் காட்டிஞள். "சூடு இழுத்துப் பிடுவேன் தெரியுமா? இதென்ன பிடிவாதம் உனக்கு? மூளைத்து மூணு இலை விடல்லே, அதுக்குள்ளே பெரியவா பேச்சை மீறலாமா? அப்பா என்ன சொல்லியிருக்கார் ஞாபகமில்லே?"

"இந்தக் கணக்கு எனக்குப் புரியல்லியே?" என்று அவன் கண்ணைக் கசக்கிஞன். "லாப சத விதம் கேட்கிருன். ஆஞ எப்படிப் போட்டுப் பார்த்தாலும் எனக்கு நஷ்டந்தான் வரது."

அம்மா கரண்டியைத் தூர எறிந்து ஓடி வந்து பரத்தை வாரி அணைத்துக் கொண்டு கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள். "பரத்துக் கண்ணு! நஷ்டமாவாட வறது? அது இந்த வீட்டோட ராசிடா! எப்படிக் கணக்குப் போட்டாலும் யாருக்கு எதைச் செய்தாலும் நஷ்டப்பட்டே தீரணும்னு பகவான் நம் தலையிலே எழுதி வைத்து விட்டான்டா! ஐயோ, எனக்குத் தலை சுத்துகிறதே! நான் என்னடா செய்வேன்?"

அம்மா அப்படி அழுது நான் பார்த்ததில்லை.

"அழாதேம்மா, அழாதேம்மா!"

சுவரோடு சாய்ந்து கால்களை நீட்டிக் கண்களை மூடி அம்மா தன்னை நிதானித்துக்கொள்ளச் சிரமப் பட்டாள்.

டாக்டரைக் கூட்டி வரலாமா என்று தோன்றிற்று. வாசலுக்கு வந்து தெருவில் இறங்கினேன். சொல்லி வைத்தாற் போல் சுரேஷின் ஸ்கூட்டர் தடதடத்துக் கொண்டு என்னைத் துரத்திப் பிடிக்காத குறையாக நின்றது. "என்னடா, சுண்டு? எங்கே கிளம்பினே?" என்று கேட்டான் சுரேஷ்.

நான் அவனைப் பார்க்க விரும்பவில்லை. இத்தனை களேபரத்துக்கும் மூல காரணம் அவன்தான் என்பது எனக்கு அரைகுறையாகப் புரிந்தது. வீட்டுக்குள் திரும்பவும் ஓடி விடலாமா என்று யோசித்தேன்.

"ஏண்டா பேயறைந்த மாதிரி நிற்கறே?"

"அதைப் பற்றி உனக்கென்ன?" என்றேன் கோபமாக.

அவன் சிரித்தான். "என் மேலே கோபமாடா சுண்டு?" என்று கேட்டான்.

"ஆமாம். கோபந்தான். நீ செய்திருக்கிற காரியத்துக்குக் கோபம் வராமல் இருக்குமா?"

"ரொம்பச் சரி. வீட்டுக்குள் போய் நாம் பேசலாம் இல்லையா?"

"ஊஹூம். அப்பாவுக்குத் தெரிந்தால் என் முதுகுத் தோலை உரித்துவிடுவார்."

"அப்பாவுக்குத் தெரிந்தால் தானே?"

"அவருக்குத் தெரியாமல் போகாது சுரேஷ். நீ என்னை வம்பிலே இழுத்து விட்டு விடாதே. எனக்குப் பயமாக இருக்கிறது. அத்தை சித்தப்பா வீட்டுக்குப் போய் விட்டாள்."

"எனக்கு எல்லாம் தெரியும்."

"தெரியுமா? எப்படி?"

"உன் அத்தைதான் சொன்ஞள்."

"நீ அத்தையைப் பார்த்தாயா?"

"உம்..."

"அத்தை சௌக்கியமாக இருக்கிருளா?"

"அதை ஏன் கேட்கிருய்? அழுது கொண்டு இருக்கிருள். அழுது அழுது கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கிறது. டாக்டரைக் கூட்டி வரலாமா என்று பார்க்கிறேன்."

"நானும் டாக்டரை அழைத்துக் கொண்டு வரத்தான் புறப்பட்டேன், சுரேஷ். இங்கே அம்மா அழுது அழுது முகமே வீங்கிப் போய்விட்டது."

சுரேஷின் கண்கள் கலங்கின. கைக் குட்டையால் மூக்கைச் சிந்திக் கொண்டான்.

"சுரேஷ், நானும் உன்னேட ஸ்கூட்டரிலே டாக்டர் வீட்டுக்கு வரட்டுமா?"

"ஊஹூம். வேண்டாம். எங்கள் விவகாரம் எங்களோட இருக்கட்டும்.

நீ இதிலே மாட்டிக் கொள்ளாதே. சுண்டு என்னைப் பார்த்ததைக் கூட யாரிடமும் சொல்லாதே. நான் வரேன்.''

சுரேஷ் ஸ்கூட்டரை ஓங்கி உதைத்து எடுத்த எடுப்பிலே அறுபது கிலோ மீட்டர் வேகத்தில் பறந்து விட்டான்.

டாக்டர் விட்டுக்கு வந்ததும் நின்றேன். ''சுந்தரராஜன், வா உள்ளே, என்ன விஷயம்?'' டாக்டர் ஒருவர் தான் முழுப் பெயரையும் சொல்லி என்னை அழைக்கிற ஒரே நபர்.

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லை, டாக்டர்.''

''அப்படியா? உனக்குப் பரீட்சையெல்லாம் முடிந்துவிட்டதா?''

''இன்னும் இல்லை. அம்மாவுக்கு முகமெல்லாம் வீங்கியிருக்கு டாக்டர், வந்து பாருங்க.''

''பார்க்கிறேன். உனக்கு வாய்பாடு தெரியுமா? எத்தனை மில்லி மீட்டர் ஒரு ஹெக்டா மீட்டர்? சொல், பார்க்கலாம்.''

எனக்குக் கோபம் கோபமாக வந்தது. அதே சமயம் சிரிக்க வேண்டும் போலவும் இருந்தது. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று நான் துடிப்பது தெரியாமல் வாய்பாடு கேட்கிற இந்த டாக்டரைப் பற்றி என்ன சொல்ல?

அவர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டார்.

''டாக்டர், நீங்கள் உடனே வந்து பாருங்கள் அம்மாவை.''

அவர் சிரித்தார்: ''பயப்படாதே சுந்தரராஜன். உன் அம்மாவுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. எத்தனை மில்லிமீட்டர் ஒரு ஹெக்டா மீட்டர்? அதைச் சொல்லு. உன் அத்தை வைதேகி எல்லாப் பாடமும் நன்றாகக் கற்றுத் தந்திருக்கிறாள் இல்லையா?'' என்றார்.

''டாக்டர், அத்தை இப்போது எங்கள் வீட்டில் இல்லை.''

''இல்லாவிட்டால் என்ன? என்னிக்குமே உங்கள் வீட்டில் அத்தை இருக்கமுடியுமா? கல்யாணம் கட்டிக் கொடுத்தானதும் வீட்டை விட்டுப் போகப் போறவள்தானே?''

''போங்க. டாக்டர் உங்களுக்கு ஒண்ணுமே தெரியல்லே. அப்பாவுக்கும் அத்தைக்கும் சண்டை.''





ஆசியாவில் பெரிய அங்கம்
அது தரத்தில் சிறந்த தங்கம்
மாசில்லா வீரச் ''சிங்கம்''
மற்றவை இதன்முன் மங்கும்

வீசி ஒளியது பொங்கும்
வெடிப்பதில் இல்லை பங்கம்
காசினியோர் மனதில் தங்கும்
கண்டதில்லை இதற்கிணை எங்கும்?

''அதுதான் சரி. சண்டைதான் போட வேண்டும்.''

''டாக்டர்!''

''இந்தக் காலத்துப் பெண்கள் கட்டுப் பெட்டிகளாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. உன் அத்தை புரட்சி செய்கிருள். என்னைக் கேட்டால் அவள் செய்வது தான் சரி என்பேன்.''

''அப்படின்னு அப்பா சொல்வது சரியில்லே என்கிறீர்களா?''

''அப்பா சொல்றதும் சரிதான்.''

எனக்குச் சிரிப்பு வந்தது. ''டாக்டர், நீங்க சொல்றதைப் பார்த்தால் பரத் கணக்குப் போடற மாதிரி இருக்கு. லாப சதவீதம் கேட்டால் அவனுக்கு நஷ்டம் சதவீதந்தான் விடை வருகிறதாம். ஒரே கணக்குக்கு இரண்டு விடை எப்படி வரும் டாக்டர்?'' என்றேன்.

டாக்டர் குலுங்கக் குலுங்கச் சிரித்துவிட்டு சிகரெட்டை அணைத்து ட்ரேயில் போட்டார். ''உனக்குத் தெரியாது, சுந்தரராஜன். சில கணக்குகள் அப்படித்தான். ஒருத்தருக்கு நஷ்டம் ஏற்பட்டால்தானே இன்னெருத்தருக்கு லாபம் கிட்ட முடியும்? உங்க வீட்டுக்கு நான் வரேன்னு வைத்துக்கொள். நீங்க தர பீஸ் உங்களுக்கு நஷ்டம். எனக்கு லாபம்.''

இது என்ன தத்துவமோ, எனக்கு விளங்கவில்லை.

''சுந்தரராஜன், கவலைப்படாதே! நீ வீட்டுக்குப் போ. நான் வந்து உன் அம்மாவைப் பார்க்கிறேன்'' என்றார் அவர் இறுதியில்.

''கட்டாயம் வாருங்கள்'' என்று கூறித் திரும்பினேன்.

திரும்பும்போது மனசு இலேசாகி விட்டாற் போல் இருந்தது.

அதற்கேற்றாற் போல் வீட்டுக்கு வந்து பார்த்தால், அம்மா முகத்தில் சிரிப்பு வழிய, பக்கத்து வீட்டு மாமியுடன் அரட்டை அடித்துக் கொண்டு கூடத்தில் அப்பளம் இட்டுக் கொண்டிருந்தாள்.

பரத் என்னை ஜாடை காட்டி மாடிப் பக்கம் அழைத்துப் போய், ''உனக்கு விஷயம் தெரியுமா, சுண்டு?'' என்றாள்.

''என்ன விஷயம்?''

''அத்தைக்குக் கல்யாணம் ஆகப் போகிறது'' என்றான் சுண்டு.

''அப்படியா? அப்படியா?''

''வருகிற வெள்ளிக்கிழமை, குருவாயூரில்.''

''உனக்கு யார் சொன்னு?''

''அத்தையே சொன்னுள்.''

''நீ அத்தையைப் பார்த்தியா?''

''ஆமாம். சுண்டு அப்பா கிட்டே சொல்லி விடாதே! அத்தையைப் பார்த்தால் பாவமா இருக்கு. கல்யாணத்துக்கு நாம் போக முடியுமா சுண்டு? அப்பா கோவமா இருக்கிருரே!''

நான் தலையை நிமிர்த்தினேன். ''பரத், நாம் குருவாயூர் போகத் தான் போகிறோம். அத்தை கல்யாணம் நாம் போகாமல் எப்படிடா நடக்கும்? அப்பாவிடம் அழுது அடம் பிடித்து எப்படியாவது பர்மிஷன் வாங்கி விடணும்.'' இதற்கு மேல் என்னால் பேசமுடியவில்லை. அப்பாவிடம் பர்மிஷன் வாங்குவதாவது! நடக்கிற காரியமா அது?

பரத்துக்கு வாயெல்லாம் பல்!

''ஹைய்யா ஹைய்யா! குருவாயூர் போகப் போகிறோம். அத்தை கல்யாணத்துக்குப் போகப் போகிறோம்!'' என்று குதித்தான்.

பளீரென்று ஓர் அறை விழுந்தது முதுகில். திரும்பிப் பார்த்தால் அப்பா! ''இல்லேப்பா...இல்லேப்பா தெரியாமல் சொல்லிப்பிட்டேன்.'' பரத் கெஞ்சினுன்.

அடுத்து என் முதுகில் ஓர் அறை. ''இல்லேப்பா, இல்லேப்பா.''

''ஓடுங்கோ, என் கண் முன்னுலிருந்து. குதியாட்டமா போடுகிறீர்கள்? கல்யாணத்துக்குப் போகிருர்களாமே, கல்யாணத்துக்கு! யாருக்குடா கல்யாணம்? அடியே, எல்லாம் நீ முடுக்கிவிட்டதுதானு? எல்லாருமாகக் கூடிக்கொண்டு எனக்கு எதிராச் சதியா செய்கிறீர்கள்! போங்கோ, எல்லாரும் போங்கோ. அதுக்கு முன்னுலே என்னை அனுப்பி

விட்டுப் போங்கோ. நான் உயிரோடு இருக்கும்போது அவளுடைய கல்யாணத்துக்குப் போகிறதென்பது நடக்காது.''

அப்பா படபடத்துச் சீறி ஓய்ந்த போது அம்மா ஓடிவந்து அவரைக் கைத்தாங்கலாகச் சாய்வு நாற்காலிக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. மெல்லிய துண்டால் அவருடைய முகத்தைத் துடைத்து விட்டு, மின்விசிறியைப் போட்டாள். அப்பா தூங்கின மாதிரி, மயக்க நிலையில் சாய்ந்திருந்தார்.

வாசற்பக்கம் நிழலாடிற்று. அத்தையும் வேணுவும் சிற்றப்பாவும் வந்தார்கள்.

கதவைச் சாத்தியவாறே அம்மா வாசற்புறம் போய், அவர்களை ஜாடை காட்டித் திண்ணையில் மறைவாக இருக்கச் சொன்னுள்.

''மதனி, நீங்கள்தான் அவர் கோபத்தை ஆற்றி, எப்படியாவது அண்ணு குருவாயூர் வரும்படியாகச் செய்யணும். அவர் இல்லாமல் கல்யாணம் எப்படி நடக்கும், மதனி?''

''நான் என்ன செய்வேன். அவர் கோபம் உங்களுக்குத் தெரியாதா?''

''மதனி, நான் செய்வது தப்பாக இருந்தால் குருவாயூரப்பன் என்னைத் தண்டிக்கட்டும். என் அண்ணுவுக்கு எதுவும் ஏற்படக் கூடாது. அவர் கோபக்காரரே தவிர, அவரைப் போல் குணமும் படைத்தவர் யார் இருக்கா? ஒரு வகையிலே எனக்கு இது சோதனை போலிருக்கு. நான் எனக்குன்னு ஒரு வாழ்க்கைத் துணையைத் தைரியமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேனு, கடைசி வரையிலே தளராமல் இருக்கிறேனு என்று குருவாயூரப்பன் பரீட்சை செய்கிருன், மதனி.'' அத்தை விசும்பினுள்.

''யார் அங்கே?'' உள்ளே சிங்கம் உறுமிற்று.

நான் பரத்தின் கையைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டேன்.

நல்லவேளை. டாக்டரின் கார் தடதடத்துக்கொண்டு வந்தது, அந்தச் சமயம். ''வாங்கோ'' என்ருள் அம்மா.

டாக்டர் இங்கிதம் தெரிந்தவர். திண்ணையில் பதுங்கியிருக்கும் சிற்றப்பாவையும், வேணுவையும் பார்த்து, ''நீங்கள் வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போய்விடுங்கள். நான் சுந்தரராஜனிடம் சொல்லி அனுப்புகிறேன். அப்போது வரலாம்'' என்றவாறே நுழைந்தார். ''என்ன, உடம்பு என்ன செய்யறது? சுந்தரராஜன், நான் கேட்ட வாய்பாடு ரெடியா? கதவை ஏன் சாத்தி வைத்திருக்கீங்க? எதுக்காக மனசை அலட்டிக்கிறீங்க? உங்கள் உடம்புக்குப் படபடப்பே கூடாது என்று சொல்லியிருக்கிறேனு, இல்லையா?'' டாக்டர் அப்பாவின் அருகில் அமர்ந்து உரிமையுடன் கடிந்துகொண்டார்.

''உடன்பிறந்தே கொல்கிறதே, டாக்டர்!'' என்ருர் அப்பா.

''அந்த வியாதிக்கும் மருந்து தரத்தான் போகிறேன்'' என்ருர் டாக்டர் அழுத்தந் திருத்தமாக.

''அது உங்களால் ஆகாது. இந்த வீண்முயற்சி எதற்காக டாக்டர்?''

''இதோ பாருங்க. தங்கச்சி கல்யாணத்துக்கு நீங்க வரணும்னு வேணுவும் வைதேகியும் வேண்டிக்கிருங்க.''

அப்பா சிரித்தார். ''என் அப்பன் எனக்கு உத்தரவு கொடுத்தால் தானே நான் அந்தக் கல்யாணத்துக்குப் போகமுடியும்?'' என்ருர்.

''திருவுளச் சீட்டு போட்டுப் பார்த்துவிடுவோம்'' என்ருர் டாக்டர், சமயோசிதமாக.

''என் அப்பன் உத்தரவு கொடுக்க மாட்டான்.''

''அதைத்தான் நானும் சொல்கிறேன். உத்தரவு கிடைக்கவில்லை, அதனுல்தான் வரவில்லை என்று சொல்லிவிடலாம், பாருங்கள்.''

அப்பா பேசாதிருந்தார். டாக்டர் என்னைப் பார்த்து, 'சுந்தரராஜன், இரண்டு சீட்டு எழுதிச் சுருட்டிக் கொண்டு வா!'' என்ருர். கரும்பு தின்னக் கூலியா? ஓடினேன். பரத் சும்மா இல்லாமல் அவனும் இரண்டு சீட்டு எழுதிச் சுருட்டிக்கொண்டு

வந்துவிட்டான். இவனை யார் எழுதிக்கொண்டு வரச் சொன்னது. முந்திரிக்கொட்டை மாதிரி? நான் எவ்வளவு சாமர்த்தியமாக இரண்டு சீட்டிலுமே, 'குருவாயூர் போகணும்' என்று எழுதிச் சுருட்டி வைத்திருக்கிறேன்!'

''அந்தச் சீட்டுகளை இப்படிக் கொண்டுவாங்கடா'' என்ருர் அப்பா.

எனக்கு ரத்தம் உறைந்துவிட்டது. பரத் குடுகுடுவென்று முன்னுல் ஓடிஞன். நான் தயங்கித் தயங்கிப் பின்னுல் போனேன்.

''இரண்டு பேருமே எழுதிட்டீங்களா? சரி. அப்படீன்னு உன்னுடையதிலே ஒரு சீட்டு, அவனுடையதிலே ஒரு சீட்டு எடுத்து, அந்த இரண்டையும் போட்டுப் பார்ப்போம்'' என்ருர் டாக்டர்.

''ஊஹூம். அந்தச் சீட்டுக்களை என்னிடம் கொடுங்கள்'' என்ருர் அப்பா.

இறக்கை முளைத்துப் பறந்துவிடமாட்டோமா என்றிருந்தது எனக்கு. முதுகுத் தோல் உரியப் போகிறது. நடுங்கிக்கொண்டே நீட்டினேன்.

''நியாயமாக இந்தத் திருவுள்ளச் சீட்டை நாஞே நீங்களோ போடக்கூடாது, டாக்டர். போடவேண்டியவள் வைதேகி'' என்ருர் அப்பா. ''அவள் செய்திருக்கிற காரியம் என் புத்திக்கு ஏற்றதாக இல்லை.''

டாக்டர் நெளிந்தார். ''ஊஹூம். அவள் ஏற்கனவே தீர்மானித்துவிட்ட விஷயத்துக்குச் சீட்டு எதற்கு?'' என்ருர்.

''ஒஹோ! அப்படியாஞல் ஏற்கனவே நான் தீர்மானித்துவிட்டதற்கு மட்டும் சீட்டு எதற்கு?''

''அதல்ல. என்னைப் பெரிய தர்ம சங்கடத்தில் நிறுத்திவிட்டீர்கள். நீங்கள் ஜயித்துவிட்டீர்கள்.''

அப்பா சிரித்தார். எங்கள் கண் முன்னுலேயே சீட்டுக்களைக் கிழித்துப் போட்டார். ''பயப்படாதீங்க, டாக்டர். நான் திருவுள்ளச் சீட்டுப் போட்டுப் பார்த்த பிறகுதான் இந்தச் சீட்டுக்களைக் கிழித்து எறிகிறேன். ஆமாம். என் மனசுக்குள்ளேயே அதை நடத்திவிட்டேன், டாக்டர். நான் வைதேகியை ஆசீர்வதிக்கப் போகிறேன்'' என்ருர்.

இதைக் கேட்டதும் நான் தாவிக் குதித்தே விட்டேன். அம்மா விசும்பிஞள். பரத் ஓடிஞன், வேணு, சிற்றப்பாவைக் கூட்டிவர.

''திடீரென்று என் மனசு எப்படி மாறித்து என்று சொல்லட்டுமா? ஒரு கணத்திலே அந்த வெளிச்சம் எப்படி வந்தது என்பதைச் சொல்றது கடினந்தான். அப்பா கண்களை மூடிக்கொண்டார். தமக்குள் சற்றுமுன் திருவுள்ளச் சீட்டு நடந்த அநுபவத்தை அவர் ரசிக்கிருற்போல் இருந்தது. ''என் அப்பன் சந்நிதியிலேயே வைதேகிக்குக் கல்யாணம் ஏற்பாடாகியிருக்கிறது. அவனுடைய திருவுள்ளம் அது என்றும் எனக்கு ஏன் தெரியாமல் போயிற்று? மறுபடியும் அவனிடம் திருவுள்ளச் சீட்டுப் போட்டுக் கேட்கிற மமதை வரலாமோ? ஆயிரம் சீட்டுப் போட்டாலும், பதில் ஒன்றுதாண்டா, முட்டாள் என்று அவன் சொல்லாமற் சொல்கிருன். இல்லையா? தவிரவும், டாக்டர், எங்கள் குருவாயூரப்பன் இருக்கிருனே, அவன் மாயக்காரன். அருள் வன்மையிஞல் அவன் மாத்திரம் பொய்களை மலை, மலையாய் உரைப்பான்.''

அப்பாவின் கண்கள் குளமாகின்றன. அத்தையும் வேணுவும் சிற்றப்பாவும் ஓடி வருகிருர்கள்.

''அசடுகளா, நான் வராமல் கல்யாணம் நடந்துடுமோ? போங்கடா! வைதேகி, நீ கெட்டிக்காரி,'' என்கிருர் அப்பா. பிறகு டாக்டரைக் காட்டி, ''எல்லாம் இவரால் வந்தது. திருவுள்ளச் சீட்டு போட்டே கேஸைக் குணப்படுத்திடறேன் என்கிருர்,'' என்று சிரித்தார்.

''டாக்டர், நான் வாய்பாடு சொல்லட்டுமா?'' என்று சீண்டினேன்.

''அது எதற்குடா, சுண்டு? உன் அப்பாவிடத்திலே மனப்பாடு கத்துக்கோ'' என்று என் காதைப் பற்றிஞர் அவர்.

''சுண்டுவா?'' அழகாகச் சுந்தரராஜன் என்றுகூப்பிடுவாரே டாக்டர்!

''சரிதான், இங்கே எல்லாமே தலைகீழாக அல்லவா மாறியிருக்கிறது'' என்ருர். ❋

ஆயுட்காலம் பூராவும் பலன் தரக்கூடிய

ஸ்பெஷல் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தங்க ரக்ஷை

பூஜா சிலவும் இதாமும் ரூ. 1111.00

ரக்ஷை வேண்டியவர்கள் அவர்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 1111.00 அனுப்பவும். ¼ மண்டலம் பூஜை செய்து அனுப்பப்படும். உங்களுடைய ஜாதக பலன் எதுவாயிருந்தாலும் சரி, அதற்கும் அப்பாற்பட்ட தெய்விக சக்திவாய்ந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி கடாக்ஷத்தை அளிக்கவல்லது. உங்கள் வாழ்க்கையில் நிறைவேற எல்லா நன்மைகளையும், அதிசயிக்கத்தக்க வகையில் ஆயுட்காலம் பூராவிற்கும் பலன் தரும் அபூர்வ சக்திவாய்ந்த தெய்விக ரக்ஷை.

குறிப்பு: 1. ரக்ஷை வேண்டியவர்கள் பூரா சிலவையும் முன்னதாக அனுப்பவும். V.P. இல்லை. 2. ரக்ஷை ஆர்டர் கிடைத்த 12-வது நாள் ரக்ஷை இன்ஷியூர் தபால் மூலம் அனுப்பப்படும். 3. எமது ஸ்தாபனம் இந்தியாவில் 1-12-1937 முதல் இயங்கிவருகிறது. எமது ஸ்தாபனத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி ரக்ஷை தவிர வேறு வகை ரக்ஷைகள் தயார் செய்வதில்லை. 4. சாஸ்திர நம்பிக்கையுள்ளவர்கள் மட்டும் இதில் கலந்துகொள்ளவும். ரக்ஷைக்காக அனுப்பும் சிலவைத் திரும்பப் பெறச் சட்டபூர்வமாகவோ, இதர ரூபமாகவோ இடமில்லை. இதற்கு சம்மதமுள்ளவர்கள்தாம் வாங்கிக்கொள்ளலாம். இப்புனிதத் தெய்விக சம்பந்தமான ரக்ஷை தெய்விக சன்னிதியில் தயார் செய்வது. ஆயிரமாயிரம் நேயர்கள் ரக்ஷை அணிந்து, பலனடைந்து இருக்கிருர்கள். வெளிநாட்டு நேயர்கள் 74 பவுன் மதிப்புக்கு B.P.O. வாங்கி அனுப்பவும்.

ஜோஸ்யர்: பாரத்வாஜ ஸ்ரீ ஜெயராம அய்யர்
கோட்டமருதூர்
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்
அரகண்டநல்லூர்.

Excellent quality. Sensible prices.
S.Kumars bring you the best of both worlds.
It's a rare combination. Quality plus economy. Yes, S. Kumars have been bringing it to you for years. Ensuring excellent fabrics while keeping costs low. Our dealers too, believe in our code of ethics. So the next time you shop, look for the S. Kumars' symbol and our Price Code. And get the best of both worlds!
S. Kumars®
TERENE Suitings, Shirtings, Sarees and 'Terene' worsted Suitings.
"Niranjan", 99, Marine Drive, Bombay 400 002.
The highest possible quality. At the lowest possible price.

எமது மனமார்ந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

எண்ணற்ற வண்ணங்கள்! எழில்மிக்க வேலைப்பாடு!!
மகிழ்வூட்டும் புகழ்பெற்ற

நல்லியின் பட்டு சேலைகள்

கலியாணம், பண்டிகைகள் மற்றும் விசேஷ
காலங்களுக்கும் உல்லாச வேளைக்கும்
ஒப்புயர்வற்றது!

இவ்வாண்டு தீபாவளிக்குப் பேராதரவு தந்த எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.

மேலும் தங்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய வாய்ப்பளிக்க வேண்டுகிறோம்.

நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க்

தி.நகர் (போன்: 444115 & 445657) சென்னை-600017

Our table fan has only one serious rival.
The ceiling Rallifan.
Rallifan Delite
* Special blade contour for wider air distribution
* Efficient, silent performance at 3 working speeds
* Rust-proof plated guard
* A choice of 5 colours
Rallifan Superstar
* Sleek, elegant design results in silent, wobble-free operation
* Unique blade design to spread a wider cone of even breeze
* Accurately matched blades and double ball bearings for longer motor life
* Stove enamel finish keeps it looking new—for years!
Backed by Rallis reliable after sales service.
Rallifan
stands the test of time—beautifully
ULKA-RF-44.

everest/80/SH/431-tm

இரண்டாவது முறையும் எண்ணிப் பார்த்தாள், ருசிமிக்க பாயசத்தை இன்னொரு கரண்டி விட்டுக் கொள்வது போல்.

சரியாக இருபது ரூபாய், அவள் சேர்த்தது, கால் ரூபாய்களாய், பத்துக் காசுகளாய்.

ருசிமிக்க பாயசத்தை அடிக்கடி சுவைக்கும்படியான வாழ்க்கை அல்ல அவளுடையது. அதனாலேயே இந்த இருபது ரூபாய் அதிகமாக இனித்தது.

இம்மாதம் பத்தாந் தேதி சேகருக்குப் பிறந்தநாள் வருகிறதென்று நான்கு மாதங்களுக்கு முன்பு தற்செயலாக அறிந்ததிலிருந்து வாணியின் மனத்தில் அந்தப் பொறி விழுந்துவிட்டது. இமை நேரத்தில் பொறி, ஜ்வாலையாக டெர்லின் சட்டைகளும் பாக்கெட் டிரான்ஸிஸ்டர்களும் எச். எம். டி. கடிகாரங்களுமாய் அவள் கற்பனையை மூச்சு முட்ட நிறைத்துவிட்டன.

பூமிக்கு வந்தாள்.

அவ்வளவு பெரிய அளவில் எதுவும் செய்வது அவள் சக்திக்கு அப்பாற்பட்டது. மிஞ்சி மிஞ்சி எவ்வளவு சேர்த்துவிட முடியும், அவளால்? ஆனால், பொருளின் விலையா முக்கியம்? தன் நன்றி வெளியீட்டின் ஒரு சிறு அடையாளம் அமைந்தால் போதும்.

நன்றி! அடேயப்பா, எவ்வளவுக்கு!

''என்ன வாணி, ஒரே குஷியாயிருக்கே இன்னிக்கு?' என்று வியந்தான் சாமிநாதன்.

அவனுக்குச் சூடாய்ப் போன் விட்டா எடுத்து வந்தவாறே அவள், ''தெரியுங்களா? நம்ம சேகர் பயலுக்கு வர்ற பத்தாந் தேதி பிறந்த நாள்'' என்றாள்.

''யாருக்கு? ஓ. அம்புஜம்மா புள்ளைக்கா? எத்தனை வயசு நெறையுது? பதினஞ்சா?''

''என்னங்க, ஒரேமுட்டா ஏத்திட்டிங்க? சின்னப் பையனில்லே அது? பன்னெண்டுதான் முடியப் போகுது.''

''பார்க்கப் பெரியவனாட்டம் இருக்கவே சொன்னேன்'' என்று சாமிநாதன் பானத்தை ஊதிவிட்டு ஒரு வாய் அருந்தினான்.

''அதுக்கென்ன, ஒசரமும் வாளிப்புமா நல்ல வளர்த்தி; வசதியான குடும்பங்கள்ளே ஊட்டத்துக்கு என்ன குறைச்சல்?''

சாமிநாதன் நாவில் போர்ன் விட்டா திடீரென்று கசந்தது, தம்ளரைக் கீழே வைத்தான். சிறிது நேரம் இருவருமே பேசவில்லை.

வாணி கணவனை ஏறிட்டுப் பார்த்தாள். இன்று இவன் உயிரோடு இருக்கிறான். பழைய ஆரோக்கியம் இன்னும் முழுமையாய்த் திரும்பவில்லை; எனினும் திடமாய்த்தான் இருக்கிறான். வேலைக்கும் போகிறான்.

'நன்றியம்மா!'

அடுக்[களை]யிலிருந்த அவள் பாத்திரம் பண்டங்களும் ஒரே ஒரு ஜரிகைக் கரைக் கல்யாணப் புடவையும் மீட்கப்பட்டு வீடு திரும்பி விட்டன.

'நன்றிங்க.'

தாவணிக்கு வழியில்லாமல் கூசிக் குனிந்து நடந்த அவள் மகளுக்கு மூன்று வாயில் தாவணிகளும் பள்ளியில் படிக்கும் குட்டிப் பையனுக்குப் பாட புத்தகங்களும் கிடைத்திருக்கின்றன.

இன்னும் அவ்வப்போது பழங்கள் (எதுக்குங்க, நன்றிங்க!), கறிகாய்கள் (என்னங்க இது? நன்றிங்க!), ஒரு நாள் கிழமை என்றால் பணியாரங்கள் (வேணுங்க, அப்புறம் உங்க இஷ்டம், நன்றிங்க!), ஏன்? மாதம் ஒரு டப்பா வீதம் இந்தப் போர்ன்விட்டாகூடத்தான்! (ஐயோ! வேணுங்களே, வேணுங்க! இப்படி வற்புறுத்தறீங்களே! நன்றிங்க.)

எல்லாம் வசதி படைத்த குடும்பத்தின் தானம். தானம் என்றோ உதவி என்றோ நினைத்தா அம்புஜம் கொடுத்தாள், கொடுக்கிறாள்?

அவளுடைய இயல்பான உதார குணத்தில் உதவி என்பது பெயரை இழந்துவிடுகிறது.

''ஏன்டி சங்கோஜப்படறே? ஏதோ, இன்ன தேதியில் என்கிட்ட இருக்கு; கொடுக்கிறேன். இதையெல்லாம் ஏன் பெரிசு பண்றே? மனுஷான்னு ஒருத்தொருக்கொருத்தர் இதுகூடவா செய்யப்படாது?''

யாருக்கு மனம் வரும் அப்படிச் சொல்ல?

அம்புஜம் யார்? இவள் யார்? விதவையான அந்தப் பணக்கார மூதாட்டியோடு வாணிக்கு முதலில் மேற்போக்கான பரிசயந்தான். எனினும் சாமிநாதன் திடீரென்று காசநோயில் படுத்தபோது, அந்தக் குடும்பம் சிதைந்துபோய் விடாமல் இருக்கக் கைக்கொடுத்தவள் அம்புஜம். சிகிச்சைக்கு உதவி செய்ய நெடிய நோய் காரணமாய் அவனுக்கு வேலை போய்விடாமல் தன் சகோதரன் ஒருவனின் செல்வாக்கு மூலம் ஏற்பாடு செய்து, வாணியும் குழந்தைகளும் வாழப் பொருளுதவி தந்து ஆறுதல் கூறி அரவணைத்து, இன்றளவும் தொடர்ந்து பல வகைகளில் பராமரித்து வருகிறாள். வசதியும் வாய்ப்பும் இருந்து விட்டால் மட்டும் போதுமா? மனசு வேண்டாமா? அம்புஜத்தின் செல்வம் அவளுக்கு வெளியில் மட்டும் இல்லாமல் உள்ளேயும் அல்லவா இருந்தது? அதன் விளைவாக.....

'நன்றிங்க! நன்றிங்க!'

ஆனால் கடவுளே, நன்றிக்குத்தான் எத்தனை கனம்! அந்தக் கனத்தை ஓரளவுக்காவது குறைக்கப் போவது இந்த இருபது ரூபாய்.

''ஆறிடப் போகுது, எடுத்துக் குடிச்சிடுங்க'' என்றாள் வாணி.

சாமிநாதன் ஒரு பெருமூச்சுடன் தம்ளரை மறுபடியும் கையில் எடுத்துக்கொண்டான். இது போன்விடாவாக இல்லாமல் தன்னுடைய பழைய கழுநீர்க் காபியாய் இருந்தால் இன்னும் இனிமையாகத் தொண்டையில் இறங்கும்போல் கணநேரத்துக்குத் தோன்றியது.

''பிறந்த நாளுக்காக ஏதானும் பரிசு அந்தப் பையனுக்கு வாங்கிக் குடுக்கலாமுன்னு இருக்கேங்க.''

அவன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான். கண்களில் ஓர் ஆவல் பளீரிட்டு உடனேயே அவிந்தது.

''அதுக்குப் பணம்?''

''நான் நாலு மாசமாய்க் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்து வச்சிருக்கேன்.'' குரல் நின்று, ஒரு மந்திரவாதி காட்டும் மாயாஜாலம் போல் குபீரென்று வெளிப்பட்டது; ''இருபது ரூபா!''

அவன் தம்ளரை மீண்டும் கீழே வைத்தான், பரபரப்பும் களிப்பும் நிறைந்த கண்களால் மனைவியைப் பார்த்தான். வரவுக்கும் செலவுக்குமாய்ப் போராடும் வாழ்க்கை நிலையில் அம்புஜம் அம்மாளின் தயவால் வெள்ளத்தில் முழுகிவிடாமல் எதிர் நீச்சல் போட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் இவள் இருபது ரூபாயா சேர்த்திருக்கிறாள்? ஒன்றல்ல, இரண்டல்ல, முழுசாய் இருபது ரூபாய்!

அவன் உதடுகள் அசைந்தன. பேச முடியவில்லை. எழுந்து வந்து அவளை அணைத்துக் கொண்டான். பிறகு போன்விட்டாவைக் குடித்து முடித்தான். இப்போது அது அவ்வளவாகக் கசக்கவில்லை.

''என்ன வாங்கலாம்?''

''நீங்க சொல்லுங்க.''

''இந்த எண்ணம் உனக்குத்தானே தோணிச்சு? எப்படியோ கஷ்டப்பட்டு நீதானே துட்டுச் சேர்த்திருக்கே? நீயே சொல்லு.''

''டெர்லீன் ஷர்ட் வாங்க முடியுமா?''

''ம்? அதெல்லாம் விலை அதிகம் இருக்கும். சிங்கப்பூர் ஷர்ட் வேணாக் கிடைக்கலாம்.''

''கள்ளக்கடத்தல் துணியா? வேணாங்க.''

''எனக்கும் அது இஷ்டமில்லே. காட்பரீஸ் சாக்லேட் நிறைய வாங்கித் தரலாமா?''

''சாப்பிடற பொருள்களைத் தின்னு முடிச்சிட்டா அதோடு போயிடும். நம்ம நெனைவாய்க் கொஞ்ச காலமானும் நீடிச்சு இருக்கறுப்பல ஏதேனும் வாங்கறது மேலில்லே?''

''அதுவும் நல்லதுதான்.''

அடுத்து நான்கு நாட்களின் மாலைப் போதுகளை அவர்கள் கடைத் தெருக்களில் கழித்தார்கள்.

''நல்லதாய் ஒரு புஸ்தகம் வாங்கித் தரலாமா? போன வருஷம் குழந்தைங்க ஆண்டுக்காகக் குழந்தைப் புஸ்தகங்க நெறைய வந்திருக்குது.''

''சேகருக்குப் படிக்கிறதில் அத்தனை ஆசை இல்லேங்களே. பெரியவன் சுகுமார்னாலும் எப்பவும் படிச்சுக்கிட்டிருப்பான். இவனுக்கு வேற ஏதானும் வாங்கலாம்.''

''பேனா? ஸ்கூல் பாடத்துக்கு உதவுமே. நல்லதாப் பைலட் அல்லது டோரிக் கிடைக்கும்.''

''ம்! வேறேதும் திருப்தியா அமையாத போனா, பேனாவே வாங்கிடலாம்.''

'' ஹாபி ஸெண்டரில் ஏதாச்சும் பொருத்தமாய்க் கிடைக்குதா பார்ப்போம், வா.''

பொழுதுபோக்குப் பண்டங்கள் கொட்டிக் கிடந்தன. ஆனால் அவற்றில் சேகருக்கு எது பிடிக்கும் என்று நிச்சயமாய்த் தெரியவில்லை. அவன் அதிகமாய் விளையாடுவது கிரிக்கெட். வீட்டுக்குள் அவனது அவ்வப்போதைய பொழுதுபோக்கு, செஸ். அவர்களுக்குத் தெரிந்து அவனிடம் மூன்று சதுரங்க ஸெட்டுக்கள் இருந்தன; சாதாரணமான இரண்டு; தந்தத்தில் ஒன்று.

கடைசியில் மீண்டும் துணிக் கடைக்குத்தான் திரும்பி வந்தார்கள். கவனமான, விரிவான பரிசீலனைக்குப் பிறகு ஒரு பிரிண்ட்டெட் ப்ருஸ்லீப் பனியன் அவன் அளவுக்கு உத்தேசமாய்ப் பார்த்து வாங்கினார்கள். பில் பத்தொன்பது ரூபாய் சில்லறை. பரவாயில்லை, இம்மாதிரி பனியன்களைச் சில சிறுவர்கள் ஷர்ட் போலவே அணிந்து தெருவில் செல்வதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். சேகர் இதை வீட்டுக்குள் ஒரு மாற்றுடையாகவாவது நிச்சயம் உபயோகிக்க முடியும்.

பிடி வைத்த மஞ்சள் பிளாஸ்டிக் பையில் அதை வீட்டுக்கு எடுத்து வந்தபோது இருவர் முகங்களும் மலர்ந்து ஒளி வீசிக்கொண்டிருந்தன. ஆவலாக ஓடிவந்த தம் இரு குழந்தைகளிடம், ''ஊஹூம், இது உங்களுக்கில்லே. நம்ம சேகருக்கு'' என்று சொல்லி, வாணி அதை அல்மாரி மேல்தட்டில் வைத்தபோது, அவர்களுடைய ஏமாந்த கண்கள் தந்த வருத்தத்தையும் மீறிக்கொண்டு உள்ளத்தில் சாதனையின் பெருமை விஞ்சியிருந்தது.

பத்தாம் தேதியன்று மாலை ஐந்து மணிக்கு வாணி தலை சீவி முகம் கழுவிப் பளிச்சென்று துவைத்து வைத்திருந்த சிவப்புச் சின்னாளப் பட்டை உடுத்திக்கொண்டாள். சாமிநாதனோ மகளோ அவளுடன் வரச் சம்மதிக்கவில்லை; சின்னப் பையனை மட்டும் முகம் துடைத்துச் சட்டை மாற்றி அழைத்துக்கொண்டு பிளாஸ்டிக் பையில் பனியனுடன் அம்புஜத்தின் வீட்டுக்குக் கிளம்பினாள். நடக்கும் தூரந்தான்; இல்லாவிட்டாலும் இன்று கால் வலிக்காது.

அம்புஜத்தின் சுச்சிதமான, நாகரிகமான சொந்த விட்டின் மாடி, கீழ்த்தளம், இரண்டிலும் அதற்குள்ளாகவே ஒவ்வோர் அறையிலும் குழல் விளக்குகள் பளீரிட்டுக்கொண்டிருந்தன. வாசல் வராந்தா முகப்பில், 'நல்வரவு' என்று வரவேற்புப் பலகையில் ஒளி பளீரிட்டது. ஹாலிலும் காம்பவுண்டிலும் சிறுவர்களும் பெரியவர்களுமாய்க் கூட்டம், பற்பல விளையாட்டுகள், உரத்த பேச்சுகள், உல்லாசச் சிரிப்புக்கள்.

சேகரின் இரண்டாம் அண்ணன் சுகுமார் கூட வழக்கமான புத்தகப் புழுவாய் இல்லாமல் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டி வழங்குவதில் உதவிக்கொண்டிருந்தான். அவனுக்கும் அண்ணனான அம்புஜத்தின் மூத்த மகன் தன் மனைவியோடும் குழந்தையோடும் அப்போதுதான் ஊரின் மற்றொரு பகுதியிலிருந்து காரில் வந்து இறங்கியிருக்க வேண்டும். காரின் அருகிலிருந்து நடந்து வந்தவாறே, "ஏ சேகர், பர்த்டே பாய், இந்தாடா! மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்! வா வா! என்னடா ஓடிவரே? இன்னிக்குத்தான் பிறந்திருக்கே; அதுக்குள் ஓடத் தெரிஞ்சிடுத்தா?" என்று சிரித்து இரு கைகளாலும் பற்றியிருந்த பெரிய அட்டைப் பெட்டி ஒன்றை நீட்டினுன். சேகர் புத்தம் புது வெள்ளை ஆடைகளும் உயர்ரக ஜோடுக்ளும் மின்ன உற்சாகமாய் ஓடிவந்தான்.

வாணி தன்னை அறியாமல் சில கணங்கள் ஓர் ஓரமாய்த் தயங்கி நின்றுள். விழாக் கோலாகலமும் விருந்து வைபவமுமாய்ப் பொலிந்த அந்த இல்லத்தைப் பார்த்தபோது பீதாம்பரத்தில் போட்ட ஒட்டுத் துண்டுபோல் தன்னை ஓர் ஒவ்வாமையாய் உணர்ந்து சிறிது நேரம் கூச்சத்தில் அழுந்திப் போனுள். அம்புஜத்தின் வீட்டுக்கு அவள் அடிக்கடி வந்ததில்லை. இரண்டொரு முறை அம்புஜமே அவளை எங்கோ வழியில் கண்டு அவளைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து அவளுக்காகத் தான் வாங்கி வைத்துள்ள பழங்கள் அல்லது பிஸ்கெட்டை அவள் மறுக்க மறுக்க வற்புறுத்திப் கையில் திணித்த (ஐயோ, அந்த நன்றி!) சந்தர்ப்பங்களில்தான் வாணி இங்கே வந்திருக்கிருள். எனவே, தயக்கம் நீங்கச் சிறிது நேரம் ஆயிற்று. அவள் மகன் அவள் கையை லேசாய் உலுக்கி, "என்னம்மா?" என்று கேட்டபோது, தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டாள்.

"வாடா, கண்ணு, உள்ளே போவோம். சேகர் அண்ணனுக்குப் பரிசை நீயே உன் கையால கொடுக்கறியா?"

மகனேடு உள்ளே போனுள்.

"யாரு, வாணியா?" அம்புஜம் அவளைக் கண்டு மலைத்து நின்றுள்.

"ஆமாம்மா" என்றுள் வாணி உற்சாகமாய்.

"என்ன விஷயம்? சாமிநாதனுக்கு மறுபடியும் உடம்பு கிடம்பு சரியில்லையா, என்ன?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க."

"கையில் ஏதோ பை கொண்டு வந்திருக்கியே. ஏதாவது வேணுமா? போர்ஷ்விட்டா ஆயிடுத்தா? எதுவானுலும் நாளைக்குக் காத்தால வந்து வாங்கிக்கோ. இப்போ கொஞ்சம் பிஸியாயிருக்கேன்."

சாம்பிவிட்ட முகத்தை உடனே வாணி நேர்படுத்திக்கொண்டாள். "அதுக்கில்லேங்க. எனக்கு எதுவும் வேணும். நான்தான் நம்ம சேகருக்கு ஒரு பரிசு கொடுக்கலாம்னு..." சற்று நிறுத்தினுள்.

"என்ன?"

"சேகருக்கு நான் ஒரு பரிசு கொடுக்கலாம்னு.." பேசிக்கொண்டிருந்தபோதே வாணியின்

முகம் மீண்டும் மலர்ந்தது. கண்கள் ஒளியில் மிதந்தன.

''என்னது?''

''முந்தி ஒரு நாள் நம்ம சேகர் யாரோ சிநேகிதங்க கூடப் பேசிக்கிட்டிருந்தப்ப அவங்க ஒருத்தருக்கொருத்தர் தங்களோட பொறந்த நாளைச் சொல்லிக்கிட்டதைத் தற்செயலாக் கேட்டேன். அதான் ஏதோ, என்னுலான ஒரு சின்னப் பொறந்த நாள் பரிசு அவனுக்காகக் கொண்டுவந்திருக்கேன். இந்தாப்பா சேகர், கொஞ்சம் இப்படி வரியா?''

''நீ சேகருக்குப் பரிசு கொண்டு வந்திருக்கியா?'' அம்புஜத்தின் குரலில் தொனித்ததை வியப்பு என்பதைவிட, புரியாத ஒரு பாஷையைக் கேட்கிற வெறுமை என்றுதான் சொல்ல வேண்டும்.

''ஆமாம்மா.''

''என்ன ஆன்ட்டி?'' என்றவாறு சேகர் வந்தான்.

''உனக்கு ஒரு சின்னப் பரிசு தம்பி.''

வாணி புன்னகையோடு மகனைப் பார்த்தாள். ''நீ குடுக்கறியா?''

பையன் வெட்கத்தோடு ஒதுங்கிக் கொண்டான். வாணி கலகலவென்று நகைத்தாள். ''என்னடா, பெரிசா வெக்கப்படறே? பாருங்கம்மா, இவன் பண்ற பிகுவை! போகுது, நானே கொடுக்கறேன். சேகர் இந்தாப்பா, ஒரு ப்ரூஸ்லீ பனியன்; உனக்கு எங்க பொறந்த நாள் பரிசு.''

சேகர் குழப்பத்துடன் தாயைப் பார்த்தான். அம்புஜம் குழப்பத்துடன் வாணியைப் பார்த்தாள். வாணி எந்தக் குழப்பத்தையும் கவனிக்காத ஓர் இன்ப உலகில் இருந்தாள். ''வாங்கிக்க தம்பி! நீ நல்லா, அமோகமாய் வாழணும்! இந்தா, பிடி.''

குழப்பம் தீராமலேயே சேகர் யந்திரம் போல் கையை நீட்டினான். வாணி ப்ளாஸ்டிக் பையை அவனிடம் கொடுத்தாள். இமைப்போதில் மனம் முழுதும் ஒரு புதிய உவகையும் பெருமிதமும் நிறைந்தன. ''ஹாப்பி பர்த்டே'' என்றாள் பிறகு. ''வரேன் தம்பி, வரேம்மா!'' என்று கூறிவிட்டு அம்புஜம் இன்னும் மலைத்து நின்றிருக்கையிலேயே மகன் தொடர அங்கிருந்து அகன்றாள்.

தெருவில் நடந்தபோது மனம் துள்ளிக் குதித்தது. திடீரென்று தன் உயரம் இரண்டடி கூடிவிட்டாற்போல் இருந்தது. உள்ளே அழுத்திக் கொண்டிருந்த ஒரு சுமையின் கனம் மயிரிழை குறைந்தாற்போல் இருந்தது. அவள் இப்போது நிலைக்கண்ணாடி முன் நின்றாள். கண்ணாடி மிக அழகிய ஓர் உருவத்தைப் பிரதிபலிக்கும் என்று தோன்றியது.

அழகின் வண்ணங்களாய் இருபது மணிகள் கடந்தன. மறுநாள் பிற்பகல் வாணி காபி குடித்துவிட்டு உதட்டில் ஒரு பாட்டோடு வாசலுக்கு வந்தாள். வீட்டுக்கு வெளியே ஒரு கார் வந்து நின்றது. டிரைவர் இறங்கிப் பின்கதவைத் திறந்து விட, அம்புஜம் அம்மாள் பட்டுப்புடைவை சரசரக்க இறங்கி வீட்டுக்குள் வந்தாள். அவள் கையில் ஒரு துணிப்பை இருந்தது.

''வாங்கம்மா! உக்காருங்க!'' என்று உபசரித்து வாணி, ''காபி குடிக்கறீங்களா? நேத்து விசேஷம் நல்லா நடந்திச்சா? சேகர் ரொம்ப எடுப்பாயிருந்தான், அந்த ட்ரெஸ்ஸில். திருஷ்டி சுத்திப் போட்டீங்களா?'' என்று இன்முகத்துடன் பேசினாள்.

''அதுக்கென்ன, எல்லாம் ஆச்சு. நீ திடீர்னு வந்தியா வாணி, நான் எதிர்பார்க்கவே இல்லே. அதனாலே நீ போகச்சே கூடத் தெகைச்சுப் போய் நின்னுட்டேன். பிறந்த நாள் பட்சணங்கள்கூடக் கொடுக்கத் தோணலே'' என்றாள் அம்புஜம்.

''அதுக்கு என்னங்க, பட்சணங்கதானா முக்கியம்? நீங்க எங்களுக்குக் குடுக்காத பட்சணமா?''

''இருக்கட்டும் டீ. இன்னித் தேதிக்குக் குடுக்கற நிலையிலெ பகவான் என்னை வச்சிருக்கான், குடுக்கறேன். அதைப் போய்ப் பெரிசு பண்ணுவானேன்? இந்தா.''

வாழை இலைச் சுற்றுக்கு மேல் செய்தித் தாளில் ட்வைன் போட்டுக் கட்டி மேலே திட்டுத் திட்டாய் எண்ணெய் கசிந்திருந்த பெரிய பட்சணப் பொட்டலத்தைப் பையிலிருந்து எடுத்து அம்புஜம் அவளிடம் நீட்டினாள்.

''இத்தனை எதுக்கும்மா? ஏதோ குழந்தை பொறந்த நாள் அடையாளமாய்க் கொஞ்சம் குடுத்தாப் போதாதா?''

''வச்சுக்கோடீ! சாப்பாட்டுப் பொருள்தானே? இங்கேயும் குழந்தைக இருக்கு, நிமிஷமாய்த் தீர்ந்துடும். பிடி சொல்றேன்.''

''வேணாங்க.''

''சொல்ற பேச்சைக் கேளு.''

அம்புஜம் அவள் கையை இழுத்து அதன்மேல் பொட்டலத்தை வைத்து அழுத்தினாள்.

''அதுக்குமேல நான் என்ன சொல்றது? நன்றிங்க.''

''அப்புறம் வாணி..வந்து..இன்னொரு விஷயம்னா...'' அம்புஜம் சங்கடப்படுவது தெரிந்தது.

''என்ன?''

''நம்ம சேகர் பொறந்த நாளுக்காக நான் சில பேருக்குப் புடைவை வாங்கினேன். நீ எனக்கு ரொம்ப நெருங்கின சிநேகிதி இல்லையா? அதனாலே உனக்கும் ஒண்ணு வாங்கியிருக்கேன். எடுத்துண்டு வந்திருக்கேன். இதோ பாரு.''

அம்புஜம் துணிப் பையிலிருந்து ஓர் அட்டைப் பெட்டியை எடுத்துத் திறந்தாள். அதனுள் கிளிப்பச்சை நிறத்தில் சிவப்புக் கரை போட்ட ஒரு கோடம்பாக்கம் சேலை இருந்தது. வாணி தந்த பரிசைவிடக் குறைந்த பட்சம் நாலு மடங்காவது அதிக மதிப்புப் பெறும்.

''உனக்குத்தான். புடிச்சிருக்கா? இந்தா, எடுத்துக்கோ.''

வாணி அதிர்ந்து நின்றாள். அவள் கண்கள் அம்புஜத்தை வெறித்தன. முகத்தில் அது என்ன, அடிபட்ட நோவா? ஆவேசமா? அதற்கும் மேலே. சிறுமையுண்டு கூசி நிற்கும் முகம்.

''என்னடி, சும்மா நிக்கறே? எடுத்துக்கோ. உனக்காகத்தான் வாங்கியிருக்கேன்.''

''அம்மா! ஊஹூம் மாட்டேன். நான் எடுத்துக்க மாட்டேன்.''

''கெடடக்கட்டும், கையை நீட்டு, சொல்றேன்.''

''மாட்டேன் அம்மா, வேணாங்கம்மா, எனக்குப் புடைவை வேணாம். நான் இதைத் தொடமாட்டேன்.''

''சீசீ! அசடு. உனக்காக வாங்கிண்டு வந்தால் வேணாமாவது? பெரியவா ஆசையாய்க் குடுத்தா மறுக்கப்படாது. ம், வாங்கிக்கோ.''

''அம்மா! இதை எனக்குக் குடுக்காதீங்கம்மா, என்னை இப்படிச் செய்யாதீங்கம்மா.'' அவளுள் தலைநிமிர்ந்து உயர்ந்திருந்த ஓர் இரும்பு சரசரவென்று பொடியாகி விழுந்தது. ''என்னை இப்படிச் செய்யாதீங்க!'' தூர விலகி நின்று கைகளை மறுப்பில் ஆட்டினாள். ''இது வேணாம், வேணாம். தயவு செய்து உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன். இதைக் குடுக்காதீங்க, அம்மா.''

''என்னடி ஆயிடுத்து உனக்கு இன்னிக்கு, திடீர்னு? சரி, சரி! எனக்கு நாழியாறது, உன்னோட மல்லுக்கு நின்னுண்டிருக்க முடியாது. இந்தா, புடைவையை எடுத்துண்டுபோய் ஜாக்கிரதையாய் அலமாரியில் வை. நான் போயிட்டு வரேன்.''

அம்புஜம் சேலையை அங்கு ஒரு மேஜை மேல் வைத்துவிட்டு ஓர் ஏழை கொடுத்துத் தான் வாங்கிக் கொண்டோம் என்று இல்லாமல் சங்கட நிலையைச் சரிப்படுத்திவிட்ட நிம்மதியும் திருப்தியும் முகத்தில் துலங்கப் புன்னகை செய்தவாறு கிளம்பிச் சென்றாள்.

ஒரு வாரத்துக்குப் பிறகு, 'சாமிநாதனின் உடம்புக்கு நல்லது' என்று நான்கு ஆப்பிள் பழங்களுடன் அம்புஜம் வந்தபோது அந்த வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டில் விசாரித்ததில் வாணியும் சாமிநாதனும் குழந்தைகளுடன் இரண்டு நாட்கள் முன்பு வீட்டைக் காலி செய்துகொண்டு போய்விட்டதாகத் தெரிந்தது.

''வீட்டைக் காலி பண்ணிட்டாளா? ஏன்? திடீர்னு என்ன ஆச்சு? என்கிட்ட அவா ரெண்டு பேரும் ஒண்ணுமே சொல்லலையே!'' என்று திகைத்தாள், அம்புஜம். பிறகு, ''எங்கே குடி போயிருக்கா?'' என்று கேட்டாள்.

''அது தெரியாது. வேறு வீடு பார்த்துட்டோம், போறோம்னு மட்டுந்தான் வாணியம்மா சொன்னாங்க'' என்ற அடுத்த வீட்டுப் பெண்மணி கூறினாள். ''இதைமட்டும் என் கிட்டக் குடுத்து நீங்க வந்தாக் குடுத்துடும்படி சொன்னாங்க'' என்று கூறிக் கிளிப்பச்சைக் கோடம்பாக்கம் சேலையைப் பெட்டியோடு கொண்டு வந்து தந்தாள்.

அம்புஜம் ஸ்தம்பித்துப் போனாள். மறுகணம் ஆத்திரத்துடன், ''அட நன்றிகெட்ட ஜன்மங்களா!'' என்றாள்.

✳

தந்தி: SIEVES
த.பெ.எண் 7
ASOK
போன்:
ஆபீஸ் : 3192
பேக்டரி: 3193
MADE IN INDIA
ரைஸ் மில் பேன் பாக்ஸ்
ரைஸ் ஹல்லர் சல்லடைகள்
நிலக்கடலை உடைக்கும் டிகார்டிகேட்டர்கள்
(1) "அசோக்" ரைஸ் ஹல்லர் சல்லடைகள். (4) நெல் அவியல் தொட்டிகள்–சல்லடைகள் (7) ரைஸ் மில் பேன் பாக்ஸ்
(2) "அசோக்" காபி ஹல்லர் சல்லடைகள், (5) கடலைப்பெட்டி சல்லடைகள் (8) கடலை உடைக்கும் மிஷின்கள்,
(3) பருப்பு அலசு கை சல்லடைகள், (6) தேவையான சல்லடை ரகங்கள், (9) பருப்பு அலசும் மிஷின்கள்
நவீன அரிசி ஆலை ஹல்லர் சல்லடைகளும் கிடைக்கும்.
"சிறந்த முறையில் 36 வருட காலமாகத் தயாரிப்பவர்கள்;"
ஸ்ரீராமகிருஷ்ணா & கோ.,
சல்லடை தயாரிப்பாளர்கள், விருதுநகர்.

இதோ 8 காரணங்கள்:
அதிகப்படி இடவசதி அளிக்கும் வெளிப்புறம் பொருந்தும் மூடி.
சுலபமான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பு.
தனித்தன்மை வாய்ந்த சேப்டி வால்வு முழுமையான பாதுகாப்பு அளிக்கிறது.
நாள்பட உழைக்கும் உறுதியான மற்றும் கனமான அடிப்பகுதி.
Prestige
தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் ISI முத்திரை.
உணவின் மணமும் சத்தும் முழுமையாக பாதுகாக்கப்படுகிறது.
நாடு முழுவதும் அமைக்கப் பெற்ற சேவை நிலையங்கள்.
4 முதல் 12 லிட்டர்வரை பல கொள்ளளவுகளில் கிடைக்கிறது.
இந்தியாவின் முதலாவது பிரஷர் குக்கர் இன்னமும் வெகுவாக பயன் படுத்தப்படுகிறது.
Prestige
பிரஸ்டிஜ்
டி டி. (பிரைவேட்) லிட்
பெங்களூர்-560016



பூமாலை

எஸ்.லட்சுமி சுப்பிரமணியம்

இன்னும் நன்றாக விடியவில்லை. எங்கேயோ நாதசுர இசையில் பூபாளம் கேட்கிறது. பனிப்படலக் காட்சியைப் போலத் தெருவில் நடந்து போவார் உருவம் பாதி மங்கியும் பாதி அழிந்தும் தெரிகிறது. கல்யாணி எழுந்திருந்து ஜன்னலை நன்றாகத் திறந்துவிட்டாள். ஜில்லென்ற காற்றுக் கண்ணிமைகளை ஒத்திற்று.

இன்னும் மணி எழுந்திருக்கவில்லை. குழந்தை ரவி அவனுடைய இடுப்பின் மீது காலைப் போட்டுக் கொண்டு தூங்கிக்கொண் டிருந் தான். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடுவே அவன் ஒரு பாலம் மாதிரி. இரவு தூங்கும்போது இருவரும் இரு பக்கங்களில் கையை நீட்டித் தொடுகிற மாதிரி இருக்க வேண்டும். நள்ளிரவில் விழித்துக் கொண்டால் கூட இரு புறமும் திரும்பித் தொட்டுப் பார்த்துக் கொள்வான்.

ரவி முதல் வகுப்பில் படிக்கிறான். புத்தகப் பையைப் பார்த்தால் கல்லூரிப் படிப்பு மாதிரி இருக்கும். அவ்வளவு புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும், பள்ளியில் கைவேலைப் பயிற்சிப் பண்டங்களுமாக அந்தப் பை வழிந்து கொண் டிருக்கும். கல்யாணி காலை வேளையில் அவனைப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு போய் விட்டு விடுவாள். தெருக் கோடியில்தான் அந்தப் பள்ளிக்கூடம் இருந்தது. ஒரு மணிக்கு வீட்டுக்கு வந்து தயிர்ஞ்சாதம் சாப்பிட்டு விட்டுப் போவான். கீழே உட்காரவைத்துப் பாட்டி பிசைந்து கையில் சிறு உருண்டையாகப் போடுவாள். சுண்டக் காய்ச்சிய வற்றல் குழம்பை அதன் தலையில் தொட்டுக் கொள்ள ஒரு துளி வைப்பாள்.

மயிலாப்பூரில் நடுத்தெருவில் அந்த வீடு ஒரு ஜங்ஷன் மாதிரி. பள்ளிக்கூடத்துக்குப் போகும் சிறிய பெரிய குழந்தைகள், கல்லூரிக்குப் போகும் பையன்கள், பெண்கள், வேலைக்குச் செல்லும் பெரியவர்கள்— இப்படி வீட்டை விட்டுக் காலையில் எட்டு மணி முதல் ஒன்பதரை வரையில் புறப்படுகிறவர்கள் வெவ்வேறு விதம். அதற்குள் எல்லோருக்கும் சமைத்துச் சாப்பாடு போட்டு, கையிலும் டிபன் கட்டிக் கொடுத்துத் தலை நிமிர்வதற்குள் அப்பாடா என்று இருக்கும். பத்து மணிக்கு வீடு காலி; நாடகம் முடிந்த கொட்டகை மாதிரி வெறிச் சென்று ஆகிவிடும். பூஜை அறையில் அம்மா மணி அடிக்கும் சத்தம் மட்டுந்தான் கேட்கும். அப்பா சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்ள வாசல் அறைக்குப் போய்விடுவார்.

கல்யாணிக்கு மணமாகி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த மூத்த மருமகளாகப் பொறுப் பேற்றுக் கொண்டவள்தான், இன்னும் தலை நிமிரவில்லை. ''வீட்டுப் பொறுப்பு இனிமேல் உன்னுடையது தான் அம்மா!'' என்று சொல்லிவிட்டார் மாமனார். அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அலுவலகத்தில் முப்பது ஆண்டுகள் கணக்குப் பார்த்தாகி விட்டது. இனிமேல் வீட்டிலும் கணக்குப் பார்க்க அவருக்குப் பொறுமை இல்லை.

''சமயலறைப் பொறுப்பு உன்னுடையது தான். இவ்வளவு நாள் சமைத்துப் போட்டது போதும். அவர் வேலையிலிருந்து ரிடையர் ஆகிவிட்டார். நானும் இந்த வேலையிலிருந்து ரிடையர் ஆக வேண்டியதுதான்'' என்று சொல்லி, அவள் கையில் கரண்டியைக் கொடுத்து விட்டார் மாமியார். அன்று உள்ளே நுழைந்தவள்தான்; இன்று வரையிலும் அந்தக் குடும்பத்தில் மணக்கும் காரம், புளிப்பு, கசப்பு, இனிப்பு எல்லா உணர்ச்சிகளுக்குமே கூட அவள்தான் பொறுப்பாளி.

காலை ஐந்தரை மணிக்கு எழுந்து விடுவாள். பால் 'பூத்'துக்குப் போய் வரிசையில் நின்று பால் வாங்கிக் கொண்டு வந்து, காபி போடுவது அவள்தான். மாமனார் காலை வேளையில் எழுந்து கடற்கரைக்குக் காலாற நடந்து போய் விட்டுவருவார். அவருக்கு முதல் காபியைக் கலந்து கொடுத்து அனுப்பவேண்டும். அப்புறம் தொடர்ந்து குழந்தைகளும் பெரியவர்களுமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்கள். ரவிக்குக் கடைசியாகப் பால் எடுத்துக் கொடுத்து விட்டு அவள் குளிக்கப் போனால், சமையல் வேலையைத் தொடங்க நேரம் சரியாக இருக்கும்.

மாமியார் காய்கறி நறுக்கிக் கொடுப்பார்; வீட்டில் உள்ள மற்றப் பெண்கள், கணவனின் தங்கை

மார்கள், உள்ளே நுழைய மாட்டார்கள். அவர்களுக்குப் பள்ளிக்கூட வேலை, கல்லூரிப் படிப்பு வேலை சரியாக இருக்கும். உள்ளே பூஜை மாடத்தின் பக்கத்திலிருந்து மாமியாரின் குரல் கணீரென்று கேட்கும். குத்துவிளக்கிற்கு எண்ணெய் விட்டபோது, புதுத் திரி போட்டு ஏற்ற மறந்து போனது ஞாபகத்துக்கு வரும். சட்டென்று கையைக் கழுவிக்கொண்டு ஓடுவாள்.

குழாயடியில் ட்ரம்மில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருப்பாள். தண்ணீர் 'நுண நுண' என்று விழுந்து நிறைந்துகொண்டிருக்கும்.

''அவள் எங்கே?'' என்று கணவன் மணி கூப்பிடுவது காதில் விழும். அவன் அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிடமாட்டான். அவ்வளவு பேருக்கு நடுவில் அப்படி அழைக்க வெட்கம். குழாயடியை விட்டு நகர்ந்து வாசல் அறை தெரியும்படி தலையை வளைத்துப் பார்ப்பாள். கைவிரலை அசைத்து அழைப்பது தெரியும். அங்கே ஓடுவாள், ஓடி அதைக் கவனிப்பாள்.

எட்டுமணிக்குச் சாப்பாட்டுக் கடை ஆரம்பமாகிவிடும். ஒவ்வொருவராகத் தட்டை எடுத்துக்கொண்டு வருவார்கள். அந்த ஒரு மணி நேரமும் அவளுக்குக் கரண்டியைக் கீழே வைக்க நேரம் இராது. பரிமாறிக்கொண்டிருக்கும்போதே மைத்துனன், ''மன்னி, பணம் எடுத்துக் கொடுக்கிறாயா? காலேஜில் 'பீஸ்' கட்ட வேண்டும்!'' என்று குரல் கொடுப்பான். மாமனார் பாங்கிற்குப் போய்வரப் 'பாஸ்புக்' வேண்டும் என்று கேட்பார். வேலைக்காரி வீட்டுக்குப் போகக் கிளம்பிவிடுவாள். அவளுக்குக் காபி கலந்து கொடுக்கவேண்டும்.

''நான் படித்துக் கொண்டே சாப்பிடுகிறேன் மன்னி! பின்பக்கமாக உட்கார்ந்து தலையைப் பின்னிவிடேன்! இரட்டைப் பின்னல்'' என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் உட்கார்ந்துவிடுவாள், பள்ளிக்கூடத்துக்குப் போகும் மைத்துனி நீலா.

அத்தனை வேலைகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும்போது இடிபட்டுப் பின்னால் நின்றுவிட்டது, அவளுடைய சிறு குடும்பந்தான். மணி பித்தான் தைக்காத சட்டையுடன் வேலைக்குப் போய்விடுவான். குழந்தை ரவி பாடங்களைச் சரியாகப் படிக்காமல் கிளம்பிவிடுவான். அவளுக்குத் தன் கூந்தலைப் பின்னிக்கொள்ளக்கூட நேரமிராது.

ஆறு ஆண்டுகள் அப்படி ஓடிவிட்டன. அவள் காலடி எடுத்து வைத்தபோது பள்ளிக்கூடத்தில் படித்த குழந்தைகள் கல்லூரிக்குப் போய் விட்டார்கள். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த மைத்துனனும் மைத்துனியும் வேலைக்குப் போய்விட்டார்கள். மாமனார் காலையில் 'வாக்கிங்' போவது கூட நின்று விட்டது. அவருக்கு உடம்பில் சக்தி குறைந்துவிட்டது. காலையில் நியூஸ் பேப்பரும் கையுமாக வாசலில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டுவிடுகிறார். மாமியாருக்கும் உடம்பு சரியில்லை; நடந்தால் மூச்சிறைக்கும்.

காலை ஐந்தரை மணிமுதல் இரவு ஒன்பதரை மணி வரையில் இப்படியே தொடர்ந்து உழைத்துப் பழகியாயிற்று. அவள் தலைவலி என்று

ஒரு நாள் படுத்தால் வீடு அமர்க்களப் பட்டுவிடும். மணமாகிக் கழிந்த அத்தனை ஆண்டுகளில் கணவனும் மனைவியுமாய் அவர்கள் அந்தரங்க மாகப் பகிர்ந்து கொள்ளும் பொழுதுகள் இரவு ஒன்பதரை மணிக்குப் பிறகுதான். அப்புறமும் அவளுக்குப் பேசுவதற்கு அதிக நேரம் இராது. மணிக்கு அலுவலகம் போய் வந்த அசதி. அவளுக்கு வீட்டு வேலைகளைச் செய்து முடித்த அசதி. ரவி அவளைக் கதை சொல்லச் சொல்லிக் கேட்பான்; பாதிக் கதையிலேயே தூங்கிப் போய்விடுவான்.

''கதை முடிந்ததோ இல்லையோ? விளக்கை அணை!'' மணியின் குரல் கேட்கும். விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொள்வாள். ஒரு நாள் முடிந்துவிட்டது. இப்படியே எத்தனை நாள்! இன்னும் எத்தனை நாள்! அவர்களுக்கென்று ஒரு குடும்பம் இல்லை. அந்தக் குடும்பத்துக் கென்று ஒரு தனி வீடு இல்லை. அங்கே அவர்கள் இருந்து பகிர்ந்துகொள்ளப் பொழுது இல்லை. இன்று விடிந்தாயிற்று. இன்னொரு நாள் தொடங்கிவிட்டது.

கீழிருந்து மாமியார் கூப்பிடும் குரல் உயர்ந்து வந்தது. அவள் அவசரமாக எழுந்து போனாள். மாமியார் நீராடி முடித்து நெற்றியில் பதக்கம் மாதிரி குங்குமம் இட்டுக் கொண்டு பசுப்போல் நின்று கொண்டிருந்தார். அன்று ஏதோ விரத நாள். அம்மாவைப் பார்த்தாலே தெரிகிறது. அவளுக்கு ஞாபகம் இல்லை.

''என்னடி குட்டி செய்கிறாய்? இன்றைக்குக் கிருத்திகை. நான் கோவிலுக்குக் கிளம்பிப் போகிறேன். வீட்டைப் பார்த்துக் கொள்!''

பதிலுக்குக் காத்திராமல் கூடை மண்ணைக் கவிழ்த்தது போல வார்த்தைகளைக் கொட்டிவிட்டு மாமியார் கிளம்பிப் போய்விட்டார். வாசலில் மாமனார் லேசாக இருமி அடையாளம் காட்டுவது கேட்டது. அவருக்குக் காபி போட்டாக வேண்டும். அன்று ஏதோ யோசனையாக உட்கார்ந்துவிட்டாள். சற்று நேரம் ஆகிவிட்டது. பால் கார்டை எடுத்துக் கொண்டு பால் வாங்க ஓட்டமும் நடையுமாய்ப் போனாள். நன்றாக விடிந்துவிட்டது. பால் வாங்கக் காத்திருக்கும் கூட்டத்தின் வரிசை நீளமாக வளர்ந்திருக்கும்.

அந்தத் தடவை மைத்துனருக்குத் தலை தீபாவளி. மாமனார் வீடு உள் ஊரில்தான். எல்லோரும் காலையில் எண்ணெய்க் குளி முடிந்தவுடன் அங்கே போவதாகத் திட்டம். மைத்துனன் முதல் நாளே கிளம்பிப் போய்விட்டான். அவளுக்கு முதல் நாளே உடம்பு சரியில்லை. தலைவலியும் லேசான காய்ச்சலுமாய் இருந்தது. இரவு சற்று முன்னதாகவே போய்ப் படுத்துக்கொண்டு விட்டாள்.

தெருவில் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்ததும், ஆள் உயரம் பூவாணம் எழுந்து பொழிந்ததும், ரவி கம்பி மத்தாப்பும் கையுமாகத் தாத்தாவின் மடியில் உட்கார்ந்திருந்ததும் கனவு போலத்தான் நினைவிருந்தன. அவள் காலையில் எழுந்து வந்தபோது மாமியார் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தார். இன்னும் சூடு இறங்கவில்லை.

''பெயருக்கு ஒரு சொட்டு எண்ணெய் வைத்துக்கொள், போதும். நீ அலட்டிக் கொள்ள வேண்டாம். இங்கேயே இரு. நாங்கள் போய்

ரத்ன பாலா

பாலர் வண்ண மாத இதழ்

வழக்கம்போல் துப்பறியும் சாம்பு

பிரபல நாவலாசிரியை
திருமதி விமலா ரமணி எழுதும்
சிறுத்தைக் காடு
எனும் தொடர்கதை

ஓவியர் புஜ்ஜாயின்
வண்ணச் சிரிப்புச்
சித்திரத் தொடர்

தமிழ்நாடு சபாநாயகர் மாண்புமிகு க. ராசாராம் அவர்கள் எழுதும்
"உலக மகாவீரர்கள்" வரலாறு

இன்னும் பல புதிய அம்சங்களுடன் குழந்தைகளின் எண்ணத்தைக் கவர்ந்த
இதழாக மாதம் ஒருமுறை வெளிவருகிறது.

தனிப் பிரதி: ரூ. 1-50
ஆண்டுச் சந்தா: ரூ. 18-00

ரத்ன பாலா,
தபால் பெட்டி எண்-17,
சிவகாசி.

அனைவருக்கும் எமது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

★ ★

உயர்தரமான **"அணில் மார்க்"** கம்பி மத்தாப்புகள், பட்டாசுகள்,
நூதன பயர் ஒர்க்ஸ் ரகங்களையும், **"அணில் மார்க்"** பொட்டு,
சுருள் கேப் வெடிகளையும் கேட்டு வாங்குங்கள்.

"ANIL" FIRE WORKS FACTORY

P. O. BOX No. 130

SIVAKASI - 626123.

விட்டுச் சீக்கிரம் திரும்பி வந்துவிடுகிறோம்'' என்று சொல்லிவிட்டார் மாமியார். சிரிப்பும் கொம்மாளமுமாக இரண்டு டாக்ஸிகளில் எல்லாரும் கிளம்பிப் போய்விட்டார்கள். மணி மட்டும் தயங்கித் தயங்கி நின்றபடியே, ''நீ வீட்டில் தனியாக இருக்கிறாயே கல்யாணி?'' என்று சொல்லிக் கொண்டிருந்தான். கடைசியில் அவனும் கிளம்பிப் போய்விட்டான். தலைவலி வந்தால் மருந்து போட்டுக்கொள்ளலாம். தம்பியின் தலைதீபாவளி மறுபடியும் வருமா?

வீட்டுக்குக் காவலாக வாசலில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

அவளுடைய தந்தை பம்பாயில் பெரிய வேலையில் இருப்பவர். வீட்டில் சமையலுக்கும், வெளியே வேலைக்குப் போய் வரவும் ஆட்களுக்குக் குறைவில்லை. மூன்று பெண்களுக்கும் துளி வித்தியாசம் இல்லாமல் எல்லா விதமான சீர்களும் செய்து கல்யாணத்தை முடித்து வைத்தார் அப்பா. அவள் மூன்றாவது பெண். அவளுடைய கல்யாணம் நிச்சயமாகும் நிலையில் அவருடைய கை கொஞ்சம் சளைத்துத்தான் போய்விட்டது.

''சற்றுப் பெரிய குடும்பந்தான்! நீ முதல் நாட்டுப் பெண்ணாய் அங்கே போகிறாய். பொறுப்புக்கள் நிறைய இருக்கும். நீ பொறுமையாக, சாமர்த்தியமாக நடந்துகொண்டு நல்ல பெயர் எடுக்க வேண்டும். இங்கே கடைசிப் பெண்; அங்கே முதல் பெண். இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும். இந்தச் சலுகைகள் அங்கே இருக்க இடம் இல்லை. நீ பக்குவமாய் நடந்துகொள்ளவேண்டும் அம்மா!''

சொல்லும் போதே அப்பாவுக்குக் கண்ணில் நீர் வந்துவிட்டது. அவள் அப்பாவுக்குச் செல்லப் பெண். கல்லூரியில் படிக்கும் போதுகூட அவளுக்காக 'நோட்ஸ்' எழுதிக் கொடுப்பார். புறப்படுமுன் பின்னலைச் சீவி வைத்துப் பேனாவுக்கு மை போட்டுக் கொடுத்து அனுப்புவார். இரவு எவ்வளவு நேரமானாலும் கூட உட்கார்ந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பார்.

மாமியாரிடமும் குரல் கரகரக்க அப்படித்தான் சொன்னார். ''நீங்கள் என்னை விட எத்தனையோ மேலாகக் கொண்டாடப் போகிறீர்கள். எனக்குத் தெரியும். ஆனால் என் அஞ்ஞானம் எனக்கு. அவள் சிறிசு. அநுபவம் இல்லாத குழந்தை. எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளும் வரையில் நீங்கள்தாம் அவளுக்குச் சொல்லித்தர வேண்டும்.''

''நீங்கள் சொல்ல வேண்டுமா? அவள் இனிமேல் எங்கள் வீட்டுப் பெண். நானல்லவா இனிமேல் அவளை அம்மாவாக இருந்து பார்த்துக் கொள்ள வேண்டும்?'' என்று மாமியார் பதில் சொன்ன விதமும் அவளுக்குப் புது அனுபவமாகத்தான் இருந்தது.

எப்போதாவது பழைய ஞாபகத்தில் தனக்குள் பாடிக்கொள்வாள். அது அவள் கணவன் காதில் விழுந்துவிடும். அதைக் கேட்டுவிட்டு அவன், ''எங்கே? பாடு பார்க்கலாம்!'' என்று கேட்பான். அவள் முகம் வெட்கத்தில் குனிந்துவிடும்.

''நீ வாய்விட்டுப் பாடுவதைவிட அலட்சியமாக முனகுவதே அழகாக இருக்கிறது, கல்யாணி!'' என்பான் அவன். அவளுடைய உள்ளம் பெருமிதத்தால் பூரித்துப் போகும். இரவு நேரத்தில் அவன், தலையை அவள் மடியில் வைத்துக் கொண்டு அதை மறுபடியும்குறிப்பிடுவான். அவள் நீலாம்பரி பாடுவாள்.

அந்தரங்கப் பொழுதுகளும் அப்படி இரகசியமாக நேர்ந்தவைதாம். நெஞ்சக் கிளர்ச்சியை ஒருவருக்கொருவர் சொல்லிப் பகிர்ந்துகொள்ள நேரம் இல்லை; தனிமையான பொழுதும் இல்லை. சில சமயம் வாஷ் பேசினில் கையைக் கழுவிக்கொண்டு விட்டு மணி செல்லமாய் அவள் தலைப்பை இழுத்து வாயை ஒற்றிக்கொள்வான். அந்தக் கணநேரம் சல்லாபத்தில் அவள் மனம் கிளுகிளுக்கும்.

தலை தீபாவளி வந்துவிட்டது அடுத்த நாட்டுப் பெண் சித்திரா அங்கே வந்துவிடுவாள். அவள்தான் பொறுப்பைத் தன்னிடமிருந்து வாங்கிக் கொள்ளட்டுமே! அவ்வளவு நாட்கள் கொத்துச் சாவிப் பொறுப்பைச் சுமந்ததும், சமயலறைக் கரண்டியை ஏந்தியதும் போதாவா? கொஞ்சம் மாறுதலாக வேணும் அவள் வெளியே போய்த் தனிக் குடித்தனம் நடத்தலாமே!

இரவு நேரம்.

குழந்தை ரவி தூங்கி விட்டான். மணி அறைக்கு வரும்போது அவள் படுத்துக் கொண்டு விட்டாள். அவன் கைவிரல்கள் அவள் நெற்றியில் செல்லமாகப் படிந்தன. அவள் கை அவன் கைமேல் பொத்திற்று. நாக்கிலிருந்து ஒருங்கே குதிக்க எத்தனையோ எண்ணங்கள் தவித்தன.

''சூடு இல்லையே, கல்யாணி?''

''உடம்பில் இல்லை. மனசில் எவ்வளவோ இருக்கிறது.''

''என்ன சொல்கிறாய் கல்யாணி?'' என்று அவன் தலையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டான். பூவின் இதழ் பிரிவதுபோல அவளுடைய அவாவின் சாயைகள் விரிந்தன.

''உன் ஏக்கம் எனக்குப் புரிகிறது, கல்யாணி! எனக்கும் ஆபீசில் பெசன்ட் நகரில் குவார்ட்டர்ஸ் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். உனக்கும் ஒரு மாறுதலாக இருக்கும். அம்மாவிடம் சொல்லிப் பார்க்கிறேன். அப்பா ஒன்றும் குறுக்கே நிற்கமாட்டார். அம்மாவுக்குத்தான்..''

''சித்ரா உதவியாக இருக்கிறாளே!''

அந்தக் கேள்வியிலேயே அவள் ஏக்கம் தொனித்தது.

''எப்படியாவது கிளம்பிப் போய்விடலாம் கல்யாணி; நான் பார்த்துக் கொள்கிறேன்!''

கல்யாணியின் முகத்தில் நீலத் தளிர் ஒளிவீசிற்று. வெற்றிப்புன்னகையில் கன்னங்கள் குழிந்தன. புதுக் குடித்தனம் பற்றிய கனவுகள், கற்பனைகள், எவ்வளவோ திட்டங்கள், எவ்வளவு பேசினாலும் அலுக்காத ஆசைகள்.

அவன் எதிர்பார்க்கவில்லை, அவ்வளவு எளிதில் அம்மா சம்மதம் கொடுத்துவிடுவாள் என்று.

ஆயினும் புதுக் குவார்ட்டர்ஸ் சாவியை வாங்கிக் கொண்டுவந்து, பாத்திரமும் பாண்டமுமாக 'டெம்போ'வில் ஏற்றி வைக்கும்போது மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்வது எளிதாக இல்லை.

''உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். மணியைச் சனிக்கிழமை தவறாமல் எண்ணெய் தேய்த்துக்கொள்ளச் சொல்லு. அவனுக்குத் தன்னைக் கவனித்துக்கொள்ளவே தெரியாது'' என்று கல்யாணியிடம் சொன்னபோது அவள் கண் கலங்கிவிட்டது.

''அம்மா! நமஸ்காரம் பண்ணுகிறேன்'' என்று கீழே விழுந்து வணங்கினான் மணி. கல்யாணியுடன் ரவியும் சேர்ந்து வணங்கினான். அவனை அள்ளித் தூக்கிக் கொண்டாள் அம்மா. கன்னம் மாறிக் கன்னம் ஆசை முத்தத்தில் அழுந்திற்று.

''அம்மா! நான் ஏதாவது தப்புப் பண்ணியிருந்தால் மன்னித்துவிடுங்கள்'' என்றாள் கல்யாணி; உணர்ச்சியில் கம்மிப் போனகுரல்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. நான்தான் வயசுத் தள்ளாமையில் கோபத்திலோ ஆத்திரத்திலோ மனம் புண்படப் பேசி இருப்பேன். நீ அதை மனசில் வைத்துக்கொள்ளக் கூடாது!''

''அப்படியெல்லாம் பேசாதீங்கோ அம்மா!''

புதுக் குடித்தனம் தொடங்கிவிட்டது. அதுவும் ஒரு புது அநுபவமாக இருந்தது. குழந்தை ரவியை மயிலாப்பூரில்ஒரு கான்வென்ட்டில் சேர்த்துவிட்டாள். அங்கேதான் இடம் கிடைத்தது. அவனை வீட்டு வாசலில் பஸ் வந்து அழைத்துக்கொண்டு போயிற்று. மணி ஆபீசுக்குக் கிளம்பிப் போய்விட்டால், அப்புறம் மாலை நான்கு மணிக்குக் குழந்தை திரும்பி வரும் வரையில் நிறைய நேரம் இருக்கும். விதம் விதமான பொழுதுபோக்குகளிலும் பயிற்சிகளிலும் மனம் ஆசையாகப் பின்னி ஈடுபட்டிருக்கும்.

இரவு அவளும் மணியுமாக உட்கார்ந்து குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். சமையல் எல்லாம் சௌகரியம் போல.

விடுமுறை நாட்களில் வெளியே போய்வருவது, மாலை நேரத்தில் கடற்கரையில் போய் உட்காருவது, இரவு ரவி தூங்கிய பிறகு மேலே திறந்த மாடியில் உட்கார்ந்து பேசுவது எல்லாவற்றிலுமே ஒரு சுதந்தரக் காற்று இருந்தது.

இத்தனைக்கும் நடுவே ஏதோ ஒரு குறை இருவருக்குமே தெரிந்தது. ''இன்றைக்கு ஏகாதசி. அம்மாவுக்குப் பிடித்த மாதிரி சித்திரா பலகாரம் செய்து கொடுக்கிறாளோ, என்னவோ? சாப்பிடும்போது பக்கத்

தில் இன்னத்தில் தயிர் வைக்க வேண்டும். அம்மா கேட்க மாட்டாள். அவளாகவே புரிந்துகொண்டு வைக்க வேண்டும். சித்திரா செய்கிறாளோ என்னவோ?'' என்று கல்யாணி ஏங்குவாள்.

''ரவி அழகாகச் சைக்கிள் விடுகிறான். அதிலேயே சர்க்கஸ் பண்ணுகிறான். அப்பா பார்த்தால் மகிழ்ந்து போவார். அங்கே இருந்த போது குழந்தைக்கும் இடம் இல்லை. அப்பாவும் பார்க்க முடியவில்லை'' என்று சொல்லிக் கொள்வான் மணி. அந்தக் குரலிலும் ஓர் ஆதங்கம் தொனிக்கும்.

செலவு கொஞ்சம் கூடித்தான் போயிற்று. வீட்டைப் பூட்டிக் கொண்டு போக முடியவில்லை. பின் வராந்தாவில் காயக்கட்டிய புடைவை காணாமற் போய்விட்டது. இன்னொரு நாள் மணியின் புதுச் செருப்பு வாசலிலிருந்து திடீரென்று மறைந்து விட்டது.

ஆறு மாதங்களாகிவிட்டன, புதுக் குடித்தனம் தொடங்கி. நாட்கள் வாரங்களாய் வாரங்கள் மாதங்களாய் நழுவியது தெரியவில்லை.

கொஞ்ச நாளாய் அவள் நெஞ்சில் ஒரு கலவரம். ஊரில் என்ன என்னவோ வதந்திகள். தினசரிகளில் வயிற்றைக் கலக்கும் செய்திகள். வீட்டில் வாசற்கதவைப் பூட்டிக்கொண்டாலும் தனியே இருக்கப் பயமாக இருந்தது. வெளியே குழந்தையை அவ்வளவு தூரம் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விட்டு அவன் திரும்பி வரும் வரையில் கவலைப்பட வேண்டி இருந்தது.

அன்று காலையில் குழந்தை பள்ளிக்கூடம் போனதிலிருந்தே அவளுக்கு மனம் சரியாக இல்லை. குத்து விளக்குப் பூஜைக்காகப் போயிருந்த இடத்தில் காதில் விழுந்த செய்தி வயிற்றைக் கலக்கிற்று. இனம் தெரியாத திகில் உள்ளே சுருள் பிரிந்து விசிறிற்று.

பள்ளிக்கூடத்திலிருந்து குழந்தைகளைக் காணோமாம். சாப்பாட்டுக்கு வெளியே விட்ட போது குழந்தைகள் திரும்பி வரவில்லையாம். யாரோ குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போய் விடுகிறார்களாம். பள்ளிக்கூடத்துக்குப் பள்ளிக்கூடம் கூட்டம் கூட்டமாகப் பெற்றோர்கள் போய் நின்று கொண்டிருக்கிறார்களாம். காதில் செய்தி விழுந்ததும் அரவம் கண்ட விலாங்கு போல் அவள் மனம் உஷாராயிற்று.

ரவி எங்கே இருக்கிறானோ? எப்படி இருக்கிறானோ? மணி மூன்று. அவளுக்கு நிலைகொள்ளவில்லை. பக்கத்துப் பங்களாவுக்குப் போய்ப் 'போன்' செய்தாள், கணவனுக்கு. ஆபீசிலிருந்து 'பர்மிஷன்' வாங்கிக் கொண்டு நேரே பள்ளிக்கூடத்துக்குப் போய்க் குழந்தையை அழைத்துக் கொண்டு...

மணிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அநாவசியமான கலவரந்தான் என்று தோன்றிற்று. ஆனால் அவனுக்கே ஒரு விதத்தில் பயமாகவும் இருந்தது. அவனுடைய ஆபீசிலும் அந்தச் செய்தி பலமாக அடிபட்டது. அவன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, கல்யாணிக்கும் ஆறுதல் சொன்னான்.

ஆபீசிலிருந்து கிளம்பி, பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேரும் வரை தைரியமாகத்தான் இருந்தான். அங்கே வாசலில் பெரிய கூட்டம். குழந்தைகளை அழைத்துச் செல்லும் பஸ் ரிபேராகி நின்றுவிட்டது. சில குழந்தைகள் கிளம்பிப் போய் விட்டார்கள். சிலர் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களிடையே ரவியைக் காணோம். அவனுடைய வகுப்பு டீச்சர் கையைப் பிசைந்து கொண்டு நின்றார். பயத்தில் கண்கள் வளையங்களாயிருந்தன.

''ரவி எங்கே போனான் என்று தெரியவில்லை ஸார்! இப்பத்தான் அவனுடைய அம்மாகூட வந்து தேடிவிட்டுப் போனாங்க!'' அவள் குரல் அழாத அழுகையில் நடுங்கிற்று.

அவனுக்கே ஒன்றும் புரியவில்லை. எங்கே போய்த் தேடுவது? யாரைக் கேட்பது? குழந்தைக்குத் தானே பஸ் ஏறிப் போகத் தெரியாதே! கல்யாணி வேறு அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டாள். அவளை அவன் போனில் எச்சரித்திருக்கலாம். இப்போது எதையும் எண்ணிப் பயன் இல்லை. எல்லாமே கொட்டிய பால்.

வழியெல்லாம் பார்த்துக் கொண்டே வந்தான். காதில் விழுந்தன விதம் விதமான வதந்திகள். போலீஸ் நிலையத்தின் வாசலில் ஏகக் கூட்டம். மனம் புரியாத வேதனை.

நேரே அப்பாவைப் பார்க்க ஓடத்தான் தோன்றிற்று. கான்வெண்ட்டிலிருந்து அந்த வீடு அரை மைல் தூரம். போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இரண்டு பர்லாங் தூரந்தான். எத்தனையோ தடவைகள் அவன் நடந்திருக்கிறான். ஆனால் அந்தத் தூரம் அவ்வளவு நீளமாக அவனுக்கு அதுவரை தோன்றியதில்லை.

அந்த வீட்டு வாசலில் யாரையும் காணவில்லை. வழக்கமாகச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் அப்பாவைக் கூடக் காணவில்லை. மற்றவர்கள் வேலையிலிருந்தும் காலேஜிலிருந்தும் திரும்பி இருக்க மாட்டார்கள். 'கல்' என்று ஓர் அமைதி. நெஞ்சம் கனவுக் கொடியாய் அசைய உள்ளே நுழைந்தான். வாசலிலிருந்து சமையல் அறை தெரிந்தது.

அங்கே—

குழந்தை ரவி உட்கார்ந்து தட்டில் எதையோ சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அம்மா அருகில் அமர்ந்து போட்டுக் கொண்டிருந்தாள். தூணோரம் கண்ணையும் கன்னத்தையும் ஒற்றியபடி நின்றிருந்தாள் கல்யாணி. அம்மாவை அப்படிப் பார்த்த போது தெய்வமே அவள் உருவத்தில் வந்து தன் குழந்தையைக் காப்பாற்றியதுபோல் தோன்றிற்று. அந்த நினைப்பில் ரவியை வாய்விட்டு அழைக்கக்கூடத் தோன்றவில்லை.

''அம்மா!''

அவனுடைய குரல் அவனுக்கே புதிதாக இருந்தது. உணர்ச்சி பொங்கி உடையும் நேரம்.

''வாடாப்பா! நீயும் ரொம்பக் கலங்கிப் போயிட்டியா? அவளும் இப்பத்தான் அலறிக் கொண்டே வந்தாள். அரைமணி நேரம் முன்னாடி வாசலில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். குழந்தை வந்துவிட்டான். எனக்குத் 'திக்'கென்று ஆகிவிட்டது. 'டிபன்பாக்ஸ்' தொலைந்து போய் விட்டதாம். வீட்டுக்குப் போனால் அம்மா அடிப்பாளே என்று பயமாம். பள்ளிக்கூடப் பஸ் வேறு ரிப்பேராம்.''

அம்மா மளமளவென்று சொல்லிக்கொண்டே போனாள். அவள் அத்தனை வேகமாகப் பேசி அவன் பார்த்ததில்லை. மகனுக்கு ஆதரவாக எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டும் என்று ஒரு வேகம். அவனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, தாயின் காலில் அப்படியே விழுந்துவிட்டான்.

''எழுந்திருடாப்பா! என்ன இதெல்லாம்? அவள் கூடச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அவள் தனியாக அங்கே திண்டாட வேண்டாம். எல்லாருமாக இங்கே வந்துடுங்கோ. பழையபடி ஒண்ணாவே இருக்கலாம். உங்களுக்கும் நிம்மதியாக இருக்கும்; எனக்கும் மனசு கேட்கவில்லை. எதையும் சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. எதையோ அனுப்பிவிட்டுத் தவிக்கிற மாதிரி மனசு அடித்துக்கொள்கிறது.''

ரவிக்காக அவள் அநுபவித்த தவிப்பு, அங்கே அம்மா அவனுக்காக அநுபவிக்கும் தவிப்பு, இதில் வயது வித்தியாசம் கூட உண்டா என்ன? அவன் நிமிர்ந்து பார்த்தான். கல்யாணியின் கண்களிலும் அவன் நினைப்பதே நிழலாகத் தெரிவது போல இருந்தது. அம்மாவின் அருகில் உட்கார்ந்துகொண்டான். அவள் இடுப்பைக் கட்டிக்கொண்டான். அம்மாவின் கண்களும் கசிய ஆரம்பித்து விட்டன. மருமகளின் நெற்றியில் கலைந்து விழுந்த மயிரை ஆசையாக ஒதுக்கி விட்டாள். அருமையாகக் கூறும் வார்த்தைகள் அன்பில் தோய்ந்து வந்தன.

''பெண் குழந்தை பிறக்க வேண்டும். வீட்டுக்கு அம்மன் வர வேணும். இந்த மடியில் விளையாட வேணும்.''

ரவி எழுந்து பாட்டியைப் பின்புறமிருந்து கட்டிக்கொண்டான். அவன் கண்களில் மட்டுந்தான் சிரிப்பு. மற்றப்படி ஒருவர் விலக்கில்லாமல் எல்லாருக்கும் கண்கள் நனைந்திருந்தன.

ஒன்றாய் இணைந்த இந்தக் குடும்பமே ஒரு பூமாலைதான். சிறுசுகள் ஒவ்வொன்றும் தமக்கென்று ஒரு வாழ்க்கையைத் தேடிக் கொண்டாலும் அவர்கள் எல்லாம் அந்தப் பூமாலையின் மலர்களே.

✻

"Our Hearty Deepavali" Greetings

to all our Customers & well wishers

Heartiest Deepavali Greetings

from

Rajan Paper Mart (Est. 1958)

17, Sunkurama Chetty Street

Madras-600 001

Phone
Office: 24949
Res: 446418

Dealers in

ALL VARIETIES OF PAPER & BOARDS
Mainly from ORIENT & SIRPUR PAPER MILLS

மனமார்ந்த தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
குதூகலத் திருநாளாம் தீபாவளி
கோலாகலமாய் முடிந்தவுடன் -
தங்குவது
நெஞ்சம் நிறைந்த நினைவுகளும்
ராஜேஸ்வரியின் பத்தாடைகளுமே.
O.S.R/SRH/104
திருமண பட்டு ஜவுளிகளுக்கு கைராசியான இடம்!
ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்
121, ராஜ வீதி - கோவை • போன்: 25859
59 கடை வீதி - சேலம் • போன் 3345
நவநாகரீக ஜவுளிகளுக்கு
உஷா
சாரி பாரடைஸ்
333-ராஜ வீதி - கோவை
போன்: 33369



இந்த தீபாவளியைச்
சிறந்த தீபாவளியாக்க
30 இனிமையான வழிகள்
தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட பாரி மிட்டாய்கள்! 30-க்கும்
மேற்பட்ட வகைகள். அத்தனையும் உங்கள் ஆசையைத் தூண்டும்...
நாவிலே நீரை ஊற வைக்கும்...எக்ளேர், பான்-பான், கேண்டி,
லிக்வேர்...பல்வேறு வகைகள், பல்வேறு சுவைகள்.. உங்களுக்கும்
உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும்... அன்பு காட்ட, ஒன்றுகூடி
மகிழ, இன்பமாய்ப் பொழுதுபோக்க... இணையற்ற இனிமை தருபவை
பாரி மிட்டாய்கள்.
Parry's
பாரிஸ்
கன்ஃபெக்ஷனரி
லிமிடெட், சென்னை

HTM-PCL-2346

ஆயிரம் பொய் சொல்லாமல்...

"மஹரி"

எங்கள் டைரக்டரின் மகன் கல்யாணம் கோடம்பாக்கத்தில் நடந்தது. என்னை அழைத்திருந்தார்கள். மாப்பிள்ளை அழைப்புக்கே போயிருந்தேன். அனைவரும் சகஜமாகப் பழகினார்கள்; வரவேற்றார்கள்.

இந்தக் கல்யாணம் மூன்றாண்டுகளுக்கு முன்பே நிச்சயிக்கப்பட்டிருந்தது. என்ன காரணத்தாலோ தாமதமாகி இப்போது நடக்கிறது. நிச்சயிக்கப்பட்ட அதே பெண்ணுக்கும் அதே பையனுக்குந்தான் நடக்கிறது. இதுபற்றி நான் சந்தேகப்பட்டேன்.

எங்கள் டைரக்டரின் மகன் சட்டம் படித்து ஒரு கம்பெனியின் லீகல் அட்வைஸராகச் சென்னையில் இருந்துவந்தான். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பெண் பார்த்தபோது இதே கல்யாணப் பெண் கோகிலா திருச்சியில் ஒரு பள்ளியில் பி. டி. ஆசிரியையாகப் பணியாற்றினாள். எம்.ஏ. முடித்துவிட்டு ஓராண்டாகச் சென்னைக் கல்லூரியில் லெக்சரராக பணியாற்றுகிறாள். ஏதோ ஒரு 'ஓர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டலில் தங்கிவந்தாள்.

கோகிலாவுக்குத் தாய் தகப்பன் சிறுபோதிலேயே தவறிவிட்டிருந்தார்கள். நாலு அண்ணன்மார்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் உத்தியோகம் பார்த்தனர். அவர்களின் கடைசியும் கோகிலாவின் அடுத்த அண்ணனுமான ரங்கநாதன் மட்டும் திருச்சியில் பள்ளி ஆசிரியராக இருந்தார். அவனிடம் தங்கியே கோகிலா தன் படிப்பை முடித்து ஆசிரியைப் பணி செய்துவந்தாள்.

எங்கள் டைரக்டரின் மூத்த பையன் நாகசாமிக்குப் பெண் பார்த்துப் பேசி முடித்த விவரம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே எனக்குத் தெரியும்.

எனக்குச் சற்று ஓட்டை வாய்தான். ஒப்புக்கொள்கிறேன். என்ன செய்வது? என் பிறப்பு அப்படி. தவிரவும் டைரக்டர் மகன் நாகசாமி என்னிடம் நன்றாகப் பழகுவான். மனம் விட்டுப் பேசுவான்.

அவன் சொன்னான். ''மாமா, கோகிலாவை எனக்குப் பிடித்துவிட்டது. அப்பாவுக்குச் சம்மதந்தான். அவர்கள் செய்வது போதும் என்கிறார். ஆனால் அம்மாதான் கேட்கமாட்டேன் என்கிறாள். நமது அந்தஸ்து என்ன? இவன் முதல் பிள்ளை. இவனுக்குக் குறைவான அளவில் பெண் கொண்டால் பின் கீழ்க்கடைகளுக்குக் கஷ்டம். மேலும் 'இத்தனை உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் ஏன் இப்படி மட்ட சம்பந்தம் செய்துகொண்டார்கள்?' என்று ஊரார் சொல்லுவார்கள். அதற்காகாவது சற்று நன்றாகச் செய்யவேண்டும் என்று சொல்லி லிஸ்ட் போடுகிறார்கள்.

''பாவம், கோகிலாவுக்குப் பெற்றோர் இல்லை. நாலு அண்ணன்மார்கள்தாம். அவரவர்கள் வாழ்க்கை அவரவர்களுக்கு. தங்கை கல்யாணத்துக்கென்று சேமித்து வைத்துக் கொள்ளவில்லை. கோகிலாவுக்குக் கல்யாணம் செய்வதானால் அனைவருக்கும் பொதுவான நிலம் நீர்சை விற்றே செலவு செய்யவேண்டும் என்ற நிலை. தவிரவும் நிலம் விற்பது அத்தனை சுலபமா இருக்கிறதா? நாலு சகோதரர்களும் ஒத்துக் கொண்டு விற்பனை செய்ய வேண்டும். இதற்கு வழி தெரியவில்லை.''

நாகசாமிக்குக் கோகிலாவிடம் ஈடுபாடு என்பது நன்றாகத் தெரிந்தது. அவள் தகப்பனார் ஒரு சீர்திருத்தவாதி. பெண் கல்யாணத்துக்காகப் பெற்றோர் ஒட்டாண்டியாவதை விரும்பாதவர். ''ஏதோ சுமாராகக் கோவிலிலேயே கூடக் கல்யாணம் செய்துகொடுங்கள்'' என்று சொல்லிவிட்டார். ஆனால் அவர் மனைவி அதற்கு ஒப்பவில்லை. இந்த நிலையில் கிராமத்து நிலம் விற்கப்படாமலேயே இருந்து வந்தது. கோகிலாவும் கன்னியாகவே நின்றாள். அவளுடைய கன்னித்தவம் இன்று நிறைவேறிவிட்டது.

''வாங்கோ மாமா! இந்த என் கல்யாணம் நடப்பதற்கு நீங்கள்தான் காரணம்'' என்று கோகிலா அழைக்கிறாள். நான் என்ன சம்பந்தியா? தரகரா?

நாகசாமியும், ''மாமா, மாமா, வாங்கோ! வாங்கோ! எங்கே வராமலேயே இருந்துவிடுவீர்களோ என்று பார்த்தேன்'' என்று வரவேற்கிறான்.

கோகிலாவின் கடைசி அண்ணனைத்தான் எனக்குத் தெரியும். அவர் வாயெல்லாம் பல்லாக வரவேற்றார். அத்துடன் தம் அண்ணன்மார் மூவருக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். எங்கள் டைரக்டருக்குக் கூடச் சம்பந்தி மரியாதை காட்டப்படவில்லை. எனக்கு இத்தனை வரவேற்பா? காரணம் புரியவில்லை.

இந்தக் கல்யாணத்துக்காக நான் துரும்பைக்கூட நகர்த்தி வைக்கவில்லை. எங்கள் டைரக்டர் வீட்டுக் கல்யாணத்துக்கு வரவேண்டுமே என்று வந்திருந்தேன்.

ஆனால் இந்தக் கல்யாணம் நடக்க வேண்டுமே என்று கவலைப்பட்டவன் நான். கல்யாணம் சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்தால் அதைப் பற்றிப் பேசுவேன்.

வழக்கம் என்ன? என் தொழிலே பேச்சுத்தானே? பேச்சை மூலதனமாக்கியே என் வியாபாரம் நடந்தாக வேண்டியிருக்கிறது.

வா வென்று அழைக்காத தலைமையாசிரியர்களையும் தமிழாசிரியர்களையும் வலுவில் அவர்கள் வீட்டுக்கும் பள்ளிக்கும் சென்று அவர்களைப் புகழவேண்டும்; அவர்கள் குடும்ப நலனை பற்றி மிகவும் அக்கறையுடன் விசாரிக்க வேண்டும். முன்பு எப்போதோ அவர் வீட்டுக்குப் போன போது, அவர் வீட்டில் பார்த்த குழந்தைகளின் மழலை, சுட்டித்தனம், அழகு இவற்றைப் பற்றி எல்லாம் சிலாகித்து அவரிடம் கூற வேண்டும். கல்லிலும் நார் உரிப்பது என்பார்களே, அந்தக் கதைதான். இளகாத மனத்தையும் இளக்கிப் புத்தக ஆர்டர் பெற வேண்டும். வக்கணையாக, குழைந்து பேசுவதில்தான் என் வியாபாரமே இருக்கிறது. ஒரு தடவை ஆர்டர் கொடுத்தவரை, பிறகு எப்போது எங்கே பார்த்தாலும், நம்மைப் பார்க்காவிட்டாலும் ஓடிச் சென்று, ''சௌக்கியமா?'' என்று குசலம் விசாரிக்க

வேண்டும், இது என்னுடைய மாமூல் வழக்கம்.

புத்தக விற்பனைப் பிரதிநிதியாகப் பல ஊர்களுக்குப் போகும் நான் ஒரு முறை இந்தக் கோகிலா பணியாற்றி வந்த பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தேன். அது ஒரு குடும்பப் பள்ளிக்கூடம். தலைமையாசிரியர், தமிழாசிரியர், கரஸ்பாண்டெண்ட் ஆகிய அனைவரும் ஒரு குலக்காரர்கள். ஏன், குமாஸ்தா கூடத் தலைமையாசிரியரின் மைத்துனர்தான். அந்த வகையில் தூரத்து உறவான கோகிலாகூடப் பி. டி. அசிஸ்டெண்ட்டாகப் பணியாற்றி வந்த சமயம் அது. அந்தப் பள்ளியிலேயே ரங்கநாதனும் ஆசிரியராக இருந்தார்.

அப்போது அந்தக் குடும்பப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியர், ''சங்கரன்தானே உங்கள் புத்தகக் கம்பெனி டைரக்டர்?'' என்று கேட்டார். இது போதாதா எனக்கு? பிடித்துக்கொண்டேன்.

''ஆமாம் ஸார். எங்கள் புத்தகக் கம்பெனி டைரக்டர் மிகவும் நல்லவர். இந்தக் கலிகாலத்தில் தப்பிப் பிறந்து விட்டவர். பழைய காலத்து மனுஷர். சமூக சீர்திருத்தவாதி'' என்றெல்லாம் வானளாவப் புகழ்ந்தேன். அதற்குப் பிறகே ஏன் விசாரிக்கிறார் என்ற எண்ணம் வரவும், ''எதற்கு ஸார் கேட்டீர்கள்'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை, நமது பள்ளிக்கூடத்திலுள்ள பி.டி. அஸிஸ்டெண்ட் கோகிலாவை அவருடைய பையனுக்குப் பார்த்திருக்கிறார்கள். பையன் சம்மதித்து விட்டானாம். உங்கள் கம்பெனி டைரக்டர் சங்கரன் என்றார்கள். அதுதான் கேட்டேன்'' என்றார்.

அவ்வளவுதான். இன்னொரு பாட்டம் அவரைப்பற்றிப் புகழ்ந்தேன்.

பிறகு கேட்க வேண்டுமா? அந்தத் தலைமையாசிரியரை எங்கே கண்டாலும் முதலில் கோகிலா கல்யாணம் பற்றிச் செய்தியைக் கேட்டபடி அவருடன் ஒட்டிக்கொண்டேன்.

கோகிலா சென்னைக் கல்லூரி வந்த பிறகு இதே உறவைச் சொல்லிக் கொண்டு, அவள் பணியாற்றிய கல்லூரி முதல்வரிடம் ஒட்டிக் கொண்டேன்.

முதல்வர் அறைக்குள் நுழைந்து முதலில் . விஸிட்டிங் கார்டைக் கொடுத்ததும் கோகிலாவைப் பற்றி இரண்டொரு வார்த்தை பேசுவேன். எங்கள் டைரக்டர் மகனுக்குப் பார்த்துவிட்டு அது நடக்காமல் போனதுபற்றி வருத்தம் தொனிக்கப் பேசுவேன். இப்படி அவருடைய நட்பைச் சம்பாதித்துக்கொண்டேன். இது எனக்கு ஆகிவந்த கலை.

சென்ற மாதம் கோகிலா பணியாற்றிய கல்லூரிப் பிரின்சிபால் தன்ய குமாரியைப் பார்க்கப் போயிருந்தேன். ஓய்வு பெறும் இந்த நிலையிலும் அவர்கள் குமாரியாகவே இருந்தார்கள். என்னிடம் ஒரு சகோதரன் போலப் பழகுவார்கள். ஆர்டரும் தருவார்கள். அப்படி ஆர்டர் வாங்கப் போன சமயம் வழக்கம்போல் கோகிலாவின் சௌகரியம் பற்றி விசாரித்தேன்.

''சே! அவள் பேச்சை விடுங்கள், ஸார்!'' என்று எரிந்து விழுந்தார்கள் அவர்கள்.

இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ''ஏன்? என்னவாயிற்று?'' என்று பயந்தபடி கேட்டேன்.

''பின்னே என்ன ஸார்? யாரோ ஒரு பையன் அடிக்கடி கல்லூரிக்கே வந்து விடுகிறான். இவளும் கல்லூரி விடுப்பு எடுத்துக் கொண்டு அவனிடம் ஒட்டிப் பழகுகிறாள். நானும் ஜாடைமாடையாகச் சொல்லிவிட்டேன்.''

''யாராம் அந்தப் பையன்?''

''யாரோ, அங்கிளாம். அவனைத்தான் மணக்கப் போகிறாளாம்.''

''ஐயோ பாவமே!'' என்றேன். நாகசாமியை நினைத்து வருத்தப்பட்டேன். ஆனால் கோகிலாவைப் பற்றிக் கோபப் படவில்லை. ஏனென்றால் அவள் பாவம், என்ன செய்வாள்? ஒரு நிலத்தை விற்று விட்டுக் கல்யாணம் செய்து கொடுக்க முடியாமல் இந்த நாலு அண்ணன்மார்களும் நவக்கிரகமாக இருந்தால் அவள்தான் என்ன செய்வாள்? தானாக ஒருவனை வரித்துக் கொண்டு விட்டாள் போல் இருக்கிறது.

கல்யாண எண்ணத்தைப் பெண்களுக்கு உண்டாக்கி விட்டால் அதை உடனே நடத்திவிட வேண்டும். இல்லாவிட்டால் இப்படித்தான் நடக்கும். கோகிலாவைப்பற்றிக் கவலைப்பட்டேன்.

அழகான நல்ல உத்தியோகத்தில் இருந்து நிறையச்சம்பாதிக்கும்பெண் நாகசாமிக்கு இல்லாமல் போனது எனக்கு வருத்தந்தான். இதை அவனிடம் எப்படிச் சொல்வது? இளம் மனசு உடைந்துவிடலாம் அல்லவா? மேலும் அவனை இப்போதெல்லாம் அதிகம் சந்திக்க முடிவதில்லை. ஆபீஸ் வேலைப் பளுவாக இருக்கலாம் என்று நினைத்துக் கொள்வேன்.

சென்ற மாதம் திருச்சிக்குப் போயிருந்தேன். அப்போது கோகிலாவின் உறவினரும் அவள் அண்ணன் ரங்கநாதனும் பணியாற்றிய பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தேன். தலைமையாசிரியர் திருவேங்கடத்திடம் பேசுகையில், ''பாவம் ஸார்! கோகிலா இப்படிச் செய்வாள் என்று எதிர்பார்க்கவில்லை'' என்றேன்.

''ஏன், என்ன ஆயிற்று?'' என்றார் திருவேங்கடம்.

''யாரோ ஒரு பையன் அடிக்கடி கல்லூரிக்கு வருகிறானாம். இவளும் லீவு எடுத்துக்கொண்டு அவனுடன் ஊர் சுற்றுகிறாளாம். அவனைத் கல்யாணம் செய்துகொள்வதாகச் சொல்லுகிறாளாம்'' என்றேன்.

''அப்படியா! எனக்குத் தெரியாதே! நல்ல பெண்தான். நல்ல குடும்பம். பாவம்! என்ன செய்வாள்? இந்த ரங்கநாதன் சகோதரர்கள் இப்படிச் செய்கிறார்களே! மூத்தவன் நிலத்தை விற்கச் சம்மதித்தான். நல்ல விலையாக ஒரு சாயபு கேட்டார். ஆனால் மூத்தவனின் மனைவி நிலத்தை விற்கப் பச்சைக் கொடி காட்டமாட்டேன் என்கிறாளாம். இது எப்படி முடியப் போகிறதோ? பெரியவருடைய கையெழுத்து இல்லாமல் நிலத்தை எப்படி வாங்குவார்கள்? அவர் காச்மீரில் உட்கார்ந்திருக்கிறார்'' என்று கூறித் திருவேங்கடம் வருந்தினார்.

இந்தப் பேச்சைத் தொடர்ந்து என் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டு நான் வந்துவிட்டேன். அதன் பின்னர்ப் பல இடங்களுக்குப் போக வேண்டியிருந்தது. பம்பாயில் பத்து நாட்கள் புத்தகக் காட்சி, கோயம்புத்தூரில் ஆறு நாட்கள் என்று அலைந்து முடித்துவிட்டு வீடு திரும்பியவுடன் கோகிலா, நாகசாமி திருமணப் பத்திரிகை வீட்டில் காத்திருந்தது.

அதைத் தவிர டைரக்டர் மனைவியே வந்து போனதாக என் மனைவி மக்கள் பெருமையுடன் சொன்னார்கள். 'அடே! நம் உழைப்பை டைரக்டருடன் அவர் குடும்பங் கூடப் பாராட்டுகிறதே' என்று எண்ணி மகிழ்ந்தேன்.

அந்த நல்ல அபிப்பிராயத்தைக் குறைத்துக்கொள்ள விரும்பாமல் மாப்பிள்ளை அழைப்புக்கே போய், சில எடுபிடி வேலைகளையும் செய்தேன். சற்று உற்சாகமாக வளைய வந்தேன்.

திருமணத்துக்கு அனைவரையும் அழைத்திருந்தார்கள். பள்ளித் தலைமையாசிரியர்கள், கல்லூரி லெக்சரர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். அதில் கோகிலாவின் கல்லூரிப் பிரின்சிபால் குமாரி தன்யகுமாரியும் வந்திருந்தார்கள். தொழில் ஒட்டுறவுடன் குடும்ப வரவேற்பாகச் சென்று முகமன் கூறி வரவேற்றேன்.

முகூர்த்தம் முடிந்து தேங்காய்ப் பை வழங்கும் நிலையில் குமாரி தன்யகுமாரியை வழியனுப்பும் சமயம். ''என்னமோ மாடம். நாம் பயந்து போய் விட்டோம். கடைசியில் கோகிலா பெரியோர் பார்த்த பையனையே மணந்துகொண்டு விட்டாள். நல்லதாய்ப் போயிற்று'' என்று கூறினேன்.

''அவள் கெட்டிக்காரிதான். தான் பிடித்த பிடியை விடவேயில்லை. தன் எண்ணப்படியே அதே அங்கிளையே கல்யாணம் செய்து கொண்டு விட்டாளே!'' என்றார் தன்யகுமாரி.

''என்ன மாடம் சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லையே!'' என்று கேட்டேன்.

''இந்தப் பையன் நாகசாமிதான் கல்லூரிக்கு வருவான். கோகிலாவுடன் அரட்டை அடிப்பான்;



உலாவச் செல்வார்கள். அவள் தான் சொன்னபடியே செய்து விட்டாள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார்கள்.

எனக்குச் சப்பென்று போய் விட்டது. ஏதாவது திரில்லாக இருக்கும், ஒருவனை வரித்துவிட்டு இன்னொரு பாய் பிரண்டுடன் கலந்துவிட்டு, மனம் மாறி இப்போது காத்திருந்தவனையே கட்டிக் கொண்டு விட்டதாகக் கதை போகும் என்ற நிலையில், இது முன்பே தெரிந்துவிட்ட சஸ்பென்ஸ் இல்லாத கதையாகத் தோன்றியது. என் மனம் விழுந்து விட்டது. கூட்டம் கலைந்த பிறகு சாவகாசமாக மாடியில் இருந்த நாகசாமியைச் சந்தித்தேன்.

''வாங்கோ மாமா! உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் நான் மட்டும் அல்ல; கோகிலா கூடத்தான்'' என்று சொல்லிவிட்டு ஒரு சிறுவனை விட்டுக் கோகிலாவை மாடிக்கு அழைத்துவரச் செய்தான். இருவரும் சேர்ந்து வணங்கினார்கள்.

''எனக்கு எதற்கப்பா நன்றி? நீதான் அவளையே விடாமல் அடைகாத்துக் கட்டிக் கொண்டிருக்கிறாய்'' என்றேன்.

''அங்கேதான் உங்கள் உதவி தேவைப்பட்டது. உதவிசெய்து கல்யாணத்தை முடித்து வைத்தீர்கள்'' என்றான் நாகசாமி.

''நீங்கள் இவரிடம் அன்பாக இருப்பதையும் எங்கள் திருமணம் பற்றி அக்கறை காட்டுவதையும் அடிக்கடி பள்ளிக்கும் கல்லூரிக்கும் வந்து போவதையும் அறிந்து ஒரு திட்டம் தீட்டினோம்'' என்றாள் கோகிலா.

''திட்டமா! என்ன திட்டம்?''

''விளக்கமாகச் சொல் கோகிலா'' என்றான் நாகசாமி.

''சொல்கிறேன். காச்மீர் அண்ணா மன்னி நிலத்தை விற்க இஷ்டப் படாமல் காலம் கடத்தி வந்தார்கள். அவர்களை மாற்றி வழிக்குக் கொண்டுவர, ஒரு திட்டம் தீட்டினோம். அதன்படி நானும் இவரும் சேர்ந்துகொண்டு பிரின்சிபால் கண்ணில் படும்படி சற்று அதிகமாகவே பழகினோம். இவர் யார் என்பதைச் சொல்லாமலேயே அவர்களும் அழைத்துக் கண்டித்தார்கள். அதையும் மீறிப் பழகினோம்.

''இது எப்படியும் பரவும் என்று எங்களுக்குத் தெரியும். அது உங்களால் என் சின்ன அண்ணாவுக்குத் தெரிந்திருக்கிறது. அவர் காஷ்மீர் அண்ணாவுக்கு எழுதியிருக்கிறார். காச்மீர் அண்ணாவுக்கு இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு நிற்கிறார்கள். அந்தப் பெண்களின் அத்தையான நான் தவறாக நடந்து கொண்டால் அந்தப் பெண்ணின் திருமணம் பாதிக்கப்பட்டுவிடுமே என்று பயந்து காச்மீரத்து மன்னி உடனே ஓடிவந்து நிலத்தை விற்றுவிட்டு இத்தனை சீக்கிரம் கல்யாணத்தை நடத்திவிட்டாள். அந்த வகையில் எங்கள் நட்புப் பற்றி அண்ணாவுக்குத் தெரிவித்ததில்தான் உங்கள் முக்கியத்துவம் வருகிறது. உங்களுக்கு எங்கள் இருவர் சார்பிலும் நன்றி'' என்றாள் கோகிலா.

அப்படியா சமாசாரம்? நான் அறியாமல் என் தொழிலுக்காக நான் பேசிய வம்புப் பேச்சுக்கூட ஒரு காரியத்தை முடித்துவிட்டதா? ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்துவார்களாம். நான் காதால் கேட்டதை உளறிக்கூட ஒரு நடக்காத கல்யாணத்தை நடத்திவைத்துவிட்ட திருப்தியுடன் வீட்டுக்குத் திரும்பினேன். ❋

RANE (MADRAS) LIMITED

manufacture

Tie Rod Ends/Steering Linkages
Clutch Discs and Steering Gears
for Automobiles

RANE (MADRAS) LIMITED

61, VELACHERI ROAD

MADRAS 600032

Telephone :	Telegram :	Telex :
414344	**TIEROD**	**041-432 IN**

தெய்வ ஜனனம்!

கௌதம நீலாம்பரன்

மகாதேவ குருக்கள் ஈசான மூலையிலிருந்த கிணற்றில், அந்த அழுக்குப் படிந்த கறுப்புக் குடத்தைக் கயிற்றில் கட்டி இறக்கினார். சகடையின் கிரீச் ஒலி நாராசமாய் ஒலிக்க, அது ஜலத்தில் போய் விழுந்தது. அது பித்தளைக் குடந்தான்.

தூர் எடுத்து நெடுங்காலமாகி விட்ட நீரை இறைத்துச் சுற்றுக் கோவில் சுவாமிகளுக்கு அபிஷேகத்தை ஆரம்பித்தார் மகாதேவர்.

மலைக்குகைகளைப் போல் மதில் ஓரமாக உட்சுற்றில் அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு சந்நிதிக்குள்ளும் இருளும் வௌவால் புழுக்கைகளின் நெடியுமே மண்டிக் கிடந்தன. விக்கிரகங்கள் அந்தக் குருட்டுப் பறவைகளால் அசுத்தப்படுத்தப்பட்டிருந்தன. கோட்டை கொத்தளம் போன்ற இந்தப் பிரம்மாண்டமான ஆலயத்துக்கு இப்படி ஒரு கதி வந்துவிட்டதே என்ற கலக்கத்துடன் மௌனமாக அழுதபடி தம் மனப் புலம்பல் தமக்கே கேட்டுவிடக் கூடாதென்று மந்திரங்களைச் சற்று உரக்க உச்சரித்தபடி அவர் எல்லாச் சுவாமிகளுக்கும் அபிஷேகம் செய்தார்.

ஒரு காலத்தில் அது பரிசாரகர், மாலைகட்டிப் பண்டாரம், மேளகாரர், ஓதுவார், மெய்காவல் என்று பரிவாரங்களுடன் நாலு காலப் பூஜையுடன் அமர்க்களப்பட்ட ஆலயந்தான். இப்போது அதெல்லாம் பழங்கனவுகள். பரிசாரகரும் அவர்தாம்; பண்டாரமும் அவர்தாம். அந்தக் காலத்தில் கோவிலைக் கட்டிய மகானுபாவன் சுற்றுக் கோவிலில் இத்தனை சந்நிதிகளை வைத்துவிட்டுப் போய்விட்டான். இப்போது மகாதேவர் அபிஷேகம் செய்யவும் முடியாமல், செய்யாமல் விட்டுவிடவும் மனம் இல்லாமல் திண்டாடுகிறார். ஒரு சுற்று எல்லாச் சுவாமிகளுக்கும் அபிஷேகத்தை முடித்துக்கொண்டு வருவதற்குள் அவருக்கு மூச்சு வாங்குகிறது.

'''வெறும் தண்ணீரைப் புரோட்சணம் பண்ணுகிற இந்தக் காரியத்துக்காவது பகவான் என் உடம்பில் சக்தியைக் கொடுக்க வேண்டும்'' என்று அவர் மனம் பதைக்கப் பிரார்த்தித்துக் கொள்வார்.

அபிஷேகம் முடிந்தது. சந்தனம், பத்திரம் சாத்த ஒரு சுற்று வரவேண்டும். அப்புறம் மடைப்பள்ளிக்குப் போய் நைவேத்தியம் வைக்க அடுப்போடு மல்லாட வேண்டும். பிறகுதான் சுவாமி அம்பாளுக்கு அபிஷேகம். அபிஷேகம் ஆன பிறகு சுவாமியைப் காக்க வைக்கக் கூடாது. காலைச்சந்தி முடிந்துவிட்டால் அவரும் அக்கடாவென்று போய் முடங்கிவிடலாம். அப்புறம் சாயரட்சை. அப்போது அபிஷேகமெல்லாம் கிடையாது. தீபங்களை ஏற்றி, இராச்சாப்பாட்டை வடித்து நைவேத்தியம் செய்துவிட வேண்டியதுதான்.

''சாமி, குடலேல பூப்பறிச்சு வச்சுட்டேன்.''

மகாதேவ குருக்களுக்கு ஒரே ஒத்தாசையாக அங்கே புண்ணியம் கிடைக்குமென்று அவஸ்தைகளைப் பங்கு கொள்ளும் ஒரே ஆத்மா, மெய்காவல் செவிட்டுப் பிள்ளை குரல் கொடுத்தார்.

அவருக்குப் பூர்வத்தில் ராமலிங்கம் பிள்ளை என்று பெயர். அதெல்லாம் இப்போது யாருக்கும் நினைவில்லை. செவிட்டுப் பிள்ளை என்றுதான் தெரியும். அது பாட்டுக்குக் குடலையைத் தூக்கிக்கொண்டு கையில் ஒரு துறட்டை ஏந்தியபடி கடமையே கண்ணாக நந்தவனத்தில் சுற்றிக்கொண்டிருக்கும்.

மடைப்பள்ளியில் ஒரு பெரிய புகை மூட்டம் சுழன்றது. மகாதேவர் கண்களைக் கசக்கி நெருப்பைத் தேடிக் கொண்டிருந்தார். நெருப்பில்லாமல் புகையுமா?

கோவில் வாசலில் ஒரு கறுப்பு அம்பாசிடர் கார் வந்து நின்றது. அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தையும் மதித்து ஒரு கார் உள்ளே நுழைந்திருக்கும் அதிசயத்தைப் பார்க்க, அங்கே கிராமத்துச் சிறுவர்கள் ஓடி வந்து சூழ்ந்திருந்தனர். காரிலிருந்து ஓர் இளைஞன் கம்பீரமாக இறங்கினான். சந்தன வண்ண டெரிகாட் பேண்ட், அதே நிறத்தில் ஒரு ஷர்ட், நாடகம், சினிமாவில் வருகிற ஜமீன்தார்கள் அணிகிற உடைகள் மாதிரி. அதில் கழுத்தைச் சுற்றி மார்பில் ஒரு பதக்கம் தொங்குகிற எம்பிராய்டரிக் கோலங்கள். ஆள் பளிச்சென்று சுச்சிதமாகக் கதாநாயகன் மாதிரி இருந்தான்.

வேலைக்காரன் மாதிரி ஒருவன் பின் தொடர, அவன் கோவிலினுள் நுழைந்தான். செவிட்டுப் பிள்ளைதான் முதலில் கவனித்தது. மடைப்பள்ளியிலிருந்து மகாதேவர் ஓடி வந்தார்.

புதியவனைப் பார்த்து, ''வாங்க, என்ன வேணும்? எங்கேருந்து வர்றேள்?'' என்று விசாரித்தார். மகாதேவரின் கண்களில்வாசல் கேட்டருகே கார் நிற்பதும் தென்பட்டது.

''சாமி, நான் திருச்சியிலேயிருந்து வர்றேன். ராஜேஷ்னு பேரு. சுவாமி அம்பாளுக்கு ஒரு சின்ன அபிஷேகம் பண்ணணும்.''

ராஜேஷ் அந்தக் கிராமத்தில் தன் மூதாதையர் வாழ்ந்ததாகச் சொன்னான். மேட்டுத் தெருவில் குடியிருந்த அவர் பெயர் பெரியசாமியோ, முனிசாமியோ ஞாபகம் இல்லை. குடும்பம் சென்னைக்குப் போய்த் தங்கி மூன்று தலைமுறைக்கு மேலாகிவிட்டன. தாத்தா காலத்திலேயே பம்பாய்ப் பக்கம் வேலைக்குப் போனார்கள். வருஷத்துக்கு ஒரு தரம் இங்கே வந்து பூஜை நடத்தினார்கள். அப்பா காலத்திலே முப்பது வருஷமாக அதுவும் விட்டுப் போய்விட்டது. இப்போது சுவாமியே அப்பாவின் கனவில் வந்து, 'என்னை மறந்துட்டியாடா?' என்று கேட்டிருக்கிறார். ஹார்ட் பேஷண்டான அப்பாவுடைய ஆணையின்படி பிள்ளை வந்திருக்கிறான். திருச்சியில் யாரோ தூரத்து உறவுக்காரர்கள் இருக்கிறார்கள்.

கதை மிகவும் பழைய காலத்து விஷயமாக இருந்ததால் அதை அதற்கு மேல் துருவ விரும்பவில்லை. மகாதேவர். ''பேஷாப் பண்ணிடுவோம். நல்ல சமயத்தில்தான் வந்திருக்கேள். சுவாமி அம்பாளுக்கு இன்னும் அபிஷேகம் ஆகலே'' என்று ஒப்புக் கொண்டார்.

ராஜேஷின் பணியாள் கூடை நிறைய அபிஷேகச் சாமான்களைக் கொண்டு வைத்தான். பெரிய பெரிய ரோஜா மாலைகள் வந்திருந்தன.

குளிரக் குளிர நல்லெண்ணெய் சாத்தி, திரவியப் பொடி, பால், இளநீர், பன்னீர் என்று மணக்க மணக்க அபிஷேகத்தை முடித்தார், மகாதேவ குருக்கள். ''இதோ, நொடிப் போதிலே புளிக்காய்ச்சல் போட்டு ஸ்பெஷலா நைவேத்தியம் தயார் பண்ணிடறேன். சித்த இப்படி உட்காருங்கோ'' என்று மண்டபத்தில் ஒரு பெட்ஷீட்டைக் கொண்டு வந்து விரித்தார்.

''வேண்டாம் சாமி, நீங்க பொறுமையாக் காரியத்தைப் பாருங்க. மத்தியான்னத்துக்குள்ளே நான் புறப்பட்டாப் போரும். மூணு மணி நேரத்திலே திருச்சி போயிடுவேன். எனக்கொண்ணும் அவசரமில்லே. ரொம்பக்காலம் கழிச்சு எங்க குலதெய்வத்தைத் தரிசிக்கிற பாக்கியம் எனக்குக் கெடைச்சிருக்கு. இப்படிப் பிரதட்சணம் பண்ணிக்கிட்டே இருக்கேன்'' என்றான் பவ்யமாக.

''ஆஹா, என்ன பக்தி! இந்தக் காலத்துலே யாரு இப்படியெல்லாம் சுவாமிகிட்ட விசுவாசமா இருக்கா? என் புள்ளையே இந்தத் தொழில் எனக்கு வேண்டாம்னுட்டுப் பட்டணம் போய்ட்டான். பெரிய வேலையில்தான் இருக்கான். ஆயிரத்துக்கு மேலே சம்பளம். என்னையும் வாவான்னு சொல்றான். ஆனால் எனக்கு இஷ்டம் இல்லே. இந்த ஈசுவர கைங்கர்யத்துலேயே கடைசி மூச்சு வரை இருந்துடணும்னு ஆசை. அதான் மனைவி தவறிப் போனப்புறமும் விடாப்பிடியா இங்கேயே கெடக்கேன். இங்கே சுவாமி ரொம்பச் சக்தி உள்ளவர். பாருங்களேன், உங்களைப் பம்பாயிலிருந்து இங்கே வரவழைச்சுடலையா? எப்பவோ சோழ ராஜாக்கள் கட்டினது. அப்புறம் சரபோஜி மகாராஜா காலத்துல திருப்பணி நடந்திருக்கு. இந்தக் காலத்து மனுஷாளுக்கு இதிலெல்லாம் பிடிப்பில்லே. கோவிலுக்கு ஏராளமா நெலமிருக்கு. யார் யாரோ பயிர் பண்ணிச் சாப்பிடறா. ஒருத்தரும் கோவில்ல விளக்கெரியறதான்னு கூடக் கவனிக்கிறதில்லே.'' மகாதேவர் இதை யார் வந்தாலும் ஒரு பாட்டம் சொல்லித் தீர்த்துவிடுவார்.

மகாதேவர் மடைப்பள்ளிக்குள் நுழைந்துவிட்டார். புளிக்காய்ச்சல் தயாராகிக்கொண்டிருந்தது. ராஜேஷ் கோவிலைச் சுற்றி வந்தான். உண்மையில் பெரிய கோவில்தான். மகா மண்டபத்தில் ஓர் ஓரமாகப் பெரிய கல்திண்ணையில் உற்சவ மூர்த்திகள் வரிசையாகப் பளிச்சிட்டன. அப்பா! எவ்வளவு பெரிய விக்கிரகங்கள்! பெரிய பெரிய திருவாசிகள் வேறே. நடராஜர் மிகவும் அற்புதமாக முயலகனை மிதித்து நிருத்தம் செய்துகொண்டிருந்தார்.

மகாதேவர் வந்துவிட்டார். நைவேத்தியம் தயார். ''என்ன அப்படி மெய்ம்மறந்து நின்னுட்டேள்? இவ்வளவு சுவாமிகளும் ஒரு காலத்தில் கம்பீரமாகச் சகடங்களில் அமர்ந்து வீதி உலாப் பண்ணியவைதாம். எல்லாம் எங்க தாத்தா காலத்தோட நின்னு போச்சு. ஒரு ஆருத்ரா தரிசனத்தின்போது இந்த நடராஜர் தேர்ல எழுந்தருளியிருந்தார். திடீர்னு ஒரு பய தேர்த் தொம்பைல பந்தத்தைக் காட்டிட்டான். மளமளன்னு பெரிசாத் தீப்புடிச்சுண்டுடுத்தாம். அப்பத் தேர்ல எங்க தாத்தா இருந்திருக்கார். சுவாமிக்கு எந்த ஊனமும் வந்துடக்கூடாதுன்னு அப்படியே ஒரு குழந்தையைத் தூக்கறாப்பல அணைச்சுண்டு கீழே குதிச்சிருக்கார். நல்ல வேளை! கீழே மணல் குவிஞ்சுகெடந்த இடத்துல அவர் விழுந்திருக்கார். அவர் கால் முறிஞ்சு போனாலும் சுவாமிக்கு எந்த ஊனமும் இல்லை. பண்டார சந்நிதிகள் நேராப் பொறப்பட்டு வந்து தாத்தாவைப் பாராட்டி ஒரு ஏக்கர் நிலங் கூட எழுதி வச்சாராம். அதெல்லாம் அந்தக் காலம். இப்ப ரதமாவது உற்சவமாவது! இந்த ஐம்பொன் சிலைகள் வெளவால் புழுக்கைகளோட உள்ளேயே அடைஞ்சு கெடக்கற காலம் இது.'' மகாதேவர் பெருமூச்சு விட்டார்.

பூஜை நடந்தது. ராஜேஷ் அர்ச்சனைத் தட்டில் நூறு ரூபாய் நோட்டை வைத்தான். குருக்கள் மிரண்டு விழித்தார். ''சும்மா இருக்கட்டும், சாமி! சிரமப்பட்டு எனக்காக எல்லாம் சிறப்பாச் செஞ்சிருக்கீங்க. பம்பாயிலேயிருந்து வந்துருக்கேன். இனி எப்ப வரப்போறேனோ?''

ராஜேஷின் மலர்ந்த புன்னகை, பக்தி சிரத்தையோடு கூடிய சகஜ பாவம் அவருக்கு இதமாக இருந்தன. காலையிலே இருந்து ஒரு வாய் ஆகாரம் இல்லை. அசதியைக் கூடப் பொருட்படுத்தாமல் அவர் கணீரென்று அஷ்டோத்தரம் சொன்னார். தேங்காய் உடைத்து, தீபாராதனை முடிந்து, ராஜேஷ் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டுப் புறப்பட்டுவிட்டான். கார் புழுதியைக் கிளப்பிக்கொண்டு போய்ச் சேர்ந்தது.

பசி காதடைத்துக் கண் இரண்ட போதும் மகாதேவ குருக்களுக்கு ஓர் இனம் புரியாத மகிழ்ச்சி. சுவாமிக்கு ஒரு நாளாவது விசேஷமாகப் பூஜை நடந்த சந்தோஷத்தில் மனம் நிறைவாக இருந்தது. தேங்காய்க் கீற்றைத் தொட்டுக் கொண்டு புளியோதரையை உண்டார். அபிஷேகம் ஆன இளநீரைக் கல்லில் மோதி உடைத்துச் சுரண்டிக் கொண்டிருந்த செவிட்டுப் பிள்ளையையும் அழைத்துப் பன்னீர் இலையில் வைத்துப் புளியோதரையை வழங்கினார். அக்கடாவென்று மண்டபத்தில் துண்டை விரித்து ஐந்து மணி வரை தூங்கினார். குருக்கள் வீடு என்று எந்தக் காலத்திலோ கட்டிய வீடு இப்போது இடிந்து கிடந்தது. இப்போது அவர் நித்திய வாசமே இந்த மண்டபத்தில்தான்.

சாயரட்சைப் பூஜையின்போது மழை வரும் போல் இருந்தது. வானம் இருட்டிக் கிடந்தது. காற்று வேகமாக இருந்ததால் ஏற்றி வைத்த விளக்குகள் சிக்கிரமே அவிந்து போயின. சுவாமி அம்மன் சந்நிதியில் மட்டும் நிறைய எண்ணெய் விட்டு ஏற்றியிருந்தார். இன்னும் எறிந்துகொண்டிருந்தன. கதவுகளைச் சாத்திப் பூட்டிக்கொண்டு மறுபடியும் அவர் மண்டபத்துக்கு வந்து பெட்ஷீட்டை விரித்தபோது செவிட்டுப் பிள்ளை, ''வீட்டுக்குப் போயிட்டு இங்கேயே வந்துடறேன் சாமி!'' என்று கூறிப் புறப்பட்டார். இராத்திரி அவர் திரும்பும்போது மணி பத்திருக்கும்.

மகாதேவ குருக்களுக்கு உறக்கமே வரவில்லை. எல்லாத் தூக்கத்தையும் சாயங்காலமே தூங்கிவிட்டிருந்தார். பொத்தென்று ஏதோ சத்தம் கேட்டது. மணி பன்னிரண்டை நெருங்கும் நிசிப்போது. ஆள் நடக்கிற மாதிரி இருந்தது. ''யார் அது?'' என்று ஓர் அதட்டுப் போட்டார். எங்கும் ஒரே இருள். அவருக்கு ஏற்கனவே கண் கொஞ்சம் பழுது. எழுந்து பார்த்தும் ஒன்றும் தெரியவில்லை. மறுபடியும் படுக்கையில் சாய்ந்தார். சில நொடிகளில் யாரோ தட்டி எழுப்புகிற மாதிரி இருந்தது. எழுந்தார். அவர் மார்பின்மீது ஒருத்தன் அமுத்தினான். காதருகே மெல்ல ஒரு குரல் முணுமுணுத்தது. ''வீணா உயிரை இழக்காதே; சாவி எங்கேன்னு மட்டும் சொல்லு.''

எதிரே ஒரு பாட்டரி வெளிச்சம் அவர் முகத்தில் வட்டமிட்டது. அவர் விழிகளைச் சுழற்றித் தீர்க்கமாகப் பார்த்தார். கண்கள் கூசினாலும் எதிரே ராஜேஷ் தெரிந்தான்.

''அட பாவி! நீயா இப்படி?'' மகாதேவர் குரல் முழுக்க வெளிப்படவில்லை. அவர் வாய் பொத்தப்பட்டது. அவரை அப்படியே குண்டுக்கட்டாகத் தூக்கிப் போனார்கள். பிராகாரத்தில் சுவாமி கோயிலுக்குப் பின்புறம் நிறுத்தி மிரட்டினார்கள். இரண்டு மூன்று அடிகள் விழுந்தன. மகாதேவர் வாய் திறந்த போதெல்லாம் தகவல் எதுவும் வெளிவரவில்லை. ''அட பாவி, நன்னாயிருப்பேளாடா?'' என்ற சாபக் குரல்மட்டுமே ஊமை ஒலிச் சிதைவுகளாய் வெளிவந்தன.

''கிழவா, உன்னைக் கொல்ல வேண்டாம்னு பாத்தா நீயே உன் முடிவைத் தேடிக்கறே? நீ சொல்லலேன்னா என்ன? அந்தப் பூட்டை உடைக்க நாங்க இன்னும் கொஞ்சம் சிரமப்படணும். அவ்வளவுதான். முடிச்சுடுடா காரியத்தை'' என்றான் ராஜேஷ்.

முஷ்டிகள் அவருடைய வயிற்றிலும் மார்பிலும் பாய்ந்தன. ''ஈசுவரா, ஓய் செவிட்டுப் பிள்ளை!'' என்று நாலைந்து முறை கேவினார். ஒன்றும் பிரயோசனம் இல்லை. ஈசனும் செவிட்டுப் பிள்ளையும் ஒன்றாக உறங்கினார்கள். கிழம் எந்தச் சுவாமி கைங்கர்யத்திலேயே கடைசி மூச்சை விட விரும்பியதோ அது மட்டும் நிறைவேறியது, கழுத்து நெறிக்கப்பட்டு விழிகள் பிதுங்கி மகாதேவர் மண்ணில் சரிந்ததும், தூக்கிப் போய்த் துர்க்கை சந்நிதிக்கு எதிரே இருந்த சண்டிகேசுவரர் கோவிலின் குறுகிய வாசலுக்குள் திணித்தார்கள்.

செவிட்டுப் பிள்ளையின் மூக்கில் எதையோ காட்டினார்கள். அது மரக்கட்டை போல் அப்படியே கிடந்தது. அரை மணிப் போதில் அவர்கள் வந்த காரியம் முடிந்தது. நடராஜர் வெகுகாலம் கழித்து உலாப் புறப்பட்டார். அப்போதுதான் நசநசவென்று ஆரம்பித்த மழை சட்டென்று வலுத்துக்கொண்டதால் ஊர் ஒடுங்கிக் கிடந்தது. கார் அந்த ஊரிலிருந்து மெயின் ரோட்டைப் பிடிக்கிற கப்பி மண் சாலையில் விரைந்தது.

அது சென்னையில் ஓர் ஒதுக்குப்புறமான இடம். அந்தப் பங்களாவின்முன் காரில் வந்து இறங்கினான், ராஜேஷ். ஓடிவந்து வரவேற்ற ஒரு பணியாளிடம், ''தலைவர்

இருக்கிறாரா?'' என்று வினவினான். இருப்பதாக அவன் தலை அசைத்ததும் மாடிக்கு விரைந்தான்.

சினிமாவில் வரும் அரண்மனை செட் மாதிரி ஆடம்பர அலங்காரங்களுடன் விரிந்து கிடந்தது, அந்த மாடி. தலைவர் ஒரு சோபாவில் வீற்றிருந்தார். முன்னால் பிரம்மாண்டமான மேஜை, ஒரு செயற்கை விமானத் தளம் போல். வண்ண வண்ணமாக டெலிபோன்கள், பூக்கூஜா; தங்க ரேக்குகளுடன் மின்னும் அரக்குக் கலசத்தில் வெளிநாட்டுப் பேனாக்கள் பளபளத்தன. இரண்டு மூன்று வெளிநாட்டுக்காரர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த தலைவர், ''வா, ராஜேஷ்! தென்னிந்தியாவிலே உன் திருப்பணிகள் நல்லா நடந்துச்சா?'' என்று அவனை வரவேற்று உபசரித்தார்.

''நெறையச் செலவு பண்ணி ஏழெட்டுக் கோவில்லே அபிஷேகங்கள் பண்ணி ஏகப்பட்ட புண்ணியத்தைச் சம்பாதிச்சிருக்கேன் எசமான்!'' என்றவாறே ராஜேஷ் அன்றைய தினசரி ஒன்றை எடுத்துத் தலைவரின் முன்னால் விரித்துப் போட்டான். அது அந்தக் கொள்ளிடக் கரைக் கிராமத்தில் நடராஜர் சிலை களவாடப்பட்ட விவரங்களை, மகாதேவ குருக்கள் படுகொலையை, படங்களுடன் நெஞ்சுருக விவரித்திருந்தது. ஊர்ச் சிறுவர்களும் செவிட்டுப் பிள்ளையும் விசாரிக்கப்பட்டிருந்தார்கள்.

''அப்ப, தென்னிந்தியப் பிரயாணம் அட்டகாசமான வெற்றின்னு சொல்லு!'' என்று தலைவர் உற்சாகத்தில் மிதந்தார். ராஜேஷ் அமைதியாகப் புன்முறுவல் பூத்தான்.

''பொருள்கள் பத்திரமாக வந்தாச்சா? பிரச்னை ஒண்ணும் இல்லையே?''

''எல்லாம் வரவேண்டிய இடங்களுக்கு வந்தாச்சு. எப்ப இடம் மாத்தணும்னு சொல்றீங்களோ, அப்ப மாத்திடலாம். நாலஞ்சு இடங்களிலே அப்படியே ஸெட்டா அள்ளிட்டேன. இந்த ஒரு இடத்திலேதான் ஒரு கொலை தவிர்க்க முடியாம ஆயிடுத்து. ஒரேயொரு நடராஜர் சிலை மட்டுந்தான் எடுத்தார முடிந்தது. அற்புதமான சிலை. இன்னும் சில இடங்கள்ளே போட்டோ எடுத்து வந்திருக்கேன். பிளானும் ரெடி. ஆனா, அடுத்த டூர் இந்தக் கொலை வெவகாரம் முடிஞ்சப்பறம் போகலாம்னு நெனைக்கிறேன்'' என்றான்.

''அதை விடு; நான் பார்த்துக்கறேன். இனிமே நீ இவ்வளவு சிரமப்பட வேணாம். நான் ரொம்ப நாளா நெனைச்சு ஒரு திட்டம் தீட்டியிருக்கேன். அதன்படி நாம எந்தக் கோவில்ல சிலையைக் களவாடப் பிளான் பண்றோமோ அந்தச் சிலைகளுக்குப் போலிச் சிலைகளைத் தயார் செய்துவிட்டு, ஒரிஜினலைத் தள்ளிக் கொண்டு வந்துடணும். இதுல உண்மை வெளிவர ரொம்ப நாளாகும். நாம தப்பிக்கவும் நெறைய வழிகள் இருக்கு.



அதுக்காக ஒரு பெரிய உலைப் பட்டறையை நிர்மாணிச்சிருக்கேன். ஒரு சிலை எப்படி உருவாக்கப் படுகிறதுன்னு இவங்கள்ளாம் தெரிஞ்சுக்கப் பிரியப்படுறாங்க. நீதான் இவங்களை அங்கே அழைச்சுக்கிட்டுப் போகப் போறே. நீயும் பார். இவங்களுக்கும் வெவரமாச் சொல்லு. எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கு. இரவு நாம் சந்திக்கலாம். இன்னிக்கே உன்னோட அந்த அற்புத நடராஜருக்கும் இவங்ககிட்ட நாம பேரம் பேசிடுவோம்'' என்றார் தலைவர்.

தலைவரின் கட்டளைப்படி ஓர் ஆள் வந்து அந்த வெளிநாட்டுக்காரர்களையும் ராஜேஷையும் காரில் அழைத்துச் சென்றான். கார் அந்த இரகசியத் தொழிற்சாலைக்குச் சென்றது. ஒரு பெரிய கட்டிடத்தின் அடித்தளத்தில் அமைத்திருந்த பெரிய நிலவறை ஒன்றில் அந்த உலைப் பட்டறை செயல்பட்டது.

போலிச் சிலைகள் உருவாக்கப்படும் அந்தப் பட்டறையைச் சுற்றிப் பார்த்த ராஜேஷ் ஸ்தபதிகளிடம் சிலைகள் உருவாக்கும் விதத்தை விசாரித்து, அந்த வெளிநாட்டுக்கராார்களுக்கு விளக்கினான்.

ஸ்தபதி, ''இது ஒரு புனிதமான தொழில்'' என்றார். ஒரு வெளிநாட்டான் விசாரித்தான்; ''இது எப்படிப் புனிதமான தொழிலா இருக்க முடியும்? இப்படித் திருட்டுச் சிலைகளைச் செய்யற காரியத்துக்காக நீங்க வருத்தப்படறதே கிடையாதா?''

அந்த வயது முதிர்ந்த ஸ்தபதி சொன்னார்; ''நாங்க பரம்பரை பம்பரையா இந்தப் புனிதமான தொழிலைச் செய்து வர்றோம். இப்ப, தேசத்தில் கோவில் சுவாமின்னு எதிலயும் பற்றில்லாமப் போய் நாங்க இந்த ரகசியத் தொழிற்சாலையில் போலிச் சிலைகளை உருவாக்கற காரியத்தைச் செய்ய நேர்ந்து போனாலும் எங்களைப் பொறுத்த வரை இந்தத் தொழில் புனிதமானதுதான். நாங்க செய்யற சிலைகளைக் கோவில்லதானே கொண்டு போய் வைக்கப் போறாங்க? மக்கள் அதைத் தங்கள் தெய்வமா எண்ணி இருதய சுத்தியோட வணங்கத்தானே போறாங்க? நம்பி வழிபடறவங்களுக்குத் தெய்வம்னு தெய்வந்தான். இதிலே போலி அசலுங்கற பேதமெல்லாம் கெடையாது. நாங்க வருத்தப்படறது உண்டு. அது இந்தத் தொழில் கேவலம்னு நெனைச்சு இல்லே. இந்தத் தேசத்தினுடைய ஆத்மா திருடப்படுகிறதே என்றுதான். வெளிநாட்டுக்காரங்களுக்கு சிலைதான் வேணும்னு, அதுமாதிரி ஆயிரம் சிலைகளைச் செய்து தர எங்களால முடியும். இதோ, இப்படி ரகசியமா உருவாகிற சிலை எந்த நாட்டுக்குப் போனாலும் நாங்க வருத்தப்பட மாட்டோம். ஆனா வெளிநாட்டுக்காரங்க விரும்பறது இந்தத் தேசத்தின் புராதனச் சிலைகளை. ஆயிரம் ஆயிரம் வருஷமா இந்த மண்ணின் மனித ஆத்மாக்கள் ஜன்மந்தோறும் வணங்கி வணங்கி வளர்த்த நம்பிக்கைகளின் ஆதாரத்தை, ஆன்மிக விருட்சத்தின் ஆணி வேரை, அவர்கள் களவாட விரும்புகிறார்கள். அது எங்களுக்கு வருத்தம் அளிக்கிற விஷயந்தான். ஆனா நாங்க வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? அது இந்த மண்ணின் தலை விதியாகி விட்டது!'' ராஜேஷ் மொழி பெயர்க்க முடியாமல் திணறினான்.

''கொஞ்சம் அமைதியாப் பேசுங்க, முதியவரே! இந்த வெளிநாட்டுக்காரர்கள் உங்களிடம் தர்மோபதேசம் கேட்க வரலே. இவங்க பெரும் கடத்தல் மன்னர்கள். நான் வெளிநாட்டுக்காரன் இல்லை. தலைவரின் பிரதிநிதியாக இங்கே வந்திருக்கேன். நானும் இந்தக் கூட்டத்தில் ஒருவன். உங்க உணர்வுகளை என்னால் சரியாகவே புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் உங்களுக்குச் சாதகமாக அல்ல. நான்தான் உங்க பேச்சை மொழி பெயர்க்கிறேன் என்பது நினைவிருக்கட்டும். வீணா ஆபத்தைத் தேடிக் கொள்ளாதிங்க. இஷ்டம் இல்லாமல் போனால் இங்கே நீங்க வந்திருக்கக் கூடாது'' என்றான்.

''நாங்க இங்கே விரும்பியா வந்தோம் தம்பி? முதல்ல புதுசாக் கட்டிய ரெண்டு மூணு கோயிலுக்கு வேண்டிய சுவாமி விக்கிரகங்களை உருவாக்கித் தரணும்னு சொல்லித்தான் இங்கே எங்களை அழைச்சாந்தாங்க. அப்புறம் இங்கே உள்ள ரகசிய நடவடிக்கைகளைப் பாத்தப்புறந்தான் எங்களுக்கு உண்மை புரிஞ்சுது. கொன்னுடுவோம்னு மிரட்டி எங்களை இங்கே கைதிகளாட்டம் வச்சுருக்காங்க'' என்றார் ஸ்தபதி. அந்த முதியவரின் கண்கள் உருகின. ராஜேஷ் சங்கடப்பட்டான்.

''சரி, சிலையை உருவாக்குவது எப்படி என்பதைப் பத்திச் சொல்லுங்க!'' என்றான் சற்று அதட்டலாக.

''இங்கே இப்படி வெறும் லோகங்களை உருக்கி வார்க்கிற சிலைகளைப் பத்திப் பெருமையாச் சொல்லிக்க ஒண்ணுமில்லிங்க. அந்தக் காலத்துல ஒரு கோவில்ல சாமி விக்ரகம் வார்க்கணும்னா எங்களை வந்து பக்தி சிரத்தையா அழைச்சிக்கிட்டுப் போவாங்க. கோவிலுக்குப் பக்கத்திலேயே நாங்க பட்டறை போடுவோம். ஊர் ஜனங்க, தங்கள் இல்லங்களில் தலைமுறை தலைமுறையாப் பெரியவங்களால் உபயோகிக்கப்பட்ட பூஜைப் பாத்திரங்களைக் கொண்டுவந்து தருவாங்க. பித்தளைத் தட்டு, வெண்கலச் சொம்பு, பூஜை மணி, தூபக் கால், தாமிரப் பஞ்சாத்திரம், உத்தரணி, காசிச் சொம்பு என்று அவங்க தருகிற புனிதப் பொருள்களை உடைச்சு உருக்குவோம். பஞ்சலோகங்களைக் குகையில் போட்டு உருக்கி ஒண்ணு சேர்ப்பதே ஒரு தனிக் கலை.

''தெய்வ வடிவங்களின் முகங்களில் புனிதமான தேஜஸ் ஜொலிக்க, தங்கம் சேர்ப்போம். அந்தத் தங்கத்துடன், சுமங்கலியா இறந்து போன பத்தினிப் பொண்கள் அணிஞ்சிருந்த திருமாங்கல்யம், கைவளை போன்ற புனிதப் பொருள்களைக் கொண்டு வந்து மக்கள் போடுவாங்க. ஒவ்வொரு குடும்பத்தினரும், தங்கள் இல்லத்துப் பொருள் ஏதாவது ஒண்ணு அந்த விக்ரக வார்ப்பில் பயன்பட வேணுமென்ற தவிப்புடன் கொண்டாந்து குடுப்பாங்க. லோகக் கலவையை உருக்கறபோது உலையில் சக்கரம் சுழற்றக் கூட்டம் கூட்டமா வந்து காத்திருப்பாங்க. அந்தப் புனிதத் திருமேனியை வார்ப்பதில் தங்கள் சரீர உழைப்பும் இருக்க வேணும்னு அவர்கள் தவிப்பாங்க. மண்ணும் அரக்கும் கலந்து உருவாக்கிய விக்கிரக அச்சுகளில் உருகிய லோகக் கலவையை வார்ப்போம். அது வெறும் லோகக் கலவையல்ல தம்பி! இந்த மண்ணில் காலந்தோறும் மலர்ந்து உதிர்கிற மனித ஜீவன்களின் ஆத்மக் கலவை! ஆதார நம்பிக்கைகளின் புனிதக் கலவை!

''தெய்வ வடிவங்கள் வார்க்கப்படுவது ஒரு திருநாளாக் கொண்டாடப்பட்ட காலம் அது. நேரம், காலம் பார்த்து மிகுந்த சிரேயசான அதி உன்னத வேளையில் மங்கல நாதம் முழங்க, மந்திர உச்சாடனங்களுடன் நிகழும் அந்தத் தெய்வ ஜனனம் எத்தனையோ காவியங்களுக்குப் போடப்படும் கால்கோள் விழா. அப்படியெல்லாம் தொழில் செஞ்ச நாங்கதான் இன்னைக்கு இப்படி ஒரு ஈனத்தனத்துக்குத் துணை போறோம்! இதைப் பத்திச் சொல்ல என்ன இருக்குது?'' என்று புலம்பினார் அந்த ஸ்தபதி.

ராஜேஷ் மேற்கொண்டு மொழி பெயர்க்க முடியாமல் மீண்டும் திணறினான். 'எவ்வளவு புனிதமாக உருவாக்கப்பட்டு, எத்தனை புனித நெஞ்சங்களின் நம்பிக்கைகள் ஒன்று குவிந்து, காலங்கள்தோறும் இந்த மண்ணை, இதன் மக்களை வாழ வைத்த தெய்வ வடிவங்களை, கோடிப் பிரார்த்தனைகள் குவிந்து கிடக்கும் அந்த அற்புதத் திரு உருவங்களை, நாம் கொள்ளையடிக்கிறோம்!'

இந்த ஸ்தபதி சொல்வது போல், 'இந்த மண்ணின் ஆத்மாவைப் பிடுங்கிப் பணத்துக்காக வெளிநாட்டில் வீசி எறிகிறோம்' என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்த ராஜேஷின் உள்ளம் நடுங்கியது. 'அட பாவி, நீயா! நன்னாயிருப்பேயாடா?' என்று மகாதேவ குருக்கள் ஆயிரம் ஆயிரம் தடவை ஒலித்தார். ராஜேஷின் நெஞ்சு அப்படியே உருகிப் போய் அவன் ஒரு புதிய சிலையாக இறுகிப் போனான்.

❋


வாரீர் புதுமை தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril
பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு.
லிரில். அலையெறியும் தளதள பச்சை. அதன்
நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக்
குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.
லிரில்
புத்துணர்வு சோப் மனம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.
லின்டாஸ்-LR.27-203 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.


உங்கள் பாத்ரூமை வண்ணமயமாக அழகு படுத்த
பாரிவேரைப் போல வேறு ஏதுமில்லை!
"நான் விரும்புவது வெளிர் மஞ்சள்"
"என் உலகமே இளஞ்சிவப்புதான்"
"மரகதப் பச்சை
எனக்குப் பிடிக்கும்"
"என் விருப்பம் வெனிஷியன் சிவப்பு"
"எல்லோரும் விரும்புவது வெள்ளை நிறம்"
"கருப்பு ஒரு தனி அழகுதான்"
வெனிஷியன் சிவப்பு,
மரகதப் பச்சை, வானத்து
நீலம், வெளிர் மஞ்சள்,
பவழச் சிவப்பு அல்லது
கண்ணைப் பறிக்கும்
வெள்ளை, அது எந்த
வண்ணமாக இருந்தாலும்
இந்தியாவிலும், அயல் நாடு
களிலும் உள்ள லட்சக்கணக்
கானோர் தேர்ந்தெடுப்பது
பாரிவேர்தான். சானிட்டரி
வேர்களில் பாரிவேர்
ரகவரிசை தன்னிகரில்லாதது.
இணையில்லாத ஸ்டைல்.
வேலைப்பாடு, அசாதரண
உறுதி, நீடித்த உழைப்பு,
நெஞ்சை அள்ளும் எழில்
தோற்றம், இவ்வளவும்
கொண்டிருப்பதால்
சானிட்டரிவேர் என்றுலே
பாரிவேர் என்றாகிவிட்டது.
Parryware
VITREOUS
செராமிக்ஸ் பிரிவு,
ஈ.ஐ.டி.-பாரி (இந்தியா) லிட்.,
"டேர் ஹவுஸ்", சென்னை 600 001.
EID PW 3137A TAM

உயர உயரப் போகும் போது!

ராஜம் கிருஷ்ணன்

சின்னசாமி பெயருக்குரிய இளம் பருவத்தினராக இருந்த காலத்திலும், இப்போது பெரிய சாமியாக வயது முதிர்ந்த பிறகும் மாலை நேரங்கள் இயற்கையோடு ஒன்றி அநுபவிப்பதற்காக வருகின்றன என்று கருதுபவர். தெற்கோர மண்ணில் கீழைக்கடல் அலைப்பும் திருச்சீரலைவாய்க் கரையிலிருந்து ஒரு மணிநேரத்தில் நடந்து எட்டும் ஊருணிக் கரைக் கிராமத்தில் இயற்கைச் சூழலின் இனிமையில்! திளைத்தவர் அவர்.

இப்போது அழுக்கும் மலமும் படிந்த கூவம் ஆற்றின் கரையில் ஏழடுக்கு உப்பரிகையில் அமர்ந்தவாறு மாலைப் போதின் ரம்மியங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்.

அக்கரைச் சாலையில் ஏதோ ஓர் இனிப்புப் பண்டத்தை எறும்புகள் அப்பிக்கொண்டு இழுத்துச் செல்வதைப் போல் மனிதக் கூட்டம் மொய்க்கும் 'பஸ்' என்ற ஊர்திகள் செல்கின்றன. அக்கரையோரங்களில் வண்டி வண்டியாகக் கொட்டப் பெற்றிருக்கும் ஊர்க் கழிவுகள் கசுமலங்களிடையே காகங்கள், நாய்கள்; அப்பால் முட்டு முட்டாகத் தெரியும் குடிசைக்காரர்களின் உடைமைகளாகிய பன்றிகள். மேலே கும்பலாகப் பறக்கும் பறவைகள்; எல்லாம் உண்மையில் காகங்கள் அல்ல, பெரும்பாலும் கழுகுகளே என்பதை அவர் அந்த உயரக் கிராதியில் வந்து குந்தும் போதுதான் புரிந்துகொண்டிருக்கிறார்.

யாரோ இரண்டு பொடிப் பயல்கள், அழுக்குக்கும் மலத்துக்கும் அப்பாற்பட்ட ஆனந்த உணர்வுடன் கூவத்துச் சேற்று நீரில் மூழ்கித் துளைந்து களிக்கின்றனர். அந்தச் சிறுவர்களின் ஆனந்த ஆர்வம் 'குளோஸ் அப்' காட்சிபோல் அவருடைய புலனுக்குத் தோற்றி ஓர் வியப்பைக் கூட்டுகிறது. அந்த நீரும் சுழலும் கசடு படிந்திருக்கலாம். அவர்கள் பணம் செலவு செய்யாமல் அநுபவிக்கும் அந்த மகிழ்ச்சியில் கபடு இல்லை.

ஆற்றின் இக்கரையில் முட்புதர்களும் காட்டாமணக்கு, எருக்கஞ் செடிகளுமாக ஒரு பசிய அரண்; அடுத்து இந்த மாளிகையின் அகன்ற முற்றத்தை அழகு செய்யும் பளபளப்பான அணி.

சிவு அங்கே தன் ஒரு வயசுக் குழந்தைக்கு நடை பழக்குகிறாள். சிவு அவருடைய மகளின் மகள்.

அந்தக் காலத்தில் ஈச்சங்குடித் தச்சன் பூவரசங் கழி வெட்டி அவர் பையனுக்கு நடை வண்டி செய்து கொடுத்தான். கோபுவுக்கு அவன் முக்கால் ரூபாய் காசுக்குச் செய்து கொடுத்த வண்டியை எத்தனையோ குழந்தைகள் ஓட்டியிருக்கிறார்கள்.

ஆனால் இது, குழந்தையின் மொழு மொழுத்த கால்கள் இரண்டும் ஏதோ ஒரு கூடைக்குள்ளிருந்து வெளியே நீட்டிக்கொண்டிருப்பது போன்ற ஓர் அமைப்பு; நான்கு பக்கங்களிலும் பளபளக்கும் மெல்லிய கால்களில் சிறு உருளைகள் பொருந்தியிருக்கின்றன; குழந்தை தத்துப் பித்தென்று நடந்தாலும் விழாமல் பாதுகாப்பாக அடக்கிக் கொள்ளும் சாதனம். சிவு முன்னே நின்று கை நீட்டி அழைக்க, குழந்தை வண்டியுடன் ஓடி வருகிறது. புசுபுசு வென்று வெட்டி விடப்பட்ட கற்றை முடி நெற்றி ஓரத்தில் அழகாகத் தவழ, மெல்லிய லேசுகள் வைத்த கவுன் அசையக் குழந்தை பொம்மை போல் இருக்கிறது.

சிவு குழந்தையின் சாதனையைப் பாராட்டிப் புகழும் வகையில் கைதட்டுகிறாள். பிறகு எடுத்துக் கொண்டு கொஞ்சி முத்தமிட, ஆயா வண்டியைக் கையில் தூக்கிக்கொள்ள, முற்றத்திலிருந்து மறைகின்றனர். ஈச்சங்குடி எலிமெண்ட்டரிப் பாடசாலையில் (துவக்கப்பள்ளி என்ற பூப் போர்வை அணிந்து கொள்ளாத நாட்கள் அவை.) நான்காம் வகுப்புப் பிள்ளைகளுக்கு ஆசிரியராக இருந்த அவர் ஒரு கதை கூறுவதுண்டு.

வறியவனான நோயாளி ஒருவன் முன் கடவுள் தோன்றினார். ''ஒரே ஒரு வரம் தருவேன், கேள்'' என்றார். வறியவன் உடனே, ''ஏழாவது உப்பரிகை மேலிருந்து, என் கொள்ளுப் பேரன் தங்கக் கிண்ணத்தில் பாலமுதம் அருந்துவதைப் பார்க்க வேண்டும்'' என்றானாம். அந்தக் கதை அவருக்கு இங்கே வாழ வந்த நாட்களாகத் தோன்றிக்கொண்டிருக்கிறது.

அந்த வளமைகளும் வசதிகளும் தம்மை ஒட்டிக் கொள்ளாமல் தம்மைத் தனிமையிலேயே வைத்திருப்பது போன்றதோர் வறட்சி வாட்டுகிறது. உட்புறம் இசை மணிகள் இனிய ஒலிகளை எழுப்பும் கோவை. ''பிங்கு நடந்து வந்துச்சி. பாத்தியாம்மா? ஓடுது. நடையா அது?'' இளந்தாய் ஆனந்தம் கொள்ளாமல் மகளை அணைத்துக் கொண்டு முதியவரிடம் வருகிறாள். ''இதுதான் அமெரிக்காவேந்து வந்த வண்டியா?''

''ஆமா, தாத்தா. சொல்ல மறந்திட்டனே! நேத்து நீங்க பீச்சுக்குப் போயிருந்தப்ப, மாமா போன் போட்டாரு. இன்னிக்குத் திரும்பப் போறேன்னு சொன்னாரு.''

சின்னசாமி புருவத்தை உயர்த்திப் பார்க்கிறார்.

''கனடாவிலேருந்தா?''

''ஆமா. அவருக்கு நரேசைப் பத்தித்தான் ஒரே கவலை. அவன் என்னமோ எம்.ஏ.,பி.ஏ அது இதெல்லாம் படிக்கமாட்டேன்னு எழுதிட்டானும். அப்பாகிட்டச் சொல்லிட்டிருந்தாரு. பம்பாயிலேதானே எம். ஏ. படிச்சிட்டிருந்தான்?''

''அப்படின்னு அவர் சொல்றதுதான். அவன் ஒரு லீவுக்குக்கூட இங்க வரலே. கோபு ரெண்டு வருசத்துக்கு முன்ன இங்க வந்தப்ப, ஒரே ஒருநா வந்து தங்கிப் பாத்திட்டுப் போனவன்தான். எத்தினி தபா இவங்க கொல்லத் தலமாடுபோல் பம்பாய்க்குப் போறாங்க? எப்பப் போனாலும் ஆஸ்டல்லே இல்லங்கறாங்க. இங்க வாரது இல்லே'' என்று மகள் ரஞ்சிதம் குற்றம் படிக்கிறாள்.

''நல்ல பையனாச்சே! லவ்டேல் பள்ளிக்கூடத்தில் படிச்சிட்டிருந்தப்ப எல்லா லீவுக்கும் ஈச்சங்குடிக்கு வந்திடுவான். உங்கம்மா நாச்சாருக்கு ரொம்பப் பிரியம். வேலூரு ஆஸ்பத்திரிலே கண் மூடறதுக்கு முன்னக்கூட நரேசன்னுதான் முனகிட்டுச் சுத்திச் சுத்திப் பாத்தா. அப்பத்தான் புள்ளையை அவன் கனடாக்குக் கூட்டிட்டுப் போயிருந்தான்'' என்று கூறுகையில் நெஞ்சு கரகரக்கிறது.

''இந்தப் பயலுக்குத் தமிழே தெரியாது. பாட்டிகிட்டச் சமயல் ரூமில உக்கார்ந்து பேச என்ன இருக்குதுன்னு நெனச்சிப்பேன். அவகிட்ட தமிழ் கத்துக்கிட்டுக் குண்டு குண்டாத் தமிழில காயிதம் கூட எழுதியிருக்கிறான்.''

''அதென்னமோ, அப்பவே, 'மெடிஸினோ எலக்ட்ரானிக்ஸோ அல்லது வேற இன்ஜினீரிங்கோ படி. ஐ.ஐ.டி. பரிட்சை எழுது'ன்னு சொன்னாரு

மாமா; போயி லிடரேச்சர்ல சேந்திருக்குது. மாமா கவலைப்படுறாரு.''

''பிள்ளங்களைச் சின்ன வயசிலே தனியே விட்டுடக்கூடாது. ஹட்டாமப் போயிடும். 'எங்க புள்ள லங்டேல்ல படிக்குது' ன்னு பெருமையாயிருந்திச்சி அப்ப; இப்ப கெடந்து, சொன்னதைக் கேக்கலேன்னு கரயுறாரு.''

முதியவர் மறுமொழி கூறவில்லை. அந்தக் காலத்தில் முப்பது ரூபாய் வருமானத்தில் மூன்று பெண்களுக்கிடையே ஓர் ஆண் மகனாகப் பிறந்திருந்த பையனைப் பெரிய படிப்புப் படிக்க வைக்க எத்தனையோ கஷ்டப்பட்டார். பாளையங்கோட்டைக் கல்லூரிக்கு அனுப்பி அவனைப் பி.ஏ படிக்க வைக்க முக்கால் பட்டினி கிடந்த நாட்கள் அவை. இப்போதெல்லாம் அரிச்சுவடிக்கு முன்பே ட்யூஷன் வைக்கிறார்கள். பிள்ளைகளைத் திரட்டி வரவே வீடுவீடாகப் போக வேண்டியதோர் இடத்தில் ட்யூஷனாவது இன்னொன்றாவது! வாத்தியாரையா என்று குழம்பு கறிக்கு"மீனோ, வெற்றிலையோ வேண்டுமானால் இலவசமாகக் கிடைக்கும்; அந்தக் காலத்தில் கோபுவுக்குப் பட்டணம் போய் 'மெடிகல்' படிக்க வேண்டும் என்று மிகுந்த ஆசை; அதற்காகவே இரண்டாவது குரூப் பாடங்களை எடுத்துப் படித்தான். ஆனால் வெறுங்கை எப்படி முழம் போடும்?

இந்த ரஞ்சிதத்தைக் கட்டிய மாப்பிள்ளை அப்போது மிகச் சாதாரணமாகத்தான் இருந்தான். இரண்டாவது உலகப் போர் நடந்த காலம் அது. 'காண்ட்ராக்ட்' எடுத்து அந்தக் காலத்தில் மளமளவென்று பொருள் குவித்த பணக்காரர்களில் ஒருவனாகிவிட்டான். லுங்கி வியாபாரத்திலிருந்து ஊறுகாய் வரை ஏற்றுமதி வாணிபம் செய்யும் மிகப் பெரிய தொழிலதிபனாகி இருக்கிறான். அந்த வர்த்தகத் தொடர்பாகச் சொந்தக்காரர் அனைவரையும் இழுத்துக் கொண்டிருக்கிறான். கோபுவும் கூட 'காண்ட்டினெண்ட்டல் ஸ்டோர்ஸ்' என்ற அந்தக் கிளையை நடத்தும் பொறுப்பில்தான் இந்நாட்களில் கனடாவில் இருக்கிறான். முன்பு லண்டனில் இருந்தான்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரே அவர் கடைசிப் பெண் ருக்மிணியைக் கட்டிக் கொடுத்தார். பின்னரும் அவர் அந்தக் கிராமத்து வீட்டிலேயேதான் இரண்டாண்டுகள் தங்கி இருந்தார். பள்ளிக்கூடம் உயர்நிலைப்பள்ளியாக வளர்ந்ததைக் கண்களால் பார்த்துக் கொண்டு இதில் நமது பங்கும் இருக்கிறதென்ற உணர்வோடு, ஊருணிக்கரை, மாதா கோயில் வளைவைத் தாண்டி மீனவர் தெருக்களையும், விரிந்து கிடக்கும் உப்பளங்களையும் தாண்டி, கடலோரத்தில் நடந்து செல்வார். மண்ணில் கால் பதித்து நடப்பதற்கிணையான ஆனந்தம் வேறு ஏதேனும் உண்டா?

மீனவப் பிள்ளைகள் கடலில் முக்குளிப்பதையும் கட்டுமரத்தைக் கொண்டு சேர்ப்பதையும் பார்த்துக் கொண்டே நடப்பார். அந்தப் பிள்ளைகள் பள்ளிக்கு வரவே மாட்டார்கள். தொழில், உடல்வேட்கை, குடும்பம் என்ற பிரச்னைகள் அழுத்துமுன்னர், அந்தப் பிரச்னைகளைப் போக்கிக் கொள்ள ஒரே மாற்றென்று ஆரோக்கியமற்ற நாட்டுச்

சாராயத்தை நாடு முன்பு சிறுவரின் அந்தத் துடிப்பு மிகுந்த பருவம் எவ்வளவு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கக் கூடியதாக இருக்கும். அது கல்வி மலர்ச்சி காணாமல் பயன்படாமல் போய்க் கொண்டிருந்தது. பிள்ளைகளைக் கொட்டடிக்குள் அடைத்து, அவர்களுடைய வாழ்க்கையில் புரியாத, பரிசயம் இல்லாத பாடங்களைப் புகட்டும் போது அந்த முரண்பாட்டை அவர் சீரணித்துக்கொள்ள இயலாமல் தவித்ததுண்டு. இப்போதோ அவருக்கு எல்லாமே முரணாக இருக்கிறது. நடந்து செல்ல மண் இல்லை.

''பீச்சுக்குப் போகலாமா? கூட்டிட்டுப் போறியா?'' என்று மகளிடம் கேட்டுக் கொண்டே இருந்தார்.

கார் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் ஓட்டுபவன் வசதியில்லை.

''இங்கதான் மாடில காத்துப் பிச்சிட்டுப் போகுதே! காத்துக்குப் பீச்சு வேணுமா?'' என்று மகள் மடக்கினாள்.

'மனிதனுக்கு நடக்கக் கால்கள் கொடுத்திருக்கிறார் கடவுள். இவர்கள் உட்கார்ந்தே, படுத்தே பொழுதைக் கழிக்கச் சொல்கிறார்களே!'

''தாத்தா! தாத்தா! ஓவர்ஸீஸ் கால்; வந்திருக்கு. வாங்க, மாமா கூப்பிடுறாரு.''

அவர் எழுந்து சென்று ரிஸீவரைக் காதில் வைத்துக் கொள்கிறார். கை நடுங்குகிறது. ''அப்பா! கோபு பேசுறேன். நல்லாருக்கீங்களா?'' அந்தக் குரலைக் கேட்கையில் மனம் உருகுகிறது. ''இருக்கேம்பா. மாலதி சுகமாயிருக்காளா? பத்மு நல்லாயிருக்கா?''

''எல்லாரும் நல்லாருக்காங்க, அப்பா! நரேசப் பத்திப் பேசத்தான் உங்களக் கூப்பிட்டிருக்கிறேன். இங்க வந்தான். ரெண்டு மாசம் கூட இருக்கலே. எம். ஏ. முடிச்சுட்டு என்ன பண்ணப் போறான்னு தெரியலே. எம்.பி.ஏ இல்லாட்டி, காஸ்ட் அக்கௌன்ட்ஸ் ஏதானும்பண்ணுங்கறேன். எனக்கு, மாட்டேன்னு எழுதியிருக்கிறான். பைத்தியக்காரத்தனமா, பைத்தியக்கார எண்ணமெல்லாம் வச்சிட்டு ஏதேதோ பேசறான். வாழ்க்கையிலே முன்னேறப் பயன்படுமா ஆர்ட், கல்ச்சர், சோஷியல் சயன்ஸ் இதெல்லாம்? அவனுக்கு உங்க கிட்டத்தான் நெருக்கம். நீங்க எடுத்துச் சொல்லி எம்.பி.ஏ. படிக்கச் சொல்லணும்பா எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு.''

அவருக்குக் குரல் தழுதழுக்கிறது. பேச்சு வரவில்லை. ''அப்பா, இத மாலதி பேசுறா.''

''அப்பா, நல்லாருக்கீங்களா?'' மருமகளின் கீச்சுக்குரல். ''இருக்கிறேம்மா; நரேசு இங்க வருதா?'' ''ம். போயி தாத்தாவைப் பாக்கிறேன்னு எழுதி யிருக்கிறான். நீங்க சொல்லுங்கப்பா. பொண்ணுங்க கூடப் பெரிய பெரிய படிப்புப் படிக்கிறாங்க. இவன் கவலையே பெரிசா இருக்கு.''

கணவனும் மனைவியும் ஒரே செய்தியைத்தான் கூறியிருக்கின்றனர்.



மங்கள நன்னுளாம் இந்நாளில்,
மங்கள நீராடிப் புத்தாடை உடுத்திக்
கோலாகலமாகத் தீபாவளி கொண்டாடிடும்
எமது வாடிக்கையாளர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
இன்பத் தீபாவளி நல்வாழ்த்துக்கள் !

உயர்ந்த ரகம்!
சமையலுக்கு சுவையூட்டுவது!!!
சிறந்த தயாரிப்பு!!

★ P.T.C ★
கூட்டு
பெருங்காயம்

போன்: 22261
தயாரிப்பு:
தந்தி: பெருங்காயம்
பிரபாத் டிரேடிங் கம்பெனி
மதுரை-625009.
CPS

— PARAMOUNT

வளமான வாழ்வு வாழ்ந்து வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள்!

வாழ்க்கையில் சுகபோகங்களை இழந்து வாலிப வயோதிக அன்பர்கள் பிரபல-பழனி வைத்தியத் திலகம்-வைத்தியராஜ். டாக்டர் எஸ். காளிமுத்து, ஆர்.எம்.பி., வி.வி.சி., ஏ.எம்.ஐ.எச்., அவர்களால் தயாரிக்கப்படும் மருந்துகளை உபயோகித்து

வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள்

ஆடவர்கள், படித்த பட்டதாரியும், பாமரரும் தங்கள் வாழ்க்கையில் முன் நடந்த தீய வழக்கங்களால் உடல் பலகீனம் அடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கை கால் அசதி, உடல் மெலிவு, ஆக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகிக் குடும்ப வாழ்க்கையில் மன வேதனையும் அதிருப்தியும் சஞ்சலமும் நிம்மதியும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர் வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிட்டும் பலனில்லாமல் பின் நம்மிடம் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்தோர்கள் ஏராளம். நம்மிடம் சிகிச்சை பெற்று வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிட்டேன் என்று ஏராளமானவர்கள் நற்சாட்சிக் கடிதங்கள் எழுதுகிறார்கள். மருந்தை உபயோகிக்கும்போதே பலனைப் பெறலாம். கேம்புகளில் நேரில் மருந்து பெற முடியாதவர்கள் வி.பி. பார்சலுக்கு ஆர்டர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். மருந்தை உபயோகிக்கும்போதே பலன் பார்க்கலாம்!

பிரபல பழனி
வைத்திய திலகம்

வைத்தியராஜ்
Dr. S. காளிமுத்து
R.M.P. (IND) V. V. C., A. M. I. H.

ஒரு மாதச் சிகிச்சை மருந்துகள்:

மிக உயர்தரம்	ரூ.	90	தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம்		
60 வேளை	ரூ.	120	30 வேளை	ரூ.	60
ஆஸ்த்துமா செட்	ரூ.	124	சரும நோய் செட்	ரூ	140
மூலநோய் செட்	ரூ.	92/-	வயிற்றுவலி செட்	ரூ.	92

போன்: 316—316-A வீடு: 420
தந்தி: சித்தர்
பழனி சித்தர் வைத்தியசாலை (Regd) (P.) பழனி 624601
இந்தியாவின் மாபெரும் வைத்திய ஸ்தாபனம்

—ராமு

'அவன் நீங்க சொன்னாக் கேப்பான்' என்று கூறியதையே பெருமையாக நினைக்கிறார்.

அவன் விடுமுறைக்கு வரும் போதெல்லாம் அவனையும் கூட்டிக் கொண்டு கடற்கரை யோரம் நடக்கப் போவார்.

''ஐயா, அந்தக் காலத்துல லவ்டேல் ஸ்கூலில அசல் வெள்ளைக்காரங்களாத்தான் சேத்துப்பாங்களாம். சொல்வாங்க. ஒரே சோலையும் மரமுமா ரொம்ப அழகாயிருக்குமாம். அப்படியா?'' என்று அந்தப் பேரனிடம் பிரசித்தி பெற்ற பள்ளியைப் பற்றிக் கேட்பார். உடலும் மனமும் ஆரோக்கிய வளர்ச்சியும் அறிவு மலர்ச்சியும் எய்தத் தேவையான இயற்கைச் சூழல் மறுக்கப்படுவது துர்ப்பாக்கிய நிலை என்ற கருத்துப் புலப்பட அவனிடம் பேசிக் கொண்டே நடப்பார்.

அவனுக்கு மழையில் நனைவதற்குப் பிடிக்கும். அந்தக் குளிர் ஊரிலும் பச்சைத் தண்ணீரில் குளிப்பதையும் நீச்சல் அடிப்பதையும் சொல்வான். மீனவப் பிள்ளைகளுடன் கடலில் நீச்சல் அடிப்பான்.

அவருடைய மகன் மாநிறந்தான். இவன் சுருட்டை முடியும் சிவந்த மேனியும் மருமகளைப் போல் இருப்பான். வெண்மையான பைஜாமாவும் குர்தாவும் அணிந்து பதினைந்து பிராயத்துக்குக் கொள்ளாத வளர்ச்சியுடன் இருப்பான். அவன் தன்னுடன் உப்புப் பாத்திகளையும் சிறு கால்வாய்களையும் கடந்து நடந்து வருகையில் இவன் என் பேரன் என்று விம்மிதம் அடைவார். அவன் வளமான எதிர்காலத்துக்குப் படிக்க வேண்டாமா?

இப்போதெல்லாம் பிள்ளைகள் எந்த விதமான ஒழுங்குக் கட்டுப்பாடுகளுக்கும் ஒட்டாமல் கண்ட கண்ட பழக்கங்களுக்கு அடிமையாகிச் சீர்குலைவதைப் பற்றி அறிந்திருக்கிறார். ஏதேனும் பேசினால் 'ஜெனரேஷன் கேப்' என்று வேறு சொல்லி மடக்குகிறார்கள். அப்படி நான்காண்டுகளாகப் பார்த்திராத இந்தப் பிள்ளை, சகவாச தோஷத்தில் வேறுபட்டு விட்டானோ?

இரவெல்லாம் பெரியவருக்கு அமைதியும் உறக்கமும் கிட்டவில்லை. சாணி மெழுகிய வீட்டின் முற்றத்தில் பனநார்க்கட்டிலில் படுத்துறங்கும் சுகத்துக்காக ஏங்கும் நினைவுகளுடன் மாடிகள் பல கடந்து வரும் கொசுக்களும் அவரைச் சல்லியப்படுத்துகின்றன. விசிறி வேறு பேய்க்காற்றுடன் சேர்ந்து வெறியாட்டம் போடுகிறது.

விடியற்காலையில்தான் கண்ணயர்ந்திருக்கிறார்.

''தாத்தா இங்கதான இருக்காங்க? வேலூரில இருக்காரோ, அந்த அத்தை வீட்டிலேன்னு நினைச்சிட்டே வந்தேன்'' என்றான்.

''அட நரேசா, என்னப்பா இவ்வளவு புழுதி? ஹிப்பி மாதிரி முட்டை? காலை விமானம் அதுக்குள்ளா வந்திடிச்சு? காகிதம் போட்டிருந்தா ஏர் போர்ட்டுக்கு வண்டியனுப்பிச்சிருப்பமில்ல?''

''நான் விமானத்திலே வரல.''

பேரன் பாட்டனாரின் படுக்கையில் வந்து உட்கார்ந்து கொள்கிறான். முகமும் சிரிப்பும் கண்களின் ஒளியுமே அவருக்குப் பாலமுதம் வார்க்கின்றன.

''நல்லாயிருக்கீங்களா தாத்தா? பாட்டியம்மா போன பிறகு எனக்கு ஊர்ப்பக்கம் வரணும்னே தோணலே. அவுங்க இடியாப்பம் செய்யிறத எனக்குக் கத்துக் குடுக்கிறதாச் சொன்னாங்க. ஆருக்குமே அதுபோலச் செய்யத் தெரியலே.''

மிகவும் மென்மையானதோர் பகுதியில் பையன் இதமாகக் குளிர்விக்கிறான். ''உங்கப்பா நேத்துப் போன் போட்டுப் பேசினான் ஐயா. நீ அதுக்குள்ளே வந்திருவன்னு நெனைக்கலே.''

சட்டைக்குக்கீழ்ப் பலம் பொருந்திய, வாலிபக் கைகளைத் தடவிப் பார்த்துப் பரவசமடைகிறார்.

இதற்குள் சிவு அவனுக்குக் காபி கொண்டு வருகிறாள்.

''நான் இன்னும் பல் துலக்கிச் சுத்தமாகலே. குளிச்சிட்டு வரேன்.''

குளியலறையில் அவன் தண்ணீரைச் 'சோ' வென்று திறந்துவிட்டுக் கொண்டு குளிக்கிறான். தனது சட்டை, சராய் உள்ளாடைகளைக் கசக்கி எடுத்துக் கொண்டுவந்து வராந்தாக் கொடியில் போட்டுக் கிளிப்பை இணைக்கிறான். பிறகு அதே போல் துவைத்துலர்த்திய சட்டையையும், பைஜாமாவையும் பையிலிருந்து எடுத்துப் போட்டுக்கொள்கிறான். நெற்றியில் திருநீறு. வராந்தாவுக்குச் செல்கிறான். அவர் திரும்பி ஆவலுடன் பார்க்கிறார்.

கண்களை மூடி, பத்மாசனத்தில் தியானம் செய்யும் கோலம். அவருக்கு மெய் சிலிர்க்கிறது.

''எங்க அவன்? காபி ஆறிப் போகுது? என்னாத்துக்குச் சராயும் சட்டையும் இப்பத் துவைச்சுப் போட்டிருக்கிறான்? தலையெழுத்தா?''

அத்தை பொல பொலக்கிறான்.

அந்த வீட்டில் பகல் நேர உணவுக்கு, அவர் ஒருவரே ஆளாக இருப்பார். மருமகனும், பிள்ளைகளும் காரிலும் விமானத்திலும் பறந்துகொண்டிருப்பார்கள்; குளிர் சாதன வசதிகளில் கண்ணாடித் தடுப்புகளில் லட்சங்களோடு சுழன்று கொண்டிருப்பார்கள். சிவுவின் புருஷன், முப்பதுகளிலிருந்து நாற்பதைக் காணாத பையனுக்கு, இதயம், கொலஸ்ட்ரால் என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள். மருமகனுக்கு அரிசிச் சோறே கிடையாது. தினமும் தூக்க மாத்திரை சாப்பிடுகிறான். சிவு பருப்புச் சோற்றைக் கொறிப்பாள்.

அவருக்கு இங்கே வந்தபிறகு, தாம் மட்டும் பசியுடன் சாப்பிடுவதை உணருவதால் ஏற்பட்ட குற்ற உணர்வுதான் போலும், சாப்பிடவே பிடிக்கவில்லை. இன்று சாப்பிடும் மேசைக்கே களை கூடி விட்டாற் போல் இருக்கிறது. தட்டு நிறையச் சோறும் குழம்பும் காய்கறியும் போட்டுக் கொண்டு ருசித்து உண்ணுகிறான் பேரன்.

''ஏம்பா, உங்கப்பா சொன்னபடி நீ கேக்கலேன்னு கவலைப்படுறான். இப்ப உனக்கு நல்ல படிப்புப் படிக்க இருக்கிற வாய்ப்பைத் தவற விடலாமா? படிப்பில்லேன்னா இந்தக் காலத்துல மதிப்பில்லே.''

அத்தை பேச்சைத் தொடங்குகிறாள்.

''இந்தக் காலத்தில மனிசனுக்கே மதிப்பில்லே.'' அவனுடைய குரலில் ஒரு கேலி இழைவதாகப் படுகிறது.

''இப்ப உனக்குச் சின்ன வயசு. பின்னால நீ வருந்துவே, நரேஷ். நீ அப்பவே மெடிசன் போயிருந்திருக்கலாம். மாமாக்குத்தான் மெடிசன் படிக்கலேன்னு குறை. இங்கேருந்து போற டாக்டருங்களுக்கு அமெரிக்காவில என்ன மதிப்பாம், தெரியுமா?''

''அப்ப பணவசதி இல்ல. இப்பப் பத்து இருபது குடுத்துக் கூட ஸீட் வாங்க முடியும். சொந்த பிஸினஸ்னாக் கூட எம்.பி.ஏ.இல்லேன்னா இந்தக் காலத்துல கவுரவம் இல்ல. நல்ல எதிர்காலம் உள்ள படிப்புப் படிக்கணுமில்லையா தம்பி? பெரியவங்க சொல்றதக் கேக்க வேண்டாமா?'' என்று அத்தை அவனைக் கரைக்கிறாள்.

''எதிர்காலம்னா எதை நினைக்கிறீங்க நீங்க? பணம், பணம், பணம்னு ஏன் எல்லாரும் மாயிறீங்க? படிக்கிறது பணத்துக்குத்தானா? என்னை எல்லாரும் பிளேனில வந்தியா, ரெயில்ல ரிசர்வேஷன் கிடைச்சுதானெல்லாம் கேக்கறாங்க. சூளூர்ப் பேட்டையிலேருந்து நான் நடந்து வந்தேன். படிக்கிறதுங்கறது எனக்கு வேற அர்த்தமாப் படுது. பணம்னு படலே!''

தூங்குபவன் முதுகில் ஓங்கி அடிக்கும் உத்வேகத்துடன் அந்தக் குரல் ஒலிக்கிறது. இந்தச் சிறு பிள்ளையின் சொற்கள், கொல்லென்று ஓர் அமைதித் திரையைச் சுருள்விக்கின்றன.

''பணமில்லேன்னா யாரு மதிப்பாங்க? பணம் பண்ணுறதுக்குத்தான் படிக்கிறது, வேலை செய்யிறது எல்லாம். ஓடி ஓடி அதுக்குத்தான் எல்லாரும் உழைக்கிறது.''

அவன் புன்னகை செய்து கொள்கிறான்.

''நான் பணந்தான் வாழ்க்கைன்னு நெனைக்கலே. கல்வி அறிவு எல்லாம் என் மனசுக்கு ஒரு சந்தோஷம், உற்சாகம், ஆத்மத் திருப்தி இதைத் தரும் உழைப்புக்காகன்னு நினைக்கிறேன்.'' அவர் பூரித்துப் போகிறார்.

உண்டு முடிந்ததும் அவரவர் தத் தம் அறைகளுக்குச் சென்று விடுவார்கள். காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் எப்போது வேண்டுமானாலும் படுக்கலாம். அவருக்கு இப்படிப் படுத்துக் கிடக்கவும், முடங்கிக் கிடக்கவும் இன்னமும் பழகவில்லை. பால்கனிக்கு வருகிறார்.

பால்கனிக் கிராதியில் முழங்கையை வைத்துக் கொண்டு உயரமாக அவன் நிற்கிறான். தன் கை நீட்டி அணைத்த அந்த இளந்தளிர் பசுமையேறி வெம்மையின் கடுமையை ஏற்று உயிர்க்குலத்தை வாழவைக்கும் வன்மையாகச் செழித்திருக்கிறது.

உணர்ச்சி வசப்பட்டுப் போகிருர். ''ஐயா, நீ நான் சொன்னுத்தான் கேப்பேன்னு உங்கப்பா சொன்ளுன்.''

பையன் திரும்பிப் பார்க்கிருன். புன்னகை இலங்குகிறது.

''நீங்க என்ன சொல்றீங்க தாத்தா? என்னைப் பணம் பண்ணப் படிக்கணுங்கறீங்களா?''

''எனக்கு அதெல்லாம் என்னப்பா தெரியும்? பணத்துக்கும் மனிசனுக்கும் உசிருக்கும் மதிப்பு நல்லாவே இருந்ததை நான் பாத்திருக்கேன். இப்ப, கறிகாய்க் கடைக்கு நூறு ரூபா நோட்டுக் குடுக்கிருங்க. பத்தும் பதினஞ்சும் வீடு தொடைக்கிற சோப்புக்குக் குடுக்கிருங்க. அ.த பாரு, கூவத்தை அழுக்குன்னு சொல்ருங்க. அந்தப் பிள்ளைங்க அங்கே முக்குளிச்சி விளையாடுறதப் பாரு? ஊர்க்குப்பையெல்லாம் கொண்டு கொட்டி நாற அடிச்சிட்டு, இங்க சோப்புப் போடுருங்க. இவங்களாலும் சொகமா இருக்க முடியலே; ஆண்டவன் பாத்துக் குடுத்ததையும் நாசமாக்குருங்க.''

''தாத்தா, நம்ம வீட்டில் இப்ப யார் இருக்காங்க?''

''உங்க பாட்டிக்கு உடம்பு சரியில்லாம வைத்தியம்னு வேலூருக்குக் கொண்டு வரப்ப, பூட்டுப் போட்டுட்டு வந்ததுதான். மூணு வருசமாச்சு. ஊருக்குப் போகலாம்னு பாத்தா, உங்கத்த, 'அங்கே என்ன இருக்கு? நாலஞ்சு சாமான் சட்டை எடுத்து வித்தா நூறு ரூவா தேருது, மண்ணும் காரையும் இடிஞ்சி ஒலப்புற வுழுந்து கெடக்கும், சும்மா கெடங்கங்க'ன்னு. சின்ன வீட்டிலே. மண்ணில பதிய உக்காந்திருக்கையில் எல்லோரும் ஒரு உலகமா நெருக்கமா யிருந்தோம். நீ சொன்னுப்பல மனிசச்சூடே தணுத்துப் போயிட்டது ஐயா.''

''தாத்தா, அப்பல்லாம் நீங்க என்னக் கூட்டிட்டு உப்போடை, பனந்தோப்புத் தாண்டிக் கடற்கரையில் நடக்கக் கூட்டிட்டுப் போவீங்க. நெனப்பிருக்கா? நீங்க கூடக் கடற்கரைப் புள்ளைங்களை ஸ்கூலுக்கு வரச் சொல்றது கஷ்டம்னு சொல்லுவீங்களே? நெனைப்பிருக்கா?''

அவர் நெஞ்சம் ஆவலோடு அவன் குரலில் ஒட்டிக்கொள்கிறது.

''அதுக்கென்னய்யா?''

''தாத்தா, ஸ்கூலையே கடற்கரைக்குக் கொண்டு போயிட்டா? இயற்கையை மறுக்காமல், பணம் பணம்னு சோம்பேறித்தன நாகரிகத்தையும் லட்சியமாக்காம உண்மையான அமைதியையும் நிறைவையும் தேடிப் போகும் ஒரு கல்வியைக் கற்பிக்கிற ஆசிரியனுக நான் ஆகணும்னு ஆசைப்படறேன். கடவுள் கொடுத்த உடம்பை, அவயங்களை உழைக்கச் செய்து அதனுல பயன் தேட ஆசைப்படறேன்.

''ஐயோ! போயும் போயும் வாத்தியார் வேலையா செய்யப் போறே, ஏன்டா இப்படிப் புத்தி போகணும்னு கேக்கருங்க. என்னைப் போல நாலஞ்சு பேர் இப்படி ஒரு திட்டம் வச்சிட்டிருக்கிருேம். மனசில வச்சிட்டு ஊர்ப்பக்கம் போகறதா வந்திருக்கேன். நீங்க என்ன சொல்றீங்க தாத்தா?''

அவர் பதில் சொல்லுமுன் விர்ரென்று பறந்து வந்து கிராதியோரம் அமரும் பறவை அவனைத் திடுக்கிட்டு நகரச் செய்கிறது.

''காக்கயில்ல. இந்த உசரத்தில் கழுகுக நெறய இப்பிடிப் பறந்து வருது. பயந்திட்டியாய்யா?''

"ரொம்ப உயரத்தில காக்காயை விடக் கழுகுதான் வருங்கற உண்மையைத் தெரிஞ்சிட்டேன் தாத்தா'' என்று கூறிச் சிரிக்கிருன்.

''எனக்குக் கூட இங்க வந்த பிறகு தான் தெரியுது. ஆமாம், நீ எப்ப ஊருக்குப் போகலாம்னு இருக்கிறே ஐயா?''

''நாளைக்கே போகலாம்னு இருக்கறேன். நீங்க எங்க திட்டம் பத்தி என்ன நெனைக்கிறீங்க தாத்தா?''

முதியவர் அந்த இளஞ்சூரியனை நம்பிக்கையுடன் பார்க்கிருர்.

''நானும் வரேன்டாய்யா. மனிசன் மண்ணுக்கு உரியவன். அதை மறுத்திட்டு, அதில கால் பதியாமல் என்னுல வாழ முடியல. நானும் வாரேனய்யா! என்னையும் சேத்துக்குங்க!'' ✻

தயாரிப்பு நிலையம்:

ருக்மணிபாளையம் 2-வது தெரு,
முனிச்சாலை ரோடு,
மதுரை-625009.

அலுவலகம்:

46, கீழ வெளிவீதி,
மதுரை-625001.

விற்பனை நிலையங்கள்:

46, கீழவெளிவீதி, மதுரை.
166, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதுரை.
20, மேலமாசி வீதி, மதுரை.
டவுன்ஹால் ரோடு, மதுரை.

—மினர்வா

The Winner
MORARJEE MILLS
Pace setters for the 80's
Morarjee Mills .
Dress Fabrics, Suitings, Shirtings and Sarees.
In pure polyester, cotton and blends.
The Morarjee Goculdas Spinning and Weaving Co. Ltd.,
Bombay 400 012.
MM-4C/80



டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்.
T. S. R. & CO
KUMBAKONAM
சுவை மிகுந்த ஊறுகாய் வகைகள்
தாம்பூலத்திற்கு சிறந்த வாசனை சுண்ணும்பு பான்பில் ரகங்கள்
குளிர்ச்சி அளிக்கும் தைல வகைகள்
மணம் கமழும் ஊதுபத்தி ரகங்கள்

புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதிமிக்க, ஆரோக்கியமான பற்கள்
அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்
ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது பற்களைப் பாதுகாக்கிறது.
உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு வலிமிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.
எனவே சாப்பிட்டு முடிந்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.
நம்பகமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை:
உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.
கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.
பயன்: கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிராகப் பாதுகாப்பு.
கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவ மாக்குகிறது.
Colgate DENTAL CREAM
Colgate
கோல்கேட் டென்டல் க்ரீம்
உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்
1
2
3
DC. G. 74 TM


இருளகற்றும் தீபங்கள் ஏற்றி மகிழ்வோம்
வளமான வாழ்வு மலர இந்நாளைப் போற்றிப் புகழ்வோம்!
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
இந்தியன் பாங்க்
(இந்திய அரசு நிறுவனம்)
உங்கள் செல்வச்
செழுமைக்கு
உதவும் வங்கி

கர்ணன் சிலையின் கீழே

சுந்தரி ஜயராமன்

போன வருடந்தான் இந்தக் கர்ண மகாப் பிரபுவுக்குச் சிலையெடுத்துக் கௌரவித்திருந்தார்கள். எனக்கு இந்த இடம் மிகவும் வசதியாக அமைந்துவிட்டது. அலுவலகத்திலிருந்து நேராக இங்கேதான் வருவேன். மணலைத் தட்டிக் காலை நீட்டி அமர்ந்துவிட்டால், இரண்டு மணி நேரம் சுகந்தான். கடற்கரையிலே கண்ணைச் செலுத்தினால், எத்தனை யெத்தனையோ ரசமான காட்சிகள், கண்டு களிப்பதற்கு! போதாதற்கு என்னுடைய வாடிக்கைப் பையன் பத்துப் பைசா வேர்க்கடலை கொடுத்துவிட்டுப் போய் விடுவான். ஒரு பிடி வேர்க்கடலை தினமும் சாப்பிட்டு வந்தால் அத்தனையும் புரோட்டீன்.

அலுவலகம் விட்டதும், நேராக வீடு போவதில்லையா, மனைவி வழி மேல் வழி வைத்துக் காத்திருக்க மாட்டாளா என்று கேட்கத் தோன்றும். நான் சாதாரணமான ஓர் என். ஜி. ஒ. ஐந்நூறு ரூபாய் சம்பளம், குழந்தைகள் ஆறு!

மாலையில் பள்ளியிலிருந்து குழந்தைகள் நல்ல பசியோடு வருவார்கள். விமலா, பாவம், என்ன செய்வாள்? முதல் தேதி, இரண்டாந் தேதி தோசை இட்லி என்று டிபன் மணக்கும். பிறகு கஞ்சி, மோர்சாதம் என்று தேய ஆரம்பிக்கும். குழந்தைகள் பள்ளியிலிருந்து வந்து ருத்ர தாண்டவம் ஆடுவார்கள். விமலா, ஜான்ஸி ராணியாக மாறி அந்தப் படைகளைச் சமாளிப்பாள். அந்த நேரத்தில் நான் அங்கே இருந்தேனால் வேறு வினையே வேண்டாம். ''உங்கப்பா சம்பாதிச்சுக் கொட்டற லட்சணத்துக்கு.....'' என்று ஆரம்பித்து என்ன வெல்லாமோ வார்த்தைகள் கேட்க வேண்டியிருக்கும். அதனால் கடந்த இரண்டு மூன்று வருஷங்களாகவே, ஒன்பது மணிக்குக் குறைந்து வீடு திரும்புவதே இல்லை.

இன்றும் தினம்போல் கடலை இன்பத்தில் மிதந்து கொண்டிருந்தேன். பத்தடி தூரத்தில் ஒரு பையன் நின்றிருந்தான். தயங்கித் தயங்கி என் அருகில் வந்து நின்றான். சின்னப் பையன். பதினைந்து வயது இருந்தால் அதிகம். முகத்தில் சோகக் களை.

அவன் மெதுவாகக் கேட்டான். ''ஸார், நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசலாமா?''

கடலையைக் கேட்பானோ என்ற பயத்தில் எல்லாவற்றையும் வாயில் கொட்டிக்கொண்டு, ''என்னப்பா விஷயம்?'' என்றேன்.

அவ்வளவுதான்! ஆரம்பித்துவிட்டான் அவன். அந்தப் பையன் பெயர் பாலு. ஒரு பெரிய பிரமுகர் வீட்டில் அவன் தந்தை டிரைவர் வேலை பார்த்து வந்தாராம். பத்து வருடங்கள் முன்பு திடுமென அவன் இறந்துவிடவே அந்தப் பிரமுகர் இரக்கப்பட்டுப் பாலுவின் தாயைத் தம் வீட்டில் சமையலுக்கு வைத்துக்கொண்டு பாலுவையும் படிக்க வைத்தாராம். அவனும் சிரத்தையாகப் படித்துப் பத்தாவது பாஸ் செய்து விட்டானாம். இப்போது அந்தப் பிரமுகர் ரிடையராகி விட்டார். வெளிநாட்டில் இருக்கும் தம் ஒரே மகனோடு இருக்கப் போவதாகக் கிளம்பிப் போய்விட்டார். போகுமுன், பாலுவின் தாயைத் தம் மகளுக்கு உதவியாக நாக்பூர் அனுப்பிவிட்டு, பாலுவையும் தம் நண்பர் ஒருவரின் வீட்டில் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் சாப்பாட்டு வசதியுடன் வேலைக்கு ஏற்பாடு செய்து விட்டே கிளம்பிப் போனார்.

இப்போது அந்த நண்பர் குடும்பத்தினர் பாலுவை வேலைக்கு வேண்டாம் என்று கூறி விட்டார்கள். வேறு எங்கேயாவது வேலை தேடிக் கொள்ளும்படி சொல்லி விட்டார்களாம். அவனும் ஒரு மாதமாக

வேலைக்கு அலைகிருன். அந்தப் பையன், பாவம், அழும் குரலில் கூறினான். ''சார், பெரியவர் என்னிடம் விலாசம் கொடுத்து விட்டுத்தான் போயிருக்கிருர். லெட்டர் எழுதினால் ஏதாவது வழி சொல்லுவார். இத்தனை நாள் என்னையும் என் அம்மாவையும் காப்பாத்தி இருக்கார், என்னைப் படிக்க வைச்சிருக்கார். என் படிப்பு முடியணும்னுதான் வெளிநாட்டுக்குப் போறதையே தள்ளிப் போட்டுண்டு வந்தார் அவர். அப்படிப்பட்டவருக்கு இன்னமும் நான் பாரமா இருக்கலாமா சார்?''

இத்தனை சின்னப் பையனுக்கு இத்தனை தன்மான உணர்ச்சியா? ஒன்றுமே பேசத் தெரியாமல் பிரமித்து உட்கார்ந்திருந்தேன் நான்.

திடீரென்று பானு என் கைகளைப் பிடித்துக் கொண்டான். ''சார், எனக்குச் சாப்பாடு தண்ணி எதுவும் வேண்டாம் தங்கமட்டும் கொஞ்சம் இடம் இருந்தாப் போதும்.''

அவன் விக்கி விக்கி அழுதான். எனக்கே அழுகை வந்துவிடும் போல் இருந்தது. ''கவலைப்படாதேப்பா. ஆண்டவன் ஏதாவது வழி காட்டுவான்'' என்றேன்.

''சார், உங்களால் ஏதாவது வேலை வாங்கித் தர முடியுமா? என்ன வேலையானாலும் பரவாயில்லை. வீடு பெருக்குவது, பத்துத் தேய்ப்பது, குழந்தைகளைப் பார்த்துக்கறது ...... இப்படி ஏ வானாலும் யோசிக்காமச் சொல்லுங்க, சார.''

ஆவலோடு என்னைப் பார்த்தான் அவன். அந்த நிமிடம் எனக்கே என்னைப் பற்றி 'சீ' என்றிருந்தது. அவன் திடுமென என் அருகில் நெருங்கி வந்தான். ''நான் உங்க வீட்டிலே வந்து இருக்கலாமா சார்?''

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. நானே லாட்டரி அடிப்பவன். ''இதோ பாருப்பா! என்னைப் பார்த்தா உனக்கு எப்படித் தெரியறது? பணக்காரனுவாத் தெரியறது? நான் ரொம்ப ஏழை. எனக்கே ஆறு குழந்தைகள். நாங்க எல்லாரும் காலை நீட்டிப் படுத்துக்கவே வீட்டிலே இடம் கிடையாது. என் குழந்தைகளுக்கு வயிருற ஒரு வேளைச் சோறு போடறதுக்கே வசதியில்லேப்பா!'' என் நிலைமையை அவன் புரிந்துகொள்ள வேண்டும்என்று விரும்பினேன் நான்.

அவன் தலையைக் குனிந்து கொண்டான். ''ஏன் பானு, இந்தக் கடற்கரையிலேயே தொந்தியும் தொப்பையுமா, காரோட, நாயோடா, எத்தனை பணக்காரா வரா. அவாகிட்டே கேட்டா, ஏதாவது உதவி செய்ய மாட்டாளா? என்னை வந்து கேக்கறியே?''

விரக்தியோடு சிரித்தான் அவன். ''நானும் பத்து நாளா இங்கே சுத்தறேன் சார்! யாரும் என் பேச்சைக் காது கொடுத்தே கேட்கத் தயாரில்லே. நீங்க ஒருத்தர்தான் என்னேட பேசியிருக்கேள். ரொம்ப மிஞ்சிப் போனு, 'சரி, சரி! இந்தா, எட்டணு வைச்சுக்கோ'ன்னு காசைத் தூக்கி எறிஞ்சுட்டுப் போற மனுஷாதான் அதிகம் சார்.''

சட்டையை இழுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தான் அவன். ''நான் போயிட்டு வரேன், சார்! இத்தனை அன்பா நீங்க பேசினது எனக்கு மனசுக்கு ரொம்ப ஆறுதலாயிருக்கு சார்.''

பையன் போய்விட்டான். நன்ருக இருட்டி விட்டது. நானும் பெருமூச்சுடன் எழுந்தேன். கடவுளுக்கு ஈவு இரக்கம் என்பதே கிடையாது. இப்படிப்பட்ட நல்ல பையன்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து வாழ வைக்க வில்லையென்ருல் நிச்சயமாக அவன் திருடலாமா, பிக்பாக்கெட் அடிக்கலாமா என்றே யோசிப்பான். எத்தனை நாள்தான் பட்டினியாகக் கிடக்க முடியும்? கர்ணன் சிலை கண்ணில் பட்டது. 'ம்...கர்ண' மகாப்பிரபு என்று பெயர் வாங்கிவிட்டார். யார் வந்து எது கேட்டாலும் இல்லை யென்று சொல்ல மாட்டாராம். வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியாதாம்! என்னைமாதிரி ஒரு என்.ஜி.ஓவாக இருந்தால் முடியுமா?' என்ற எண்ணத்துடன் வீட்டுக்கு நடையைக் கட்டினேன்.

அடுத்த நாள் கடற்கரையிலே உட்கார்ந்ததுமே நான் அந்தப் பானுவைப் பற்றி நினைத்தேன். அவன் என் கண்ணிலே படவில்லை. பிறகு வந்த சில தினங்களில் அவனை மறந்தேவிட்டேன். ஒரு வாரம் கழித்து ஒரு நாள் கடலை வாங்கியதும், ''ஸார்!'' என்று பக்கத்தில் ஒரு குரல் கேட்டது. நிமிர்ந்தேன்; பானுவேதான்!

''அடேடே! வாப்பா! இரண்டு நாளா உன்னைப் பத்தித்தான் நினைச்சிண்டிருந்தேன். வா! உட்காரு.'' அவன் கையைப் பிடித்து இழுத்துப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக்கொண்டேன். கடலையை அப்படியே அவனிடம் கொடுத்தேன். ''வேண்டாம் சார்!'' என்ருன்.

''அட! சும்மா சாப்பிடுப்பா! பாயசம் வடையோட சாப்பாடா போடறேன்? பத்துப் பைசா கடலை! சும்மா சாப்பிடு.'' நான் உண்மையாகவே நல்ல உற்சாகத்திலே இருந்தேன்.

''என்னப்பா! அப்புறம் என்ன பண்ணினே? ஏதாவது வேலை கீலை கிடைத்ததா?'' என்று கேட்டேன். இல்லை என்று மௌனமாகத் தலையாட்டினுன் அவன். நான் பேசாமல் இருந்தேன். ''சார்! இன்னியோட பழைய வீட்டுக்காரர் கொடுத்த ஒரு மாசத் தவணை முடிஞ்சு போச்சு.'' பையன் மெதுவாகக் கூறினுன். திடீரென்று என் கைகளைப் பற்றிக்கொண்டான். ''ஸார்! நான் இன்னிக்கு உங்க கூடவே உங்க வீட்டுக்கு வந்துடப் போறேன்.''

எனக்குப் பிரபஞ்சமே தலைகீழாகச் சுற்றியது. என்னேடு அழைத்துப் போவதா? வீட்டிலே ஒரு மகாகாளி வாசம் செய்கிருளே! பையனேடு சேர்த்து என்னையும் அல்லவா சம்ஹாரம் செய்து விடுவாள். உமிழ் நீரை விழுங்கிக் கொண்டு ஏதோ பேச ஆரம்பித்தேன். அவன் தடுத்தான். ''சார்! நீங்க எதுவுமே சொல்லவேண்டாம். என்ன கஷ்டம் இருந்தாலும் சமாளித்துக் கொள்கிறேன். இவனுக்குச் சாப்பாடு எப்படிப் போடறதுன்னு யோசிக்காதீங்க சார். சாப்பாட்டு வேளையிலே நான் வீட்டிலேயே இல்லாம எங்கேயாவது போயிடுவேன் சார்.''

எனக்குப் பேசவே தெரியவில்லை. இருந்தாலும் என் சகதர்மிணியைப் பற்றி அவனிடம் கண்டிப்பாக எச்சரித்து விட வேண்டும் என்று நினைத்தேன். ''பானு! நீ என் வீட்டுக்கு வரதிலே எனக்கு ஒண்ணும் தயக்கமில்லே. ஆனு வீட்டிலே என் மனைவி இருக்கா பாரு, அவ கொஞ்சம் கோபக்காரி.''

பையன் குறுக்கே விழுந்தான். ''எப்படி இருந்தாலும் நான் சமாளிச்சுக்கிறேன், சார்!''

ஆண்டவன் விட்ட வழி என்று பையனுடன் புறப்பட்டேன்.

வீடு அருகில் வந்ததுமே எனக்குக் கைகால் உதறத் தொடங்கியது. பயத்தில் மூளை இயங்கவே மறுத்தது. பையனுடன் உள்ளே நுழைந்த என்னை விமலா கேள்விக் குறியுடன் நோக்கினுள். நான் அசடு வழியச் சிரித்தேன்.

''உள்ளே வா. பானு!'' என்று அவனை வரவேற்றேன், ''விமலா, ஏழைப் பையன்! இரண்டு நாளைக்கு நம்மோடு இருப்பான்.''

அவள் என்னைச் சுட்டெரித்துவிடுவது போல் பார்த்தாள். நான் அங்கிருந்து நழுவினேன். பானுவும் என் பின்ஞடியே வந்தான். இருவரும் கைகால் கழுவிக் கொண்டோம். நான் மட்டும் உள்ளே வந்தேன். விமலா காத்துக் கொண்டிருந்து என் மீது பாய்ந்தாள். ''ஏன்னு! உங்களுக்கு என்ன விளையாட்டா இருக்கா? பெரிய கர்ணமகாப் பிரபு என்று மனசிலே நினைப்பா?''

''கத்தாதே! விபரமெல்லாம் அப்புறம் சொல்றேன். முதலிலே தட்டைப் போடு'' என்றேன். தட்டை நிஜமாகவே கொண்டு வந்து தடாலென்று போட்டாள்.

''அந்தப் பையனுக்கு?''

''இருக்கிற சாதமே இவ்வளவு தான்!'' வெங்கலப் பானையைக் கொண்டு வந்து டொம்மென்று வைத்தாள்.

''நான் பார்த்துக்கறேன். மோரையும் கொண்டுவா.'' வெள்ளை நிறத்தில் அதையும் வைத்துவிட்டுப் போய்விட்டாள் அவள்.

''பானு!'' அழைத்தேன் நான். பதிலே இல்லை. எழுந்து கொல்லைப் புறம் சென்றேன். ''பானு!'' உரக்கக் கத்தினேன். ''வரேன் சார்!'' என்று ஓடி வந்தான் அவன். ''எங்கே போயிட்டே? வா சாப்பிடலாம்.''

''ஐயையோ சார்! எனக்கு வயிறே சரியில்லை. எதுவுமே எனக்கு வேண்டாம் சார்.''

ஒரு முறை முறைத்தேன் நான். பேசாமல் என் பக்கத்தில் வந்து

உட்கார்ந்தான். ஒரு டம்ளர் தண்ணீரை அந்த வெள்ளை நிறத்திலே கொட்டினேன். ஆளுக்குப் பாதி சாதத்தைப் போட்டேன். மோரையும் ஊற்றினேன், சாப்பிட்டேன். வயிறும் நிறைந்தது. மனமும் நிறைந்தது.

பாலு என் வீட்டுக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. காலையில் அவன் எப்பொழுது எழுந்திருக்கிறான் என்பதே எனக்குத் தெரியாது. பம்பரமாய்ச் சுற்றி விமலாவுக்கு உதவி வந்தான். இதைத் தவிர குழந்தைகள் நாட்டாண்மை வேறு. அதுவும் என் முதல் பையனும் என் மைத்துனனும் அவனை விலைக்கு வாங்கிய அடிமைபோல்தான் நடத்தினார்கள். நான் அதிகம் கண்டு கொள்ளாமல்தான் இருந்தேன். ஏதாவது பேசினால் பையன் அங்கிருப்பதே பெரிய திண்டாட்டமாகிவிடும். நான் ஆபீஸ் கிளம்பும்போது அவனையும் என் பக்கத்தில் உட்கார வைத்துக் கால் வயிற்றை நிரப்பிவிடுவேன். அவனும் என்னோடு கிளம்பி விடுவான். எங்கே போகிறான், என்ன வரட்டும் என்று கூட ஒரு பத்து ரூபாய் போட்டு ஒரு சட்டை வாங்கிக் கொடுத்தேன். "பொறுப்பான பையன். கடவுளே இவனை நன்றாக வாழ விடு" என்று மனசாரப் பிரார்த்தித்துக் கொண்டேன்.

உடனே வந்தது விபரீதம்! அடுத்த மாதச் சம்பளம் என்னிடம் வரவில்லை. பையன் பாவம்! ஏதோ ஆசைப்பட்டதை வாங்கிக் கொண்டிருக்கிறான் என்று நினைத்தேன். ஆனால் விஷயம் அதுவல்ல. என் மைத்துனன் கடங்காரனும், என் சீமந்த புத்திரனுமாய் அதை அபேஸ் குடும்பப் பாரத்தைச் சுமக்க எனக்கு உதவுவான்" என்று கூறி மகிழ்ந்தேன். இப்போது அத்தனை மகிழ்ச்சியையும் குலைத்துவிட்டானே! முன்பு என் மகன் இத்தனை மோசமாக இல்லை. என் மைத்துனன் மணி வந்த பிறகுதான் அவனுடன் சேர்ந்து கொண்டு ரொம்பவும் கயவாளித்தனம் பண்ணுகிறான். காலையிலே எனக்கு வந்த ஆத்திரத்திலே இரண்டு பேரையும் நிற்க வைத்துக் தன்னி பின்னு வென்று திட்டிவிட்டேன். பரிந்து கொண்டு வந்த விமலாவை

பண்ணுகிறான் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

மாலை ஏழு மணிக்கு இருவரும் கடற்கரையில் கர்ணன் சிலையின் கீழே சேர்ந்து கொள்வோம். வேலை தேடிப் போன அனுபவங்களைப்பற்றிச் சொல்வான் அவன்.

சீக்கிரமே, எங்கள் வீட்டுப் பக்கத்துத் தெருவில் ஒரு வீட்டில் கார் துடைக்கும் வேலை ஒன்று கிடைத்தது. பத்து ரூபாய் சம்பளம். பையன் உற்சாகமாக இருந்தான். முதல் மாதச் சம்பளத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தபோது அப்படியே அவனைக் கட்டிக் கொண்டேன். எனக்கும் அன்று சம்பளம் வந்திருந்தது. வந்தது பண்ணிச் சினிமா பார்த்திருக்கிறார்கள். எனக்கு ரத்தமே கொதித்தது.

மாலையில் கடற்கரையில் வந்து உட்கார்ந்தபோது மனமே நொந்து கிடந்தது. சின்ன பையன், நேர்மையான பாதையிலே, தன் மானத்தோடு உழைத்துக் காசு கொண்டு வரும்போது அதை அயோக்கியத்தனமாகப் பறிக்க இவர்களுக்கு எப்படி மனசு வந்தது? ஏன், எனக்கென்று இப்படி வாய்த்திருக்கிறார்கள்? முதல் குழந்தை ஆணாகப் பிறந்தபோது எத்தனை சந்தோஷப்பட்டேன்? குழந்தைகள் எல்லாம் பிறந்து விமலா ஆபரேஷன் செய்து கொண்டபோது கூட, "முதல் குழந்தை பையன், சீக்கிரமே யும் வாயில் வந்தபடி திட்டித் தீர்த்தேன், பாவம், விமலா அழவே ஆரம்பித்து விட்டாள். கோழிக் குஞ்சு மாதிரி நடுங்கிக் கொண்டு நின்ற பாலுவையும் இழுத்துக் கொண்டு சாப்பிடாமலே கிளம்பி விட்டேன்.

உடலின் சோர்வா, உள்ளத்தின் சோர்வா என்று புரியாதபடி கடற்கரை மண்ணிலே ஐக்கியமாகிக் கிடந்தேன். கடலையும் வேண்டியிருக்கவில்லை. மனசு ரொம்பவும் ஆயாசப்பட்டது. காலையில் நான் மூச்சைப் பிடித்துக்கொண்டு கத்தியபோது என் மகன் தலையையே நிமிரவில்லை. எனக்கு அதை நினைக்கும்போது வேதனையாக



To give an aircraft's landing gear a dimension and finish crucial for safe operation, Carborundum Universal recently developed a special honing tool.

Vital mission completed: an exacting finish ensured for a crucial zone in a fighter aircraft



The hydraulic tube of the landing gear, which ensures a safe 'touchdown' for an aircraft, demands highly critical dimensions and finish—in short, a specialised grinding tool. Carborundum Universal took up the challenge...

After a careful study of the application, Carborundum Universal's experts developed special honing stones to match the formidable levels of accuracy required.

They had found the answer, once more.

What sets Carborundum Universal apart

Not just making India's widest range of abrasives, super and electrocast refractories, but an awareness that we provide something more: essential services...

Not the wheel, but the precise dimension. Not the belt, but the finish. Not the heating element, but the exact firing temperature...

All this involves technology of the highest order. Creative technology. It's what Carborundum Universal is all about.

Carborundum Universal: providing essential services for industry.

OBM 4495

CARBORUNDUM UNIVERSAL LTD.
28, Rajaji Road, Madras - 600 001.

சாதாரண தேங்காய் எண்ணையைக் காட்டிலும் உங்கள் கூந்தல் வளர்ச்சிக்குகந்தது எது?

OBM 4926/TM

கேசவர்த்தினி

கலந்த தேங்காய் எண்ணை!

ஆம்! நீங்கள் அன்றுடம் உபயோகிக்கும் தேங்காய் எண்ணையுடன் சிறிது (சில சொட்டுகள்) கேசவர்த்தினி கலந்து தலையில் தடவிக்கொள்ளுங்கள். உங்கள் கூந்தல் எழில் மிளிர காண்பீர்கள்.

அழகிய அடர்த்தியான கூந்தலின் பரம்பரை ரகசியம் — கேசவர்த்தினி. ஒரு பாட்டில் இன்றே வாங்குங்கள்.

இலவசம்! கேசவர்த்தினியின் "கூந்தல் பராமரிப்புக்கு சில குறிப்புகள்"

உங்கள் தேவைக்கு:

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்,
ஆற்காடு ரோடு,
சென்னை—600 091

என்ற முகவரிக்கு எழுதவும்.

இருந்தது. அப்பன்காரனாக இருந்தால், அதிகாரம் மட்டும் காட்டினால் போதுமா? அந்தக் குழந்தைக்கு நியாயமான வயதிலே ஒரு நியாயமான ஆசையை, கேவலம் ஒரு சினிமா ஆசையை என்னால் பூர்த்தி செய்ய முடியவில்லையே!

'அவன் பிரமாதமாகப் படிக்கவில்லை, வேலைக்குப் போகவில்லை, மாதமாதம் என் கையில் காசாய்க் கொண்டு வந்து கொட்டவில்லை' என்று எனக்குக் குறை. அந்தக் குழந்தைக்கு அப்பன் ஸ்தானத்தில் நான் என்ன செய்தேன்? மேலே படிக்க வைத்தேனா? நல்ல சாப்பாடு போடுகிறேனா? விதம் விதமாகத் துணிகள் வாங்கிக் கொடுக்கிறேனா? இன்றைப் பொழுதில் என் குழந்தைகளுக்கு நல்லதாக இரண்டு செட் துணிகளாவது இருக்குமா? காலையில் ஒவ்வொன்றும், அவசரம் அவசரமாக ஊசி நூலை வைத்துக் கொண்டு, புதுக் கிழிசல்களைத் தைத்து மாட்டிக் கொண்டு ஓடும் அலங்கோலத்தைத் தான் நான் தினம் தினம் பார்க்கிறேனே!

நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. துக்கச் சுமை அதிகரித்தது.

ஏகமாய் இருட்டிவிட்டதால் மெதுவாக எழுந்து நடக்கத் தொடங்கினேன் மனசிலே ஏதோ திட்டங்கள்.

ஏதாவது செய்ய வேண்டும். இன்னும் ஒரு இருநூறு ரூபாய், அல்லது ஒரு நூறு ரூபாய் அதிகம் கிடைத்தாலும் போதும். ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு குழந்தைக்கு என்று செலவழிக்க வேண்டும். காலையிலே இரண்டு மணி நேரம் மாலையில் இரண்டு மணி நேரம் உழைத்து ஒரு நூறு ரூபாய் சம்பாதிக்கும் வழியைத் தேட வேண்டும்.

நான் வீடு வந்து சேர்ந்தபோது குழந்தைகள் எல்லாரும் தூங்கி விட்டார்கள். பாலு, திண்ணையில் முழங்காலிட்டு அமர்ந்திருந்தவன், என்னைக் கண்டுவிட்ட நிம்மதியில் படுத்துக்கொண்டான். வாசற்படியில் உட்கார்ந்திருந்த விமலா எழுந்து உள்ளே போனாள்.

கைகால் கழுவிக் கொண்டு சாப்பிட அமர்ந்தேன். மிளகு ரசம் மணத்தது. காலையில் சாப்பிடாமல் போய்விட்டேனே என்று இரவு புதிதாய் ரசம் வைத்திருந்தாள் போலும். என் மனம் உருகியது.

''நீ சாப்பிட்டாயா விமலா?''

அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த கண்ணீர் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தது. சாப்பிடும் தட்டில் கண்ணீர் கொட்டிவிடுமோ என்று நகர்ந்தாள் அவள். நான் எழுந்து அவளை இழுத்து அணைத்தேன். சே அன்பான மனைவி! நிஜமாகவே எனக்குத் துக்கம் மண்டிக்கொண்டு வந்தது. அவளை இன்னும் இறுக அணைத்தேன். புடைவையிலே ஒட்டுப் போட்ட இடமெல்லாம் கையிலே குத்தியது. ஏதாவது வேலை செய்து அதிகம் சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் முதலில் விமலாவுக்கு இரண்டு நல்ல புடைவைகள் வாங்கித் தரவேண்டும்.

அவளையும் பக்கத்தில் உட்கார வைத்து என்னோடு சாப்பிட வைத்தேன். காலையில் கத்தியதற்கு மன்னிப்புக் கேட்டேன். அவள் தம்பி மணி கோபித்துக் கொண்டு ஊருக்குப் போய் விட்டான் என்று விசும்பிக் கொண்டே சொன்னாள் அவள், ''பரவாயில்லை. ஒரு கடிதம் போட்டு மீண்டும் வர வழைக்கலாம்'' என்று சமாதானம் சொன்னேன். அதிகப்படி வருமானத்திற்குக் கண்டிப்பாக ஏதாவது முயற்சி செய்யப் போகிறேன் என்று கூறினேன். கொஞ்சம் கொஞ்சமாக நம் கஷ்டம் நீங்கிவிடும் என்று சொன்னேன். அந்த அதிகப்படி பணம் வரும்போது பையனையும் மேல்படிப்பில் சேர்த்து விடலாம் என்று உறுதி அளித்தேன். என் அணைப்பிலே நிம்மதியாக உறங்கிப் போனாள் விமலா. ஆரம்பக் காலத்திலிருந்து இதே மாதிரி என் அணைப்பிலே ஏமாந்து ஏமாந்துதான் அவள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறாள் என்று எனக்குத் தோன்றியது.

மறுநாள் பொழுது விடியும் போதே ஏதாவது செய்ய வேண்டும் என்ற சிந்தனையோடு தான் கண் விழித்தேன். மனமும் உடலும் சுறுசுறுப்பாக இருந்தன. என் ஆபிஸில் பலதரப்பட்ட நண்பர்கள் இருக்கிறார்கள். ஏதாவது நல்ல யோசனை சொல்ல மாட்டார்களா?

அன்று இடை வேளையின்போது என் நண்பர்கள் முன் என் பிரச்னையை நான் எதிர்பார்த்தபடி உருப்படியான யோசனை எதுவும் வரவில்லை. ரங்கண்ணா சத்தமாக அஸ்து போட்டார். ''இந்த வயதிலே இன்னும் அதிகப்படியாகக் காலையிலும் மாலையிலும் உழைத்தால் டி.பி. வந்து பொட்டுனு போயிடுவீர்! அப்புறம் இந்தச் சம்பளமும் இல்லாமல் குடும்பம் நடுத்தெருவில் நிற்கும்'' என்றார்.

சுதர்சனம் ஸீரியஸான முகத்துடன் என் அருகில் வந்தான். ''சார், நான் ஒரு பிரமாதமான ஐடியா கொடுக்கறேன். ஒரு லட்ச ரூபாய்க்கு எல்.ஐ.ஸி.யிலே ஒரு பாலிஸி எடுங்கோ. கடன் வாங்கி முதல் பிரிமியம் கட்டிடுங்கோ! அப்புறம் ஒரு நல்லா நாளாப் பார்த்து, ஒரு லாரிக்கு முன்னாடி, இல்லேன்னா மொட்டை மாடியிலிருந்து.. எப்படிச் சௌகரியமோ அப்படியே கீழே விழுந்துடணும் சார். உசிரு முழுசாப் போயிடணும். அப்புறம் என்ன? லட்ச ரூபாய் உங்க குடும்பத்துக்கு. ஏன் சார்? ரிடையர் ஆற வரைக்கும் நீங்க சம்பாதிச்சா லட்ச ரூபாய் தேறுமா?''

படுபாவிப் பயல்கள்! ஒருத்தனாவது நான் உசிரோட இருக்கற வழியைச் சொல்லவில்லை. கோபாலரத்னம், வந்து சூள் கொட்டினார், ''சார், நீங்க அந்த நாளிலேயே ஒரு டைப்பிங், ஷார்ட்ஹாண்ட் ஏதாவது கத்துண்டிருக்கணும். ஏதாவது ஒரு வக்கீல்கிட்டே போய் ஒரு மணி நேரம் வேலை செஞ்சாக்கூட மாசம் இருநூறு முந்நூறு தேறிடும்.''

'ஐயோ! ஐயோ! அந்த நாளிலே கல்யாணமே பண்ணிக்காம இருந்திருந்தால், இந்த அவஸ்தைக்கே இடமில்லையே!' தலையில் அடித்துக்கொண்டேன். நான் இவர்களிடம் போய் யோசனை கேட்கிறேனே, என் மூளையைச் சொல்ல வேண்டும்.

பத்து நாட்கள் கழித்து ஒரு நாள் திடுமென வெங்கடேசுவரன் என்னை அழைத்தார். ''யோவ்! இங்கே வாய்யா! இன்கம்டேக்ஸ் ஆபீஸிலே ஒரு அட்டெண்டர் வேலை காலியிருக்காம். ரொம்ப ரகசியமாத் தேர்வு நடக்கிறதாம். உம்ம காதிலே போடலாம்னுதான் கூப்பிட்டேன்'' என்றார் அவர் ரகசியமாக.

நான் பரிதாபமாக அவரைப் பார்த்தேன். ''என்ன ஸார்! இங்கே ராஜீநாமாப் பண்ணிட்டு அங்கே போகச் சொல்றேளா?''

''கஷ்டம்! கஷ்டம்! உமக்கு ஒரு பையன் படிச்சுட்டு வீட்டிலே உட்கார்ந்து கிடக்கான்னு அன்னிக்கு நீ சொல்லலே?''

சாட்சாத் வெங்கடேசுவரப் பெருமாளையே சேவிப்பது போலக் கைகளை உயரத் தூக்கி விட்டேன். ''சார், விஷயத்தைப் பூராச் சொல்லுங்க சார். நான் என்ன செய்யணும்? யாரைப் பார்க்கணும்?''

''ஒய்! என் மச்சினன் ரகசியகமா என்கிட்டே சொன்னான். நான் உம்மைப் பத்தி, உங்க நிலைமையைப் பத்தி அவன் காதிலே போட்டு வைச்சிருக்கேன். நீர் நாளைக் காலையிலே எட்டு மணிக்கு நம்ம வீட்டுப் பக்கம் வாரும். அவன் வீட்டுக்கு அழைச்சிண்டு போறேன்.',

அன்று மாலை நான் கடற்கரைக்குப் போனபோது நான் மணலில் அமரவில்லை. ஆகாயத்தில் பறந்தேன். கடல் நீரில் மிதந்தேன். குறைந்த பட்சம் முந்நூறுவது சம்பளம் வரும். 'இஷ்டப்படி செலவு பண்ணிக்கோடா' என்று அந்தக் குழந்தையிடம் இம்பதைக் கொடுத்துவிட வேண்டும். பாவம்! வயசுப் பையன்! என்னைப் போல் கல்யாணமாகி விட்டால் அப்புறம் எதை அநுபவிக்கப் போகிறான். பாக்கி இருநூத்தைம்பது. ஓர் அரிசி மூட்டை வாங்கிப் போட்டு விட வேண்டும். டப்பாவை எட்டி எட்டிப் பார்க்காமல் விமலாவைத் திருப்தியாக இஷ்டப்படி சமைக்கச் சொல்ல வேண்டும். வீட்டுக்குச் சீக்கிரமாப் போனால் என்ன? விமலாவிடமும் பையனிடமும் இந்த நல்ல சமாசாரத்தைச் சொல்லலாமே?

பஸ் பிடித்து வீட்டுக்குப் போனேன். பையனை அருகில் அழைத்து விஷயத்தைச் சொன்னேன். அவன் முகம் மலர்ந்ததைப் பார்க்க வேண்டுமே! படிக்கவும் முடியவில்லை, வேலையும் கிடைக்கவில்லை என்ற வெறுப்பில்தான் அவன் பாதி சமயம் முரட்டுத்தனமாய் நடந்து கொண்டிருக்கிறான்.

''நாளைக்கு நானும் அந்த மச்சினன் மாமாவைப் பார்க்க வரேனே

அப்பா!'' என்றான் அவன், விமலாவோ இன்னும் திறந்த வாய் மூடவில்லை.

மறுநாள் வெங்கடேசுவரனுடன் மைத்துனனைப் பார்க்கப் போனேன். அவன் ஏக பிகு செய்து கொண்டான். பிறகு மூவாயிரம் ரூபாய் தேவையாக இருக்கும் என்றான். யாரோ குரல் வலையைப் பிடித்த மாதிரி இருந்தது. நான் விழிகள் பிதுங்க வெங்கடேசுவரனைப் பார்த்தேன். அவன் என்னை வெளியில் அழைத்து வந்தான். ''யோவ், மூவாயிரத்துக்குப் பாத்தானால் அப்புறம் மூவாயிரம் வருஷம் திண்டாடினாலும் வேலை கிடைக்காது. என் மைத்துனன் எமகாதகன்! ரூபாய் கொடுத்துட்டீரானால் காரியத்தைக் கச்சிதமாக முடிச்சுடுவான்.''

எனக்குப் பயமாக இருந்தது. ரூபாயையும் வாங்கிக் கொண்டு நாமத்தைப் போட்டுவிட்டால்?

''நான்தான் சாட்சி இருக்கேனே சுவாமி! அப்படி நடக்க விட்டுவிடுவேனா? தயங்காமல் கொடும்'' என்றார்.

நான்கு நாட்களில் பணத்துடன் வருவதாகக் கூறிவிட்டுத் திரும்பினேன்.

விஷயத்தைக் கேட்டதும் விமலாவின் முகம் விழுந்துவிட்டது. பையன் மறுபடி சோர்ந்து போனான்.

எனக்கு ஆவேசமாக வந்துவிட்டது. அன்று ஆபீஸ் போனதும், முதல் காரியமாகப் பிராவிடண்ட் பண்ட் லோன் மூவாயிரத்து ஐந்நூறுக்கு அப்ளிகேஷன் எழுதினேன். அதை எடுத்துப் போய் ராமண்ணாவிடம் காட்டினேன். ''நீ பெரிய உபகாரம் பண்ணணும். "இந்த லோன் சாங்ஷன் ஆகிப் பணம் கையிலே வருவதற்குள் பையனுக்கு ரிடையர் ஆற வயசு வந்துடும். அதனாலே உதவி பண்ணு. இந்தப் பணம் வந்ததும் உன் கையிலே கொடுத்துடுறேன்'' என்று சொல்லி, பையனின் வேலை விஷயத்தைச் சொல்லி உதவி கோரினேன்.

ராமண்ணா கட்டை பிரம்மசாரி. கண்டிப்பாக அவனிடம் காசு இருக்கும் என்று நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. அவன் மறுநாளே பணத்தை எண்ணிக் கையிலே கொடுத்துவிட்டான். வெங்கடேசுவரனையும் சாட்சிக்கு அழைத்துக் கொண்டு போய் ரசீது எதுவுமே இல்லாமல் அந்த மைத்துனனிடம் கொடுத்துவிட்டேன். என்னுடைய ஆபீஸ் டெலிபோன் நம்பரைக் குறித்துக் கொண்டான் அவன். அடுத்தத் திங்கள்கிழமை டெலிபோன் பண்ணுவதாகவும் உடனே பையனை அழைத்து வந்தால் வேலைக்கான ஆர்டரைக் கையில் வாங்கிக் கொடுத்து விடுவதாகவும் கூறினான்.

ஒரு வாரம் என்பது ஒரு வருஷத்தைப் போல் ஊர்ந்தது. பையன் வெளியே போகும் வழக்கத்தைக்கூட விட்டுவிட்டான். எங்கேயோ கனவுலகில் சஞ்சரித்தான். விமலா, நேரம் கிடைத்த போதெல்லாம் சுவாமி படத்துக்குமுன் அமர்ந்து சுலோகம் சொல்லத் தொடங்கினாள்.

திங்கட்கிழமை வந்தது. மனைவியும் மகனும் வாசல்வரை வந்து வழியனுப்பினார்கள். ''டெலிபோன் வந்ததும் வீட்டிற்கு வருவேன். எங்கேயும் வெளியே போய்விடாதே!'' என்று கூறிக் கிளம்பினேன். நான் மனப்பூர்வமாய்க் கடவுளை வேண்டிக் கொண்டேன்.

மூன்று மணி அளவில் டெலிபோன் வந்தது. உடலிலிருந்து உடைகளை நழுவுவது போன்ற நடுக்கம். பேசியது மைத்துனன் மகானுபாவன்தான். சரியாக நான்கு மணிக்குப் பையனுடன் அந்த ஆபீஸுக்கு வரச் சொன்னான். தானும் அதே நேரம் அங்கே வருவதாகக் கூறி டெலிபோனை வைத்துவிட்டான். நான் கிளம்பினேன். வெங்கடேசுவரன் கண்களாலேயே வாழ்த்தினார். ஆபீஸை விட்டு வெளியே வந்தேன். ஆட்டோ, டாக்ஸி ஏதாவது பிடிக்கலாம் என்று பார்த்தேன். அப்போது எதிரில் வந்தான், பாலு! என்னைப் பார்த்ததும் சட்டென்று மறைந்து கொள்ள முயன்றான். நான் பாய்ந்து வந்து அவன் கைகளைப் பிடித்தேன். பாலுவா இவன்? ஏன் இப்படி இருக்கிறான், பரதேசி மாதிரி? சாப்பிடுகிறானா இல்லையா? பார்த்தே பத்துப் பதினைந்து நாட்களுக்கு மேல் இருக்கும். இப்போது இவன் வீட்டுக்கு வருவதே கிடையாது போலிருக்கிறதே! என்னுடைய சொந்தப் பரபரப்பில் நான் இதைக் கவனிக்கவே மறந்துவிட்டேன்.

அவனைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. சாப்பிட்டு எத்தனை நாள் ஆகியிருக்குமோ?

பக்கத்திலிருந்த உடுப்பி ஹோட்டலில் அவனையும் இழுத்துக்கொண்டு நுழைந்தேன். தோசைக்கு ஆர்டர் கொடுத்தேன். நான் முறைத்த முறைப்பில் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டான். பிறகு, ''ஏண்டா! வீட்டுக்கு வரதில்லே?'' என்று கேட்டேன்.

''ஒண்ணுமில்லே சார்!''

''பாலு, பளீர்னு அறைஞ்சிடுவேன். ஏன் வரதில்லை?'' அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

''கார் துடைக்கிற வேலையும் போயிடுத்து சார்.''

''அதனாலே என்னடா? வீட்டுக்கு ஏண்டா வரலே? எங்கிட்டே ஏன் சொல்லலே?''

''அம்மா வேற பழைய விலாசத்துக்கு லெட்டர் எழுதியிருக்கா ஸார்! அவளையும் இனிமே வேலைக்கு வேண்டாம்னு சொல்லிட்டாங்களாம். கிளம்பி வரேன்னு எழுதிட்டாங்க ஸார். அவளும் வந்தா நான் எங்கே சார் வைச்சிப்பேன்? இந்தப் பதினைஞ்சு நாளா தெருத் தெருவா அலையறேன் ஸார். ஏதாவது வேலை கிடைக்குமா, இருக்க இடம் கிடைக்குமான்னு. இன்னிக்கு மனசே வெறுத்துப் போச்சு சார். மேலே மேலே உங்களைத் தொந்தரவு பண்றதிலே என்ன சார் பிரயோசனம்? ஏதாவது ஒரு கார் முன்னாடி விழுந்து உசிரை விட்டுடலாம்னு நிச்சயம் பண்ணிண்டு இந்தப் பக்கம் வந்தேன்.'' அவன் விசித்து விசித்து அழுதான்.

என் உடம்பு தகித்துக் கொண்டிருந்தது. சின்னப் பையன். நேர்மையானவன். உழைக்கத் தயாராக இருப்பவன். அவனை இந்த உலகம் காலில் போட்டு நசுக்குகிறது. பால் முகம் மாறவில்லை. காரிலே விழுந்து செத்துப் போகப் போகிறானாம்!

''கிளம்புடா என்னோடே!'' கர்ஜித்தேன் நான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ரெடிமேட் கடைக்குள் நுழைந்தேன். ஐந்நூறு ரூபாய் கையில் இருந்தது. நல்ல சட்டையும் நிஜாரும் வாங்கி அணியச் சொன்னேன். அங்கேயே முகம் கழுவித் தலை வாரிக் கொள்ளச் சொன்னேன். இழுத்துக் கொண்டு போனேன் அந்த ஆபீஸுக்கு!

மைத்துனன் இருந்தான். மடமடவென்று காரியம் நடந்தது. விண்ணப்ப நமூனாவில் 'கார்டியன்' என்று குறித்தேன். மைத்துனன் மேலும் கீழும் பார்த்தான். ''ஆமாம்பா. நான் இவனுக்கு அப்பா இல்லை. கார்டியன்தான். ஆனால் இவன் என் பிள்ளை மாதிரி!''

மைத்துனனுக்கு யாராக இருந்தால் என்ன? மூவாயிரம் வாங்கியதற்குக் கடமையைச் செய்துவிட்டான். ஆர்டரை வாங்கிப் பாலுவின் கையிலே கொடுத்தேன். வெளியோ வந்தோம். உடை வாங்கியது போகப் பாக்கி இருந்த பணத்தை அப்படியே தூக்கி அவன் கையிலே கொடுத்தேன். ''பாலு! கையிலே அட்வான்ஸ் பணத்தை வைச்சுண்டு வீடு தேடினா கிடைக்கிறது சுலபம். திருவல்லிக்கேணியிலே பாரு! கண்டிப்பாக் கிடைக்கும்.''

நடுத்தெரு என்று கூடப் பார்க்காமல் அப்படியே கால்களில் விழுந்தான் அந்தக் குழந்தை. மெதுவாக எழுப்பி கண்களைத் துடைத்து அனுப்பி வைத்தேன்.

கடற்கரைக்கு வந்து சேர்ந்தேன். உடம்பு முழுவதும் வேர்த்திருந்தது. கொதிப்பின் சூடு இப்போதுதான் தணிய ஆரம்பித்திருக்கிறது. வழக்கமான இடத்தில் அமர்ந்தேன்; கர்ணன் சிலைக்குக் கீழே. கர்ணன் சிரித்தார். இவருடைய சகவாசதோஷந்தான் காரணமோ என்று நினைத்தேன். எனக்கும் சிரிப்பு வந்தது. மனசு ரொம்ப ரொம்ப லேசாக இருந்தது.

*



தன்னிகரில்லா எழிலும், ஈடும் எடுப்பும் அற்ற நடனத் தேர்ச்சியும், மயக்கும் விழிகளும், தளதளப்பான இளமையும் அமையப் பெற்றவள் வாசவதத்தை. தேவதாசி குலத்துதித்த மாணிக்கமாக அவள் சுடர் வீசினாள். நடனக் கலையை ஆடல்வல்லானுக்கே அர்ப்பிக்க வேண்டும் என்ற உன்னதக் குறிக்கோள் இருந்தாலும் செருக்கும் அவள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

ததாகதரின் போதனையில் ஊறித் திளைத்த உபகுப்தர் என்ற பௌத்தத் துறவி, செல்லும் இடங்களில் எல்லாம், மக்கள் துயர் துடைத்து அன்பு காட்டி அறம் போதித்து வந்தார். ஆசைகளைத் துறப்பதே அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் இன்றியமையாதது என்ற அவர் போதனை மக்களைக் கவர்ந்தது. வயிறு பசித்தால் கிடைத்ததை வாங்கி உண்ணக் கையில் பிட்சாபாத்திரம் மட்டுமே அவர் உடைமை.

ஆண்டவனின் திருச் சந்நிதியில் ஆடிப் பாடும் தன் குல வழக்கத்தை வாசவதத்தையும் மேற்கொண்டிருந்தாள். அவள் நடனத்தைக் கண்ட ரசிகர்கள் அதில் கிறங்கிப் போவார்கள். ஒரு நாட்

உபகுப்தர்





குத்தும். வழுவழுப்பான என் முதுகில் உதை. குழந்தாய்? உன் மென்பதங்களுக்கு அதுதான் உகந்த இடம்'' என்றார் உபகுப்தர்.

அவர் வார்த்தைகள் அவள் மனத்தைக் கவர்ந்தன. தீவட்டி வெளிச்சத்தை உயர்த்தி அவர் முகத்தைப் பார்த்தாள் வாசவதத்தை. அந்த முகத்தில் குடிகொண்டிருந்த சாந்தியும் கனிவும் அவள் உள்ளத்தைத் தொட்டன. 'பெரிய மகானை உதைத்து அபசாரம் செய்துவிட்டோமே!' என்ற விதிர் விதிர்ப்புடன் வீடு திரும்பினாள்.

விட்டில் அவளுக்கு உறக்கமே வரவில்லை. ஊணும் பிடிக்கவில்லை. எப்படியும் அந்தத் துறவியை வீட்டுக்கு அழைத்துப் பிக்ஷை செய்வித்து, மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று துடித்தாள். தோழியை அழைத்து, அந்தத் துறவியை அழைத்து வரச் செய்தாள்.

''பிக்ஷாம் தேஹி!'' என்ற குரல் வாசலில் கேட்டது. தாயின் குரலைக் கேட்ட கன்று போல் வாசலுக்கு ஓடிப் பார்த்தாள் வாசவதத்தை. அதே துறவி பிக்ஷா பாத்திரத்துடன் நின்றிருந்தார். அந்த மகானைப் பார்த்ததும் அவள் உள்ளத்தில் ஆனந்தம் உண்டாயிற்று. கனிவர்க்கங்களை எல்லாம் அந்தப் பிக்ஷா பாத்திரத்தில் பக்தியுடன் இட்டாள்.

டில் மகாராணிபோல், அவள் முத்துப் பல்லக்கில் கோவிலுக்குச் செல்வதும், தன் கலையை ஈசுவரார்ப்பணமாகச் செய்வதும் அவளுடைய அன்றாடக் கடமை. சிவிகையிலிருந்து இறங்கித் தோழியர் தொடரக் கோவிலுக்குள் அவள் செல்லும் அழகே தனிக் கவர்ச்சியாக இருக்கும்.

காடாவிளக்குகளும் தீவட்டியும் எரியும் கோவில்களில் அதிக ஒளி ஏது? திருக் கோவில் நடன மண்டபத்தில் ஆடிவிட்டுத் தோழியர் ஏந்தி வந்த தீவட்டி வெளிச்சத்தில் வாசவதத்தை வீடு திரும்பினாள். பிராகாரம் ஒன்றில், இருட்டில் உபகுப்தர் இளைப்பாறிப் படுத்திருந்தார். மிடுக்குடன் திரும்பிய வாசவதத்தை, உபகுப்தர் படுத்திருப்பதை அறியாமல், அவர்மேல் மோதித் தடுமாறி விழப் போனாள். அவள் செல்லும் வழியில் படுத்திருந்த அந்தப் பௌத்தத் துறவியின்மேல் அவளுக்குத் தாங்காத கோபம் ஏற்பட்டது. தான் வரும் வழியில் ஒரு சந்நியாசியா? அவரை எட்டி உதைத்தாள் வாசவதத்தை.

எழுந்து பார்த்தார் உபகுப்தர். சினத்துக்குப் பதில் அவர் முகத்தில் அமைதியும் முறுவலும் தெரிந்தன. ''குழந்தாய், என் தலையில் உதைத்தால் உன் கால்கள் நோவும். மயிர்கள்



துறவி புறப்பட ஆயத்தமானார். "எங்கே புறப்படுகிறீர்கள்? இன்னும் பிக்ஷை [illegible]யாகவில்லையே!" என்றாள் தத்தை. "துறவிக்கு இதுவே அதிகம், அம்மா!" என்றார் உபகுப்தர். "இல்லை, என் உடலையே உங்களுக்குப் பிக்ஷையாக இடப் போகிறேன், ஏற்று அருளவேண்டும்" என்றாள் தத்தை.

"இப்போது வேண்டாம், குழந்தாய்! சமயம் வரும். அப்போது ஏற்றுக்கொள்கிறேன்" என்று ஆசி கூறிப் புறப்பட்டார் உபகுப்தர்.



தன் குல வழக்கப்படி, தன் மகளை அரசவை நாட்டியக்காரி ஆக்கவும், பிரபல வணிகரின் ஆசைநாயகி ஆக்கவும் அவள் தாய் விரும்பினுள். வாசவதத்தை அதற்கு உடன்படவில்லை.

அந்தத் துறவியின்பால் அவள் மனம் சென்றது. உபகுப்தரால்தான் வாசவதத்தை தனக்குக் கிட்டவில்லை என்பதை உணர்ந்த அரசனும் வாசவதத்தையின் தாயும் சேர்ந்து உபகுப்தருக்கு மாசு கற்பிக்க, ஒரு நாடகத்தை உருவாக்கினுர்கள். ஒரு பிச்சைக்காரப் பெண், தன் குழந்தையுடன் வந்து, ''நீங்கள் தாம் என் கணவர். இது உங்கள் குழந்தைதான். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று தெருவில் செல்லும் உபகுப்தரை வழி மறித்து மன்றுடிக் கூறினுள்.

இதை அறிந்த வாசவதத்தை அந்தப் பெண்ணைக் கண்டு, உபகுப்தரின் சிறப்பைக் கூறி, தகாத செயலில் அவள் ஈடுபட்டதைக் கண்டித்தாள்.

பணத்தையும் பதவியையும் காட்டியும் வாசவதத்தை மனம் மாறவில்லை.

அரச போகத்தையும் அவள் துச்சமாக எண்ணி வெறுத்தாள்.

இதை அறிந்த மன்னன், வாசவதத்தையின்மேல் சினம் கொண்டு, அவள்மேல் கொலைக் குற்றத்தைச் சாட்டி, நாடு கடத்தினுன். எல்லாரும் அவளை, ''கொலைகாரி, கொலைகாரி!'' என்று இகழ்ந்து கல்லால் அடித்து விரட்டினர். கல்லடி தாங்காமல் ஓடிய வாசவதத்தை ஒரு மரத்தடியில் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள். அவ்வழியே வந்த உபகுப்தர் அவளைப் பார்த்து இரக்கம் கொண்டு ஆசுவாசப்படுத்தி எழுப்பினுர். கொஞ்சங் கொஞ்சமாகச் சுய உணர்வு பெற்ற தத்தை, தன் எதிரில் அந்தத் துறவி அமர்ந்திருப்பதைக் கண்டு, உடல் துன்பத்தையும் மறந்து ஆனந்தம் அடைந்தாள். ''என் அழகும் இளமையும் போனபின் வந்திருக்கிறீர்களே, சுவாமி!'' என்று கூறி வருந்தினுள்.

''அவை எனக்கு எதற்கு குழந்தாய்? சமயம் வாய்க்கும்போது வருவேன் என்றேனே! இது தான் தக்க தருணம். வா; எழுந்திருந்து என்னுடன் நட'' என்று அவளைஅரவணைத்து நடத்திவந்தார் துறவி.

புத்த பகவானின் சந்நிதியில் வாசவதத்தை புத்துணர்வு பெற்றுப் பிக்ஷுணியாக மாறினுள். ''புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி! ஸங்கம் சரணம் கச்சாமி!'' என்று புகல் அடைந்தாள். அவள் உள்ளத்தில் என்றும் அறிந்திராத பேரமைதி குடிகொண்டது.

[இந்த நாடகக் காட்சிகளை மலரில் வெளியிட இசைந்து ஒத்துழைத்த கலைமாமணிகள் நடராஜ்-சகுந்தலா அவர்களுக்கும் அவர்களின் நடன கலா நிலையக் குழுவினருக்கும் எங்கள் நன்றி.

போட்டோக்கள்

அதிசயந்தான்

ஹேமா ஆனந்த தீர்த்தன்

தீபாவளி: பல பேருக்குச் சாதாரணமான தீபாவளி, சில பேருக்குத் தலை தீபாவளி.

அந்தச் சில பேரில் வாசுவும் ஒருவன். வாசுவை மட்டும் சொன்னால் போதுமா? வாசுவுக்கும் ராஜிக்கும் சேர்த்துத்தான்.

தலை தீபாவளியை எவ்வளவோ பேர் எவ்வளவோ விதமாகக் கொண்டாடுவார்கள். ஆனால் வாசு தனிரகம். ஆகவே தலை தீபாவளியைத் தனிரகமாகக் கொண்டாடத் தீர்மானித்தான். ராஜியும் சந்தோசத்தோடு அவன் சொன்னதை ஏற்றுக் கொண்டாள்.

விடியற்காலையில் தெருவில் காது செவிடாகும்படி வெடித்த பல வகைப் பட்டாசுகளின் பயங்கர ஓசை கேட்டது. கோலத்தின் மீது விரித்த பாயில் மற்றவற்றோடு தாங்களும் உட்கார்ந்துகொண்டு ஆரத்தி சுற்றிக் கொண்டது, பல்விளக்க மறந்து போய் அப்படியே காபி சாப்பிட்டது, சாஸ்திரத்துக்கு இரண்டு சொட்டு எண்ணெயைத் தலையில் தடவிக்கொண்டு, அதையே உடல் முழுவதும் தேய்த்துக் கொண்டதாகப் பாவித்துக் குளித்துவிட்டு வந்தது, சுவாமி மடத்தின் முன்னாள் நுனியில் லேசாக மஞ்சள் குங்குமம் தடவி வைத்திருந்த புது ஆடைகளை உடுத்திக் கொண்டது, சுவாமிக்கும் வீட்டிலுள்ள பெரியவர்களுக்கும் நமஸ்காரம் செய்தது, காலை பலகாரம், தீபாவளி மருந்து சாப்பிட்டது .... எல்லாவற்றையும் மற்ற எல்லாரையும் போலவேதான் வசுவும் ராஜியும் கொண்டாடினார்கள்.

அதற்குப் பிறகுதான் வித்தியாசம். மற்றவர்கள் விடு வீடாகச் சென்று நண்பர்களையும் உறவினர்களையும், ''கங்காஸ்நானம் ஆச்சா?'' என்று விசாரிக்கிற நேரத்தில் வாசுவும் ராஜியும் தண்ணித்துறை ஆஞ்சநேயர் கோவில், லஸ் நவசக்தி விநாயகர் கோவில், கபாலீசுவரர் கோவில், முண்டகக்கண்ணியம்மன் கோவில் ஆகிய கோவில்களுக்குப் போய்த் தரிசனம் செய்துவிட்டு வருவது என்று தீர்மானித்தார்கள்.

தீபாவளி மலர்களைப் பிரித்து வைத்துக்கொண்டு உட்காராமலும் காலைக் காட்சிக்குப் போகலாமா என்று யோசிக்காமலும் கோவிலுக்குப் போகவேண்டுமென்று இருபத்தாறு வயது வாசுவுக்கும், இருபத்திரண்டு வயது ராஜிக்கும் தோன்றினால் அவர்களைத் தனிரகம் என்று அழைப்பதில் தவறு இல்லையே!

எல்லாக் கடவுளர்களும் ஒன்றுதான் என்பதை வாசு அறிவான். இருந்தாலும் ஆஞ்சநேயர் அவனுடைய விருப்பத் தெய்வம். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்துவிட்டு வருவதைச் சென்ற எட்டு வருஷமாகவே கடைப்பிடித்து வருகிறான். மாதத்தில் முதல் சனிக்கிழமை வடைமாலை சாற்றச் செய்வான்.

எனவே இன்றும் முதலில் ஆஞ்சநேயரைத் தரிசனம் செய்துவிட்டுப் பிறகு மற்றக் கோவில்களுக்குப் போகலாம் என்று ஏற்பாடு.

வாசுவிடம் இன்னொரு சுபாவம். கோவிலுக்குப் போவதானால் அதற்குச் சில விதிமுறைகளை அவனாகவே கைக்கொண்டிருந்தான்.

ஒன்று. கோவிலுக்குப் போவதற்கென்றே வீட்டிலிருந்து கிளம்பிப் போக வேண்டும். ஆபிசிலிருந்து வரும்போதோ மார்க்கெட்டுக்குப் போகும்போதோ அல்லது பத்து வேலைகளைக் கவனித்துக்கொண்டு பத்தோடு பதினொன்றாகச் சுவாமி தரிசனத்தை வைத்துக் கொள்ளக் கூடாது.

இரண்டு. சாதாரணமாக நடந்து போகக்கூடிய தூரத்தில் இருக்கும் கோவில்களுக்கு நடந்தேதான் போகவேண்டும். பஸ்ஸிலோ ரிக்ஷாவிலோ போகக்கூடாது.

''இந்த ஆஞ்சநேயர் கோவிலுக்கும் நடந்தே போய்விட்டு வரணுங்கறது என் ஆசை. ஆனா அதுக்காக நான் உன்னைக் கட்டாயப்படுத்தலே. உன்னாலே முடிஞ்சா சரி. நடந்து போவோம். முடியலேன்னா ரிக்ஷாவிலே போவோம். என்ன சொல்றே?'' என்று கேட்டான்.

''நடந்தே போகலாம்'' என்றாள் ராஜி.

இருவரும் ஆஞ்சநேயர் கோவிலை நெருங்கியதும், ''சார்? செருப்பை எங்கிட்ட விட்டுட்டுப் போ சார்!'' என்று ஒரு பையன் அழைத்தான். வயது பதினைந்து அல்லது பதினாறு இருக்கும்.

வாசு தயங்கினான்.

''பத்துப் பைசாதான் சார். சாப்பாட்டுக்கு வேற வழி இல்லே சார். தீபாவளியன்னிக்காவது நாலு துட்டுக் கிடைச்சா என் வயிறு வாடாம இருக்கும் சார்.''

அவன் முன்னால் இரண்டே இரண்டு ஜோடிச் செருப்புகள் இருந்தன. இரண்டும் படு பழையவை. அதன் சொந்தக்காரர்களுக்கு அவை குறைந்தது இரண்டு வருடங்களாவது உழைத்திருக்க வேண்டும்.

''கடையிலே தேங்காய், பழம் வாங்கப்போறோமே அங்கே விட்டாப் போச்சு'' என்றாள் ராஜி.

''எப்பவும் அப்படித்தான் விடற வழக்கம். இன்னிக்கு இவன் புதுசா வந்திருக்கான். கெஞ்சறான், பாவம்!'' என்று வாசு அந்தப் பையனுக்காகப் பரிந்து பேசினான்.

''நம்ம ரெண்டு பேருதும் புதுசாச்சே. எடுத்துண்டு ஓடிட்டான்னா என்ன பண்றது? வேணும்னா அவனுக்குப் பத்துப் பைசா தர்மம் கொடுத்துட்டாப் போச்சு'' என்று ராஜி ஆங்கிலத்தில் சொன்னாள். தான் அந்தப் பையனைப் பற்றிச் சந்தேகப்படுவது அவனுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே ஆங்கிலத்தில் பேசினாள்.

வாசுவும் ஆங்கிலத்திலேயே அவளுக்குப் பதில் சொன்னான்.

''அப்படியெல்லாம் ஒன்னும் ஆகாது. கோவில்லெ வந்து ஒருத்தனும் அப்படிச் செய்ய மாட்டான்.''

சொல்லிக் கொண்டே வாசு தன் செருப்பைக் கழற்றி அந்தப் பையனின் அருகே விட்டான். ராஜியும் தயங்கியபடியே தன் செருப்புகளையும் கழற்றி வைத்தாள்.

எதிர்த்தாற்போல இருந்த கடையில் தேங்காய், பழம், கர்ப்பூரம், வெற்றிலைபாக்கு, ஊதுபத்தி ஆகியவை வைத்த இரண்டு 'தட்டு'களை வாங்கிக் கொண்டார்கள். கோவில் வாசலில் பூ விற்ற பெண்ணிடமிருந்து இரண்டு முழம் மல்லிகைப் பூ வாங்கிக் கொண்டார்கள்.

அர்ச்சனைத் தட்டு விற்பவர், கூடவே துளசி மாலை விற்கும் வியாபாரத்தையும் செய்து வந்தார். அவரிடமிருந்து ஆஞ்சநேயர் அர்ச்சனைக்கு ஒரு சீட்டும் வாங்கிக் கொண்டான் வாசு. ஆஞ்சநேயருக்குச் சாத்துவதற்காக இரண்டு ரூபாய் கொடுத்து ஒரு துளசி மாலையும் வாங்கிக் கொண்டான்.

இருவரும் பிராகாரத்தை வலம் வந்தனர்.

''செருப்பைப் பத்தியே நினைச்சுண்டிருக்காதே, கோவிலுக்கு வந்து பிரயோஜனம் இல்லாமப் போயிடும்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் வாசு.

''நீங்கதான் இப்போ ஞாபகப் படுத்தறேள். எனக்கு அதைப்பத்திய நினைவே இல்லே'' என்றாள் ராஜி சிரித்தபடியே.

பிராகாரத்தை இரண்டாவது சுற்றுவந்து கொண்டிருந்தபோது, மடைப்பள்ளிக்காரர் சிரித்தபடியே, ''கங்கா ஸ்நானம் ஆச்சா?'' என்று விசாரித்தார்.

''இம்'' என்று கூறியபடியே வாசு தன் சட்டைப் பையிலிருந்து இரண்டு ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் நீட்டினான். அவர் அதைப் பணிவுடன் பெற்றுக்கொண்டு ''இருங்கோ, பிரசாதம் தர்றேன்'' என்று கூறி, உள்ளே போய்ச் சில விநாடிகளில் இரண்டு சிறு டம்ளர்களுடன் வெளியே வந்தார்.

''சாப்பிடுங்கோ'' என்று இருவர் கைகளிலும் ஒவ்வொரு டம்ளரைக் கொடுத்தார்.

பாயசம். வாசுவும் ராஜியும் பக்தியோடு அதை வாங்கிக் குடித்தார்கள்.

''நல்ல சகுனம். நாம கேட்காமலே பிரசாதம் கிடைத்தது'' என்றான் வாசு, அங்கிருந்து அகன்றதும்.

''வாங்கிண்ட பணத்துக்கு ஏதாவது பதில் செய்யணுமேன்னு கொடுத்தார்'' என்றாள் ராஜி.

''இருக்கலாம். ஆனாலும் அவர் கொடுக்கணுமின்னு கட்டாயம் இல்லியே? கொடுக்கணும்னு அவருக்குத் தோணித்தே, அதுதான் நல்ல சகுனங்கறேன்'' என்று தன் கட்சியை நிலைநிறுத்தினான் வாசு.

தீபாராதனையின்போது அர்ச்சகர்கள் வாசுவைப் பார்த்துப் புன்னகை புரிந்து வரவேற்றார்கள். அர்ச்சனை செய்து பிரசாதம் வழங்கிய போது அவனுக்கு மாலை போட்டார்கள். ராஜியின் கையில் ரோஜாப் பூ கொடுத்தார்கள். ஹாரத்தியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்வதற்கு முன்னால் தட்டில் தானும் இரண்டு ரூபாய்களைப் போட்டதோடு ராஜியையும் அதே போலப் போடச் செய்தான்.

''ரொம்பத் தாராளமாக இருக்காப்பலே இருக்கு'' என்றாள் ராஜி.

''ஆமா. என் மனசு உற்சாகமா இருக்கு. தினம்தினமா இப்படிக் கொடுக்கப் போறும்? வருஷத்துக்கு ஒரு நாள். நாம கொடுக்கறதைப் போலப் பத்து மடங்கு நூறு மடங்குன்னு அள்ளிக் கொடுப்பார் ஆஞ்சநேயர். எனக்கு அந்த நம்பிக்கை உண்டு. கொடுக்கறதுலெ ஆஞ்சநேயர் மாதிரி யாரும் கிடையாது'' என்றான் வாசு.

வாசுவின் பக்தியை வியப்புடன் கவனித்தாள் ராஜி.

தீபாராதனையெல்லாம் முடிந்து இருவரும் சிறிது நேரம் மண்டபத்திலேயே உட்கார்ந்து விட்டுப் பிறகு புறப்பட்டார்கள்.

''அந்தச் செருப்புக்காரப் பையனுக்குப் பத்துப் பைசா கொடுக்கப் போறதில்லே. ஒரு ரூபாய் கொடுத்து அவனை ஆச்சரியத்துலெ மூழ்கடிக்கப் போறேன்'' என்றான் வாசு.

''செய்யுங்கோ, கர்ணப் பிரபு'' என்று சிரித்தாள் ராஜி.

தேங்காய் பழக் கடைக்குச் சென்று இரண்டு காலித் தட்டுக்களையும் திருப்பிக் கொடுத்தார்கள்.

இருவரும் கடையை விட்டுத் திரும்பி வந்தபோது அந்தச் செருப்புக்காரப் பையன் அந்த இடத்தில் இருக்கவில்லை.

''அந்தப் பையனைக் காணல்லியே'' என்று பதறினாற்போல் கேட்டாள் ராஜி.

''வேற எங்கேயாவது உட்கார்ந்திருக்கிறானோ என்னவோ? பார்ப்போம்'' என்று வாசு சுற்றுமுற்றும் பார்த்தான்.

''எங்கே போயிட்டான்?'' என்று வாசு தன்னையே கேட்டுக்கொண்டு ராஜியின் முகத்தைப் பார்த்தான்.

''யாரையாவது கேட்டுப் பாருங்களேன்'' என்றாள் ராஜி.

''யாரைக் கேட்பது? எடுத்துண்டு ஓடிப் போயிட்டான். அவ்வளவுதான். இப்படி அவன் செய்வான்னு நான் நினைக்கலே'' என்றான் வாசு.

செருப்பு போனது போனதுதான் என்பது ராஜிக்கு நிச்சயமாகிவிட்டது. ''நான் அப்பவே சொன்னேன்'' என்று சொல்லிக் காட்டிக் கணவனின் மனத்தை நோக வைக்க அவளுக்கு விருப்பம் இல்லை.

''சரி. போனாப் போறது. இங்கே நின்னுண்டு என்ன பண்ணப் போறோம்? வாங்கோ? முண்டகக் கண்ணியம்மன் கோவிலுக்குப் போகலாம்'' என்றாள்.

''எவ்வளவோ தடவை செருப்பு தொலைஞ்சு போயிருக்கு. ஆனா இந்த மாதிரி ஒருதடவை கூடக் கோயில்லெ தொலைஞ்சது கிடையாது'' என்றான் வாசு வருத்தத்துடன்.

''உங்களுக்கும் எனக்குந் தான் இது கோவில். திருடனுக்கு இது கும்பல் கூடுகிற இடம். அவ்வளவு தான்.''

''சரி, போகலாம். என்ன பண்றது?'' என்று சொல்ல இருவரும் அங்கிருந்து நகரத் தொடங்கினார்கள்.

அப்போ ராஜியின் பார்வை எதிர்ப் பக்கம் திரும்பியது.

அதே பையன் தான்!

ஆனால் அவன் தனியாக வரவில்லை. அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளியபடி கூடவே வந்து கொண்டிருந்தார், இன்னொருவர்.

பையனின் கையில் ஓர் அழுக்குத் துணிமூட்டை. மூட்டையில் என்ன? அவர் யார்?

ராஜி அந்தக் காட்சியை வாசுவுக்குச் சுட்டிக் காட்டினாள்.

வாசுவும் ஆச்சரியத்துடன் பார்த்தான். பையன் வந்து தான் முன்பு உட்கார்ந்திருந்த அதே இடத்தில் அமர்ந்து மூட்டையை அவிழ்த்தான்.

ராஜி நினைத்தது போலவே அவர்களுடைய செருப்புகளும் கூடவே இரண்டு ஜோடி பழைய செருப்புகளும் இருந்தன.

அந்த மனிதரும் அவன் அருகிலேயே நின்று கொண்டார்.

வாசுவும் ராஜியும் அவன் அருகில் சென்று, ''எங்கப்பா போயிட்டே? அப்பவே பிடிச்சுத் தேடறோம்'' என்றார்கள்.

''உங்களதுதானா சார் செருப்பு? எடுத்து அவர் கால்லே போட்டு அந்தக் கால்லேயே விழுந்து மன்னிப்புக் கேளுடா, படவா!'' என்று

பையனின் முதுகில் ஓர் உதை விட்டார் அந்த மனிதர்.

''ஐயோ'' என்று கதறியபடியே பையன் வாசுவின் கால்களில் செருப்பைப் போட்டு விட்டான். ராஜியின் முன்னால் அவள் செருப்பை எடுத்து வைத்தான். இரண்டு பேர் முன்னாலும் விழுந்தான்.

''அந்த ரெண்டு பழ ஜோடியும் யார்துடா?'' என்று இன்னொர் உதை விட்டார்.

''ஐயோ, உதைக்காதே சார், வலிக்குது. அது யார்தும் இல்லே. என்னுதேதான். சும்மா பாக்கறவங்களுக்கு நம்பிக்கை வர்றதுக்காக அதை வெச்சுக்கிட்டிருக்கேன்'' என்றான்.

''நான் மயிலாப்பூர் ஸ்டேஷன் கான்ஸ்டபிள் சார். மஃப்டியிலே இருக்கேன். இந்தப் பயல் லஸ் கார்னர்லே எங்கிட்டேயே வந்து உங்க செருப்பை விக்கப் பார்த்தான். எனக்குச் சந்தேகம் வந்து, நாலு அறைவிட்டுக் கேட்டதும் உண்மையைக் கக்கிட்டான். இங்கே இழுத்துக்கிட்டு வந்தேன். நல்ல வேளையா நீங்க போய்டாம இங்கேயே இருந்தீங்க. இந்த மாதிரி பசங்களையெல்லாம் பார்த்தாலே தெரிஞ்சுக்க வேண்டாமா? செருப்பை இனிமே அந்தக் கடையிலே விடுங்க. இல்லாட்டி பூக்காரிங்க யார் கிட்ட யாவது விடுங்க'' என்று வாசுவிடம் சொல்லிவிட்டு, ''போடா, எந்திரிச்சு. மறுபடியும் உன்னை இந்த வேலை செய்யறதை எங்கியாச்சும் பார்த்தேன், முதுகுத் தண்டை ஒடிச்சிடுவேன்'' என்று அந்தப் பையனின் முதுகில் இன்னொர் உதை விட்டார்.

அவன் அத்துடன் தப்பித்ததே போதுமென்று அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

''வர்றேன் சார்'' என்று கான்ஸ்டபிள் விடைபெற்றுக் கொண்டார்.

''நன்றி. இதை வெச்சுக்குங்க'' என்று வாசு இரண்டு ரூபாய்த் தாளை நீட்டினான்.

''வேண்டாங்க, அது தப்பு.''

''தப்பா எடுத்துக்காதீங்க. செருப்பு ரெண்டும் நாப்பது ரூபா. எடுத்துக்குங்க. காபி சாப்பிடுங்க'' என்று வாசு வற்புறுத்தினான்.

''நான் காலையிலேயே காபி சாப்பிட்டாச்சுங்க. வர்றேன் சார். நன்றிங்க'' என்று கூறிக் கான்ஸ்டபிள் நகர்ந்தார்.

''அதிசயந்தான்'' என்று நினைத்துக் கொண்டே வாசு ராஜியைப் பார்த்து முறுவலித்தான். ராஜிக்கு வாசுவை நினைத்துப் பெருமையாக இருந்தது.❋

K. ORR & COMPANY

28, STRINGERS STREET, MADRAS 600 001

Phone: 23019, 23526 Grams: "PRESUNDRY"

Agents and Stockists

- PAPER
- PRINTING Inks: "VENUS", "MONARK", "COATES" and "HOOGLY" Brands
- Printers Sundries
- Teleprinter and Telex Paper Rolls etc.

Indents Booked For

- Paper Process Zinc and Copper Sheets, Lithographic Zinc Sheets, Hardware, Match Chemicals
- Bronze Powders From ENGLAND
- Art Paper From JAPAN
- Bolts and Nuts From Partap Fasteners Pvt. Ltd., PATANCHERU—A.P.
- "KG" Brand Zip Fasteners - Metal and Nylon Zips

BAGS & PRINTS

62, CHINNATHAMBI STREET, MADRAS 600 001

Phone: 29541 Grams: "PAPERBAG"

Manufacturers of Tele Tapes & Teleprinter Paper Rolls

முடியாத பயணம்

கமலா சடகோபன்

சுகுணா தன் வேலைகளை முடித்துக் கொண்டு படுக்கை அறைக்கு வந்தபோது அவள் கணவன் கேசவன் ஆழ்ந்த சிந்தனையுடன் அந்த அறையில் உலாவிக்கொண்டிருந்தான். தினமும் இரவு நேரங்களில் நண்பர்களுடன் அரட்டை அடித்துவிட்டுப் பதினொரு மணிக்குமேல் வீட்டுக்குத் திரும்பும் கேசவன் அன்று இரவு வெளியே போகாமல் வீட்டில் தங்கியது அவளுக்குப் புதுமையாக இருந்தது. அவள் வருவதற்காகவே காத்திருந்தவன் போல அவன் கேட்டான்.

''சுகுணா, இந்த வாரக் கடைசியில் நான் ஆபீஸ் வேலையாக வெளியூர் போகப் போறேன். எல்லாத்தையும் முடிச்சுண்டு வர, நிச்சயம் ஒரு மாசமாகும். அதுவரையில் நீ உங்கம்மா ஊருக்குப் போயிரு. உங்கப்பா அம்மாவுக்கும் திருப்தியாக இருக்கும்.''

''நம் கல்யாணம் முடிஞ்சு ஆறு மாசந்தான் ஆகிறது. அதுக்குள்ளே பொறந்தாத்துச் சிராடல் என்ன வேண்டிக் கிடக்கு? அதுவும் நீங்க ஊருக்குப் போனா நான் தனியாவா இருக்கப் போறேன்? உங்க அப்பா, அம்மா துணை இல்லியா? வயசானவர்களைத் தனியா விட்டுட்டு இப்போ லால்குடிக்கு நான் போகும்படியான அவசியம் என்ன?''

கேசவன் சற்றுத் தடுமாறினான். அவளை நெருங்கி மெல்ல அணைத்துக் குழைவுடன் கூறினான்; ''இதோ பாரு சுகுணா, நான் இல்லாமல் நீ இவர்களுடன் இருப்பது எனக்கு இஷ்டம் இல்லே. என்னைப் பெத்தவர்கள்தான். ஆனாலும் அவா குணம் உனக்குத் தெரியாது. நீ சிக்கித் தவிச்சுண்டு திண்டாடறதை விட, நிம்மதியா உங்க ஊருக்குப் போய்ச் சேரலாம்.''

''பயப்படாதீங்க, நான் அவாளை அனுசரிச்சுண்டு இருப்பேன்.''

''நான் அதுக்குச் சொல்லலே சுகுணா. நான் இந்தத் தடவை வெளியூர் போய் வந்துட்டா அப்புறம் ரெண்டு வருஷத்துக்கு எங்கேயும் போகவேண்டாம். உன் பொறந்த வீட்டிலே உன்னை எதுக்காகவாவது கூப்பிட்டாலும் நான் உன்னை அனுப்ப வேண்டி இருக்கும். இப்போ நீ போய் ஆசை தீர ஒரு மாசம் இருந்துட்டு வந்துட்டா, அப்புறம் நீ போக வேண்டி இருக்காது.''

சுகுணா திகைப்புடன் தன் கணவனை நோக்கினாள். அவன் முகத்தை ஆராய்வது போல் உற்றுப் பார்த்தாள். அவளால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

''சரி, உங்க விருப்பம்'' என்று விரக்தியுடன் கூறினாள். அவன் உற்சாகத்துடன் செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினான்.

''என்னிக்குப் புறப்படச் சொல்றீங்க?''

''நாளைக்கு மறு நாள் புறப்படு, போதும். நான் ரிசர்வ் செய்து விட்டேன். இன்னொரு விஷயம். நானே ஊருக்கு வந்து அழைச்சிண்டு வரும் வரையில நீ அங்கேயே இரு; உன் அப்பாவையோ, அண்ணாவையோ கொண்டு விடச் சொல்லித் தொந்தரவு செய்யாதே.''

''இப்போ நீங்க அனுப்பறாப் போலே. அங்கே ஆரையாவது ரெயிலேத்தச் சொல்லி வந்துட்டாப் போறது.''

திடீரென்று அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''அதிகப்பிரசங்கி; சொன்னபடி செய், போதும்'' என்று எரிந்து விழுந்தான்.

சுகுணாவுக்கு அன்று இரவு வெகு நேரம் தூக்கம் வரவில்லை. அவளைக் கேசவன் லால்குடிக்குக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அனுப்புவதன் காரணம் என்ன? வெளியூர் போகப் போவது உண்மையா? இவள் லால்குடிக்குப் போவதனால் அவனுக்குக் கிடைக்கப் போகும் ஆதாயம் என்ன?

சுகுணா இந்த ஆறுமாத மண வாழ்க்கையில் கேசவனின் குணத்தை ஒரு விதமாகப் புரிந்துகொண்டிருந்தாள். மணம் முடிந்த அன்று இரவு இருவரும் தனித்து விடப்பட்டபோது அவன் தன் சுயரூபத்தைக் காட்டிவிட்டான்.

சுகுணா அவனுடைய கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள். அவளை ஏற இறங்க ஒரு முறை நோக்கினான்.

''பாவம்! எங்க குடும்பத்து வழக்கம் உனக்கு எப்படித் தெரியும்? இந்த மாதிரி முதல் முதலாகப் புருஷனைச் சந்திக்கிறபோது மனைவி பொன் அல்லது பணத்தைப் புருஷன் கையிலே குடுத்து, காலில் விழுந்து நமஸ்கரிப்பாள்.''

''இதுவரையில் நான் கேள்விப் பட்டதே இல்லையே!''

''அப்ப நான் பொய் சொல்றதா அர்த்தமா?''

சுகுணா பயத்துடன் அவசரமாகக் கூறினாள். ''நான் உங்களைத் தப்பாச் சொல்லல்லே. எனக்குத் தெரியாத விஷயமா இருக்கேன்னுதான் சொன்னேன். அப்படி ஒரு வழக்கம் உண்டுன்னா நான் போட்டுண்டிருக்கிற நகைகளில் ஒண்ணைக் கழட்டி குடுக்கிறேன்.''

''நன்னாக் குடுப்பியே! கன்னிகாதானம் உங்கப்பா செஞ்சு குடுத்தபோதே, உன்னோடு உன் நகைகளும் எனக்குச் சொந்தமாயிடுத்து. அதை நீ என்ன குடுக்கிறது? ஏன்? நகை இல்லேன்னா பணமாக் குடுக்கலாமே!''

சுகுணாவுக்குச் சட்டென்று ஓர் அருவருப்புத் தோன்றியது. சற்று ரோஷம் கலந்த குரலில் கூறினாள். ''நான் படிச்சேனே தவிர வேலைக்குப் போகலியே! நான் சம்பாதிக்கிறவளாக இருந்தா யாருக்கும் தெரியாமல் உங்களுக்குப் பணத்தைக் குடுத்து, உங்க குடும்பத்துக்கு மட்டும் ஏற்பட்டிருக்கிற விசேஷ வழக்கத்தைக் கொண்டாடி இருக்கலாம். நான் அப்பாகிட்டேயோ, அண்ணாகிட்டேயோ கேட்டு வாங்கி உங்களுக்குப் பணம் தரணும். அது கூட இப்போ இந்த அறையை விட்டுப் போய்க் கேட்க வெட்கமா இருக்கு. அந்த வெட்கமும் உங்கள் மதிப்பு குறைஞ்சுடப் போறதேங்கறதை நெனைச்சுத்தான். நீங்க உங்க குடும்பத்து வழக்கத்தைக் கடைப்பிடிக்கறதிலே தீவிரமா இருந்தால் நான் அதைக் கெடுக்க விரும்பல்லே. அதனாலே நமக்குள்ளே இன்னிக்கு எதுவுமே நடக்கவும் வேண்டாம்.''

சுகுணா பொரிந்து கொட்டியதும் அதில் ஏதோ நகைச்சுவையைக் கண்டவன் போல் கேசவன் உரத்த குரலில் சிரித்தான். ''அடேங்கப்பா! என்ன ரோஷம்? எங்க குடும்ப வழக்கத்தைப் பத்திச் சொன்னா உனக்கேன் அவ்வளவு ரோஷம் வருது? ரொம்பச் சலபமா, இருக்கிற நகையைக் கழட்டிக் குடுத்து வழக்கத்தை விடாமல் செஞ்சுடலாம்னு நீ சொன்னதும் சும்மா உன்னைச் சீண்டிப் பார்த்

தேன். அதுக்குள்ளே பொரிஞ்சு கொட்டிட்டயே!''

அவன் அன்று சாதாரணமாக விஷயத்தை முடித்து விட்டாலும், அவளுக்கு அன்று எழுந்த அருவருப்பு மாறவில்லை. அவள் அன்று இரவு சற்றுப் பயந்த சுபாவமாக நடந்து கொண்டிருந்தாலோ, அல்லது அழுதிருந்தாலோ விஷயம் வளர்ந்து பெரியவர்கள் வரையில் போயிருக்கும். பெண்ணைப் பெற்றவர்கள் என்ற முறையில் அவளுடைய அப்பா ஏதாவது கொடுத்து அழுதிருப்பார். தான் நடந்து கொண்ட விதத்தினால், அவன் அத்துடன் நிறுத்தி விட்டான் என்று நினைத்தாள்.

அவளுடைய மாமியார் எதற்கும் பிரயோசனம் இல்லை. சாது என்று சிலரும், ஏமாளி என்று பலரும் அவளுக்குப் பட்டம் சூட்டி இருக்கிறார்கள். சுகுணா அந்த வீட்டுக்கு வரும் வரையில் கேசவன் தன் தாயை எப்படி எல்லாம் ஏமாற்றி இருக்கிறான் என்பதை அறிந்ததும் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. பணம் பிடுங்குவது ஒன்றில்தான் அவன் குறியாக இருந்ததை அவன் தாயிடம் பழகும் முறையிலிருந்தே அவள் உணர்ந்து கொண்டாள்.

சுகுணா ஊருக்குப் ரெயில் ஏறும் வரையில் தன்னுடைய பயணத்தின் உண்மைக் காரணத்தை அவளால் கண்டுகொள்ள முடியவில்லை.

கேசவன் தன் தந்தையிடம் அவள் ஊருக்குப் போகும் காரணத்தை என்னவென்று சொன்னானோ? அவர் அவளிடம் அதைப் பற்றி எதுவுமே கேட்கவில்லை. ரெயில் புறப்படச் சில நிமிஷங்களே இருந்தன. கேசவனின் முகம் திடீரென்று கடுமையாக மாறியது. ''சுகுணா, உன் கைவளையல்களையும் அந்த ரெட்டை வடச் சங்கிலியையும் கழட்டிக் கொடு'' என்றான்.

''எதற்கு?''

''அப்பாவுக்கு மனசிலே ஏதோ ஏற்பட்டிருக்கு. இல்லேன்னா அப்படிச் சொல்ல மாட்டார். உன் நகைகளை வாங்கி வைச்சுண்டு உன்னை மட்டும் உங்க ஊருக்கு அனுப்பச் சொன்னார்.''

சுகுணாவுக்குத் தலை சுற்றியது! இந்தப் பயணத்தின் பொருள் இப்போது அவளுக்குப் புரிந்துவிட்டது. அவனே வந்து அழைத்துப் போகும் வரையில் அவள் ஊரை விட்டு வரக்கூடாது என்று கூறிய காரணமும் அவளுக்குப் புரிந்தது. இந்த நகைகளைப் பிடுங்கிக் கொண்டு அவன் தன் வாழ்க்கையிலிருந்தே அவளை விரட்டுகிறான். அவளை அழைத்துவர அவனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?

ஒரு வேளை அவள் பிறந்த வீட்டில் மீண்டும் நகைகளைச் செய்துகொண்டு வந்தால் ஏற்றுக் கொள்ளலாம். அப்பாவின் மேல் கூசாமல் பழி சூட்டினால் மட்டும் அவள் நம்பி விடுவாளா? பெற்ற பெண்ணைப் போல அவளிடம் பாசத்தைக் கொட்டும் இவரா இப்படி அரக்கத்தனமாகப் பேசி இருப்பார்?

சிலையாக உட்கார்ந்திருந்த சுகுணாவின் அரைமயக்கத்தை அவன் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டான். அவள் கழுத்தில் இருந்த இரட்டை வடச் சங்கிலியையும் கையிலிருந்த இரு ஜோடி வளையல்களையும் தானே கழற்றி கொண்டான்.

அதே கம்பார்ட்மெண்டில் இருந்த வயதான ஒரு மூதாட்டி அதைக் கவனித்து விட்டு அதட்டும் குரலில் கேட்டாள்.

''ஏன் தம்பி, அதெல்லாம் எடுக்கறே? நல்லா வாழற பொண்ணுகிட்டேருந்து எடுக்கக் கூடாதுப்பா. நீ இந்தப் பொண்ணுக்கு என்ன உறவு?''



கேசவன் அவளை எரிச்சலுடன் பார்த்துவிட்டு ஏதோ சொல்ல நினைத்தவன் சட்டென்று சமாளித்துக்கொண்டு நிதானித்தான். தனது வழக்கமான சிரிப்பை உதிர்த்து விட்டுப் பேசினான்:

''பயந்துட்டிங்களாம்மா? இவ என் மனைவிதான். இவளுடைய பொறந்த வீட்டுக்குத்தான் இவளை அனுப்பறேன். அவங்க ஒரு மாதிரி. நகைகளை வச்சு வித்து ஏதாவது செய்துடுவாங்க. அதுக்காக இதை எடுத்துண்டு போறேன். இவ ஊரிலிருந்து வந்ததும், இதைப் பத்திரமா வச்சிருந்து கொடுத்துடுவேன்.''

அந்த மூதாட்டி அதை நம்பியதாகத் தெரியவில்லை. ஆனால் இதற்கு மேல் பேசுவது சரியல்ல என்று மௌனமாக இருந்து விட்டாள்.

கேசவன் நகைகளைக் கைக்குட்டையில் சுற்றித் தன் பாண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் வேகமாகச் சென்றான். ரெயிலும் நகர ஆரம்பித்தது.

அது பெண்கள் பெட்டியானதால் சுகுணாவையும், மூதாட்டியையும் தவிர மூன்று பேரே இருந்தார்கள். மூதாட்டி மற்றவர்களிடம் கூறுவது போல் தானே பேசினாள்.

''என்ன படிச்சா என்ன? என்ன சம்பாதிச்சா என்ன? பொம்புளைகள் கஷ்டப்படறது மட்டும் மாறவே இல்லை. பாவம்! இந்தப் பொண்ணு, நாலு பேர் இருக்காங்களேன்னு மானம் ரோசம் பார்த்துச் சும்மா இருந்தது. இது மட்டும் குடுக்க மாட்டேன்னு கத்திக் கலாட்டா செய்திருந்தா அந்த ஆம்புள்ளையை எல்லாருமே சேர்ந்து விரட்டியிருக்கலாம்.''

அந்த மூதாட்டியைத் தொடர்ந்து மற்றப் பெண்களும், தங்களுக்குத் தெரிந்த பெண்கள் துன்பப்படுவதைச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

சுகுணா மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் வேலைக்குப் போகிறவள் என்று அவர்கள் எண்ணி இருப்பதை அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்துகொண்டாள்.

கேசவன் பெரும்பாலான மாதங்களில் சம்பளக் கவர் திருடுபோய் விட்டது என்றும், நண்பனுக்குக் கடன் கொடுத்திருப்பதாகவும் ஏதாவது சாக்குச் சொல்லித் தன் சம்பளத்தைச் சரியாகக் கொடுப்பதில்லை. அவள் மாமனார் தம் பென்ஷன் தவிர ஜவுளிக் கடையில் கணக்கெழுதி இந்தத் தள்ளாத வயதிலும் ஏதோ கொண்டுவரவே அந்தக் குடும்பம் ஒரு மாதிரியாக நடக்கிறது.

மூதாட்டி இறுதியில் தன்னுடைய முடிவுரையைக் கூறியதும், சுகுணா திகைப்படைந்தாள்.

''மொத்தத்திலே பொண்கள் எல்லாருமே ஏதோ ஒரு விதத்திலே கஷ்டப்படறுங்க. நான் இல்லேன்னு சொல்லல்லே. ஆனு அவங்க அதைச் சமாளிக்கிற விதத்திலே தான் அவங்களுடைய வெற்றியே அடங்கி இருக்கு. சிலர் அதை ஏறி மிதிச்சு எப்படியோ ஜயிக்கிறுங்க.''

அந்த மூதாட்டி கூறியதிலிருந்த உண்மையை உணர்ந்த சுகுணு சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

கேசவன் குணம் தெரிந்துவிட்டது. அதை நினைத்துப் புலம்புவதிலும் அவளது துன்பத்தைப் பிறந்த வீட்டில் பங்கிட்டுக் கொள்வதிலும் பயன் என்ன? அவளுக்கு வேறு வழியே இல்லையா? சுருக்கெழுத்து, தட்டெழுத்து என்று பாஸ் செய்து அவளுக்கு அவள் காலில் நிற்க ஒரு வேலை கிடைக்காமலா போகும்?

ரெயில் தாம்பரத்தில் நின்றதும் சுகுணுவின் சிந்தனை கலைந்தது.

கேசவன் இரவு பத்து மணிக்கு மேலே உற்சாகமாகச் சீட்டி அடித்துக் கொண்டு தன் வீட்டுக்கு வந்தான். வாசல் வராந்தாவில் அவன் தந்தை சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே அவனை வரவேற்ருர்.

''வாடா, சுகுணுவை வழியனுப்பப் போனவன், அவள் கூடவே போயிட்டயோன்னு நினைச்சேன்.''

''இல்லேப்பா. ஆபீஸ் வெளி விவகாரமெல்லாம் ஞாயித்துக் கிழமைகளில் முடிச்சாத்தானே உண்டு? எல்லாத்தையும் முடிச்சிண்டு வரேன்.''

''உங்க ஆபீஸே உன்னுலேதான் ஓடறது. அதுவும் கிண்டியிலே குதிரைகளா ஓடுது! நீ எங்கே போயிருந்தேன்னு எனக்குத் தெரியும்டா. அது கிடக்கட்டும். சுகுணுவை ஜாக்கிரதையா ரெயிலேத்தினியா? நகை நட்டோடு போற பெண், நடு வழியிலே எங்காவது இறங்கிடப் போருள்.''

கேசவன் தடுமாறினுன். ''என்னப்பா இது? சுகுணு என்ன பாப்பாவா? லால்குடியிலே இறங்க அவளுக்குத் தெரியாதா?''

திடீரென அவன் தந்தை அவன் மேலே பாய்வது போல உரக்கக் கத்தினுர். ''ஆமாண்டா, அவ லால்குடியிலே இறங்கினு என் மானம் கௌரவம் எல்லாம் காத்திலே பறந்திருக்கும். உன் லீலைகளைப்பத்திச் சொல்லாமே மறைச்சு வைச்சேன். நீ என் புள்ளையா இருந்துண்டு என் முதுகிலே குத்தினியேடா பாவி! பாவம்! அந்தப் பொண்ணு தாம்பரத்திலே இறங்கி என் எதிரிலே வந்து நின்னப்போ, என் வயிரே எறிஞ்சுது. அவ அப்படியே லால்குடிக்குப் போயிருந்தா, பெத்தவாளுக்கு எப்படி இருக்கும்? குழந்தை தன்னையும் காப்பாத்திண்டு, நம் குடும்பத்தின் மானத்தையும் காப்பாத்தி இருக்காடா.''

''அது மட்டும் இல்லே, மாமா. அப்பாவையும் இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க வைச்சேன். நான் அங்கே போய்ச் சேர்ந்திருந்தா இவர் செய்த இந்தக் காரியத்தை எங்க அப்பா செய்ததா இவர் சொல்லியிருப்பார். நீங்க அதை நம்பித்தானே ஆகணும்?''

''நம்பமாட்டேன். நிச்சயமா உன் வார்த்தையைத் தான் நம்புவேன். ஏன்னு என் புள்ளையைப் பத்தி எனக்குத் தெரியுமே'' என்ருர்.

பிறகு, ''கேசவா, கேட்டுக்கோடா! உன் மாமனுர் பொண்ணை வேலைக்குக் கூட அனுப்பாமல் அவள் கஷ்டப்படக் கூடாதுன்னு அருமையாய் வளர்த்தார். புருஷன் வகையில்லேன்னு இனிமேல் சுகுணு வேலைக்குப் போறதாகத் தீர்மானிச்சுட்டா. வெட்கம் கெட்டவனே! நான் எத்தனை நாள் சாகுவதம்? அதுவும் இன்னிக்கு நீ செஞ்ச அக்கிரமத்துக்கு நான் உயிரோடு இருக்கிறதையே வெறுக்கிறேன். என்ன செய்யறது?'' என்று கூறிக் கொண்டே உள்ளே போனுர்.

சுகுணு திரும்பிப் பார்க்காமல் உள்ளே போக முன்ருள். ''ஏய், நில்லு!'' என்று கர்ஜித்த கேசவன் அவளது கரத்தை முரட்டுத்தனமாகப் பற்றினுன்.

''ரொம்பச் சாமர்த்தியமா நடந்துண்டதா நினைப்போ?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

சுகுணு இகழ்ச்சியுடன் அவனைப் பார்த்துவிட்டுத் தன் கரத்தை விடுவித்துக் கொண்டாள். ''இதிலே சாமர்த்தியம் என்ன இருக்கு? உங்களுடன் ஆரம்பிச்ச வாழ்க்கைப் பிரயாணம் தொடர்ந்து நடக்கணுமேங்கற கவலையினுலே இந்த ரெயில் பிரயாணத்தை முடிக்காமே பாதியிலே ஓடி வந்துட்டேன். இப்பவும் சொல்றேன், 'நீங்க ஏன் இப்படிச் செய்றீங்க? என்ன செய்யப் போறீங்க?' என்று எதையுமே நான் கேட்கப் போறதில்லே. ஏன்? என் நகைகளைப் பத்திக் கூட நான் பேசப் போறதில்லே. என்னை வீட்டுக்குள் வெச்சு நகைகளைக் கழுட்டி இருந்தால்கூட நான் அவ்வளவு பாராட்டி இருக்கமாட்டேன். எப்போ என்னை வெளியிலே விரட்டினீங்களோ, அப்பவே தீர்மானம் செய்துட்டேன். என் உடலும் உயிரும் ஒட்டி இருக்கத் தேவையான ஆகாரத்தைக் கூட நான் உழைச்சுத் தேடிக் கொள்ளணும்னு உறுதி செஞ்சுட்டேன். அதனுலே நீங்களே உங்களை மாத்திண்டு நடந்தால் உங்களுக்கு நல்லது. இல்லே நம் வாழ்க்கைப் பயணத்தைக்கூட ரெயில் பயணமா நெனைச்சுண்டு இருந்துடுவேன்.''

சுகுணு நிமிர்ந்த தலையுடன் தன் பேச்சில் இருந்த கம்பீரம் தோற்றத்திலும் பிரகாசிக்க உறுதியுடன் தன் காலடிகளை வைத்தவாறு வீட்டினுள்ளே நுழைந்தாள்.

கேசவன் புதிய சுகுணுவை உணர்ந்து கொண்டான். அவளுக்கேற்ற புதியக் கேசவனுகத் தன்னுல் மாற முடியுமா என்ற கேள்வியைத் தன்னுள் கேட்டுக் கொண்டே வெட்கத்துடனும் பயத்துடனும் தயங்கிக் கொண்டே அவளைத் தொடர்ந்தான். ※

அதிக சிக்கனமும் வெண்மையும் வேண்டும் என்றால்,
சோப்புகளை மறந்துவிடுங்கள்; பயன்படுத்துங்கள்
சூபர் 777
டிடர்ஜெண்ட் பார்
• சோப்பைவிட 1½ மடங்கு அதிக சலவைத் திறன், அதிக சிக்கனம்!
• வெண்மைச் சாதனம் சேர்க்கப்பட்டுள்ளது!!
உலகின் நெ. 1
டிடர்ஜெண்ட்
சலவை பார்
சூபர் 777
அழுக்கின் விரோதி,
வெண்மையின்
சக்தி
LLL
SWASTIK
SUPER
777
detergent washing bar
SUPER 777
SWASTIK
SUPER 777
Shilpi DM 13A/80 Tam

தீபாவளி விருந்தாளி



கல்பனா

மாமி வந்திருக்கிறாள்; பட்சணம் பண்ணுகிற மாமி. ஒரே பரபரப்பாக இருக்கிறது வீடு.

நெட்டி வாங்குகிறது வேலை. ''அதை எடு, இதைச் சித்தே கிளறிண்டே இரு'' என்று இடையிடையே அவள் ஏவுகிற ஏவலுக்கு ஈடு கொடுக்கவே முடியாமல் வேர்த்து விறுவிறுத்துப் போகிறேன்.

''உக்காரையும் கட்டாயம் பண்ணணுமோடீ, ஆலு?''

''நன்னாக் கேட்டேள். அதில்லாமே எங்காத்துலே தீபாவளியே நடக்குமோ? தூள் பரத்திடமாட்டாரோ? எங்க மாமியாரை ஞாபகப்படுத்தற பண்டம் அது. அதைத்தான் தீபாவளியன்னிக்கு முதல்லே பரிமாறணும். 'இதோ இதிலே இன்னிக்கு எங்கம்மாவே வந்திருந்து நம்மை எல்லாம் கண்குளிரப் பார்த்து ஆசீர்வாதம் பண்றாள்'ம்பார்.''

''சரி, என்ன பிரமாதம்? பண்ணிட்டாப் போச்சு. கடலைப்பருப்பும் வெல்லமும் இருக்கோல்லியோ?''

''வேணாது.''

ஸ்டோர் ரூமுக்குப் போகிறேன், அவற்றை எடுத்துவர. ஹாலைக் கடக்கையில் அவர் அறையிலிருந்து டெலிபோன் 'ட்ரிணிங், ட்ரிணிங்' என்று கூப்பிடுகிறது.

போய் எடுக்கிறேன்.

''மிஸஸ் ரகுபதி இருக்காங்களா?'' புதிதாக இருக்கிறது குரல்; பெண் குரலாக இருக்கிறது.

''பேசுகிறேன்.''

''இந்த வருஷத் தீபாவளிக்கு ஒரு முக்கியமான விருந்தாளி உங்க வீட்டுக்கு வரப்போறார்.''

''அப்படியார் யாரு?''

''யாருன்னுதான் கொஞ்சம் யோசித்துச் சொல்லேன்.''

''தெரியலே.''

''ஒரு குறிப்புத் தரேன்; முயன்று பார். அந்த விருந்தாளிக்கு உக்காரைன்னா ரொம்ப உசிரு.''

''தெரிஞ்சுடுத்து; எங்க மாமியார். ஆனா அவர் இனிமே எந்தத் தீபாவளிக்குமே வரமாட்டார். சுவாமி அவரை அழைச்சுண்டு ஆறு வருஷமாயிடுத்து; அவர் ஞாபகமாத்தான் உக்காரையே எங்காத்துலே பண்றோம்.''

''பைத்தியக்காரப் பொண்ணு; அப்படின்னு உன் 'ஹப்பி' சொன்னதை நம்பிண்டிருக்கயாக்கும். அது அவர் ஞாபகார்த்தமா வரலே. வேறே ஒரு ஆசாமி ஞாபகார்த்தமாத்தான் வந்துண்டிருக்கு. ராத்திரி உன் ஹப்பி வந்ததும் கேட்டுப் பாரு.''

''என்ன சொல்றே நீ?'' குப்பென்று வேர்க்கிறது எனக்கு.

''நன்னா உன் தலையிலே உன் ஹப்பி மிளகாய் அரைச்சுண்டிருக்கார்ங்கறேன். நாளைக்கு வரப்போறாளே, தீபாவளி விருந்தாளியா, அவ ஞாபகமாகத்தான் உக்காரை பண்ணிண்டிருக்கேள்.''

''என்ன சொல்றே?''

''வரப்போகிறவ உன் சக்களத்தி; டாக்டரோட முன்னாள் காதலி. உக்காரைப் பிரியை. ரங்கமணின்னு பேரு. அந்த நாள்ளே கால்லே சலங்கையைக் கட்டிண்டு, மேடையிலே வந்து நின்னு மூக்குத்தியும் கட்டியும் பளீர் பளீர்ன்னு மின்ன, இப்படியும் அப்படியும் ஒரு பார்வை பார்த்தாள்னா, எங்க இச்சுப்புடியே சொக்கி நிற்கும்.''

''நீ யாரு? இதெல்லாம் ஏன் சொல்றே?''

''அது இப்ப முக்கியமில்லே. சாயங்காலம் அவளை உன் புருஷன், உங்காத்துக்கு அழைச்சுண்டு வரப்போறான். ஆரத்தி கரைச்சு வச்சுக்கோ.''

''உண்மையாவா?''

''இணைபிரியாதவாம்பாளே, அப்படி இருந்ததுகள் ரெண்டும், ரொம்ப வருஷம் வரைக்கும்; அப்

புறம் விதி பிரிச்சுடுத்து. திக்குக்கு ஒருத்தராக் கொண்டுபோயிடுத்து. இப்பத் திரும்பக் கொண்டுவந்து சேர்த்திருக்கு.''

''ஆரத்திதானே? வா, கரைச்சு வச்சிருந்து உன் தலையிலே கொட்டறேன்'' என்று அதிர்ந்துவிட்டு, ரிசிவரை 'டக்'கென்று வைத்து விட்டுத் திரும்ப வருகிறேன்.

''உக்காரைக்கு எவ்வளவு கடலைப் பருப்புடீ வேகப் போடணும்?'' என்று கேட்கிறாள் மாமி.

''உக்காரையும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம். எல்லாத்தையும் முடிச்சுட்டு எழுந்து போங்கோ'' என்று கத்துகிறேன்.

மாமி போனதும், 'இந்தத் துரோகத்தை எனக்கு இத்தனை நாள் ஏன் தெரியாமல் வச்சிருந்தேள்?' என்று மனசுக்குள் கதறுகிறேன். 'அட, இப்பேர்ப்பட்ட நீச மனுஷரா இவர்?'

பொழுது இருட்டிக்கொண்டு வருவது கூடத் தெரியாமல் இடிந்து போய்ச் சுவரில் சாய்ந்தது சாய்ந்ததாக உட்கார்ந்திருக்கிறேன்.

வாசலில் கார் வந்து நிற்கிற ஓசை கேட்டுச் சரக்கென்றும் எழுந்து இருட்டு உக்கிராணத்துள் போய்க் குப்புறப்படுத்துக் கொள்கிறேன்.

''மெதுவா, மெதுவா, பார்த்துப் பார்த்து:.: ஷீலா. ஆலு!'' என்று யாரையோ அழைத்துக்கொண்டு வருகிறார் இவர். முன் அறைக் கதவு திறக்கிற சத்தம் கேட்கிறது. இதோ ஈஸிசேரை இழுத்துப் போடுகிற சத்தம். ''உட்காரு, மெதுவா.'' அந்தக் கடன்காரியைத் தான் கொண்டு வந்து உட்கார்த்துகிறார் போலிருக்கிறது.

''இதோ வந்துட்டேன், ரெண்டு நிமிஷத்துலே.''

காலடி ஓசை உள்ளேதான் வருகிறது. ''ஆலு டியர்!''

சமயலறை, புழைக்கடை எல்லாம் தேடிவிட்டு இங்கே வருகிறார்.

''ஏய், என்ன இது. நாளும் கிழமையுமா?'' என்று பதறிக்கொண்டு ஓடிவந்து தூக்கி மடியில் போட்டுக் கொள்கிறார்.

காதோரம் அவர் உதடுகள் ஸ்பரிசிக்கின்றன. ''ஆலுக் கண்ணு!''

''போங்கள் என்னை விட்டு.'' உதறுகிறேன்.

''என்னம்மா இது?''

''என்னைத் தொடாதீர்கள்!'' பிடியிலிருந்து உருவிக் கொள்கிறேன். ''என்ன தைரியமிருந்தால் என் வீட்டுக்கே அவளை அழைத்துக் கொண்டு வருவீர்கள்?''

''எவளை?''

''எவளையா? உங்கள் முன்னாள் காதலியை!''

''ஓ! ஓ! ஓ!'' என்று சிரிக்கிறார். ''அந்தக் கதையா?'' என்று சிரிக்கிறார். ''அசடே, அசடே!'' என்கிறார். ''மத்யான்னம் டெலிபோன்லே நான் குரலை மாத்திண்டு விளையாட்டுக்குச் சொன்னதை எல்லாம் அப்படியே நிஜம்னு நம்பிட்டியா?'' என்கிறார். வாரி அணைத்துக் கொள்கிறார். ''நீ ஒருத்திதான் என் தங்கக் காதலி. தொடுவேனோ இன்னொருத்தியை?''

''தொடாமயா அவளை அழைச்சுண்டு வந்தேள்? என்னை ஏமாத்தாதேயுங்கோ? வந்திருக்கிறவள் யார்? எந்த ஊர்?''

''வந்திருக்கிறவள் முதலிலே பொம்மனாட்டி இல்லே. ஆம்பிள்ளை; என் பாலிய சிநேகிதன், ஊர் இச்சுப்புடி. அந்த நாள்ளே நாங்க ரெண்டு பேரும் நாடகமெல்லாம் போட்டோம். அவன் என் காதலி ரங்கமணியா நடிச்சான். பிரமாதமாப் பாடுவான். பிராண சிநேகிதன். தூக்கத்துலே கூடப் பிரியாமல் இருந்தோம். விதி பிரிச்சுடுத்து. இத்தனை வருஷம் கழிச்சு இன்னிக்கு ஹாஸ்பிடல்லே பார்த்ததும், 'ரகுபதி, நீயாடா இங்கே டாக்டரா நிக்கறே? என் கண்ணையே நம்ப முடியலையே! கண்ணை மூடறதுக்கு முந்தி உன்னை ஒரு தடவை பார்த்துடணும்னு ரொம்ப ஆசைப் பட்டேன்டா; சுவாமி என் ஆசையை நிறைவேத்திவிட்டாரடா'ன்னு கண்ணீர் விட்டான். அவனை அழைச்சுண்டு...''

''நிசமாவா?''

''அவனைப் பார்த்த சந்தோஷத்துலே உங்கிட்டே கொஞ்சம் விளையாடிட்டேன், ஆலு.''

''அந்தக் கவலையிலே உக்காரை பண்றதைக் கூட நிறுத்திட்டேன்.'' சிரிக்கிறேன், கண்ணீருடன்.

''அவனுக்கு உக்காரதான் ரொம்பப் பிடிக்கும்.'' வருத்தத்தோடு சொல்கிறார்.

''இதோ இப்பவே மாமியை வரவழைச்சுப் பண்ணச் சொல்றேன்.''

''வேண்டாம். அவனாலே இப்ப எதையுமே திங்க முடியாது. அவனுக்குப் புத்து நோய். ஹார்லிக்ஸ்லயும் புழுங்கரிசிக் கஞ்சியிலயுந்தான் வண்டி ஓடிண்டிருக்கு. அடுத்த வாரம் ஆபரேஷன் வச்சிருக்கா. பொழைச்சா ஸ்வாமி கிருபைன்னு பெரிய டாக்டர் சொல்றார். அது அவனுக்குத் தெரியாது.''

வயிற்றைப் பிசைகிறது, எனக்கு.

''நான் இப்ப டாக்டர் இல்லே. ஒரு சிநேகிதன். சாதாரண மனுஷ சிநேகிதன். அவனுக்குச் சுற்றம் சூழல்னு இருக்கிற ஒரே சிநேகிதன்.''

''அவருக்கு யாருமே இல்லையா? சம்சாரம் குழந்தைகள்...?''

''அவன் கல்யாணமே பண்ணிக்கலே. சின்ன வயசிலிருந்தே அவன் தனி. ஊரோட மனுஷாளோட ஒட்ட மாட்டான். எங்க பக்கத்து வீடுதான் அவனுடையது. கொல்லைக் கதவை 'டிரம்'மாப் பாவிச்சுண்டு, வாயாலேயே சகல வாத்தியங்களையும் இசைச்சுண்டு மணிக்கணக்கா நிற்பான், தானே ஒரு பெரிய 'ஆர்க்கிஸ்ட்ரான்னு' நினைப்பு அவனுக்கு. கடைசிவரை இது ஒண்ணுதான் அவன் கூட வந்தது; இந்த வாத்திய ஆசை. அமெரிக்கன் ஆர்க்கெஸ்ட்ரா ஒண்ணு சென்னைக்கு வரதுன்னு கேள்விப்பட்டுக் கஷ்டப்பட்டு வந்திருக்கான். பாதிக் கச்சேரியிலே என்னமோ பண்ணிடுத்தாம். 'களக்'னு இருங்காய் ரத்தம் வந்து விழுந்ததாம். பக்கத்துலே இருந்த ஒருத்தர் தம் வண்டியிலே தூக்கிப் போட்டுண்டு வந்து ஆஸ்பிடல்லே சேர்த்திருக்கார்.''

''பாவம்! ராத்திரிக்கு அவருக்கு என்ன ஆகாரம் பண்றது?''

''மோர்லே காம்ப்ளான் கரைச்சுக் கொண்டா; வேறெதுவும் குடுக்கக் கூடாதுன்னு பெரிய டாக்டர் சொல்லியிருக்கார். ஆஸ்பிடலை விட்டு அனுப்பவே அவர் முதல்லே சம்மதிக்கல்லே. இன்னிக்குத் தீபாவளி. ஒரே ஒரு ராத்திரி மட்டும் எங்காத்திலே வச்சுக்கறேன்னு கெஞ்சிக் கூத்தாடி அழைச்சுண்டு வந்திருக்கேன். காலம்பர எட்டாவது மணிக்கு அவரோட கார் வந்துடும், அழைச்சுண்டு போக. ஷீலா எங்கே?''

''பாட்டி விட்டுக்குப் போயிருக்கா.''

''சரி, சரி. மூஞ்சியைத் திருத்திண்டு, மோர் எடுத்துண்டு வா. வந்து அவனைப் பாரு. ரொம்பச் சந்தோஷப் படுவான். உன்னையும் ஷீலாவையும் பார்க்கத்தான் வந்திருக்கான். மன்னியை நான் பார்த்து நமஸ்காரம் பண்ண வேண்டாமோன்னான்.''

'களக்' என்று கண்ணீர் ததும்பிக் கட்டிக் கொள்கிறது.

''இதோ ரெண்டு நிமிஷத்துலே வந்துடறேன்.''

காம்ப்ளானைக் கரைக்கையில் முன் அறைக்குள், ''அப்பா, எப்ப வந்திங்க?'' என்று ஷீலா குதூகலமாக நுழைகிற சத்தமும், ''இதோ வந்துட்டாளே எங்க ஷீலா'' என்று இவர் ஆர்ப்பரிப்பதும், ''அடேடே! ரொம்ப ஜோரா இருக்காளே!'' என்று அந்த மச்சினர் அதிசயப்படுவதும் கேட்கின்றன.

''யாரப்பா, வந்திருக்கா?''

''உங்க சித்தப்பாடீ கண்ணு.''

தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு மோரை எடுத்துக் கொண்டு போகிறேன்.

வாசற்படியிலேயே 'ஷாக்' காத்திருக்கிறது. ஈஸிசேரில் இரண்டு தலையணைகளுக்கிடையில் குற்றுயிராகக் கிடக்கும் உருவம் 'பளிச்' சென்று கண்ணில் பட்டு விடுகிறது.

''ஆ! நீயா?'' என்று அதிர்ந்து நடுங்கிச் சிலையாய் நின்றுவிடுகிறேன்.

''ஆராவமுது! ஆராவமுது! நீயா?'' என்று என் உயிரே துடிக்கிறது. ''நீயா வந்திருக்கே? நியா வந்திருக்கே?'' என்று கதறுகிறது.

ஓ! அவன் ஆராவமுதுதான். எங்கள் ஆராவமுதுதான்.

எட்டு வருஷத்துக்கு முந்தி எனக்குக் கல்யாணம் ஆகிறதற்கு முந்தி, ஒரு நாள் பௌர்ணமி ராத்திரி எங்கள் வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்து, 'எந்த வோடுகோஓ, ராகவா' என்று பாடி ஊரை அடிமையாக்கிய ஆராவமுது.

ஹோட்டல் பரத்வாஜிலே நான் சில காலம் ரிஸப்ஷனிஸ்ட்டாக இருந்தபோது என்கூட அங்கே வேலை செய்து எங்கள் வீட்டிலே இன்னொரு பிள்ளையாகப் பழகி, 'அத்தங்கா' அத்தங்கா' என்று உயிராக இருந்துவிட்டு, ஒரு நாள் அசட்டுப் பிசட்டென்று கடிதம் எழுதி வைத்துவிட்டு ஓடிவிட்ட அதே ஆராவமுதன் தான்.

எதற்கு வந்திருக்கிறான் இப்போது, இங்கே? என் சௌபாக்கியங்களைக் குலைத்து என்மேலே பழி தீர்த்துக் கொள்வதற்கா? பாதாதிகேசம் நடுங்குகிறது.

''ஏன் அங்கேயே நின்னுட்டே, ஆனு? உள்ளே வாயேன்.''

கால்கள் நகர மறுக்கின்றன. கதவோரம் மறைந்து நின்று கொண்டு மோரை நீட்டுகிறேன். ஷீலா ஓடிவந்து வாங்கித் கொண்டு போய்க் கொடுக்கிறாள்.

''இவதான் உன் மன்னி, ஆராவமுது.''

எந்தச் சலனமும் இல்லாமல் கிழிந்த நாராய்க் கிடந்து அரை இமையைத் தூக்கிப் பார்க்கிறான்,

கோபால் பல்பொடி

பாக்கெட் விலை 35 காசுகள்

THENTRAL தென்றல்

BATHIES பத்திகள்

PRICE Re 1. (ALL TAXES EXTRA)

—மினர்வா

ஆராவமுது: கைகளை மெதுவாகத் தூக்கி, ''நமஸ்தே'' என்கிறான்.

மோரைக் கொடுக்கிறாள் ஷீலா. அவளை அணைத்துக்கொண்டு, ''ரகுபதி வரும்போது கடையிலே வாங்கி வந்தோமே அந்தப் 'பிராக்'கை எடுத்துக் குழந்தைகிட்டே குடு'' என்கிறான் ஆராவமுது.

குரல் திடீரென்று கிணற்றுக்குள் ஆழ்ந்து விட்டமாதிரி தோன்றுகிறது. பளபளப்பாக இருக்கிறது, பிராக் பெட்டி. திறந்து பார்த்து விட்டு, ''எனக்கா சித்தப்பா இது?'' என்று குதிக்கிறாள் ஷீலா.

''உனக்கேதான், இந்த ஏழைச் சித்தப்பாவின் பரிசு.'' பெரிசாக இரண்டு பழக்கூடைகளும் ஸ்வீட் பெட்டிகளும் கூட இருக்கின்றன.

''உங்களை நான் பார்த்ததே இல்லையே, சித்தப்பா!'' என்கிறாள் ஷீலா.

''இப்ப நன்னாப் பார்த்துண்டுடு; அப்புறம் பார்க்கவே முடியாமல் போயிடலாம்.'' சிரிக்கிறான் ஆராவமுது.

வயிற்றைப் பிசைகிறது, எனக்கு.

''சித்தே படுத்துக்கட்டுமா, ரகுபதி? ஆயாசமா இருக்கு.''

''சரி, இதோ கட்டிலை ரெடி பண்றேன். இத்தனை நாழி உன்னை உட்கார வச்சுப் பேசினதே தப்பு. ஷீலா, இரண்டு புது பெட்ஷீட் எடுத்துண்டு வா.''

எழுந்து வந்து விடுகிறேன், சமையலறைக்கு. சுவாமி அலமாரியில் இரண்டு வரிசையாக உட்கார்ந்திருக்கிற அத்தனை சுவாமிகளிடமும் புலம்புகிறேன், 'எதுக்கு வந்திருக்கிறான், இவன்? என்ன ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வந்திருக்கிறான்?'

முன் அறையில் அவர்கள் பேசுகிற ஒலி கேட்கும் போதெல்லாம் வயிற்றைக் கலக்குகிறது. ஆராவமுது அந்த நாளைய சமாசாரம் எதையாவது அவரிடம் சொல்லிவிடுவானோ என்று கலக்குகிறது.

''என்ன ஆனு, பண்ணிண்டிருக்கே? படுக்கப் போகலே?'' என்று வருகிறார், டாக்டர், சமயலறைக்கு.

''உக்காரை பண்ணுகிறேன்.'' திரும்பாமலே சொல்கிறேன்.

''பண்ணப் போறதில்லே என்றுயே!''

''எதற்கு அதுமட்டும் இல்லாமல் ஒரு குறையாய்?'' தொண்டை கட்டிக்கொள்கிறது. கையில் ஏதோ கொண்டு வந்திருக்கிறார், காட்டுவதற்கு. ''கதர்தான் அவன் உடுத்தறது வழக்கமாம். வேட்டி இரண்டும் ஜிப்பாவும் வாங்கி வந்தேன்'' என்கிறார். ''எப்படி இருக்கிறது? பார். நன்றாக இல்லை? பெரிய காந்தி பக்தனுக்கும் அவன்!''

மூன்று மணிக்கே விழித்துக் கொண்டு விடுகிறது, உலகம், நரக சதுர்த்தசியைக்கொண்டாடுவதற்கு; திமிலோகப் படுகிறது தெரு.

பட்டும் நைலக்ஸும், தலைநிறையப் பூவும் சிரிப்பும் களிப்புமாகத் திரிகிறார்கள், இளம் பெண்கள்.

வாசற்படியில் கோல மாவை இழைத்து விட்டுப் புதுப் புடைவையுடன் உள்ளே வருகையில், காமிரா அறையில் புது வேட்டியும் புது ஜிப்பாவும் தரித்து மாப்பிள்ளை மாதிரி ஆராவமுது சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்திருப்பதும் ஷீலா கிட்ட நின்று ஏதோ பேசிச் சிரிப்பதும் தெரிகின்றன.

எதிரே உட்கார்ந்து தீபாவளி மலரைப் புரட்டிக் கொண்டிருக்கிறார், டாக்டர். 'மகிழ மலர் தீபாவளி மலர்.' ''ஆனு, இன்னும் பால் வரலே?'' என்று கேட்கிறார்.

''வந்தாச்சே, காபிதானே? இதோ கொண்டு வருகிறேன்.''

''சித்தப்பாவுக்கு ஹார்லிக்ஸ்'' என்று கத்துகிறாள் ஷீலா. ''அதற்குள் உன்னிடம் எப்படி ஒட்டிக் கொண்டுவிட்டாள், பார்!'' என்கிறார் டாக்டர், திருப்தியுடன்.

பட்சணங்களையும் காபியையும் ஹார்லிக்ஸையும் தட்டில் வைத்து எடுத்துவந்து அவர்கள் முன் வைத்து விட்டுக் கதவோரமாகத் தள்ளி நின்றுகொள்கிறேன்.

குழந்தை கேட்கிறாள் உள்ளே; ''ஏன் சித்தப்பா, நீங்க ஊருக்குப் போகும்போது என்னையும் அழைச்சுண்டு போவேளோல்லியோ? உங்க இச்சுப்புடியைப் பார்க்க ஆசையா இருக்கு. அங்கே ஆரெல்லாம் இருக்கா, சித்தப்பா?''

''அங்கேயா...அங்கே வந்து, அங்கே வந்து....''

''நான் வந்தா என் கூடக் 'கேரம்' விளையாட ஒரு பொண் இருக்காளோல்லியோ? எனக்குத் தலைவாரிப் பின்னிச் சாதம் பிசைந்து கையிலே போட ஒரு மாமி இருக்காளோ?''

''அவாளை எல்லாம் சுவாமி எனக்குக் கொடுக்கலேடா, கண்ணு, இந்த ஜன்மத்துலே.'' கண்டம் அடைக்கச் சொல்கிறான் ஆராவமுது.

''கேட்கறேன்னு நெனைச்சுக்காதே, ஆராவமுது. நீ ஏன் கடைசி வரை இப்படியே இருந்துட்டே?'' கேட்கிறார் டாக்டர்.

''எனக்குப் பூவும் பூவையரும் ராசியில்லே, ரகுபதி. நான் யாருக்காவது பூ வாங்கிண்டு போனால் பெரிய பூகம்பமே உண்டாயிடும். அதனாலேதான் நேத்து உன் குழந்தைக்குக் கூட வாங்கிண்டு வரலே.''

''நீ யாருக்குப் பூ வாங்கிண்டு போனே?''

''பிள்ளையாருக்கு.''

''என்னது? பிள்ளையாருக்கா? அடி சக்கை!'' என்று பெரிதாகச் சிரிக்கிறார், டாக்டர். ''சொல்லப்பா; நீ பிள்ளையாருக்குப் பூ வாங்கிண்டு போன கதையை.''

''பெரிய கதை இல்லே. சின்னக் கதைதான். அப்ப, 'கேட்டரிங்' படிச்சுண்டிருந்தேன். மாஸ்டர் பரம சுவாமி பக்தர். 'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான்தருவே'ன்னு பாடிக் கன்னத்துலே போட்டுக்காம டெமான்ஸ்ட்ரேஷனை ஆரம்பிக்கவே மாட்டார். தினசரி ஒரோரு மாணவனும் பூக் கொண்டுவந்து குடுக்கணும்னு ஏற்பாடு. நான் விலக்கு. எதிலேயுந்தான்.

'' 'ஏண்டா! உன் கையாலே குடுத்தாப் பிள்ளையார் வாண்டான்றுடுவாரா? ஒரு அரளிப்பூ, தங்க அரளிகூடக் கெடைக்கலையா உனக்கு'ன்னார். மறுநாள் தங்க அரளி மாலையே கட்டிண்டு போய்க் குடுத்தேன். அன்னிக்கிக் கதம்பக்காய்ச் சாம்பார் டெமான்ஸ்ட்ரேஷன். எல்லாக் காயையும் வெட்டிப் போடணும். டேபிள் நெறையக் காய். கீழே ஒரே குப்பையும் தோலும். சதக் சதக்குனு எல்லாரும் வெட்டிப் போட்டோம். ஒருத்தன் அப்படியே அள்ளிண்டு போய்க் கொதிக்கற புளியிலே போட்டுட்டு வந்தான். எனக்கா கையிலே திகுதிகுன்னு எரிச்சல். பார்த்தா, சுண்டு விரல்லே ஒரு அரை இஞ்சைக் காணோம். கறிகாய் நறுக்கும்போது நறுக்கிக் கொண்டிருக்கிறேன். கீழே எல்லாம் தேடினேன். கெடைக்கலே.''

''தமாஷா இருக்கே, அப்பறம்?'' என்கிறார் டாக்டர்.

''தமாஷே இனிமேதாம்பா வர்ரது; கேள் முழுக்கதையை. எல்லாரும் வரிசையாச் சாப்பிட உட்கார்ந்தோம். மாஸ்டர் சாம்பாரைப் போட்டுப் பிசைஞ்சு ஒரு பிடி எடுத்து வாயிலே போட்டுக்கப் போனார். 'ஹா'ன்னு விதிர்விதிர்த்துக் கையையே பார்த்தார். நான் சித்தே முந்திக் கீழே எல்லாம் தேடின பண்டம் அவர் கைச் சோத்துலே இருந்தது.''

''ஹாஹா'' என்று கை கொட்டி ஆர்ப்பரிக்கிறாள் ஷீலா. ''சித்தப்பா, ஜோரா இருக்கு கதை.''

''அப்புறம் கேளு: 'யார்ரா அவன் இந்தக் கிளாஸ்லே ஒரு ஏகலைவன்?'னு மாஸ்டர் ஒரு கர்ஜனை போட்டார்.' 'பிரபோ, அடியேன்தான். என் காணிக்கை, ஏத்துக்குங்கோ'ன்னேன்.' தடிராமா, போ, நான்வெஜிடேரியன் செக்ஷனுக்கு'ன்னுட்டார். ஒண்ணும் இல்லை, சாதாரண அரளிப் பூ.. வேண்டாம்பா பூ; இந்த ஜன்மத்துக்கு வேண்டாம்.''

''நீ நல்ல ஜாதிப்பூவாப் பார்த்து வாங்கிண்டு போயிருக்கணும்'' என்கிறார் டாக்டர்.

''அதையும் பார்த்தாச்சு, ஒரு தடவை. ஓ, அந்தக் கதை எதுக்கு இப்ப? நானே மறக்கப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கிற கதை.''

கண்களைத் துடைத்துக் கொள்கிறேன். படபடவென்று அடித்துக் கொள்கிறது என் நெஞ்சு. அடுத்தாற்போல் என்ன சொல்லிவிடுவானோ என்று பயமாக இருக்கிறது.

விடிய ஆரம்பித்துக் கொண்டிருக்கிறது. வாசற்புறம் ஒரு பெட்டிக் கம்பி மத்தாப்புக்களை எடுத்து ஷீலா கையில் கொடுத்து, ''நீயும் போயி கொளுத்து, குழந்தை'' என்று அனுப்பிவிட்டு ஒரு வாய் ஹார்லிக்ஸை உறிஞ்சிக்கொள்கிறான் ஆராவமுது:

''நான் வாழ்க்கையிலே யாருக்குமே பூ வாங்கிண்டு போக நெனைச்சது இல்லே, ரகுபதி. ஒரே ஒரு தடவை என்னை அறியாமல் அந்தத் தப்பைச் செஞ்சுட்டேன். அது

என் வாழ்க்கையின் உன்னதமான நாட்களிலே நடந்தது.''

புரிந்துவிட்டது எனக்கு; எங்கள் வீட்டில் வந்து இருந்த நாட்களைத் தான் சொல்கிறுன், மனுஷருக்கு என் மேலே சந்தேகம் ஏற்படும்படியாச் சொல்லி விடுவானு?

''ஊர் ஊராச் சுத்திட்டு, அநாதையாத் திரிஞ்சுட்டு ஒரு திண்ணையிலே வந்து விழறேன். வாழ்க்கையே வெறுத்துப்போன நிலையிலே காலம் பறக் கோலம் போடக் கதவைத் திறந்துண்டுவர்ரா ஒரு வனதேவதை. மகாலட்சுமி மாதிரி இருக்கா. என் மேலே இரக்கப்பட்டு என்னை ஆதரிக்கறு; எனக்கு ஒரு வேலைகூட வாங்கித் தரா. அவாத்துலேயே ஒருத்தரா வச்சுக்கறு.

''அவ தகப்பனுர் அதுக்கு மேலே இருக்கார், என்மேலே அவ ரொம்பப் பிரியமா இருக்கார். கடைக்குப் போகணுமா, நான்தான் போகணும். தண்ணிக்குப் போகணுமா, நான்தான் போகணும். ஒரு நல்ல பட்சணம் பண்ணிட்டாப் போரும்; எனக்கு எடுத்து வச்சுட்டுத்தான் சாப்பிடுவா. அத்தனை அன்பா இருந்தா, அந்த வனதேவதை. காதலோன்னு தவரு நெனைச்சுட்டேன். அதான் பெரிய தவறு.''

இன்னெரு வாய் ஹார்லிக்ஸ் உறிஞ்சிக் கொள்கிறுன். பேசாமல் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறுர் டாக்டர்.

''மனசுலே எப்படி அந்த ஆசை வளர்ந்ததுன்னு தெரியலே. என்னென்னமோ கோட்டைகள் கட்டினேன். லோகமே பொன்முலாம் பூசின சொப்பனபுரி மாதிரி பட்டது. பெரிய பூப்பந்து ஒண்ணை வாங்கிண்டேன். ஒரு நாள், ஜாதிப்பூ. இத்தனும் பெரிய பந்து. பின்னுடி மறைச்சுண்டு போனேன். அவ ஆபீசுக்கு டெலிபோன்லே பேசிண்டிருந்தா. யார் கூடவோ, 'நானும் உங்களைத்தான் நினைச்சு உருகிக் கொண்டிருக்கேன்'னு சொன்னது' கேட்டது.''

''ஆராவமுது!'' பதறுகிறுர் டாக்டர்.

''இருங்க; முழுக்கச் சொல்லிடறேன். அப்பறம் சொல்லச் சந்தர்ப்பம் கெடைக்காது. பூப் பந்தைக் கை நடுக்கத்தோட அவ பின்னுலே மேஜை மேலே வச்சுட்டுச் சத்தமில்லாமல் திரும்பிட்டேன். ஸ்டோர்ரூம் உள்ளே வந்து தாழ் போட்டுண்டு விம்மி விம்மி அழுதேன். லோகமே பொடியாய்ப் போய் எதிரே கெடக்கிற மாதிரி இருந்தது. எறும்புக் கூட்டம் ஒண்ணு போச்சு. நடுவிலே ராணி எறும்பு; மத்ததெல்லாம் வேலைக்கார எறும்புகள். அது எல்லாமே ராணி எறும்பை நேசிக்கவாம், ஆனுல் எல்லாத்தையுமே ராணி நேசிக்கணும்னு கட்டாயம் ஒண்ணுமில்லையே! இருந்தும் எல்லாம் அதன் பின்னுடி குடை பிடிச்சுண்டு போயிண்டிருந்தது. அந்த ராஜ விசுவாசம் எனக்கு ஒரு புது வழி காட்டித்து. தண்ணைத் துடைச்சுண்டு வெளியிலே வந்தேன். என்னை என் ராணியோட சேவைக்கு அந்த நிமிஷமே அர்ப்பணிச்சுண்டேன். கண்ணை மூடிக் கொண்டு அவ கட்டளையை நிறைவேத்தறதுன்னு முடிவு செஞ்சுட்டேன்.''

''ஓகோ, அப்படியா!'' என்கிறுர் டாக்டர்.

''ஆனு அவ ஒரு நாள் ஒரு பெரிய சோதனையையே வச்சுடுவாள்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. அடுத்தாப்பலே சொன்னதும் அந்தப் பொண் யாரு, பேரு என்ன, ஊர் என்ன என்றெல்லாம் நீ கேட்கக்கூடாது. நானும் சொல்ல விரும்பல. ஒரு நாள் என் தலைவி என்னைக் கூப்பிட்டாள். அழுது அழுது மூஞ்சி செவந்து கிடந்தது. 'நீ ராமசந்திரப்பிரபு மாதிரி. உன் கிட்டே ஒரு வரம் கேட்கறேன். சொல்வியா ஆராவமுது?' என்ருள். 'சொல்லு அத்தாங்கா'ன்னேன். 'ஒரு ஏழைப் பெண். சுவாமி அவளை ரொம்பச் சோதிச்சுட்டார். ரெண்டு கண்ணும் தெரியாதவ. ஒரு நய வஞ்சக மிருகம் அவ குருட்டையும் இருட்டையும் பயன்படுத்திண்டு, குரூரமாகத் தேய்ச்சு மிதிச்சுட்டுப் போயிடுத்து. 'இனிமே நான் வாழ மாட்டேன்'னு துடிச்சுக் கெடக்கிற அந்த அகலிகைக்கு நீதான் உயிர் குடுக்கணும் ஆராவமுது. செய்வியா ஆராவமுது? மாட்டேன்னுடாதே ஆராவமுது' என்று அழுதாள். 'நான் உன் சோல்ஜர், அத்தங்கா. நீ மார்ச் பண்ணச் சொல்ற இடத்துக்கு மார்ச் பண்ணவேண்டியவன்'னேன். 'கையிலே ஒரு தாமரைப் பூவோட ஒருத்தரை உன்கிட்டே அனுப்பிடுவேன். வாய் பேசாமல் அவளை நீ ஏத்துக்கணும். அவர் சூரியன் மாதிரின்னு சொல்லிட்டு வந்திருக்கேன். இப்பவே போ, ஆராவமுது'ன்னுள். 'அத்தங்கா இன்னெரு தடவையுமா என் கையாலே பூ'ன்னு கதறினேன். 'பூ வாங்கிண்டு போறப்பெல்லாம் நான் எதாவது ஒண்ணை இழந்துடறேன், அத்தங்கா'ன்னேன் 'இந்தத் தடவை நீ எதையும் இழக்கமாட்டே; ரொம்ப உசந்துடுவே. மசமசன்னு நிக்காதே கிளம்பு'ன்னு பிடிச்சுத் தள்ளாத குறையாத் தள்ளினுள். தயக்கத்தோடதான் தாமரைப் பூ ஒண்ணைப் பறிச்சு எடுத்துண்டு போனேன். அறை சாத்தியிருந்தது. கட்டில் காலியா இருந்தது. கொல்லைக் கிணத்து மேலே ஏதோ கிறுக்கி வச்சிருந்தது. உள்ளே அகலிகைப் பாறையா, இல்லே பச்சைக் கட்டையா மிதந்துண்டிருந்தா.''

''ஓ கடவுளே!'' என்று கத்துகிறுர் டாக்டர்.

''பூவைப் பிச்சுக் கிணத்துக்குள்ளே போட்டேன். காகிதத்தை எடுத்து அதனடியில் நாலுவரி கிறுக்கி அத்தங்கா பேருக்குப் போஸ்ட் பண்ணிட்டு ஊரை விட்டே ஓடிப் போயிட்டேன்.''

கேட்கவே முடியவில்லை. மேலே புடவைத் தலைப்பால் வாயை இறுகப் பொத்திக் கொண்டு சமயலறைக்கு ஓடுகிறேன், சுவரில் சாய்ந்து கொண்டு இந்த உத்தமனை நினைச்சுண்டு, ''ஆராவமுது, ஆராவமுது!'' என்று கதறுகிறேன். 'ஆராவமுது! ஆராவமுது! நீ என்னை நேசித்தாயா? என்மீது உயிரையே வைத்திருந்தாயா? எனக்குப் பூக் கொண்டு வந்தாயா? தெரியவே தெரியாதே, எனக்கு!'

மாலை மாலையாகப் பெருகி வழிகிறது கண்ணீர், ''நான் இந்த டாக்டரைத்தான் அப்ப நேசிச்சேன் ஆராவமுது: அவரோடதான் டெலிபோன்லே பேசிண்டிருந்தேன், டிரங்கால்லே.''

''மன்னி! மன்னி!''

திடுக்கிட்டு விழித்துக்கொள்கிறேன். கண்களைத் துடைத்துக் கொண்டு எழுகிறேன். ஒல்லியாய் உயரமாய்ப் புது வேஷ்டி, புது ஜிப்பாவில் ஆராவமுதுதான் நிற்கிறுன். பக்கத்தில் டாக்டரும் ஷீலாவும் கூட இருக்கிறுர்கள்.

ஓ! சமயலறைக்கே வந்துவிட்டார்கள்!

''எனக்காகவா அழறேள்? என் கதையைக் கேட்டுட்டா? ஓ! நான் எவ்வளவு பாக்கியசாலி!''

''அவன் புறப்பட்டு விட்டான் ஆலு'' என்கிறுர் டாக்டர்.

''வாசல்லே கார்கூட வந்து நிக்கறதும்மா'' என்கிறுள் ஷீலா.

''நன்னுயிருக்கு! தீபாவளியும் அதுவுமாச் சாப்பிட்டுட்டுத்தான் போகணும். இதோ நிமிஷத்துலே ஒரு ரசம் பாயசம் வச்சு...''

''திரும்பி வந்தா இலை இலையாப் பாயசம் பண்ணிப் போடுங்கோ. சாப்பிடறேன். இப்ப ரகுபதிகிட்ட வந்து நில்லுங்கோ. என் கடைசி ஆசையை நிறைவேத்திக்கறேன். நமஸ்காரம் பண்றேன்'' என்கிறுன் ஆராவமுது.

''சட், என்ன இதெல்லாம்?'' என்று காலைப் பின்னுல் இழுத்துக் கொள்கிறுர் இவர். இவரைப் பிடித்து நிறுத்தி, ''நன்னு மனசாரத் தீர்க்காயுசா இருன்னு வாழ்த்துங்கோன்னு'' என்று அதட்டுகிறேன்.

எனக்கு அதிசயமாக இருக்கிறது என் உயர்த்திய குரலைக் கேட்டு. சுவாமி மாடத்திலிருந்து பூஜைப் பூவை எடுத்துக் கொடுக்கிறேன்.

ஷீலா வாங்கி அவன் கையில் கொடுக்கிறுள். வாங்கும் போது அவன் கை நடுங்குகிறது; பூக்கள் சிதறி விழுகின்றன.

''வரட்டுமா, ரகுபதி?''

''இருடா, நானுந்தான் கூட வரேனே!''

''வரட்டுமா மன்னி? வரட்டுமா ஷீலா கண்ணு?'' சட்டென்று திரும்பி வாசலை நோக்கிக் கம்பீரமாகப் போகிறுன்.

இவரும் போய் ஏறிக்கொண்டதும் கார் கிளம்புகிறது. கையை அசைக்கிறுர்கள் இருவரும்.

தூரத்தில் கார் மறைகையில் ஷீலா கேட்கிறுள்; ''இனிமே சித்தப்பா எப்போம்மா திரும்பி] வருவார்?''

''வருவார்டி, கண்ணே! நிச்சயமாக வருவார்'' என்கிறேன், நம்பிக்கையுடன்,

*

கண்ணபிரான் செய்த திருவிளையாடல்களும் ராஜதந்திரச் செயல்களும் பாகவதத்திலும் பாரதத்திலும் காணக் கிடைக்கின்றன. அவன் இயல்புக்கு மாறாகப் பல புரட்சிகளைச் செய்தான். அந்தப் புரட்சிகளைப் பக்தர்கள் தெரிந்துகொண்டு பாராட்டுகிறார்கள். அவன் செய்த புரட்சிகளை விளக்குகிறது கட்டுரை.

புரட்சிக் கண்ணன்

பி.ஸ்ரீ

கண்ணன் செய்த புரட்சி அகப் புரட்சி, அன்புப் புரட்சி. புரட்சியென்றால் புரட்டு அல்ல. பரிணாம ஏணியில் படிப்படியாக ஏறுவதைக் குறுக்கு வழியில் சாதித்துக்கொள்வதே உண்மையான புரட்சி.

பிரெஞ்சுப் புரட்சி என்பது இரத்தம் சிந்திய அரசியல் புரட்சி, ஆங்கிலேயர்களின் தொழிற்புரட்சி, முதலாளி வர்க்கத்தினரால் தங்கள் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தப்பட்ட புரட்சி. கண்ணன் செய்தது ஆன்ம நேயப் புரட்சி. இது இந்தியாவை, உலகத்துக்கே ஒரு முன் மாதிரியாகக் காட்டுகிறது. இதை ஒரு வேய்ங்குழல் புரட்சி என்றும் சொல்லலாம்.

கண்ணன் அழகுத் தெய்வம். சாமானிய அழகு வாடிப் போகும். கண்ணனின் அழகோ என்றும் வாடாத செந்தாமரை. கண்ணன் அழகு ஆனந்தத்தில் தோய்ந்து உருவாயிற்று. தொட்டதையெல்லாம் தன் பேரன்பினால் அழகு செய்தான் கண்ணன்.

கண்ணன் பிறப்பே ஒரு புரட்சி. பிறவியற்றவன் பிறக்கிறான். இறைவனுடைய முழுமையான சொரூபம் கண்ணன்; மானிடப் பிறவியில் தெய்வமாகச் செயற்படுகிறான். இவன் பிறப்பு, சிறைச்சாலைக் கதவுகளைத் திறந்து விட்டது. கைவிலங்குகளை உடைத்தெறிந்தது. வடமதுரையில் மட்டும் அல்ல, வையகம் முழுவதிலும் ஓர் ஆன்ம நேயப் புரட்சியை ஏற்படுத்தி மக்களுக்கு விடுதலை காண வழி காட்டியது.

அடுத்து வளர்ப்பிலும் புரட்சிதான். பெற்றவள் தேவகி, வளர்த்தவள் யசோதை.

பூதனை என்னும் பூதம், பெற்ற தாய் போல் வந்து பால் ஊட்டுவதுபோல் விஷத்தை ஊட்டிக் கொல்ல முயன்றது. குழந்தைக் கண்ணனே அந்த விஷத்தை அப்படியே உறிஞ்சி அந்தப் பூதத்தைக் கொன்றான். ஆஷாடபூதித்தனம்

ஆஸ்திக வேடத்தில் தோன்றினும் அது அழிவது திண்ணம் என்ற நீதி இதன் மூலம் கிடைக்கிறது.

வெண்ணெய் உண்ட பிள்ளை வாயில் யசோதைத் தாய் வெண்ணெயையும் காணவில்லை. மண்ணையும் காணவில்லை. வையம் ஏழினையும் கண்டாள், ஆச்சரியமாக. அந்த ஆச்சரியத்தைத் தாய்ப்பாசம் மறைத்து விடுகிறது.

வெண்ணெய் திருடிய கள்வன் வெண்ணெய் போல் உருகும் நெஞ்சங்களையும் ஆட்கொண்டான். அதாவது இரக்கம் காட்டுவோரிடம் கருணை காட்டுகிறது பரம்பொருள் என்ற குறிப்பை நாம் இங்கே காண்கிறோம். அன்புக் கண்ணன் எல்லாப் பிராணிகளுக்கும் தோழனாகத் திகழ்ந்தான். அன்பும், அழகும், அருளும் மக்களை வசிகரித்தது போல் விலங்கினங்களையும் வசிகரித்தன.

எத்தகைய சக்திக்கும் கட்டுப்படாதவன் அன்புக்கும், தாய்மைப் பாசத்துக்கும் கட்டுப்படுகிறான். கண்ணன் திருட்டைப் பற்றிப் பேசியவர்களிடம், உடையவன் உடைமையை எடுத்துக் கொள்வதில் என்ன தவறு என்கிறான்.

குழந்தைகளுக்குத் துஷ்டத்தனமே மூலதனம், துள்ளித் திரியும் காலத்திலே என்பதைக் கண்ணனின் பிருந்தாவன லீலைகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

கண்ணனுடைய திருவிளையாடல்கள் 'காட்டிலே மாடு மேய்த்தான்' என்று சர்வ சக்தியுள்ள பரம்பொருளின் எளிமையை வற்புறுத்துகின்றன. மறைகளுக்கு மறைந்திருந்தவன் மாடுகளுக்குப் பின்னே சென்றான் என்பதன் உட்பொருள் ஆழ்ந்த சிந்தனைக் குரியது. இது

''மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம்.

காலிக்குப் பின்னேயும் காணலாம்''

என்பதன் உட்பொருளே.

ஏதோ ஒரு காலத்தில் கோகுலத்திலே, பிருந்தாவனத்திலே நடந்தது தானா கண்ணன் விளையாட்டு? 'கடவுளின் அறக்கருணையும் விளையாட்டே; மறக்கருணையும் விளையாட்டே!' என்ற பெரிய தத்துவத்தை எவ்வளவு எளிமையாகவும் வேடிக்கையாகவும் வெளியிடுகிறது, கண்ணனின் திருவிளையாட்டு.

ஆண்டுதோறும் ஆயர்கள் மழைக் கடவுளான இந்திரனுக்கு நன்றி செலுத்தும் வகையில் விழா எடுப்பது வழக்கம். அப்படி ஒரு விழா எடுக்கும்போது கண்ணன் அதைத் தடுத்து, ''கோவர்த்தனகிரி யல்லவா நம் பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் கொடுக்கிறது? கண்ணுக்குத் தெரியாத இந்திரனைக் காட்டிலும் கண்ணுக்கு முன் நின்று உங்கள் மாடுகளை ஊட்டி வளர்க்கும் கோவர்த்தன மலைக்கே (இயற்கைக்கே) நன்றி செலுத்துங்கள்'' என்று பகுத்தறிவு வாதம் செய்தான்.

இதைக் கண்ட இந்திரன் தன் மேகங்களை அனுப்பி ஆயர்களையும் பசுக்களையும் அழித்துவிடுமாறு ஆணையிட்டான். கண்ணனே கோவர்த்தனகிரியையே குடையாகப் பிடித்து இந்திரன் கர்வத்தை அடக்கினான்.

பதவியில் இருப்பவர்கள் செருக்குற்று அழிந்து போவதை எவ்வளவு அருமையாய்க் காட்டுகிறது! தேவலோகத் தலைமைப் பதவி உலகத்திற்குத் தொண்டு புரிவதற்கு என்பதை இந்திரனுக்கு உணர்த்துகிறான்.

தாய் வடிவானாலும் சரி, மாமனானாலும் சரி, கொடுங்கோலனை ஒழிப்பதே கிருஷ்ணாவதார நோக்கம். பொல்லாத அசுர சக்திகள் எவ்வளவு படாடோபமாக உலகத்தைத் துன்புறுத்தி வந்த போதிலும் தர்மாவேசம் என்ற தெய்வக் கோபத்துக்கு முன் தருணம் வந்ததும் அவை மரணம் எய்திவிடும் என்பது கம்ச வதத்தின் உட்பொருள்.

துஷ்டப்பிள்ளை, கள்ளக் கிருஷ்ணன் என்ற நிலையில் கள்ளங் கபடற்ற பால லீலைகள் நிகழ்ந்ததைக் கோகிலத்திலும் பிருந்தாவனத்திலும் கண்டோம். வட மதுரையிலும் துவாரகையிலும் நாம் காணும் கண்ணனே ராஜதந்திரியாகக் காட்சியளிக்கிறான்.

கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் வெண்ணெய் திருடிய கள்வன் உள்ளம் திருடிய கள்வனாகவும் தன்னைக் காட்டிக் கொள்கிறான். இது பாகவத கிருஷ்ணனின் உச்ச நிலை. துவாரகைவாசியோ பாரதக் கிருஷ்ணனாகி ராஜதர்மத்தையும் பொதுவாக அறத்தின் பல்வேறு அம்சங்களையும் உருவாக்கப் போகிறான். கீதாசாரியனான அந்த உச்ச நிலைக்கு விதையைக் கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் காண்பது போல், துவாரகையிலும் காண்கிறோம்.

தூதனாகிய எளிமை பாரதப் போரில் சாரதியாகவும் தன்னை வெளியிட்டுக் கொள்கிறது. பாண்டவ சேனையும் கௌரவ சேனையும் முதல் நாள் யுத்தத்துக்காக அணிவகுத்து நிற்கின்றன. இருதிறத்துப் படைகளையும் அர்ச்சுனன் நன்றாகப் பார்க்கக் கூடிய ஓர் இடத்தில் தேரை நிறுத்துகிறான், கண்ணன். அர்ச்சுனனுக்கு உள்ளம் கலங்குகிறது. புத்தி மயங்குகிறது. மறுபடியும் காட்டுக்கே போய் விடலாம் என்று தோன்றுகின்றது.

இந்தநிலையை 'இழிவான இதய துர்ப்பலம்' என்கிறான் பார்த்தசாரதி. இந்தத் துர்ப்பலத்தைப் போக்கி ஞான சக்தியை அர்ச்சுனனுக்கு ஊட்டுவதற்குத்தான் பார்த்தசாரதி கீதாசாரியன் ஆகிறான்.

பகவத்கீதை உலகத்திலுள்ள சிறந்த ஞான நூல்களில் ஒன்று என்பது உலகப் பேரறிஞர்கள் கருத்து. காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போரில் படைத்துணையாக உதவியது பகவத்கீதை என்பதை மறுக்க முடியுமா?

அவதார மூர்த்திகளான இராமனும் கிருஷ்ணனும் மக்களுடன் கலந்து அவர்களைத் திருத்திப் பணி கொண்டதைப் போன்ற சிறப்பை வேறு அவதாரங்களில் காண்பது அரிது. கிருஷ்ணாவதாரத்தின் தனிப் பெருஞ்சிறப்பை இராமாவதாரத்திலும் காண முடியாது என்பது பக்தர்களின் கருத்து.

தீபாவளி நரகாசுரன் நினைவாகக் கொண்டாடப்படுகிறது. நரகாசுரன் கொடுங்கோன்மையால் மக்களை வாய் விட்டுக் கதறச் செய்ததால் இப்பெயர் பெற்றான். சத்தியபாமையைப் படைத் துணையாகக் கொண்டு கண்ணன் நரகாசுர வதம் செய்தான்.

நரகன் சாகும்போது மெய்யுணர்வு பெற்றான். கண்ணன் அருளால் தன்னுடைய உடலையே கண்ணன் வதம் செய்தான், ஆத்மாவையல்ல என்ற ஞானம் இறக்கும்போது அவனுக்குப் பிறந்துவிட்டது. எனவே, தன் மரண தினத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்று கண்ணனிடம் வேண்டினான். அந்த நாளே தீபாவளிப் பண்டிகையாயிற்று.

தீபாவளியைக் கொண்டாடுவதிலும் ஒரு புரட்சி செய்திருக்கிறான். பண்டிகைகளெல்லாம் பொதுவாகப் பகலில் கொண்டாடப்படுகின்றன. இந்தப் பண்டிகையோ சூரியோதயத்துக்குமுன் நடைபெறுகிறது.

இப்படி யெல்லாம் பழமையில் புதுமை புகுத்திய கண்ணனைப் புரட்சிக் கண்ணன் என்று கூறுவதில் என்ன வியப்பு! ❋

★ இனிக்க இனிக்கப் பேசி இன்பம் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் "நடராஜா" வின் தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.
உலகம் புகழும் நம் தயாரிப்பு களான
★ பனாரஸ்
★ காஞ்சீபுரம்
★ தர்மாவரம்
★ ஆரணி
★ அசல்பட்டு வகைகள்,
★ உயர்ந்த சர்ட்டிங்
★ சூட்டிங்
ரகங்கள் தன்னகத்தே கொண்ட நிறுவனம்.
நடராஜா ஸ்டோர்
அனைத்து ஜவுளிகள் நிறைந்த ஒரே கடை...
92, அம்மன் சன்னதி,
மதுரை-625001.
போன்: 22408
-ராஜம்

உயர்ந்த தரமான புகையிலையில் சிறந்த
முறையில் தயார் செய்யப்பட்டு
மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்றது
தாஜ்மஹால்
ஸ்பெஷல்
புகையிலை
தாஜ்மஹால்
ஸ்பெஷல்
புகையிலை
DUTY PAID
L. 4. No. 2/C/75
தயாரிப்பாளர்கள்:
மீ. ந. அ. முகம்மது சுல்தான் & சன்ஸ்,
P.B. No. 29
புதுக்கோட்டை 622001

சிறுதொழில் செய்வோரின் கவனத்திற்கு!
சிட்கோ உங்கள்
விற்பனைச் சுமையைத் தாங்கட்டுமே...
சிட்கோ
உங்களுக்குத் தெரியுமா?
மத்திய, மாநில அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் முதலியன வெளியிடும் டெண்டர்களில்/ஒப்பந்தக் கோரிக்கைகளில் பெரிய தொழில்களோடு போட்டியிட நேரிடும்போது சிறுதொழில்களுக்கு 15% விலைச்சலுகை பெறும் தகுதி உண்டு.
அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உபயோகத்திற்காக, 257 வகைப் பொருட்களை சிறுதொழில்களிடமிருந்துதான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த பொருள்களின் பட்டியல், எல்லா சிட்கோ கிளை அலுவலகங்களிலும் மாவட்டத் தொழில் மைய மேலாளர்களிடமும் கிடைக்கும்.
இந்த ஆணைகளின் முழுப்பயனும் தங்களுக்குக் கிடைக்கிறதா?
இல்லையெனில், அருகிலுள்ள சிட்கோ கிளை அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளுங்கள்.
மேலும் விவரம் வேண்டுவோர் அணுகுக
விற்பனை உதவிப் பகுதி
தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்) 5, கிரீம்ஸ் ரோடு, சென்னை 600 006
தொலைபேசி எண்கள் 82171, 81545 தந்தி TANSISIDCO சென்னை டெலக்ஸ்: 041-7584
TAMIL NADU SIDCO
DIPR



தீப ஒளி வீசவே
புன்னகை பூக்கட்டுமே
கரோனா காலணி
அணியவே அழகு கூட்டுமே

கரோனாவின் கனிவு

Corona

தயாரிப்பவர்கள் :

கரோனா ஸாஹு கம். லிட்.

221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு, பம்பாய்-400 001.

CHAITRA-CS-218

அகல்யா

மாயாவி

நண்பர் பிரசாத ராவும் நானும் எலியட்ஸ் பீச்சுக் காற்றை அநுபவித்தவாறு உரையாடிக் கொண்டிருந்தோம்.

பிரசாத ராவ் எனக்குச் சமீபத்தில் பழக்கமானவர். அவர் ராஜமஹேந்திரியைச் சேர்ந்தவர்; தாய் மொழி தெலுங்கென்றாலும் தமிழில் நன்றாகப் பேசவும் படிக்கவும் தெரிந்தவர்; ஆந்திர மாநில அரசில் பெரிய பதவிகள் வகித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற பின், சென்னையில் சொந்தத்தில் தொழில் செய்துவந்த தம் ஒரே மகனுடன் அவர் வாழ வந்துவிட்டார். அவருடைய மகன் பிரகாஷ் ராவுக்குப் பெசன்ட் நகரில் சொந்த வீடு இருந்தது. நானும் ஓய்வு பெற்றபின், பெசன்ட் நகரில் குடியிருந்த என் மூத்த மகனுடன் வாழ வந்து விட்டேன். ஓய்வு பெற்ற பிற கிழவர்களைப் போலவே நாங்களும் மாலையில் பீச்சுக்குப் போய் வருவோம். அங்கேதான் பிரசாத ராவ் எனக்குப் பழக்கமானார். இருவரும் அநேகமாக மாலை ஐந்தரை மணி அளவில் பீச்சுக்கு வந்து ஏழரை மணி வரையில் பேசிக் கொண்டிருப்போம்.

அன்றும் அவ்வாறுதான் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு ஈரான்-ஈராக் மோதலில் தொடங்கி, எங்கெங்கெல்லாமோ தாவி, இறுதியில் அண்மையில் பம்பாயில் நடைபெற்றதாகப் பத்திரிகைகளில் அடிபட்டு, பிறகு போலீசாரால் மறுக்கப்பட்ட கதையில், இரவு கடைசிச் சினிமா ஆட்டம் பார்த்து விட்டு, குழந்தைகளுடன் ஸ்கூட்டரில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் குண்டர்களால் வழி மறிக்கப்பட்ட தம்பதியரின் சோகக் கதையில் வந்து நின்றது.

''இந்தச் சம்பவம் உண்மையாக இருந்தால், தன் கற்பை ஈடு கொடுத்துக் கணவனையும், குழந்தைகளையும் காப்பாற்றிய பின் அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடாது'' என்றேன் நான்.

''இல்லை; அவள் செய்ததுதான் சரி'' என்றார் பிரசாத ராவ்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? 'எங்களைக் கொன்றால் கொல்லட்டும். நீ கற்பை இழக்காதே!' என்று அவள் கணவன் சொல்லவில்லையே! மாறாகத் தன் உயிர்மீது இருந்த ஆசையால், மனைவி கற்பை இழப்பதற்கு அநுமதி அளித்து விட்டவன் போல் அவன் அவளை அவர்களிடம் விட்டு விட்டல்லவா போய் விட்டான்? அப்படிச் செய்தவன், மனைவி தற்கொலை செய்து கொள்ளாமல் இருந்தால் அவளுடன் வாழ்க்கை நடத்த மாட்டான் என்றா நினைக்கிறீர்கள்?'' என்று நான் வாதாடினேன்.

''பெரும்பாலும் மாட்டான்'' என்றார் என் ஆந்திர நண்பர். ''ஒருகால் வாழ இணங்கினாலும் அந்தப் பெண்ணுக்கு நரக வாழ்க்கையாகத்தான் இருக்கும். ஏனென்றால் நமது பண்பாடு ஆண் மனசையும் பெண் மனசையும் அவ்வாறு ஆக்கி வைத்திருக்கிறது. உங்கள் கோவலன் கதையில் வரும் கண்ணகியைப் போல் கோடானு கோடிக் கண்ணகிகள் நம் பாரத நாட்டில் இருப்பார்கள். ஆனால் கற்பிழந்த மனைவியைத் திரும்ப ஏற்றுக் கொண்டு அவளுடன் மீண்டும் தாம்பத்திய வாழ்க்கையை நல்லபடியாக யாரும் நடத்தியதற்கு நம் புராணங்களில் கூடச் சான்று இல்லை. உத்தமோத்தமரான ராம பிரானே சீதாபிராட்டியின் கற்பைப் பற்றிய வதந்திக்காக அவளைக் காட்டுக்குத் துரத்திவிட்டாரென்றால் சாதாரண மனிதர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?'' என்று எதிர்வாதமிட்டார் பிரசாத ராவ்.

''கற்பிழந்த மனைவியை ஏற்றுக் கொண்டதாகப் புராணக் கதைகளில் கூடக் கிடையாது என்று ஒரேயடியாகச் சொல்லாதீர்கள், பிரசாத ராவ். ஏன்? அகலிகையைக் கௌதம முனிவர் ஏற்றுக் கொள்ளவில்லையா?''

''எப்பொழுது ஏற்றுக் கொண்டார்? தவறு அவளுடையது அல்ல; அவள் வஞ்சிக்கப்பட்டு விட்டாள் என்று தெரிந்த உடனே ஏற்றுக் கொண்டாரா? இல்லையே? பல காலம் கல்லாய்க் கிடக்கும் தண்டனையை நிறைவேற்றிய பின்புதானே ஏற்றுக் கொண்டார்? சரி, அதுதான் போகட்டும். அவளை ஏற்றுக் கொண்டபின் முன்போலவே அவளுடன் வாழ்ந்தார் என்பது என்ன நிச்சயம்? அப்படி வாழ்ந்ததற்குப் புராணத்தில் சான்று ஏதாவது இருக்கிறதா? இராது. ஏனென்றால் நமது இந்து சமயம் தோன்றிய காலத்திலிருந்தே, பெண்களுக்குக் கற்பு உயிரைவிட மேலானது. எனவே, அதை இழந்தவள் வாழத் தகுதியற்றவள் என்ற மனப்பாங்கு வளர்ந்து வேரூன்றி விட்டது.''

''நீங்கள் புராண காலத்துடன் இந்தக் காலத்தை ஒப்பிடுவது சரியல்ல, பிரசாத ராவ். காலப்போக்கின் விளைவாகவும், காந்திஜி போன்ற பெரியோர்களின் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருவது காரணமாகவும் இப்பொழுது நம் சமூகத்தில் இந்த மாதிரி விஷயங்களில் ஒரு மாறுதலான மனப்பான்மை ஏற்பட்டுத்தான் இருக்கிறது.''

''நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். நீங்கள் கூறும் மாறுதல்கள் பேச்சளவிலும் எழுத்தளவிலுந்தான்; எங்கே, நீங்கள் அறிய அப்படி எவனாவது வாழ்கிறான் என்று விரல் மடக்குங்கள், பார்க்கலாம். முடியாது உங்களால். ஒருகால் தப்பித் தவறி யாராவது ஒருவனை நீங்கள் உதாரணம் காட்டினாலும், அவன் தன்னைப் பெரிய தியாகசீலன் என்று உலகுக்குக் காட்டிக் கொள்ளவே அப்படிச் செய்திருப்பான். அந்தரங்கத்தில் அவன் மனைவி அவனுடன் நரக வாழ்க்கைதான் வாழ்ந்து கொண்டிருப்பாள். நான் எந்தக் கோவிலில் வேண்டுமானாலும் சத்தியம் செய்யத் தயார்!''

பிரசாத ராவ் இதை ஆவேசத்தோடு கூறியதையும், அப்

பொழுது அவருடைய இமை ஓரங்களில் நீர் கோத்து விட்டதையும் கண்டு விதிர்த்துப் போன நான், ''ஏன் ஸார், இந்த விஷயத்தில் உங்களுக்குக் கசப்பான அனுபவம் ஏதாவது ஏற்பட்டதா?'' என்று கேட்டேன்.

''என் பெண்ணே அந்த அவலத்துக்கு உள்ளானாள்'' என்று அவர் துயரம் தோயக் கூறினார்.

''உங்கள் மகளா?''

''ஆமாம்; என் ஒரே பெண்!''

''உங்களுக்கு மகள் இருப்பதாகச் சொல்லவில்லையே!''

'''இருப்பதை' என்பதை 'இருந்ததை' என்று திருத்திக் கொள்ளுங்கள். அவள் இப்பொழுது இல்லை. அந்தப் பம்பாய்ப் பெண்ணைப் போல் உடனே சாகாமல், பின்னர் அனுபவிக்க வேண்டியதையெல்லாம் அனுபவித்து விட்டுச் செத்தாள். செத்தவளைப் பற்றிச் சொல்வானேன் என்றுதான் எனக்கு ஒரே மகன்தான் என்று சொன்னேன்.''

''பாவம்! உங்கள் துயரத்தைக் கிளறி விட்டேன்.''

''பரவாயில்லை. துயரந்தான் கிளர்ந்து விட்டதே! அவள் கதை முழுவதையுமே கேட்டு விடுங்கள்'' என்று பிரசாத ராவ் ஆரம்பித்தார்.

என் குழந்தைகளில் பிரகாஷ்தான் மூத்தவன். அவன் பிறந்து பத்து ஆண்டுகள் வரையில் என் மனைவி வயிறு மறுபடி திறக்கவில்லை. வீடு கொள்ளாமல் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்ற ஆசை எனக்கோ, என் மனைவிக்கோ இல்லை. ஆனால் ஓர் ஆண், ஒரு பெண் குழந்தையாவது வேண்டும் என்ற எண்ணம் எங்கள் இருவருக்குமே உண்டு. அந்த எண்ணம் முழுமையாக நிறைவேறாமல் காலம் சென்று கொண்டிருந்ததைக் கண்டு நான் ஒன்றும் பெரிதாகத் தவித்துப் போய் விடவில்லை. ஆனால் என் மனைவி தவித்தாள். காசி முதல் கன்யாகுமரி வரையில் க்ஷேத்திராடனம் செய்து, தனக்கு ஒரு பெண் குழந்தையைத் தருமாறு ஒவ்வொரு தெய்வத்தையும் வேண்டிக் கொண்டாள். இதற்காக அவள் எவ்வளவோ தான தருமங்கள் செய்தாள்; எத்தனையோ விரதங்களை அனுஷ்டித்தாள்; நோன்புகளை நோற்றாள். கடைசியாகத் தெய்வம் அவளுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு, பிரகாஷுக்குப் பன்னிரண்டாவது வயது நடந்த போது எங்களுக்கு ஒரு பெண் குழந்தையைத் தந்தருளியது.

நானும் என் மனைவியும் ஏகமனதாகத் தீர்மானம் பண்ணித்தான் குழந்தைக்கு அகல்யா என்று பெயர் சூட்டினோம். அந்தப் பெயரை வைத்ததனால்தான் போலும், அவளுடைய வாழ்க்கையும் ஏறக்குறையப் புராண காலத்து அகல்யாவின் வாழ்க்கை போலவே ஆகிவிட்டது.

தவமிருந்து பெற்றெடுத்த குழந்தை என்பதால் மட்டுமல்ல; அகல்யாவின் அழகு, அறிவு, அடக்கம் ஆகியவையும் எங்களை அவள் மீது அளவுமீறிப் பாசம் கொள்ளச் செய்தன. நாங்கள் மட்டுமல்ல; அவளை அறிந்தவர்கள், அவளுடன் பழகியவர்கள் யாவருமே தங்களை அறியாமல் அவள்மீது பாசம் காட்டத் தொடங்கிவிடுவார்கள். அப்படி ஓர் அபூர்வப் பெண்ணாக எங்கள் அகல்யா விளங்கினாள்.

நாங்கள் ஏற்க மறுத்த, அல்லது எங்களுக்கு வருத்தத்தைத் தந்த காரியம் எதையுமே அவள் செய்ததில்லை; செய்ய நினைத்ததும் இல்லை. எனவே எங்களிடம் எதையுமே மறைக்க வேண்டிய தேவையும் அவளுக்கு ஏற்படவில்லை. ஏன்? வயசுப் பெண்கள் தங்கள் பெற்றோரிடம் கூறத் தயங்கும் காதல் விஷயத்தைக் கூட அகல்யா எங்களிடம் மறைக்கவில்லை. சலபதி ராவைத் தான் சந்தித்தது, பழகி வருவது, தாங்கள் ஒருவரிடம் ஒருவர் மனம் திறந்து பரிமாறிக் கொண்டது ஆகிய ஒவ்வொன்றையும் அவ்வப்போது எங்களிடம் தெரிவித்தாள். கடைசியில் ஒரு நாள், ''அப்பா! அவரை எனக்கு மணம் செய்து வைப்பீர்களா?'' என்றும் ஆவலோடு கேட்டு விட்டாள்.

''முயன்று பார்க்கிறேன், அகல்யா'' என்று நான் சொன்னேன்.

''முடித்து வைக்கிறேன் அம்மா'' என்று நான் உறுதியுடன் கூற முடியவில்லை. ஏனென்றால் சலபதி ராவின் தந்தை ராஜமஹேந்திரியில் பெரிய பணக்காரர். நாங்களோ நடுத்தர மேல்மட்டக் குடும்பம். இந்த ஏற்றத் தாழ்வு காரணமாக, நாங்கள் இந்தக் கல்யாணத்தை விரும்பினாலும், சலபதி ராவின் தந்தை எங்களுடன் சம்பந்தம் செய்து கொள்ள மறுத்து விடக்கூடும் என்று அஞ்சினோம்.

இருந்தாலும் நாங்கள் சலபதி ராவின் தந்தையை முறையாகச் சந்தித்து விஷயத்தைத் தெரிவித்தோம். பையனுக்கு அம்மா இல்லை; அப்பா மட்டுந்தான் இருந்தார். விஷயத்தைக் கேள்விப்பட்டதும் அவர் மகனைக் கூப்பிட்டுக் கேட்டார். அவன், ''அகல்யாவைக் காதலிப்பது உண்மைதான்'' என்றான். ''காதலிப்பது இருக்கட்டும்டா. அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறாயா?'' என்று அவர் கேட்டார். சலபதி ராவ் வெட்கத்துடன் தலை அசைத்தான். அவ்வளவுதான்; அவர், ''சரி, பிரசாத ராவ், சுபஸ்ய சீக்கிரம். விரைவில் முகூர்த்தத்துக்கு நாள் பாருங்கள்'' என்று கூறி விட்டார்.

அவர் இப்படி ஒரு வரியில் சம்மதம் அளித்து விட்டது எங்களுக்குப் பெருமகிழ்ச்சியாக இருந்ததென்றாலும், கூடவே சில சந்தேகங்களையும் கிளப்பியது. சலபதி ராவ் சிறுவயதிலேயே தாயை இழந்து தந்தையின் பராமரிப்பில் வளர்ந்து வந்தவன். அவன் தந்தைக்குப் பல தொழிற்சாலைகள் இருந்தன. அவற்றை நிர்வகிப்பதற்கே அவருக்குப் போது சரியாக இருந்தது. எனவே அவருடைய நேரடிக் கவனிப்பு அவனுக்கு அதிகமாக இருக்க முடியாது. இருபத்தாறு வயது இளைஞன்; பணக்கடலில் மிதப்பவன். ஒருகால் அவனுக்கு எங்கள் மகள் அறியாத கெட்ட பழக்கம் ஏதேனும் இருக்கலாமோ? 'மகனைச் சீர்திருத்துவதற்குக் கல்யாணந்தான் சிறந்த வழி. பணக்கார வீட்டில் பெண் எடுத்து, கல்யாணத்

துக்குப் பின்பும் அவன் திருந்தாவிட்டால், விவாக ரத்து, அது இது என்ற தகராறுகள் ஏற்படலாம். சாதாரணக் குடும்பத்துப் பெண் என்றுல், தனக்குக் கிட்டியுள்ள பிற வசதிகளை உத்தேசித்துச் சகித்துக்கொள்வாள்' என்ற எண்ணத்தில் அவர் இப்படிச் சட்டெனச் சம்மதம் தந்திருப்பாரோ என்று ஒரு சந்தேகம்.

மற்ருெரு சந்தேகம்; பையனுக்குத் தீராத ரோகம் ஏதேனும் இருக்குமோ, அது காரணமாகத் தம் அந்தஸ்துக்குக் கீழான சம்பந்தத்துக்கு அவர் இசைவு தந்திருப்பாரோ என்பது.

எங்களுடைய இரண்டு சந்தேகங்களையும் அகல்யாவிடம் தெரிவித்தோம். ''எனக்குத் தெரிந்தவரையில் சிகரெட் குடிக்கும் பழக்கங்கூட அவரிடம் கிடையாது, அப்பா. இருந்தாலும் நீங்கள் வெளியிடங்களிலும் நன்ருக விசாரித்துக்கொள்ளுங்கள்'' என்ருள் அவள். மறைமுகமாகவும் நேரடியாகவும் பல பேரிடம் விசாரித்தோம். எல்லாரும் சலபதி ராவ் அப்பழுக்கற்றவன் என்று ஒரு முகமாகச் சொன்னுர்கள். முதல் சந்தேகம் தீர்ந்தது.

இரண்டாவது சந்தேகம் தீர அகல்யாவே உதவினுள். அவள் சலபதி ராவை ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து எங்கள் சந்தேகத்தை வெளிப்படையாகவே தெரிவித்து, அவன் தன் தந்தைக்குத் தெரியாமல் எங்கள் குடும்ப டாக்டரின் வைத்தியப் பரிசோதனைக்கு உட்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அவன் மறுப்பின்றி இணங்கினுன். வைத்தியப் பரிசோதனையில் சலபதி ராவ் எந்த விதமான நோயும் இல்லாத திடகாத்திர வாலிபன் என்பது நிரூபணமாயிற்று.

அப்புறம் என்ன? எங்கள் சக்திக்கு மீறிச் செலவு செய்து அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்ற வகையில் கல்யாணத்தைச் சிறப்பாக நடத்தினேம்.

ஆனுல், துரதிர்ஷ்டம் வேருெரு வகையில் எங்கள் அகல்யாவைத் தாக்கி விட்டதே!

மூன்று ஆண்டுகள் எங்கள் அகல்யா சொர்க்க போக வாழ்வு வாழ்ந்தாள்; இன்ப வெள்ளத்தில் நீந்தித் திளைத்தாள். சலபதி ராவ், அவள்மீது உயிரையே வைத்திருந்தான். அவளை விட்டு ஒரு நாள்கூடப் பிரிந்திருக்க மாட்டான். ஒரு நாலு நாள் வீட்டில் வைத்துக்கொள்வோம் என்று என் மனைவி ஆசையோடு மகளை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தால், சலபதி ராவ் இரண்டாவது நாளே அவளைக் கூட்டிச் செல்ல வந்து விடுவான். ''அவ்வளவு பெரிய பங்களாவில் தனியே இருக்கப் பயமாயிருக்கிறது, மாமா!'' என்பது போல் ஏதாவது பொய் சொல்லி மனைவியை அழைத்துச் சென்று விடுவான்.

பார்த்தீர்களா? சொல்ல மறந்து விட்டேன்! எங்கள் அகல்யாவுக்குக் கல்யாணம் ஆன மறு வருஷமே, சம்பந்தி மாரடைப்பால் காலமாகி விட்டார். சில ஆண்டுகளாகவே அவர் தம் மகனைத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் பழக்கியிருந்ததால், இருபத்து ஆறே வயது ஆகியிருந்த போதிலும் சலபதிராவ், தந்தையின் மறைவுக்குப் பிறகு அவருடைய நான்கு தொழிற்சாலைகளையும் திறமையுடனும், முன்னைவிட லாபகரமாகவும் நடத்தி வந்தான்.

மொத்தத்தில் பிறர் கண்டு பொருமைப்படும் அளவுக்கு எங்கள் அகல்யாவும் சலபதிராவும் ஆதர்ச தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர். எனக்கும் என் மனைவிக்கும் மட்டும் மனசில் ஒரு குறை, கல்யாணம் நடந்து மூன்று வருஷங்கள் ஆகியும் அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லையே என்று. இதை அவர்களிடம் சொன்னபோது, ''ஏன் மாமா, அவசரப்படுகிறீர்கள்? எனக்குத்தான் இருபத்து ஆறு வயசு ஆயிற்றேயன்றி உங்கள் பெண்ணுக்கு இருபதாவது வயசுதான் நடக்கிறது. அதற்குள் அவளை வரிசையாகக் குழந்தைகளைப் பெறவைத்துக் கிழவியாக்கிவிட நான் விரும்பவில்லை'' என்று சலபதிராவ் சிரித்துக்கொண்டே சொன்னுன்.

''ஆமாம்; நாம் கொஞ்சம் அதிகமாகத்தான் அவசரப்படுகிறேம்; ஆசைப்படுகிறேம்'' என்று நாங்களும் எங்களைச் சமாதானப்படுத்திக் கொண்டோம்.

சலபதிராவைப்பற்றி ஒரு விஷயத்தை நான் இங்கே சொல்ல வேண்டும். அவன் நல்லவன்தான். இரக்க குணம், தாராள மனசு எல்லாம் நிறைய உண்டு. ஆனுல் கொஞ்சம் பிடிவாதக்காரன்.

ஒரு சமயம் அவனுடைய தொழிற்சாலை ஒன்றில் தொழிலாளி ஒருவன் சில பொருள்களைத் திருடி, கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டான். எத்தனையோ சந்தர்ப்பங்களில் தன் தாராள மனசை வெளிப்படுத்தித் தொழிலாளர்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்துள்ள சலபதி ராவ் இந்தத் தொழிலாளியை மன்னித்து, எச்சரித்து விட்டிருக்கலாம்; அல்லது அவனை வேலையிலிருந்து நீக்கி, வீட்டுக்கு அனுப்பியிருக்கலாம். ஆனுல் இந்த விஷயத்தில் அவன் அந்தத் தொழிலாளியைப் போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாயிருந்தான். போலீசுக்கு அனுப்பினுல் அவனுடைய எதிர்காலம் சூன்யமாகிவிடும் என்று விளக்கி அவனை வேலையிலிருந்து நீக்கிவிடலாம் என்றுதான் தொழிற்சாலையின் ஜெனரல் மானேஜர், ஒர்க்ஸ் மானேஜர் ஆகியோர் சிபாரிசு செய்தனர். சம்பந்தப்பட்ட தொழிலாளியின் மனைவி வேறு விஷயம் அறிந்து தன் ஆறு குழந்தைகளுடன் ஓடிவந்து, கணவனைப் போலீசுக்கு அனுப்ப வேண்டாம் என்று சலபதிராவின் காலில் விழுந்து மன்ருடினுள். ஆனுல் அவன் ஒரே பிடிவாதமாக அதைப் போலீஸ் கேசாக்கி, அந்தத் தொழிலாளிக்கு ஆறு மாசம் சிறைத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டான்.

அதன் பிறகு அந்தச் சம்பவத்தை எல்லாருமே மறந்துவிட்டனர். தண்டனை அடைந்த தொழிலாளிகூட அதை மறந்திருப்பான். ஆனுல் விதி அவனிடம் விபரீத விளையாட்டு ஒன்று விளையாடிவிட்டது. தண்டனை முடிந்து வீடு திரும்பிய அவன், தன் மனைவி தங்கள் குழந்தைகளைக் காப்பாற்றும் பொருட்டு வேருெருவனுக்கு மனைவி

யாகிவிட்டதைக் கண்டான். உடனே பழி வெறி அவனை ஆட்கொண்டு விட்டது. தன் மனைவி தனக்கு ஆகாமற்போன நிலையை உண்டுபண்ணிய சலபதிராவையும் அந்த நிலைக்கு உள்ளாக்க வேண்டும் என்று தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

ஒரு வாரத்துக்குப் பின் பக்கத்து ஊரில் நடந்த உறவினர் ஒருவர் வீட்டுத் திருமணத்துக்கு அகல்யாவும் சலபதிராவும் சென்றனர். இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு ஊர் திரும்புவது அவர்கள் திட்டம். சலபதிராவே காரை ஓட்டிச் சென்றான். இதை எப்படியோ தெரிந்துகொண்ட அந்தத் தொழிலாளி, அவர்கள் ஊர் திரும்புகையில் காரை வழிமறித்து, சலபதி ராவை ஒரு மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு, அவன் கண் முன்னேயே எங்கள் அகல்யாவை...

பிரசாத ராவ் மேலே சொல்ல முடியாமல் விசும்பினார். சிறிது நேரத்துக்குப் பின்னர்த் தம்மைத் தேற்றிக் கொண்டு தொடர்ந்தார்.

அந்தக் கயவனால் கற்புப் பறிக்கப்பட்ட எங்கள் அழகுச் செல்வம், அவன் தன் வெறியைத் தீர்த்துக் கொண்டு ஓடி மறைந்ததும், கணவனின் கட்டுக்களை அவிழ்த்து அவனை விடுவித்துவிட்டு, ''நீங்கள் வீட்டுக்குப் போங்கள்'' என்றாள் அமைதியாக.

சிறிதும் எதிர்பாராது நிகழ்ந்துவிட்ட இந்த துர்ச் சம்பவத்தால் பிரமை பிடித்துப் போயிருந்த சலபதி ராவ், தன் பிரமை நீங்கி, ''நீ?'' என்று வினவினான்.

''எனக்கு இனி உங்களிடமோ, என் பெற்றோரிடமோ, ஏன், இந்த உலகத்திலேயோ இடம் கிடையாது'' என்று கதறி அழுதாள், எங்கள் செல்வ மகள்.

''அப்படிச் சொல்லாதே அகல்யா. என் காரணமாக உனக்கு இந்தத் தண்டனை கிடைத்திருக்கிறது. எனவே உன்னைச் சாகவிட்டால் என்னை விடப் பெரிய சண்டாளன் வேறு இருக்க மாட்டான். நல்ல வேளையாக இந்தச் சம்பவம் நம் இருவரையன்றி வேறு யாருக்கும் தெரியாது. இதை நாம் மறந்து விடுவோம். மனசைத் தேற்றிக்கொண்டு புறப்படு'' என்றான் அவன்.

என் மகளுக்கும் வாழும் ஆசை இன்னமும் இருந்தது என்று வைத்துக் கொள்ளுங்களேன். அவள் அழுது கொண்டே காரில் ஏறி வீடு வந்து சேர்ந்தாள்.

பழைய சொர்க்க போக வாழ்க்கையைக் கணவனிடமிருந்து இனி எதிர்பார்ப்பது மதியீனம் என்று உணர்ந்திருந்த போதிலும், அவனே விரும்பி அழைத்து வந்திருப்பதால் தொடர்ந்து தன்னை மனைவியாக நடத்துவான் என்று நினைத்தாள் அந்தப் பேதை.

ஆனால் அந்த நினைவு தவறானது என்பது விரைவிலேயே அவளுக்குத் தெரிய வந்தது. சம்பவம் நடந்து ஒரு மாதம் வரையில் அவர்கள் வழக்கம் போல் ஒரே படுக்கை அறையில் உறங்கிய போதிலும், கணவன் மனைவியாக உறங்கவில்லை. 'என்ன இருந்தாலும் இவருக்கு அந்தச் சம்பவம் அதிர்ச்சியாகத் தானே இருக்கும்? அந்த அதிர்ச்சி அடங்கச் சில நாட்கள் ஆகும். பிறகு அவரிடமிருந்து அழைப்பு வரும்' என்று நாட்களை எண்ணிக் கொண்டு காத்திருந்தாள் அகல்யா.

ஆயினும் ஒரு மாதத்துக்கு மேல் ஆகியும் எதிர்பார்த்த அழைப்பு வராமையால் ஒரு நாள் அவளே அவனை நெருங்கினாள்.

''வேண்டாம், அகல்யா. நாம் இனி இப்படியே வாழ்ந்து விடுவோம்'' என்றான் சலபதிராவ்.

''இப்படியென்றால்?''

''வெளி உலகுக்குக் கணவன் மனைவியாகவும், நம் வரையில் அண்ணன் தங்கையாகவும்!''

எங்கள் செல்வத்தின் மனசு இதைக் கேட்டதும் வெடித்துப் போயிற்று. ''அப்படி வாழ்வதற்கு என்னை நீங்கள் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்திருக்கவே வேண்டாமே!'' என்று அவள் ஆத்திரத்துடன் சொன்னாள்.

''இல்லை, அகல்யா. நீ எங்கேயாவது ஓடிப் போய் உயிரை மாய்த்துக் கொண்டிருந்தால், 'என்னுடன் கல்யாணத்துக்கு வந்த நீ எதற்காக என்னைப் பிரிந்து சென்றாய்? ஏன் மரணத்தை நாடினாய்?' என்ற கேள்விகள் எழும். அப்பொழுது நான் நடந்ததை வெளியிட்டே ஆக வேண்டியிருக்கும். நமக்கு ஏற்பட்ட அவமானம் ஊரெல்லாம் பரவிச் சந்தி சிரிக்கும்; இல்லையா? நீயே நினைத்துப் பார்.''

''ஆக, உங்கள் தவற்றுக்காகத் தண்டிக்கப்பட்ட நான், உங்களுக்கு அவமானம் ஏற்படும் என்பதற்காக இப்படி உயிர் வாழ வேண்டும் என்கிறீர்களா?''

''ஓர் உத்தம மனைவி அப்படித்தான் செய்ய வேண்டும்.''

தன் கணவன் எத்தகைய சுயநலக்காரன் என்பதை அகல்யா அன்றுதான் புரிந்து கொண்டாள். இருந்தாலும், தன் மறைவால் அவனுக்கு மட்டுமன்றி அவள் பெற்றோரான எங்களுக்கும் ஏற்படும் தலைக்குனிவை எண்ணி, நடைப் பிணமாகவேனும் வாழ்வது என்ற முடிவுக்கு வந்தாள்.

ஆனால் அந்த முடிவுக்கும் உடனே ஒரு சோதனை வந்தது.

அந்தத் துர்ச்சம்பவம் நடந்து இரண்டு மாதங்கள் கழிந்தபின் எங்கள் அகல்யா தான் கருவுற்றிருப்பதை உணர்ந்தாள். அதை அவள் சலபதி ராவிடம் தெரிவித்து, ''இப்பொழுது என்ன செய்வது?'' என்று கேட்டாள். அவன் என்னதான் சுயநலவாதியாக இருந்தாலும், அந்தச் சுயநலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்த அவமானச் சின்னத்தைத் தன் குழந்தையாகக் காட்டிக் கொண்டே ஆக வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

ஆனால் அந்தச் சுயநல அரக்கன் தன் முழு உருவையும் அப்பொழுது வெளிப்படுத்தி விட்டான். அவன் சொன்னான்: ''வேண்டாம், அகல்யா. இந்தக் குழந்தை பிறந்து வளர்ந்தால், நாம் சாகும் வரை அந்த அவமான நிகழ்ச்சியை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். இதை முளையிலேயே அழித்து விடுவோம்.''

அகல்யாவுக்கும் யாரோ ஒரு கயவன் தந்த குழந்தையைச் சுமந்து, பெற்று வளர்க்க அவ்வளவாகப் பிரியமில்லைதான். ஆனால் கருவைக் கலைத்தால் அது எப்படியும் எங்களுக்குத் தெரிந்து விடுமே! மகள் எப்பொழுது கருவுறுவாள் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் நாங்கள் சந்தேகம் அடையலாமே! 'ஏன்? எதற்கு?' என்ற விசாரணையில் இறங்கலாமே! அப்பொழுது அந்த அவமானத்தையும் அதன் விளைவான தங்கள் பிரிவையும் வெளியிட்டாக வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்று அவள் கலங்கினாள்.

தன் கலக்கத்தை அவள் சலபதி ராவிடம் கூறிய போது அந்தக் கிராதகன், ''ஐயோ! என் வாழ்வு அடியோடு நாசமாகி விட்டதே!'' என்று அரற்றினான்.

''ஏன் இப்படி அரற்றுகிறீர்கள்? நாசமானது உங்கள் வாழ்வு மட்டுமல்ல; என் வாழ்வுந்தான்'' என்று அகல்யா குமுறலுடன் கூறினாள்.

''உன் வாழ்வின் நாசம் மாற்ற முடியாத ஒன்று. ஆனால் என் வாழ்வின் நாசத்தை நாள்படச் சீர் செய்து கொள்ளலாம் என்றிருந்தேனே! அந்த எண்ணத்திலும் மண்ணடித்து விட்டதே இந்தக் கரு!'' என்று அவன் உருகினான்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம், அகல்யா. நீ ஓர் உத்தம மனைவி என்பதை இதுவரையில் நிரூபித்து வந்திருக்கிறாய். அவ்வாறே கடைசி வரையில் இருப்பாய்; நாம் வாழ முடியாது போய் விட்டாலும், நம் கணவனாவது வாழட்டும் என்று, சில காலத்துக்குப் பின், நீ கருவுறாததைக் காரணம் காட்டி எனக்கு மறு மணத்தை முன்னின்று நடத்தி வைப்பாய் என்று நான் ஆசைக் கோட்டை கட்டியிருந்தேனே!'' என்று அவன் புலம்பினான்.

சலபதி ராவின் இந்தப் பிரலாபம், தான் நினைத்தே இராத பேரிடியாக எங்கள் அகல்யாவைத் தாக்கியது. அவளுடைய தளிர் நெஞ்சத்தால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மறுநாள் அவள் நடந்ததையெல்லாம் ஒரு கடிதத்தில் எழுதித் தபால் மூலம் எங்களுக்கு அனுப்பி விட்டுத் தற்கொலை செய்து கொண்டு விட்டாள்.

பிரசாத ராவ் தம் கதையை முடித்துவிட்டு, ''இப்பொழுது சொல்லுங்கள், ஸார், அந்தப் பம்பாய்ப் பெண் உயிர் வாழ்ந்திருந்தால் அவளுக்கும் இது போன்ற அவகேடு ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டார்.

மறுத்துப் பேச எனக்கு வாய் இருந்தால்தானே?

*

ஃபைப்ரோபிளெக்ஸ் மெத்தைகள், தலையணைகள், மற்றும் திண்டுகள்...

இல்லங்களுக்கும் ஹோட்டல்களுக்கும் மிகச் சிறந்தவை... சிக்கனமானவை.

ஃபைப்ரோபிளெக்ஸ் மெத்தைகள், தலையணைகள் மற்றும் திண்டுகள் — நாரும், ரப்பரும் கலந்த சிறந்த தயாரிப்பாகும். இதில் உள்ள லக்ஷக் கணக்கான சிறு துவாரங்கள் மிகுதியான இயற்கைக் காற்றோட்டத் திற்கு வழி செய்வதால் குளுமையான காற்றோட்டம் உங்கள் உடலுக்குக் கிட்டுகிறது.

தேங்காய் நாரின் இயற்கையான குணம் மற்றும் சுய காற்றோட்டத் தன்மை காரணமாக ரப்பர் கலந்த நார் மெத்தை மனித உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றது என்று உலகமெங்கும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ரப்பர் நுரை அல்லது பருத்தி மெத்தைகளைப் போலின்றி, ரப்பர் கலந்த நார் மெத்தையின் மீது நீங்கள் உறங்கும்போது, உங்களை வெப்பம் பாதிப்பதில்லை; காலையில் எழுந்திருக்கும்போது உடலில் விறைப்போ மற்றும் ஒய்ச்சலோ ஏற்படுவதில்லை. மூலநோய், முதுகுவலி, புண்கள் முதலியவற்றால் அவதிப்படும் நோயாளிகளுக்கு இந்த மெத்தை மிகவும் சிறப்பானது என்று மருத்துவ நிபுணர்களால் சிபாரிசு செய்யப் பட்டுள்ளது.

ஃபைப்ரோபிளெக்ஸ் மெத்தைகள் பல வகைகளில் கிடைக்கும். வட்டவடிவ, சதுர வடிவ தலையணைகள் மற்றும் முதுகுக்கான திண்டுகள், கார்களுக் கான் மடக்கு மெத்தைகள் பல்வேறு கனங்களிலும் அளவுகளிலும் உள்ளன. எந்த வகையான வண்ண ஜோடனைக் கும் ஏற்ற கண்கவர் வண்ணங்களில் இவை அனைத்தும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள் :
பாரத் மோட்டார்ஸ்
37, கிரீம்ஸ் ரோடு, சென்னை-600 006.
தொலைபேசி : 86204

உன்னத ஒளிகூட்டி நீடித்து உழைப்பவை

பார்கோ 751
காஸ் மான்டில்கள்

பூரண விற்பனை ஏஜெண்டுகள்: ஃபார்கோ சேல்ஸ் ஏஜென்ஸிஸ்
255/256, ஏ டு ஜட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பர்குஸன் ரோடு, லோயர் பரேல்,
பமபாய-13.

for every student to do his classwork

SPB does a lot of paper work!

S P B are South India's largest supplier of quality paper for the Students' Note Books at concessional price.



The Watermark of Quality

SESHASAYEE PAPER AND BOARDS LTD
PALLIPALAYAM, ERODE-638007

imageads-1231/2

ஒருவன்தான் பாக்கி!

ஏ. நடராஜன்

காட்சி-1

இடம்: குப்புசாமியின் வீட்டுத் திண்ணை.

ராமசாமி: குப்புசாமி, இன்னைக்குப் பேப்பரைப் படிச்சிங்களா?

குப்பு: நீங்க ஒண்ணு! பேப்பர் படிக்க நமக்கு எங்கே நேரம் இருக்கு? ஏன் ராமசாமி, ஏதும் விசேஷச் செய்தி வெளியாயிருக்கோ?

ராம: சொல்றேன். எனக்கு ஒரு பழக்கம் பாருங்க. பேப்பர் படிச்சா அதை இன்னொருத்தர் கிட்டே விளக்கிச் சொல்லலேன்னு தூக்கமே வராது.

குப்பு: (கொட்டாவி விட்டுக் கொண்டே) சீக்கிரம் சொல்லுங்க. எனக்கு ஏகப்பட்ட வேலையிருக்கு.

ராம: எங்கே, அந்தப் பொடி மட்டையைக் கொஞ்சம் குடுங்க. மூணு நாளா ஒரே மூக்கடைப்பு. (பொடி போட்டுக் கொண்டு) என்ன இருந்தாலும் நீங்க போடுற இடி மார்க் பொடி ஸ்பெஷல் குவாலிட்டி தான். மூக்கிலே உறிஞ்சினு மூளையிலே இல்லே ஷாக் அடிக்குது?

குப்பு: (கொட்டாவி விட்டுக் கொண்டு) ஏதோ சொல்றேன்னு சொன்னீங்களே, அதைச் சொல்லுங்க. சரியாத் தூங்கி நாளாச்சு. (ஹாவ்)

ராம: இன்னைக்குப் பேப்பர்லே ஒரு திடுக்கிடும் செய்தி வெளியாயிருக்கு.

காமாட்சி: (அடுக்களையிலிருந்து) ஏங்க, உங்களைத் தானே? காலங்காத்தாலே இப்படி மசமசன்னு உக்காந்துக்கிட்டு இருக்கீங்களே! கொஞ்சனாச்சும் பொறுப்பு இருக்கா?

குப்பு: சீக்கிரம் சொல்லுங்க. அது கூப்பிடுது. வேலையும் கெடக்கு, தலைக்கு மேலே.

ராம: (மெதுவான குரலில்) என்ன அண்ணே, பொண்டாட்டிக்கு இப்படிப் பயப்படறீங்க? நம்ம வூட்லே வந்து பாருங்க; அப்படியே கிடு கிடுன்னு நடுங்க வேண்டாமா?

சோணாசலம்: (வந்து கொண்டே) யாரு, நீங்கதானே நடுங்குவிங்க?

ராம: என்னடா தம்பி, வரும் போதே ராங் சைடுலே மோதறியே!

குப்பு: அவன் மோட்டார் கம்பெனியிலே வேலை பாக்கறான். அப்படித்தான் ராங் சைடுலே மோதுவான். நீங்க கண்டுக்காதீங்க.

சோ: அன்னைக்கு ஒரு நாள் இப்படித்தான். ஒரு வண்டியை ரிப்பேர் செஞ்சு டிரயல் பார்த்தேன், பாருங்க. அப்படியே அந்த விக்டோரியா ரோடுலே ஹாய்யா ஒரு டிரைவ் போயி ரைட்லே வளைச்சு லெப்டிலே ஒடிச்சு வண்டியைத் திருப்பிப் புல்லியமூர்த்தி குப்பம் இருக்கே, அதுக்குப் பக்கத்து ரோடிலே சவாரி போனேன், பாருங்க! அப்பப் பார்த்து (சிரிக்கிறான்) ஒரு கெயவி விட்லே சொல்லிக்கினு வந்திருப்பா போலிருக்குது, நம்ப வண்டியிலே விழப் பாத்தா. அப்படியே கபால்னு ப்ரேக்கைப் போட்டு ஸ்டீயரிங்கை ஒரு ஒடி ஒடிச்சேன். வண்டியை அப்படியே லெப்டுலே திருப்பினேன். பாரு, அப்படியே சட்னியாப் போச்சு! க்ளோஸ்!

ராம: (திடுக்கிட்டு) என்னது, குளோசா?

சோ: ஆமா. லெப்டுலே வண்டியை ஒடிக்கும்போது கோழி ஒண்ணு பறந்து வந்து விழுந்திருக்கு. அப்படியே சட்னி ஆயிடுச்சு. கீழே இறங்கிப் பாத்தா ஒரே ரத்தம். அந்தக் கெயவியை நாலு திட்டுத் திட்டி வண்டியை அப்படியே எக்ஸ்பிரஸ் கணக்கா ஓட்டிக்கினு வந்து சேர்ந்தேன். எதுக்கும் மனசிலே திடம் வேணும். (சிரித்துக்கொண்டு) இது என்ன பெரிசு? எத்தனையோ பேரு கதையை முடிச்சிருக்கேன் நானு. சரி, சரி! டயம் ஆயிப்போச்சு, நாயினு; சில்லறை கொடு, நாஷ்தாவுக்கு.

குப்பு: என் கிட்டே ஏதுடா காசு? நேத்துத்தானே பணம் குடுத்தேன்?

சோ: ஆமா. நேத்து நாலு ருவா நோட்டை அப்படியே எடுத்துக் குடுத்தே பாரு! எட்டணாக் காசு குடுத்துட்டு எட்டு நாளைக்குச் சொல்லிக் காண்பிக்கிறுரு.

காமா: ஏண்டா, சோணாசலம், அங்கே என்னடா சத்தம்? உங்க அப்பன் கிட்டே அழும்பு பண்றியா? பொழுது விடிஞ்சு பொழுது போனா உன் தொந்தரவே பெரிசாப் போச்சு.

சோ: சே, சே! என்னம்மா? காசு கேட்கறப்போ இது ஒழுங்காக் குடுத்திட்டா நான் பாட்டுக்குப் போய்க்கினே இருப்பேன்.

காமா: ஆமா. இங்கே காசு கொட்டிக்கெடக்கு; வாரிக் குடுங்க ஐயாவுக்கு. மாசம் பொறந்தா ஐயாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக்கிட்டு வந்து தர்ராரில்லே? போடா போ!

சோ: இந்தாம்மா, ஸ்டாப் பண்ணிக்கோ. அப்பாவைப் பேசற மாதிரி என்னையும் பேசாதே. நான் ரொம்பவும் ரோசக்காரன். ஆமா. நான் வர்றேன். என்னை மதிக்காத இந்த வூட்லே என் கால் இன்னமே 'டச்' பண்ணாது. ஆமா, நான் வர்றேன். (போகிறான்).

ராம: குப்புசாமி அண்ணே, உன் மவன் ஏன் இப்படிப் பொரிஞ்சு தள்ளிட்டுப் போறான்?

குப்பு: என்ன பண்றது? நான் பண்ணின புண்ணியம். (மெதுவான குரலில்) வாயாடி பொன்ஜாதி, உபயோகமற்ற மவன்! ம்...சரி, வேலை கெடக்கு நிறைய.

ராம: அந்த விஷயத்தை நீங்க கேட்கலியே? நம்ப ஊரு வடகோடியிலே இருக்கே, ஒரு பங்களா, அதிலே இருந்த மிராசுதாருடைய குடும்பத்தையே யாரோ கொலை பண்ணிட்டாங்க.

குப்பு: (ஆச்சரியத்துடன்) என்னது? (வீட்டுக்குள் பாத்திரம் உருளும் சத்தம் கேட்கிறது.)

காமா: வளவளன்னு என் னுத்தை அப்படிப் பேசிக்கிட்டு இருக் கிங்க? ரேசன் கடைக்குப் போய்ச் சக்கரை வாங்கிட்டு வாங்க.

குப்பு: (சுவாரஸ்யமாக) ம், அப் புறம் நீங்க சொல்லுங்க. 'அது' எப்பப் பாத்தாலும் இப்படித்தான் ஏதாவது சொல்லும்.

ராம: அஞ்சு பேரு க்ளோஸ். மீதி ஒரே ஒரு பையன்; மிராசு தாரோட மவன் மட்டிலும் எப் படியோ தப்பிச்சுக்கிட்டான்.

குப்பு: நெஜமாவா?

ராம: பின்னே பொய்யா சொல் றேன்? இப்பத்தானே பேப்பர்லே படிச்சுட்டு அப்படியே சுடச்சுட உங்க கிட்டே வந்து சொல்றேன்? பேப் பர்லே கொட்டை எழுத்திலே போட்டிருக்காங்களே, பயங்கரக் கொலை, அஞ்சு பேர் பயங்கரச் சாவுன்னு! ஒருவர் தப்பினுர்னு போட் டிருக்கே. போலீசார் புலன் விசாரிக் கருங்களாம்.

குப்பு: ஆச்சரியமா இருக்கே!

காமா: ஏங்க, உங்களைத் தானே? இப்ப வர்றீங்களா இல்லையா? காலை யிலே எந்திரிச்சு இப்படி வெட்டி அரட்டை அடிக்க உக்காந்துட்டா என்ன பண்றது? பெத்த மவன் அப் படி. கட்டின புருசன் இப்படி. ராமா, ராமா!

ராம: குப்புசாமி அண்ணே, உள்ளே போங்க. சகஸ்ரநாம அர்ச்சனை நடக்குது போலிருக்கு. நான் அப்புறம் உங்களைப் பார்க் கறேன். கொஞ்சம் அந்தப் பொடி மட்டையைக் குடுங்க. (சர் ரென்று பொடி போடுதல்.) அப்ப நான் வர்றேன்.

குப்பு: சரி, போயிட்டு வாங்க.



காட்சி-2

இடம் பார்க்

சோ: மீனு, மீனு, இங்கே பாருன்னு...

மீனு: மீனுமில்லே கருவாடுமில்லே. இங்கே ஒண்ணும் கொஞ்சவேண்டாம்.

சோ: இந்தா, இந்தா கண்ணு! கோவிச்சுக்காதே.

மீனு: மனுசன்னு சொன்ன வார்த் தையைக் காப்பாத்தணும்.

சோ: மீனுட்சி, கோவத்தைக் கைவிடு. இங்கே கொஞ்சம் பார் வையைத் திருப்பேன்.

மீனு: ரொம்பச் சவடாலாத்தானே சொன்னே?

சோ: ஆமா; சொன்னேன். 'ஜில் ஜில்' தியேட்டர்ல நம்ம ஹீரோ வஸ்தாது வராகசாமி நடிச்ச புதுப்படம் ரிலீஸ் ஆகுது; பஸ்ட் ஷோவுக்குப் பஸ்ட் கிளாஸ் டிக்கட் வாங்கி, உன்னை அழைச்சுக்கிட்டுப் போறேன்னு சொன்னேன். அப்பத் தெரியுமா இப்படி ஆகும்னு?

மீனு: தைரியம் இல்லாத மனுசனுக் கெல்லாம் வாய்ச் சவடால் எதுக்காம்?

சோ: மீனுட்சி, என்னைப் பாத்தா இப்படிச் சொல்றே? இந்தச் சோணுசலம் யாருக்கும் பயப் பட மாட்டான், தெரிஞ்சுக்கோ. இந்த மீசை மேலே கைபோட்டுச் சொல்றேன். ஐயா யாருன்னு உனக்குத் தெரியாது. ஆமா.

மீனு: ஆமா, உன்னை எனக்குத் தெரியாதாக்கும்! உன் 'கிருதா மீசைக்கு இங்கே யாரும் பயப்பட மாட்டாங்க. பொம்பளைங்க கட்டிக் கிற சேலை மாதிரி கலர் லுங்கி கட் டிக்கினு பனியன் தெரியற மாதிரி சல்லாச் சட்டை போட்டுக்கினு காடுமாதிரி கிராப் வெட்டிக்கினு எல்லாரும் பயந்துடுவாங்களா? அதுக்கு வேறே ஆளைப் பாரு. உன் மாதிரி ஹீரோவை எத்தனையோ சினிமாப் படத்திலே பாத்திருக்கேன்.

சோ: யார் யாருக்கோ ஊர்வசிப் பட்டம் குடுக்கறுங்க. உன்னைப் போலிருக்கிற சினிமா விசிறி வேறே யாரு இருக்கா? உனக்கு என்ன பட் டம் குடுக்கலாம்? (மீனுட்சி போகி ருள்.) மீனு, மீனு! பேசாமப் போறியே! எக்ஸ்பிரஸ் டிரெயின் தண்டவாளத்தை விட்டு இறங்கிப் போற மாதிரியிருக்கே, நீ போறது.

மீனு: நான் என்ன உன் மாதிரி வேலை வெட்டியத்தவளா? எங்க அம்மா அப்பா தேடுவாங்க. நான் போறேன்.

சோ: மீனு, எனக்கா வேலை இல் லேன்னு சொன்னே. படாபடா மோட்டார் சர்வீஸ் மெக்கானிக்கைப் பாத்து அப்படிச் சொல்லிட்டே. போகட்டும், இங்கே முகத்தைக் கொண்டா.

மீனு: என்னது?

சோ: இப்படிக் காதைக் குடேன்.

மீனு: ஏன், தோடு தொங்கட் டான் போடப் போறியா?

சோ: போடாமலா போகப் போ றேன்? அது அப்புறம். இப்போ கிட்டே வாயேன்; ஒரு ரகசியம்.

மீனு: ப்பூ! இவ்வளவுதானு?

சோ: இப்படிக் கிட்டே வான்னு! (ரகசியம் சொல்லுகிருன்.) ஆமா. புரிஞ்சுக்கிட்டியா?

மீனு: ஐயையோ! எதுக்கு உனக்கு இந்த வம்பு?

சோ: பிரபல மெக்கானிக் சோணு சலத்தின் வருங்கால மனைவி இப்படிக் கோழையா இருக்கலாமா? நான் வர் றேன். அப்புறம் பாக்கறேன்.

காட்சி-3

இடம்: போலீஸ் ஸ்டேஷன்.

இன்ஸ்பெக்டர்: த்ரி நாட் த்ரி!

கான்: (சல்யூட் அடித்து) எஸ் ஸார்.

இன்ஸ்: அந்த மிராசுதார் வீட்டுக் கொலையைப்பத்தி மேற்கொண்டு ஏதாவது துப்புக் கெடைச்சுதா?

கான்: நேத்து டவுன் பூரா ரௌண்ட் வந்தேன், ஸார். ஒண்ணும் துப்புக் கெடைக்கலீங்களே. ஆனு ஊர் பூரா இதைப் பத்தியே பேசிக்கிட்டு இருக்காங்க. எங்கே பாத்தாலும் இதே பேச்சுத்தான்.

இன்ஸ்: அதைக் கேட்டுக்கிட்டு வந்து சேந்தீங்களாக்கும்! கொஞ்சம்

கூடச் சுறுசுறுப்பே இல்லாத ஆளுங்கய்யா. டி. எஸ். பி. காரமா ரிப்போர்ட் எழுதி அனுப்பிச்சிருக்காரு. இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே குத்தவாளியைக் கண்டு புடிச்சாகணும். இன்னும் நாலஞ்சு நாளுக்குள்ளே குத்தவாளியைக் கண்டு புடிக்க வேண்டியது நம்மோட பொறுப்பு. மத்தக் கான்ஸ்டபிள்களைக் கூப்பிடு;

கான்: எஸ் ஸார்! (ஸ்ல்யூட் அடித்தல்.)

காட்சி-4

இடம்: பார்க்

நேரம்: பகல்

சோ: மீனு, இந்தச் சோணாசலத்தைச் சோமாறி, சோமாறின்னு தானே நெனைச்சே? சொன்ன சொல்லைக் காப்பாத்தாதவன்னு தானே சொன்னே? புறப்படு, போவோம்.

மீனு: நெஜமாவா?

சோ: ஆமா. ஜில்ஜில் தியேட்டர் நோக்கிப் புறப்படுவோம்.

மீனு: என்னால் நம்ப முடியலேங்க.

சோ: உன்னாலே நம்ப முடியாது தான். ஆனந்தமாக் கொண்டாட வேண்டிய இன்ப நாள் இது.

மீனு: ஐயையோ! நான் காலையிலே உன்னை என்னென்னவோ வாய்க்கு வந்தபடி பேசிக்கிட்டேனே! மன்னிச்சிப்புடு;

சோ: காதலி தன் காதலனைத் திட்டுவதும் ஒரு இன்பந்தான்.

மீனு: என்ன, ஒரே குஷியா இருக்கே? சினிமா டயலாக்காப் பொரிஞ்சு தள்ளறியே!

சோ: நீ புறப்படு சீக்கிரம். தெரியுமா மீனாட்சி? இதுவரைக்கும் அஞ்சு பேரு குளோஸ். இன்னும் ஒரு ஆள் தான் பாக்கி.

மீனு: என்னது?

கான்: (ஓடி வந்து) டேய். அப்படியே நில்லு. ஓரடி நகர்ந்தா ஷூட் பண்ணிடுவேன். ஆமா.

சோ: யாருய்யா நீ?

கான்: யாரா? ஸ்டேஷனுக்கு வா, தெரியும்.

சோ: மீனாட்சி, இதென்ன வம்பு?

கான்: வம்பா? எங்க கண்ணிலே எல்லாம் மொளகாய்ப் பொடி தூவலாம்னு நெனச்சே இல்லையா? வசமா மாட்டிக்கிட்டே.

மீனு: இந்தாங்க, ஐயா! அவரு எந்த வம்புக்கும் போகாதவருங்க.

கான்: அதெல்லாம் ஸ்டேஷனிலே பாத்துக்கலாம். நடங்க.ம்!

காட்சி-5

இடம்: போலீஸ் ஸ்டேஷன்

இன்ஸ்: என்னையா, த்ரீ நாட் த்ரீ?

கான்: (ஸல்யூட் அடித்து) கொலையாளியைக் கையோடு பிடிச்சுக்கிட்டு வந்துட்டேங்க ஸார்.

இன்ஸ்: நெஜமாவா?

கான்: இதோ, இந்த ஆளு தாங்க.

சோணு: ஸார், எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்க, ரோட்டிலே நின்னுக்கிட்டு இருந்தவனைப் புடிச்சுக்கிட்டு வந்து என்னென்னவோ சொல்றாருங்க. ஐயனார் சத்தியமா எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க.

மீனு: ஆமாங்க. அவரு அப்பாவிங்க.

கான்: பஜார் பக்கமாப் போயிக்கிட்டிருந்தேன் ஸார். இந்த ஆளோட டிரஸ்ஸையும் கிராப்பையும் பாத்ததும், எனக்குச் சந்தேகம் வந்திடுச்சு. அவுங்க பேசிக்கிறதை மறைவா இருந்து கேட்டேன். 'அஞ்சு பேர் க்ளோஸ், இன்னும் ஒருவர் தான் பாக்கி'ன்னு சொன்னான். எனக்குச் சந்தேகம் உண்டாச்சு, இந்த ஆள் பேர்ல. அப்படியே கபால்னு பாஞ்சு ஆளைப் புடிச்சு இழுத்துக்கினு வந்துட்டேன். பய ஷோவுக்குப் புறப்படறானாம் காதலியோட.

இன்ஸ்: ஏய்! உனக்கு எந்த ஊரு?

சோணு: எனக்கு இந்த ஊருதாங்க. என் பேரு சோணாசலங்க. படாபடா மோட்டார் கம்பெனியிலே மெக்கானிக்குங்க நான்.

இன்ஸ்: மிராசுதார் குடும்பத்துக்கும் உனக்கும் என்ன தகராறு?

சோணு: என்ன கேட்கிறீங்க நீங்க? ஒண்ணுமே புரியலையே!

கான்: என்னடா நடிக்கிறே? மிராசுதார் குடும்பத்தைக் கொலை பண்ணியது நீதானே? 'அஞ்சு பேரைக் க்ளோஸ் பண்ணிட்டேன். இன்னும் ஒருத்தர் தான் பாக்கி'ன்னு சொன்னியா, இல்லையா? மிராசுதாரோட கடைசிப் பையன் எப்படியோ தப்பிச்சு ஓடிட்டான். அதனாலதானே ஒருத்தர் பாக்கினு சொன்னே. இல்லியா?

சோணு: ஐயையோ! நான் சொன்னது வேற அர்த்தத்திலேங்க. இவ பெயர் மீனாட்சி; எங்க மாமா பொண்ணுங்க. சினிமா மேல ஒரே பைத்தியம். புதுப்படம் வந்தா ஒடனே பாக்கணும்னு புடிவாதம் பண்ணுவா. ஈவினிங் ஷோவுக்கு ரெண்டு பேரும் சேர்ந்து போறதுக்கு எங்க மாமா அனுமதிக்க மாட்டார். அதனால மாட்னி ஷோவுக்குத்தான் போவோம்.

இன்ஸ்: அதுக்கும் இதுக்கும் என்னையா சம்பந்தம்?

சோணு: சம்பந்தம் இருக்குங்க. ஜில்ஜில் தியேட்டர்ல நேத்திக்கு ஒரு புதுப்படம் ரிலீஸ் ஆச்சுங்களா? அதுக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன்னு மீனாட்சி கிட்டே சொல்லியிருந்தேன். ஆனா எங்க கம்பெனி மேனேஜரு ஒரே கண்டிப்புக்காரரு. லீவு கேட்டாக் குடுக்க மாட்டாரு. அதனாலே நேத்துப் படம் பார்க்க முடியல்லே. நேத்திக்கு மீனாட்சி ரொம்பக் கோபமா என்னைத் திட்டிச்சு. எனக்கு ரோசம் பொறுக்கலே. இன்னைக்கு மேனேஜர்கிட்டே போய், எங்க பாட்டி செத்துப் போச்சுன்னு அழுது லீவு கேட்டேன். யாரும் செத்துப் போயிட்டாங்கன்னு சொன்னாத்தான் மேனேஜர் லீவு தருவாரு. அதனாலே....

இன்ஸ்: அதனாலே என்னய்யா?

சோணு: அதனாலே தான் பொய் சொன்னேன். இது வரைக்கும் இந்த மாதிரி அஞ்சு தரம் பொய் சொல்லி லீவு வாங்கியிருக்கேங்க, அஞ்சு தடவையும் பாட்டியைக் குளோஸ் பண்ணியிருக்கேங்க. இன்னமே எங்கம்மா மட்டிலுந்தான் எனக்குத் துணையிருக்குதுன்னு மேனேஜர் கிட்டே போய் சொல்லிட்டேன். அதைத்தான் நான் மீனாட்சி கிட்டே: 'அஞ்சு பேரு க்ளோஸ், இன்னும் ஒருத்தர் பாக்கி'ன்னு சொல்லிக்கிட்டிருந்தேங்க.

கான்: ஸார், சும்மா நடிக்கிறாங்க இவன்.

சோணு: இல்லீங்க; சத்தியமா நான் சொல்றதை நம்புங்க. உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா எங்க மேனேஜருக்குப் போன் பண்ணி விசாரிங்க. எங்க வீட்டு விலாசம் சொல்றேங்க. 84, புதுத் தெரு. அஞ்ஞான நகர். விசாரிச்சுப் பாருங்க.

இன்ஸ்: சரி, சரி. த்ரி நாட் த்ரீ, இந்த ஆளை லாக்கப்லே வை. இந்த ஆளு சொன்ன விலாசத்திலே போய் விசாரிச்சுட்டு வா.

கான்: அந்தப் பொண்ணைங்க....

இன்ஸ்: தனி லாக்கப்பிலே தள்ளு.

சோணு: ஐயையோ! மேனேஜர் கிட்டே போய் சொன்னதுக்கு இது நல்ல தண்டனை.

மீனு: உங்களைத் திட்டினதுக்கு எனக்குத் தண்டனைங்க!

திகட்டும் தித்திப்பா! இல்லவே இல்லை!

அம்பீஸ் ஊறுகாய்களின் துணைகொண்டு உங்கள் மனம் விரும்பும் அளவுக்கு வேண்டிய இனிப்புகளை சாப்பிடுங்கள். அம்பீஸ் ஊறுகாய்கள் ருசிக்கு ருசி ஊட்டுவதுடன் ஜீரண சக்தியையும் தூண்டுகிறது.

சுவையூறும் ஊறுகாய் வகைகள்
ஆவக்காய் மாங்காய்
வடு மாங்காய்
மாங்காய் தொக்கு
எலுமிச்சை
கோங்கூரா
பச்சை மிளகு
வெஜிடபிள் ஊறுகாய்
நெல்லிக்காய்
பச்சை மிளகாய்
பூண்டு ஊறுகாய்
மற்றும் பலவகைகள்

அம்பீஸ் சுவை,
ஒரு தாயின் கை தேர்ந்த
சுவை போல் ஆவலைத்
தூண்டும் சுவை.

Ambi's

3869 FPO

தயாரிப்போர்:
அம்பீஸ் பிக்கிள்ஸ் அண்ட்
காண்டிமெண்ட்ஸ் ஆப் இந்தியா
ஏற்றுமதி செய்வோர்:
வெஸ்டர்ன் எக்ஸ்போர்ட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்
19, நீலகண்ட மேத்தா தெரு, தி. நகர்
சென்னை–17 தொலைபேசி: 447355

APRC 110

இந்தப் புகைப்பட ஆல்பத்தைச் சற்றுப் பார்க்கிறீர்களா?

இது நான் குழந்தையாக இருந்த போது எடுத்தது. ஆண்டு நிறைவன்று. அழகாக ஒரு டிரஸைப் போட்டு எடுக்கக் கூடாதோ? 'பர்த்டே டிரஸ்' என்று அறுவை ஜோக் அடித்தாராம் அப்பா. பிறந்த மேனிக்கு எடுத்திருக்கிருர், தமது பாக்ஸ் காமிராவில்.

புரட்டுங்கள் பக்கத்தை. இதோ ஜட்டி மட்டும் போட்டுக்கொண்டு ஆடும் குதிரைமீது அமர்ந்து சிரிப்பதும் நானேதான். இப்போது எனக்கு வயது மூன்று. கேசத்தை உயரத் தூக்கி வரதர் கொண்டை போட்டுப் பூச் சுற்றியிருக்கிருள் அம்மா.

அடுத்த பக்கம்; இது என்ன கோலாகலம் என்கிறீர்களா? தங்கச்சி பிறந்திருக்கிருள். தொட்டிவிடும் வைபவம்!

இதோ நானும் தங்கச்சியும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம். அவளுடைய ஆண்டு நிறைவு. நான் பள்ளிக்கூட யூனிஃபார்மில் இருப்பதைக் கவனியுங்கள்.

திருப்புங்கள். அடுத்தது, பள்ளிக்கூட டிராமாவில் எனக்குப் போஸ்ட்மேன் வேஷம். ஒரே ஒரு ஸீன்; இரண்டு வார்த்தை வசனம்; ''ஸார்! போஸ்ட்!'' அவ்வளவுதான். எவ்வளவு ஆர்வமாக அப்பா போட்டோ பிடிக்க ஏற்பாடு செய்தார்!

அப்புறம் என்ன படம்? ஓ! விடுமுறையில் ஊட்டி போயிருந்தோமே அப்போது எடுத்தது. இப்போது நிஜக் குதிரை ஸ்வாரி பண்ணுகிறேன். பயத்தை ஒளித்துக் கொண்டு ரொம்பத் தைரியமாக அமர்ந்திருப்பதுபோல் நடிக்கிறேன். அப்பா 'கிளிக்'கினுர். தங்கச்சி ஏன் என் பக்கத்தில் இல்லை, தெரியுமா? பாவம்! அவள் இறந்து போனுள், டைஃபாய்டில்.

அடுத்தது பள்ளிக்கூடத்தில் வருடாந்தர விழா. எனக்கும் பரிசு தருகிருர் சீஃப் கெஸ்ட். எதற்குப் பரிசு? மறந்துவிட்டது. பத்து வருஷம் படித்ததில் ஒரு வருஷம் ஏதோ ஒரு பாடத்தில் பரிசு வாங்கியிருக்கிறேன். சாதனை!

இந்தப் படத்தைப் பாருங்கள். ஒரு டிராமாவில் நான் நடிக்கிறேன், கதாநாயகியாக. எட்டாவது ஸ்டாண்டர்ட் படித்துக்கொண்டிருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில். இப்போதுதான் நடிக்க வருகிறது என்பதாக எனக்கே தோன்றுகிறது. எல்லாரும் ரொம்ப ஜோர் என்று வாழ்த்தினுர்கள்.

இது என்ன போட்டோ, தெரிகிறதா? எனக்கு ஏகமாக அலங்காரம் செய்து, கேலி செய்து, வெட்கத்தால் என்னைத் தலைகுனிய வைத்து மகிழ்ச்சியால் என்னைக் குலுங்கச் சிரிக்க வைக்கிருர்களே, எதற்கு? நான் பெரியவளாகி விட்டேன் என்று என்ன கூத்து அடித்தார்கள் அன்றைக்கு!

இது நாங்கள் குற்ருலம் போயிருந்த போது எடுத்தது. அருவியில் குளித்துவிட்டு ஈரப்புடைவையுடன் நிற்கிறேன். என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? நான் அழகி என்பதுதான் தெரிந்த கதையாயிற்றே! திருப்புங்கள் பக்கத்தை.

எங்கள் காலேஜ். பி.ஏ.ஹோம் ஸயன்ஸில் சேருகிறேன் 'ஹோம் ஸயன்ஸுக்குக் காலேஜ் வேறு?' என்று கிண்டல் செய்கிருர்கள். இந்தப் படிப்பின் உபயோகம் அவர்களுக்கு என்ன தெரியும்? மேலும் படிப்பைவிட எனக்கு முக்கியம் கல்லூரி வாழ்வு. அதை இழக்க நான் தயாராக இல்லை. இன்னொரு நோக்கமும் உண்டு. காலேஜ் என்ருல் வருஷ வருஷம் டிராமாப் போடுவார்கள். அதிர்ஷ்டம் இருந்தால் எனக்கு நடிக்க வாய்ப்புக் கிட்டலாம்.

இதோ கல்லூரி நாடகத்தில் நான் சிவகாமியாக நடிக்கிறேன். மாமல்லரிடம் என் மாருப் பிரேமையைத் தெரிவிக்கிறேன். சிவகாமியின் சபதத்திலிருந்து சில முக்கியமான காட்சிகளை மட்டும் தேர்ந்தெடுத்து நடித்தோம். அடுத்த பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள். உங்களுக்கு ஓர் ஆச்சர்யம் காத்திருக்கிறது.

ஆ! இதோ பார்த்தீர்களா? நடிப்புக்கு முதல் பரிசு எனக்குத்தான். பரிசு வழங்குவது யார் கவனித்தீர்களா? சிவாஜி! வந்து இருந்து, பார்த்து அவரே எனக்குப் பரிசளித்து வாழ்த்தினுர். அந்த வார்த்தைகளை நான் மறக்கவே இல்லை. 'ரொம்ப நல்லா நடிச்சேம்மா. பெரிய ஸ்டாரா உருவாகணும்னு நீ விரும்பறியோ இல்லையோ, எனக்குத் தெரியாது; ஆனு நான் விரும்பறேன்; வாழ்த்தறேன்'' என்ருர்.

''தாங்க்ஸ்'' என்றேன். அப்புறம் கனவுகள் கண்டேன். சிவாஜியின் வாக்குப் பலித்ததாகவும் அவருக்கு ஜோடியாகக் கதாநாயகியாக நடிப்பதாகவும் கனவு கண்டிருக்கிறேன்,

சரி, சரி. புரட்டுங்கள் பக்கத்தை. வாடகைக்கு டிரஸ் வாங்கிப்போட்டுக் கொண்டு, பட்டம் பெற்றதும் நேரே ஸ்டுடியோ சென்று படம் எடுத்துக் கொள்கிற இந்தச் சம்பிரதாயத்துக்காகத்தானே பெரும்பாலான பெண்கள் கல்லூரியில் படிக்கிருர்கள்? தாங்கள் பெற்ற கல்வியை வாழ்க்கையில் வேறு எந்த விதமாகப் பயன்படுத்திக் கொள்கிருர்கள்? அது போகட்டும். நாம் அடுத்த பக்கத்தைப் பார்ப்போம்.

அடே! வீணையோடு நான்! நான் பட்டம் பெறுவதற்குள் அப்பாவும் படிப்படியாக உத்தியோகத்தில் உயர்ந்து எனக்கு வீணை வாங்கித் தருமளவுக்கு வசதி பெற்றுவிட்டார். கல்யாணத்துக்குக் காத்திருப்பவள் நேரத்தை வீணடிக்கக் கூடாது என்று வீணை வாங்கிக் கொடுத்து வாத்தியாரையும் ஏற்பாடு செய்தார்.

வாத்தியாரைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. அவர் சிரமப்பட்டுத்தான் சொல்லிக் கொடுத்தார். ஆனுல் எனக்குத்தான் வாசிக்க வரவில்லை. ''சிரத்தை இல்லை'' என்ருர் அவர். சரியான பேச்சு. எனக்கு அதில் ஈடுபாடு இல்லைதான். ஏன் நடிப்பாற்றலை வெளிப்படுத்தவே நான் ஏங்கினேன்.

அடுத்த பக்கத்தைப் புரட்டினுல் என் கல்யாணப் படத்தைக் காணலாம் என்று தானே எண்ணுகிறீர்கள்? அதுதான் இல்லை. உங்களுக்கு ஒரு ஷாக்!

'ஐயோ! இதென்ன கஷ்டம்? இதை எதற்குப் படம் பிடிக்க வேண்டும்? எதற்கு ஆல்பத்தில் ஒட்டவேண்டும்?' என்று யோசிக்கிறீர்களா? சொல்கிறேன்.

திடீரென்று ஒரு நாள் என் அப்பா ஹார்ட் அட்டாக்கில் இறந்ததும் அவர் ஆபீஸைச் சேர்ந்தவர்கள்

பெரும் கூட்டமாக வந்தார்கள். ஆளுக்கொரு ரோஜா மாலை கொண்டு வந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். அப்பா அவ்வளவு பிரபலம். மலையாகக் குவிந்த மாலைகளுக்கிடையில் அப்பாவின் முகம் மட்டும் தெரிகிற இந்தப் படத்தை அவருடைய சக ஊழியர் ஒருவர் எடுத்தார். 'ஆல்பத்தில் ஒட்டி வைத்தால் என்ன தப்பு?' என்று எனக்குத் தோன்றியது. போட்டோ ஆல்பம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்றால் துயரங்களும் வாழ்க்கையின் அம்சந்தானே?

அடுத்த பக்கத்தில்என்ன இருக்கிறது பார்ப்போமா? ஆபீஸில் என்னுடைய முதல் நாள். அப்பா வேலை பார்த்து வந்த கம்பெனியில் அம்மா மீதும் என் மீதும் பச்சாத்தாபப்பட்டு எனக்கு ஒரு 'ரிஸப்ஷனிஸ்ட்-கம்-டைப்பிஸ்ட்' வேலை தந்தார்கள்.

இந்தப் படத்தையும் அதே அப்பாவின் நண்பர்தாம் எடுத்தார். பட்டம் பெற்ற பிறகு வீட்டில் சும்மா இருந்த நாட்களில் டைப்ரைட்டிங் கற்றுக் கொண்டது நல்லதாயிற்று. வீட்டில் அடைந்து கிடக்காமல் ஆபீஸுக்குப் போகிறேன் என்று கிளம்ப முடிந்ததே!

இது என்ன தெரிகிறதா? எங்கள் காரியாலயப் பொழுதுபோக்கு மன்றத்தில் ஒத்திகை நடக்கிறது. மறுபடி என் நடிப்பாற்றலைக் காட்ட ஒரு சந்தர்ப்பம். இந்த நாடகம் அரங்கேறும்போது தலைமை வகிக்கப் புது யுக டைரக்டர் ஜமாலை அழைக்க வேண்டும் என்று நான்தான் யோசனை கூறினேன். எம். டி. க்கு அவ்வளவாக இஷ்டமில்லை. ஆனால் நான் கெஞ்சிக் கூத்தாடி அவரிடம் அநுமதி பெற்றேன். கிளப் காரியதரிசியுடன் நானும் போய் டைரக்டர் ஜமாலைச் சந்தித்து, அவர் மறுப்புக்களை ஏற்காமல் அவருக்கு வசதியாக ஆண்டு விழாத் தேதியைக் கூட மாற்றிக் கொண்டோம்.

சீக்கிரம், அடுத்த பக்கத்தைப் பாருங்கள்! நானேதான் இது. அனார்க்கலி வேஷத்திலே இருக்கிறேன். எப்படி மேக்கப்? எத்தனை பிரமாதமா அன்றைக்கு நடித்தேன், தெரியுமா? 'மறுபடி உனக்கு இந்தப் பொன்னான வாய்ப்புக் கிடைக்காது! உயிரைக் கொடுத்து நடி!' என்று எனக்கு நானே கூறிக்கொண்டு நடித்ததன் விளைவு!

இதோ இந்தப் படத்தில் தெரிகிறது, பாருங்கள்! டைரக்டர் ஜமால் மேடை ஏறி வந்து, ஒரு பெரிய மலர்மாலையை எனக்குச் சூட்டுகிறார். பேசவும் செய்தார். 'நான் ஏதோ ரிக்ரியேஷன் கிளப் நாடகந்தானே என்று அலட்சியமாகத்தான் வந்தேன். ஆனால் இங்கே வந்து இவருடைய நடிப்பைப் பார்த்த பிறகு அவசரமாக என் அஸிஸ்டெண்ட்டைக் காரில் அனுப்பி மாலை வாங்கி வரச் செய்தேன். (கரகோஷம்.) இவர் என்றைக்காவது சினிமாவில் சேரவேண்டும் என்று நினைத்தால் என்னிடம் வரலாம். காமிரா டெஸ்ட் செய்து பார்க்க நான் தயார். (பலத்த கரகோஷம்.) இது உபசார வார்த்தை இல்லை. (நீடித்த கரகோஷம்.)

அடுத்தாற்போல் இருப்பது ஒரு வாரப் பத்திரிகையிலிருந்து கத்தரித்து எடுத்த க்ளிப்பிங்தான். ஆனால் ஃபோட்டோ ஆல்பத்தில் கிளிப்பிங் ஒட்டக் கூடாது என்று சட்டமா என்ன? என் ஃபோட்டோ, அதன் கீழ் ஜமாலின் உறுதிமொழி. அம்மாவிடம் இந்தப் பத்திரிகையைக் காட்டியபோது சுவாரசியம் இல்லாமல் மடித்துப் போட்டாள். அந்த உறுதிமொழி உறுதியானதுதானா என்று நான் சோதிக்கப் போவதாகக் கூறியதும் எரிந்து விழுந்தாள். நான் தீர்மானமாக நிற்க, குடி முழுகிவிட்டது போல் அழுதாள். ஆனால் என் பிடிவாதம் என்னை எங்கே கொண்டு போய் நிறுத்தியது தெரியுமா?

இதோ இங்கேதான்! இந்தப் படத்தில் ஜமால் காமிரா வழியாக ஆங்கிள் பார்ப்பது என்னைத்தான். காமிரா டெஸ்டுக்காகச் சில வசனங்களைக் கொடுத்து அவர் டைரக்ட் செய்ய நான் நடித்தேன். படங்களைப் போட்டுப் பார்த்துவிட்டுப் பிறகு சொல்லி அனுப்புவதாகக் கூறினார்.

''ஸார்! என்னுடைய ஏழாவது வயதில் பள்ளிக்கூட டிராமாவில் நடித்த நாளிலிருந்து எனக்கு ஒரே ஆசை, லட்சியம் எல்லாம் என்றாவது ஒரு நாள் சினிமா நட்சத்திரமாக வேண்டும் என்பதுதான்'' என்று கூறினேன். சிவாஜியிடமிருந்து பெற்ற ஆசிகளைக் குறித்தும் சொன்னேன். படபடவென்று என் கனவுகளைப் பற்றி நிறையப் பேசி அவரைப் போர் அடித்திருக்க வேண்டும். அவர் அலுப்புடன், ''நான் சொல்லிக் கொடுத்ததை நீ நடித்தால் போதும். நீயாக வேறு எதற்குப் பேசி நடிக்கிறாய்?'' என்றார். எனக்கு அவமானமாகப் போய்விட்டது. ''மன்னிச்சுடுங்க ஸார்'' என்று கூறிவிட்டு வீடு திரும்பி இரவெல்லாம் என் அசட்டுத்தனத்தை நினைத்து அழுதேன். எனக்குக் கிடைக்க இருந்த நல் வாய்ப்பை நானே என்னுடைய முட்டாள்தனத்தினால் கெடுத்துக் கொண்டதாகத் துக்கம் நெஞ்சை நிறைத்தது.

என் அதிர்ஷ்டம் எப்படி இருந்தது? தெரிந்து கொள்ள வேண்டாமா நீங்கள்? அடுத்த போட்டோவைப் பார்த்தால் புரிந்து போகிறது. என்னைப் புதுமுகமாகப் போட்டு டைரக்டர் ஜமால் தம் சொந்தப் பொறுப்பில் எடுக்கும் முதல் படத்தின் ஷூட்டிங் நடக்கிறது, பாருங்கள்!

அடுத்ததாக, இந்தப் படத்தில் டீ பார்ட்டி தெற்குத் தெரிகிறதா? படம் ரிலீஸ் ஆனபோது பத்திரிகைகளுக்கு ஜமால் என்னை அறிமுகப்படுத்துகிறார். இதோ என் பக்கத்தில் இருப்பது என் தாயார்

தான். அன்று அழுது அடம் பிடித்த அவள்தான் இன்று புன்னகையும் பெருமையுமாக அமர்ந்திருக்கிருள்.

படத்தின் நூருவது நாள் கொண் டாட்டம். திரை உலகப் பெரும் புள்ளிகள் பேசினுர்கள். ஜமாலுக்கும் எனக்கும் புகழ் மாலைகள், மலர் மாலைகள்.

அப்புறம் இதோ ஒரு கிசுகிசு! என் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய அதையும் ஆல்பத்தில் ஒட்டியிருக்கிறேன். படித்துப் பாருங் களேன். 'விஷ்ணுவைத் தம் பெயரி லேயே கொண்ட ஒரு முஸ்லீம் டைரக்டர், தாம் திரை உலகுக்கு அறிமுகப்படுத்திய ஒரு புது முகத்தை இல்லற வாழ்க்கைக்கும் அறிமுகப் படுத்தப் போகிருரா?'— என்ன சிரிக்கிறீர்கள்? நானுந்தான் சிரித் தேன். ''பாருங்கள் ஸார், இந்தக் கிசு கிசு நம்மைப் பற்றி என்ன சொல்கிறது? படித்துப் பாருங் கள்'' என்று அதை ஜமாலிடமும் காட்டினேன்.

''அது என்ன சொல்கிறது என்று தெரிகிறது. நீ என்ன சொல்கிருய்? அதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்ருர். அவர்.

''என்ன ஸார் இது? என்ன, நீங் கள் நான்...'' தடுமாறினேன்.

''உன்னை [illegible] மேண்டயில் டார்த்த [illegible] உன்னை மனைவி யாக அ[illegible] எனக்கு ஆசைதான். ஆனுல் கூடவே நமது மதங்கள், பழக்க வழக்கங்கள் மாறுபட்டவை என்பதை உணர்ந்திருந்தேன். உன்னைப் பெற்றவள் என்ன சொல் வாளோ என்ற தயக்கம் வேறு. நான் ஏற்கனவே மணமானவன். எல்லாவற்றையும் யோசித்துப் பார். நான் உன்னை வற்புறுத்த வில்லை. உனக்கு விருப்பமில்லையென் ருல் வேண்டாம்'' என்ருர்.

DR. U. V. SWA... THIRUVANMIYUR

நான் யோசித்தேன். என்ன முடி வெடுத்தேன்? அதை அடுத்த பக் கத்தில் காணலாமே!

சரியாக ஊகித்தீர்கள்! திருமண ரிஸெப்ஷன் ஃபோட்டோதான். எனக்கும் ஜமாலுக்கும் கல் யாணம். புரட்சிகரமான இந்தத் திரையுலகத் திருமணத்துக்கு ஏகப் பட்ட பாராட்டுக்கள். என் தாயார் எப்படிச் சம்மதித்தாள் என்கி றீர்களா? அது ஒரு வேடிக்கை தான். ஒரு மறுப்பும் கூறவில்லை. 'வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டது. இனி, சாணு முழமா என்று அளப்பானேன்?' என்று எண்ணினுளோ, அல்லது சினிமாவில் சேர்ந்துவிட்ட இவளைத் திரை உலகத் தொடர்புடையவர் தவிர வேறு யார் மணப்பார்கள் என்று நினைத் தாளோ, அல்லது நான் பெரும் புகழும் பணமும் குவித்ததில் மகிழ்ச் சியும் பெருமையும் அடைந்து அதற்குக் காரணமான ஜமாலிடம் நன்றி உணர்வால் சம்மதமளித் தாளோ தெரியாது. ''உனக்குச் சந்தோஷம்னு எனக்குந்தான்'' என்று மட்டுமே சொன்னுள், சரி, என் நிலை என்ன? ஜமாலிடம் நன்றி உணர்வு, அவர் விருப்பத்துக்குச் சம் மதித்தால் எதிர்காலத்தில் இன்னும் திரை உலகில் உயரலாம் என்ற எதிர்பார்ப்பு, காதல்—இவற்றில் எது அதிகம் எது குறைவு என்று எனக்குத் தெரியவில்லை. எல்லாமே சம அளவில் இருந்தனவோ?



அடுத்த புகைப்படத்தைப் பாருங்கள். டைரக்டர் சிவராஜுடன் இவர். காச்மீருக்கு நாங்கள் தேனிலவு போயிருந்தபோது சிவராஜும் அங்கே படமெடுக்க வந்திருந்தார். அப்போது எங்களை அவர் யதேச்சையாகச் சந்தித்தார். சிவராஜ் ஒரே சந்தோஷத்துடன் இவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நிற்க, ஸ்டில் ஃபோட்டோகிராபர் கிளிக் செய்து விட்டார்.

சிவராஜ் எங்களைத் தாம் தங்கியிருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு டின்னருக்கு அழைக்க, நாங்கள் சென்றோம். அப்போது காச்மீர நாளிதழ் ஒன்றின் புகைப் படக்காரர் எடுத்த படம் அடுத்தது. சாப்பாட்டுக்கு இடையில் சிவராஜ் என்னைப் பார்த்து, ''நான் கோடி ரூபாய் செலவு செய்து ஒரு படம் எடுக்கப் போகிறேன். அதில் நீ நடிக்கிறாயா?'' என்று கேட்டார். எனக்கு உடலெல்லாம் சிலிர்த்தது. ''காத்துக் கிட்டிருக்கேன் ஸார்!'' என்று அந்தக் கணமே வாக்குக் கொடுத்தேன்.

இரவு எங்கள் ஹோட்டல் அறைக்குத் திரும்பிய பிறகுதான் நான் பெரிய தவறு செய்து விட்டதாக இவர் கருதுவது எனக்குப் புரிந்தது. என்னுடன் இவர் பேசாமலே மௌனமாய் இருந்தார். நானாகப் பேச்சுக் கொடுத்தால் சள்ளென்று எரிந்து விழுந்தார்.

இவரைத் திருமணம் செய்து கொண்ட பின் வேறு ஒருவர் டைரக்ஷனில் நான் நடிப்பது இவருக்குப் பிடிக்கவில்லையாம். பார்க்கப் போனால் தம் படத்திலேயே என்னை இனி நடிக்க வைக்க வேண்டாம் என்றே இவர் நினைத்து வந்தாராம்: குடும்பம்—கணவன்—குழந்தைகள் இதில் நான் காணும் மகிழ்ச்சி தான் இனி என் எதிர்காலமாம்!

எனக்குப் பலமான அதிர்ச்சியாக இருந்தது. இதை ஆண்மகனின் ஆணவம் என்பதா? அல்லது இவரை விடவும் நான் அதிகமாகப் புகழும் பணமும் சம்பாதித்து விடுவேன் என்ற அச்சமா? அதனால் ஏற்படும் தாழ்வுணர்ச்சியா? எது என்றே எனக்குப் புரியவில்லை.

அப்போதைக்கு விட்டுவிட்டேன். ஆனால் சென்னை திரும்பிய பிறகு மறுபடியும் மெல்லப் பேச்சை ஆரம்பித்தேன். இவர் மனைவியாக நான் இருக்கத் தயார். அதற்குரிய கடமைகளை நிறைவேற்றவும் தயார். ஆனால் எனக்கென்று ஒரு வாழ்க்கை இருக்கக்கூடாதென்று இவர் எப்படித் தடுக்கலாம்? வாதாடினேன்.

இவர் வீம்புடன் இருந்தார்; என்னைக் கல்யாணம் செய்து கொண்டதிலிருந்து இவர் முதல் மனைவி ஒரே கோபமாக இருந்தாராம். இங்கே வந்தால் என்னுடைய நச்சரிப்பாம். அவருக்கு நிம்மதியே இல்லாமல் போய்விட்டதாம். எதற்காக என்னைக் கல்யாணம் செய்து கொண்டோம் என்றிருக்கிறதாம்! குற்றம் சாட்டினார்.

மனம் குமுறினேன். நாளுக்கு நாள் இவருடைய கெடுபிடி அதிகரித்தது. இவரது மதப்பற்றுகளுக்கு ஏற்ப நான் வாழ வேண்டியதாயிற்று. இவருடைய உணவுப் பழக்கங்களுக்கு நான் என்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார். இதெல்லாம் பரவாயில்லை. எப்படியோ அனுசரித்துப் போகலாம் என்றால் எந்த ஒரு லட்சியதுக்காக இரவு பகலாகக் கனவு கண்டு கொண்டிருந்தேனோ அந்த லட்சியச் சிகரத்தை அடைந்த வேகத்திலேயே அதிலிருந்து சறுக்கியும் விழவேண்டுமென்றால் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என் மனம் சிதறிப் போயிற்று.

அந்த ஒவ்வொரு சிதறலிலும் என்னையே பல்வேறாகக் கண்டேன். நான் சிவகாமி, நான் அனார்க்கலி, ஒரு கோடி பட்ஜெட் படத்தில் நான். ஷோபா எப்படிச் சோகமாய்ச் சிரிப்பாள்! ஹி ஹி ஹி! பானுமதியின் நடிப்பைப் பின்பற்றலாம், வெற்றிப் படத்தில் நான், 'லட்டு லட்டு மிட்டாய் வேணுமா?' ஹ் ஹ் ஹா.

சற்று இருங்கள். அதற்குள் அலுத்துக் கொண்டு ஆல்பத்தை மூடி விடாதீர்கள்! அடுத்த படத்தைப் பாருங்கள்.

பிறந்த நாள் கேக்கில் மெழுகு வர்த்தியை ஊதும் நான். என் அருகில் இருப்பது புகழ் பெற்ற மனோதத்துவ நிபுணர் பிரமீளா பங்கஜ்ராய். எனக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்துக் குணப்படுத்தியவர் இந்த ஸைக்கியாட்ரிஸ்ட்தான்.

நான் நர்ஸிங் ஹோமிலிருந்து வெளியேவந்த தினம் என் பிறந்த நாள். என் கணவர் எனக்காகக் கேக் தயாராக வைத்திருந்தார். என்னைக் குணப்படுத்திய பிரமீளா பங்கஜ்ராயையும் விருந்துக்கு அழைத்திருந்தார். எல்லாரும் தயங்கித் தயங்கி, பயந்து பயந்து இந்தப் பைத்தியத்தினிடம், அதாவது என்னிடம் பேசினார்கள்.

விருந்து முடிந்து போன பிறகு நான் இவரை ஏறிட்டு நோக்கினேன். இவர் தம் பார்வையைத் திருப்பிக் கொண்டார். 'ஏன்தான் இந்தப் பைத்தியத்தைக் கட்டிக் கொண்டோமோ? வாழ்நாள் முழுவதும் இவளுடன் எப்படிக் காலத்தை ஓட்டுவது?' என்ற எண்ணத்தை இவர் முகத்தில் நான் படித்தேன்.

ஏதோ பேசவேண்டுமே என்பதற்காக இவர் கூறினார்; ''உனக்காக நான் சிவராஜிடம் என் கௌரவத்தை விட்டுக்கூடக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவன் என் முகத்தில் அடிப்பதுபோல் பேசி விட்டான். அன்றைப் பேச்சு அன்றோடே போயிற்று என்று சொல்லிவிட்டான்'' என்றார்.

நான் இதனால் சலனம் அடையவில்லை. சிவராஜ் எனக்கு எப்படிச் சந்தர்ப்பம் தருவார்? இவரே தம் படத்தில் எனக்கு எப்படிச் சான்ஸ் கொடுப்பார்? என் கிளாமர் தான் போய்விட்டதே! இந்தப் பைத்தியத்தை இனி யார் நடிக்க அழைப்பார்கள்? நடித்தாலும் யார் பார்ப்பார்கள்? 'தமிழ்த் திரை உலகுக்குக் கதாநாயகியாக நடிக்கப் பைத்தியங்களைத் தவிர வேறு யாரும் அகப்படவில்லையா, என்ன?' என்று கிசு கிசு எழுதுவார்கள். 'பைத்தியம் நடிக்கும் பைத்தியக்காரத்தனமான படத்தைப் பார்த்து நமக்குப் பைத்தியம் பிடிக்காமலிருந்தால் சரி' என்று விமர்சனம் தீட்டுவார்கள்.

சுயநலக்காரர்களை விட்டுவிட்டு எங்கேயாவது ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது.

எங்கே ஓடுவது? எப்படி? எங்கே? விடை கண்டேன்; நீங்களும் காணலாம், அடுத்த பக்கத்தைப் புரட்டினால். ஆமாம், மறுபடியும் ஒரு பத்திரிகைக் கிளிப்பிங்தான். நாளிதழ்களுக்கு விநியோகிக்கப்பட்ட போலீஸ் படந்தான். நல்ல வேளை தூக்கிலே தொங்குகிற மாதிரியே படம் பிடித்துத் தராமல் கீழே இறக்கி, படுக்க வைத்து, மாராப்பு விலகிய நிலையில் படமெடுத்துத் தந்திருக்கிறார்கள். அதிலும் கிளாமர்! பத்திரிகைகள் விற்க வேண்டுமே!

இந்தக் க்ளிப்பிங்கை இங்கே ஒட்டியது... பயப்படாதீர்கள், நிச்சயமாக நானோ அல்லது என் ஆவியோ அல்ல.

இவர்தாம், என் கணவர் தாம், கரிசனத்துடன் இந்தக் கடைசி அத்தியாயத்தையும் ஆல்பத்தில் சேர்த்திருக்கிறார்.

இவர் மகராஜனாய் வாழட்டும்! ❋

தீபாவளி வாழ்த்துக்கள்

MAFATLAL INDUSTRIES
மபத்லால்
இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

தி மபத்லால் ஃபைன்
ஸ்பின். அண்ட் மேன்யு. க. லி.
MAFATLAL FINE

CW/T-1

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பயர்ப்ளை
ஜிக்வாலை வெட்டும் இயந்திரம்

சிறப்பு அம்சங்கள் :

உறுதியான, கடினமான அமைப்பு கொண்டது.
விரைவாகவும், எளிமையாகவும் இயந்திரத்தை 'லெவல்' செய்ய, செங்குத் தான பகுதியும், கீழ் இணைப்பு கரமும் மாற்றத்தக்க 'ஸ்குரு' விசைல் பொறுத்தப் பட்டுள்ளது.

வெட்டும் பகுதியை சரியாக கணக் கிடவும், தேவையானால் வெட்டும் பகுதி யில் சரி செய்யவும், சட்டத்தில் இருந்து தொங்க விடப்பட்டுள்ள "டெம்பிளேட் ஹோல்டரி"ல் 'ஸ்குருராடு' அமைப்பு உள்ளது.

வெட்ட வேண்டிய பகுதியின் மீது விரைவாக செயல்பட இணைப்பு கரம் உதவி செய்கிறது.

வெட்டும் வேகத்தை கணக்கிட "ஸ்பீடோ மீட்டர்" பொறுத்தப் பட்டுள் ளது.

உலோக துகள்களை கவர மிக உயர்ந்த காந்த சக்தி கொண்டது, 1.5 மி.மி. கனம் உள்ள "டெம் பிளேட்"டுகளை பயன் படுத்தலாம்.

இயந்திரத்தின் எல்லா பாகங்களும் இங்கேயே தயாரிக்கப் படுவதால், உபரி பாகங்களும், மாற்று பாகங்களும் எளிதில் கிடைக்கிறது.

தொழில் நுட்ப விவரம் :

வேலை விவரம்	மி.மீட்டர்	அங்குலம்
வெட்டும் பகுதியின் கனம்	3 to 150	1/8 to 6
மிகப் பெரிய முழு வட்டம்	915	36
உயர்ந்த அளவு சதுர வடிவம்	925×825	37 1/2×32 1/2
உயர்ந்த அளவு நேர் வெட்டு	1830	72



FDS/BI/8073

தொடர்பு கொள்ள :
பாலாஜி இண்டஸ்டிரீஸ்
113, கோரமங்களா தொழில் பேட்டை
பெங்களூர்-560034
போன் : 41963 டெலக்ஸ் BG 0845-458

எங்கள் ஆதரவாளர்களுக்கு எல்லாம்
தீபாவளி வாழ்த்துக்கள்

இதோ ஒரு எல்விடி க்ளுகோஸ் பிஸ்கெட் விரும்பி!

முழுமையான ஊட்டம் நிறைந்த மால்ட்டும் சக்தி தரும் குளுகோஸும் சேர்ந்தவை எல்விடி க்ளுக்கோஸ் பிஸ்கெட்டுகள்.

செலவிட்ட சக்தியை மீண்டும் பெற உங்களுக்கு ஏற்றதொரு தின்பண்டம். ருசியும் மிக அதிகம். இன்றே கொஞ்சம் வாங்கி சுவைத்துப் பாருங்கள்.

இதன் ருசி ஒப்பிட முடியாதது என்று இவள் கூறுகிறாள். நீங்கள் எப்படி?

FDS LVT 8069

எல்விடி ப்ராடக்ட்ஸ்
தபால் பெட்டி எண். 26.
ஹூப்ளி 580 021.

“இன்னிக்கு உன் தில்லானு ரொம்பப் பிரமாதம். இப்படி யாரும் ஆடி நான் பார்த்ததே இல்லே, நித்யா. நிகழ்ச்சி முடிஞ்சப்புறம் பாராட்டலாம்னுதான் பார்த்தேன்; நடுவிலே வந்து பாராட்டி உன் 'மூடை'க்கலேக்க வேண்டாம்னு பொறுத்துப் பார்த்தேன். என் உற்சாகப் பெருக்கைக் கட்டுப்படுத்திக்க முடியல்லே. கிரீன் ரூமுக்குள்ளேயே ஓடி வந்துட்டேன்.''

''அப்படியா? ரொம்பச் சந்தோஷங்க; உங்க மாதிரியானவங்க பாராட்ட நான் குடுத்து வச்சிருக்கணும்.''

அடுத்த நிகழ்ச்சி குறத்தி நடனம். அதற்கு உடை மாற்றிக் கொள்ளக் கிரீன் ரூமுக்குள் சென்றிருந்த நித்யா, கல்யாண கிருஷ்ண பாகவதரின் பாராட்டைக் கேட்டு அப்படியே சிலேயாக நின்று விட்டாள். சங்கீத உலகில் ஜாம்பவானுகப் புகழுடன் விளங்கும் பாகவதர், ஓர் இளேஞனைப் போல் அப்படி ஓடிவந்து பாராட்டியது அவளுக்குப் பெருமையாக இருந்தது. மேடையிலேயே இரண்டு மூன்று தடவை கைதட்டல் கிடைத்த பூரிப்பில் இருந்த அவளுக்கு, பாகவதரின் பாராட்டுத் தேனுக இனித்து மனத்தை நிரப்பியது. சூழநின்ற மற்றவர்களையும் தன் கணவரையுமே ஒரு கணம் மறந்தாள் அவள். வித்வத்களேயுடன் எழிலும் இளமையும் மேனித் தளதளப்புமாய் நின்ற பாகவதரைக் கண்ணுரக் கண்டாள்.

''அபாரம் நித்யா, இன்னிக்கு! தில்லானுவிலே இன்னிக்கு ஆடியன்ஸை அப்படியே கிறங்க வைச்சுட்டே.'' மீண்டும் கூறினுர் பாகவதர். அவரிடம் பெருகிய உற்சாகத்தையும் துடிப்பையும் அவர் பேச்சில் காண முடிந்தது.

''போதும் பாராட்டு! அப்படியே மயங்கி நின்னுடாதே! இன்னும் ரெண்டு அயிட்டங்கள் இருக்கிறதை மறந்துட வேண்டாம்.''

கண்டிப்பும் கரகரப்பும் நிறைந்த குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தாள் நித்யா: கையில் மேக்-அப் பெட்டியுடன் நின்றிருந்த குமாரைப் பார்த்தாள்.

''இதோ வந்துட்டேன் குமார். நான் எதையும் மறக்கல்லே. எவ்வளவு பெரிய மேதை வந்து பாராட்டறுர்! அந்தப் பாக்கியத்தை எண்ணி ஒரு கணம் 'மெய்ம்மறந்து நின்னுட்டேன்'' என்று குமாரைப் பார்த்துக் கூறியவள், ''உங்கள் பாராட்டு எனக்கு ஆசி போல. ரொம்பச் சந்தோஷங்க'' என்று கூறிக் கையெடுத்துக் கும்பிட்டாள் நித்யா. பாகவதர் என்ன நினேத்தாரோ, கூப்ப உயர்ந்த கையை அப்படியே இரு கரங்களாலும் பிடித்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். வித்வத் கர்வம் ஒளிரும் அவர் கண்களே நிமிர்ந்து பார்த்தாள் நித்யா. அவை கலங்கியிருப்பதைக் கண்டு, குனிந்த தலேயுடன், உடை மாற்றக் கண்ணுடியின்முன் போய் அமர்ந்தாள்.

குமார் மிகுந்த கடுகடுப்புடனும் பதற்றத்துடனும் அவளுக்குத் தேவையான ஒப்பனேப் பொருள்களே எடுத்து வைப்பதை உணர்ந்தும், நித்யா தன் உணர்ச்சிகளே வெளிக் காட்டிக்கொள்ளவில்லே. கல்யாண கிருஷ்ண பாகவதர் யானேயின் கம்பீரத்துடன் 'கிரீன் ரூமை' விட்டு வெளியேறினுர்.

மூன்று மணி நேர நிகழ்ச்சியில் கடைசி ஒருமணி நேரம் அவள் ஆட்டத்தில் விறுவிறுப்போ, நளினமோ, ரசிகர்கள் எதிர்பார்த்த கவர்ச்சியோ இல்லே. நிகழ்ச்சியை முடிக்க வேண்டும் என்ற அலுப்பே தெரிந்தது: இதைக் கவனித்த குமார், மறுமுறை உள்ளே வந்து நித்யாவைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டான். ''இதுமாதிரி ஆடினுல் உன் நடன வாழ்வே விரைவில் அஸ்தமித்து விடும். மனசில் எதையாவது வச்சுண்டு கடனே என்று ஆடுவது தான் நடனராணியின் லட்சணமா? உலகப் புகழ் பெறும் அளவுக்கு உன்னே உயர்த்த எத்தனே பாடுபடறேன்! உன் இளமையும் எழிலும் பாழ்படக் கூடாது என்று உன்னேப் பூப்போலக் காத்து வருகிறேன். என் இளமை உணர்ச்சிகளே எல்லாம் கட்டுப்படுத்தி ஒவ்வொரு கணமும் தேஞ்சு வர்றேன். நீ என்னடான்னு அந்தக் கிழவனின் பசப்பில் மயங்கித் திணறுகிறுய்!''

பாம்பாட்டி நடனத்துக்கு ஒப்பனே செய்து கொண்டு மேடைக்குப் புறப்பட்ட நித்யா, குமாரை வெறித்துப் பார்த்தாள். ''குமார், எத்தனேயோ தடவை உங்களுக்குச் சொல்லிட்டேன். நீங்கள் என் கணவர்தாம். இருந்தாலும் என் கலேயுணர்வை, கலேயுள்ளத்தின் நளினத்தை உணரத் தெரியாதவங்க நீங்க. என்னேப் புகழேணியின் உச்சியில் கொண்டு போய், அந்தப் புகழின் சுகத்தில் மெய்ம்மறந்திருக்க வேணும்னு நினேக்கிறீங்க, பணமாகக் காய்ச்சக் குலுங்கும் மரமாக்க என்னேப் பார்க்கிறீங்க. பொண்கள் மனசே நளினமானது என்பார்கள்; அதுவும் என்னேப் போன்ற கலேஞர்களோட மனசு மலரைவிட லளிதமானது. இதைக் கசக்கக்கூட வேண்டாம். வெப்பக் காற்று இதன்மேல் பட்டாலே போதும். உருத் தெரியாமே சுருண்டு கருகிடும். பாகவதரைப் போன்ற சங்கீத மேதைகள் பாராட்டுவது என்பது லேசான காரியமா? முகஸ்துதிக்காக என்னேப் பாராட்டி அவருக்கு என்ன லாபம்? ஒரு சிறந்த கலேயின் நுட்பமான உயர்வை ஒரு கலேயுள்ளத்தினுல்தான் உணர்ந்து பாராட்ட முடியும்: அதனுல்தான் கலேஞர்களே ஒரு ஜாதின்னு சொல்றுங்க. என் காதுபட இன்னெரு தரம் அந்த நாதோபாசகரைக் கெழவன்னு சொல்லாதீங்க. என்னுல் தாங்க முடியாது.''

கண்களில் நீர் தளும்ப நித்யா மேடையில் பிரவேசித்தாள். உள்ளத்தில் கனம் இருக்கும்போது ஆட்டத்தில் விறுவிறுப்பும் நளினமும் எங்கிருந்து வரும்? பாம்பின் நெளிவுகளேப் போல் அப்படியே உடலே வளேத்து வளேத்து ஆடும் நித்யா, பம்பரமாகச் சுழன்றுலும் மரபபதுமையாகவே அன்று ஆடினுள். மரப் பதுமையில் நளினத்தைக் காண முடியுமா?

''ஆன வயசுக்குக் குறைச்சல் இல்லே. தலேக்குசந்த பொண் கல்யாணத்துக்கு நிக்கறு. அது கண்ணிலே படலே. டான்சுக்காரிதான் கண்ணிலே படறு. போய்ப் பாராட்டிட்டு வந்தாச்சு'' என்று படபடத்தபடி வரவேற்ருள், கல்யாண கிருஷ்ண பாகவதரின் மனேவி கல்யாணி.

''நன்னுப் பாடினு என்னேயுந்தான் பத்துப் பேர் பாராட்டனு;

சால்வையாப் போத்தரு. பணமாக் கொட்டரு. வீட்டிலே உனக்கு என்ன குறைச்சல் வெச்சிருக்கேன்? ராஜா வீட்டு ராணி மாதிரி நீ இருக்கே. டி. வி. இல்லையா, ஃப்ரிட்ஜ் இல்லையா, ரிக்கார்டு பிளேயர் இல்லையா, பாங்க் பாலன்ஸ் இல்லையா?''

''எல்லாந்தான் இருக்கு. ஆனா முக்கியமா இருக்க வேண்டியதுதான் இல்லே'' என்று இடைமறித்துக் கூறினாள் கல்யாணி.

''என்னடி அது?''

''அதான் வயசுக்கேத்த மூளை, இருக்கிற புகழுக்கேத்த நடத்தை, கண்ணியம்!''

''போடி, மண்டு! ஒரு கலைஞனின் உள்ளத்தைப் புரிஞ்சுகொள்ளத் தெரியாத மண்டு!''

''ஏன் சொல்ல மாட்டீங்க, மண்டு மண்டுன்னு ஆயிரந் தடவை? மண்டுவா இருக்கவே தான் உங்க லீலைகளையெல்லாம் அறிஞ்சும் வெட்டியெறியத் தெரியாம முழிக்கறேன். இந்த ரெண்டு குழந்தைகள் இல்லாம இருந்தா, என்னிக்கோ உங்களுக்கு ஒரு முழுக்குப் போட்டுட்டுச் சிவா ராமான்'னு எங்கேயாவது போயிருப்பேன்.''

தம் ஓர் அங்குல ஜரிகை அங்கவஸ்திரத்தையும் ஸில்க் ஜிப்பாவையும் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிய பாகவதர், ''போரும் பழைய ராமாயணம்! ஆண்டவா! எனக்கு ஏண்டா இப்படி ஒரு ஜடத்தைக் குடுத்தே? கலையை ரசிக்கத் தெரியாத ஒரு ஜடமா இருக்காளே!'' என்று முனகியபடி ஊஞ்சலில் உட்கார்ந்தவாறு, ''அம்மா பானு, கொஞ்சம் வெந்நீர் கொண்டாம்மா'' என்றார்.

''முப்பத்திரண்டு பல்லைக் காட்டி இளிச்சும் அந்த டான்சுக்காரி வெந்நீர் தரல்லே போலிருக்கு! கொண்டு போய்க் குடுடி, அம்மா!'' என்று நிஷ்டுரமாய்க் கூறியபடி உள்ளே போய் விட்டாள் கல்யாணி.

''உன் அசட்டுத்தனத்தை எல்லாம் குழந்தை எதிரிலே காட்டிக்காதே, பைத்தியம்!'' என்று கூறித் தலையில் அடித்துக் கொண்டார்.

''ஊரே சிரிக்கிறதாம்! இதிலே என்ன மூடு மந்திரம் கெடக்கு? பெத்த பொண்ணுக்குக் கல்யாணம் நல்ல இடத்திலே முடியணுங்கற புத்தி இருந்தா, அந்த டான்சுக்காரி சிநேகிதத்துக்கு இன்னியோட முழுக்குப் போடுங்க!''

''கர்மம். கர்மம்! இந்தச் சூழ்நிலையிலே எப்படிக் கலை வளரும்? கலையுள்ளம் எப்படிக் கற்பனையிலே மிதக்கும்? இனம் இனத்தோடுங்கறதுபோல உண்மையான ரசிக உள்ளத்தைத் தேடிப் போய்த் தஞ்சம் அடையறதிலே என்ன தப்பு? கலை வளரும் பண்ணையில் காதலும், குரோதமும், போட்டியும், பொறாமையும் இருக்க முடியுமோ? அன்பும் பாராட்டும் மகிழ்ச்சியும் அல்லவா ரசிக உள்ளங்களின் விளைச்சல் நெலம்? அந்த விளைச்சல் நெலத்திலே களையாகச் சில பயிர் முளைக்கலாம். அதைக் களைஞ்செறிவதுதானே முறை? ஒரு சில களைகள் முளைக்கறதுக்காக, விளைச்சல் நெலத்தையே பாழ் போட்டு விடலாமா? பிரபோ, ராமா! ஏண்டா, இப்படி ஒரு வாழ்க்கையை எனக்குக் குடுத்தே?''

கல்யாண கிருஷ்ண பாகவதர் தம்முள் முணுமுணுத்தபடி ரெக்ஸின் தலையணையை வைத்துக்கொண்டு அப்படியே ஊஞ்சலில் படுத்தார்.

நித்யாவுக்கு முப்பது வயது இருக்கும். நடனக் கலையில் விரைவில் தேர்ச்சி பெற்று, பேரும் புகழும் பெற்று விட்டாள். அவளுடைய நடனத்தில் மோகம் கொண்டிருந்த குமார், தன் பெற்றோரின் எதிர்ப்பைச் சட்டை செய்யாமல் நித்யாவின் கரம் பற்றினான். நித்யாவின் நிகழ்ச்சி ஒன்றையும் விடாமல் பார்த்துப் பாராட்டத் தொடங்கினான். சில ஆண்டுகளில் அவள் மனத்திலும் இடம் பெற்றான். குமாரின் ரசிக உள்ளம் அவளைப் பிரமிக்க வைத்தது. ரசிக உள்ளம் இருந்தால்தான் கலை வளரும். பாராட்டும் ரசிகத் தன்மையும் கலைக்கு உரமாக அமைந்து செழித்து வளர உதவும் என்று எண்ணினாள் நித்யா.

குமார் நித்யாவை மணந்ததும், அவன் எதிர்பாராமலே அவனுக்கு நல்ல வேலையும் கிடைத்தது. அலுவலகத்தில் வாங்கும் சம்பளத்துக்கு உண்மையாய் உழைப்பதைவிட, நித்யாவின் புகழ் பரவ, நல்ல விளம்பரம் ஏற்பட வாய்ப்புக்களைத் தேடுவதே பெருத்த வேலையாகி விட்டது. பத்திரிகைக் காரியாலயங்களைத் தேடிப் போய், காபி, டிபன் வாங்கிக் கொடுத்து நித்யாவின் புகைப் படங்களைப் பிரசுரிக்கச் செய்வது, சபாக் காரியதரிசிகளைப் பார்த்துப் பேசிப் பல்லிளித்து நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வது, வெளிநாட்டுப் பிரமுகர்கள் யாராவது வந்தால் அவர் முன்னால் நித்யாவின் நிகழ்ச்சி நடக்கத் தலைகீழாய் நின்றாவது, ஆயிரக் கணக்கில் பணத்தைக் கொடுத்தாவது ஏற்பாடு செய்வது - இவையே குமாரின் அன்றாட வழக்கமாகிவிட்டன.

நித்யாவின் இளமையையும், எழிலையும், நடனத் தேர்ச்சியையும் அறிந்து யாராவது நிகழ்ச்சி பேச வந்தால், குமார்தான் பணம் பேசி முடிவு செய்வான். லைட், மேக்-அப், மற்றக் கலைஞர்கள் போக்குவரத்து என்று பேசிப் பேசி, வந்தவரை அலுக்கச் செய்து, ரேட்டை உயர்த்திக்கொண்டே போவான். அவன் கூறும் ரேட்டுக்கு அந்தஸ்தைக் கருதிச் சிலர் ஒப்புக் கொள்வார்கள். 'பிறகு வருகிறேன்' என்று சிலர் போய் விடுவதும் உண்டு.

'நிகழ்ச்சியைப் பேசி முடிப்பது கணவனின் வேலை' என்று முதலிலெல்லாம் இருந்த நித்யாவுக்கு, பணம், பணம் என்று பறந்து, ரேட்டை உயர்த்திக் கொண்டு போகும் குமாரின் போக்குப் பிடிக்கவில்லை.

''பணந் தானா முக்கியம்? பத்துப் பேர் பாத்துப் பாராட்டுவதுதானே முக்கியம்? கலைநுட்பம் தெரிஞ்ச நல்ல ரசிகாள் பத்துப் பேர் பாராட்டறதுக்குச் சமானமாகுமா பணம்? டான்ஸ் ஸ்கூல் வேற நடத்தறோம். அதுலேயும் ஏகமாப் பணம் வர்றது. பணத்துக்காக உடம்பே வளையாத பணக்காரப் பொண்களுடன் மாரடிக்கறது எனக்குப் புடிக்கலே. ஆசையும் இயற்கையா உடல் வாகும் அமைஞ்ச பத்து ஏழைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் குடுத்தாலும் மனசுக்குத் திருப்தியா இருக்கும். டான்ஸ் ஸ்கூல்லே மாசம் மூவாயிரம் ரூபாய் வர்றது தான் உங்களுக்குத் தெரியறது. குச்சி தட்டித் தட்டி என் தோள் பட்டை இத்துப் போறது தெரியலே. வர்ற நிகழ்ச்சிகளைப் பணத்துக்காகத் தள்ளாதீங்க. குடுக்கிற பணம் போரும்; கலையைப் பத்துப் பேர் பார்த்து ரசிக்கட்டும்.''

இப்படி அடிக்கடி குமாரிடம் கூறி நித்யா வற்புறுத்தத் தொடங்கினாள்:

''ரேட்டைக் குறைச்சா உன் மதிப்புப் போயிடும். ரேட் உயர உயரத்தான் மதிப்பும் உயரும். யூனெஸ்கோவிலே போய் ஆடலாம். உலகமே உன்னைப் பாராட்டும்; அமெரிக்க டாலரும் ரஷ்ய ரூபிள்களும் ஆங்கில ஸ்டெர்லிங்கும் உன் காலடியில வந்து குவியும். உன்னை எவரெஸ்டுக்கு ஏத்தறது என் பொறுப்பு. பேசாம இரு'' என்று அடக்கிவிடுவான் குமார். குமாரின் பணவெறியும் நித்யாவின் ரசிக உள்ளங்களின் பாராட்டு மோகமும் ஒன்றுக்கு ஒன்று முரணாகச் செயற்படத் தொடங்கின.

பெரிய செல்வர் ஒருவருடைய பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்து வந்தார் கல்யாணகிருஷ்ணன் பாகவதர். சிஷ்யர்கள் என்று அவர் யாரையும் அதிகமாக வைத்துக் கொள்ளவில்லை. இயற்கையாகவே சாரீர சம்பத்தும் சங்கீத வேட்கையும் கொண்டிருந்த சிலருக்குத்தான் அவர் சிட்சை சொல்லிக்கொடுத்தார். 'கலை வளரக் கலையுள்ளம் வேண்டும்; கலையை ரசித்துப் பாராட்டக் கலைஞானம் அவசியம். கலைஞன் வளர, கலையுள்ளமும் ரசிக உள்ளமும் கொண்ட சூழ்நிலை இன்றியமையாதது' என்ற லட்சிய நோக்குக் கொண்ட பாகவதர், தம் லட்சியத்துக்கு ஒவ்வாத சிஷ்யர்களைச் சில மாதங்களிலேயே விலக்கிவிடுவார்; அல்லது டியூஷன் வருமானத்திலேயே உயிர்வாழும் சில அப்பாவி சங்கீத வித்வான்களிடம் தள்ளி விடுவார், ''ஸரிகமபதநி என்று மார் அடிடா, அது உன் தலையெழுத்து'' என்று.

பல சங்கீத சபாக்களின் போஷகராகவும் செல்வாக்கும் செல்வமும் மிகுந்தவராகவும் விளங்கிய தனிகரின் வேண்டுதலைத் தட்ட முடியாமல் அவர் பெண்ணைச் சிஷ்யையாக ஏற்றுக் கொண்டார் பாகவதர். மாதம் முந்நூறு ரூபாய்க்கு மேல் வருமானம் வந்தது. மூன்று மாதமாகியும் சரளியிலும் ஜண்டையிலும் தடுமாறி விழுந்து கொண்டிருந்த அந்தப் பெண்ணுக்கு நடனந்தான் நன்றாக வரும் என்று அவள் தகப்பனாரிடம் கூறி, நடன உலகில் தனி நட்சத்திரமாய் விளங்கிய நித்யாவின் தலையில் அந்தச் சுமையைக் கட்டி விட்டார். பெரிய மனிதன் பெண்ணுக்குப்

புகழ் பெற்ற நர்த்தகி தானே கற்பிக்க வேண்டும்? ''மாதம் முந்நூறு என்ன, ஐந்நூறும் கிடைக்கும்'' என்று பாகவதர் கூறியதும், குமார் அந்தப் பெண்ணை உடனே தன் நாட்டியப் பள்ளியில் சேர்த்துக் கொண்டு விட்டான்.

''இந்தப் பொண்ணுக்கு நாட்டியத்துக்கேத்த உடல்வாகு இல்லையே! சர்க்கரை மூட்டை மாதிரி உடம்பு இருக்கே! எத்தனை பணத்தைச் செல வழிச்சாலும் இந்தப் பொண்ணுக்கு நடனம் வராது. பணம் வேஸ்ட் தான்'' என்றாள் நித்யா.

''சாரீர சம்பத்து இல்லேன்னு தோணித்து. உங்ககிட்ட அழைச்சிண்டு வந்தேன். அந்தப் பொண்ணின் அப்பா பத்துச் சபாக்களுக்குப் போஷகர். அதான் பொண்ணுக்குக் குவாலிபிகேஷன்.''

''நீங்களே, இவ்வளவு பெரிய சங்கீத மேதையே, இப்படிச் செய்யலாமா? உள்ளத்திலோ உடலிலோ லவலேசமும் கலையார்வமே இல்லாத ஒரு பொண்ணைப் பணத்துக்காக, சபா சான்ஸுக்காகப் பாழ் படுத்தலாமா? அவ அப்பா கிட்டச் சொல்லி உடனே ஒரு கல்யாணத்தைச் செஞ்சுடச் சொல்லுங்க. அதான் அவ உடம்புவாகுக்கு ஏத்ததா இருக்கும்'' என்றாள் நித்யா சலிப்புடன்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோதே குமார், அந்தப் பெண்ணை அழைத்துப் போய், பெயரைக் கேட்டு எழுதிக் கொண்டு நாட்டியம் கற்கும் அறைக்கு அழைத்துச் சென்று உட்காரவைத்து விட்டான். ஓர் அம்மாள் குச்சியை வைத்துத் தட்டிக்கொண்டு, 'தைதி திதை, தைதைதிதிதை தைதைதைதி திதை' என்று சொல்லடைவு கூறுவதையும் அதற்கேற்ப அந்தப் பெண்கள் சுழன்று ஆடுவதையும், கண்களும் கைகளும் ஆயிரமாயிரம் பாவங்களை வெளியிடுவதையும் தெருவில் செப்பிடுவித்தைக்காரன் செய்யும் வித்தையைக் காண்பதுபோல் அந்தப் பெண் பார்த்தாள்.

அன்று தொடங்கியது கல்யாண கிருஷ்ண பாகவதர் நித்யாவின் பழக்கம். ஒரேயினத் துருவங்கள் விலகும் என்பது விஞ்ஞான உண்மை. ஆனால் கலையுள்ளங்கள் இணையும் என்பது கலையுலக உண்மை. நித்யாவின் நடன நிகழ்ச்சி எங்கே நடந்தாலும் கல்யாண கிருஷ்ண பாகவதர், தவறாமல் முதல் வரிசையில் மத்திய நாற்காலியில் போய் அமர்ந்து, கை தட்டவேண்டிய சமயத்தில் தவறாமல் கைதட்டிப் பாராட்டுவார். அநேக சமயங்களில் அவர் கைகளே ஒலிக்கும். அத்தனை பெரிய கொட்டகையில் சில சமயம் இருபது முப்பது கைகள் ஒலிக்கும். கலை நுட்பம் தெரிந்த ரசிக உள்ளங்கள் அவ்வளவே என்று எண்ணுவாள் நித்யா. பாகவதரின் பாராட்டே நாளடைவில் அவளுக்குப் பெருத்த உற்சாகத்தையும் ஆட்டத்தில் விறுவிறுப்பையும் அளிக்கத் தொடங்கின.

பாகவதரின் கச்சேரி அருகில் நடந்தால் நித்யாவும் போய்க் கேட்டுப் பாராட்டுவாள். முன் வரிசையில் அமர்ந்திருக்கும் நித்யாவின் ஒரு முறுவல், ஓர் தலையசைப்பு, ஓர் ஆஹா, ஒரு பிரமாதம், பாகவதரின் உற்சாகத்தைப் பெருக்கெடுத்து ஓடச் செய்யும். உண்மையான ரசிகர்களுக்கு நல்ல வேட்டைதான். பாகவதர் தம்மை மறந்து பாடுவார். உற்சாகம் தாங்காமல் சில சமயங்களில் நித்யா மேடையேறியே பாகவதரைப் பாராட்டிக் கை குலுக்குவதும் உண்டு.

இந்தக் கலையுள்ளங்களின் பாராட்டும் சிரிப்பும் கை குலுக்கலும் பார்க்கிறவர் கண்ணுக்கு வித்தியாசமாகப் படத் தொடங்கின. ஓர் 'அக்கப் போர்ப் பத்திரிகைகூடத் தன்கிசுகிசுப் பகுதியில், 'சொந்த மனைவியும் பதினெட்டு வயதில் பெண்ணும் பதினைந்து வயதுப் பிள்ளையும் இருக்கிற ஒரு பாட்டுக்காரருக்கும், கல்யாணமாகியும் பொட்டலாக விளங்கும் ஒரு நடனக்காரிக்கும் 'இது' ஏற்பட்டிருக்கிறதாம்' என்ற செய்தியைப் பிரசுரித்திருந்தது.

பாகவதரின் மனைவி கல்யாணி கணவனை அர்ச்சனை செய்யத் தொடங்கினாள். ''என் மனைவியையோ என் குழந்தைகளையோ நான் திண்டாட வைக்கவில்லை. பணம் காசை யாருக்கும் கொடுத்துடல்லை. இன்னைத் தேதிக்குப் பாங்க் பாலன்ஸ் ரெண்டு பொண்களைப் பிரமாதமான இடத்தில் திருமணம் முடிக்கும் அளவுக்கு இருக்கிறது. பையனை, அமெரிக்கா என்ன, சந்திரமண்டலத்துக்கே அனுப்பிப் படிக்க வைக்கச் சக்தி இருக்கிறது. ஆனால் என்ன செய்ய? ரெண்டுக்கும் கலை ஞானமோ, படிப்பில் கவனமோ இல்லை. அதிகப் பண மிதப்பும் அதிகச் சலுகையும் அவர்களைப் பாழ்படுத்திவிட்டன. 'அப்பா, அந்த ராக ஆலாபனம் அபாரமா இருந்தது' என்று கேட்டு ரசித்துப் பாராட்ட வீட்டில் யாருக்கும் ஞானம் இல்லை. சினிமாப் பாட்டையும் கன்ராவி டிரஸ்ஸையுந்தான் ரசிக்கத் தெரியறது.''

கலைஞன் எவ்வளவு உயர்ந்தவனோ, அத்தனை அவனிடம்

ஒரு பலவீனம். அப்படிச்சொல்லக்கூடாது; பாராட்டுக் கலைஞனை வளர்க்கிறது, உயர்த்துகிறது. அதனால் பாராட்டை அவன் விரும்புகிறான்; அதைப் 'பலவீனம்' என்று கூறலாமா? 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது போல் ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனையே நாடிப் போகிறான். கலையுள்ளங்கள் ஒன்றினால் கலை சிறப்பாக வளரும்; கலைஞன் எதிர்பார்க்கும் சூழ்நிலை தன் வீட்டில் அமையாவிட்டால் அந்தச் சூழ்நிலையுள்ள இடத்தைக் கண்டால் அங்கே ஒட்டிக்கொள்கிறான். இந்த ஒருமிப்பில் கலைக்குத்தான் பிராதான்யம் இருக்குமே தவிர, மற்றப் புலன் உணர்வுகளுக்கு இடமே இல்லை. கலையைப் பாராட்டத் தெரிந்த உள்ளத்துடன் பழக வேண்டும் என்று துடிக்கும் கலைஞனின் உணர்வுகளுக்கு இத்தகைய புறச் சகவாசங்கள் ஒரு வடிகாலாக அமைகின்றன. தங்கள் குடும்பத்தையே துறந்துவிட்டார்கள் என்று தவறாக எண்ணித் தாங்களும் புழுங்கிப் பிறரையும் வருந்தச் செய்யும் சூழ்நிலை பொதுவாக ஏற்படுகிறது.

'இந்த நிலையில் ஊரார் அளக்கும் வம்பும் வீட்டினர் கூறும் அவதூறும் அவர்களின் இணைப்பை உறுதியாக்குகின்றனவே தவிர, தளர்த்துவதில்லை. காரணம் அவர்கள் நினைப்பது போல் கலைஞர்களின் நட்பில் காமம் அவ்வளவாகத் தலை தூக்குவதில்லை.'

ஒரு நாள் பாகவதரின் மைத்துனன், தன் தங்கை கூறியதைக் கேட்டு, பாகவதரை எதிர்த்துக் கேட்டதற்கு அவர் ஒரு பிரசங்கமே செய்துவிட்டார். "உன் தலையெழுத்தை மாற்றி எழுத என்னால் முடியாது" என்று கூறி, கல்யாணியின் பொருமலை அதிகமாக்கிவிட்டுப் போய்விட்டான் அந்த மைத்துனன்.

பெண் மனத்தின் இயற்கை ஆசைகளைப் புறக்கணித்துவிட்டுப் பணம் சேர்ப்பதிலும் புகழ் ஈட்டுவதிலும் குறியாக இருந்த குமாரின் கண்டிப்புக்கும் நித்யா பாகவதரைப் போன்ற பதிலையே கூறிவிட்டாள்.

நடனம் கற்பிக்கும் ஆசிரியை வராமற் போகவே நித்யாவே குச்சி தட்டிக்கொண்டு வகுப்பை நடத்தினாள். இரண்டு மூன்று பெண்கள் ஆடிக்கொண்டிருந்தார்கள். மறுநாள் தம் கச்சேரியைப் பற்றிக் கூற வந்த பாகவதர், வகுப்பு நடத்துவதைத் தடை செய்ய விரும்பாமல் ஒரு மோடாவில் அமர்ந்து, சொற்கட்டை உதிர்க்கும் அவள் குரல் இனிமையையும் தட்டுகோல் தட்டும் லாகவத்தையும் கண்டு அதிசயித்தார்.

அவளும் ரசிக மேதையின் முன்னிலையில் மிகுந்த உற்சாகத்துடன் ஒரு பதத்தைப் பாடத் தொடங்கினாள். பாகவதர், 'ஆஹா அபாரம்' என்ற சொற்களை இடையிடையே உதிர்த்தார். நித்யாவுக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. "எங்கே நீங்க ஒரு பாட்டுப் பாடுங்க" என்றாள். பாகவதர் ஆரபி ஆலாபனம் செய்யத் தொடங்கினார். கையில் இருந்த குச்சி கீழே விழ, பயிற்சி பெறும் பெண்கள் 'அக்கடா' என்று நிற்க, நித்யா, "அப்பா! உள்ளத்தை உருக்குகிறதே! அபாரம்: அபாரம்" என்று மகிழ்ச்சிப் போதையில் உரக்கக் கூறினாள்.

"என்னடி அபாரம்? கிழப்பய பாட்டுலே என்னடி அபாரத்தைக் கண்டுட்டே?"

இடி போன்ற குரலில் கீழே கிடந்த மோடா ஒன்றைத் தூக்கிக் கொண்டு கோபாவேசமாய் ஓடினான் குமார். வெளியில் போயிருந்தவன் எப்போது வந்தான்? நல்ல கலையைப் பாராட்டியதைத் தவிர வேறு என்ன குற்றம் இங்கே நடந்தது? சிறந்ததைச் சிறந்தது என்று பாராட்டுவது குற்றமா?

மோடாவுடன் பாகவதரை நோக்கி ஓடிய குமாரை ஒரே நொடியில் போய்த் தடுத்தாள் நித்யா. அவளுக்கு இரண்டு அறைகள் விழுந்தன.

பிரமித்துப் போன பாகவதர், "கலையுள்ளம் இல்லாத ஜன்மங்களா! நீங்க நாசமாகப் போக!" என்று திட்டியபடி வெளியேறினார். நித்யா கேவிக் கேவி அழுதாள்.

காலம் ஓடிக் கொண்டிருந்தது. இரண்டு மூன்று மாதம் ஆகிவிட்டன. பாகவதர் நோய்வாய்ப்பட்டவர் போல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்; வந்த நல்ல கச்சேரிகளையும் வேண்டாமென்று தள்ளிவிட்டார். அவரை அண்டியிருந்த பக்கவாத்தியக்காரர்கள், "என்ன அண்ணா, இப்படிச் செய்யறேள்? நீங்க ஒத்துக் காட்டா எங்க பொழைப்பு என்னாறது? வீட்டிலே அடுப்புப் புகைய வேணுமா?" என்று கேட்கத் தொடங்கினார்கள்.

"என்னை நம்பியா ஆண்டவன் உங்களைப் படைச்சிருக்கான்? கல்லினுள் தேரைக்கும் உணவளிக்கும் தயாளன் அவன். நான் இல்லாட்டா உலகத்துலே எத்தனையோ பேர்; பரந்த உலகத்துலே அப்படி அப்படிப் போயிட வேண்டியதுதான். எனக்கு எதுக்குப் பணம்? இருக்கிறதே யதேஷ்டம்" என்று கூறிவிட்டார் பாகவதர்.

கணவன் சோர்ந்து போனதைப் பார்த்ததும் கல்யாணி தன் தம்பியிடம் கூறி, பெண்ணுக்கு வரன் தேட முற்பட்டாள்; பிள்ளையைப் பெற்றவர்கள் உண்மையில் என்ன சொன்னார்களோ? மைத்துனக்காரன், "பாகவதர் கடைசிக் காலத்தில் அந்த நாட்டியக்காரியைக் கட்டிண்டு அழுதான்; அவன் பொண் எப்படி இருக்குமோ?" என்று எல்லாரும் ஒதுங்கிக் கொள்வதாகத் தன் தமக்கையிடம் கூறினான், அரசல் புரசலாகப் பாகவதர் காதிலும் இந்த வார்த்தைகள் விழுந்தன. 'உண்மையில் என் உள்ளமும் நித்யாவின் உள்ளமும் கலையைத்தவிர மற்ற உடல் உபாதைகளில் ஈடுபடக் கணநேரமும் எண்ணியதே இல்லை; ஆண்டவன் அறிந்த உண்மை இது. உலகத்தின் கண்களுக்கு தவறாகப் பட்டால் பின் ஆண்டவன் எதற்கு? உண்மை வெல்லும் என்று எப்படிச் சொல்ல முடியும்?' பாகவதர் சிந்தித்தபடி நாட்களைக் கழித்தார்.

ஒரு நாள், கல்யாணியின் சகோதரன் ஒரு வரனையும் அவன் பெற்றோர்களையும் அழைத்து வந்தான். "அக்கா, கொஞ்சம் பணம் அதிகம் செலவாகும். யோசிக்காம முடிச்சுடு. பையன் சுமாரான வேலையிலே இருக்கான். அந்த நாட்டியக்காரியும் ஊரை விட்டே ஓடிப் போயிட்டாளாம். எங்கே போனாள்னே யாருக்கும் தெரியலே. அவ தொலைஞ்சா, வரனும் கெடைச்சிருக்கு" என்று தமக்கையிடம் தனிமையில் கூறி மகிழ்ந்தான்.

அந்த வரன் குதிர்ந்தது; பெண்ணின் கல்யாணத்தில் தந்தை என்ற முறையில் ஈடுபட்டார், பாகவதர். செக்கில் கையெழுத்துப் போட்டு மனைவியிடம் கொடுத்துவிட்டார். பணத்தைக் கண்டு வாயைப் பிளக்கும் உலகத்தில், பணம் இருந்தால் எது நடக்காது?

கல்யாணம் ஜாம் ஜாமென்று நடந்தது. முகூர்த்தம் முடிந்து சாப்பாட்டுக் கடை நடந்தபோது மணப் பெண் பானுமதிக்குப் பெரிய பார்ஸலும் கடிதமும் வந்தன; கல்யாணி பார்சலை ஆவலுடன் பிரித்தாள். மிக அழகான காஞ்சிபுரப் பட்டுப் புடைவை சிரித்தது. கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் பானுமதி;

'உன் கல்யாணம் தடையில்லாமல் நடக்க இறைவனை வேண்டுகிறேன். என்னால் ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்வு தடைப்படுகிறது என்று நீ என்னைத் தனிமையில் சந்தித்துக் குற்றம் சாட்டிய அன்றே, என் கணவரை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்து, சொத்துக்களை விற்றுக்கொண்டு ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வந்துவிட்டேன், யாருக்குமே தெரியாது. "புது இடத்தில் தொழிலை நடத்த முடியாதே" என்று தவித்தார் என் கணவர். எதற்குத் தொழில் நடத்த வேண்டும்? குழந்தை குட்டிகள் இல்லாத எங்களுக்குத்தான் கொள்ளையாய்ப் பணம் இருக்கிறதே! உன்னை என் சகோதரியாகப் பாவித்துத் திருமணப் பரிசு அனுப்புகிறேன். ஏற்றுக் கொண்டு இந்தச் சகோதரியையும் முடிந்தபோது நினைத்துக் கொள்; வடிகால் வசதி இல்லாத நிலங்கள் நன்றாகப் பலன் அளிப்பதில்லை. என் குருவும் சங்கீத ஜாம்பவானுமான நம் தகப்பனாரின் கலையும் என் கலையும் வடிகால் இல்லாமல் களையும் பயிரும் மதாளித்துவிட்டன. இவற்றால் இனிப் பயன் இல்லை, சாதாரணக் குடும்பப் பெண்ணாக வாழ்க்கை ஓடுகிறது; நம் தகப்பனாரின் நிலையும் அப்படித்தான் என்று நினைக்கிறேன்; சமூகம் இரண்டு கலைஞர்களை வெருட்டி உருக்குலைத்துவிட்டது. உனக்கு என் ஆசிகள்."

முன்பின் தெரியாமல் சரியாகக் கல்யாணத்தன்று பரிசும் கடிதமும் வந்த அதிசயத்தை எண்ணி வியந்தாள் பானு. 'உண்மை வென்றுவிட்டது. சமூகந்தான் தவறு இழைத்துவிட்டது. உண்மை வெளியாக இறைவனே இப்படியோர் அதிசயத்தை நிகழ்த்தியிருக்கிறான்!'

கறையற்ற தன் தகப்பனாரிடம் அந்தக் கடிதத்தைக் காட்ட மாடிக்கு விரைந்தாள் பானுமதி. *

தந்தி: "அண்ணா சில்க்"

தொலைபேசி: 2248

எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தரமான பட்டுச் சேலைகள் வாங்கச் சிறந்த இடம்

அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட். K. H. I.

498–499, காந்தி சாலை, காஞ்சிபுரம் 631 501

கிளை விற்பனை நிலையங்கள்:
1. 26/118, ராசவீதி, கோயமுத்தூர் 1.
2. 8, கிருஷ்ணா மார்க்கெட், சிக்பெட், பெங்களூர்-53.
3. காஞ்சி கோ-ஆப். சில்க்ஸ், உம்மிடியார் ஷாப்பிங் செண்டர், சென்னை-2.

T. P. இலட்சுமணன், B.Com.,
உதவி இயக்குநர்/செயலாளர்

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ஆரிய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்), லிமிடெட்.

தலைமை அலுவலகம்:
366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-641018
தந்தி: "அம்ருதம்" ♣ **போன்:** 26006, 22623, 30674

மறைந்த மாமேதை ஆரியவைத்தியன்
P. V. ராமவாரியர் அவர்களால் நிறுவப்பட்டது

36 ஆண்டுகளாக மிகச் சிறந்த பயனளிக்கக்கூடிய ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்தும் சிகிச்சை அளித்தும் வருகின்ற மிகப் புகழ்பெற்ற ஸ்தாபனம்

சென்னைக் கிளை:
140-A, கௌடியா மடத் தெரு, ராயப்பேட்டை, மதராஸ்-600014
போன்: 85752

இந்தியாவின் முக்கிய நகரங்களில் 21 கிளைகளும் மற்றும் 250க்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற விற்பனையாளர்களும் கொண்ட மிகப் பெரிய ஆயுர்வேத நிறுவனம்.

ஆரிய வைத்தியன்
K. S. வாரியர்,
பிரதம வைத்தியர்

P. V சந்திரசேகர வாரியர்,
மானேஜிங் டைரக்டர்

மேலும் விபரங்களுக்குத் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

OSR

கந்தர்வலோகம்

மறுநாள் மனத்திடம், ''இப்போது எங்கே போகலாம்?'' என்று கேட்டேன்.

''துன்பக் கலப்பற்ற இன்பங்கள் நிறைந்திருக்கும் உலகத்திற்குப் போய் வருவோமே!'' என்றது.

''நன்று கூறினை'' என நான் மகிழ்ச்சி பாராட்டி, கந்தர்வ லோகத்துக்குப் போகலாம் என்று கிளம்பினேன். கந்தர்வ லோகத்துக்குப் போய்ச் சேர்ந்தவுடனே என்னை அறியாமல் ஓர் ஆனந்தம் உண்டாயிற்று. அதிரமணீயமான ஸங்கீதத் தொனி கேட்டது. அவ்வொலி பொன்னால் செய்த தொண்டையை உடைய பெண் வண்டுகளின் ரீங்காரம் போல் இருந்தது. 'இது என்ன ஒலி, எங்கிருந்து வருகிறது?' என்று யோசித்தேன். என் அறிவிற்குப் புலப்படவில்லை.

அங்குள்ள மாட மாளிகைகள், கோவில்கள், கோபுரங்கள், நாடக சாலைகள், ஏன், கல், மண், தரை எல்லாவற்றிலுமே சந்திர கிரணங்களைப் போன்ற ஒளி பல வர்ண வேறுபாடுகளுடன் கலந்திருக்கக் கண்டேன். அந்தச் சமயத்தில், ஒரு கந்தர்வ யுவதி என் முன் வந்து, ''வாராய், மானுட வாலிப, உனக்கு எங்கள் உலகத்தின் புதுமைகளை எல்லாம் காட்டுகிறேன்'' என்று கைகோத்து அழைத்துச் சென்றாள். நான் அந்த யுவதியின் வடிவைக் கண்டு மயங்கி மூர்ச்சித்து விடுவேனோ என்ற எண்ணம் உண்டாயிற்று.

அந்த யுவதி, ''பற'' என்றாள். நான் கலீரென்று நகைத்து, ''பறக்கவா சொல்லுகிறாய்?'' என்று வியப்புற்றேன்.

பால்போல் வெண்மை கொண்ட வானத்தால் செய்த இரண்டு சிறகுகள் அவளுக்கு இருப்பதை நான் கண்டேன். இந்தப் பாலிறகுகளால் விகாரம் செய்யப்படாத திவ்விய உருவம், தெய்வ இயல், தெய்வச் சாயல் அந்த யுவதி.

''மண்ணுலகத்தவனாக இருந்த போதிலும் நல்ல பார்வைகள் பார்க்கிறாய்'' என்று நாணமுணர்த்தி, ''யோசித்துக் கொண்டு நில்லாதே; பற'' என்றாள்.

''உன் பெயர் என்ன?''

''என் பெயர் பர்வத குமாரி. என்னை ஸாதாரணமாகக் குமாரி என்று அழைப்பார்கள்.''

''சரி, பர்வத குமாரி, நான் பறப்பது எப்படி? சிறகுகள் இல்லையே!'' என்று கேட்டேன்.

''இந்த உலகத்தில் பறக்க வேண்டுமென்ற நினைவு உண்டானவுடனே, இந்த வெண்மை நிறம் கொண்ட வானிறகுகள் தோன்றுகின்றன. நீ பறக்க வேண்டுமென்று உள்ளத்திலே சங்கற்பம் செய்துகொள்.''

''சரி.''

''இப்போது என் கண்ணுள்ளே உன் வடிவத்தைப் பார்.''

அவள் கண்ணை உற்றுப் பார்த்தேன். அங்கே எனது வடிவம் கந்தர்வ ரூபமாகத் தோன்றியதைக் கண்டு வியப்படைந்தேன். எனக்கும் வான இறகுகள் திடீரென்று முளைத்திருக்கக் கண்டேன். கந்தர்வனைப் போலவே மாறிவிட்டேன்.

காந்தத்தின் பின்னே செல்லும் ஊசியென அவளோடு நானும் பறந்து செல்வேனாயினேன். நகரத்திலே இரண்டு பனை உயரத்தில் பறந்து போய்க் கொண்டு கந்தர்வ நாட்டு மாளிகைகள், சங்கீத சாலைகள், லீலா மண்டபங்கள் என்பவற்றின் அற்புதங்களையெல்லாம் நோக்கிச் சென்றேன்.

ஒரு மேடையின் மீது கந்தர்வக் குழந்தைகள் பூப்பந்தாடிக் கொண்டிருந்தன; ரோஜாப்பூப் பந்துகள். ஒரு குழந்தை மட்டும், குமாரியின் தம்பி, சித்தரஞ்ஜனன், கவிதையை மனனம் செய்தபடி தனியாக அமர்ந்திருந்தான்.

கொஞ்ச தூரம் போனவுடனே, பர்வத குமாரி, ''அதோ, பார்!'' என்று காட்டினாள்.

அதிவிசாலமான மாடம் காணப்பட்டது. அதில் பெரிய கூட்டம். எல்லாரும் முகமலர்ச்சியுடன் பூலோகத்தாரைப் போல் இடித்து மோதிக் கொள்ளாமல் ஸஞ்சரித்தனர்.

வஸந்த காலம் சித்திரிக்கப் பட்டிருப்பதைக் கண்டேன். யதார்த்தத்திலேயே கந்தர்வ நாட்டில் அப்போது வஸந்த காலம். பாடுகின்ற குயில்கள், மலர் புனைந்த மரங்கள், கூடி விளையாடும் மான்கள். சிவனைப் பார்வதி தழுவிக்கொள்ள மன்மதன் கரும்பு வில்லில் நாணேற்றிப் புஷ்ப பாணம் தொடுக்கிறான். மற்றொரு பாரிசத்தில் சிவபெருமானுக்கு விவாகம் முடிந்து பார்வதி பாகராக அமர்ந்திருக்கிறார். ரதி ஆடிப் பாடி அவர்களை வணங்குகிறாள்.

பறந்து பறந்து கடலுக்கருகே வந்து சேர்ந்தோம். குமாரி சொல்லியிருந்த ஸுகந்த மாளிகை ஸமீபித்துவிட்டது என்பதை அறிந்தேன். கஸ்தூரிக் கற்களாலும் தேவசந்தன மரத்தாலும் அம்மாளிகை ஆக்கப்பட்டிருந்தது. உப்பரிகையில் இளைப்பாற அமர்ந்தோம். எதிரே கடல்; படகுகள் மிதந்து வந்தன. இணையிணையாகக் கந்தர்வ இளைஞர்களும் பெண்களும் ஆடிப் பாடி வாத்தியம் வாசித்து அதில் இன்புற்றனர்.

உருவம் காந்தர்வமாக மாறிவிட்ட போதிலும், எனது ஜீவன் மானிட ஜீவனாதலால் இத்தனை இன்ப மிகுதியை என்னால் பொறுக்க முடியவில்லை. புலன்கள் திகைத்துப் போய்விட்டன. அறிவு மயங்கிவிட்டது. பர்வத குமாரியுடன் நான் ஏதேதோ தொடர்பற்ற மொழிகள் பேசினேன்.

என் தடுமாற்றத்தைக் கண்ட குமாரி, ''அருவிக்கு வா. எழுந்திரு. நீராடப் போவோம்'' என்றனள். நாங்கள் வருவதற்கு முன்னாகவே அங்குப் பலர் வந்து ஸ்நானம் செய்த விநோதங்களைப் பார்க்கும்போது அற்புதமாயிருந்தது. உள்ளபடி எழுதச் சிறிது கூசுகின்றது. கந்தர்வ நாட்டில் எவர் மனத்திலும் விகற்பம் கிடையாது. ஆகையால் ஆடை முதலிய விஷயங்களில் அதிக நாணம் பாராட்டுவதில்லை.

அருவி ஸ்நானம் செய்து முடிந்த பிறகு பக்கத்திலுள்ள ஆலயத்துக்குச் சென்று சிவபெருமானைச் சிலர் வணங்கினார்கள்.

சித்திரசாலையைப் பார்த்துக்கொண்டு உணவுக்குப் புறப்பட்டோம். குமாரியின் தம்பி ரஞ்ஜனன், பொற்றட்டில் பல உணவுகளை, எங்கள் முன் போட்டிருந்த பளிங்கு மேஜையின்மேல் வைத்தான். கனிகள், கனிகள்! கனிகளைத் தவிர வேறு இல்லை.

நாட்கள் பல கழிந்தன. குமாரியும் எனது உயிர்த் தோழியாய் விட்டாள். எனக்கு மனத் திருப்தி ஏற்படவில்லை. ஒரு குறை தோன்றியது. தனிமையில் அமர்ந்து யோசித்துக்கொண்டிருந்தபோது குமாரி, பறந்து வந்து என் அருகே அமர்ந்தாள். என் உள்ளக் கருத்தை எளிதில் அறிந்து மண்ணுலக நிலையாமை, பொய், புரட்டு முதலியனபற்றிக் கூறினாள். என் மன மாறுபாடுகளை எல்லாம் நிமிஷந்தோறும் அறிந்துவரும் இந்தக் கள்ளி, பேச்சு முடிந்தவுடன் ஒன்றும் அறியாத மான் கன்றுபோல் விழிப்பதுதான் வியப்பாயிருந்தது. ''கள்ளி, கள்ளி!'' என்று முணுமுணுத்தேன். ''ஒரு தரம் சிக்ஷை விதித்துவிடு'' என்று கெஞ்சினள். ''அதாவது இதழ்ச் சிக்ஷை'' என்றாள். அப்பால் இதழோடு இதழ் பொருந்திப் பல நிமிஷங்கள் உயிர் கலந்திருந்தோம்.

[பாரதியாரின் 'ஞானரதம்' என்ற நூலில் வரும் இந்தக் காட்சிகளை அடுத்துக் காண்கிறீர்கள். ஓவியம்: லதா.]




லதா

1980

KTR பிளாடினம் ஜூபிலி ஆண்டு

1904
1980

75 ஆண்டு எங்களது அனுபவ உன்னத தயாரிப்புகள்!!!

கோபுர மார்க்க உயர்ந்த பன்னீர் வகைகள்

பொன்னாங்கண்ணி | அரைக்கீரை | சந்தனாதி தைலங்கள்

ஓமதீநீர் குல்கந்த் வாசனை சுண்ணாம்பு

தசாங்கம் அரகஜா ஜவ்வாது பவுடர் பூஜாபில்லைகள்

சந்தன பத்தி-லவ் பேர்ட்ஸ்-பென்டாஸ்டிக் பத்தி வகைகள்

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

K·T·R PERFUMERY INDUSTRIES

VIJAYAPURAM - TIRUVARUR - 610 001

POWER PAK

AL-FIN

a name that will carry a lot of weight for a name that carries a lot of weight

POWERPAK AL-FIN
KIT SET FOR LEYLAND 370 ENGINE
combining three unique features to guarantee an extended engine life.

- PowerPak Al-Fin is a new concept in piston design.★ A tough breed which can withstand the most rigorous operating conditions. And still give 250,000 kms or more, with just one re-ringing in-between overhauls.
- Ring pack as specified by the engine manufacturer.
- The exclusive hardened and tempered liner. To match PowerPak Al-Fin piston and extend the total life of the engine.

A kit set which is tailor-made to suit the new generation of LEYLAND 370 engines. A kit set which will give you appreciable reduction in maintenance cost in the long run.



POWER PAK
AL-FIN
cuts top ring groove wear out

★PowerPak Al-Fin is a product of pure technology. Eliminating top ring groove wear to give a much longer life span. The ni-resist insert has a rate of expansion which is identical to the aluminium alloy of the piston. The insert is metallurgically bonded in the casting process itself, and remains in position at all operating conditions; hot or cold, load or no load. Quality of bonding is one hundred per cent checked in a most sophisticated Ultrasonic bond testing equipment. The Al-Fin process assures a perfect continuity of the inter-metalic bond all through the longer life span of the piston.

Manufactured under licence from WELLWORTHY LIMITED, U.K.

INDIA PISTONS LIMITED. MADRAS 600 011

MAC 2011A

இன்னொரு நாள்

சிவசங்கரி

மாலை வெயில் உடம்புக்கு இதமாக இருந்தது. ஜிலு ஜிலுவென்று வீசிய காற்றை அநுபவித்த வண்ணம் அலைகள் அடித்து ஓயும் மேட்டில் நுரையுடன் கூடிய நீர் கால்களை வருடிக் கொடுக்கச் சில நிமிஷங்கள் நின்ற ரமணன், கொஞ்சம் நடந்து ஒரு பக்கமாய் உட்கார்ந்து கொண்டான்.

சற்றுத் தொலைவில் ஓர் இளம் ஜோடி. அவளுக்குத் தண்ணீர் என்றால் பயம்போல் இருக்கிறது. வரமாட்டேன் என்று சண்டி பண்ணியவளை, 'நான் இருக்கும் போது என்ன பயம்?' என்கிற தினுசில் அணைத்துத் தண்ணீரிடம் இழுத்துச் செல்கிறான் அவன்.

அலைகள் வந்து காலில் மோதும் சிலிர்ப்பில் அவள் துள்ளுகிறாள். அவன் இதுதான் சாக்கு என்று இன்னும் இறுக அணைக்கிறான். அவள் சிணுங்குகிறாள். அப்புறம் அந்த அணைப்பை ரசிக்கிறாள்.

என்ன அன்னியோன்யம்! என்ன பரவசம்!

இந்த மாதிரி ஒரு நாளாவது வத்ஸுவோடு பீச்சில் வந்து உட்கார்ந்து நிலா உதயமாகும் வரை சல்லாபிக்க வேண்டும் என்று அவனுள்ளும் ஆசை பூதமாகத்தான் படர்ந்திருக்கிறது. ஆனால் நடக்கவில்லை.

சொன்னால் சிரிப்பார்கள். கல்யாணமாகி முழுசாய் மாசம் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. இன்னும் ஒரு மாலைப் பொழுதைக் கூட, அவன் வத்ஸுவோடு கழிக்க முடியவில்லை என்பது நிஜந்தான்.

இரண்டு மாசங்களுக்கு முன் அம்மா, "நல்ல இடம் ஒண்ணு வந்திருக்குடா, ரமணா" என்றபோது எப்போதும் சொல்லும் சாக்கைச் சொல்லி அவன் தட்டிக் கழிக்கவே பார்த்தான்.

"நன்னா இருக்குடா, நீ சொல்லறது! குடும்பம்னா ஆயிரம் இருக்கத்தான் செய்யும். வாசப்படி இல்லாத வீடு ஏது? அதுக்காகக் கல்யாணம் வேண்டாம்னா எப்படி? இந்த மாசிக்கு உனக்கு முப்பத்துநாலு முடிகிறது. இன்னும் எத்தனை வருஷம் போகணுங்கறே? நல்ல எடம், பொண் கண்ணுக்கு நன்னா இருக்கா. ஏதோ நம்ம அந்தஸ்துக்கு தகுந்தாப்பல சீர் செனத்தி செய்யறேங்கறா. பொண்ணைப் பாக்காமலே 'மாட்டேன், வேண்டாம்'னா எப்படிடா?"

மேற்கொண்டு அம்மாவோடு தர்க்கம் பண்ண விரும்பாமல், "சரி சரி; பொண்பாக்க வரணும், அவ்வளவு தானே? வரேன்" என்றுசொன்னாலும், மனசுக்குள், 'பொண் கறுப்பு குட்டை, முகத்தில் அசடு வழிகிறது' என்று ஏதையாவது சொல்லி முன்பெல்லாம் தட்டிக் கழித்தது போல இதையும் உதறி விடலாம் என்ற நம்பிக்கைதான் ரமணனுக்கு. கல்யாணம், அது, இது என்பதற் கெல்லாம் ஆசைப்படும் நிலையிலா அவன் இருந்தான்.

அப்பா இல்லாத குடும்பம், கணவனை இழந்த சின்னப் போதிலேயே அம்மா வீட்டில் நாலாம் வருஷம் தஞ்சம் புகுந்துவிட்ட அக்கா லட்சுமி, பி.காம். படிக்கும் தம்பி சங்கர், எஸ். எஸ். எல். ஸியில் கௌரி, தங்கை, அம்மா, வீட்டின் சீமந்த புத்திரனான இவன்.

இத்தனை பேர்களும் மானமாய் வாழ வழி பண்ணுபவை, இவன் குமாஸ்தா உத்தியோகம் பார்த்துக் கொண்டு வரும் நானூற்றுப்பத்தும், அக்கா டீச்சராய்த் தொண்டைத் தண்ணீர் வற்றக் கத்திச் சம்பாதிக்கும் நூற்றுஅறுபதுந்தானே?

இதில் சாப்பாடு, வாடகை, மற்றப் போக்கு வரத்துக்கள், இதில் மிச்சம் பண்ணித்தான் கௌரிக்கு ஒரு வழி செய்ய வேண்டும்,

வாடகையே பகாசுரன் மாதிரி நூற்றுநாற்பதை விழுங்குகிறது; மயிலாப்பூர் மாடவீதியில் குடித்தனம் பண்ணுவதற்கு இது நிரம்ப மலிவுதான். அப்பா இருந்த நாட்களிலிருந்து, கிட்டத்தட்டப் பதினைந்து வருஷங்களாய் இந்தப் போர்ஷனிலேயே இருப்பதால் வீட்டுக்காரர் தாறுமாறாய் வாடகை ஏற்றாமல் இருக்கிறார்.

கடை கண்ணி, கோவில், பஸ் ஸ்டாப் எல்லாம் கிட்டத்தில் என்ற சௌகரியம் இருந்ததே தவிர, இடம் என்னவோ சின்னதுதான். மாடி ஏறினால் ஒரு சின்ன நடை. தொடர்ந்து பெரிசாய்க் கூடம். பின்னால் சமையல் கட்டு. அதையும் தாண்டித் தனிக் குளியலறை, டாய்லட்.

தனக்கு இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாம் என்று ரமணன் மறுத்ததற்கு இந்த வீடும் ஒரு காரணமே. இருப்பதோ ஒற்றைக் கூடம், சாப்பாடு, படுக்கை, படிப்பு எல்லாம் இதில்தான் என்றிருக்கிறது. புதிதாய்க் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவர்களுக்கு ஏது இடம்?

வாசல் நடையில் படுத்துக் கொள்ளலாம் என்றால் அதற்குக் கதவு, கிதவு ஒன்றும் கிடையாது. சமையல் கட்டை உபயோகிக்கலாம் என்றால் இரவில் குளியலறைக்குப் போகிறவர்கள் அந்த அறை வழியாகத்தான் போக வேண்டும். அப்புறம் எப்படி?

இத்தனை வருஷங்களாய் அம்மாவைச் சமாளித்த தினுசில் இந்த முறையும் ஏய்த்து விடலாம் என்ற ரமணனின் எண்ணத்துக்குப் பெப்பே காட்டிய பெருமை வத்ஸலாவின் லட்சணமான தோற்றத்தையே சாரும்.

நிமிர்ந்து பார்த்தவன் பிரமித்துத்தான் போனான். 'இத்தனை அழகையும் கட்டி ஆளும் பாக்கியம்எனக்கா? இந்த வெள்ளைத் தோலும் செதுக்கின உடம்பும் எனக்கா?'

மனசின் அடியில் உறங்கிக் கொண்டிருந்த ஏக்கங்கள் மெதுவாய் விழித்துக் கொள்ள, அன்றிரவு அம்மாவிடம் சம்மதத்தைத் தெரிவிக்க, இதோ வத்ஸு அவன் மனைவியாகி மாசம் ஒன்று ஓடிவிட்டது.

கல்யாணம் நிச்சயம் ஆன கையோடு, அம்மா ஒரு தச்சரை அழைத்து, பத்துக் கள்ளிப் பெட்டி

களை வாங்கி வந்து கூடத்தில் எட்டடிக்கு எட்டடி என்று சின்னதாய் ஒரு தடுப்புச் சுவர் எழுப்பச் சொன்னாள். கல்யாணமான மறுநாள் கட்டுச் சாதக் கூடையுடன் வந்திறங்கின பிறகு, அதுதான் அவர்கள் அறை ஆயிற்று.

இரண்டு பெட்டிகளை ஓரமாய் வைத்து, சம்பந்தி தைத்துத் தந்திருந்த மெத்தைகளை விரித்து, நாலு மல்லிகைச் சரங்களைக் குறுக்கும்நெடுக்கும் கட்டி ஊதுவத்தி கொளுத்தி, கூஜாவில் பால், தட்டில் பழம், ஜாங்கிரி வைத்து அம்மாவும், அக்காவும் ஜோடித்திருந்த இந்த அறையில் தான் அவர்களுடைய சாந்தி முகூர்த்தம் நடந்தது.

மேல்விட்டம் வரைக்கும் உயராத ஆறடி மரத்தடுப்பு என்பதால் சின்னக் குரலில் பேசினாலும் வெளியில் கேட்டுவிடும் என்ற பயம்.

விளக்கைப் போட்டுக்கொண்டு நடையில் பரீட்சைக்குப் படிக்கும் சங்கர். அதே கூடத்தில் மருமானை அணைத்தபடி தூங்கும் கௌரி. பத்தடி தள்ளி இருந்த சமையல் கட்டில் அம்மா, அக்கா.

முதல் இரவாவது மண்ணாவது!

'என்னவோ தப்புப் பண்ணுவது போல... சே! என்ன வேண்டிக் கிடக்கிறது!'

நாலு நாட்கள் ஆவதற்குள் சலிப்பும், ஏக்கமும் மொத்தமாய் ஆட்டுவிக்க, ரமணன் சதா மனசுக்குள் குமையத் தொடங்கியது உண்மை.

பந்தாய் மனைவி பூச்சூடி வர, அதில் முகம் பதிந்து மகிழ்ந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணுவதோடு நிறுத்திக் கொள்ள அவன் பழகிவிட்டான். ஒரு ரூபாய்க்குப் பூ வாங்கினாலும் கௌரிக்குக் கொஞ்சம், சாமி படங்களுக்குக் கொஞ்சம் என்று போனால் பாக்கி விரல்கடை அளவுதானே வத்ஸுவுக்குத் தேறும்?

சினிமாவுக்கு மனைவியை அழைத்துப் போக வேண்டும் என்று ஏகத் துடிப்பு. ஆனால் முடியுமா? அம்மா, அக்கா, தம்பி கிளம்பாவிட்டாலும் கௌரியும் கண்ணனும் முதலில் தயாராவது நிச்சயம். புது மனைவியுடன் முதல் சினிமா; பால்கனி டிக்கெட் எடுக்காவிட்டால் எப்படி? முதலில் நாலு இரண்டரை ரூபாய் டிக்கெட் எடுத்தால், பத்து ரூபாய்; அப்புறம் போக வரப் பஸ் செலவு; அங்கே பாப்கார்ன், சோடா என்று எதையாவது கண்ணன் இழுத்து விடும் செலவு. ஆக, இருபது பழுத்து விடும். அப்பாடி! இருபது ரூபாயா? இருந்தால் நாலு கிலோத் துவரம்பருப்பு வாங்கலாமே!

பீச், கோவில் போகப் பணம் காசு வேண்டாமே, போய் வரலாமே என்றால் அத்தனை பேர்கள் இருக்கும் வீட்டில் ஒருத்தியை மட்டும் பார்த்து, 'நீ கிளம்பு' என்று எப்படிச் சொல்வது? நாக் கூசுகிறதே! குழந்தை குட்டிகளை வீட்டில் விட்டு விட்டு அப்படியாவது என்ன பீச் என்று மனசில் என்னவோ நெருடுகிறதே!

என்ன கல்யாணம், என்ன பெண்டாட்டி! நினைத்தபோது மனைவியின் கையைப் பிடித்துச் சீண்ட முடிவதில்லை, நினைத்தபோது ஒரு வார்த்தை பேச முடியவில்லை. இதெல்லாம் கூட வேண்டாமையா; இராத்திரி படுக்கும்போது, நாள் பூராவும் பிரிந்து இருந்து விட்டுப் புது மனைவியோடு சேர்ந்திருக்கும்போது, மனுஷன் கொஞ்சலான ஒரு வார்த்தை சொல்லி விளக்கு வெளிச்சத்தில் அவள் முகத்தைக் கையில் ஏந்தி ரசிக்க முடியவில்லை என்றால், அப்புறம் என்ன கல்யாணம் வேண்டிக் கிடக்கிறது?

கிசு கிசுப்பாய்க் காதுக்குள், "வத்ஸூம்மா! என்னோட வத்ஸுக் குட்டி!" என்றால், "ஐயோ வேண்டான்னா. அவாள்ளாம் இருக்கா!" என்பாள்.

மாறாக வாசல் கதவு தாழிடப்பட்டிருந்தது.

"யாரு?" ஜன்னல் வழியாக நிலாவாக வத்ஸுவின் முகம்.

"நான் தான்!"

கதவு திறந்தது.

"எதுக்காகக் கதவைத் தாழ் போட்டிருக்கே, சந்தியா வேளைலே? இத்தனை பேர் இருக்கிற வீட்



"உன் பட்டுக் கைக்கு இந்த மருதாணிச் சிகப்பு எத்தனை..." முடிக்க விட மாட்டாள். "ஐயையோ! வெளக்கை அணைச்சிடுங்கோ! பலகைலே இடுக்கு இருக்கு." இரகசியமாய்ப் பதில் வரும். உடம்பு விலகிப் போகும்.

சே! என்ன தாம்பத்தியமடாப்பா? ருசி காணாதவரையில் எந்தக் கஷ்டமும் இல்லை. ஆனால் இப்போது எத்தனை வேதனை, எத்தனை அவஸ்தை! இருட்டி விட்டது. ரமணன் மணலைத் தட்டிவிட்டுக் கொண்டு எழுந்தான். சலிப்பு மாறாத மனசுடனே நடந்து போய் வீட்டு மாடிப் படிகளில் அவன் ஏறும்போது எழுபடிக்க ஐந்து நிமிஷங்கள் இருந்தன. வழக்கத்துக்கு

டுலே எவன் திருடத் தைரியமா நுழைவான்?" பேசிக் கொண்டே ஷர்ட்டைக் கழற்றினான். நிமிர்ந்து நன்றாய் மனைவியைப் பார்த்தபோது அந்த முகத்தில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

முகம் பளிச்சென்று அலம்பிப் பௌடர் பூசியிருந்தது. வட்டமாய்ப் பொட்டு. கண் ஓரங்களில் மை தீற்றல். என்னவோ சொல்லத் துடிக்கும் வாய், துறுதுறுப்பு.

'என்ன சமாசாரம்?'

ரமணன் கூடத்தை ஒரு பார்வையிட்டான்.

'அம்மா எங்கே? ஓரமாய் உட்கார்ந்து தினமும் ஒயர் கூடை பின்னும் அக்கா எங்கே?

நடையில் நின்று வருவோர் போவோரை விமர்சிக்கும் கௌரியும், ''மாமா பிஸ்கெட் வாங்கிண்டு வந்தியா?'' என்று மறிக்கும் கண்ணனும் எங்கே?'

கண்ணன் பள்ளிக் கூடத்தில் பெற்றோர் தினமாம். அக்கா, கௌரியுடன் போயிருக்கிறாளாம். சங்கர் கீழ் வீட்டு மாமாவுடன்



ஆர். ஆர். சபாவில், ஒசி நாடகம் பார்க்கப் போய்விட்டான். அம்மா கோவிலுக்கு; வாரியார் கதை.

வத்ஸூ பேசி முடிப்பதற்குள் இதயத்துள் ஏதோ ஜிங்கென்றது ரமணனுக்கு. அப்படியென்றால் வீட்டில் அவனும் அவளுந்தானா? கடவுளே! ஒரு மாசமாய்த் தவம் பண்ணிய சமயம் கண்முன் நின்று வா வா என்கிறதா?

கால் மணி நேரமாய் வத்ஸூ தனியாய் இருந்திருக்கிறாளா? பதினைந்து நிமிஷங்கள் அநியாயமாய் வீணாயினவா?

சடக்கென்று வத்ஸூவை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்; ''நீயும் நானும் மட்டுமா இருக்கோம் வத்ஸூம்மா? உண்மையா நீயும் நானுமா?'' திரும்பத் திரும்பச் சந்தோஷம் தாங்காமல் கேட்டவன் என்னவோ நினைத்துக் கொண்டது போல் பர்ஸை எடுத்தான். ஐந்து ரூபாயும், கொஞ்சம் சில்லறைகளும் இருந்தன.

ஷர்ட்டை அவசரமாக மாட்டிக் கொண்டு, ''தாழ் போட்டுக்கோ; இதோ வந்துடறேன்'' என்று சொல்லி இரண்டு எட்டுப் போனவன் நின்றான். திரும்பி வந்து மனைவியின் கையைப் பற்றி லேசாய் அழுத்தி, ''இதோ ஓடி வந்துடறேன், நீ அதுக்குள்ள நலங்குக்கு கட்டிண்டயே அந்த நைலான் ஸாரியைக் கட்டிண்டு ஜம்முன்னு இரு, ஓ. கே!'' என்று கூறிக் கொண்டே நாலு படிகளாய்க் கீழே இறங்கி ஓடினான்.

ஒரு ரூபாய்க்குப் பூ, திருநெல்வேலி அல்வா நூறு கிராம், பக்கோடா கால் கிலோ; போதும். பொட்டலங்களோடு ஓட்டமும் நடையுமாய் வந்தவன் சலூனைத் தாண்டின போது ஒருவிநாடி தாமதித்தான். சின்னதாய் ஒரு ஷேவிங்? 'ஹூம் வேண்டாம், அரைமணியாவது பழுத்துவிடும்.'

மூச்சு இறைக்க மாடிப் படிகளில் ஏறிக் கதவைத் தட்டினான். அவன் விருப்பப்பட்டது போல வத்ஸூ கிளிப்பச்சை நைலானில் குளுகுளுவென்றிருந்தாள்.

பரபரப்புடன் குளியல் அறைக்கு ஓடி நாலு செம்பு விட்டுக் கொண்டான். பவுடர் பூசி, தலை வாரி, சலவை வேஷ்டி, பனியன் அணிந்து கொண்டு கூடத்துக் கட்டிலில் அமர்ந்தான். அவனுடைய செய்கைகளை வெட்கத்தோடு பார்த்தபடி நின்றிருந்த மனைவியை இழுத்துக் கிட்டத்தில் அமர்த்திக் கொண்டான்.

மார்பு படபடவென்றது. சின்னப் பையனின் குறுகுறுப்பு; துடிப்பு!

''வத்ஸூம்மா, என்னோட வத்ஸூ கண்ணம்மான்னு ஆசையாக் கூப்பிட்டா இப்ப ஷ் ஷ் ஷ்னு அடக்க மாட்டியோன்னோ?'' என்றான்.

''அம்மாடி! இந்த அழகை விளக்கு வெளிச்சத்துலே பக்கத்துல உக்கார வைச்சுண்டு கண் குளிரப் பாக்கணும்னு எத்தனை நாளா ஆசைப்படறேன்! ஒண்ணுமே பண்ண வேண்டாம் வத்ஸூ, உன்னைத் தோள்லே சாய்ச்சிண்டு, பயமில்லாமப் பேசிச் சிரிச்சிண்டு, உன் மருதாணி பூசின விரல்களை என் கையோட கோத்துண்டு அப்படியே மணிக் கணக்கா உக்காந்திருக்கணும். அப்புறம் வந்து..''

''டீ, வத்ஸலா!'' வீட்டுக்கார மாமி குரல் திடுமென்று கீழிருந்து கேட்க, வத்ஸலா எழுந்து நின்றாள்.

''உங்காத்துக்கு விருந்தாளி வந்திருக்காடி.''

வத்ஸலா ஜன்னலிடம் செல்ல ரமணனும் உடன் சென்று எட்டிப் பார்த்தான். மாமா!

''வத்ஸூ... இப்பப் போயி.;; இவர் ... கடவுளே!''

ரமணனின் குரல் உடைந்திருந்தது.

''யாரு? அப்பா போன சமயத்துலே உபகாரமா இருந்தார்னு அம்மா சொல்வாரே அவரா? லீவ் கெடைக்காததுனால வடக்கேயிருந்து கல்யாணத்துக்கு வரமுடியலேன்னாரே, அவரா?''

ரமணன் 'ஆமாம்' என்று தலை ஆட்டின போது அவன் முகத்தில் ஏமாற்றம் கூத்தாடுவதை, வத்ஸூவால் பார்க்க முடிந்தது.

கையை நீட்டிக் கணவனின் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள்.

''என்னன்னா இது? சின்னக் குழந்தை மாதிரி இதுக்குப் போய் வருத்தப் படறேள். நாம்பதான் ஆயுசு பர்யந்தம் சேர்ந்து இருக்கப் போறோமே! அப்புறம் இன்னிக்கு இல்லேன்னா, இன்னொரு நாள் வராமலா போயிடும்? போங்கோன்னா. போய், வந்த பெரியவரை வாங்கோனு சொல்லி அழைச்சிண்டு வாங்கோ.''

தன்னைவிட எட்டு வயசு சின்னவளாக இருந்தாலும் சமயம் அறிந்து ஒரு தாயாக மாறி, அநுசரணையுடனும் விவேகத்துடனும் மனைவி பேசினதும் ரமணனின் மனசு சட்டென்று தெளிந்து போயிற்று.

இந்த மாதிரி நொடியிலே சமாளிப்பது இந்தப் பெண்களுக்குக் கை வந்த கலையா? இப்படி விட்டுக் கொடுக்க வேண்டிய சமயத்தில் விட்டுக் கொடுத்துத் தட்டிக் கொடுக்க வேண்டிய தருணத்தில் தட்டிக் கொடுத்து, தாம்பத்தியத்தை இனிமையாக ஓட்டிச் செல்வது இந்தப் பெண்களால் மட்டுமே செய்யக் கூடிய காரியமா?

மாமாவை வரவேற்கக் கதவைத் திறந்து கொண்டு ஓடினபோது மனசு விவரிக்கத் தெரியாத சந்தோஷத்தோடு இருப்பதை ரமணனால் புரிந்து கொள்ள முடிந்தது. ❋

பாவமும்

டாக்டர் பத்மா சுப்ரமண்யம்

எவ்விதக் கலைப்படைப்பாக இருந்தாலும் அதன் குறிக்கோள் ரஸ உற்பத்தியே ஆகும். ரசனைதான் கலைஞனுக்கு வலிமையூட்டும் சஞ்சீவியாக விளங்குகிறது; ஆகவே ஒரு கலைப் பொருளைப் படைப்பவருக்கும், அதனை ரஸிப்பவருக்கும் ரஸமே குறிக்கோளாகிறது. இந்த ரஸம் உற்பத்தியாவதற்கான படிப்படியான நிலைகளின் விவரமே பண்டைக் காலந் தொட்டு வல்லுநர்களால் நூல்களாக எழுதப்பட்டுள்ளன. ஆயினும், இதைப்பற்றி முதல் முதலில் தெளிவாகப் பாகுபடுத்தி எழுதியவர் பரதமுனிவரே ஆவார். இன்னும் சொல்லப் போனால் நாட்டியத்தின் மூலம் ரஸம் எவ்வாறு மலர்கிறது என்று ஆராயப்படும் யுத்திகளே நாட்டிய சாஸ்திர நூலின் கருப் பொருள்.

ரஸம் உண்டாவதற்கு ஆதாரம் 'பாவம்'; பாவம் என்பது உணர்ச்சி. இந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கலை அபிநயம். வெளிப்படுத்தப்பட்ட உணர்ச்சிகளும் கருத்துக்களும் ரஸிகர் மனத்தைத் தொட்டு, அவர்கள் உள்ளங்களிலும் அதே உணர்ச்சிகள் உணர்வுகளாக எழும்போது அந்த ரஸிகர்கள் அவ்வுணர்ச்சிகளைச் சுவைக்கிறார்கள். இவ்வாறு உண்டாகும் சுவைதான் ரஸம். கலை உணர்ச்சிகொண்ட ரஸிகர்களை ஸஹ்ருதயர்; அதாவது உணர்ந்து சுவைக்கும் தன்மையுடையவர் என்று கூறுவர். அவர்களைத்தான் நல்ல ரஸிகர்கள்

என்று குறிப்பிடுவர். ரஸம் உண்டாவதற்கு நல்ல கலைஞர்களும் தேவை; நல்ல ரஸிகர்களும் தேவை.

மனித உள்ளத்தில் எழக்கூடிய உணர்ச்சிகள் எத்தனையோ விதம். இவை அவர்களின் பால், வயது, சூழ்நிலைக் கேற்ற வண்ணம் கணக்கற்ற விதங்களில் விரிவடைகின்றன. சத்துவ குணம், ரஜோகுணம், தமோ குணம் ஆகிய மூன்று குணங்களின் கலவையான ஒவ்வொரு மனித உள்ளமும் பிறப்பு, வளர்ப்பு, சூழ்நிலைக் கேற்றவண்ணம் உணர்ச்சிகளை உருவாக்கிக் கொள்கிறது. மனோதத்துவ அறிவியலின் அடிப்படையில் இந்த உணர்ச்சிகளைப் பாகுபாடு செய்து, பாத்திரங்களைப் படைப்பதற்கும் அவற்றை நடிப்பதற்கும் நாட்டிய சாஸ்திரம் போன்ற நூல்கள் பேருதவியாக இருக்கின்றன.

பரத முனிவரின் பாகுபாட்டின் அடிப்படையில் பாவம், ரஸம் ஆகிய இரண்டின் உறவை இங்கே

ரஸமும்

காண்போம். பாவம் என்று சொல்லப்படும் உணர்ச்சியை 41 தன்மையுடையதாகப் பரதர் பிரிக்கிறார். இவை அன்பு, அருவை, அதிசயம், வெறுப்பு, போதை, சோம்பேறித்தனம், பலவீனம் போன்ற உணர்ச்சிகளாகும். இந்த 41 பாவங்களுள் முதலில் கூறப்பட்டுள்ள எட்டு உணர்ச்சிகள் ஸ்தாயி பாவம் என்ற பெயரைப் பெறுகின்றன. 'ஸ்தாயி' என்றால் நிலைத்த தன்மையுடையவை என்று பொருள். இந்த எட்டு ஸ்தாயி பாவங்களாவன.

1. ரதி —காதல்
2. ஹாஸ —சிரிப்பு
3. சோகம் —துன்பம்
4. குரோதம் —கோபம்
5. உத்ஸாகம் —உற்சாகம்
6. பயம் —அச்சம்
7. ஜிருப்சம் —அருவருப்பு
8. விச்மயம் —வியப்பு.

மேலே குறிப்பிட்டுள்ள எட்டு ஸ்தாயீ பாவங்கள் நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக்கூடிய உணர்ச்சிகள். இவற்றின் நிலைப்புத் தன்மையினால், நிலையான தன்மை இல்லாத வேறு சில பாவங்களோடு சேர்ந்து, இன்னும் பலம் பெற்று, இறுதியில் ரஸங்களாக மலர்கின்றன. அடிப்படை உணர்ச்சிகள்தாம் எட்டு ஸ்தாயீ பாவங்களாகிய இந்த எட்டு ரஸங்களின் மூலப் பொருள்களாகின்றன. ஸ்தாயீ பாவங்களிலிருந்து மலரும் ரஸங்களாவன:—

	பாவம்	ரஸம்
1.	ரதி	—சிருங்காரம்
2.	ஹாஸம்	—ஹாஸ்யம்
3.	சோகம்	—கருணை
4.	குரோதம்	—ரௌத்ரம்
5.	உத்ஸாகம்	—வீரம்
6.	பயம்	—பயானகம்
7.	ஜிருப்சம்	—பீபத்சம்
8.	விஸ்மயம்	—அத்புதம்

41 பாவங்களில் மற்ற 33 பாவங்களுக்கும் பொதுவாக வ்யபிசாரி பாவங்கள் என்று பெயர். வ்யபிசாரி என்றால் ஒன்றை இழுத்துக் கொள்வது என்று பொருள். வ்யபிசாரி பாவங்கள் நிரந்தரத் தன்மையுடையவை அல்ல. ஆனால், இந்தப் பாவங்கள் தோன்றி, ஸ்தாயீ பாவங்களைப் பலப்படுத்திவிட்டு மறைந்து விடுகின்றன. ஆகவே இவை ரஸம் உண்டாவதற்கு உதவுகின்றன. வ்யபிசாரி பாவங்கள், ஸ்தாயீ பாவங்களை ரஸமாக மாற்றுவதற்கு இழுத்துச் செல்லுகின்றன.

உதாரணமாக, ஒரு காதலி, தன் காதலன் வேறு பெண்ணைச் சேர்ந்தான் என்று எண்ணிப் பொறுமை உணர்ச்சி கொள்வது வ்யபிசாரி பாவமாகும். இந்தப் பாவமே 'ரதி' என்னும் ஸ்தாயீ பாவத்தைப் பலப்படுத்தி, 'சிருங்காரம்' என்னும் ரஸமாக மலர உதவுகிறது. இதில் பொறுமையோ, அல்லது காதலன் மீது உண்டாகிய கோபமோ, அல்லது தன்னுடைய சோர்வோ நிரந்தரமானவை அல்ல. ஆகவே இது போன்ற துணை உணர்ச்சிகள் மூல உணர்ச்சிக்கு அழுத்தம் கொடுத்துவிட்டு மறைந்து விடுகின்றன.

ஒவ்வோர் உணர்ச்சியும் உருவாக ஏதோ ஒரு காரணம் இருக்கும். இந்தக் காரணம் விபாவம் எனப்படும்; ஸ்தாயீபாவம் எழுவதற்கு விபாவம் தேவை. உதாரணமாக, சோகம் என்னும் ஸ்தாயீ பாவம் எழுவதற்குக் கடுமையான சொற்கள், பிரிவு, இழப்பு, இழிவு, இறத்தல், இரத்தல், கைது செய்யப்பட்டிருத்தல் போன்ற சூழ்நிலைகள் துன்பம் விளைவிக்கக் கூடியவை. இவை அனைத்தும் விபாவங்களாகும்.

ஆனால் விபாவங்கள் மட்டும் ஸ்தாயீ பாவங்களைப் பரிமளிக்கச் செய்யா. இந்த விபாவங்களை அவற்றின் விளைவுகளைக் கொண்டு நிர்ணயிக்க வேண்டும். அதாவது, இந்த விபாவங்களின் பலன்களைக் கலைஞர்கள் அபிநயம் மூலம் காட்ட வேண்டும். உதாரணமாக, கண்ணீர் வடித்தல், புலம்புதல், மயங்கி விழுதல், உறுப்புகளில் ஏதோ இல்லாதது போல் நடித்தல் போன்றவை மூலமாக விபாவங்களின் பலன்களைக் காட்டலாம். விபாவங்களின் உடனடிப் பலன்களை அநுபாவம் என்பர்.

உணர்ச்சிப் பெருக்கால் உண்டாகும் பலனைச் சாத்துவிக பாவம் என்று மற்றொரு பெயராலும் குறிப்பிடுவதுண்டு. நாட்டியசாஸ்திரத்தில் சாத்துவிக பாவம் என்பதை முறையாக விவரிக்கவில்லை என்றும், சாகித்ய தர்ப்பணம் என்னும் நூலில் சாத்துவிக பாவமே குறிப்பிடவில்லை என்றும், ஆகவே சாத்துவிக பாவமும் அநுபாவமும் ஒன்றுதான் என்றும் சிலர் கருதுகின்றனர். இது தவறு.

விபாவங்களின் பலன் அநுபாவம் என்று கூறும்போது விபாவங்களின் பலன்களை எப்படி அநுபவிக்கிறோம் என்று புரிந்துகொள்கிறோம். இந்த அபிநயம் ஆங்கிக வாசிக ஆஹார்ய முறைகளில் இருக்கலாம். அவற்றை அநுபாவமாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் சாத்துவிக பாவம் என்றால் உண்மையான மனக்கிளர்ச்சியின் பிரதிபலிப்பாக அது அமைய வேண்டும். இது எந்த ஒரு ரஸத்திலும் ஏற்படக்கூடிய தெளிவாக இருக்கலாம். உதாரணமாக, உடல் சிலிர்த்தல் என்பது எந்த உணர்ச்சியின் அடிப்படையிலும் இருக்கலாம். உடல் சிலிர்ப்பது போல ஆங்கிக முறையிலோ, வாசிக முறையிலோ அபிநயித்தால் அது அநுபாவமாகும். உண்மையிலேயே உடல் சிலிர்த்தால் அது சாத்துவிகமாகும். சாத்துவிக பாவங்கள் எட்டு வகை; அவையாவன:

1. ஸ்வேதம் —வியர்த்தல்
2. ஸ்தம்பம் —ஸ்தம்பித்தல்
3. அஸ்ரம் —அழுதல்
4. வைரண்யம் —நிறம் மாறுதல்
5. ....
6. ரோமாஞ்சம் —புல்லரித்தல்
7. ஸ்வரஸ்பதம் —குரல் மாறுதல்
8. பிரளயம் —மயக்கம்

ரஸம் பிறக்கும் வழி: விபாவம், அநுபாவம், சாத்துவிக பாவம், வ்யபிசாரி பாவம் ஆகியவற்றின் சேர்க்கையால் ஸ்தாயீ பாவம் பலம் அடைகிறது. இந்த ஸ்தாயீ பாவத்தைக் கலைஞர் அபிநயிக்கும்போது ரஸிகர்களும் அதே உணர்ச்சியைப் பகிர்ந்து கொள்கின்றனர். அதனால் அவர்களுக்கு எழும் ஆனந்தந்தான் ரஸம். சம்ஸ்கிருதத்தில் ரஸம் என்று சொல்வதைத் தமிழில் சுவை என்று சொல்கிறோம்.

ரஸத்தைச் சுவையோடு பரதரே ஒப்பிட்டிருக்கிறார். சமைக்கும்போது பல சுவைகளையும் உப்பு, புளி, மிளகு, காய்கறிகள் யாவற்றையும் கலந்து இறுதியில் அந்தச் சுவைகளில் எதுவுமே தனித்தனியாக நில்லாது. கலந்து ஒரு நல்ல சுவையை நமக்குத் தருகின்றன. அதேபோல் பல பாவங்களும் சேர்ந்து ஒரு ரஸத்தை உற்பத்தி செய்கின்றன. சர்க்கரை, மிளகாய் போன்றவை யாவற்றுக்கும் தனித்தனியே சுவை உண்டு. இதே போல் விபாவம், அநுபாவம், வ்யபிசாரி பாவம் யாவற்றுக்கும் தனித் தன்மை உண்டு. மேற்கூறிய சுவைகளை அதிகம் உண்ண முடியாது. மற்றவற்றுடன் அளவோடு சேர்க்கும் முறையறிந்து சேர்த்தால் அதை ரஸமாகச் சுவைக்கிறோம். ஆகவே, பல பாவங்களால் உறுதியடைந்த ஸ்தாயீ பாவந்தான் ரஸம் உண்டாக்க வல்லது. எட்டு ஸ்தாயீ பாவங்களினால் எட்டு ரஸங்கள் பிறக்கின்றன என்று பார்த்தோம். சாந்தம் என்பதை ஒன்பதாவது ரஸமாகப் பிற்காலத்தில் சேர்த்து நவ ரஸம் என்று பேரிட்டனர் போலும்.

விருப்பு, வெறுப்பு அற்ற நிலை சாந்தம். இதில் பல உணர்ச்சிகள் எழ வாய்ப்பில்லை. ஆகவே இது ரஸமாகச் சேர்த்துக் கொள்ள முடியாது என்று சிலர் கருதுவர். ரஸங்கள் எட்டா ஒன்பதா என்ற சர்ச்சை பண்டைய நாள் முதல் இன்று வரை இருந்து கொண்டே இருக்கிறது.

இந்தச் சர்ச்சைக்கிடையே, இதைப் பற்றி வேதாந்திகள் கூறுகிற கருத்து, இதற்குத் தீர்வு கூறும் வகையில் அமைந்துள்ளது. நாட்டிய சாஸ்திரத்துக்கு உரை எழுதிய அபிநவகுப்தர் வேதாந்தக் கண்ணோட்டத்தோடு இதை ஆராய்ந்துள்ளார். இவர் ஒன்பது ரஸங்களையும் விவரித்த பிறகு இறுதியாக ரஸம் என்பது ஒன்றே ஒன்றுதான் என்கிறார். அதை ஆன்மாவின் அநுபவம் என்றும், வெறும் உடல் உணர்ச்சிக்கு அப்பாற்பட்டது என்றும் நிரூபிக்கிறார். உதாரணமாக, கருணை ரஸத்தைக் குறிப்பிடுகிறார். அழுவது என்பது நிஜ வாழ்க்கையில் யாரும் விரும்பாத ஒன்று, ஆனால் அதுவே ஒரு நாடகத்தில் இடம் பெறும் போது ரஸிகர்கள் அழுது கொண்டே மனநிறைவோடு ரஸிக்கிறார்கள். அந்த அழுகை அவர்களுக்கு ஆனந்த அநுபவத்தை அளிக்கிறது. இதற்குக் காரணம் இந்த நாடகம் அவர்கள் உடல்களைத் தொடுவதில்லை; ஆனந்தமயமாக இருக்கும் ஆன்மாவைத் தூண்டிவிடுகிறது. ஆகவே, ரஸம் என்பது ஆன்மாவுக்கு ஆனந்தமளிக்க வல்லது. இந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் ரஸம் என்பது ஆன்ம அநுபவம் என்ற ஒன்றையே குறிக்கும்.

*

எலக்ட்ரானிக்ஸ் துறையில் முன்னணியில் நிற்கும் பி.இ.எல். சென்னைக்கு வந்து விட்டது

பி.இ.எல். விற்பனை நிலையம்

S.I.E.T. பில்டிங்
312, அண்ணா சாலை
சென்னை-600 018

எல்க்ட்ரானிக்ஸ் உதிரி பாகங்களை (காம்போ-னென்ட்கள்) இனி சென்னையில் எங்கள் பிரத்தியேக விற்பனை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரேடியோ, டெலிவிஷன் செட்டுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பொறியியல் வல்லுனர்-களுக்கும் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் ஆக்க வேலைகள் பலவற்றில் செயல்படுபவர்களுக்கும் அத்தியாவசி-யத் தேவையான இண்டக்ரேடட் ஸர்க்யூட்டுகள், ஸெமி கண்டக்டர்கள், ஸெராமிக் கபாஸிட்டர்கள், ரிஸீவிங் வால்வுகள், டெலிவிஷன் ட்யூபுகள் போன்ற உறுப்புகளை எங்கள் விற்பனை நிலையத்திலிருந்து நேரடியாகப் பெறலாம்.

மேலும் இவ்விற்பனை நிலையத்தில் அமைக்கப் பட்டுள்ள "அப்ளிகேஷன் லாபரடரி"யில் இஞ்சினியர்களுக்கும், சிறு தொழில் துறையினருக்-கும் பி.இ.எல். காம்போனென்ட்களை உபயோகிக்கும் முறைகளை சொல்லித் தருகிறோம். இணைப்புகளில் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கிறோம்.

டெல்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், சென்னை நகரங்களில் உள்ள பி.இ.எல் விற்பனை நிலையங்கள் தன்னிகரற்ற நுண் உறுப்புகளை உத்திரவாதத்துடன் உங்களுக்கு அளிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்திய பாதுகாப்புத் துறையின் கீழ் நிறுவப்பட்ட பி.இ.எல். நிறுவனம், இன்று நூற்றுக்கணக்கான நுண்ணிய, நவீன எலக்ட்ரானிக்ஸ் உறுப்புகளையும், சாதனங்-களையும் உருவாக்கி எலக்ட்ரானிக்ஸ் துறையின் முன்னேற்றத்தில் இருக்கிறது.

உங்கள் தேவைக்கு—சேவைக்கு

BEL **பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்.**
(ஒரு இந்திய அரசாங்க நிறுவனம்)
பெங்களூர் • காஜியாபாத் • புனே

CAS-BEL-8045 Tam

ஜோதிடர்கள் மன்னிப்பார்களாக!

லிப்கோவின்

குடும்ப ஜோதிடம்

ஜோதிடர் உதவியின்றி ஜோதிடம் கற்றுக் கொள்ளவும், ஜாதகம் கணிக்கவும், விவாஹப் பொருத்தம் பார்க்கவும், சுப முகூர்த்தங்களுக்கு நாட்கள் குறிப்பிடவும், தினப் பலன், மாதப் பலன்களைக் காணவும், ஆருடங்களையும் மற்றும் ஸகல அம்சங்களையும் அறியவும் ஓர் அரிய நூல்.

அநுபவமிக்க ஆசிரியக் குழுவின் பல்லாண்டு ஆராய்ச்சியின் பலனே இந்நூல்.

274 பக்கங்கள்: ப்ளாஸ்டிக் உறையுடன்

விலை ரூ. 7-20 தபாலில் ரூ. 9-75

"குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு உதவும் மினி பாக்கெட் என்சைக்ளோபீடியா."

2-ஆம் பதிப்பு: 344 பக்கங்கள்: விலை ரூ. 8-00 தபாலில் ரூ. 10-55

மற்றும் சில பயன் தரும் லிப்கோ வெளியீடுகள் :

1. நவக்ரஹ க்ஷேத்ர புராணம் ரூ. 6-60
2. திருப்புகழ் மஞ்சரி ரூ. 2-00
3. கௌரீ கல்யாணம் வைபோகமே (கல்யாண, பண்டிகை, மங்கள ஹாரதி பாட்டுகள்) ரூ. 7-20
4. விரத பூஜா விதாநம் (36 விரத பூஜைகள்) ரூ. 7-20
5. மாங்கல்ய ஸ்தவம் ரூ. 1-50
6. ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஹ்ருதயம் ரூ. 1-50
7. ஸ்ரீ மஹா பக்த விஜயம் ரூ. 10-50
8. ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் ஸ்ரீமத் திராவிட வேதங்களும் ரூ. 9-50
9. ஸ்ரீ C. R. S. ஸுந்தர காண்டம் (வசனம்) ரூ. 15-00
10. ஸ்ரீமத் பகவத் கீதை (தமிழில் மூலமும் உரையும்) ரூ. 7-50
11. ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும் ரூ. 3-50
12. ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும் ரூ. 7-50
13. ஆறுமுகனுக்குகந்த ஆறு படைவீடுகள் ரூ. 7-50
14. விவாஹ மந்த்ரார்த்த போதினி ரூ. 2-50
15. அபிராமி அந்தாதி (மூலமும் உரையும்) ரூ. 2-00
16. ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ (மூலமும் உரையும்) ரூ. 2-90

'கலைமகள்' வாசகர்களுக்கு விசேஷச் சலுகைகள்!

1. ரூ. 20-க்குக் குறையாமல் ஆர்டர் செய்பவர்களுக்கு 10-12-1980-க்குள் இவ்விளம்பரத்தைக் குறிப்பிட்டுப் பூரா பணமும் **முன்னதாகவே** M. O. அல்லது டிராப்ட் மூலம் அனுப்பினால் தபாற் செலவு முற்றிலும் இலவசம். V. P. P. இல்லை.
2. ரூ. 250-ஐ எம்மிடம் 3 ஆண்டுகளுக்கு நியாயமான வட்டிக்கு முதலீடு செய்பவர்களுக்கு ரூ. 75 பெறுமான **லிப்கோ** புத்தகங்கள் **முற்றிலும் இலவசமாக உடனடியாக** அனுப்பிவைக்கப்படும். முழு விவரங்கட்கும், விலைப் பட்டியலுக்கும், விண்ணப்பத் தாளுக்கும் எழுதுக.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை - 600017 ★ திருச்சி - 620002

52 ஆண்டுகள் பொன்னான சேவை!

ரேடியோ பிரியம்வதா!

'அகஸ்தியன்'

ஞாயிற்றுக்கிழமையாதலால் காலை மணி ஏழரை ஆகியும் திருவாளர் பஞ்சு படுக்கையை விட்டு எழுந்திருக்காமல் பாதி தூங்கியும் பாதி விழித்தும் இனிமையான சோம்பேறித்தனத்தை அநுபவித்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம் அவர் வீட்டு வாசல் கேட் 'ஞொய்' என்று சப்தமிட்டது. (கீல்கள் எண்ணெய் கண்டு ஏழு மாமாங்கமானதால் இப்படிச் சோக கீதம் இசைக்கும்!)

தொடர்ந்து, ''அங்க்கிள்'' என்று இனிய பெண் குரல்.

ஒரு விஷயம் எட்டிக்காயாகவும் அதே சமயம் சாக்ரினாகவும் இனிக்க முடியுமா? முடியும். அது அழகி பிரியம்வதாவின் குரல்.

திருமதி பஞ்சுவுக்கு அந்த எம்.ஏ. படித்துக் கோவில் மாடு மாதிரி சுற்றி வருகிற தளுக்குக்காரியின் குரல் எட்டிக்காய், பாகற்காய், சிகைக்காய்.

ஆனால் பஞ்சுவுக்கோ தேனையும் பாலையும் கருப்பஞ்சாற்றில் கலந்தது போல் ஊனிலும் உயிரிலும் கலந்து உவட்டாமல் இனித்தது.

''ஏன்னா, உங்களைத்தான். சோம்பேறித் திலகம் அவர்களே! எழுந்திருங்கோ. உங்க ஃப்ரண்டு மேக் அப் மோகினி பிரியம்வதா வந்திருக்கிறாள். போய்ப் பல்லை இளியுங்கள்'' என்று பஞ்சு மாமி பாதி நடிப்பும் பாதி வெடிப்புமாகச் சொன்னாள்.

''உள்ளே அவளை உட்காரச் சொல். இதோ வருகிறேன்'' என்று சொல்லிக் குளியலறைப் பக்கம் விரைந்தார் பஞ்சு.

''வாம்மா, குழந்தை, பாத்து ரொம்ப நாளாச்சு. உட்கார். மாமா வந்துடுவார். உன்னைக் கண்ணிலேயே காணோமே, கல்யாணம் ஆயிடுத்தோன்னு நெனைச்சேன்.''

''இல்லே ஆண்ட்டி. கல்யாணம் என்றால் உங்களுக்குத் தெரிவிக்காமல் இருப்பேனா? கல்யாணத்துக்கு என்ன அவசரம்?''

''ஆமாம், ஆமாம்'' என்று பஞ்சு மாமி சொல்லிவிட்டு மனத்துக்குள், 'எதுக்கு அவசரம்? ஊரில் இருக்கிற ஆம்பிளைங்களோடு கெக்கேபிக்கேன்னு சிரிச்சுண்டு பாதி உடம்பைக் காண்பிச்சுண்டு மேனா மினுக்கியாச் சுத்திவர உனக்குக் கல்யாணம், வீடு, வாசல் என்கிற கட்டுப்பாடுகளைப் போட்டுக்க என்ன அவசரம்?' என்று சொல்லிக்கொண்டாள்.

அவசரம் அவசரமாகப் பல்லைத் தேய்த்துவிட்டுத் தலையை வாரிக்கொண்டு தம் சோடாப் புட்டிக் கண்ணாடியைப் போட்டபடியே பஞ்சு அங்கு வந்தார்.

''ஹலோ, பிரியம்வதா! எப்படி இருக்கே? பஞ்சுமாமி, நம்ப பிரியம்வதாவுக்குக் காபி, ஓவல் ஏதாவது குடேன்.''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம், அங்க்கிள். ஒரு உதவி பண்ண முடியுமா?''

''ஒண்ணு என்ன? ஓராயிரம் செய்யறேன்'' என்று நாடகபாணியில் பஞ்சு சொன்னார்.

''என்ன உதவி வேண்டும், பிரியம்வதா?''

''எனக்கு ஒரு புஸ்தகம் வேணும். சைனீஸ் லாங்க்வேஜ் இன் ஸிக்ஸ் மன்த்ஸ் என்ற புஸ்தகம்.''

''என்னது? சைனீஸ் மொழிப் புஸ்தகமா? கத்துக்கறயா என்ன?''

''ஆமாம், அங்க்கிள். இப்போ பல சர்வதேச மகாநாடு இந்தியாவில் நடக்கிறது. சீன மொழி தெரிஞ்சவங்களுக்கு மொழி பெயர்ப்பாளர் வேலைக்கு நல்ல டிமாண்ட். என் 'நீஸ்' நிரஞ்சனா இதில் டிப்ளமா வாங்கியிருக்காள். ஒரு நாள் 'இன்டர்பிரட்டர்' வேலைக்கு முந்நூறு ரூபாய் குடுக்கிறாங்க.''

''என்னது, முந்நூறு ரூபாயா? மாசமெல்லாம் உழைச்சாக்கூடச் சம்பாதிக்க முடியாதே!'' என்று பேச்சில் கலந்துகொண்டாள் பஞ்சு மாமி.

''உன் 'நீஸ்' சைனீஸ் கத்துண்டிருக்கா, சபாஷ்! அதனால் நீயும் கத்துக்கப் போறயாக்கும்?''

''இல்லே, அங்க்கிள். நான் ஆறு மாசமாப் படிச்சுண்டு வரேன். ஓரளவு தெரியறது. இந்தப் புஸ்தகம் நோட்ஸ் மாதிரி நன்னா இருக்கறதாச் சொன்னார்கள்.''

''நான் எங்கேயாவது தேடிப் புடிச்சு வாங்கித் தருகிறேன், பிரியம்வதா'' என்றார் பஞ்சு.

''இதோ பாருங்க. இந்த இன்ஷ்யூரன்ஸ் வேலையிலே மாசம் ரெண்டாயிரம் கூடச் சம்பாதிக்க முடியாது. உங்களுக்கு இருக்கிற திறமைக்கு நீங்க மூணே மாசத்தில் சீன பாஷையைக் கத்துண்டிடலாம். கத்துக்குங்க, நல்ல பணம் கெடைக்கும்'' என்று மிகவும் நைஸாக ஐஸ் வைத்தாள் திருமதி பஞ்சு.

பஞ்சுவோ மும்முரமாக ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தார். சில வாரங்களாக அவருக்கு ரேடியோ தயாரிப்பதில் ஆர்வம் பிறந்தது. அவரது மேஜைமேல் டிரான்ஸிஸ்டர் தயாரிப்புக்குத் தேவையான பல உபகரணங்கள் கிடந்தன. ஒயரிங் படங்கள் கொண்ட புத்தகங்கள் பிரிந்து கிடந்தன.

''நான் சொல்றது காதிலே விழுந்ததா? இந்த ரேடியோ பண்ற வேலையில் ஒரு பைசா வரப்போறதில்லே. வீண் செலவுதான். நீங்களும் நாலு மாசமா ஏதேதோ பத்தவச்சு என்னென்னவோ பாகங்களை வாங்கி மாட்டி, கழட்டி, மாட்டி அவஸ்தைப் படறீங்க. ஒரே ஒரு நாள் கொஞ்ச நேரம் எம்.எஸ். சுப்ரபாதம் வந்தது. அதுகூட எம். ஆர். ராதா குரல் மாதிரி இருந்தது.''

இதைக் கேட்டுப் பஞ்சு ஒருபடி மிகையாகவே சிரித்துவிட்டார்.

''தோலைக் கடிச்சுத் துருத்தியைக் கடிச்சுத்தான் வேட்டை நாய் ஆகணும்.''

''உங்க பொழுதுபோக்கு நம்ப கையையும் பர்ஸையுந்தானே கடிக்கிறது?''

''பஞ்சு மாமி, எல்லா ஹாபியிலும் லாபம் எதிர்பார்க்க முடியாது. பொழுது போறதே உற்சாகம். அதுவே லாபம்.''

''ஒத்துக்கொள்றேன். அந்தக் குழந்தை பிரியம்வதா கத்துக்கற மாதிரி நீங்களும் சைனீஸ் கத்துண்டா, கொஞ்சம் பணம் வருமே!'' என்றாள் பஞ்சு மாமி.

'சாதாரணமாகத் தாடகை, சூர்ப்பணகை, பூதகி என்றெல்லாம் வர்ணிக்கப்படும் பிரியம்வதா, இப்போது உனக்குக் குழந்தை ஆகிவிட்டாளா?' என்று பஞ்சு மனத்துக்குள் கேட்டுக்கொண்டு, ''ஹூம். அவளைக் கேட்டுப் பார்க்கிறேன், எங்கே, யார் சொல்லிக்குடுக்கறாங்கன்னு'' என்றார் பஞ்சு.

''வாடியம்மா, குழந்தை! மாமாவே உன் வீட்டுக்கு வரணும்னு இருந்தார். ஏதோ புஸ்தகம் வேணுமின்னு சொன்னியே; அதை வாங்கிண்டு வந்துட்டார். என்ன சாப்பிடறே?''

''ஆண்ட்டி, இப்போதான் வீட்டில் சாப்பிட்டுட்டு வர்றேன்.''

''சாப்பிடாமல் வருகிறாய்னு நான் சொன்னேன்? ரெண்டே ரெண்டு ஸ்பூன் ஹார்லிக்ஸ் போட்டு

ஒரு வாய் கரைச்சுண்டு வர்றேன். மாமா, டிரான்ஸிஸ்டர் பண்ற வேலையில் முழுகிக்கெடக்கார். அவரை அனுப்பறேன். உட்காரு ஃபானை நன்னாப் போட்டுக்கோ,'' ரேஷன் அரிசி மாதிரி குழைந்தாள்.

பஞ்சு மாமியின் உற்சாகமான வரவேற்பைக் கண்டு பிரியம்வதாவே அசந்துவிட்டாள். 'பாவம்! நல்ல மாமி. இவரைப்பற்றி நாம்தான் தப்பாக நினைத்துக்கொண்டிருந்தோமோ?' என்று தன்னையே சந்தேகிக்கவும் செய்தாள்.

''ஹலோ, பிரியம்வதா! உன் புஸ்தகம் கெடைச்சுட்டுது.''

''தாங்க்ஸ் அங்க்கிள். ஆமாம், நீங்க ரேடியோவெல்லாம் சொந்தமாத் தயார் பண்ணுறீங்கன்னு ஆண்ட்டி சொன்னாங்க. எனக்குச் சொல்லிக் குடுக்கறீங்களா?''

''நானே ஆரம்பப் பாடத்தில்தான் இருக்கேன். எனக்கே டயோடுக்கும், கபாசிட்டருக்கும், செமி கண்டக்டருக்கும் சமயத்தில் குழப்பம் வருது. நடுவில் ரெஸிஸ்டன்ஸ், ஆஸிலேட்டர், ஐ.ஃஎப்.டி. என்றெல்லாம் வந்து திணற அடிக்குது.''

''சும்மா தமாஷுக்குச் சொல்றீங்க, அங்க்கிள். எனக்கும் கத்துக் குடுங்க, ப்ளீஸ்ன்.''

அந்தக் கொஞ்சலில் பஞ்சு உறைந்தே போய்விட்டார்.

இந்தச் சமயத்தில் பஞ்சு மாமி ஹார்லிக்ஸுடன் அங்கே வந்தாள்.

''என்ன கத்துக் குடுக்கச் சொல்றே அம்மா?'' என்றாள்.

''ஆண்ட்டி, எனக்கு டிரான்சிஸ்டர் பண்ற முறையைச் சொல்லிக் குடுக்கச் சொல்றேன்.''

''அவருக்கே கத்துக்க வேண்டியது நெறைய இருக்கு. ரெண்டாவது, இது காசு செலவழிக்கிற வேலைதான். ஒரு பைசா லாபமும் கெடையாது.''

''யார் சொன்னது ஆண்ட்டி? இப்போ குட்டி டிரான்ஸிஸ்டருக்கு லைசென்ஸ் வாங்க வேண்டியதில்லை. அதனாலே டிமாண்ட் எக்கச்சக்கமா ஆயிட்டுது. இப்போ நாமே 'அசெம்பிள்' பண்ணி விற்க ஆரம்பிச்சாக் கொள்ளைப் பணம் பண்ணலாம். டில்லியில் டிரான்ஸிஸ்டர்களை, சிவகாசியில் வத்திப் பொட்டி பண்ற மாதிரி, குடிசைத் தொழில் மாதிரி வீடு வீடாப் பண்றாங்களாம். இந்துஸ்தான் டைம்ஸில் போட்டிருக்கிறார்கள், ஆன்ட்டி. பண்ணினால் எல்லாத்திலேயும் பணம் இருக்கு'' என்று பிரியம்வதா கூற, திருமதி பஞ்சு மாமி 'ஆ'வென்று வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

''இல்லேடி குழந்தை, இவரையானால் சைனா பாஷை கத்துக்கோங்கன்னு நான் சொல்லிண்டிருக்கேன்.''

''ஆமாம், பிரியம்வதா. மாமி தொணைச்சு எடுக்கறா. இப்போ கிளாஸில் சேர்ந்தா என்னாலே பழைய பாடங்களை மேக்-அப் பண்ண முடியுமா?''

''எல்லாம் முடியும் அங்க்கிள்.''

''அப்படி ஏதாவது சந்தேகம் வந்தால் பிரியம்வதாவைக் கேட்டுக்கோங்கோ. ஏண்டியம்மா, நீ சொல்லிக் குடுக்கமாட்டியா என்ன?''

''எனக்குத் தெரிஞ்ச அளவு சொல்லித் தரேன். ஆண்ட்டி. ஆனால் அங்கிள்தான் டிரான்சிஸ்டர் அசெம்ப்ளி சொல்லித் தர, பிகு பண்றார்.''

''உன் அங்க்கிள் விளையாட்டுக்குச் சொல்வார். நீ அவருக்குச் சொல்லிக் குடு. அவர் உனக்குச் சொல்லிக் குடுப்பார். உனக்கு ஒழிஞ்சப்போ இங்கே வந்துடு. ஹார்லிக்ஸ் ஆறிப் போறது, சாப்பிடும்மா.''

பஞ்சுவுக்கு எல்லாமே இனிமையான கனவுபோல் இருந்தது.

'பரஸ்பரம் ட்யூஷன் என்கிற அற்புதமான வாய்ப்புக் காரணமாகப் பிரியம்வதாவை அடிக்கடி சந்திக்க முடியும், அதுவும் பஞ்சு மாமியின் பரிபூர்ண அநுமதியுடன். வழக்கமான அர்ச்சனைகள் இல்லாமல்! ஆகா! சீனமொழியே நீ வாழ்க! டிரான்ஸிஸ்டரே நீ பல்லாண்டு வாழ்க.' பஞ்சு காஸ் பலூனாக மிதந்தார்.

"பிரியம்வதா, இதுதான் பிரிண்டட் போர்டு. சர்க்யூட் டயாக்ராம் பாத்துக்கோ. இது அவுட்புட், இது இன்புட். ரெஸிஸ்டர்களை 'ஓம்' கணக்கில் சொல்வார்கள். பிரணவ மந்திரம் மாதிரி இந்த 'ஓ'மும் ரேடியோத் தயாரிப்பில் முக்கியமானது. இது ஆடியோ ஸ்டேஜ்.''

''ஆடியோ ஸ்டேஜுக்கு அப்புறம் ஆனியோ ஸ்டேஜ், ஆவணியோ ஸ்டேஜ் வருமா? இல்லே, ஆடியோ என்கிற பரத நாட்டியம் ஆடுகிற ஸ்டேஜ் மாதிரியா?'' என்று கேட்டுச் சில்லறையைக் கொட்டியதுபோல் சிரித்தாள் பிரியம்வதா.

''அங்க்கிள்! சைனீஸ் மொழியும் ரொம்பத் தமாஷானது. சீன மொழியிலே எழுத்தே கிடையாது. டைரக்டா வார்த்தைகள்தான். மாண்டரின், கான்டனீஸ் என்று ரெண்டு விதப் பாணியில் சீன மொழி இருக்கிறது. நம்ப ஊரில் தஞ்சாவூர்த் தமிழ், திருநெல்வேலித் தமிழ் என்று இருக்கிற மாதிரி. சைனீஸ் டைப்ரைட்டரில் நிமிஷத்துக்குப் பதினஞ்சு வார்த்தைகள் டைப் அடிச்சாலே பெரிய ஸ்பீடாம்.''

''அப்படியா?'' என்று கூறிக்கொண்டே மேஜைமேல் கையை வைத்த பஞ்சு, ''அப்பாடியோவ்! அம்மாடியோவ்!'' என்று கையை உதறிக்கொண்டே துள்ளிக் குதித்தார்.

''ஐயோ! அம்மாடி! கை..கை!'' என்றார்.

''அங்க்கிள், என்ன ஆச்சு?'' என்று பிரியம்வதா மெய் விதிர்க்கப் புருவம் துடிக்கக் கேட்டாள். (அதாவது அப்படிக் கேட்ட மாதிரி இருந்தது பஞ்சுவுக்கு.)

டிரான்சிஸ்டர் பாகங்களை ஈயப் பற்று வைக்கும் சூடான ஸோல்டரிங் கம்பியின் மேல் கையை வைத்து விடவே அது நன்றாகச் சுட்டுவிட்டது.

''அங்க்கிள், உடனே பர்னால் போட்டுக் கட்டுங்க'' என்று கூறி அவர் கையைப் பிடித்துச் சூடுபட்ட இடத்தை லேசாகத் தடவி வாயால் ஊதி விட்டாள்.

ஆகா! ஆயிரம் குடம் ஐஸ் பன்னீரைக் கையில் ஊற்றியது யார்? இப்படிப்பட்ட சுகத்துக்காகத் தீயைப் பரப்பி அதிலே புரளலாமே! மனத்துக்கு இதமான இந்தச் சிவபூஜை சமயத்தில் திருமதி பஞ்சு என்னும் கரடி(ணி) அங்கே நுழைந்தாள்.

''ஆண்ட்டி, அங்க்கிள் கையைச் சுட்டுண்டுட்டார்'' என்று பிரியம்வதா, தானே கையைச் சுட்டுக்கொண்டது போன்ற பாவத்துடன் சொன்னாள்.

ஒரு கணம் தோன்றிய கோபத்தையும் எரிச்சலையும் சட்டென்று அடக்கிக்கொண்ட பஞ்சுமாமி, ''அடடா! பாத்து வேலை செய்யப்படாதோ? என்ன ரேடியோவோ, என்ன சூடோ?'' என்றாள்.

''அங்க்கிள், இனிமேல் தினமும் ரெண்டு மணி நேரம் சைனீஸ் கத்துக்கோங்கோ. வருகிற ஜனவரியில் டிப்ளமாப் பரீட்சை எழுதணும்'' என்று பிரியம்வதா சற்றுக் கண்டிப்புடன் சொன்னாள்.

''ஆமாம், நீங்களும் கஜினி முகமது மாதிரி விடாம முயற்சி பண்ணிண்டிருக்கிங்க. ரேடியோவோ ஔரங்கசீப் மாதிரி சங்கீதம் என்கிற பேச்சையே எடுக்கமாட்டேங்கறது; மௌனவிரதம் அனுஷ்டிக்கிறது'' என்றாள் பஞ்சு மாமி.

''காயில் வைண்டிங்கில்தான் ஏதோ மிஸ்டேக். ரைட்டோ பிரியம்வதா! பாடத்தை ஆரம்பி'' என்று கூறி நோட்டை எடுத்துக் கொண்டார் பஞ்சு,

பிரியம்வதா பாடம் துவங்க, பஞ்சு மாமி, ''சரி, படியுங்கோ'' என்று சொல்லி அறையை விட்டு வெளியேறினாள். பஞ்சுவோ, லைலா—மஜ்னு அம்பிகாபதி—அமராவதி, ரோமியோ—ஜூலியட் போன்ற பலரைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார்,

ரேடியோ அசெம்ப்ளியைப் பற்றி அவளுக்குச் சொல்லிக் கொடுப்பார். ஒரு தப்பு இணைப்பைச் சரி செய்யும்போது வேறு ஓர் இடத்தில் தப்பு ஏற்படும். கடைசியில் ஒருவாறாக ஒரு 'கொர்' சத்தம் வரத் துவங்கும். சில சமயம் 'கொர்' சத்தத்துக்குப் பிறகு ரேடியோ தூங்கியே போய்விடும்.

பஞ்சுவும் பிரியம்வதாவும் அந்தச் சமயங்களில் அப்படியே அதை அநாதையாக விட்டுவிட்டுச் சீன மொழிப் பாடத்தில் இறங்கிவிடுவார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சில சில வார்த்தைகள் பேசும் அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது.

பஞ்சுமாமிக்கு ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் சுண்டிப் போய், 'ஏன் இந்தப் பாட விவகாரத்துக்கு ஊக்கம் கொடுத்தோம்?' என்று தோன்ற ஆரம்பித்துவிட்டது. ''அவள்தான் தோளில் புடைவையைநிற்கவைத்துக் கொள்வதில்லை. இந்த மனுஷனும் இப்படி இளித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ரேடியோவும் வேண்டாம்; சீனமொழியும் வேண்டாம். எப்படியாவது இதற்கு முடிவு வந்தால் தேவலை'' என்று ஏழுமலையானுக்கு ட்ரங்கால் போட்டு வேண்டிக் கொண்டாள்.

'பரஸ்பர கோச்சிங்' வகுப்பு நடந்து கொண்டிருந்தது. இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும். யாரோ சிலர் பஞ்சு வீட்டின் கதவைத் தடதடவென்று தட்டினார்கள்.

வழக்கமாகப் பக்கத்து வீட்டுக் காயாம்பூவின் மனைவிதான், கடுகு, உப்பு, புளி முதலியன கடன் வாங்க வரும்போது இப்படிக் கதவை 'லேசா'கத் தட்டுவாள்.

இரவு பத்து மணிக்கு அவள் என்ன கடன் கேட்டுக்கொண்டு வரப்போகிறாள் என்று நினைத்தபடி கதவைத் திறந்தாள் திருமதி பஞ்சு.

போலீஸ்!

நாலைந்து போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

வாசலில் போலீஸ் ஜீப்!

''உங்கள் வீட்டைச் சோதனை போடவேண்டும். இதோ வாரண்ட்'' என்றார் ஒரு விறைப்பான அதிகாரி.

''சோதனையா? எதுக்கு? இதென்ன வேதனை? நீங்க யார்?'' என்று மளமளவென்று அதே சமயம் பயந்தபடி கேட்டாள் திருமதி பஞ்சு.

''கடந்த சில வாரங்களாக இரவு நேரத்தில் ஏதோ ரகசியச் சீன மொழி ஒலிபரப்பு—சங்கேத அறிவிப்புகள் என்று நினைக்கிறோம்-இந்தப் பகுதியிலிருந்து வருவதை ராணுவத் துப்பறியும் இலாக்காவினர் கண்டுபிடித்து எங்களுக்குச் செய்தி சொன்னார்கள். நாங்களும் கண்காணித்தோம். நக்சலைட்டுகள் யாரோ இந்த வீட்டில் இருந்துகொண்டு சட்ட விரோதமாக டிரான்ஸ்மிட்டரை வைத்துக்கொண்டு சீன மொழியில் ஏதேதோ தகவல் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒலிபரப்புத் தெளிவாக இல்லை. சைனாவில் தெளிவாகக் கேட்கக்கூடும். வீட்டில் யார் இருக்கிறார்கள்? எல்லா அறைகளையும் சோதனை போடவேண்டும். கைது செய்வதற்கும் வாரன்ட் கொண்டு வந்திருக்கிறோம்.''

பஞ்சு மாமிக்கு நாக்கு உலர்ந்துவிட்டது. திக் பிரமை பிடித்தவள் போல் ஆகிவிட்டாள்.

பஞ்சுவும் பிரியம்வதாவும் சீன மொழியில் ஏதோ பேசிக்கொண்டிருப்பதையும் பக்கத்தில் ரேடியோ உபகரணங்கள் இருப்பதையும் போலீஸ் அதிகாரிகள் பார்த்தனர்.

இருவரையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு போனார்கள்.

ரேடியோ அசெம்ப்ளி செய்யும்போது சில தவறான இணைப்புகள் காரணமாக அவரை அறியாமலேயே ஒரு டிரான்ஸ்மீட்டரைத் தயாரித்துவிட்டார் பஞ்சு. அது, பஞ்சு பிரியம்வதாவின் சீன மொழிப் பாடங்களை தெளிவற்ற முறையில் ஒலிபரப்ப, போலீஸ் ஸ்டேஷனில் ஓர் இரவு வாசம் புரிய வேண்டி வந்தது.

ஒரு சுபயோக சுபதினத்தில் ரேடியோப் பாடமும் சீன மொழி வகுப்பும் மூட்டை கட்டப்பட்டன.

'ஏழுமலையானே, உனக்கு ஒரு தாங்க்ஸ்' என்று லைட்னிங்-கால் போட்டுச் சொன்னாள் பஞ்சு மாமி! ❋

பாடுபட்டுத் தேடிய பணத்தை ஒரு ஸ்கூட்டர் அல்லது மோபைக்கில் முதலீடு செய்வதற்கு முன் இதனைப் படியுங்கள்—

இன்று, இந்தியாவின் சாலைகளிலே சரித்திரம் படைத்திருக்கும் மோபெடாகத் திகழ்வதற்கு ஏற்ப சுவேகா சாம்ராட் தொழில் நுணுக்கத் திறனுடன், உருவகிக்கப்பட்டு, வடிவமைக்கப் பட்டுள்ளது.

மோபைக்கின் விலையிலே மூன்றில் ஒரு பங்கு, ஸ்கூட்டர் விலையில் சரிபாதி, இவ்விரண்டையும் மிஞ்சும் அளவிற்கு ஒரு லிட்டரில் 60 கிலோ மீட்டர்கள் சவாரி.



புதியவைகளை அளிப்பதில் முன்னோடி சுவேகா

- ஹைட்ராலிக் பின்பக்க ஷாக் அப்சார்பர்கள்
- மெலிந்த, கவர்ச்சியாக வடிவமைக்கப்பட்டுள்ள முன் பக்கத்தில் பொருத்தப்பட்ட பெட்ரோல் டாங்க்
- உட்புற உறுதிக்கொண்ட ப்ரேமில் பொருத்தப்பட்ட டூல் பெட்டி
- பாதுகாப்பிற்கு உறுதியளிக்கும் வகையில் மின் விளக்குடன் இணைக்கப்பட்ட பிரேக் லைட்
- கண்ணைக் கவரும் இரு டோன் வர்ணங்கள்
- ரப்பர் நுரை லைனிங் கொண்ட இருவருக்கான சீட்
- பிரகாசமான மற்றும் மங்கிய ஒளியை அளிக்கக் கூடிய பெரிய ஹெட் லைட்
- எண்ணெய் முழுமையாக எரிக்கப்பட்டு குறைந்த வேகத்திலும் சிறந்த ஓட்டத்தை அளிப்பதற்கேற்ற மெகாபோன் எக்ஸாஸ்ட்

ஆம், சுவேகா சாம்ராட்டினுல் உங்களையறியாமலேயே நீங்கள் கவரப்பட்டு விடுவீர்கள்.

Suvega
சுவேகா
சாம்ராட் இரண்டு சக்கர வண்டிகளில் ஒரு லாபகரமான முதலீடு

மோபெட்ஸ் இந்தியா லிமிடெட்
திருப்பதி, ஆந்திரப் பிரதேசம்

SAA/MIL/1351

Grams : 'PUNANIRMAN'
Telex : 41-436 ACME IN

Phone : off. 20715/6
Res. 443333, 424806

Premier Suppliers Private Limited

(Post Box No. 209)

13, ERRABALU STREET, MADRAS 600 001

Regd. Office :
8, INDIA EXCHANGE PLACE
CALCUTTA 700 001

Branches :
ERNAKULAM-HYDRABAD
DELHI-JAIPUR

Sales Depot :

SIVAKASI, MADURAI & COIMBATORE

(Wholesale Dealers in Paper & Boards)

விசுவரூபம்

பேராசிரியர். இரா. இராதாகிருஷ்ணன்

உலகத்திலே வந்து, அரிய பெருந் தெய்வம் நாராயணன் கண்ணனாக அவதரித்தான். ஆயர் சேரியில் நந்தகோபன் குமாரனாக, யசோதை மகனாக, நப்பின்னை மணாளனாக அற்புதங்கள் நிகழ்த்தினான். கம்சன் போன்ற தீயோரைக் காய்ந்தான். கல்லும் கனிய வேய்ங்குழல் இசைத்த வேணுகோபாலன் பாகவதப் பேரிலக்கியத்தின் தலைவன்.

பூபாரம் தீர்க்கப் பிறந்த புயல் வண்ணன் கண்ணன், பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் இடையே பெரும்போர் நிகழச் செய்தவன். பாண்டவர் ஐவரைத் தவிர அத்துணைப் பேரையும் போர்க்களத்தில் வீழச் செய்து அவதார தத்துவத்தை நிறைவேற்றியவன். தலைமைப் பாத்திரமாகத் தான் துலங்காமல், பின்னிடத்தை ஏறட்டுக் கொண்டு, எல்லாரையும் ஆட்டுவித்த சூத்திரதாரி கண்ணபிரான்.

''எங்குமாய் யாவுமாகி மன்னிய பொருளும் நானே'' என்பான் கண்ணன். எல்லாமாகி நிற்கும் இறைவன், தான் எல்லாமாகும் காட்சியைக் காட்டுதலை ''விசுவரூபம்'' என்பர். பாரதத்தில் நான்கு முறை கண்ணன் விசுவரூபத்தை, தன் நிறை நிலை உணர்த்தும் பேருருவைக் கொள்கிறான்.

பாண்டவர் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து, ஓராண்டு மறைந்திருந்து மீண்டனர். சொல்லியபடி துரியோதனவிடம் நாட்டினைப் பெறுவது எவ்வாறு என்று ஆலோசித்தனர். கண்ணன் தருமனை, ''உன் கருத்து யாது?'' என்று வினவினான்.

''கண்ணா, துரியோதனனிடம் நீயே தூதுவனாகச் செல். பாதி அரசினைக் கேள். துரியோதனன் மறுத்தால் ஐந்து ஊர் கேள். ஐந்து ஊரும் மறுத்தால் ஐந்து வீடாவது கேள். அதையும் தர மறுத்தால் போரிடலாம்'' என்றான் தருமன்.

தருமன் உரை கேட்டபின் கண்ணன் வீமன் கருத்தறிய விரும்பினான். தருமனின் ஈரம் மிகுந்த சமாதானப் பேச்சு வீமனை வெகுளச் செய்தது. ''அண்ணன் தருமனுக்குக் குறை ஏதும் இல்லை. அவன் மாசு மறு அற்றவன். உண்மைதான். ஆனால் மானம் மட்டும் சிறிதும் இல்லை'' என்று சினந்தான் வீமன்; ''துரியோதனனிடம் கண்ணன் தூது போக வேண்டாம்; போரே வேண்டும்'' என்றான். அர்ச்சுனனும், ''பாம்பிற்குப் பால் வார்த்தாலும் நஞ்சொழியப் பயன் தராது. அவ்வாறே துரியோதனனும் நன்மையின் நலத்தை உணரமாட்டான். அவனைப் போரிட்டு அழிப்பதே தக்கது'' என்றான். நகுலனும் போரே வேண்டுவது என்றான்.

கண்ணன் ஞானியாகிய சகாதேவனை நோக்கி அவன் கருத்து யாது என வினவினான். சகாதேவனோ, ''அந்தத்தில் முடியும் வகை அடியேற்குத் தெரியுமோ, ஆதிமூர்த்தி?'' என்றான். பரம்பொருளாகிய கண்ணன் இட்ட முறைப்படி எல்லாம் நடக்கும் எனச் சகாதேவன் உணர்ந்துள்ளதைக் கண்ணன் அறிந்தான்.

அவனைத் தனியிடம் அழைத்துச் சென்றான். ''பாரதப் போர் வராமல் தடுக்க உபாயம் உண்டோ?'' என்று வினவினான். ''கர்ணனுக்கு அரசளித்து, கர்ணனைக் கொல்வதாகச் சபதமிட்டுள்ள அருச்சுனனைக் கொன்று, கௌரவர் நூற்றுவர் குருதியையும் தடவி முடிப்பதாகச் சபதம் செய்து விரித்துள்ள, திரௌபதியின் கூந்தலைக் களைந்து, நின்னையும் சுதந்தரமாகத் திரிய ஒட்டாமல் கால்களையும் கைகளையும் யான் பிணித்தால் பாரதப் போர் நிகழாமல் தடுக்கலாம்'' என்றான் சகாதேவன்.

''பாராளக் கன்னன்இகல்
பார்த்தனை முன் கொன்று
அணங்கின்
காரார் குழல்களைந்து
காலில் தளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து
நின்னையும் யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம்
மாபாரதம் என்றான்.''

கர்ணனுக்கு அரசாட்சியைத் தருவதானால், அவன் நண்பன் துரியோதனன் தடை செய்ய மாட்டான், போருக்கு உரிய வாய்ப்பு இல்லாமல் போகும் என்பது வெளிப்படையான கருத்து.

இங்கு ஓர் அருமையான குறிப்பு உள்ளது: கர்ணன் குந்தியின் மகன் என்று காப்பிய ஆசிரியர் பேசுவாராயினும், காப்பியப் பாத்திரங்களில் கண்ணனைத் தவிர வேறு எவர்க்கும் அவன் பிறப்புத் தெரியாது. சகாதேவனோ தன் தனி ஞானத்தால் கர்ணன் பாண்டவர் ஐவர்க்கும் மூத்தான் என்பதைத் தெள்ளத் தெளிந்ததால் கர்ணனுக்கு அரசைக் கொடுக்கலாம் என்றான் போலும்!

பாரதப் போர் வராமல் தடுக்க உபாயம் கூறிய சகாதேவனைப் பார்த்துக் கண்ணன், ''மற்ற எல்லாவற்றையும் செய்து முடிக்கலாம். நீ என்னை எவ்வாறு கட்டுவாய்?'' என்றான். ''கட்டுவேன்'' என்றான் சகாதேவன். அப்போது கண்ணன் பேருருவம் கொண்டான். ''ஆய வடிவு பதினாயிரம் கொண்டான்'' என்று வில்லிபுத்தூரார் வியப்பார். ஆனால் சகாதேவன் மயங்கவில்லை; அஞ்சவில்லை. மூலமாம் பரம்பொருள் தத்துவத்தைத் தன் மெய்ஞ்ஞானத்தால் ஓர்ந்து, அதனை அன்பெனும் தளையால் பிணித்தான்.

அன்பெனும் பிடியுள் அகப்பட்டுக் கட்டுண்டு கிடந்த பரம்பொருளாகிய கண்ணன், சகாதேவனை நோக்கி, ''இனி என் பாதம் தன்னை விடுக; இப்படிக் கட்டிவிட்டால் நான் எப்படித் தூது போவேன்?'' என்றான். சகாதேவன் நடக்கப் போவது அறிந்து ஒரு வரம் கேட்டான். ''பாரதப் போரில் வந்தடைந்தேம் ஐவரையும் நின் பார்வையால் காக்க வேண்டும், நெடுமாலே!'' என்று வேண்டினான். கண்ணனும் வரம் தந்தான்.

இங்குக் கண்ணன் காட்டிய விசுவரூபதரிசனம் சகாதேவன் மட்டுமே கண்டது. முன்னமே முழுதா[illegible] பொருளை உணர்ந்து அன்பால் பிணிக்கத்தக்க ஞான வல்லமை பெற்றிருந்த சகாதேவனுக்கு இக் காட்சியால் தனிப் பயன் ஏதும் விளைந்தது இல்லை.

கண்ணன் பாண்டவர்க்காகத் தூது நடந்தான். துரியோதனன் கண்ணனை அழிக்க வஞ்சனையால் குழியில் வீழ்த்தினான். அப்போது கண்ணன் இரண்டாம் முறையாக விசுவ ரூபத் திருவிளையாடலை மேற்கொண்டான். அத் திருவிளையாடலின் நோக்கமே துரியோதனன் தான் செய்த பிழைக்கு வருந்தி அஞ்சித் திருந்த வேண்டும் என்பது போலும்!

ஆனால் கண்ணன் விசுவரூபம் கொண்டானே தவிர, துரியோதனனுக்குத் தன்னை உணரும் ஞானக் கண்ணினை வழங்கவில்லை. ஏன் என்பது அவனுக்கே வெளிச்சம்.

ஒரு வேளை, பூபாரம் தீர்க்கப் போரைக் கொணரத் தூது வந்த கண்ணன் துரியோதனனைத் திருந்த விடவில்லை போலும்! பீஷ்மன் முதலானோர் கண்ணனின் பேருருக் கண்டு போற்றி வணங்கினர்; அஞ்சினர்;

அஞ்சலி செய்தனர். ஆனால் எவனுக்கு அச்சம் வரவேண்டுமோ அவன் சிறிதும் அஞ்சவில்லை; வீற்றிருந்த இடத்திலிருந்து சிறிதும் பெயரவில்லை; வணங்கவில்லை; பரம் பொருளின் காட்சி கண்டும் போற்றிப் புகழவும் இல்லை:

''தன்னில் உயர்ந்தவர் யாரும்
இலாமுகில் சதுர்மறையின்படியே,
எந்நிலமும் திரு வடியில் மறைந்திட
இப்படி நின்றிடவும்,
பின்னையும் அஞ்சி அயர்ந்திலன்
நெஞ்சு; பெயர்ந்திலன் ஆசனமும்;
சென்னியிலும் கரம் வைத்திலன்
வன் புகழ் சிறிதும் மொழிந்திலனே.''

இந்த இரண்டாவது விசுவரூப தரிசனமும் தரத்தக்க பயனின்றிக் கழிந்தது.

அருச்சுனனுக்குத் தேர் ஊர்தற்கு இசைந்தருளித் திருத் தேர்த்தட்டிலே வீற்றிருந்து, அருச்சுனன் முன்னர்த் தன் மூன்றாவது விசுவரூபத் திருவிளையாடலை நிகழ்த்தினான் கண்ணன். தன் நிலையை அவனுக்குக் காட்டித் தத்துவம் தெரிவித்தான் என்று இதனை மிகச் சுருக்கமாக வில்லி காட்டுகின்றார். ஆயினும் அத்தரிசனம் கண்ட அர்ச்சுனன் அஞ்சினன். ''உன் திருவடியில் 'கால்' அளவு கூட என்னால் காண இயலவில்லையே! உன் வடிவைச் சுருக்கிக் கொள்'' என்று அருச்சுனன் வேண்டிக் கொண்டான் என மூல நூல் பேசும். தன் கடமையைச் செய்ய அருச்சுனனை இக்காட்சி தூண்டியதே அல்லாமல் இந்தத் தரிசனத்தின் முழுப் பயனையும் அவன் பெறவில்லை.

கண்ணபிரான் இறுதியாக மேற்கொண்டு தன் நிலையைப் புலப்படுத்திய விசுவரூபம், பதினேழாம் நாள் போரிலே, அருச்சுனன் விட்ட அம்புகளால் மெய்த்தலம் முழுதும் திறந்து குருதி கொப்புளிக்கச் சாய்ந்திருந்த கர்ணன் எதிரிலே காட்டப் பெற்றது. தேவர் முதல் யாவரும் கண்டு இன்புற்ற காட்சி இதுதான். கண்ட காட்சியால் உள் நெகிழ்ந்து உருகினான் கர்ணன்.

''அமரரானவரும் அமரயோனிகளும்அமரருக்கு அதிபனானவனும்,
கமலநான்முகனும்முனிவரும்கண்டு
கனகநாள் மலர்கொடு பணிந்தார்;
சமரமா முனையில் தனஞ்சயன்
கணையால்
சாய்ந்துஉயிர் விடவும் செங்கண்
அமலநா ரணனைக் காணவும்
பெற்றேன்.
என்றுதன் அகமிக மகிழ்ந்தான்.''

கண்ணபிரான் திரு அவதாரத்தால் பாரதத்துள் பெரும் பயனைப் பெற்றுக் கொண்டவன் கர்ணன் ஒருவனே என்னலாம். முழுமுதற் பொருளின் திருவருளை முழுவதுமாய்ப் பெற்றவன் கர்ணன் ஒருவனே. கண்ணன் தன்னையே கர்ணனுக்குத் தந்து தனிப் பெரும் பதம் வழங்கினான். பெற்ற பயன் கொண்டு கர்ணன் கண்ட காட்சியினும் பெரியதொரு விசுவரூபம் இல்லை என்ற முடிவுக்கு வரலாம்.

இத்தகைய பெரும் பேறு கர்ணன் எய்தியமைக்கு எது காரணம்?

துரியோதனன், துச்சாதனன், சகுனி, கர்ணன் நால்வரும் பாரதத்துள் கெட்டவர்கள். துஷ்ட சதுஷ்டயம் என்று அவர்களைச் சொல்வார்கள். துரியோதனனிடம் நற்பண்பு தலையெடுக்கும்போது ஏனைய மூவருள் ஒருவன் அவனை நேர்மையினின்றும் மாற்றித் தீமையில் புகுத்தி விடுவான். துரியோதனன் கெட்டமைக்கும், அழிந்தமைக்கும் கர்ணனும் கூடச் சேர்ந்து பொறுப்பேற்க வேண்டியவன். துரியோதனன் உள்ளத்திலே பாண்டவரிடம் பொறாமை இயல்பாக எழுந்தது. அதை மேலும் கனன்று எழச் செய்தவன் கர்ணன். வரம்பு மீறிய அடாத செயலாகப் பாஞ்சாலியின் துகிலை அவையிலே துச்சாதனன் உரிந்தபோது உடந்தையாக இருந்தவனும் ஊக்குவித்தவனும் அவனே. இத்தகைய தீயவனுக்குக் கண்ணன் தன் உருக் காட்டி, ''முத்தியும் பெறுதி முடிவில்'' என்று அருளிச் செய்தான்.

கர்ணனைப் போன்ற தீயவர் முத்தி பெறுவது என்பது நியாயமாகாது. தீயவர்களுக்குத் திருவருள் சேமிப்பு என்றால் பின்னர் உலகத்திலே நல்லவர்களைக் காணவே இயலாமல் போய்விடும்.

கர்ணனுக்குக் கண்ணன் பேருருக் காட்டிப் பேரருள் வழங்கியதில் ஏதோ சூட்சுமம் உள்ளது.

உலகத்திலே நன்மையும் தீமையும் கலந்தே இருப்பன. முழு நன்மையோ, முழுத் தீமையோ, எங்கும் எதனிடத்தும் காண இயலாது. முழுமை, நிறைவுள்ளவன் இறைவன் ஒருவனே.

ஏதேனும் ஒரு நன்மை அளவிட முடியாதபடி விஞ்சும்போது ஒரு மனிதன் பக்குவம் பெற்றுவிடுகின்றான். அந்த ஒரு நன்மையைத் தவிர வேறு எதுவும் அவன் சிந்தனைக்கு எட்டாமல் பற்றுக்களை எல்லாம் துறந்து நிற்பினும் அவனுக்கு உய்யும் வழி உண்டாகிவிடுகிறது. கர்ணன் இவ்வாறே ஒரு நன்மையின் வயப்பட்டுத் தன்னைத் தானே இழந்து நின்றான். கர்ணனின் கொடைச் சிறப்பே அந்த நன்மை. அதனால் கண்ணனின் திருவருள் அவனுக்கு முழுவதுமாகக் கிட்டியது.

பாரதப் போரில் யாவரையும் நீறுக்கிப் பாண்டவர் ஐவரை மட்டும் காக்கும் பொறுப்பேற்ற கண்ணன், கர்ணனிடம் வகையாக அகப்பட்டுக் கொண்டான். அருச்சுனன் வெற்றியிலே பார்த்தசாரதியாகிய கண்ணனுக்குக் குறி. கர்ணனின் உயிர் உடம்போடு ஒட்டி இருக்கும்வரை அருச்சுனனுக்கு வெற்றி இல்லை. இறைவன் குறியே தவறிவிடும் நிலை உண்டாகிவிட்டது. கண்ணன் அருச்சுனனைக் கொண்டு அவனைக் கொன்றாக வேண்டும். கர்ணன் கொடையால் கொண்டிருந்த புண்ணியச் சேமிப்பு, அவனைக் கவசமிட்டுக் காத்தது. அந்தப் புண்ணியத்தைக் கண்ணன் யாசித்துப் பறித்துக்கொண்டான். கனக்கரியானது கைத்தலம் கர்ணன் முன் தாழ்ந்தது. கர்ணனின் கொடைப் பெருமை அவன் தீமைகளையெல்லாம் புறம் போக்கிவிட்டது. புண்ணியத்தை யாசித்துப் பெற்றுக்கொண்ட பரமன் முத்திப் பரிசினைக் கர்ணனுக்கு வழங்குவதைத் தவிர வேறு வழி இல்லாமல், உருவும் காட்டிப் பேரருளும் புரிந்தான். ஒரு பொருளை ஒருவனுக்கு வழங்கினால் புண்ணியம் உண்டாகிறது. அந்தப் புண்ணியத்தையே வழங்கியபோது புண்ணிய மூர்த்தியே அவனுக்கு வசப்பட்டுவிட்டான்.

பாரதத்தில் கர்ணன் ஓர் இன்றியமையாத பாத்திரம். உள்ளக் குமுறலும், கொதிப்பும் கொண்ட ஒரு மானிடப் பாத்திரம் கர்ணன். பல நேரங்களில் உணர்ச்சிக்கு அறிவைப் பணயம் வைத்தவன்; சில நேரங்களில் அறிவு தலைதூக்க நின்றவன்; இறுதிப்போதில் ஞானியாகிவிட்டான்; இல்லை, கண்ணன் அவனை ஞானி ஆக்கித் திருவருளும் பாலித்து அணைத்துக்கொண்டான்.

ஏன் இப்படி என்ற வினாவுக்கு இடமில்லை. பாரதத்துள் இது தெய்வ முறையாக நிகழ்ந்துவிட்டது.

முதலில் பொழுது குறித்துப் பெருமைக்காகக் கொடுத்து வந்த கர்ணன், முடிவில் தன்னையே மறந்து கொடுக்கும் வழக்கத்துக்கு வந்தான். கொடைச் சிறப்பால் அகங்கார மமகாரம் அழிந்து தூயவனாகி நின்றான். எல்லாப் புறக் காரியங்களும் நீங்க, அவன் மனத்தின் பரிசுத்தமும் பக்குவமும் கண்ட பரமன் அவனை வலிய வந்து ஆட்கொண்டான். கெட்டவன் நல்லவனாகி உயர்ந்து உய்தி பெறுவது எவ்வாறு என்பதைக் கர்ணன் பாத்திரம் காட்டுகிறதோ?

❋


योगक्षेमं वहाम्यहम्
தீபாவளியின் கதிர்கள்
இருள் நீக்கி
ஒளிர்வதே போன்று,
எல்ஐஸியின்
சுடர் விளக்கு
சுற்றிலும்
தன் மேன்மையை
பரப்புகிறது.
லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்போரேஷன் ஆப் இந்தியா
PRATIBHA-LIC-408/80

தீபாவளி என்றாலே குதூகலம்!
இந்து என்றாலே பிலிம்!

உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

INDU®

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யூபாக்சரிங் கோ. லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
இந்துநகர் உதகமண்டலம் 643 005

வீடு இரண்டுபடவில்லை; மூன்று, நான்கு, ஐந்து என்று அல்லோல கல்லோலப்பட்டது. ஒருவனை மிஞ்சி ஒருத்தி பேசினாள். ஒருத்தியை மிஞ்சி ஒருவன் பேசினான். எங்கே தம் அபிப்பிராயம் வெறும் காற்றுடன் கலந்துவிடுமோ என்ற பயத்தில் ஓர் அவசரத்துடன் ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் கத்தினார்கள்; இரைந்தார்கள்.

ஆனால் சுலோசனா அங்கேயும் தனித்து நின்றாள். பேச்சொலி நாராசமாகப் பட்டது.

பேச்சு முழுக்க முழுக்க அவளைப் பற்றித்தான். நிலைமை வேறு விதமாக இருந்தால், அல்லது அவளுக்குப் பதிலாக அக்கா ராஜமோ தங்கை சொர்ணமோ இருந்திருந்தால் ஒருவேளை இந்தக் கும்மாளத்தில் அவளும் தன்னை இழந்து கத்தியிருப்பாளோ?

சுவரைப் பார்த்தாள். அப்பாவுக்கு வீட்டைக் கட்டி முடித்த நாளிலிருந்து காலண்டருக்காக ஆணி அடிப்பது பிடிக்காது.

இப்போது சுவரில் அவள் பார்த்ததெல்லாம் தாத்தாவின் போட்டோச் சித்திரந்தான். ஒரு பழைய ஆபீஸ் போட்டோவிலிருந்து சிறிய உருவத்தைப் பெரிதாகப் பண்ணிச் சித்திர வேலைப்பாட்டுடன் தயாரான போட்டோ. தாத்தா உயிரோடு இருக்கும்வரை பிள்ளை, பெண், மருமகள், ஏன், பாட்டிகூடத்தான் அவரைச் சரியாகக் கவனிக்கவில்லை. அப்பாவுக்குக் கூடப்பிறந்தவர்கள் மூன்று தங்கைகளும் ஒரு தம்பியும். எல்லாம் டில்லி, கல்கத்தா, பம்பாய் தான். பாட்டி சுற்றுலாவுக்குத் தயாராவாள்.

சுலோசனா பெருமூச்செறிந்தாள். மணி ஒன்பதே முக்கால். டி.வி.யில் ஆங்கிலச் செய்திக்கான முஸ்தீபுகள் இனிமை அற்ற இசையுடன் அவளுடைய காதில் மோதின. அதை இதுவரையில் யாருமே கவனிக்கவில்லை. தன்னிடமிருந்து தன்னைப் பிரித்துக்கொண்ட சுலோசனா, டி. வி. யை நிறுத்திவிட்டுப் பார்த்தாள். எட்டு ஐம்பதுக்குக் கல்லூரிநாடகம் முடிந்துவிட்டது. ஒன்பதேகாலுக்கு எல்லாரும் வீட்டுக்கு வந்தாகிவிட்டது. பாட்டி என்ன செய்கிறாள், மோரில் சில பருக்கைகளைப் போட்டுக் கரைத்துக் குடித்தாகிவிட்டதா என்று அவள் உட்பட யாரும் இன்னும் கேட்கவில்லை. சட்டக் கல்லூரி அண்ணா மோகன் முதற் காரியமாக டி.வி.யைப் போட்டுவிட்டுக் கண்ணாடிக்குப் போனான். கைகால் கழுவாமல் அப்பா தொப்பென்று சோபாவில் உட்கார்ந்தார். அம்மா, பேசிக்கொண்டே படி ஏறினவள், அடுப்புத்திண்டில் பூனையோ எலியோ ஏதேனும் விஷமம் பண்ணியிருக்கிறதோ என்றுகூடக் கவலைப்படவில்லை. ராஜம் கூடவே வந்த சுலோசனாவை அணைத்துக்கொண்டாள். "யூ ஆர் க்ரேட்!" என்றாள். பாங்கில் குமாஸ்தா! நாளைக்குப் பாங்க் அமளிப்படும்!

சொர்ணம் தன் பொறாமையை எப்போதும் வெளிக்காட்டமாட்டாள்.

சுலோவுக்குக் கிடைக்கும்போது மட்டுமே வெளிப்படுத்துவாள்; அதுவும் ஒரு தனி ரகத்தில். நேரடியாக மட்டம் தட்டத் தெரியாது. மறைமுகமாக, பூடகமாக..

தம்பி பாபு, + 2'இல் இருக்கிறான். ஹாலிவுட்தான் அவனுடைய காசி, ஹரித்துவார் எல்லாம். அவனைப் பொறுத்தவரையில் தமிழ்ப்படம் ஒரு 'வேஸ்ட்.' தென்னிந்தியச் சினிமா வானில் கன்னாபின்னாவென்று கொடி நாட்டித் திணறும் ஓம்நாத், பாபுவைப் பொறுத்தவரையில் ஒரு ரேஷன் கார்டில் உள்ள பெயர்தான். அப்படி இருந்தும் அவனும் பேச்சில் கலந்துகொண்டான். "சுலோவின் முதல் படம் அம்போன்னு போயிட்டா அப்புறம் அவள் சமுத்திர ஸ்நானந்தான் செய்யவேண்டும்" என்றான் அவன்;

இதுவரை கேட்ட, இப்போது கேட்டுக் கொண்டிருக்கிற வார்த்தைகள் சுலோசனாவைப் பாதிக்கவில்லை. பாதிப்பெல்லாம் மறுநாள்தான் ஆரம்பம்.

''உங்களுக்கு நெனைவு இருக்கா, சுலோவை எல். கே. ஜியிலே சேர்க்க நாம ரெண்டு பேரும் போனப்போ அவளைப் பார்த்து ஹெட்மிஸ்ட்ரஸ் ஒரு குட்டி ஸ்டார் மாதிரி இருக்காளேன்னா'' என்றாள் அம்மா.

''சரிம்மா, அவ இப்ப எங்கே இருக்கான்னு தெரியாது; ஆனா கண்டுபிடிச்சுத் தரேன். கிலோ பத்து ரூபாயானாலும் பரவாயில்லை. சர்க்கரையை அவள் வாயில் அடை!'' என்றாள் சொர்ணம்.

''உனக்கேன் சின்னக்கா, பத்திண்டு வர்றது?'' என்றான் பாபு.

''ஓம்நாத், இவ்வளவு பெரிய டைரக்டர், வசன கர்த்தா, பாட்டு எழுதறவர் இவ்வளவு எளிமையா இருப்பார்னு நான் எதிர்பார்க்கவேயில்லை. கார்லே ஏர்றப்போ என் ரெண்டு கைகளையும் பிடிச்சுண்டு என்ன சொன்னார் தெரியுமா?''

ராஜம் இடைமறித்தாள்:

'இல்லை அப்பா, நீங்க ஒண்ணுக்கு ரெண்டாச் சொல்றேள்?''

''நீங்க என்ன நெனைக்கிறேள்? இந்த ஓம்நாத் எத்தனை பேர்களை அறிமுகம் செய்துவைத்திருக்கிறான்! முதல் படத்துக்கு இருபதோ முப்பதோ தரமாட்டானா?''

''நீ போ அம்மா! பெரிய பெரிய ரஜனியே அவ்வளவு வாங்கலையாம். உனக்கு ஒண்ணு தெரியுமா? எத்தனையோ பேர் அந்தப் பக்கம் பணம் கொடுத்து சான்ஸ் வாங்கப் பார்க்கிறார்களாம்! ஏன்னா, ஒரு சான்ஸ் கெடைச்சு அந்தப் படம் அம்பது நாள் ஓடிட்டா அப்புறம் ஸ்டார் தானே?'' என்றாள் சொர்ணம்.

''சுலோ ஸ்டுடியோவிலே மேக்-அப் போட்டுக்கறது எனக்குப் பிடிக்கலே. ஓம்நாத்கிட்டே ஒரு வார்த்தை சொன்னால் போதும். ஷூட்டிங்போறதுக்கு முன்னாடி வீட்டிலேயே போட்டுக்கலாம்.''

''வராசத்தின்னா பூதம் மாதிரி இருக்கு. ஒரு பெரிய அறை எடுக்கலாம்'' என்றாள் அம்மா சாவித்திரி.

''எனக்கு ஒரு கவலைதான்'' என்றார் சதாசிவம்; அப்பா.

''என்ன?''

''என்னப்பா?''

''சுலோவின் காலேஜ்?''

''அதுபாட்டிலே இருந்துட்டுப் போகட்டும்'' என்றாள் ராஜம்.

''இவ இனிமே என்ன படிச்சு யாருக்குக் கிழிக்கணுமாம்? சுலோ காலேஜுக்கு இனிமே போகத் தேவையில்லை.'' தன் அபிப்பிராயத்தை ஒரு முடிவாக வெளியிட்ட சாவித்திரியைச் சதாசிவம் பார்த்தார். உள்ளூறச் சிரித்துக்கொண்டார். ஆனால் அவரை மீறிச் சிரிப்பு உதடுகளிலும் படர்ந்தது.

''ஏன்? எதுக்குச் சிரிக்கறேள்?''

''நம்ப குடும்பத்திலிருந்து ஒரு சினிமா நடிகையா?''

''பெருமைதானே?''

''எல்லாம் வீட்டிலே பேசிக்கலாம். சினிமான்னு போயிட்டா அப்புறம் நம்ம மனசு நம்மது இல்லே; நம்ம உடம்பு?'' என்றாள் சொர்ணம்.

''சீ, மூடும் வாயை!''

''ஏன் சாவித்திரி, அவ வாயை மூடச் சொல்றே? நம்ப வீட்டுப் பொண்ணுன்னா, அவளுக்காகச் சினிமா உலகம் மாறிடுமா?''

''ஓம்நாத் நல்லவன்தான். ஜனாதிபதி விருது வாங்கினவன். ஒரு ஆபாசப் படம்கூட எடுத்ததில்லை. அதுதான் ஒரு தைரியம்'' என்றார் சதாசிவம்.

''ஆபாசப்படம் எடுக்கலேன்னா, சினிமா உலகத்திலே ஆபாசம் இருக்காதுன்னு நீங்களே முடிவு கட்டிட்டேளாப்பா?''

''ஷூட்டிங்குக்கு அவளை நாம தனியாவா அனுப்பப் போறோம்? யாராவது கூட இருப்போமே!'' என்றாள் சாவித்திரி.

''ஸ்டுடியோ வாசல்வரைதான் துணை. மேக்-அப் ரூமிலே, டப்பிங் ஹாலிலே என்னென்ன நடக்கிறதுன்னு யாருக்குத் தெரியும்?''

''சொர்ணம்!'' என்று சாவித்திரி கத்தினாள்.

''ஏம்மா கத்தறே? எங்களுக்கு ஜுரம் கிரம் வந்து டாக்டர்கிட்டே போனா, அவராலே எங்க கையைத் தொடாமலேயே நாடியைப் பார்க்க முடியாதான்னு பொருமுவே. எங்க மார்பிலேயும் முதுகிலேயும் ஸ்டெதாஸ்கோப் வெச்சாலே மூஞ்சியைச் சுளிச்சுப்பே. ஆனா இப்ப உன் பொண் ஸ்டார் ஆகப்போறான்னு குதிக்கிறே! ஹீரோவும் வில்லனும் மாத்தி மாத்தி ஹீரோயினைப் புரட்டி எடுக்கறப்போ பார்க்க ஜோராத்தான் இருக்கும். ஆனா அந்த ஹீரோயின் வேறு யாருமில்லே, நம்ப வீட்டுச் சுலோதான்னு பிரக்ஞை வர்றப்போ, பெரிசா டாக்டரை மனசுக்குள்ளே சபிச்சுக்குவியே!''

''சினிமான்னா அது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம். தொட்டுத்தான் ஆகணும்!'' என்றான் மோகன்.

''போதும், போதும். நிறுத்துங்க. ஐயையோ! மணியைப் பாருங்கள். பத்து அடிச்சுப் பத்து நிமிஷம். எங்கே சுலோ? டீ, சுலோ! நாளைக்குக் கார்த்தாலே ஓம்நாத் காரும் கையுமா வந்து விடுவாரே. அவ சீக்கிரம் தூங்க வேண்டாமோ?''

''நாம எல்லோருமே தூங்கணும்!'' என்றார் சதாசிவம்.

சுலோசனா டி.வி.யை நிறுத்தினாள். ஓரிரு நிமிடங்களுக்கெல்லாம் உள்ளே சென்றாள்,

சமையலறைக்கு வெளியே சாப்பாட்டு மேஜைக்கருகே பாட்டி படுத்துக் கொண்டிருந்தாள்.

''பாட்டி!''

''யாருடீ, சுலோவா?''

''ஆமாம் பாட்டி.''

''நன்னு நடிச்சயாடீ?''

''உம்!''

''என்ன வேஷம்னு சொன்னே?''

''ஹீரோயின்.''

''அது வேஷமில்லே. அது ஒரு தகுதி.''

''பாஞ்சாலி வேஷம்.''

''உனக்குத்தான் திரௌபதி மாதிரிக் கூந்தல் இருக்கே. சரியான வேஷந்தான்.''

''பாட்டி!''

''என்னடீ?''

''சாப்பிட்டயா?''

''இன்னும் இல்லே.''

''கொண்டு வரட்டுமா?''

''கரைச்சுக் குடிக்கிறேன்.''

''இதோ பாட்டி.''

வெள்ளித் தம்ளருடன் திரும்பி வந்த அவள், ''பாட்டி, எனக்கு இன்னிக்கு ஒரு ஸில்வர் கப் பரிசாக் குடுத்தா'' என்றாள்.

''எதுக்கு?''

''நன்னு நடிச்சதுக்கு.''

''சந்தோஷம்டீ. உன் தாத்தா உசிரோடு இருந்தா, சந்தோஷப்படுவார். நீன்னு அவருக்கு உசிர்.''

''பாட்டீ!''

''இருடீ, இதைக் குடிச்சுட்டு வரேன்.''

''சரி, பாட்டி.''

ஓரிரு நிமிடங்கள்.

''இப்பச் சொல்லு.''

''நீ கடைசியா எப்பச் சினிமாப் பார்த்தே?''

''பன்னெண்டு வருஷத்துக்கு முன்னாலே. அதுலேதான் சிவாஜி கணேசன் அப்பாவா வந்தான். இன்னமும் கண் முன்னாலே அப்பா நிக்கறார்.''

''அப்புறம் ஒரு படம்கூடப் பார்க்கலையா?''

''ஆதி சங்கரர் பார்த்தேன். ஆனா டி.வி.யிலே.''

''ஏன் பாட்டி, உனக்கு அந்த மாதிரி படங்கள்தான் புடிக்குமா?''

''நான் பழைய பனசு. நம்ம மனசு எதுலே லயிக்குமோ அதைப் பார்க்கிறதிலேதானே திருப்தி இருக்கும்?''

''இப்ப வர்ற படங்களிலே சிலது நன்னாவே இருக்கு, பாட்டி.''



VTV's role in Oil, Petrochemical and Fertilizer industries

VTV are proud to be associated with FPDIL in executing a number of contracts for fertilizer projects—the few conspicuous ones being: supply of Benfield regenerator, Benfield absorber, RG boiler, stainless steel distillation column, secondary HDS reactor, LP/MP Decomposers, methanators, boiler feed water heater, three stage floating head heat exchanger, a 10,000 tonne and four 5,000 tonne double-walled ammonia storage tanks.

Twenty four years of successful operation has found expression in the construction of 200,000 tonnes of steel storage tanks, 45 storage spheres, 60 process columns, liquid oxygen, nitrogen, hydrogen and ammonia storage tanks, gas holders, several hundred pressure vessels, heat exchangers, clad and alloy steel vessels for 3 grass roots refineries, 18 fertilizer plants, 9 operating refineries, 9 petrochemical projects and 3 steel plants.

VTV, adept in steel plate fabrication, and assuming complete responsibility for detailed engineering, are at work in 10 countries with 47 turn-key projects in hand. At Kuwait International Airport, VTV successfully completed for KAFCO a turn-key project consisting of civil, mechanical, electrical, instrumentation and fire fighting facilities for a sophisticated aviation fuelling system.

A 10,000 MT ammonia storage and handling facility for SPIC, Tuticorin, and a large LP gas unloading facility with 3210 cu.M. capacity spheres, 60 tank wagons unloading gantry, complete with compressors, vaporisers and piping for Salem Steel Plant, are currently under execution.

VTV

VIJAY TANKS & VESSELS PRIVATE LIMITED

93, L.B.S. Marg, Mulund (West), Bombay 400 080, India Phone: 591894 • Telex: 011-4486/011-6486

PISCES/VTV/289

''உங்க மனசு லயிக்கிறதாக்கும்! ஆனா, சுவரிலே வர்ற போஸ்டரைப் பார்க்கிறப்போ, கண்ணைப் புடுங்கிக்கலாம்போல இருக்கு.''

''உனக்கு ஓம்நாத்தைத் தெரியுமா, பாட்டி?''

''யாரு அவன்?''

''சினிமா டைரக்டர்.''

''அவனுக்கு என்ன?''

''காலேஜ் டிராமாவுக்கு அவர்தான் முக்கிய விருந்தாளி.''

''எனக்கு ஓம்நாத்தையும் தெரியாது; ராம்நாத்யையும் தெரியாதுடீ, சுலோ.''

''இடைவேளையின்போது அவரைப் பேசச் சொன்னா.''

''பேசினானோ இல்லையோ?''

''உம். என்னை ரொம்பப் பாராட்டினார்.''

''கண் பட்டிருக்கும். நாளைக்கு உப்பு மொளகாய் சுத்தி அடுப்பிலே போடறேன்.''

''அவரோட புதுப்படத்திலே நான்தான் கதாநாயகி, நான் பெரிய நட்சத்திரமாப் பிரகாசிப்பேன்னு சொன்னார்.''

''துருவன் ஆறு வயசிலோ ஏழு வயசிலோ நட்சத்திரமானான். இன்னும் அப்படியே இருக்கான்.''

''ஓம்நாத் பெரிய டைரக்டர் பாட்டி.''

''நட்சத்திரம்னா அது நிலையா இருக்கணும் சுலோ. அது ஆகாசத்திலே மட்டுந்தான், எட்டேணி எட்ட முடியாத தூரத்திலே மட்டுந்தான் இருக்க முடியும். சினிமா எட்டற தூரம். அதிலே நீ நட்சத்திரம்னு நெனைக்கிறதும் நம்பறதும் வெறும் ஜிகினாதான்.''

''அம்மாவுக்கு வாயெல்லாம் பல்லு, பாட்டி. குதிக்கிறா.''

''உன் அம்மா என்னிக்கு எதுக்குக் குதிக்கலே? அம்மி மிதிக்கறப்போ கூட, ஒரு குதி குதிச்சுத்தான் மிதிச்சா.''

''அப்பாவும் சந்தோஷப் படறார்.''

''உன் அப்பா சந்தோஷத்தை ஒரு கணக்கிலே எடுத்துக்காதே.''

''நீ என்ன சொல்றே, பாட்டி?''

''நான் எது சொல்லி இந்த வீட்டிலே யார் கேட்டிருக்கா? பம்பாயிலே உன் பெரிய அத்தை இருக்கா. உன் அத்தங்கா ஒரே பொண்ணு. மோகனுக்குக் குடுக்கணும்னு அத்தை துடிக்கிறா. ஆனா உன் அப்பாவும் அம்மாவும் பேச்சை எடுத்தாலே முகத்தைத் திருப்பிக்கறா.''

''பம்பாயைப்பத்தி அப்புறம் நெனைக்கலாம் பாட்டி. நீ என்ன நெனைக்கிறே?''

''மோகனுக்கு விஜி ஏத்த பொண்தான்.''

''ஐயோ பாட்டி; ஏன் சீண்டறேள்? நாளைக்குக் கார்த்தாலே டைரக்டர் ஓம்நாத் வந்துடுவார்.''

''எதுக்கு?''

''ஸ்டுடியோவுக்கு அழைச்சுண்டு போக.''

''போய்?''

''பலவிதமா, பல கோணங்கள்ளே போட்டோ எடுப்பா; மைக்கிலே வசனம் பேசச் சொல்லுவா; நடிச்சுக் காண்பிக்கச் சொல்லுவா;''

''அவன்தான் ஊர் அறிய உன்னைத் தன்னோட புதுப்படத்திலே போட்டுக்கப் போறதாகச் சொல்லியாச்சே!''

''ஆமாம். சொன்னார். எல்லாரும் கை தட்டினா.''

''அப்புறம் எதுக்குப் போட்டோ, மைக் எல்லாம்?''

''மத்தவாளுக்கும் என்னைப் பத்தித் தெரியணுமே!''

''சுலோ!''

''என்ன பாட்டி?''

''எனக்கு எத்தனை பேத்திகள்? சொல்லு பார்க்கலாம்.''

''இது என்ன கணக்குப் பாட்டி?''

''சொல்லேன்.''

''பத்து.''

''பத்திலே நீதான் சிலையாட்டம் தங்க விக்ரகம் மாதிரி இருக்கே. பல்லழகு, கண் அழகு, உதட்டழகு, தேகவாகு எல்லாமே சௌந்தரியமா இருக்கு.''

''இது என்ன பாட்டி?''

''உன் அழகு வீணாகப்படாது.''

''அப்படின்னா?''

''காலேஜ்லே படி. படிச்சுட்டு வேணும்னாக் கொஞ்ச காலம் வேலையிலே இரு. அப்புறம் உன் கண்ணுக்கும் மனசுக்கும் நெறைஞ்சவனைப் பார்த்து அவன்தான் எல்லாம்னு இரு.''

சுலோசனா மௌனமானாள்.

''என்னடி, பேசாமே இருக்கே?''

''அதோ அம்மா வர்றா.''

''ஏண்டி சுலோ, இங்கே என்ன வம்பு அளந்துண்டிருக்கே?''

''பாட்டியோட பேசிண்டிருந்தேன், அம்மா.''

''உன் பாட்டி குடிச்ச தம்ளரை அலம்பணும்னு அவருக்குத் தோணலை. உனக்கும் படலை. போ, போய்த் தட்டைப் போட்டுக்கோ. மணி பத்தேகால். கார்த்தாலே ஆறு மணிக்கு எழுந்து புள்ளையார் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணணும்.''

''நட்சத்திரம் பேரில்; இல்லே, சுவாமி பேர்லேயே...''

''உன் நட்சத்திரம் பேர்லேதான். புனர்பூசம். அசட்டுக் கேள்வி கேட்டுண்டு நிக்காதே. இப்படிக் கண் முழிச்சா உன் உடம்பு என்னத்துக்காகும்?''

''அதென்னம்மா என் உடம்பு?''

''சரி, உன் ஃபிகர்னு வைச்சுக்கோயேன். உன் அளவு நான் இங்கிலீஷ் படிக்கலே.''

''இன்னிக்குச் சாயங்காலம் வரையில் என் ஃபிகர் பத்தி உனக்குச் சிந்தனையே இல்லை. இப்பத் திடீர்னு....''

''அதுக்கு என்னைக் கேள்வி கேட்காதே. ஓம்நாத்தைக் கேளு.''

''நாளைக்குக் காலேஜ்லே...''

''நாளைக்குக் கார்த்தாலே குளிக்கறப்போ, காலேஜுக்கும் சேர்த்துக் குளிச்சுடு. நீ புதுமுகம். புது நட்சத்திரம்.''

''அருந்ததின்னு ஒரு நட்சத்திரம்.''

''அப்படி ஒரு நடிகை இருக்காளா? எந்தப் படத்திலே வந்தா? டி.வி.யிலே போட்டாளோ?

''அவளை டி.வி.யிலே போட முடியாதும்மா. டி.வி.காரர்களுக்கு அவா உயரத்துக்கு மேலே கண் தெரியாது.''

''நான் அருந்ததியை எந்தப் படத்தில் பார்த்தேன்னு நெனைவு இல்லை, சுலோ. ஆனா ஒண்ணு சொல்றேன். நீ பெரிய ஸ்டாரா ஆகணும். அஞ்சலியில் ஆரம்பிச்சுப் பத்மினி, சாவித்திரி, சாரதா, லட்சுமி மாதிரி கொடி கட்டிப் பறக்கணும். உன் அதிருஷ்டம் ஓம்நாத் கண்லே பட்டுட்டே!''

''ஏம்மா?''

''என்னடீ! அப்பா சாப்பிடத் தயாரா இருக்கார்.''

''ஒரே ஒரு கேள்வி.''

''என்ன?''

''நான் உன் மாதிரி, பாட்டி மாதிரி, அத்தைகள் மாதிரி, சித்தி மாதிரி இருக்கணும்னு நீ ஆசைப் படவே மாட்டாயா?''

''இது என்னடி, உன் அப்பா மாதிரி அசட்டுத்தனமாக் கேக்கறே? உனக்கு இன்னும் பதினெட்டு ரொம்பலை. நாலு வருஷம் ஸ்டாரா இரு. அப்புறம்..அப்புறம்..''

''அப்புறம் நான் ஸ்ட்ராவாவே போயிடுவேன் அம்மா!''

''சரி சரி, சாப்பிட உட்காரு. உன்னை நான் பெத்திருக்கேன். உனக்கு என்ன புடிக்கும்னு எனக்குத் தெரியும்; எனக்குத்தான் தெரியும்.''

''பாட்டியும் அப்படித்தான் நெனைக்கறாள், அம்மா!''

''பரவாயில்லே. என் மாமியார் இந்த விஷயத்திலே என்னை ஆமோதிச்சிருக்காளே!''

அம்மாவின் பெருமையை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று சுலோசனாவுக்குப் புரியவில்லை.

மறுநாள் ஐந்தரை மணிக்கே குளித்துவிட்டுத் தாமரைப் பூக்கூடையுடன் சுலோ பிள்ளையார் கோவிலுக்குப் புறப்பட்டாள்.

''நல்ல தேங்காயாப் பார்த்து வாங்கு.''

''சரியம்மா.''

''ஓம்நாத் ஏழு மணிக்கு வந்துடுவார்.''

''சரி.''

''ஆறே முக்காலுக்குள்ளே வந்துடு. சுடச்சுட உப்புமாப் பண்ணி வைக்கிறேன்.''

''சரிம்மா.''

சுலோவால் நினைத்தபடி வர முடியவில்லை. அவள் வரும்போது வீட்டு வாசலில் பெரிய படகுக்கார் நின்றுகொண்டிருந்தது. டிரைவர் இல்லை. சற்றே காரினுள் எட்டிப் பார்க்கத் தோன்றியது. பார்த்தாள்.

வேங்கடாசலபதி, முருகன், ஐயப்பன் எல்லாரும் தங்கள் உருவங்களைக் கடுகாக்கிக் கொண்டு காட்சி அளித்தார்கள். ஓர் எலுமிச்சம் பழம், அதனுள் செருகப்பட்டு ஐந்தாறு ஊதுபத்திகள் புகைந்தன.

அவளுக்கு மணம் தெரிந்தும் கமழவில்லை.

பின் இருக்கையில் ஆங்கில, இந்திப் பத்திரிகைகள். எல்லாம் சினிமா! படியேறிச் சென்றாள். ஓம்நாத் அவளைக் கண்டதும் எழுந்திருக்க முயற்சி செய்தார். எவ்வளவு பெரிய டைரக்டர், புது முகங்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவர், பட

இயக்குநர்களில் தலை சிறந்தவர். அப்படிப் பட்டவர் பாராட்டுகிறார். வீடு தேடி வருகிறார். அவளைக் கண்டதும் எழுந்து நிற்க முயல்கிறார். நாற்பது வயதுக்காரர் பதினெட்டுக்கு மரியாதை செலுத்துகிறார்!

''குட்மார்னிங், சுலோ!''

''குட்மார்னிங், ஸார்.''

''டைரக்டர் ஸாருக்கு முதல்லே பிரசாதத்தைக் குடு, சுலோ!'' என்றாள் சாவித்திரி.

''ஸாரி அம்மா, ஸாரி ஸார், முதல்லே உள்ளே இருக்கிற பாட்டிக்கு. இதோ ஒரு நிமிஷத்திலே வரேன்.''

''எனக்கு அது புடிச்சிருக்கு' எனக்கும் என் பாட்டின்னா உசிர். புதுப் படத்துக்குப் பூஜை போடறத்துக்கு முன்னாடி பாட்டி கால்லே தான் விழுவேன்.''

சுலோ திரும்பி வந்தாள்.

''போகலாமா?''

''எங்கே ஸார்?''

''இது என்ன கேள்வி, சுலோ? ஸ்டுடியோவுக்குத்தான்'' என்றாள் அம்மா.

''ஸ்டில்ஸ் எடுக்கலாம். திடீர்னு அணுகுண்டு வெடிக்கிற மாதிரி, உன் போட்டோ எல்லாம் பேப்பர்லேயும் பானர்களிலேயும் ஒரே சமயத்தில் வரப் போறது. ஊரே அதிரப் போறது. பெரிய நக்ஷத்திரம் பார்ன்னு கோஷம் போடப் போறது.''

''நான் ஸார்...''

''சொல்லிவிட்டு உட்கார்ந்தா எப்படி? சீக்கிரம் புறப்படு. அடுத்த மாசம் கோடைக்கானல்லே படப்பிடிப்பு. கதையை மாத்தச் சொல்லியிருக்கேன். அப்புறம் ஜப்பான்லே ரெண்டு மாசம்...''

''பெரிய ஸ்டார் ஆகிவிடுவாள். இல்லே டைரக்டர் ஸார்?''

டைரக்டர் ஓம்நாத் ஒரு தடவை புன்னகை புரிந்தார்.

''என்னைப்பத்தி நானே பேசிக்கறது அவ்வளவு சரியில்லேதான். இதுவரையில் நான் அறிமுகம் செஞ்சு வைச்ச ஒருத்தி கூட உச்சிக்குப் போகாமே இருந்ததில்லை.''

''அருந்ததின்னு ஒரு ஸ்டார் இருக்காளாமே. நான் அவ நடிச்ச படம் எதையும் பார்த்திருப்பதா நெனைவில்லை.''

''அருந்ததின்னு யாரும் ஸ்டாரா இல்லையே!'' என்ற ஓம்நாத் விழித்தார்.

''என் பாட்டிக்குத் தெரிஞ்சது கூட உங்களுக்கெல்லாம் தெரியலை'' என்றாள் சுலோ.

அவர்கள் விழித்தார்கள். அவர்கள் விழித்துக் கொண்டிருக்கையில். சுலோ தன்னுள் ஐக்கியமானாள். சில கணங்களில் காட்சிகள் ஓடின.

குளியல் ஸீன்.

இறுக அணைக்கும் காட்சி.

முதல் இரவுக் கட்டில்.

கால் நிர்வாணம்; அரை நிர்வாணம்.

போஸ்டர் பேனர், கிசுகிசு, முணுமுணுப்பு, பேட்டி, அபிப்பிராயம், மறுப்பு.

திடீரென்று சுலோ 'சுயப்பிரச்னைக்கு வந்தாள்.

''என்னை என் அம்மாவோ, அப்பாவோ, சினிமாவில் நடிக்க எண்ணமிருக்கான்னு இதுவரை ஒரு வார்த்தை கூடக் கேட்கல்லே. ஸார்! நீங்களும் கூடக் கேட்கல்லே!''

''அது ஒரு பெரிய குறையாப் பட்டால் இப்பக் கேக்கிறேன். சுலோ!'' என்றாள் அம்மா.

''ஆமாம்'' என்றார் அப்பா.

''ஒரு நட்சத்திரமா ஆகணும்னு உனக்கு ஆசை இல்லையா மிஸ் சுலோ?'' என்றார் ஓம்நாத்

''இருக்கு. வெளியே இருக்கு!''

''பின் என்ன, புறப்படு.''

அவர் பேச்சு அவள் காதில் விழவில்லை.

''அருந்ததி மாதிரி ஆகணும்னு ஒரு ஆசை, ஒரு வெறி இருக்கு.''

''அப்படி ஒரு நட்சத்திரத்தைப் பத்தி நான் கேட்டதேயில்லையே!''

''ஆனாப் பார்க்கலாம். அஸ்தமிச்சப்புறம் கண்ணிலே படுவாள்.''

சுலோ பிரசாதத் தட்டுடன் உள்ளே சென்றாள்.

எல்லாவற்றையும் உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த பதினாறு வயதுப் பாபு, ''அக்கா, நீ ரொம்பப் பெரியவ; நெசமா ரொம்ப ரொம்பப் பெரியவ!'' என்று சொல்லி அவள் கன்னத்தை நிமிண்டினான். ❋

ஆனந்தமான தீபாவளி வாழ்த்துக்கள்

கொசுக்களை விரட்டுகிறது

டார்டாய்ஸ்

கொசு வர்த்திச் சுருள்

தயாரிப்பாளர்:

பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்

:.போர்ட், பம்பாய்-400 023. :.போன்: 273831.

everest/80/BCL/401-tm

With best compliments

from

The Mettur Chemical and Industrial Corporation Limited

Mettur Dam 636402

(Tamil Nadu)

Large Scale Manufacturers of

Caustic Soda (Commercial and Rayon Grade: Lye, Solid and Flakes)
Stable Bleaching Powder
Liquid Chlorine
Hydrochloric Acid
Potassium Chlorate
Calcium Chloride
Sulphate of Alumina
Methyl Chloride
Methylene Chloride
Carbon Tetrachloride
Chloroform
Ethyl Silicate-40 (Metsil-40)
Silicon Tetra Chloride
Chlorinated Paraffin Wax

everest/80/UBI/471·tm

குத்து விளக்கு

ஸி.ராஜப்பா

மூன்று தடவைகள் டெம்போ நிறையச் சாமான்களை ஏற்றி அனுப்பும் வரை மௌனமாகப் பார்த்துக் கொண்டேதான் நின்றார் சத்தியமூர்த்தி. மாடியிலிருந்து பெரிய பெரிய சாமான்களை இறக்க முடியாமல் ஆட்கள் மாடிப்படி வழியாகச் சிரமப்பட்டு இறக்கும்போதெல்லாம் அவர் மனத்தில் இரக்கம் தோன்றவில்லை. நந்துவும், பிரபாவும் தாங்களாகவே வலியச் சென்று சாமான்களை இறக்குவதில் ஆட்களுக்கு உதவியபோது அவர் அரக்கனாக மாறிச் சீறினார்,

''டேய் நந்து! நீ என்ன கூலிக்காரனா? வீடு மாற்றிப் போகிறவன், பணம் கொடுத்து ஆள் வைத்திருக்கும்போது நீ வலியப் போய் உதவ வேண்டிய அவசியம் என்னடா?'' அவர்மீது ஏற்பட்ட வெறுப்பை மறைத்து, நந்துவும் பிரபாவும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

''வேறு யாருக்கும் உதவி செய்யவில்லையே! என் சிற்றப்பாவுக்கு, உங்கள் உடன் பிறந்த தம்பிக்கு நானும் என் தங்கையும் உதவுகிறோம். அதுகூடத் தப்பா?''

''வாயை மூடு! எனக்கில்லாத பரிவும் பாசமும் உனக்கு என்னடா?''

ஏன்தான் அவர் அப்படிப் பேசுகிறார் என்று அவர் குடும்பத்தார் யாவரும் வருந்தினர். அவர் மனைவியும் அவரைத் தடுத்துப் பார்த்தாள். ஆனால் சத்தியமூர்த்தி ருத்திரமூர்த்தியாக நின்றாரே தவிர, பிடிவாதத்தில் சற்றும் தளரவில்லை.

அப்படி என்ன வெறுப்பு, தம் தம்பிமீது அவருக்கு?

சத்தியமூர்த்திக்கு ஒரே தம்பிதான். சுந்தரம் என்றால் அவருக்கு அத்தனை அபிமானம். பத்து வயதுக்குள்ளேயே அப்பாவையும் அம்மாவையும் இழந்தபின் அண்ணாவின் ஆதரவில் வளர்ந்த சுந்தரத்தை அப்போதுதான் புதுக்குடித்தனம் நடத்தத் தொடங்கியிருந்த சத்தியமூர்த்தி, தம் குழந்தையாகவே எண்ணி வளர்த்து வந்தார். அவர் மனைவி, சுந்தரத்தைத் தன் தம்பி போல் பார்த்துக் கொண்டது வெளி மனிதர்களுக்கே பெரும் வியப்பாக இருந்தது.

அந்தச் சுந்தரம் வளர்ந்து, பெரியவனானான்; படிப்பு முடிந்ததும், வேலை தேடி அலைய வாய்ப்பின்றி, கல்கத்தாவில் தாம் வேலை பார்க்கும் நிறுவனத்திலேயே வேலையும் கிடைக்க வழி செய்தார். திருமணமும் முடித்தார். ஆனால் சுந்தரத்தின் படிப்பும், தகுதியும் அவனைச் சத்திய மூர்த்தியின் மேலதிகாரியாக வரும்படி மாற்றியது அவனுடைய தவறா?

''என்ன மிஸ்டர் சத்தியமூர்த்தி, இன்னும் நாலு வருஷத்தில் ரிடையர் ஆகப் போகிறீர்கள். சுந்தரம் உங்களுக்கு மேலதிகாரியாக வந்ததால் உங்களை என்ன அதட்டி மிரட்டி வேலை வாங்கிவிடப் போகிறானா? உங்கள் சொந்தத் தம்பி; நீங்கள் பார்த்து வளர்த்த செடி; அது பெரிதாகிப் பூத்துக் குலுங்குவதைக் கண்டு உங்களுக்கே பொறுக்கவில்லையா?'' என்று எதிர்வீட்டு வக்கீல் அசோக் முகர்ஜி செய்த இதோபதேசம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்தான் என்பதைச் செயலில் காட்டினார் சத்தியமூர்த்தி. நந்துவும் பிரபாவும் மிகவும் வருந்தினார்கள், அவர் போக்கைக் கண்டு.

''அம்மா, என் சிநேகிதர்கள் எல்லாரும், 'ஏன் உன் சிற்றப்பா உங்கள் வீட்டிலிருந்து போகிறார்?' என்று கேட்கிறார்கள்? என்ன பதிலை அம்மா சொல்வது?'' நந்து கேட்டான்.

''ஏம்மா பேசாமல் இருக்கிறாய்? என்னையும் அனிதாவும், ஷோபாவும் இதே கேள்வி கேட்கிறார்கள்! சித்திக்கும் உனக்கும் ஏதாவது சண்டையோ என்று சந்தேகப்படுகிறார்கள், அம்மா'' என்று பிரபா பொருமினாள்.

அவர்களுக்கு எதைச் சொல்லிச் சமாதானப்படுத்துவது?

''நான் என்ன பதிலைச் சொல்லட்டும், நந்து? வெளியில் தலைகாட்ட வழியில்லாமல் உங்கள் அப்பாவின் பிடிவாதப் போக்கு . என்னையும் பாதித்திருக்கிறதே! வீட்டில் சுந்தரம் பேச்சை எடுத்தால் எப்படிச் சீறுகிறார்! சிற்றப்பா சின்னப் பையனாக இருந்தபோது, நீங்கள் பிறக்கும் முன்பே எத்தனை அன்போடு வளர்த்து ஆளாக்கினேன்! எனக்கே இத்தனை வருத்தம் இருக்கும்போது, 'நீ வேறு இடம் பார்த்துக் கொண்டு போ' என்று சுந்தரத்திடம் சொல்ல எப்படித்தான் உன் அப்பாவுக்கு வாய் வந்ததோ?'' அம்மா வடித்த கண்ணீர், அவர்களையும் கண்கலங்கச் செய்தது.

''ஏன் அண்ணா திடீர் என்று என்னை வேறு இடம் பார்த்துக்கொள்ளச் சொல்கிறாய்? இந்த ராஷ்பிஹாரி அவின்யூவில் இதே வீட்டில் உன்னோடு இருபது வருஷ காலம் இருந்துவிட்டு, இப்போது நான் தனியாகக் குடித்தனம் போனால் பலரும் பலவிதமாகப் பேசமாட்டார்களா?'' -சத்தியமூர்த்தியின் மேலதிகாரி சுந்தரம் தன் வீட்டில் இப்படிக் கெஞ்சுவதை யாராவது பார்த்துவிட்டால் கௌரவம் என்னாவது? ஆனால் பணிவாகப் பரிவுடன், காரணம் என்னவென்று புரியாமல் சுந்தரம் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து நின்றவாறே கேட்ட கேள்விக்கு, ஐந்து நிமிஷம் சத்தியமூர்த்தி மௌனம் சாதித்தார்.

சுந்தரத்தின் மனைவி பானு வாய் திறவாமல் தரையைப் பார்த்துக் கொண்டே தலை குனிந்து அவன் பின் நின்றாள். அவர்கள் காதில் சத்தியமூர்த்தியின் குரல், பதிலாக ஒலிக்கவில்லை. அதற்கு மாறாக அவர் மனைவியின் விசும்பலும் நந்து, பிரபாவின் பெருமூச்சொலியும் நன்றாகக் கேட்டன. எரிமலை பிறகு வெடித்தது. ''எனக்குப் பிடிக்கவில்லை! நீ வேறு இடம் பார்த்துக்கொள்; அவ்வளவுதான்!'' என்ன மனிதர் இவர்!

''அண்ணா, நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! என்ன தவறு செய்தேன், அண்ணா? அதையாவது சொல்லக் கூடாதா?'' சுந்தரத்தினால் அதற்கு மேல் பேச முடியவில்லை.

சத்தியமூர்த்தியின் மனைவிக்குத் துணிவு எங்கிருந்துதான் வந்ததோ?

''சுந்தரம், உன் அண்ணா சொல்லும் காரணத்தை வெளியில் சொன்னால் வெட்கக் கேடு! நான் வாயில்லாப் பூச்சி. என் பேச்சை யார் கேட்கப் போகிறார்கள்? பானு, ஒன்று மட்டும் சொல்கிறேன்; உனக்கும் கல்யாணமாகி இந்த நாலு வருஷத்திலே நான் ஒரு கடுஞ் சொல் உன்னைச் சொன்னதில்லை. இங்கிருந்து இடம் மாறிப் போவதற்கும் நான் பொறுப்பில்லை, பானு! அதோ, படத்தில் இருக்கும் அம்மாமீது ஆணையாகச் சொல்கிறேன்!'' என்று ஆவேசம் வந்தாற்போல் பேசி நிறுத்தினதும், சத்தியமூர்த்தியின் குனிந்த தலை மேலே நிமிர்ந்தது.

''அம்மா!'' என்று சுந்தரம் வாய்விட்டுக் கூறி அன்னையின் படத்தைப் பார்த்துக் கை கூப்பி வணங்

கிறான். அவன் கண்களில் நீர் நிறைந்ததைச் சத்தியமூர்த்தி கவனித்தார்.

'அவனை நீதான் ஆளாக்க வேண்டும்' என்று இறுதி மூச்சின்போது அன்னை கேட்டுக்கொண்ட கடைசி வார்த்தைகள் அவர் நினைவை விட்டு இன்னும் அகலவில்லை. ஆனால் அதிக நேரம் அது நீடிக்கவில்லை. அவர் தாம் அவனை வளர்த்து ஆளாக்கிவிட்டாரே! கடமையைத்தான் நிறைவேற்றியாகிவிட்டதே! இனி என்ன?

வாயிற்புறம் விட்டு அகலாமல், அத்தனை சாமான்களும் மாடியிலிருந்து இறங்கிப் போகும் வரை காவல்காரன்போல் அமர்ந்திருந்தார், சத்தியமூர்த்தி. வீட்டினுள் அவர் மனைவியும் நந்து, பிரபாவும் அவரை வசைமாரி பொழிந்து தாழ்ந்த குரலில் பேசுவது, அவர் காதிலும் அரைகுறையாகவே விழுந்துகொண்டுதான் இருந்தது. ஹூம்! அந்த மனிதர் வாயே திறக்கவில்லை.

கடைசி நடையாக 'டெம்போ' நான்காம் தடவையும் சாமான்களை ஏற்றிச் செல்ல வந்துவிட்டது. இனி எடுத்துச் செல்லப் பெரிய சாமான் ஏதும் இல்லை. டெம்போக்காரனுக்குக் கட்டணத்தைக் கொடுத்து அனுப்ப வேண்டியதுதான்.

சுந்தரம், தான் வளர்ந்து, பெரியவனாகி, படிப்பு முடித்து, திருமணமாகிக் குடித்தனமும் நடத்திய அந்த வீட்டை விட்டு, அண்ணாவின் அன்பு அரவணைப்பிலிருந்து இதோ இன்னும் பத்து நிமிஷங்களில் கிளம்பப் போகிறான். மௌனமாக நிற்கும் தன் மனைவியைப் பார்த்தான்.

''பானு, அண்ணாவுக்குச் சொல்ல முடியாத வெறுப்பு என்மேல் ஏனோ ஏற்பட்டிருக்கிறது; இடம் மாறினாலும் நாம் இங்கே அண்ணாவைப் பார்க்க வராமலா இருப்போம்? நமக்கு அவரிடம்விரோதம் எதுவும் இல்லையே! நீ வருத்தப்படாதே. இந்தக் குத்துவிளக்கை அம்மா எனக்குக் கொடுக்கச் சொன்னதாக அண்ணா பத்திரப்படுத்திக் கொடுத்திருக்கிறார், பார்! அது எங்கே எப்போது ஒளிச்சுடர் விடும் போதும் நம் மனத்துக்கு அமைதி உண்டு, பானு. அம்மாவின் அன்பு முகம் எனக்கு அதில் எப்போதும் தெரியும், பானு. அதை நீ கையில் எடுத்துக் கொள். நாம் அண்ணாவைப் பார்த்துச் சுமுகமாகவே பேசி, நந்து, பிரபாவிடமும் மன்னியிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பலாம்.,வா!'' என்றான். பானு இந்த விசித்திரக் குடும்பத்தின் போக்கை நாலு வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் புரிந்துகொண்டாள்.

இத்தனை பொறுமைக் குணம் மிகுந்த மனிதர், எப்படித்தான் தன் கணவரை, அந்தச் சிறு வயதிலிருந்து இத்தனை பொறுப்போடு வளர்த்தார் என்பதுதான் புரியவில்லை அவளுக்கு.

''நீ இங்கே இருப்பது பிடிக்கவில்லை; வேறு இடம் பார்த்துக்கொள்!'' என்று எத்தனை சுலபமாகச் சொல்லிவிட்டார்!'' கல்கத்தாவில் நினைத்தால் இடம் மாறிப் போவது சுலபமா? அநாவசியமாக ஆயிரத்து முந்நூறு ரூபாய் வாடகையில் சித்தரஞ்சன் அவின்யூவில் ஒரு வீடு. அத்தனை பெரிய இடம் இருவருக்குத் தேவையே இல்லை. அண்ணாவின் மனம் அதைவிட விசாலமானதாக இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை இருந்ததே! இப்போது அது குறுகிவிடவே, விசாலமான இடத்துக்கு வாடகை கொடுத்துக்கொண்டு வேண்டா வெறுப்பாகப் போக வேண்டியிருக்கிறது.

சத்தியமூர்த்தியிடம் விடைபெற்றுக்கொள்ளச் சென்றான் சுந்தரம். பானு கையில் குத்து விளக்குடன் தயங்கித் தயங்கி நடந்தபடி, சுந்தரத்தின் பின்னால் சென்று நின்றாள். 'ருத்திரமூர்த்தி' சத்தியமூர்த்தி என்ற பெயரில் சோபாவில் அவர்கள் வருகையை அறிந்தும் மௌனமாக உட்கார்ந்திருந்தது. அவர் மனைவியும் சுந்தரத்தை நிமிர்ந்து பார்க்கக் கூசியபடி அருகில் நின்றாள். அன்னையாக இருந்து வளர்த்தவளே வாய் திறக்க வழியின்றி நிற்கும் நிலை அங்கே வேதனை கலந்த அமைதியைப் பரவச் செய்தது.

''சித்தப்பா!''

''சித்தி!'' நந்துவும் பிரபாவும் அப்பாவின் கோபத்துக்குப் பயந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் சுந்தரத்தின் அருகில் வந்து நின்று, அழுகையை அடக்கிக்கொண்ட போதுமா, அந்த விசித்திர மனிதர் மனம் கரையாது? வெளியே டெம்போக்காரன், இந்த நாடகத்தைப் பார்த்துப் பொறுமை இன்றி ரசித்துக்கொண்டு நின்றான். அவனுக்கும் அரைகுறையாகவே ஏதோ தெரிந்திருந்தது.

''அண்ணா, இதுவரைக்கும் நீ எது சொல்லியும் நான் தட்டிச் செய்ததே இல்லை. இப்போதும் நீ சொன்னதையே நான் செய்கிறேன் அண்ணா! ஆசீர்வதித்து அனுப்பு அண்ணா!'' அவனே வார்த்தைகள் தடுமாறிப் பச்சைக் குழந்தை போல் அழும்போது மற்றவர்கள் மனநிலையை விவரிக்க வேண்டுமா?

''டேய் சுந்தரம்! என் வார்த்தைக்கு என்றைக்கும் நீ மதிப்பு வைப்பாய் என்று தெரிந்துதான் உன்னை இங்கிருந்து போ என்கிறேன்.'' உறுமியது சோபா.

''இப்போதும் அதையே தீர்மானமாகச் சொல்கிறீர்களா?'' சத்தியமூர்த்தி மனைவியின் தழுதழுத்த குரல் இது.

''ஏம்மா, சித்தப்பாவும் சித்தியும் கிளம்பிப் போகத் தயாராக நிற்பதைப் பார்க்கவில்லையா? தடுத்து நிறுத்தப்போகிறாயா?'' பிரபா கடுகடுப்புடன் அப்பாவைப் பார்த்தபடி, அந்தக் கேள்வியை அம்மாவிடம் கேட்டாள். சத்தியமூர்த்தி சோபாவில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''டேய்! அம்மா கொடுத்த அந்தக் குத்து விளக்கு இந்த வீட்டைச் சேர்ந்தது. இங்கே இருந்தவரை உன்னிடம் இருக்கட்டும் என்று கொடுத்து வைத்தேன். அதையும் எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டாயா? அதைப் பிரிந்து என்னால் இருக்க முடியாதுடா!'' குரலில் கடுமை சற்றுக் குறைந்தாற்போல் தோன்றியது.

''நீங்கள் பேசுவது கொஞ்சமும் சரியில்லை. போகிற இடத்திலாவது குடும்பம் செழித்து நிம்மதியாக இருக்க வேண்டும் என்று ஆசீர்வதிக்கப் பிரியமில்லாவிட்டாலும், அந்தக் குத்து விளக்கையுமா பறிக்கத் தோன்றுகிறது உங்களுக்கு?''

சத்தியமூர்த்தியைஅவ்வளவு கடுமையாக அதுவரை கண்டித்திராதவள் முதல் தடவையாக அப்படிச் சீறினாள்: அவர் மனைவி: இத்தனை அரக்கக் குணம் படைத்தவனா தன் கணவன் என்று வேதனைப்பட்டாள்.

''உங்கள் போக்கே சரியில்லை, அப்பா!'' பிரபா சித்தியை நிமிர்ந்து பார்க்கக் கூசியபடி சொன்னாள். சுந்தரம் இன்னுமா பொறுமையோடிருக்கிறான் என்று வியந்தாள் பானு.

''அண்ணா, உனக்குப் பிரியமில்லை என்றால் நான் இதையும் எடுத்துப் போகவில்லை. பானு, மன்னியிடம் அந்தக் குத்துவிளக்கைக் கொடுத்துவிடு'' என்று சுந்தரம் அந்த நிலையிலும் பொறுமையிழக்காமல் பேசினது, நந்துவுக்கு வியப்பாக இருந்தது. 'இப்படியும் ஒரு சாதுவான சித்தப்பாவா' அண்ணாவும் தம்பியும் எத்தனை வேறுபட்டவர்கள், சுபாவத்தில்!'

''நாக்கு நடுங்காமல் தீபாவளிக்கு ஒரு வாரம் இருக்கும்போது 'வீட்டை விட்டுப் போ' என்று நீங்கள் சொன்னது போதாதா? அந்தக் குத்துவிளக்கு, தீபாவளித்தினத்திலாவது அவர்கள் புதிதாகக் குடிபோகும் அந்த வீட்டில் சுடர் விடட்டுமே! அந்தப் பாக்கியம் கூட அவர்களுக்கு இல்லாமல்

தடுக்க எப்படி மனம் வந்தது உங்களுக்கு? நரகாசுரன் கூடத் தான் மறைந்த நாளைத் தீபத் திருநாளாகக் கொண்டாட வேண்டும் என்று வரம் கேட்டான் என்பார்கள். அசுரனையும் மிஞ்சிய அசுரனாக இருக்கிறீர்களே! நீங்களே மனமார உங்கள் சொந்தத் தம்பிக்கு, உங்கள் அம்மாவின் விருப்பப்படி கொடுத்த அன்புப் பரிசான அந்தக் குத்து விளக்கையும் புது வீட்டில் ஏற்ற வழியில்லாமல், 'இங்கேயே வைத்துவிட்டுப் போ' என்கிறீர்களே! உங்கள் செய்கை உங்களுக்கே சரி என்று தோன்றுகிறதா?'' இதற்கு மேலும் உறைக்கும்படி அவள் என்ன கேட்க முடியும்?

''அண்ணாவை அப்படியெல்லாம் நீங்கள் தாக்கிப் பேசுவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.''—சுந்தரத்தின் இந்தப் பதில் சத்தியமூர்த்தியின் நெஞ்சைத் தொட்டிருக்க வேண்டும். ஒரு தடவை அவனை நிமிர்ந்து பார்த்துப் பெருமூச்செறிந்தார்.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''டேய் சுந்தரம், உன்னைத் தான் கேட்கிறேன். உனக்கு நினைவிருக்கிறதா?''

''எதைச் சொல்கிறாய் அண்ணா?'' குரலில் எத்தனை பவ்யம்!

''உனக்கு இருபது வயசாக இருக்கும்போது, இதே கல்கத்தாவில் எஸ்ரா தெருவில் நகரத்தார் விடுதி நடத்தின கந்தசஷ்டியின்போது நீ என்ன செய்தாய்? யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவர்கள் நடத்தின தேவார, திருவாசக, திருப்புகழ்ப் பஜனைக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு, ஸ்ட்ராண்டு ரோடு முருகன் கோவிலிலே போய் ராத்திரி எத்தனை நேரம் உட்கார்ந்து கிடந்தாய்! இதே அண்ணா சில மணி நேரங்கள் உன்னைக் காணவில்லை என்பதால் யார்யாருக்கெல்லாம் எத்தனை டெலிபோன் செய்து விசாரித்தேன்! இந்தக் கல்கத்தாத் தெருக்களில் உன்னை எங்கேயெல்லாம் தேடி அலைந்தேன்! இருபது வயசுப் பையனுக்கு வீட்டுக்கு வரத் தெரியாதா? கடைசியாக ஸ்ட்ராண்டு ரோடு கோவில் முருகன்தான் எனக்கும் புத்தியைக் கொடுத்தான். உன்னைத் தேடி என்னை அங்கே வரவழைத்தான்.'' அழுகையை அடக்கிக்கொண்டு பேசினார்:

''சின்னக் குழந்தையா நீ? வரும்போது வரட்டும் என்று மன ஆறுதலுடனா இருந்தேன்? அத்தனை கும்பலில் 'சூரசம்ஹாரக் கதை' கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த உன்னைக் கண்டதும் என் கோபமெல்லாம் பறந்து போய் எத்தனை அன்போடு உன்னை அணைத்துக் கொண்டு வீட்டுக்கு அழைத்து வந்தேன்: அப்போதே உனக்கு இருபது வயசுடா: 'ஏன் சொல்லாமல் எங்கோ போய் என்னை இப்படி அலைய வைத்தாய்?' என்று ஒரு வார்த்தை கடிந்துகொண்டேனா? சில மணி நேரங்கூட உன்னைப் பிரிந்திருக்க மனம் இல்லாத இதே அண்ணா, உன்னை இங்கிருந்து இப்போதே போ என்கிறேன்! போய் விடு!'' எரிமலை குமுறி ஓய்ந்தது:

இந்த மனிதரை எவ்விதம் புரிந்து கொள்வது? பழைய நினைவுகள் சுந்தரத்தினது மனத்தின் அடித்தளத்தில் நிழலாடின: உண்மைதான். தம்பி சுந்தரத்தை அவன் சிறுவனாக இருந்த போது, ஒவ்வொரு விடுமுறை நாளிலும் கல்கத்தாவின் ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்று தம் சக்திக்கேற்றவாறு எத்தனை பொருள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்!

ஹௌராப் பாலத்தின்மீது நின்று சுற்றுப்புறக் காட்சியை ரசிப்பதில் சுந்தரத்துக்கு அளவற்ற ஆவல். கல்கத்தா ரஸகுல்லாவைத் தின்று தெவிட்டிப்போய் அதை வேண்டாம் என்பான். ஆனால் அலுப்புச் சலிப்பின்றி ஹூக்ளி நதியையும் ஹௌராப் பாலத்தையும் கண்டு அவன் பொழுதைப் போக்கி மகிழ்ந்த நாட்கள் எத்தனை! தட்சிணேசுவரம் சென்றால் கங்கைப் படித்துறையில் இதே அண்ணா சத்தியமூர்த்தி, பரமஹம்ஸர் உட்காருவது போல் கண்மூடித் தியான நிலையில் அமர்ந்துவிடுவாரே! அந்தச் சாந்த மூர்த்தியா இன்று இப்படி ருத்திர மூர்த்தியாகத் தாண்டவமாடுகிறார்? ஒவ்வொரு தீபாவளிக்கும் மூர்ஷிதாபாத் ஸில்க் ஆடைகளை வாங்கித் தர இதே பாலிகஞ்சுப்பகுதியில் எத்தனை கடைகள் ஏறி இறங்குவார்! ஆனால் இந்தத் தீபாவளி வரும்போதோ?

அன்றெல்லாம் அருமைத் தம்பி சுந்தரத்துக்கு அன்போடும் பாசத்தோடும் அத்தனை வேலைகளைச் செய்து அவனை மகிழ்வித்து அரவணைத்த அதே அன்புக்கரம், இன்று அவனை, 'வெளியே போ' என்று விரட்டுகிறதே இது என்ன விந்தை?

''இதோ அம்மாவின் அந்தப் படம் என் வீட்டில் இருக்கட்டும். இன்னும் கொஞ்ச நேரம் நீ இங்கே நின்றால் நான் மனம் மாறி உன்னைப் போக விடாமல் தடுத்தாலும் தடுத்து விடுவேன்! வேண்டாம். என் தம்பி சுந்தரம் ராஷ்பிஹாரி அவின்யூ ஒண்டுக் குடுத்தனத்தில் இனிமேல் இருப்பது சரியல்ல. அவன் கல்கத்தாவில் பங்களாவாசியாக இருந்தால்தான் எனக்குப் பெருமையடா!''

சிம்மக் கர்ஜனையாகக் கிளம்பிய குரல் ஏன் இப்படித் தழுதழுத்தது? அழுகையாக மாறிவிட்டது? யார் குரல் கம்மிவிட்டது? வேறு யார் குரல்? சத்தியமூர்த்தியின் குரலே தான்.

''சுந்தரம், குத்து விளக்கு அம்மா கொடுத்தது. அதையே பிரிய மனமில்லை என்று சொன்னேனே; இந்தக் குல விளக்கிலே ஒன்றான உன்னைமட்டும் உதறித்தள்ள இந்த அண்ணாவால் உண்மையாகவே முடியுமாடா? மனம் ஒப்பியா இத்தனையும் செய்கிறேன்? நம் அன்புக்கு அந்த விளக்கே சாட்சி. உன்னை இங்கிருந்து போ என்கிறேன். என்னை விட உயர்ந்த அதிகாரி என் தம்பி, அவன் நிலை உயர்ந்த மகிழ்ச்சியிலே அவன் என்னைவிடக் கௌரவமாக வசதியா வாழவேண்டும் என்று நினைத்து, என் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு உன்னை வேறு இடம் போகச் சொல்கிறேன். இந்த அண்ணாவை இதுவரையில் புரிந்துகொண்ட நீ, இந்த விசித்திரப் போக்கை இனிமேலாவது புரிந்து கொள். குத்து விளக்கு உனக்கே தான்! அம்மாவின் அன்புப் பரிசான அது உன் வீட்டில் என்றென்றைக்கும் சுடர் விடட்டும்.

''சுந்தரத்தை வளர்த்தேன், ஆளாக்கிவிட்டேன். அம்மா! அவன் என்னைவிட இன்றைக்குப் பதவியில் உயர்ந்தவன். என் மேலதிகாரி. பங்களாவாசி அம்மா!'' பேச்சுத் தடுமாறியபடி எழுந்தார் சத்தியமூர்த்தி. என்ன செய்யப் போகிறாரோ?

வேக வேகமாக எழுந்து சென்றவர் தடாலென்று அன்னையின் படத்தின் முன்பு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினார். பெருமூச்சும் விசும்பல் ஒலியும் மாறிமாறிக் கேட்டன. சுந்தரம் பேசும் சக்தி இழந்து நின்றான்.

அவரைச் சுற்றி நின்றவர்கள் கண்களில் இப்போது நீர் வடிந்தது. ஆனால் அது அன்புப் பிரவாகம். பானு தன் கையிலிருந்த குத்து விளக்கைப் பலமாகப் பற்றிக் கொண்டாள். டெம்போக் கட்டணம் பெற வந்தவன் சத்தியமூர்த்தியிடம் மன்னிப்புக் கேட்டான். காரணம், அதுவரை அவனும் அவரைக் கரித்துக் கொட்டியிருக்கிறான் என்பது அப்போது அவருக்குப் புரிந்தது. அவர் மனப் போக்கின் அர்த்தம் அதுவரை யாருக்குப் புரிந்தது? ❋

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

THE BEST IN GOLD COVERED JEWELLERY FANCY ORNAMENTS



FANCY GOLD COVERING WORKS
FACTORY & H.O: RUSTUMBADA MACHILIPATNAM-1 A.P.

SEND Rs. 5·00 ALONG WITH ORDER

WHOLE SALE BRANCHES
54, NARAYANA MUDALI STREET MADRAS 1 PH 37161
RETAIL BRANCHES
261 PYCROFTS ROAD TRIPLICANE MADRAS-5.
273 A RKM ROAD MYLAPORE MADRAS-4
24 RANGANATHAN ST T NAGAR MADRAS-17

OUR WHOLESALE DEALERS IN TAMILNADU AND KERALA
1. DASAN AGENCIES, 20, Peria Valayalkara Street, Madurai (for Madurai & Trichy Dist.)
2. N.K.S. RIBBON CENTRE, Uppukinar Lane, Big Bazaar Street, Coimbatore (for Coimbatore, Palghat, Calicut Districts.)
3. GURU FANCY STORES, Virudhunagar (for Ramnad Dist.)
4. VENUS STORES, Tirupattur (for North Arcot & Dharmapuri Districts)
please contact for the wholesale dealership in the other vacant districts

I.R. Swami/pp.



நண்பர்: என்ன உங்க மாப்பிள்ளையைக் காணுமே? தலை தீபாவளிக்கு வரலையா?
மாமனார்: தசராவுக்கே வந்துட்டாரே!
நடிகை: 'படகுவீடு' படம் தீபாவளி ரிலீஸ் தானே? அப்புறம் என்ன எடுக்கப் போறீங்க?
படாதிபதி: திருவோடு எடுக்கப் போறேன்...!
தங்கை: ஒரு வீட்லே அம்மா உசத்தியா, இல்லே அப்பாவா?
அண்ணன்: யாருக்குத் தீபாவளி போனஸ் அதிகமா வர்றதோ அவுங்க தான்.
வானொலி நிருபர்: ரசிகர்களுக்கு உங்க தீபாவளி வாழ்த்துக்களைச் சொல்லுங்க; பதிவு செய்துக்கிறோம்.
நட்சத்திர நடிகர்: கொஞ்சம் பொறுங்க, எனக்குக் குரல் கொடுக்கிறவரை வரவழைக்கிறேன்.
பாட்டி: என்னடிம்மா, இப்படிக் கிளம்பறே? ஒரு கை வைச்சுண்டு கங்கா ஸ்நானம் பண்ணிட்டுப் போகப்படாதோ?
பேத்தி: தண்ணியிலே என்ன வித்தியாசம், பாட்டி? நான் லண்டன் போனதும் தேம்ஸ்லே பண்ணிக்கிறேனே?
ஒரு அம்மாள் இன்னொரு அம்மாளிடம்: எம் பிள்ளை சக்கரமா அவளைச் சுத்தறான்; மருமக லட்சுமி வெடியா வெடிக்கறா!
தீபாவளிச் சிரிப்பு
கருத்து: 'சலன்'
படம்: பிரேமா

பார்வதி திருமணம்

ஒரு நாள் உமாதேவி சிவனை வணங்கி, ''தேவரீரை இகழ்ந்த தக்கனுக்கு மகளாகித் தாட்சாயணி என்ற பெயருடன் இருந்ததை மாற்றத் தவம் செய்யப் போகிறேன்'' என்றாள். ''இமாசல அரசன் பெண் குழந்தைக்காகத் தவம் செய்கிறான். அவன் மகளாக நீ போய் வளருவாயாக; நாம் உன்னை வந்து மணம் செய்து கொள்கிறோம்'' என்றான் இறைவன்.

அவ்வாறே அம்பிகை அவ்விடத்தை நீங்கி இமய அரசன் தவம் செய்யுமிடம் சென்று ஒரு பொய்கையிலுள்ள தாமரையில் குழந்தையானாள். அதைக் கண்ட பர்வதராஜன் மகிழ்ந்து அதை எடுத்துச் சென்றான். அன்னை பர்வதராஜன் புத்திரியாக, பார்வதி என்ற திருநாமம் பெற்று வளர்ந்தாள். ஐந்து வயசானபிறகு, தன் தந்தையிடம், 'நான் சிவபெருமானை நோக்கித் தவம் செய்வேன்' என்றாள். முதலில் பர்வதராஜன் தயங்கினாலும் பிறகு உடன்படவே, தேவி இமயமலையில் தவம் செய்யலானாள்.

சூரபத்மனால் வருந்திய தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். ''நம்மிடம் ஒரு குமாரன் தோன்றிச் சூரனைச் சங்காரம் செய்வான்'' என்று அவன் அருளினான். பிறகு சனகாதி முனிவர்களுக்கு மௌன உபதேசம் செய்யத் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளினான். அவன் யோகியாக அமர்ந்திருப்பதை அறிந்த தேவர்கள் அவனை எழுப்ப, காமனைத் தூண்டி, ''நீ இறைவன்மேல் மலரம்புகளை ஏவு'' என்றனர்.

இறைவன் உள்ள இடம் சென்று அவன் அம்புகளை எய்தான். சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து பார்க்க, அதில் எழுந்த தீயால் காமன் சாம்பலானான். அவன் மனைவி ரதி வந்து அழுது புலம்பவே, ''நாம் பார்வதியைத் மணக்கும்போது உன் கணவனை எழுப்பித் தருகிறோம்!'' என்றான். மீண்டும் மோன நிலையில் அமரவே, தேவர் யாவரும் அவனைத் துதித்து முறையிட்டனர். அவன் அருள் கூர்ந்து, ''நாம் பார்வதி தேவியை மணம் செய்துகொள்வோம். நீங்கள் வருந்த வேண்டாம்!'' எனக் கூறி யருளினன்.

அப்பால் அப்பெருமான் கிழக்கோலத்தோடு அம்பிகை தவம் செய்யுமிடம் சென்றான். உடனிருந்த தோழிமார், ''தாங்கள் வந்த காரியம் யாது?'' என்று கேட்க, ''மலைமகள் புரியும் தவத்தைப் பார்க்க வந்தேன்'' என்றான். அவர்கள் அவனைத் தேவியிடம் அழைத்துச் சென்றனர். ''பெண்ணே! உன் அழகு குலையும்படி ஏன் தவம் செய்கிறாய்?'' என்று முதியவர் கேட்க, தோழி, ''சிவபெருமானைத் திருமணம் செய்துகொள்ளத் தவம் செய்கிறாள்'' என்றாள். ''அவன் யாருக்கும் அரியவன். இவள் தவத்திற்கு வருவானா? வரினும் மணம் செய்துகொள்வானா?'' என்றான் சிவபிரான்.

பார்வதியே சொல்லலானாள்: ''ஐயா, நீங்கள் சைவக் கோலத்துக்குத் தகாத வார்த்தைகளைச் சொல்கிறீர்கள். என் அவா நிறைவேறாவிட்டாலும் தவத்தினை விடப் போவதில்லை'' என்றாள். ''அந்தச் சிவன் இயல்பைக் கேள். அவன் தோலையே ஆடையாக கொண்டவன். பாம்பே அவன் அணியும் ஆபரணம், எலும்புத் தலைகளை மாலையாகப் புனைந்திருக்கிறான். மண்டையோட்டில் பிச்சை வாங்குகிறான். நஞ்சை உண்டவன். சுடுகாட்டில் ஆடுகிறவன். இவற்றை அறிந்தும் நீ அவனை விரும்பித் தவம் செய்கிறாயே!'' என்றான் இறைவன்.

அதைக் கேட்ட அம்பிகை, ''ஐயா, நீர் சொன்ன அத்தனையும் எம்பெருமானுடைய பெருமையை விளக்குவன என்பதை நீர் அறியீர் போலும்! நீர் இங்கே இருக்க வேண்டாம் போம்'' என்றாள்.

''பெண்ணே, என்னை நீ இப்படிப் புறக்கணிக்கலாமா? நான் உன்னை மணம் செய்ய விரும்புகிறேன்'' என்றான் இறைவன். பார்வதி, உடல் நடுங்க அங்கிருந்து புறப்பட்டாள்; அதைக் கண்டு உடனே தன் உருவத்தைக் காட்டி நின்றான் சிவபெருமான். அவன் கோலத்தைக் கண்டு அச்சமும் வியப்பும் அடைந்த அம்பிகை, அவனை வணங்கி, ''எம்பெருமானே, தேவரீரை இன்னார் என்று அறியாமல் ஏதேதோ சொல்லிவிட்டேனே! என்னைப் பொறுத்தருள வேண்டும்'' என்றாள். ''பெண்ணே, நீ சொன்னவற்றைப் புகழாகவே கொண்டோம்; உன்னை மணம் செய்துகொள்ள முயல்வோம்'' என்று கூறி மறைந்து போனான். அப்பால் அவன் விருப்பப்படி, சப்தரிஷிகள் இமய அரசனிடம் சென்று மணம் பேசினார்கள். இமய அரசன் தன் நகரை அலங்கரித்தான், பலருக்கும் திருமண ஓலை போக்கினான். குறித்த நாளில் இறைவன் இமாலயம் வந்து சேர்ந்தான். பிரமன் புரோகிதராக இருந்து திருமணச் சடங்குகளை நடத்தினான்.

அப்போது இரதி வந்து எம்பெருமானை வணங்கவே, அப்பெருமான் காமனை எழச் செய்து இரதியை நோக்கி, ''இவன் இன்று முதல் உனக்கு மட்டும் தெரிவான். மற்றவர் கண்களுக்குத் தெரியாமல் அருபியாய் இருந்து தன் செயலை நடத்துவான்'' என்று அருளினான்.

பார்வதி திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின்பு சிவபெருமான் பார்வதியோடு இடபவாகனத்தில் ஏறித் திருக்கைலைக்கு வந்து சேர்ந்தான்.

ஓவியம்: ஜி. கே. மூர்த்தி;





விசால மனம்

அருந்தமா

எண்ணெய் வாணலி முன் அமர்ந்திருந்த என்னிடம் வீட்டின் எஜமானியம்மாள் பாகீரதி ஒரு கடிதத்தை நீட்டினாள். நான் அதைப் படித்ததும் பதறி விட்டேன். என் கணவர் எங்கோ தொலைவில் சென்று பணம் சம்பாதிக்கப் போயிருப்பதை நினைத்து நினைத்து மறுகிக் கொண்டிருக்கிறேன். அவர் எப்போது கைநிறையச் சம்பாதித்துக்கொண்டு வருவது, நான் எப்போது என் பெண்ணின் திருமணத்தை முடிப்பது? இதற்கே கவலைப்பட்டுத் தேய்ந்து கொண்டிருந்த என்னிடம் இந்தக் கடிதமா? அவர் வந்து விட்டாராம். குடிப் பழக்கத்தினால் ஈரல் கெட்டுவிட்டதாம். நான் உடனே பணிவிடைக்கு வரவேண்டுமாம். பம்பாயில் அவருடைய ஒன்று விட்ட தம்பி கடிதம் எழுதியிருக்கிறார்.

கடிதத்தின் விவரத்தை எஜமானியிடம் கூறினேன். "என்ன செய்யட்டும்?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"அதுதான் நானும் கேட்கிறேன். விடிந்தால் தலை தீபாவளி. சாயங்காலம் சம்பந்திகள் வந்து விடுவார்கள். என் ஒருத்தியால் என்ன செய்ய முடியும்?"

நான் பதில் சொல்லவில்லை. அடுப்பில் வேகும் ஓமப்பொடியைத் திருப்பி விட்டு, நல்ல நிறமாக எடுத்து வைத்து விட்டு, மீண்டும் ஒரு குழல் பிழிந்தேன்.

"என்ன, பேசா மடந்தையாக ஆகிவிட்டாய்? கோபமாக்கும்?"

"நான் என்னம்மா சொல்ல முடியும்? அநாதரவாக என்னையும் பெண் குழந்தையையும் விட்டுவிட்டுப் போனார் அவர். அன்றைக்கு நீங்கள் ஆதரவு அளித்து நிழலும் பாதுகாப்பும் தந்தீர்கள். இப்பொழுது எனக்கு உங்களைக் கைவிடவும் மனம் வரவில்லை. கட்டின புருஷனுக்குச் செய்ய வேண்டிய கடமை என்றிருக்கிறதே! ஏழைமை காரணமாக மனம் ஒடிந்து கடல் கடந்து போனார்."

"யாராவது நம்பிக்கையான ஆளாகப் பார். ஆணோ பெண்ணோ பரவாயில்லை. வைத்து விட்டு நீ கிளம்பு."

எண்ணெய்ச் சட்டி வேலை முடிந்ததும் நான் கிளம்பினேன். வெளியே பிற்பகல் இரண்டு மணி வரை அலைந்து திரிந்ததுதான் மிச்சம். யாரும் கிடைக்கவில்லை. தீபாவளி சமயம் எல்லாருக்கும் நிறைய வேலை.

பாகீரதி அம்மாள் வாசல் வராந்தாவில் கையில் ஒரு வாரப்பத்திரிகையுடன் ஊஞ்சலில் அமர்ந்திருப்பதைக் கண்டேன்.

"யாருமே கிடைக்கவில்லையே, அம்மா! நான் என்ன செய்வேன்?" என்றேன். என் கணவர் மீது அந்த அம்மாளுக்குக் கடுங்கோபம் வந்தது. "நாசமாய்ப் போகிறவன்! அன்றைக்குக் காப்பாற்றாமல் ஓடினான். இன்றைக்குப் பிழைக்க விடாமல் குறுக்கே நிற்கிறான், பாவி!" என்று வைதாள். "உன் பெண் வந்தாள். மிகுதிப் பட்சணத்தைச் செய்யச் சொன்னேன். போய்ப் பார்" என்று கூறிவிட்டு அந்த அம்மாள் ஊஞ்சலில் படுத்து உறக்கத்துக்கு ஆயத்தமானாள்.

என் மன வருத்தத்தை விழுங்கிக் கொண்டு உள்ளே சென்றேன்.

அவர்களின் தேவையை அறிந்து என் பெண் அழகாக இழுத்துச் செருகிக் கொண்டு பூந்தி தேய்த்துக் கொண்டிருந்தாள். "அம்மா, போர்ன்வீடா கேக் செய்து கொட்டியிருக்கிறேன். பில்லை போடுவதானால் போட்டுவிடு. இந்தா கத்தி" என்றாள்.

என் இதயம் விம்மிதமுற்றது. பாகீரதியம்மாள் பெண் நீரஜாவும் என் பெண் ரேவதியின் வயதினள் தான். அவள் அதிகார வர்க்கத்தில் பிறந்ததனால் காபி போடக் கூடத் தெரியாமல் வளர்ந்தாள். இவள் அடிமையின் வயிற்றில் உதித்த தோஷம் இப்படி வேலை செய்கிறாள். "கேக் நன்றாக உள்ளது. நம்ம கதையைக் கேட்டாயா ரேவதி?"

"மாமி சொன்னார்கள். நீ போ, அம்மா. நான் இங்கே பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் ரேவதி.

"ஒரு வாரமாகுமோ, ஒரு மாசமாகுமோ? எப்படி நீ சமாளிப்பாய்?" என்று கூறும்போதே என் குடல் நடுங்கியது. கண்ணில் நீர் பெருகியது.

"வருத்தப்படாதே. அம்மா. அப்பாவுக்கு ஒன்றும் இராது. சௌக்கியமாக அழைத்து வருவாய். இந்த ஒரு வாரம் நான் சமாளிப்பேன். தீபாவளி முடை நீங்கினால் வேறு யாராவது ஆள் கிடைப்பார்கள், இவர்களுக்கு" என்று நிதானமாய்ப் பதில் அளித்தாள் ரேவதி.

நான் முந்திரிப் பருப்பை விண்டு கொண்டே தாழ்ந்த குரலில், "அது மட்டும் என் கவலை இல்லை, ரேவதி, இந்த வீட்டிலே பெரிய பிள்ளை வந்திருக்கிறானே! அவன் சரித்திரம் உனக்குத் தெரிந்ததுதானே? நான் எப்படி நிம்மதியாகப் பம்பாய்க்குப் போக முடியும்? நீ இங்கே இருக்க வேண்டாம், கண்ணே. நான் திரும்பி வரும்வரை உன் அநாதாசிரமத் தலைவியுடனேயே இரு."

"இதோ பார் அம்மா. இவர்களோ பதிலுக்கு ஆள் வைக்காமல் உன்னைப் போக விடமாட்டார்கள். அங்கே அப்பா எந்த நிலையில் இருக்கிறாரோ? தூரத்து உறவினர்கள் எத்தனை நாட்கள் பார்த்துக் கொள்ள முடியும்? நீ நிம்மதியாகப் போ. நான் இருப்பேன்."

"நீ இருப்பாய். உன்னிடம் எனக்கு நம்பிக்கைதான். ஆனால், இந்த வீட்டு மனிதர்கள் போக்கு உனக்குத் தெரியாது, அம்மா. சின்னப் பெண்ணாயிற்றே என்று உனக்குக் கரிசனமே காட்ட மாட்டார்கள். அவனோ, ஈவு இரக்கமற்றவன். அவன் சபலம் உனக்குத் தெரியாது."

"போ அம்மா. எல்லாம் வதந்திதானே? யார் நேரில் பார்த்தார்களாம்? எந்த மனிதனும் முழுக்க முழுக்கக் கெட்டவனாக இருக்க மாட்டான். அந்தப் பெண்களும் ஒரு மாதிரி இருந்திருப்பார்கள். நீ கவலைப்படாதே. எனக்குக் கராத்தே கூட எங்கள் தலைவி சொல்லித் தந்திருக்கிறாள்" என்று கூறிவிட்டுச் சிரித்தாள் என் மகள்.

என்னால் மேலும் பேச முடியவில்லை.

எஜமானியம்மாள் இடுப்பில் கை வைத்துக் கொண்டு அங்கே பிரசன்னமானாள். "என்ன பேசியாகிறது? பட்சணமே முடிந்தபாடில்லை. இராத்திரிச் சமையல் ஆக வேண்டாமா? நீ ஊருக்குப் போய்த்தான் ஆகவேண்டுமா? அவன் துபாயிலேயே படுத்திருந்தால் நீ என்ன பண்ணுவாய்? பம்பாய்க்குப் போயும் தனிப் பெண்பிள்ளை என்னத்தைச் சாதிப்பாயாம்?"

"ரேவதி பார்த்துக் கொள்கிறாளாம். நான் போய்ப் பார்த்து விட்டுச் சீக்கிரம் வந்து விடுகிறேன்."

"கவனிக்காமல் நடு ரோடிலே நிறுத்தி விட்டுப் போனவனுக்கு என்ன அங்கலாய்ப்பு வேண்டிக் கிடக்கிறது? இப்படித் தன்மானம் பார்க்காமல் குழைந்து போகிறதனால்

தான் பெண் வர்க்கத்துக்கே மதிப்புக் குறைந்து போகிறது'' என்று இரைந்தாள் அந்த அம்மாள்.

''பம்பாய்க்கு டிக்கெட்டு வாங்க ஆள் அனுப்பட்டுமா? ஒருத்தருக்கா, இரண்டு பேருக்கா?'' என்று கேட்டுக் கொண்டே அந்தக் குடும்பத் தலைவர் அங்கு வந்தார்.

''எனக்கு மட்டும்'' என்று நான் பதிலளித்தேன்.

''இவள் மட்டும் போனால் போதாதா? இங்கே வேலை செய்யப் பெண் இருக்கப் போகிறாளாம்.''

அவர் அதிகம் பேசமாட்டார். தலையை ஆட்டிவிட்டு முன்பக்கம் போய்விட்டார்.

நான் இரவுச் சமையலுக்கு ஆயத்தங்கள் செய்தேன். என் மகள் பட்சணம் செய்த இடத்தைச் சுத்தப் படுத்தினாள்.

சம்பந்திகள் வந்து இறங்கிவிட்டனர். வீடு கோலாகலமாகத் திகழ்ந்தது. ரேவதிக்கும் எனக்கும் வேலை சரியாக இருந்தது.

எல்லாரும் நடுக் கூடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். வீட்டு எஜமானரின் அலுவலகச் சிப்பந்தி ஒருவர் வந்து டிக்கெட்டைக் கொடுக்கவும், நான் ஒரு வாய்ச் சோறு அள்ளிப் போட்டுக் கொண்டு, ரெயிலுக்குக் கிளம்பும் போதுகூட மனசு தத்தளித்தது.

''அம்மா, இப்படி ஏன் தயங்குகிறாய்? அப்பாவுக்கு உதவ ஓட வேண்டுமென்று நீ துடிக்கவில்லையா? உன்னைத் திண்டாடவிட்டு ஓடிப் போனார் என்று நீ என்றைக்காவது சொன்னதுண்டா?''

''இல்லை. அவருக்கு மனத்தில் தைரியம் போதாது. நாம் கஷ்டப்படுவதைக் காணச் சகிக்காமல்தான் போய் விட்டார். கோழைத்தனத்தைக் கண்டு கோபித்து என்ன பயன்? திருடினால் திட்டலாம், கொள்ளையடித்தால் கோபிக்கலாம். ஓடிவிட்டதை ஒரு குற்றமாக எண்ணி அவரை நிந்திக்கலாமா? அந்த மனப்பலவீனத்தை நினைத்துத்தான் இன்றைக்கு உதவத் துடிக்கிறேன். பக்கபலம் தேவை அவருக்கு. நான் பக்கத்தில் இருந்திருந்தால் குடிப்பழக்கமே வந்திராது அவருக்கு'' என்றேன் உணர்ச்சியுடன்.

''பின்னே, நீ தைரியமாகப் போ. நான் உன் பெண்தான், அப்பா பெண் இல்லை. சரிதானே?'' என்று என் கன்னத்தோடு கன்னத்தை இழைத்தாள் என் பெண்.

நான் கிளம்பி விட்டேன், பம்பாயில் ரெயிலடியிலேயே எங்கள் உறவினர் காத்திருந்தார். ஆஸ்பத்திரிக்குச்சென்று என் கணவரைப் பார்த்தேன். என் உடலெல்லாம் பதறியது. கைநிறையச் சம்பாதித்து வயிறு நிறையச் சத்துள்ள சாப்பாடு சாப்பிட்ட அடையாளமாகக் கொழு கொழுவென்று இருந்தது சரீரம். கண் ஒளி மங்கிக் கிடந்தது. என்னைக் கண்டதும் அவர் 'ஓ' வென்று அழுதார்.

''நான் பம்பாய் வந்து பதினைந்து நாட்களாகி விட்டன. உடனே உன்னைத் தேடி வரத்தான் நினைத்தேன். அதற்குள், அதற்குள்..'' என்று அவர் விக்கினார்.

என் பொறுமை எல்லை மீறியது. ஆயினும் கட்டுப் படுத்திக்கொண்டு ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். அதற்குள் என்ன வந்தது என்று எனக்குத் தெரியாதா? பெரிய ஓட்டலில் இறங்கியிருப்பார். வசதிகள் கிடைத்திருக்கும். குடி நடுவில் நல்ல காலம் பழைய உறவினரை நினைவு வைத்துக் கொண்டு ஆர்வத்தோடு அவர்களுடன் தொடர்பு கொண்டாரே, அதுவே நான் செய்த பாக்கியம்!

''மன்னி, துபாயிலிருந்து எனக்குத்தான் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். பாங்கில் போட்டு வைத்திருக்கிறேன். திடீர் என்று வந்து உங்களைத் திக்குமுக்காடச் செய்ய வேண்டுமென்று என்ன என்னவோ ஏற்பாடுகள்! கடைசியில் உங்களைத் திடுக்கிடத் தான் செய்ய முடிந்தது'' என்று கூறி உறவினர் விரக்தியாகச் சிரித்தார்.

''வயது ஐம்பதானாலும் சில பேர் குழந்தைப் பருவத்திலிருந்து விடுபடுகிறதே இல்லை'' என்றேன்.

ஒரு மாதம் அந்த உறவினர் உதவியுடன் என் கணவருக்குப் பணிவிடைகள் செய்தேன். உடல் தேறியது. ஆறு மாதமாவது ஓய்வாக இருக்க வேண்டுமாம். பணம் நிறையத்தான் சம்பாதித்து வைத்திருந்தார். இரண்டு மாதத்துக்கோ மூன்று மாதத்துக்கோ ஒரு முறை ஒரு கார்டு எழுதுவாரே! அதில் ஒன்றுமே குறிப்பிடவில்லையே! பெண்ணின் கல்யாணத்தை ஜமாய்க்கலாம் என்ற ஒரு வரிதான் பல்லவியாக இருக்கும்.

''நீங்கள் எப்படி இவ்வளவு காலம் தள்ளினீர்கள் என்று கூடக் கேட்கத் தெரியவில்லை அவனுக்கு. 'அவள் தைரியசாலி. நேர்மையானவள். அவளைப் பற்றிக் கவலையே இல்லை' என்றுதான் சொல்லுவான். நீங்கள் மறுபடியும் நம்மூர்ப் பக்கம் போக வேண்டாமே! இங்கேயே இருங்கள்'' என்று என் மைத்துனர் உபசரித்தார்.

''ஒருமுறை இவரை அழைத்துக் கொண்டு போய்விட்டு வருகிறேன். குழந்தை ரேவதி அநாதாசிரமத் தலைவியுடன் எத்தனை நாட்கள் இருக்க முடியும்? எல்லா விவகாரங்களையும் சரி செய்து கொண்டு வருகிறேன்'' என்று கூறி, என் கணவருடன் தெற்கே கிளம்பினேன்.

ரெயிலடிக்கு ரேவதியும் அநாதாசிரமத் தலைவியும் வந்து காத்திருந்தனர். தலைவியின் விடுதிக்கே என் கணவரை அழைத்துச் சென்றேன். அன்று பகலுணவு முடித்துக்கொண்டு எங்கள் வருங்காலத் திட்டத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தோம்.

''உங்களுக்காக ஒரு சின்ன வீடு பார்த்திருக்கிறோம். ஒரு பக்கத்தில் ஓர் அறையும் குளியலறையும் தனியாக இருக்கின்றன. அதில் ஓர் இளம் டாக்டர் குடியிருக்கிறார். தற்சமயம் அதில் இருங்கள். பிறகு சொந்தமாக வீடு வாங்குவீர்களோ, எப்படியோ பார்ப்போம்'' என்றாள் தலைவி.

''பம்பாய்க்கே வரச் சொல்கிறார்கள், உறவினர்கள். இத்தனை வருஷ காலமாகப் பணத்தைப் பாதுகாத்தவர்கள், சமயத்தில் கை கொடுத்தவர்கள்.''

''தலைவியம்மாள் மட்டும் சமயத்துக்குக் கைகொடுக்கவில்லையோ?'' என்று கோபமாகக் கேட்டாள் என் பெண்.

என் பிழையை உணர்ந்து நான் பல்லைக் கடித்துக் கொண்டேன். என் கணவர் சென்னையை விட்டுச் சென்றதும் பத்து வயதுச் சிறுமியான ரேவதியை அழைத்துக் கொண்டு அநாதாசிரமத்தை நாடி வந்தேனே, அப்போது அந்த அம்மாள் எனக்கு ஆறுதல் கூறி, ''தாயார் தகப்பனார் இருவரும் இல்லாத குழந்தைகளையே நாங்கள் சேர்க்க முடியும். உங்கள் உடம்பில் வலு இருக்கிறது. நீங்கள் உழைத்து இவளைக் காப்பாற்ற முடியாதா?'' என்று கேட்டாள்.

அவரைப் பற்றிய ஏமாற்றம், வருங்காலம் இருள் சூழ்ந்ததாகக் கண்ட தோற்றம், பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமே என்கிற பயம், தனியாக வாழ முடியுமா என்ற அச்சம் எல்லாமாகச் சேர்ந்து என் முகத்தில் எப்படிப் பிரதிபலித்தனவோ தெரியாது. அந்த அம்மாள் என்னை அமர்த்தி நெடு நேரம் தைரியமளித்து, ''மனம் சோர்வடைந்து விட்டால் எப்படி? அநாதாசிரமத்தில் பெண்ணை விட்டு விட்டு நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்? ஆற்றிலோ கிணற்றிலோ விழுவதாக எண்ணமோ? உங்கள் பெண் என்னிடம் இருக்கட்டும். எனக்குப் பணிப் பெண்ணாக விடுதியில் வைத்துக் கொள்கிறேன். அவள் படிப்புக்கு மட்டும் நீங்கள் சம்பாதித்துப் பணம் தரவேண்டும். நான் சாப்பாடு போட்டுப் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அன்று கை கொடுத்தாள். பாகீரதியம்மாளின் வீட்டையும் காட்டினாள்.

இன்று ரேவதி பள்ளிப் படிப்பு முடித்து, தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் கற்றுக் கொண்டு விட்டாள். அநாதாசிரம வேலைகளில் ஈடுபட்டுச் சமையலும் கைவந்த கலையாயிற்று. நான் தலை குனிந்து நின்றேன்.

''கவலைப்படாதீர்கள். உங்கள் உறவினர்கள் உங்களைத் தவறாக நினைக்க மாட்டார்கள். இங்கேதான் இருங்கள். நண்பர்களாகிய நாங்கள் ஏணி மாதிரி. சேர வேண்டிய இடத்தை நிர்ணயிப்பதும் அதை அடைவதும் உங்கள் கையில்தான் உள்ளன'' என்றாள் அந்த அம்மாள்.

எங்கள் குடும்பம் அந்தப் புது வீட்டில் குடியேறியது. ரேவதியும் என்னோடு சேர்ந்துகொண்டாள். பாகீரதி அம்மாள் வீட்டில் வேறு சமையல்காரி வந்துவிட்டாள்.

நான் அவர்களைப் பார்த்துச் சொல்லிவிட்டு வரச் சென்ற அன்றைக்கும் அந்த அம்மாள் தன் குணத்தைக் காட்டாமல் இல்லை. ''தீபாவளியும் அதுவுமா திடீர்னு விட்டு விட்டுப் போய் விட்டாய். உன் பெண் பெரிய ஆளா? சம்பந்திகளை வைத்துக் கொண்டு நான் பட்ட பாடு! இப்போது ஒன்றும் குறைந்து போகவில்லை. உன்னைவிட நல்ல ஆள் கிடைத்தாச்சு. உனக்காக எத்தனை நாட்கள் காக்க முடியும்? உன் கணக்கைத் தீர்த்துக் கொண்டு, உன் சாமான்களை எடுத்துக் கொண்டு போ. சமையல்கட்டுப் பக்கம் போகவேண்டாம். இப்படியே இரு. சாமான்கள் சரியாக இருக்கிறதா பார்த்துக் கொள். அப்புறம் அது இது என்று வரவேண்டாம்'' என்றாள்.

ஆயிரம் பேச்சு என் நா நுனிக்கு வந்து துடித்தது. ஆயினும், அடக்கிக் கொண்டேன். ''இப்போது நான் ஏழை அல்ல! உங்களைப் போல் ஓர் உடைமைக்காரிதான்'' என்று கடைசியில் ஒரு பேச்சுச் சொல்லலாமா என்று நினைத்தேன். பிறகு அடக்கிக் கொண்டேன். என் சாமான்களையும் பாக்கிப் பணத்தையும் பெற்றுக் கொண்டு தெருவில் நடந்தேன்.

அப்போது என்னை உரசினாற் போல ஒரு கார் வந்து நின்றது. நான் ஒதுங்குவதற்குள், ''ஏறுங்கள்'' என்ற குரலும் கார்க் கதவு திறப்பதும் அறிந்தேன்.

பாகிரதியம்மாளின் மூத்த மகன் எனக்காக வண்டியை நிறுத்திக் காத்துக் கொண்டிருந்தான்போலும்! நான் தயங்கினேன். ''ஏறுங்கள்'' என்றான் அவன் மீண்டும்.

நான் ஏறி அமர்ந்தேன். அவன் வாய் திறக்கவே யில்லை. காரைச் செலுத்திக் கொண்டே போய் எங்கள் வீட்டின் முன் நிறுத்தினான். எப்படித் தெரியும் என்று எனக்குப் புரியவில்லை. கதவைத் திறந்து எனக்கு வழி விட்டுவிட்டு மீண்டும் காரைச் செலுத்திக்கொண்டு போய் விட்டான். அவன் ஒரு போக்கிரி என்றே பழகிவிட்டது காரணமாக, சாதாரணமாக எவருக்கும் சொல்லும் நன்றிகூடச் சொல்லத் தெரியாமல் நான் மௌனமாகி விட்டேன். கார் பறந்து சென்றது.

நான் வீட்டுக்குள் சென்று வெகு நேரம் வரை அர்த நிகழ்ச்சி என் மனத்தில் குறுகுறுத்த வண்ணம் இருந்தது. அவர்கள் வீட்டில் வேலை செய்து பிழைத்தவள் நான்; என்னிடம் ஒரு நாள் கூடப் பேசிப் பழகாதவன் அவன். எதற்காக எனக்கு இந்த மரியாதை? அவனுடைய தாயார் பேசிய பேச்சுக்கு வருந்தி ஈடுசெய்யப் பார்த்தானோ? ஒன்றும் புரியவில்லை. ரேவதியிடம் மட்டும் என் ஆச்சரியத்தை வெளியிட்டேன்.

''ஒரு பெண் பிள்ளை தூக்கமாட்டாத சாமான்களைத் தூக்கிக்கொண்டு நடந்து போனால், காலி வண்டியிலே போகிறவர்கள் ஏற்றிக் கொள்ள மாட்டார்களாக்கும்!'' என்றாள் அவள், சாதாரணமாக.

சுலபமாகச் சொல்லிவிட்டாள்; ஆயினும், என்னால் அந்த ஆச்சரியத்தைச் சமாளிக்க இயலவில்லை; என் கணவரிடமும் சொன்னேன்; முன் கதை, பின் கதை என்று அவருக்கு எது ஒன்றையும் நிறைய விளக்க வேண்டியிருந்தது;

''வதந்தியை வைத்து மனுஷனை எடைபோடலாமா? அப்படிப் பார்த்தால் நீ என்னை ஏற்றுக்கொள்ளவே கூடாது'' என்று கூறிவிட்டுச் சிரித்தார் அவர்.

அப்பாவும் பெண்ணும் எப்படி ஒட்டிக் கொண்டு விட்டார்கள்! ரேவதி இப்பொழுது எங்களுடன் குடியிருக்கும் டாக்டரின் க்ளினிக்கில்

71 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

- தலைவலி
- ஃப்ளூ
- ஜலதோஷம்
- கைகால் வலி

முதலியவைகளுக்குச் சிறந்த மருந்து

சேல்ஸ் டாக்ஸ் லைசென்ஸ், டிரக் லைசென்ஸ் உள்ள வியாபாரிகள் எங்களுக்கு நேரிடையாக ஆர்டர் எழுதவும்

தயாரிப்பாளர்கள்

ஆர். எஸ். பதி அன் கோ.

214 & 215, மேலமாசி வீதி—தபால் பெட்டி எண் 99
மதுரை - 625 001

—Crown Services

Telephone: **22591 (PBX)**
Telegrams: **'ELITE'**

SREE GANESH STORES

39, TOWN HALL ROAD
MADURAI 625001

Dealers for:

MYSORE PAPER MILLS LTD.
SESHASAYEE PAPER & BOARDS LTD.
KHIRA STEEL WORKS LTD.

Branches:

14, Chinnakadai Street, Trichinopoly
16, Big Street, Kumbakonam
41/B & C., High Road, Tirunelveli Jn.

'டைப்பிஸ்டு' வேலை செய்தாள். அலுவலுக்குப் போய் வரும் நேரம் தவிர எப்போதும் தன் தகப்பனுர் அருகிலேயே அமர்ந்து என்னவோ ரசித்துப் படித்துக் காட்டினுள். மணிக்கணக்கில் இருவரும் பேசிப் பேசிச் சிரித்தனர்.

''என்னிடமும் சொல்லுங்களேன். நான் மட்டும் ரசிக்கமாட்டேனு?'' என்று ஒரு நாள் கேட்டேன்.

''ஊஹூம்! ரசிக்கவே மாட்டாய்'' என்று கூறிவிட்டுப் பெண், வெண்கல மணிகளை உருட்டினுற் போல் ஒரு சிரிப்புச் சிரித்தாள்.

''நீ ஒரு திணுசாக விளையாட்டுத்தனமே இல்லாத வாழ்க்கை வாழ்ந்துவிட்டாய். நாங்கள் ஹாஸ்யம் காணுமிடத்தில் நீ ஏதும் காண மாட்டாய்'' என்று என் கணவர் விளக்கினுர்.

என் பெண் தன் தகப்பனுரிடம் ஒன்ற மாட்டாளோ என்று நான் பயந்ததுண்டு. இப்பொழுது அவர்கள் நெருங்கிப் பழகினுர்கள். நான் தனியாக விடப்பட்டவளைப் போல ஓர் ஏமாற்றம் என்னைக் கவ்வியது. சில சமயம், ஆத்திரங்கூடத் தோன்றியது. என் கணவர் இப்பொழுதுதான் உடல் நலம் பெற்றுவருகிருர். ஆகாரம் ஏற்றுக்கொள்கிருர். அவரிடம் கோபமாகப் பேச மனம் வரவில்லை.

உடன் குடியிருந்த டாக்டரும் நல்லவர். இளைஞராக இருப்பினும் கைராசி இருந்தது; சிரத்தை இருந்தது. தினமும் காலையில் வந்து பார்த்து விட்டுப் போவார். மீண்டும் இரவில் படுக்கும் முன் ஒருமுறை வருவார். என் பெண்ணும் அவள் தகப்பனுரும் அந்த மருத்துவரும் என்னவோ பேசுவார்கள். உள்நாடு, வெளிநாடு எல்லாம் அடிபடும்.

நான் எட்ட நின்று ரசிப்பேன். வயிற்றுப் பிழைப்புக்காக உழைத்ததும், சமையலில் தேர்ச்சி பெற்றதுந்தான் எனக்குக் கைவந்தவை. மற்ற விவகாரங்கள் புரியவில்லை. தலைவி அம்மாள் என் பெண்ணை நன்ருகத்தான் உருவாக்கியிருந்தாள். ஆனுல், நாளடைவில் இரண்டு விஷயங்கள் எனக்குப் பிடிக்கவில்லை.

வைத்தியர் பணம் வாங்க மறுப்பது ஒன்று, மற்றது என் பெண் அடிக்கடி அவர் அறைக்குள் புகுந்து புகுந்து புறப்படுவது. வைத்தியர் மூலமாகத்தான் ரேவதிக்கு வேலை கிடைத்தது என்பது உண்மைதான். அவர் இப்பொழுது நெருங்கிய நண்பராகி விட்டதும் ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனுல் என் மனம் துயருற்றது.

''ரேவதி, நீ எதற்கு அம்மா, அடிக்கடி டாக்டர் அறைக்குப் போகவேணும்? அது நல்லதல்ல.''

''என்ன, அம்மா! நீயா இப்படிப் பேசுகிருய்? வெளித் தோற்றத்தைக் கண்டு அவசர முடிவுக்கு நீ வரமாட்டாயே! உன் தாராள மனசை நினைச்சுத்தான் நாங்கள் எவ்வளவோ...'' பேச்சை முடிக்காமலே அவள் ஓடிவிட்டாள்.

என்னைச் சேர்த்துக் கொள்ளாமல் எல்லோரும் என்னைச் சுற்றிப் பின்னல் கோலாட்டம் போடுவதுபோல ஒரு பிரமை தட்டியது. நானே விரக்தியாக விலகி இருக்க ஆரம்பித்தேன்.

''நான் கோயிலுக்குப் போய் வருகிறேன்'' என்றேன்.

''சிக்கிரம் வந்துவிடு. இருட்டில் தனியாக எங்கும் போகாதே'' என்று என்னை எச்சரித்தார் என் கணவர்.

மகளுக்குத் தர வேண்டிய அறிவுரையை எனக்கு அளிக்கிருரா இவர்? உதட்டை முறுக்கிக்கொண்டே பேசாமல் கோவிலை நோக்கி விரைந்தேன்.

பிறருக்காக உழைத்தாலும் நாள் முழுவதும் எனக்கு வேலை இருந்தது. இரவு வந்ததும் உறக்கத்தில் ஆழ்ந்துவிடுவேன். மறுபடியும் விடிந்தால் இயந்திரம் போல இயங்குவேன். என்னுடைய பிரச்சினைகளை நினைக்கவோ, ஆராயவோ, அங்கலாய்க்கவோ நேரமே இராது. இப்பொழுது வசதியான வாழ்க்கையின் அமைதி எனக்குப் பளுவாகப் பட்டது. மனம் எப்போதும் அலை பாய்ந்தது. ரேவதிக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். அதைப் பற்றிப் பேசாமல், குழந்தை போல அவளுடன் கும்மாளம் அடிக்கிருர் அவள் தந்தை. என்னுடன் ஒட்டிப் பழகிய பெண், இப்போது எட்ட நின்று பேசுகிருள். ஏன் இந்த மாறுதல்?

நான், சிந்தனையில் ஆழ்ந்தபடி நடந்து சென்றவள், நடுப்பாதைக்கு வந்து விட்டேன் போலும்! ஒரு ஸ்கூட்டர் என்னைத் தள்ளிவிட்டது. எப்படி நேர்ந்தது, என்ன நேர்ந்தது என்று புரிவதற்குள் நான் சாலை ஓரமாக விழுந்து கிடந்தேன்.

''எங்கே யோசனை?'' என்று யாரோ பல்லைக் கடித்துப் பேசுவதும் எங்கோ மோதப்பட்டு விழுவதுந்தான் தெரிந்தன. தலை தரையில் படுவதற்குள் சமாளித்து எழுந்தேன். கையில் முறிவு ஏற்பட்டது.

கண் கலங்க நான் இருக்கையில் என்னை யாரோ ஆதரவாக எழுப்பிக் காரில் ஏற்றுவது புரிந்து நிமிர்ந்து பார்த்தேன். பாகிரதியம்மாளின் மூத்த மகன்தான்.

ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று எக்ஸ்ரே படம் எடுத்து, கட்டுக் கட்டிக் கூட்டி வந்தான்.

''தம்பி, எங்கள் வீடு உங்களுக்கு எப்படித் தெரியும்? முன்னைக்கூட என்னைக் கேட்காமலேயே..?''

''முன்னமே தெரியும்'' என்று ரத்தினச் சுருக்கமாய்ப் பதில் வந்தது.

வீட்டுக்கு வந்ததும் எனக்குப் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. ரேவதி ஓடி வந்து, ''ஹல்லோ ரவி, நீங்கள் எப்படி அம்மாவைப் பார்க்க முடிந்தது? நல்ல காலம்!'' என்று சர்வ சகஜமாகக் கேட்டாள்.

அவர்கள் வீட்டை விட்டு நாங்கள் விலகி மூன்று மாதகாலம் ஆகப் போகிறது: 'ரவி' என்று கூப்பிடும் அளவுக்கு இவளுக்கு எப்படி முடிந்தது?

''வா, ரவி. நீ கும்பிடுகிற பிள்ளையார்தான் உன்னை அங்கு அனுப்பினுர்'' என்ருர் என் கணவர்.

ஒன்றும் புரியாமல் நான் எல்லாரையும் பார்த்தேன்.

''ரவி, இனிமேல் நாம் விவரமாகச் சொல்ல வேண்டிய சமயம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்'' என்ருர் என் கணவர் பூடகமாக. ரேவதி என்னவோ சங்கேதமாக ரவியைப் பார்த்துச் சிரித்தாள்.

டாக்டரும் வந்து சேர்ந்து கொண்டார். என்னை, ''என்னம்மா கைக்கு ஊஞ்சல் போட்டுவிட்டீர்கள்?'' என்ருர் புன்முறுவலுடன்.

''டாக்டர், நீங்கதான் அம்மாவிடம் கேட்கவேணும், அதுதான் முறை'' என்ருள் ரேவதி.

என் வயிற்றில் பகீரென்றது. 'அடிக்கடி அந்த அறைக்குப் போய் வந்தாளே! என்ன சொல்லிவிடப் போகிருளோ?' என்று நான் அஞ்சினேன்.

டாக்டர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''சரி, எங்கே ஆரம்பிக்கட்டும்? நீங்கள் இந்தப் பெண்ணை வேலைக்கு விட்டுவிட்டுப் போனீர்களே! அவள் நன்ருக வேலை செய்தாள். ஆனுல், அவளைப் பாராட்டுகிற அளவு பண்பு அந்த வீட்டினருக்கு இல்லை. இளம் பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்ற கருத்து இல்லை'' என்று டாக்டர் அடுக்க ஆரம்பித்ததும் நான் கதிகலங்கிப் போய்விட்டேன். ரேவதியை எரித்து விடுபவள் போல் ஒரு கொடூரப் பார்வை பார்த்தேன்.

''பயப்படாதே, அம்மா. ஒரு தப்பும் நடக்கவில்லை. நீ நினைக்கிறபடியும் நடக்கவில்லை'' என்ருள் ரேவதி மெதுவாக.

''இனி நான் பேசுகிறேன்'' என்று இடைமறித்தான் ரவி. ''நீ பிடிகை போடப்போட மாமி நடுங்கிவிடுகிருர்கள். சுருங்கச் சொல்கிறேனே! நீங்கள் ஊருக்குப் போன பிறகு இவளை வெளிவராந்தாவிலேயே படுக்க விட்டுவிட்டு, உள்ளே பூட்டிக் கொண்டு படுத்து விட்டார்கள், என் வீட்டினர். அதைக் கண்டு நான் சற்றுத் தொலைவில் கார் ஷெட்டில் படுத்திருந்தேன், காவலுக்காக.''

'என்ன உத்தேசமோ யார் கண்டார்கள்?' என்று என் மனம் ஓடியது. கடித்த பற்களிடையே பேசினேன். ''நான் அப்போதே எல்லா இடைஞ்சல்களையும் விளக்கித்தான் சொன்னேன். சொன்னுல் கேட்டாளா?'' என்றேன்.

''தெரியும். நீங்கள் சொன்னதையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அவள் பதிலுந்தான் என் செவியில் விழுந்தது. மாமி, நீங்கள் நம்புவீர்களோ மாட்டீர்களோ, உங்களைப் பார்த்தது முதல் உங்கள் மீது எனக்கு ஒரு மதிப்பு. அன்பு வைத்த இடத்தில் குற்றம் காண்பதில்லை. மனித பலவீனத்தை மன்னிக்கும் மாண்பு இருக்கிறது உங்களிடம். அன்று நீங்கள் எந்த மன நிலையில் பம்பாய் சென்றீர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்: நானே என்னை உங்கள் பெண்ணுக்கு மெய்காப்பாளனுக அமைத்துக் கொண்டேன்.''

''நீ மட்டும் சுற்றி வளைக்கவில்லையோ?'' என்று குறுக்கிட்டார் டாக்டர். ''இதோ கேளுங்கள் அம்மா. ஒரு ராத்திரி தோட்டக்காரன் உங்கள் பெண்ணை நெருங்கியிருக்கிறான். அவளும் நன்றாகப் போராடினாள்; ரவியும் உடனே அவனைத் தாக்கி உதைத்து அனுப்பிவிட்டான். மறுநாளே ரேவதி மீண்டும் அநாதாசிரமத் தலைவியிடம் சேர்ப்பிக்கப் பட்டாள். அதுதான் கதை.''

''உன்னைத்தான் உதவிக்குக் கூப்பிட வேணும்!'' என்றான் ரவி. ''உங்கள் பெண்ணின் குணமும், தைரியமும், அடக்கமும், மனிதனை மனிதனாகப் பார்க்கும் பண்பும் என்னைக் கவர்ந்தன. அந்த இரவில் வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் கத்தி ஊரைக் கூட்டியிருப்பாள். என்னையே சந்தேகக் கண்களுடன் பார்த்திருப்பாள். அவள் எனக்கு நன்றி கூறினாள். 'உனக்கு என்னிடம் பயமில்லையா?' என்று நான்தான் பண்பின்றிக் கேட்டேன். 'எனக்கு என்ன பயம்? நீங்கள் ஷெட்டில் படுக்கும்போதே நீங்கள் காவல் இருக்கிறீர்கள் என்று நிம்மதியாக உறங்கினேனே!' என்றாள் அவள். என்னைக் கவனித்திருக்கிறாள் என்பது கூட எனக்குத் தெரியாது. அவளது அந்த ஒரு பதிலே அவளை என் இதய பீடத்தில் வைத்து விட்டது. என்னோடு நெருங்கிப் பழகினார்கள், என் சகோதர சகோதரிகள்; அவர்களால் கூடச் சந்தேகக் கண்களால் தவிரப் பார்க்கப் படாத எனக்கு, என்றோ பார்த்து அதிகம் பழகாத அவளது பரிசுத்தமான திருஷ்டி புல்லரிக்கச் செய்தது. மறுநாளே என் தாயாரிடம் நன்றாகச் சண்டை போட்டு விட்டு, அவளை விடுவித்துத் தலைவியிடம் சேர்ப்பித்தேன்.'' சற்றுத் தயங்கினான் ரவி.

''அவனுக்கு உங்கள்டம் பயம்'' என்று மீண்டும் தொடர்ந்தார் டாக்டர். ''அவனைச் சரியாய்ப் புரிந்து கொண்டு அவனை நீங்கள் ஏற்றுக் கொள்ளும் நாள் வரும்வரை அவன் எட்டவே இருந்தான். ஆனால் தலைவியின் ஆசியுடன் ரேவதியும் அவனும் மனசாரப் பழகினார்கள். அவன் தூண்டுதலின் பேரில்தான் இந்த வீடு, எனக்கு ஒரு கட்டாயக் குடும்பம். ரேவதியின் அப்பாவைக் கவனிக்கப் பக்கத்திலேயே இருக்க வேண்டுமாம். அப்படி ஒரு கட்டளை. சரி, எல்லாம் சரியாகிவிட்டதல்லவா? ஆசீர்வாதம் செய்யக் கையை அவிழ்த்தவுடனே முகூர்த்தம் வைக்கலாமல்லவா?'' என்றார்.

நான் பலவித உணர்ச்சிகளில் சிக்கித் திணறினேன்; ரேவதியும் அவள் தகப்பனாரும் என்னைக் கண்டு கபடமின்றி முறுவலித்தனர்.

அடக்கி வைத்திருந்த என் உணர்ச்சி, சினமாக வெடித்தது. ''இத்தனை பேரும் சேர்ந்து சூழ்ச்சி நடத்தியிருக்கிறீர்கள்! ரேவதி, உனக்காக நான் பட்ட பாட்டுக்கு உனக்கு என்னிடம் அந்தரங்கமாகப் பேசத் தோன்றவில்லை, இல்லையா?'' என்றேன், குரோதமாக.

''மன்னித்து விடுங்கள்; தப்பு என்மதுதான். அவள் பேச வேண்டாம். நான் சொல்கிறேன் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். இன்றைக்குக் கோவிலிலிருந்து வந்து உங்களிடம் விவரமாகப் பேச நினைத்தேன். அதற்குள் விபத்து ஏற்பட்டு, ஏதேதோ நடந்து, எப்படி எப்படியோ பேச்சுத் திசை மாறி விட்டது'' என்று கூறிச் சாஷ்டாங்கமாக என் காலில் விழுந்தான் ரவி.

என் கண்களில் நீர் பனித்து விட்டது. ''எழுந்திரு, அப்பா. தாரதம்மியம் பார்க்காமல் அன்பு செலுத்தலாமா? உங்கள் அம்மாவிடம் கைகட்டிச் சேவகம் செய்தவர்கள் அவர்கள் சம்பந்தியாக முடியுமா?'' என்றேன்.

''என் குடும்பமே என்னிடம் நம்பிக்கை வைக்கவில்லை. உங்கள் பெண்தானே என் மதே தவறு இருக்காது என்று என்னை அறியும் முன்பே வாதாடினாள்.''

''ரேவதி அவள் அம்மாவின் பெண்தான். அந்த இதயம் விசாலமானது. ரவி, நீ கொடுத்துவைத்தவன்தான்'' என்றார் என் கணவர்.

கங்காஸ்நானம் செய்தது போல என் உள்ளம் பக்தியும் பரவசமுமாக விரிந்தது. ※

Telephone : 81777 & 81825
Telex : 41-7761-ADJ
Telegram : JEYSARATHY

A. D. Jeyaveerapandia Nadar & Bros.

And other Associate Firms, Exporters, Importers,

Stevedoring, Clearing and Transport Contractors

H. O. : No. 37, Anna Salai, Madras-2

Offices at :

Nagapattinam - Tuticorin - Madurai -

Cuddalore - Pondicherry - Bombay

உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டுவது தீபாவளி
இல்லத்திற்கு எழில்கூட்டுவது டான்சி

சிறப்பு, அழகு, சிக்கனம். அதுவே டான்சி!

டான்சி பொருட்கள் என்றால்
தரமோ மிக உயர்வு! விலையோ மிகக் குறைவு!!

டான்சி விற்பனை நிலையங்கள்:

- 1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014 தொலைபேசி: 812273
- 681, அண்ணா சாலை, சென்னை-600 006 தொலைபேசி: 81816
- 23-27, அமெரிக்கன் கல்லூரி கட்டிடம், மதுரை-625 002 தொலைபேசி: 33822
- 312, கிராஸ்கட் ரோடு, கோயம்புத்தூர்-641 012 தொலைபேசி: 30755
- 28-ஏ, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620 022 தொலைபேசி: 26983

தீபாவளி வாழ்த்துக்கள்!





டான்சி தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

தாக்கர்ஸி—தலைமுறையினரின் நாகரீக இணைப்புப் பாலம்

TF

க்ரோஞெஸெட் (முன்கூட்டியே சுருக்கப்பட்டது) மற்றும் டெபிஸெஸ்ட் (மடிப்பைத் தடுக்கப் பரிசோதனை செய்யப்பட்டது) காட்டன் துணிகள். பாலியெஸ்டர் கலப்பிழை சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், ஆடைத் துணிகள் மற்றும் புடைவைகள்.

1973 முதல் உன்னதமான ஜவுளிப் பரம்பரைச் சின்னம்

தாக்கர்ஸி ஃபாப்ரிக்ஸ்

ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட்

''முதல் பரிசு நிச்சயமா இந்தத் தடவை கிடைக்கும். வாங்கிக்க டிக்கட்டை.''

கோயில் வாசலில் லாட்டரிச் சீட்டுகளை அட்டைகளில் ஏந்தி வார்த்தைகளாலே ஆசை வலை வீசும் லாட்டரிசீட்டு ஏஜெண்ட் சுப்பையன், கைடு கன்னியப்பனைப் பார்த்ததும் வழக்கம் போல் வலையை வீசிப் பார்த்தான்.

கைடு கன்னியப்பன் வழக்கம் போல் சிக்கிக் கொண்டான். ''எல்லா ஸ்டேட் டிக்கட்டும் எடுத்தாச்சு. புதுசா ஏதாச்சும் வந்திருந்தாச் சொல்லு, வாங்கிக்கறேன்.''

''உ.பி. புது வரிசை வந்திருக்கு. குடுக்கட்டுமா?''

''உம்! குடு. மொத்த என் அஞ்சு வர்ற மாதிரி டிக்கெட் குடு.''

சுப்பையன் சிரித்தான். ''தர்றேன். நீ கேட்ட நம்பரையே தர்றேன்.''

''பணம் சாயந்தரமாத்தான் குடுப்பேன்.''

''அதான் தெரிஞ்சதாச்சே!''

ஏஜெண்ட் சுப்பையன் கொடுத்த லாட்டரி டிக்கெட்டைத் தன் பழைய மணிபர்சில் வைத்துக்கொண்டு கோவிலின் உள்ளே பரபரவென்று நுழைந்தான் கன்னியப்பன்.

கன்னியப்பன் கோவிலுக்கு வர இன்றைக்கு அரைமணி தாமதமாகிவிட்டது.

காரணம்: வீட்டில் எழுந்த புயல்.

காலையில் ஆறுமணிக்குக் கம்பளியைப் போர்த்துக் கொண்டு முடங்கிக் கிடந்த கன்னியப்பனை அவன் மனைவி சௌந்தரம் உலுக்கிய உலுக்கலில் புயல் உருவாக ஆரம்பித்து, அவன் வீட்டை விட்டுக் கிளம்புவதற்கு அரைமணி நேரம் முன்புதான் அது அடங்கியது.

விஷயம் வேறொன்றும் இல்லை. மணமான ஐந்து வருட காலத்தில் வரிசையாய்ப் பெற்ற நான்கு குழந்தைகளும் காலையில் கண்ணைக் கசக்கிக் கொண்டு பசியால் அழ, சௌந்தரம் காளி வடிவம் எடுத்துக் கன்னியப்பனைக் குதறத் தொடங்கினாள்.

''நேத்தைக்குச் சம்பாதிச்சியே, அந்தக் காசை என்னய்யா பண்ணினே?'' சௌந்தரம் அடித்தொண்டையில் கத்தினாள்.

கன்னியப்பன் சாவதானமாய், ''ஆமா பெரிய்ய சம்பாதிப்பு! நேத்திக்குப் பூராவுக்கும் மூணு ரூபா தான் கெடைச்சுது'' என்றான். சௌந்தரம் இடுப்பில் கையை வைத்துக் கொண்டாள். ''அந்த மூணு ரூபாயைத்தான் கேக்கறேன், எங்கேன்னு?''

''செலவு பண்ணிட்டேன்.''

''என்ன செலவு?''

''உங்கிட்ட சொல்லித்தான் ஆவணுமா?''

''ஆமா! என்னேத்தானே கல்யாணம் கட்டிக்கிட்டே? எங்கிட்டத் தானே இந்த நாலு குழந்தைகளையும் பெத்துவிட்டே? அது நெசம்னா நீ எங்கிட்டத்தான் சொல்லி ஆவணும்.''

கன்னியப்பன் அவளைச் சில விநாடிகள் முறைத்தான். ''இதோ பாரு. நான் ஒண்ணும் அறியாவத்துக்குச் செலவு பண்ணிடலே. கெடைச்ச மூணு ரூபாயில ஒரு ரூபாய்க்கு வளக்கம் போலக் கள்ளுக் குடிச்சேன். இன்னொரு ரூபாய்க்கு ஐயர் ஓட்டல்லே அளவுச் சாப்பாடு சாப்பிட்டேன். மிச்சம் இருந்த ஒரு ரூபாய்க்கு ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கிட்டேன்.''

சௌந்தரம் ஏகத்தாளமாய்ச் சிரித்தாள். ''ஒரு ரூபாய்க்குக் கள்ளுத்தண்ணி சாப்பிட்டது சரி. இன்னொரு ரூபாய்க்கு ஐயர் ஓட்டல்லே டிபனை முடிச்சுக்கிட்டே; இதுவும் சரி. மிச்சம் இருந்த ரூபாயையாச்சும் எங்கையிலே குடுத்திருக்கலாம் இல்லையா? நொய்யரிசி வாங்கிக் கஞ்சி வெச்சு எம் புள்ளைகளுக்குக் குடுத்திருப்பேனல்ல? எதுக்கோசரம் அந்த லாட்டரி டிக்கட்டை வாங்கினே? அதான் மாசா மாசம் கலர் கலராக் கத்தை கத்தையா வாங்கிட்டிருக்கியே என்ன கெடைச்சுது உனக்கு?''

கன்னியப்பன் மெல்ல அளந்தான். சொன்னான். ''சௌந்தரம், புரியாமே பேசாதடி. லாட்டரிச் சீட்டு எதுக்கோசரம் வாங்கியிருக்கேன்? எனக்கோசரமா? உனக்கும் நம்ம குழந்தைகளுக்கும் சேத்தே வாங்கியிருக்கேன். கிளி ஜோசியக்காரப் பாண்டி தெனமும் என்னோட கையைப் பார்த்துட்டுச் சொல்லுவான். 'அண்ணே, இந்த வருசத்துக்குள்ளாற உனக்கு நிச்சயமா ஒரு பெரிய தொகை கெடைக்கப் போகுது. சோர்ந்து போகாம லாட்டரி டிக்கட் வாங்குங் கண்ணே'ன்னு தெனசரி சொல்லுறான். அப்படி ஏதும் லாட்டரி அடிச்சாக்க நம்ம தரித்திரம் விடியாதான்னு தான் விடாமே லாட்டரிச் சீட்டு வாங்கறேன், தெரியுமா?''

கன்னியப்பன் பேச்சை முடிக்கவில்லை. சௌந்தரம் சீறினாள்!

''யோவ்! அதிர்ஷ்டம் இருக்கிறதாயிருந்தா ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கினுலே அந்த லட்சம் வீடு தேடி வரும். ஊர்ப்பட்ட லாட்டரி டிக்கட்டையெல்லாம் வாங்கி, அம்பது நூறுன்னு எதுக்காகச் செலவு பண்ணறே? மாசத்துக்கு ஒரு டிக்கெட் வாங்கய்யா போதும்.''

''சர்தான் போடி! எனக்கு ஏதாச்சும் புத்தி சொல்ல ஆரம்பிச்சே, மூஞ்சி முகம்னு பார்க்காமே பட்டையைக் கழட்டிடுவேன்.''

சௌந்தரம் கண்கள் இடுங்க அவனைப் பார்த்தாள். ''ஆமாய்யா, பொண்டாட்டியை அடிக்க மட்டுந்தான் உன்னுல முடியும். அவளுக்கு வயிறுரச்சோறுபோட உன்னுலே ஆகாது. அவ நல்லது சொன்னு உனக்குப் புடிக்காது. மாசமாசம் ஊர்ப்பட்ட லாட்டரிச்சீட்டுகளுக்கு நூறுருபா வரைக்கும் செலவு பண்றியே; அதை ஒரு பேங்கில போட்டுக்கிட்டு வந்திருந்தா இந்நேரத்துக்கு நாலாயிரம் ரூபாய் வரைக்கும் சேர்ந்திருக்குமேய்யா. அத வெச்சு உன்னோட தங்கச்சி சிவபாக்கியத்தோட கல்யாணத்தை, அந்த வாத்தியார் பையனுக்குப் போன மாசமே முடிச்சிருக்கலாமேய்யா. உன்னையும் ஆம்பிளைன்னு நம்பி உங்கம்மா சாகறப்போ சிவபாக்கியத்தை உங் கையில பிடிச்சுக் குடுத்துட்டுப் போச்சே, அதைச் சொல்லணும்.''

''பேசாதே! வாயை மூடு!'' கன்னியப்பன் உறுமினுன். சௌந்தரம் வாயை மூடவில்லை. ''நான் வாயை மூடிக்கிட்டா உன்னோட கண்ணும் மூடித்தான்யா இருக்கும். உனக்குச் சுய புத்தியும் கெடையாது. சொல்புத்தியும் கெடையாது. நான் என்ன பண்றது?''

சரேலென எழுந்தான் கன்னியப்பன். சிவந்து போன விழிகளோடு சௌந்தரத்தின் தலைமுடியை எட்டிப் பிடித்தான்.

''அண்ணே!''

தீனமான அந்தக் குரலைக் கேட்டுத் திரும்பினுன் கன்னியப்பன். வாசல் கதவின் நிலைப்படிக்கு அருகே, அவனுடைய தங்கை சிவபாக்கியம் நின்றிருந்தாள். அவளைப் பார்த்ததும் கன்னியப்பனின் பிடி தளர்ந்தது. அவனுடைய பிடி தளர்ந்ததும் சௌந்தரத்தின் வாய் மறுபடியும் திறந்து கொண்டது: ''பாக்கியம், உங்கண்ணனுக்குச் சம்பாதிக்கத் துப்பில்லேன்னுலும் பொண்டாட்டியை அடிக்க வீரமிருக்கு. பெத்துப் போட்ட புள்ளைங்களுக்குக் கஞ்சி ஊத்தய்யான்னு கேட்டா, நான் லட்சாதிபதியாப் போறேன்னு சொல்லிக்கிட்டுக் கையிலிருக்கிற காசையெல்லாம் குடுத்து டிக்கெட்டை வாங்கி மாசாமாசம் கிழிச்சுப் போடருர். வயசுப் பொண்ணு நீ. பட்டன் பேக்டரிக்குத் தினக்கூலிச் சம்பளத்துக்கு வேலைக்குப் போயிட்டு வர்றே. ஆனு, உங் கண்ணன்?''

சௌந்தரத்தினுல் அதற்கு மேல் பேச முடியவில்லை. பொங்கி வந்த அழுகையை அடக்கமாட்டாமல் சுவரில் முகம் புதைத்து அவள் பெற்ற நான்கு குழந்தைகளும் வேடிக்கை பார்க்கக் கோவென்று கதறி அழுதாள்.

''பொம்பளையா அவ? பிசாசு! பிலுபிலுன்னு முருங்க மரத்தை உலுக்கற வேதாளம் மாதிரி என்ன பேச்சு? என்ன வாய்? எனக்குச் சம்பாதிக்கத் துப்பில்லையாம்! தங்கச்சியை வேலைக்கு அனுப்பிட்டு அதுக்குக் கல்யாணத்தை முடிக்க

முடியாமே தட்டிக் கழிக்கறேனும். தெரிச்சல்.: ஒரு நாளு இல்லே, ஒரு நாள் ஏதாச்சும் ஒரு ஸ்டேட் லாட்டரியில லட்சம் அடிச்சுதுன்னு அப்பத் தெரியும் இந்தக் கன்னியப்பனோட மௌசு! கிளிஜோஸியக்காரப் பாண்டி சொன்னது நெறையப் பலிச்சிருக்கு. இது மட்டும் பலிக்காமயா போயிடும்? பணம் வந்ததும் தங்கச்சிக்காக மாப்பிள்ளைப் பசங்க க்யூவில வர வேணும்?'' என்று முனகிக்கொண்டே வெளியே நடந்தான் கன்னியப்பன்.

''என்னடா கன்னியப்பா, பெரிய யோசனையில போற போலிருக்கு. எதிர்ல ஆளு வர்றது கூடத் தெரியாமே அப்படி என்ன யோசனை?''

குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தான் கன்னியப்பன். கோயில் தர்மகர்த்தா சிவசைலம் சிவப்பழமாய் நின்றிருந்தார். அவருடைய சிவந்த நிறத்துக்கு அந்தப் பசும்பொன் பட்டு வேஷ்டி ரொம்பவும் பாந்தமாயிருந்தது. கும்பிட்டான் கன்னியப்பன். ''மன்னிக்கணும். ஐயாவைக் கவனிக்கல்ல. வீட்டிலேயே கொஞ்சம் சண்டை. அதையே நெனைச்சுட்டு வந்தேன்.''

''சௌந்தரம் ரொம்பவும் பேசினாளா கன்னியப்பா?''

''ஆமாங்கய்யா. நீங்கதான் பெரியவங்க, ஒருவாட்டி அவளுக்கு வீட்டுக்கு வந்து புத்தி சொல்லணும்.'' சிவசைலம் சிரித்தார், வாய்விட்டு. ''நீ சொல்றதைக் காட்டிலும் அவ சொல்றதிலே நியாயமிருக்கு, கன்னியப்பா. வீட்ல வயசுக்கு வந்த தங்கச்சியை வச்சுக்கிட்டு நீ மொதல்ல கல்யாணம் பண்ணிக்கிட்டதே தப்பு. பண்ணிக்கிட்டே; குழந்தைகளைப் பெத்துக்கறதிலாவது கொஞ்சம் நிதானத்தைக் காட்டியிருக்கலாம். காட்டல்லே, சரி! நாலு குழந்தைகளுக்குத் தகப்பனாயிட்டே. அதுங்களைக் காப்பாத்தறதுக்குத் தக்கபடி வாழ்க்கையை நடத்தணும். சம்பாதிக்கறது அரைக்காசானாலும் கால் காசாவது மிச்சம் வெக்க வேண்டாமா? மாசம் நூறு ரூபாய்க்கு லாட்டரி டிக்கட் வாங்கறியாமே, நெசமா?''

''நெசந்தானுங்க ஐயா. ஏதாச்சும் பிரைஸ் விளுந்து என்னோட கஷ்டம் விடியாதான்னுதான் வாங்கறேன்.''

தர்மகர்த்தா சிவசைலம் மறுபடியும் வாய்விட்டுச் சிரித்தார். ''கன்னியப்பா, அதிர்ஷ்டம் வர்றப்போ அதுவாவே உன்னோட வீட்டைத் தேடிக்கிட்டு வந்து கதவைத் தட்டும். அதுவரைக்கும் நீ புத்திசாலித்தனமா நடந்துக்கணும்.

கன்னியப்பன் ஒன்றும் பேசத் தோன்றாமல் அவரைப் பார்த்தான்.

''சரி, சரி, சீக்கிரமாக் கோவில் மண்டபத்துக்குப்போ. மண்டபத்துச் சிற்பங்களைப் பாக்கக் பொண்ணுக பசங்க, எல்லாரும் வந்திருக்காங்க. கைடு இல்லையான்னு எங்கிட்ட விசாரிச்சாங்க. அனுப்பறேன்னு சொல்லிட்டு வந்தேன். சீக்கிரமாப் போ. பத்து ரூபாயாச்சும் கிடைக்கும்.''

தர்மகர்த்தாவுக்கு மீண்டும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு மண்டபத்தை நோக்கி ஓடினான் அவன்.

தர்மகர்த்தா சொன்ன மாதிரியே மண்டபத்துச் சிற்பங்களைப் பார்க்கக் கல்லூரி மாணவிகளும் மாணவர்களும் நின்றிருந்தார்கள்.

கன்னியப்பன் அவர்களைப் பவ்யமாய் நெருங்கி சலாம் செய்தான். கல்லூரி மாணவர்களில் ஒருவன் கன்னியப்பனைப் பார்த்து, ''யாருப்பா. நீ?'' என்றான்.

''நான் கைடுங்க.''

''தர்மகர்த்தா அனுப்பிச்சாரா?''

''ஆமாங்க.''

''கைடு பண்றதுக்கு எத்தினி சார்ஜ்?''

''திட்டவட்டமா ஏதும் இல்லீங்க. குடுக்கிறதை வாங்கிப்பேன்.''

''சரி, சொல்லிட்டு வா.''

அன்று பொழுது சாய்வதற்குள் கன்னியப்பனுக்கு இருபது ரூபாய் வரைக்கும் சேர்ந்து விட்டது. மனசு நிறைந்து வழிந்தது.

சந்தோஷ அலைகளில் மனப்படகைச் செலுத்திக்கொண்டே நடை போட்டவனை லாட்டரி ஏஜெண்ட் சுப்பையன் அழைத்தான்.

''என்ன கன்னியப்பா, காத்தாலே வாங்கின லாட்டரிச் சீட்டுக்குப் பணம் தர்றியா?''

கன்னியப்பன் நின்றான். அலட்சியமாய் ஒரு பத்து ரூபாய்த்தாளை எடுத்துச் சுப்பையனின் கையில் போட்டான்.

''இன்னிக்கு நல்ல வேட்டைதான் போலிருக்கு.''

''உம்!'' ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்தான்.

''பனிரெண்டு லாட்டரி டிக்கெட் ஒன்பது ரூபாய்க்குத் தர்றேன். எல்லாமே பம்ப்பர் பிரைஸ் டிக்கெட், எடுத்துக்கறியா?''

கன்னியப்பனின் மனம் வியப்பால் விலுக்கென்றது. ''நெசமாவா? உனக்கு மூணு ரூபாய் நஷ்டமாகாது?''

''நஷ்டந்தான், லாபத்தில் கொஞ்சம் நஷ்டம். அதுவும் உனக்காகத்தான். என்ன, எடுத்துக்கறியா?''

''எடுத்துக்கறேன். அதிர்ஷ்டம் தேடி வருதே!''

மீதி வரவேண்டிய ஒன்பது ரூபாய்க்குப் பன்னிரண்டுவண்ணச்சீட்டுக்கள் கன்னியப்பனின் பர்ஸுக்குள் அடைக்கலமாயின. வாயில்பீடி அடர்த்தியாய்ப் புகையை விட்டது. சட்டைப் பையில் மீதம் இருந்த பத்து ரூபாயோடு சாராயக் கடைக்குப் போய், ஐந்து ரூபாய்க்கு உள்ளே தள்ளிக் கொண்டு, பக்கத்திலிருந்த சால்னாக் கடையில் நுழைந்து மிளகுத் தூளில் வறுத்தெடுத்த மீனையும் கோழிச் சாப்ஸையும் துணைக்குச் சேர்த்துக் கொண்டான். சால்னாக் கடைக்காரச் சாயபு கன்னியப்பனின் கையிலிருந்த ஐந்து ரூபாயை வாங்கிக் கொண்டு, அவன் சாப்பிட்டது போக மீதி முப்பது பை





டான்டெக்ஸ்®

ஒவ்வொரு வகையிலும் சிறந்தவை

தரத்தில்,
துணிவகையில்
தயாரிப்பில்,
உருக்குலையாத
நீடித்த உழைப்பில்,
எல்லா விதத்திலும்
சிறந்தவை.
சிக்கனமானதும் கூட.

IS : 4964

ஒட்டி
உறவாட
டான்டெக்ஸ்

டான்டெக்ஸ் ரகங்கள்
ப்ரீ:ப்ஸ் • வெஸ்ட்ஸ்
காஷுவெல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள்
சிறுவர்களுக்கான ரகங்கள்

பூரண விற்பனையாளர்கள்:
டி.டி. கிருஷ்ணமாச்சாரி & கோ
சென்னை-600 086.

Imageads-TT-1261

காசை அவன் சட்டைப் பையில் போட்டு வாசற்படியை விட்டுக் கீழே இறங்கி அனுப்பி வைத்தாள்.

தளர் நடை போட்டுக் கொண்டு வீட்டை நெருங்கினான் கன்னியப்பன்.

''அம்மா! அப்பா வாந்தாச்சு.''

அவனுடைய வாரிசுகள் சௌந்தரத்துக்கு அவனுடைய வருகையைக் கட்டியங் கூறின. சௌந்தரம் வீட்டிலிருந்து வெளிப்பட்டாள்.

''இன்னிக்கு எவ்வளவய்யா கெடச்சுது? கெடச்சதைக் குடுய்யா. புள்ளெங்க பசியாலே துடிக்குது. ஏதாச்சும் ஆக்கிப் போடலாம்.''

கன்னியப்பன் சிரித்தான். ''நெறையக் கெடைச்சுது. இருபது ரூபா.''

''ஆ!'' ஒரு விநாடி முகமலர்ந்தாள் சௌந்தரம். அடுத்த விநாடியே அவன் இருந்த நிலையைப் பார்த்ததும் அந்தப் பணம் என்னவாயிற்றோ என்ற பதைபதைப்பில் அவன் சட்டைப் பைக்குள் கையை விட்டாள்.

மூன்று பத்துப் பைசாக்கள் மட்டுமே அவள் கைக்குத் தட்டுப்பட, தாங்க முடியாத ஆற்றாமையோடு வெடித்தாள்: ''என்னய்யா பண்ணினே அந்தப் பணத்தை? முப்பது பைசா மட்டுந்தாய்யா இருக்குது.''

''அட! இருபது ரூபா அதுக்குள்ளாற செலவழிஞ்சு போயிடுச்சா? நான் அப்படியொண்ணும் அநியாயமாச் செலவு பண்ணிடலையே. பத்து ரூபாய்க்கு லாட்டரிச் சீட்டு. அஞ்சு ரூபாய்க்கு பட்டத் தண்ணி. அப்புறம் மீனு, கோழி, சாப்ஸ் முட்டை அது இதுன்னு கொஞ்சம் சாப்பிட்டேன், அவ்வளவுதாண்டி.'' கெக்கலிட்டுச் சிரிப்புச் சிரித்தான் கன்னியப்பன்.

சிரிக்கும் கன்னியப்பனையே விழிகள் தெறிக்கப் பார்த்தாள் சௌந்தரம். ''நீயெல்லாம் ஒரு மனுஷனா? உனக்கெல்லாம் ஒரு பொண்டாட்டி குழந்தைங்க! தூ!'' என்கிற பாவங்களோடு கூடிய பார்வை அது.

''டேய் ராசப்பா, இங்க வாடா.'' சௌந்தரம் தன் பெரிய மகனை அழைத்தாள். மேல்சட்டை இல்லாமல் நிக்கரோடு ஓடி வந்தான். காசை அவனிடமே நீட்டினாள். ''இந்தாடா முப்பது பைசா. குப்புத்தாய்க் கிழவி கிட்டக் குச்சிக் கிழங்கு வாங்கித் தம்பிக்கும் தங்கச்சிகளுக்கும் குடுத்து நீயும் சாப்பிடு. வர்ரப்ப குழாய்த் தண்ணியை வயிறு முட்டக் குடிச்சிட்டு வந்து படுங்க.'' பொங்கி வந்த கண்ணீருக்குக் கரை கட்ட முடியாமல் திணறினாள் சௌந்தரம்.

கன்னியப்பன் திண்ணையில் படுத்துக்கொள்ளத் தோதாய் இடம் பார்த்துக்கொண்டிருந்தான். பீடியைக் கடைசி இழுப்பு இழுத்துச் சாக்கடையை நோக்கிச் சுண்டியெறிந்துவிட்டு குத்துக்காலிட்டு உட்கார்ந்துகொண்டான்.

சௌந்தரம் அவனையொட்டியபடி நின்றுகொண்டு மெல்லிய குரலில், ''நான் இப்பச் சொல்லப் போறதை மனசில வாங்கிக்கற நிலைமையில இருக்கியா?'' என்றாள்.

''என்ன விஷயம்?'' கன்னியப்பன் கண்கள் போதையில் செருகியிருந்தன.

''ஆறு மாசத்துக்கு முன்னாடி உங்க தங்கச்சியெப் பொண்ணு பாத்துட்டுப் போனாங்களே அந்த வாத்தியார் பையன் குடும்பம்; அவங்க இன்னிக்குச் சாயந்தரம் வந்திருந்தாங்க.''

''நெஜமாவா?'' அந்தக் குடிபோதையிலும் நிஜமான வியப்போடு கேட்டான்.

''அந்தப் பையனுக்கு உங்க தங்கச்சியைத்தான் புடிச்சிருக்காம். வேற எந்த இடத்திலும் பொண்ணைப் பார்த்தும் மனசுக்குப் புடிக்கல்லியாம். அதனால கல்யாணத்தை நடத்திடலாம்னு சொன்னாங்க. முன்ன அவங்க கேட்ட மாதிரி சீர் வரிசை ஒண்ணும் பண்ண வேண்டாமாம். ஒரு ரெண்டாயிரம் ரூபா மட்டும் குடுத்துடுங்க, கல்யாணச் செலவு பூரா தாங்களே பண்ணிக்கிறோம்னு சொல்லிட்டுப் போயிருக்காங்க. உங்க தங்கச்சி சிவபாக்கியத்துக்கும் இந்த இடம் புடிச்சிருக்கு போலிருக்குது. வழக்கமா மறுப்புச் சொல்றவ இந்தச் சம்பந்தத்தைப் பத்தி ஒரு வார்த்தை கூடச் சொல்லல்லே.''

கன்னியப்பன் குடிபோதையில் சிவந்து போன விழிகளால் அவளை ஏறிட்டான்.

''நீ அவங்களுக்கு என்ன பதிலைச் சொல்லி அனுப்பிச்சே?''

''நானென்ன சொல்லுவேன்? அவர் மண்டபத்திலிருந்து வரட்டும். கேட்டுச் சொல்றேன்னு சொல்லிட்டேன்.''

கன்னியப்பன் சோர்ந்து போய் இன்னமும் சுவரோரமாய்க் கொஞ்சம் சரிந்தான். நடுங்குகிற குரலில் கேட்டான்.'' இப்ப என்ன செய்யலாம் சௌந்தரம்.?''

''என்ன செய்யறதா? கல்யாணத்தை நடத்த வேண்டியதுதான்.''

''என்னடி விளையாட்றியா? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உங்கிட்டே குடுத்தேனே முப்பது பைசா, அதாண்டி என்னோட ஆஸ்தி. கையில பைசா இல்ல. கல்யாணத்தை எப்படி நடத்தறது?''

''கடனோ உடனோ வாங்க வேண்டியதுதான். கல்யாணத்தை நடத்த வேண்டியதுதான். அதுக்காகக் கன்னிக்கடனைத் தள்ளிப் போடறதா?'' சௌந்தரம் உஷ்ணமாய்க் கேட்டாள். கன்னியப்பன் பரிதாபமாய்ச் சௌந்தரத்தின் முகத்தைப் பார்த்தான்.

''என்னே நம்பி இந்த ஊர்ல எவண்டி கடன் குடுப்பான்?''

''இப்படிச் சொல்லிக்கிட்டேயிருந்தா உங்க தங்கச்சிக்கு எப்பத்தான் கழுத்தில தாலி ஏர்றது?''

சில நிமிஷங்கள் தரையையே பார்த்துக் கொண்டிருந்தான் கன்னியப்பன். பிறகு கொஞ்சம் தொய்வான குரலில் சொன்னான். ''ஏண்டி, மாப்பிள்ளை வீட்டுக்காரங்கிட்ட இப்படிச் சொல்லிப் பார்த்தா என்ன? கல்யாணச் செலவு பூராவையும் நீங்களே ஏத்துக்கிட்டுச் செய்யுங்க, எங்களாலே முடியாதுன்னு திட்டவட்டமாச் சொல்லிடலாமே. வெறும் கையாலே எதுக்காக முழம் போடணும்?''

''சை!'' என்று முகத்தை நொடித்துக்கொண்டாள். ''குடிச்சுக் குடிச்சு உன்னோட உடம்பில ஓடற ரத்தத்துக்கு ரோசம், மானம் அத்துப் போச்சா? அவங்க எவ்வளவு பெரிய மனசு பண்ணி நமக்காக ரொம்பவும் கீழிறங்கி ரெண்டாயிரம் மட்டும் குடுங்க போதும், மத்தச் சீர் செனத்தி எதுவும் பண்ண வேண்டாம்னு சொல்லிட்டுப் போயிருக்காங்க! நீ என்னன்னா, ஒரேயடியா ஒண்ணுமே தரமாட்டோம்னு கண்ணை மூடறியே. ரொம்பவும் கேவலமய்யா; எப்படியாச்சும் அந்த ரெண்டாயிரத்தைச் சரி பண்ணய்யா.''

''ரெண்டாயிரம்! ரெண்டாயிரம் சல்லிகூட என்னால சரி பண்ண முடியாதடி. முடியாததைப் பத்தி ஏன் பேசணும்?''

''அப்ப, உங்க தங்கச்சி கல்யாணம்?''

''கொஞ்ச நாள் போகட்டும்.''

''கொஞ்ச நாளுன்னா, எத்தினி நாள்?''

''நமக்குச் செலவு வெக்காமே எவன் கட்டிக்க வர்றானோ அந்த நாளு வர்ற வரைக்கும்.''

''இப்பவே அவளுக்கு வயசு இருபத்தஞ்சு ஆவுதய்யா.''

''முப்பதே ஆவட்டுமே! அதனாலென்ன கொறைஞ்சு போயிடுச்சு?''

சௌந்தரம் எரிகிற இதயத்தோடு அவனை முறைத்தாள். கன்னியப்பன் அப்படியே திண்ணையில் சாய்ந்து கொண்டு தூங்க ஆரம்பித்தான்.

மறுநாள் காலை பத்து மணி. கோயில் மண்டபத்து உட்பிராகாரத் தூண் ஒன்றில் முதுகைச் சாய்த்துக் கொண்டு சிற்பங்களைப் பார்க்க வருகிற சனங்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான் கன்னியப்பன். வெளியே வெயில் அனலாய்த் தகிக்க மண்டபத்துக் கல்தரை குளிர்ச்சியோடு இதமாய் இருந்தது.

''அண்ணே!''

குரல் கேட்டுத் திரும்பினான் கன்னியப்பன்.

அவனுடைய தங்கை சிவபாக்கியம் நின்றிருந்தாள்.

திகைப்போடு எழுந்தான் கன்னியப்பன். பட்டன் பேக்டரிக்கு வேலைக்குப் போயிருக்க வேண்டிய தங்கை, இந்த நேரத்தில், அதுவும் மண்டபத்தில்? குழப்பத்தோடு அவளை நெருங்கினான்.

''என்ன பாக்கியம்? வேலைக்குப் போகல்லியா?''

''இல்லே. இன்னிக்கு லீவு எடுத்துக்கிட்டேன்.'' சிவபாக்கியம் தன் தலையை குனிந்தபடி சொன்னாள். கன்னியப்பன் இன்னமும் அதிகமாய்த் திகைத்தான்.

''லீவா? எதுக்கோசரம்?''

''உன்கிட்டப் பேசறதுக்காக.''

''என்கூடப் போறதுக்காக லீவா? வீட்டிலேயே பேசியிருக்கலாமே, பாக்கியம்!''

''வீட்ல பேசி என்னோட அண்ணனின் மானத்தை அண்ணி முன்னால வாங்க எனக்குப் புடிக்கல்ல. அதனாலத்தான் மண்டபத்துக்கு வந்திருக்கேன்...''

விழிகள் விரிய அவளைப் பார்த்தான் கன்னியப்பன். ''என்ன பேசப் போறே?''

''என்னோட கல்யாணத்தைப் பத்தி.''

''ஓ ஹோ!'' இகழ்ச்சியாகச் சிரித்தான் கன்னியப்பன். ''உன்னோட கல்யாணத்தைப்பத்திப் பேசற அளவுக்குப் பெரிய மனுஷி ஆயிட்டியா?''

''நான் பெரிய மனுஷி ஆயிப் பனிரெண்டு வருஷம் முடியப்போறது அண்ணே! உனக்கு அந்தக் கணக்கெல்லாம் எங்கே தெரியப்போவுது?''

முகம் சிவந்தான் கன்னியப்பன். ''உன்னோட கல்யாண விஷயத்தப் பத்தி இப்ப என்ன பேசணும்னு சொல்றே?''

''அண்ணே! எனக்கு அம்மாவோ அப்பாவோ தாய்மாமனோ யாருமேயில்ல. என்னோட கல்யாணத்தைப் பத்திப் பேச நீ மட்டுந்தான் இருக்கே. ஆனா உனக்கோ என்னோட கல்யாணத்தை இப்ப நடத்தறதுல இஷ்டமில்லேன்னு நெனைக்கிறேன்.''

கன்னியப்பன் குறுக்கிட்டான். ''இஷ்டமிருக்கு. ஆனா, பணமில்லே.''

சிவபாக்கியம் கேலியாய்ச் சிரித்தாள். ''உன்கிட்ட எப்பத்தான் பணம் இருந்துச்சு? இனி எப்பவுமே உன்கிட்டே பணம் சேருங்கிற நம்பிக்கையும் எனக்கு இல்லே. பெத்த புள்ளைங்களுக்கு வயிறாரச் சோறு போடவக்கில்லாத நீயா எனக்குக் கல்யாணத்தைச் செஞ்சு வெக்கப் போறே?''

''ஏய், பாக்கியம், வாய் என்ன நீளுது?''

நெற்றியோரம் நரம்புகள் புடைக்க உறுமினான் கன்னியப்பன்.

''அண்ணே, இந்த மிரட்டலையெல்லாம் உன்னோட பொண்டாட்டிகிட்ட வெச்சுக்க. என்கிட்ட வேண்டாம். நேத்தைக்குச் சாயந்தரம் நீயும் அண்ணியும் பேசினதை நானும் கேட்டேன்.. இருபத்தஞ்சு வயசு நடக்கறப்போ உனக்குப் பொண்டாட்டி தேவைப்பட்டா. கட்டிக்கிட்ட. ஆனா அதே இருபத்தஞ்சு வயசு எனக்கு இப்ப நடந்திட்டிருக்கிறப்போ முப்பதாகட்டும்னு அலட்சியமாச் சொல்லிட்டே! நீ நெனைச்சிருந்தா உன்னோட ஊதாரித்தனமான செலவையெல்லாம் நிறுத்திக்கிட்டுக் காசைச் சேத்து வெச்சு என்னோட கல்யாணத்தை முடிச்சிருக்கலாம். ஊரு பூராவும் கடன் வாங்கிக் கடன் வாங்கிச் செலவழிச்சே. ஆனா, ஒரு கன்னிக்கடன் உன்னோட வீட்டிலேயே இருக்கிறதை நீ புரிஞ்சுக்கல்ல. நீ தீர்க்க வேண்டிய அந்தக் கன்னிக்கடனை நானாவே தீர்த்துக்க முடிவு பண்ணிட்டேன். அண்ணே! நேத்தைக்கு நம்ம வீட்டுக்கு வந்த மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ரெண்டாயிரம் ரூபா கேட்டதா அண்ணி உங்கிட்ட சொல்லிட்டிருந்தாங்க. அந்த ரெண்டாயிரம் ரூபாயை நான் தர்றேன்; இந்த அஞ்சு வருஷமா என்னோட சம்பளத்தில, உன்கிட்டக் குடுத்தது போக, என்னோட செலவுப் பணத்தில கொஞ்சம் கொஞ்சமாச் சேர்த்து, தர்மகர்த்தா சிவசைலம் ஐயாகிட்டே குடுத்து வெச்சிருக்கேன். அதை வாங்கித் தர்றேன். இந்த விஷயம் ஊரு உலகத்துக்குத் தெரிய வேண்டாம். உன்னோட சம்பாத்யத்தில் தான் என்னோட கல்யாணம் முடிஞ்ச மாதிரி எல்லாரும் நெனைக்கணும். அப்பத்தானே உனக்குப் பெருமை? இல்லையாண்ணே?''

பேசிவிட்டு மூச்சிரைக்க நின்றாள் சிவபாக்கியம்.

''பாக்கியம்!'' தொண்டையடைத்தது கன்னியப்பனுக்கு. போகத் திரும்பிய சிவபாக்கியம் நின்றாள். ''அண்ணே! இன்னிக்கு இல்லே, நாளைக்கு இல்லே; நான் சந்தையில விலை போற மாடு. நான் பொழைச்சுக்குவேன். ஆனா உன்னை நம்பி அஞ்சு வயிறு இருக்கண்ணே. அவங்களுக்கு அரைவயிறு கஞ்சியாச்சும் ஊத்து. இனிமேலும் இப்பிடியே நீ இருந்தியானா ரொம்பச் சீக்கிரமாத் தெருவுக்கு வந்திடுவே!''

பீறிட்டு வந்த வார்த்தைகளோடு அழுகையும் சேர்ந்துகொள்ள ஒரு சின்னக் குழந்தையைப் போல் கேவிக் கேவி அழும் சிவபாக்கியத்தை விழிகள் இமைக்காமல் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் கன்னியப்பன்.

கைடு கன்னியப்பனுக்கு வழி தெரிய ஆரம்பித்தது, அந்த நிமிஷம் முதல்! ✳

வஸந்த பவன்

''டீலக்ஸ் ரெஸ்டாரெண்ட்'',
24, N. S. B. ரோடு,
திருச்சி-620 002.

''வேகா ரெஸ்டாரெண்ட்''
ஒரு நட்சத்திர அந்தஸ்து பெற்றது
20, காந்தி இர்வின் ரோடு,
சென்னை-600 008.

உயர்தரச் சைவ உணவிற்கும், சிற்றுண்டிகளுக்கும், சிறந்த ஸ்வீட், காரங்களுக்கும் புகழ்பெற்ற 'திருநெல்வேலி அல்வா'விற்கும் சிறந்த இடம்

For your travel problems please contact

JANTHA TRAVELS

TIRUCHY - 620 002

National Permit Holders for Deluxe A/C Bus & Car Services

Phones: 27955 & 26112 **Madras Phone: 844083**

—நாகசுந்தரம்

அன்பனே அப்பா அம்மையே அரசே
அருட்பெருஞ் சோதியே அடியேன்
துன்பெலாம் தொலைத்த துணைவனே ஞான
சுகத்திலே தோற்றிய சுகமே
இன்பனே எல்லாம் வல்லசித் தாகி
என்னுளே இலங்கிய பொருளே
வன்பனேன் பிழைகள் பொறுத்துஅருட் சோதி
வழங்கினை வாழிநின் மாண்பே.

- திருஅருட்பா

விளம்பர உதவி:

தி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்
மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்

13/239, மெயின் ரோடு,
மேட்டுப்பாளையம்-641301.

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண சிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்கமுடியாத வலியா? தாங்கமுடியாத அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக்கசிவா? பயனுள்ள சிகிச்சை செய்து கொள்ள இனிமேலும் தாமதிக்காதீர்கள். அலட்சியம் செய்தால் நோய் முற்றி ரண சிகிச்சை செய்ய வேண்டிவரும். உலகில் 108 நாடுகளில் உபயோகிக்கப்பட்டுவரும் ஹெடன்ஸா களிம்பை உபயோகித்து காலாகாலத்தில் நிவாரணம் பெறுங்கள். ஹெடன்ஸாவிலுள்ள சக்தி வாய்ந்த மருந்துப் பொருள்கள் வலியையும், அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப்பிரவிருத்தியையும் சுலபமாக்குகிறது.

காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் நீங்கள் ரண சிகிச்சையிலிருந்து தப்பலாம் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

3627 TM

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



- ♠ மானோ பிளாக் பம்பு
- ♠ மின்சார மோட்டார்
- ♠ மின் சங்கு
- ♠ ஆயில் இன்ஜின் பம்பு
- ♠ மோட்டார் பம்பு
- ♠ பெல்ட் பம்பு
- ♠ கரும்பு ஆலை
- ♠ டொமஸ்டிக் பம்பு

31 ஆண்டுகளுக்கு மேலாக மோட்டார், பம்பு, மானோபிளாக், மின் சங்கு, கரும்பு ஆலை முதலியன தயாரிப்பதில்

முன்னோடியாக விளங்குபவர்கள்

சுப்பையா பவுண்டரி

பாப்பநாயக்கன் பாளையம்

கோயமுத்தூர் - 641037

தந்தி: "FOUNDRY" போன்: 22935, 35390.

OSR

ஆயிரம் பிறை கண்ட நூலகம்

பொது நூலக இயக்குனர்
வே. தில்லைநாயகம்

எண்ணும் எழுத்தும்:

''எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்'' என்பது ஆன்றோர் வாக்கு. இது எண்ணுக்கு, எழுத்துக்கு, அறிவுக்கு, கல்விக்கு எத்தகைய முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்குகிறது.

தொடர்ந்து படிக்க வேண்டும்:

கல்வி கரையில. எனவே அதைப் பள்ளிக்கூடப் படிப்போடு நிறுத்திவிடக் கூடாது. தொடர்ந்து படிக்க வேண்டும். விடாது படிக்க வேண்டும். விடா முயற்சியோடு படிக்க வேண்டும்.

எல்லாரும் படிக்க வேண்டும்:

சிறுவரும் படிக்க வேண்டும்; பெரியோரும் படிக்க வேண்டும். மாணவரும் படிக்க வேண்டும்; ஆசிரியரும் படிக்க வேண்டும். ஆணும் படிக்க வேண்டும்; பெண்ணும் படிக்க வேண்டும். அலுவலரும் படிக்க வேண்டும்; அதிகாரியும் படிக்க வேண்டும்; பாட்டாளியும் படிக்க வேண்டும்; பணக்காரரும் படிக்க வேண்டும். கிராமத்தாரும் படிக்க வேண்டும்; நகரத்தாரும் படிக்க வேண்டும். படித்தவரும் படிக்க வேண்டும்; படியாதவரையும் படிக்கச் செய்ய வேண்டும்.

நூலகம்:

தொடர்ந்து படிக்க, விடாது படிக்க, விடா முயற்சியோடு படிக்க அமைந்ததுதான் நூலகம். கல்வி நிலையங்களும் நூல் நிலையங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை; பிணைந்தவை. ஒரு வண்டியின் இரு சக்கரங்கள்; ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்.

முகம் பார்க்க உதவுகிறது கண்ணாடி. அதுபோல ஆதிகாலம் தொட்டு இன்றுவரை சமுதாயத்தின் வளர்ச்சியைப் பார்க்க உதவும் கண்ணாடி நூலகம்.

இலக்கணம்:

மக்களால், மக்களுக்காக மக்களே (By the people, for the people and of the people) நடத்தி வருவது பொது நூலகம் (Puplic Library) எனப்படும்.

1. அது அமைந்த பகுதியின் மக்களது நலனுக்காகப் பால் வேறுபாடு இன்றி, சாதி சமய வித்தியாசம் இன்றி, பொருளாதார ஏற்றத் தாழ்வு இன்றி, வயது பேதம் இன்றிப் பணியாற்ற வேண்டும்.
2. மக்கள் தரும் பொதுப்பண உதவியால் அதன் வரவு செலவு நிருவகிக்கப்பட வேண்டும்.
3. நூலகப் பணி இலவசமாக, படிப்போரிடமிருந்து கட்டணமோ பிறவோ வசூலிக்கப்படாமல், கட்டாயமாக நடத்த வேண்டும்.
4. நூலகம் வாசகர்களுக்கு வேண்டிய நூல்களும் பிறவும் கொடுத்துதவ வேண்டும்.

இலக்கியம்:

இந்த இலக்கணத்துக்கு ஓர் இலக்கியம் உண்டு. இது சென்னை மாநகரில் உள்ளது. நூலகம், பொது நூலகம் என்ற கருத்துச் சரியாக அரும்பு முன்னரேயே 1896 டிசம்பர் 5 - ஆம் நாள் அமைந்தது. அது எது?

அடிக்கல் நாட்டு விழா:

''சீமாட்டிகளே, சீமான்களே, இந்தியாவிலேயே பலர் படிக்க முன் வருகிறார்கள். ஆனால் தொடர்ந்து படித்து முதுகலைப் பட்டம் பெறமுடியவில்லை. காரணம் என்ன? படிப்புக்கு உதவும் வகையில் நூல்கள் கிடைக்கவில்லை. நூல்கள் கொடுத்து உதவ நூலகங்கள் இல்லை. இந்தக் குறையை நீக்க நினைத்தோம். விளைவு அடிக்கல் நாட்டுவிழா. உங்கள் முன் நிற்கிறேன். படிக்கும் ஆர்வமுள்ள அனைவருக்கும் நூலகம் பயன்பட வேண்டுமென ஆசைப்படுகிறேன். அந்த ஆசை நிறைவேறும் என நம்புகிறேன்'' என்று அடிக்கல் நாட்டிய ஆளுநர் பேசினார். 1890 மார்ச் 22-ஆம் நாள்.

திறப்பு விழா:

''அற்புதமான கட்டிடம் கட்டியாயிற்று. ஆனால் அதன் அழகான அலமாரிகளை அலங்கரிக்க அறிவு நூல்களைக் காணோம். இப்போதுதான் ஐந்து இலட்சம் செலவழித்த அரசாங்கத்திடம் மேலும் நூல்களுக்காகப் பணம் எதிர்ப்பார்க்கக் கூடாது. அதற்காக அரசாங்கம் வரிபோட முடியாது. எனவே, நன்கொடை மூலமே நூல்கள் வாங்க முயல வேண்டும். சென்னைவாசிகள் இதை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன்'' என்று வேண்டுகோள் விடுத்தார், நூலகத்தைத் திறந்து வைத்த அடுத்த ஆளுநர் ஸர் ஆர்வர் ஹாவல்க், 1896 டிசம்பர் 5-ஆம் நாள்.

சிக்கனமா?

''நூல்கள் வாங்கப் பணம் இல்லை. இதற்காக வரிபோட முடியாது. நன்கொடை மூலம் நூல்கள் பெற வேண்டும்' என்ற ஆளுநரின் சிக்கன முயற்சியை ஏற்பதற்கு இல்லை. ஐந்து இலட்சம் செலவழித்த அரசாங்கம் மேலும் ஓர் இலட்சம் செவழிக்கத் தயங்கக் கூடாது. இதற்காக வரிபோட்டால் மக்கள் கொடுக்க மறுக்க மாட்டார்கள். கல்விச் செலவும் நூலகச் செலவும் பயனுள்ள முதலீடாகும். எனவே அரசாங்க முயற்சியாலேயே நூல்கள் வாங்க வேண்டும். மக்களும் உதவுவர்'' என்ற முறையிலே 'ஹிந்து' தலையங்கம் தீட்டியது;

விமர்சனம்:

''பதினெட்டு ஆண்டுகள் பறந்தோடி விட்டன. கட்டணமில்லா நூலகம் கல்வி முயற்சியில் எப்படி உதவ இருக்கிறது என்ற கேள்வி எழுந்தது. நூலகத்தின் 1913-19-ஆம் ஆண்டு அறிக்கை அடிப்படையில் ஒரு விமரிசனமும் வந்தது, ஹிந்து (1914 டிசம்பர் 11) இதழிலே. இந்த விமரிசனப்படி 1910 குடிக்கணக்குப்படி சென்னை வாழ் மக்கள் 5,18,660 பேர். இவர்களில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் 49,950 பேர்களே. இவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழிலையும் பார்த்துக் கொண்டு நூலகத்



நூலகத்தில் மாண்புமிகு திரு நெடுஞ்செழியன்

னுக்கு வந்து இருந்து படிக்க முடியாது. நேரம் இல்லை. எனவே 19,474 பேர்களே நூலகத்துக்கு வர முடிந்தது. எனவே, படிக்க விரும்புபவர்கள் நூல்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வகையில் கடன் கொடுத்து வாங்கும் முறை தொடங்கப்பட வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே:

'ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே' என்ற தலைப்பில், நூலகத்துக்கு 1890-இல் அடிக்கல் நாட்டியது, 1914 நூல் பயனை விமர்சித்தது ஆகியவற்றை இந்து இதழ் (1964 டிசம்பர் 13) மீண்டும் நினைவு கூர்ந்துள்ளது.

இப்போது எப்படி?

இப்படி மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் இந்த நூலகம் இப்போது எப்படி இருக்கிறது? அலமாரிகளை அலங்கரிக்க நூல்கள் என்ற நிலைமை மாறியது. அலமாரிகள் நிறைந்து வழிந்தன. புதிய கட்டிடம் ரூ. 10 இலட்சம் செலவில் திறக்கப்பட்டது. அதுவும் நிறைந்து மீண்டும் ஒரு கட்டிடம் கட்டத் திட்டமிடப்பட்டு வருகிறது.

வாருங்கள் படிக்கலாம்:

இது எங்கே இருக்கிறது தெரியுமா? வாருங்கள், பார்க்கலாம்! இதோ பாந்தியன் சாலை வழியாக முன்னே வாருங்கள் அல்லது ஹால்ஸ் சாலை வழியாகப் பின்னால் நுழைந்து முன்னால் வாருங்கள். அருங்காட்சியகக் கட்டிடங்களைக் கடந்து உள்ளே வாருங்கள்.

அதோ கம்பீரமாக நிற்கிறதே, நான்கு மாடிக் கட்டிடம் கிழக்குப் பார்த்து, அடையா நெடுங்கதவு கொண்டு, ஆயிரமாயிரம் அறிஞர்களை அழகாக நிறுத்தி வைத்துக்கொண்டு; அதுதான் நீங்கள் தேடிய நூலகம்.

வளர்ச்சி:

இந்த நூலகம் 1896-இல் அருங்காட்சியகத்தை ஒட்டித் தொடங்கப்பட்டது. 1940-இல் தனி நிறுவனம் ஆகியது. 1950-இல் தமிழ்நாடு மாநில நூலகம் ஆகியது. 1954-இல் இந்திய நூல்களின் வைப்பிடம் (Depositary under the Delivery of Book.—Public Libraries Act of 1954) ஆகியது. 1955-இல் ஐக்கிய நாடுகள் அவையின் நூல்களுக்குரிய வைப்பிடம் ஆயிற்று. 1965-இல் யுனெஸ்கோ தகவல் நிறுவனம் (Unesco Information Centre) ஆயிற்று. 1966-இல் நூலக ஆணைக்குழு நூல்களுக்கான பயிற்சி நிலையமாயிற்று. 1983-இல் மேலும் ஒரு புதுக் கட்டிடம் தேவைப்படும்.

முன்னேற்றம்:

கடந்த தொண்ணூறு ஆண்டுகளில் தான் எத்தனை மாற்றம்! தொடங்கியவர் ஆசை நிறைவேறியது. திறந்தவரின் ஆசை, அலமாரி நிறைய இல்லையே என்ற குறை, நூல்கள் வைக்க இடமில்லையே என்ற குறையாக மாறிவிட்டது. இணைப்பாகத் தொடங்கியது தனிப்பெரும் நிறுவனமாகிவிட்டது; இன்னும் எத்தனையோ முன்னேற்றங்கள் காத்துக் கிடக்கின்றன.

லார்டு கன்னிமாரா

வேலை நேரமும் வேலை நாட்களும்

எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடமாக விளங்குகிறது; இந்த நூலகம் இன்று. இதை அனைவரும் வேண்டும்போது வேண்டிய முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதற்காக நூலகம் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி முடிய இடையீடின்றிப் பன்னிரண்டு மணி நேரம் திறந்திருக்கிறது; 1980 ஏப்ரல் முதல், காந்தியடிகள் பிறந்த நாள், சுதந்தரத் திருநாள், குடியரசு நாள் ஆகிய மூன்று நாட்கள் தவிரப் பிற எல்லா நாட்களிலும் நூலகம் திறந்திருக்கின்றது.

வாசகர்:

படிக்க விரும்பும் எவரும் இங்கு வரலாம், இலவசமாகப் படிக்கலாம். படிக்குநர் ஆகலாம், சமய வித்தியாசம் இல்லை. நிற பேதம் கிடையாது. இன வரம்பு இல்லை. கல்வித் தரக் கட்டுப்பாடு கிடையாது. கட்டணம் ஏதும் இல்லை. ஆனால் ஒரே கட்டுப்பாடு உண்டு, ஆம், அமைதியாகப் படிக்க வேண்டும். இந்த முறையிலே நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 640 பேர் படித்துப் பயன் பெறுகின்றனர். சில நாட்களில் இத்தொகை ஆயிரத்தை எட்டுகிறது. 1011ஐ எட்டியுள்ளது, 1980 ஜனவரி 27-ஆம் நாள். இவர்களில் தான் எத்தனை வகை! மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்குரைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று எத்தனையோ வகை!

உறுப்பினர்:

இலவசமாக நூலகத்தில் படித்தது போதாது, வீட்டிற்கு நூல்களை எடுத்துச் சென்று படிக்க விருப்பமா? இருபது ரூபாய் காப்புக் கட்டணம்; பிணையாளர் ஒப்பம் ஒன்று இருந்தால் உறுப்பினர் ஆகலாம். தடவைக்கு இரண்டு நூல்கள் பெறலாம்; தவணை பதினான்கு நாட்கள். இம்முறையிலே 1980 செப்டம்பர் 30-ஆம் நாள்முடியப் பலபேர் உறுப்பினராகி உள்ளனர். நூலகம் வந்து நூல் எடுத்துச் செல்ல முடியாதவர்களுக்கு வீடு தேடிச் சென்று நூல்கள் வழங்கப்படுகின்றன.

நூல் இருப்பு:

மூன்றே கால் இலட்சம் நூல்கள் உள்ளன இங்கே. இன்று 10,000 மீட்டர் நீளமுள்ள அடுக்குகளில் அலங்காரமாய் உள்ளன. அவற்றை வரிசையாக அடுக்கினால் 16 கிலோ மீட்டர்கள் தூரம் இருக்கும்!

பழைய அருகிய நூல்கள் பலவும் கிடைக்கும்.

தவிர, இந்தியாவில் வெளியாகும் ஏராளமான பருவ இதழ்களும் - ஏறத்தாழ ஐயாயிரம் பருவ இதழ்களும் - 250 நாள்தாள்களும் கிடைக்கும். வெளி நாட்டு இதழ்கள் சிலவும் கிடைக்கும்; அதாவது தினத்தந்தியிலிருந்து 'நேச்சர்' (Nature) வரை காணலாம்; கற்கலாம்.

குறிப்பு உதவி:

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றார் திருமூலர். இதனை மனத்தில் கொண்டு வாசகர்களுக்குக் குறிப்புதவி அளிக்கப்படுகிறது. காலம் கடந்த நூல்களிலிருந்து எதிர்கால எதிர்பார்ப்புகளிலிருந்தும் கருத்தைத் தேடிக் கொடுக்கும் கனிவான பணியும் நடக்கின்றது.

நுணுக்க உதவி:

பகுப்பதில், பட்டியலிடுவதில், மாநில நூலகங்களுக்கு உதவுவதற்காக முயற்சி நடக்கிறது. இம்முறையில் தமிழ்நாட்டு நூல் தொகை 1964 முதல் வெளியிடப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாட்டுப் பொது நூலகங்களில் பணியாற்றி வரும் பயிற்சி பெறு நூலகர்களுக்கு முதல்நிலை நூலக இயல் (Certificate in Library S_ience) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1966 முதல் இம்முறையில் பல நூலகர்கள் பயிற்சி பெற்றிருக்கின்றனர்.

வருவோர்:

வெளி மாநிலங்களிலிருந்து படிப்பவர்கள் பலர் வருகின்றனர் இங்கே. வெளி நாட்டிலிருந்தும் வருகின்றனர். படிப்பவர் குறிப்பு எடுத்துச் செல்கின்றனர். இருப்பிடம் திரும்பியதும் சிலர் மீண்டும் விவரம் வேண்டுகின்றனர். உதவி செய்யப்படுகிறது. இந்தப் பட்டியல் ஆஸ்திரேலியாவிலிருந்து அலாஸ்கா வரை அகன்றிருக்கிறது.

பணியாளர்:

நாளும் வளர்ந்து வரும் இந்த நல்ல பணியைச் செய்வதற்கு, கேட்ட நூல்களை, கருத்துக்களைச் சொல்வதற்கு, காட்டுவதற்கு, கொடுப்பதற்கு, 103 பணியாளர்கள் உள்ளனர். இது மேலும் வளரும்.

வரவு செலவு:

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து

வரு ம்இந்தப் பணிக்கு 1979-80-இல் மட்டும் எட்டு இலட்சத்து எண்பத்து ஏழாயிரம் ரூபாய் செலவாகியுள்ளது, அரசின் சார்பில். அதாவது வாசகர் ஒருவருக்கு ரூ. 4.63 செவழிக்கப் பட்டுள்ளது. பயன்பட்ட நூல் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1.25 செலவாகிறது.

காணிக்கை இல்லை:

வில்வித்தை கற்றுக்கொள்ள வந்தான் ஏகலைவன். மறுத்தார் துரோணாசாரியர்; ஆனால் அவன் விடவில்லை. மானசிகக் குருவாக்கிக் கொண்டான்; வில் வீரனானான்; அர்ச்சுனனையே வெல்லும் நிலைக்கு உயர்ந்தான்; கலையைச் கற்றுக் கொடுக்காமலே கட்டை விரலைக் காணிக்கை பெற்றார், துரோணாசாரியர். இது அன்று. ஆனால் காணிக்கை தராத கல்வி கற்கும் ஏகலைவர்கள் இன்று இங்கு ஏராளம், சென்ற ஆண்டு ஏறத்தாழ இலட்சத்துத் தொண்ணூற்று ஓராயிரம் பேர் படித்துப் பயன் பெற்றுள்ளனர்.

லாசரசு:

கையினாலே சுற்றிக் கொண்டு செல்லக் கூடிய மூன்று சக்கர வண்டியிலே அடிக்கடி கன்னிமாரா நூலகத்துக்கு வந்து போகிறார், திருவாளர் லாசரசு, ஆம், கால்கள் குறைப் பட்டும் கல்வியார்வம் குறையாத நில அளவையர் லாசரசு; இவர் சான்றுக்கு ஒருவர். பலரைக் காணலாம் நேரிலே!

புதுக் கட்டடம்

வளர்ந்துவரும் நூலகப் பணியின் பயனையும் பண்பையும் பார்த்த அரசாங்கம் புதுக் கட்டடம் ஒன்றைக் கட்டியது; ரூ. பத்து இலட்சம் மதிப்புள்ள கட்டடம் 1973 ஜூன் 4 ஆம் நாள் திறப்பு விழா நடந்தேறியது.

மேலும் வளர்ந்து வரும் பணிக்கு ஈடு கொடுக்க ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் குவியும் இந்திய நூல்களை வைக்க உறுப்பினர்களாகிவரும் படிக்குநர்களுக்கு உதவ, மேலும் ஒரு புதிய கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டு வருகிறது.

என்ன நடக்கிறது?

இங்கு என்ன நடக்கிறது என்று எளிதிலே கேட்பவர்கள் பலர்; எல்லாம் கிடைக்கின்றது என்று சொல்லும் நிலையிலே இருக்கிறது நூலகம். அவையாவன: நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தமக்குத் தாமே வாழ்நாள் முழுவதும் கல்வியறிவு பெறக் கருத்தாய் உதவி செய்கிறது; நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அண்மைக் காலம் வரை திருந்திய சரியான நடைமுறைகளையும் உண்மைகளையும் உணர உதவி செய்கிறது; நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தம் கடமைகள் செய்து உரிமைகள் பெற உதவும் கருத்துக்களைத் தருகிறது.

வளர்ந்து வரும் பொருளாதாரம் மக்களின் வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டும். இதற்கு உதவும் வகையில் ஆராய்ச்சியாளர்களுக்கும் தொழில் நுணுக்கர்களுக்கும், தொழிலாளர்-தொழிலதிபர்களுக்கும் உதவுகிறது. நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் வயது பேதம் இன்றி, பால் வித்தியாசம் இல்லாது, பொருளாதார ஏற்றத்தாழ்வு கருதாது, சமூக மாறுபாடுகளை மதித்துச் சமயப் பிரிவு காக்க நடந்து பழமையைக் காத்து, புதுமைக்கு வித்திட்டுக் கலாசாரக் காப்புக்கு உதவி செய்கிறது.

இத்தகு நல்ல பணிகளை நாளும் பயன்படுத்திக் கொள்ளலாம், படிக்கும் எண்ணமுள்ள ஒவ்வொருவரும். இதை நீங்களும் பயன்படுத்திக் கொள்ளலாம், வாருங்கள், வருகிறீர்களா?



நூலகத்தின் புதிய வாசகக் கூடத்தின் தோற்றம்

வண்ணத்துப் பூச்சி

1896லே பழைய புத்தகங்கள் சிலவற்றைக் கொண்டு ஏதோ சிலருக்காவது பயன்படட்டும் என்று தொடங்கப்பட்டது, நூலகம் அன்று. ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் படிக்குநர்களையும் ஏழு இலட்சம் பயன்படும் நூல்களையும் பயன்படுத்தும் வேகம் கொண்டு அறிவுக் களஞ்சியமாய், ஆராய்ச்சி மையமாய், நடை போடுகிறது நூலகம் இன்று.

சுவையாகச் சொன்னால், கூட்டுக்குள் தூங்கிக் கிடந்த புழு பெரிதாகி, கூட்டை உடைத்துக் கொண்டு, வண்ணச் சிறகடித்து வானத்தில் மிதந்து வரும் வண்ணத்துப் பூச்சியாகத் திகழ்கிறது நூலகம்.

தொடங்கினவர் யார்? யாரால் முடியும்?

இத்தகு முன்னோடி முயற்சியைத் தொடங்கியவராக இருந்தவர் யார் தெரியுமா? இவருக்கு முன்னால் இருந்த ஆளுநர்கள் செய்யாததை இவரால் செய்ய முடிந்தது எப்படி?

இதற்கு நல்ல நோக்கம், உயரிய சிந்தனை, செயல் வேகம், நிர்வாக அநுபவம், கருவிலே திருவென்னும் நல்தொடர்பு வேண்டும். இம்முறையிலே தொடர்புகள் என்ன?

1827-இல் அயர்லாந்துக் கிராமம் ஒன்றில் பிறந்தார். 1852-இல் சட்டத் துறையில் பட்டம் பெற்றார், 1863-இல் திருமணத்தால் இந்திய கவர்னர்ஜெனரல் டல்ஹௌஸி பிரபுவின் (1848-1856) மருகர் ஆனார்; 1868-இல் பாராளுமன்ற உறுப்பினரானார்; பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்தார்; 1869-இல் இந்திய கவர்னர் ஜெனரல் மேயோ பிரபு (1869 - 1872) தம்பியானார். 1874-இல் வெளிநாட்டு விவகார அமைச்சக உதவிச் செயலரானார். 1875-இல்பதிப்புரிமைச் சட்டக் குழுவின் உறுப்பினரானார், 1880-இல் பிரிட்டன் அரசப் பேரவை (Privy Council) உறுப்பினரானார்; 1886-இல் ஆளுநராக நியமனம் பெற்றார்.

அவர் சென்னை ஆளுநர் ஆனதும் அலங்கோல நிலையில் இருந்த சென்னை மாகாண ஆட்சியைத் திருத்தி அமைத்தார். சென்னை மாகாணச் சுகாதாரத் துறையைச் சீரமைத்தார். அப்போதைய சென்னை மாகாணத்தில் இருந்த கஞ்சம் ஜில்லாவின் பஞ்ச நிலையைச் சரிப்படுத்தினார். சென்னை, கல்கத்தா இருப்புப்பாதை அமைக்க வழி செய்தார். 1890-இல் மக்களுக்காக மக்களே நடத்தும் வகையில் பொது நூலகம் கட்ட அடிக்கல் நாட்டினார்.

அவர் யார் தெரியுமா? அவர் தாம் போபி இராபர்ட் போர்க் கன்னிமாராப் பிரபு. (Boby Robert Bourke, Baron Connemara) (1827-1902) அவர் பெயராலே இந்த நூலகம் ஒளிர்ந்து வளர்ந்து வருகிறது.

*

இருள் என்னும் நரகனை மாய்த்த வெற்றி
இன்றொரு நாள் நிகழ்ச்சியாய் இருக்க வேண்டாம்.
அருள் கங்கை நீர்முழுக்கும், திருமகள் வரவும்
ஆண்டுக்கொரு நாளல்ல! ஒளியே வாழி!
வந்தகலும் வைபவங்கள் அறிகுறிதானே
சிந்தையின் உணர்வுகளே நிரந்தரம் ஆகும்.
எளியோர் மனைகளிலே, இதயங்களிலே
இன்ப விளக்கேற்றுகிறோம்—நலமே வாழ!
எக்காலும் வளம் நிலைக்க எங்கள் பணியே
முக்கால் நூறாண்டு கண்ட பாங்க் ஆஃப் இந்தியா.

பிளாட்டினம் விழா ஆண்டு
1906 1981
ஆண்டுகள் சேவை

பாங்க் ஆஃப் இந்தியா
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)

daCunha/BOI/129 TM

''அப்பால தோப்புக்கும் கண்டிப்பாப் போயாகணும்'' என்றார் கவிஞர். ''அந்தத் தோப்பு என்னோட பாலிய சிநேகிதன்'' என்று தொடர்ந்தவர் அநாவசியமாகத் தம் அந்தரங்கத்தை வெளிப்படுத்தி விட்டதற்காகக் கூச்சம் அடைந்தவர்போல் தலையைக் குனிந்து சிரித்துக்கொண்டார்.

கவிஞரின் அந்தரங்க வெளிப்பாடு வந்தவர்களில் யாருக்கும் புலப்பட்டதாய்த் தெரியவில்லை; தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மௌனம் சாதித்தார்கள். அவர்களில் கொஞ்சம் மூத்தவர் லேசாய்த் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''எதைச் சொல்றீங்க?'' என்று கேட்டார்.

கவிஞர் வியப்புடன் அவர்களைப் பார்த்தார். ஒவ்வொருவர் முகத்தையும் தனித்தனியாகப் பார்த்தார். எல்லா முகங்களும் மெழுகு உருண்டைகள் மாதிரி, பாவமற்றுத் தோன்றின. ''நீங்க எல்லாரும் இதே ஊர் தானே?'' கவிஞர் சந்தேகத்துடன் கேட்டார். ''ஆமா, ஆமா'' என்று எல்லாரும் அவசர அவசரமாகச் சொன்னார்கள் கவிஞர் அதை நம்ப முடியாதவர்போல் அவர்களை மறுபடியும் வெறித்துப் பார்த்தார்.

'என்ன ஆச்சரியம்! இதே ஊர்க்காரர்கள் என்கிறார்கள். ஆனால் தோப்பு என்றால் மலங்க மலங்க விழிக்கிறார்கள். தோப்பைத் தெரியாமல் எப்படி இந்த ஊர்க்காரர்களாய் இருக்க முடியும்? கருவை, வேம்பு, கள்ளி, கற்றாழை என்று அடர்ந்த பச்சை இருட்டைத் தெரிந்து கொள்ளாமல் இந்த ஊரில் இருப்பது எப்படிச் சாத்தியப்படும்?'

''நீங்க பொறந்த ஊர்ல பொறந்தவங்கங்கிற பெருமை உள்ளவங்கதான் நாங்க எல்லாரும்'' என்று அலங்காரமாகச் சொன்னான், அவர்களில் ஒருவன். எல்லாரையும் விட அவன்தான் இளமையாகத் தோற்றமளித்தான். உஷ்ண தேசத்துக்குக் கொஞ்சமும் பொருந்தாத செயற்கை இழை ஆடைகளுக்குள் முழு உடம்பையும் சிறைப்படுத்தி வைத்திருந்தான். அவனைப் பார்க்கப் பார்க்கத் தமக்கே உடம்பெல்லாம் புழுங்கித் தள்ளுகிற மாதிரியிருந்தது, கவிஞருக்கு. சிலிர்த்துக்கொண்டார்.

''ஆனா, தோப்பு எதுன்னு உங்களுக்குத் தெரியலே'' என்றார் கவிஞர் சட்டென்று.

''தோப்புன்னு சொல்லும்படியா இங்க எதுவும் இருக்கிறதாத் தெரியலீங்களே!'' என்று முனகினார் இன்னொருவர்.

''ஊருக்கு மேக்கால ஏரிக்கரை மோட்டைத் தாண்டினதும் இருக்குமே, அதைச் சொல்றேன்'' என்றார் கவிஞர், பொறுமை இழந்து.

''அட, அந்தக் கள்ளிக் காட்டைச் சொல்றீங்களா?'' மூத்தவர் சிரித்தார்.

கவிஞர் முகம் பிரகாசமடைந்தது. ''ஆமா! அதேதான் கள்ளிக்காடு. அப்படித்தான் சொல்ற வழக்கம் இல்லே? ஆனா, தோப்புன்னுதான் நான் அதைப் பத்தி நெனைக்கிறது, சொல்றது எல்லாம். 'குத்தகை பாழ்போற தோப்புத் தான் போ, போயி கார்வார் பண்ணுன்'னு எங்கம்மா கூடச் சிரிப்பாங்க. நீங்க சொல்றது சரிதான். முறையாப் பயிரிட்டு வளத்து வேலி கட்டிக் காப்பாத்திப் பலனை அடையறதைத்தான் தோப்பும்பாங்க; ஆனா எனக்கு அது தோப்புத்தான். கள்ளிக்காடு இல்லே.''

''அதுபோயி ஆச்சே அஞ்சு வருஷம்'' என்று சாதாரணமாகச் சொன்னார் மூத்தவர்.

''என்னது, போயிடிச்சா? என்ன ஆச்சு?'' சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்த கவிஞர் முதுகை நிமிர்ந்து கொண்டு பரபரப்படைந்தார்.

''அந்த எடம் இப்ப ரொம்ப அழகான 'டவுன்ஷிப்'பா மாறிப் போயிடுச்சுங்க. 'ஜோதி நகர்'னு சொன்னாத்தான் இப்பப் புரியும். பெயருக்கேத்தாப்பல ஜகஜ்ஜோதியா இருக்கு; பக்கத்தில் காயித ஆலை வந்ததுமே ஊர்லே ஜனம் கூடிப் போச்சு; கள்ளிக்காட்டை யெல்லாம் வெட்டியெறிஞ்சு, ரோடு போட்டு, நல்ல குடியிருப்புக் கட்டிடங்கள் இருபது முப்பது கட்டிட்டாங்க; எல்லாம் நாலு மெத்தைக் கட்டிடம். ஒவ்வொண்ணுலேயும் எட்டு ஃப்ளாட்டுங்க. சாயங்காலம் கூட்டத்துக்குப் போறப்ப அந்த வழியாப் போயிட்டு வரலாம். பிரமிச்சுப் போயிடுவீங்க, பாத்தா!''

''உம்!'' என்றார் கவிஞர், அசுவாரஸ்யமாக.

''அப்ப, நாங்க மத்தியானம் மூணு மணிக்கு மேலே வர்றோம். நீங்க பார்க்கணுங்கற எல்லா எடங்களையும் பார்த்துட்டுக் கூட்டத்துக்குப் போகச் சரியா இருக்கும். வரட்டுங்களா?'' என்று எழுந்து கொண்டார் மூத்தவர். மற்றவர்களும் அவர் கூடவே எழுந்தார்கள்.

கவிஞர் ஒரு தடவை அவர்களை அண்ணாந்து பார்த்துவிட்டுத் தலையசைத்தார். அவர்கள் கைகூப்பிவிட்டுக் கதவைச் சத்தமில்லாமல் சார்த்திக் கொண்டு போனார்கள்.

கவிஞருக்கு இருப்புக் கொள்ளவில்லை. சோபாவிலிருந்து எழுந்து ஜன்னலருகே போய் நின்றுகொண்டார். ஊருக்குச் சிறிது ஒதுக்கமாகச் சந்தடி இல்லாத இடத்தில் இருக்கிற விடுதி போலும்! அங்கிருந்து பார்த்த போது ஊர்சற்றுத் தொலைவில் தென்பட்டது. சத்தம் விலக்கப்பட்டு ஓடுகிற மௌனப் படத்தைப் பார்க்கிற மாதிரி இருந்தது.

அவருக்குச் சம்பந்தப் படாதது போல் தூர விலகியிருந்து சலனப்படும் அந்த ஊர் அவருடையதுதான். இருபது வருஷப் பிரிவுக்குப் பிறகு அதைச் சந்திக்க வாய்த்திருக்கிறது.

இருபது வருஷங்கள் என்பது நிறைய மாறுதல்களை உண்டு பண்ணுவதற்கு வேண்டிய அவகாசமுள்ளதுதான். இருந்தாலும் இப்படி அடையாளமே தெரியாதவாறு ஊர் ஒரேயடியாய் வேஷங் கட்டிக் கொள்ளும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

ரெயிலடியில் இறங்கியதுமே ஊரின் மாறுதல் முகத்தில் அடித்தது. அதைப்பற்றி அவர் யோசிப்பதற்குள் ஒரு சிறு கூட்டம் அவரைச் சூழ்ந்து மாலை போட்டுக் கையில் பூச்செண்டைத் திணித்து வெளியே தள்ளிக்கொண்டு வந்துவிட்டது. இந்த வரவேற்பெல்லாம் மிகவும் செயற்கையாய் உடம்பையே கூச வைத்தது. எல்லாரும் சுதந்தரமாய் வெறுமனே இருக்க, இவர் மட்டும் கையில் ஒரு பூச்செண்டும்

முழங்கை மடக்கலில் ஒரு மாலையுமாக நிற்பது அபத்தமாகப் பட்டது; திமிறிக்கொண்டு ஓடத் தோன்றியது. சங்கடத்தைச் சிரமப்பட்டுச் சகித்துக்கொண்டார்.

வெளியில் வந்ததுமே ஒரு காரில் அவர் திணிக்கப்பட்டார். அவருக்கு இடமும் வலமும் முன்புறத்திலுமாக நாலைந்து பேர் நெருக்கியடித்து உட்கார்ந்தார்கள். கார் முழுவதும் வியர்வை நாற்றம் குப்பெனச் சூழ்ந்து மூச்சைத் திணற அடித்தது; பொடி போடுகிறவன், புகையிலை குதப்புகிறவன், சிகரெட் பிடிக்கிறவன், குளிக்காமல் முகத்துக்கு மட்டும் வாசனை மாவு பூசிக்கொண்டு வந்தவன் என்று ரகத்துக்கு ஒருவனாக அத்தனை நாற்றம் பிடித்தவர்களும் தம்மை முற்றுகையிட்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது.

சுத்தமான காற்றுக்காகத் தலையை முடிந்தமட்டும் உயர்த்திப் பார்த்தார். பிரயோசனம் இல்லை. எல்லாத் திசைகளிலும் உடம்புகள் சுவர் எழுப்பியிருந்தன. நல்ல வேளை! கார் சவாரி ஐந்து நிமிஷங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. வெறுப்பூட்டுகிற அழுத்தமான வர்ணங்கள் அடித்த மூன்றடுக்குக் கட்டிடம் ஒன்றின் வாசலில் அவரை இறக்கினார்கள்.

''இங்கயும் இப்ப இந்த மாதிரி ஓட்டலுங்க வந்தாச்சா?'' என்றார், கவிஞர்.

''வரவேண்டியதுதானே? ஸ்டார் ஓட்டல், ஏர்கண்டிஷன் சினிமா, டிப்பார்ட்மெண்டல் ஸ்டோர்னு ஒண்ணொண்ணு எல்லாம் வந்து சேர வேண்டியதுதானே?'' என்று பெருமையாகப் பதிலளித்தார், கூட வந்தவர்களில் ஒருவர்.

''இங்கே இருக்கறதைவிடப் பத்து மடங்கு அதிகமான வசதிகள் உள்ள எடங்கள்ள இருந்திருந்து அலுத்துப் போய்த்தான் வந்திருக்கேன். என்னோட தேவைகள் ரொம்பக் குறைச்சல். உங்கள்ள யாராவது ஒருத்தர் விட்டிலயே தங்கிக்கறதுனாலும் எனக்குச் சந்தோஷந்தான்; இருக்கப் போறது ஒரே ஒருநாள். இந்த ஒரு நாளுக்காக எதுக்கு இதெல்லாம்?''

''அய்யய்ய! இருபது வருஷமா அமெரிக்கால இருக்கீங்க. எங்க வீடுங்கள்ளாம் சரிப்பட்டு வருமா? நீங்க அடக்கத்துனால சொல்றீங்க. எங்க வீடுங்கள்ள போயி உங்களைத் தங்க வைக்கிறதுக்கு எங்களுக்கே கூச்சமாயிருக்காதா?''

கவிஞர் பதில் சொல்லத் தெரியாமல் அவர்களைப் பரிதாபமாகப் பார்த்தார்.

''வாங்க'' என்று அவர்கள் அவரை ஹோட்டலுக்குள் அழைத்துக் கொண்டு போனார்கள். அவருக்காக அங்கு ஏற்பாடு செய்திருந்த அறையில் அவரைக் கொண்டுவிட்ட பிறகு உபசாரத்துக்காகச் சிறிது நேரம் தங்கினார்கள்.

''சாயங்காலம் 'டவுன் ஹால்'ல மீட்டிங் ஏற்பாடு பண்ணியிருக்கு. அதைத் தவிர வேற நிகழ்ச்சி ஒண்ணும் இல்லே. உங்கள அலைக்கழிச்சிட்டிருக்கக் கூடாது, பாருங்க. ரொம்ப நாள் கழிச்சு வந்திருக்கீங்க; உங்களுக்கா எங்கணாச்சும் போகணுன்னு தோணிச்சுன்னா போயிட்டு வரலாம். தொணைக்கிக் கூட நாங்க வரணும்னாலும் வரோம். எதுக்கும் உங்களுக்கு ஒத்தாசையா இருக்க

எங்கள்ள ஒருத்தர் 'லாபி'யில இருந்துக்கிட்டிருப்பாரு; சரிதானுங்களே?''

அப்போதுதான் அவர் அனுமார் கோயில், ராமானுஜர் வாசகசாலை என்று சில இடங்களைச் சொல்லிவிட்டுக் கடைசியில் அந்தத் தோப்பையும் குறிப்பிட்டார்.

தோப்பு அல்லவாம். வெறும் கள்ளிக்காடாம். இருக்கட்டுமே! அவர் மனசில் பதிந்தது தோப்பு என்றுதான். பத்து வயசிலிருந்தே அப்படித்தான் பதிந்துபோயிருக்கிறது. இப்போது இவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அவரால் அதை மாற்றிக்கொள்ள முடியாது. சரி, கள்ளிக்காடு என்றே வைத்துக்கொண்டாலும் இப்போது அது இல்லை. கள்ளிக்காடாக அல்லாமல் தோப்பாக இருந்திருந்தாலும் அது இல்லாமல்தான் ஆகியிருக்கும். கிளிகள் கொஞ்சுகிற மாந்தோப்பு, அணில்கள் கொட்டமடிக்கிற தென்னந்தோப்புகளையெல்லாங்கூடக் கூசாமல் வெட்டித் தள்ளி மனைகளாய்க் கூறுபோட்டுப் புகுந்துகொண்டு இன்னும் இன்னும் புழுத்துக்கொண்டே போயாகவேண்டும் மனுஷனுக்கு. இதைச் செய்வதற்காகவே ஒளிந்துகொள்ள மறைவான தடுப்பு வேண்டும், அவனுக்கு.

அந்தத் தோப்பிலேதான் அவருடைய ஆரம்ப காலக் கவிதைகள் பலவும் பிறந்தன. அங்கிருந்து அவர் தமிழில் எழுதிய கவிதைகளை அமெரிக்கப் பல்கலைக் கழகமொன்றில் வேலைக்கு அமர்ந்த பிறகு அவரே ஆங்கிலப் படுத்தியதும் கவிஞர் என்கிற அங்கீகாரம் வெகுசீக்கிரம் அவருக்குக் கிடைத்துவிட்டது. முதல் முதலில் அவர் தமிழில் எழுதிய கவிதைகள் சில சிறு இலக்கியப் பத்திரிகைகளில் தவிர வேறு எதிலும் பிரசுரமாகவில்லை. இன்றுங்கூடக் கவிதையை முதலில் தமிழில் எழுதிவிட்டு அதற்கப்புறம் ஆங்கிலப் படுத்துவதுதான் அவருக்கு வழக்கமாயிருக்கிறது.

அந்த ஆங்கில வடிவங்களைப் பத்திரிகைகளில் பார்த்துவிட்டு அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட இங்குள்ள பலர் அனுமதி கேட்கிறார்கள். இவர், 'வேண்டாம் வேண்டாம்' என்று தடுத்துத் தமது தமிழ்ப் பிரதிகளையே அனுப்பிக் கொடுக்கிறார். 'ஆங்கிலத்தில் கவிதை எழுதும் தமிழ்நாட்டுக் கவிஞர் தாமே தமிழில் எழுதியவை' என்று குஞ்சங் கட்டி அவற்றை இங்கே வெளியிடுகிறார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளில் வரும் அவரது பேட்டிகளைக் கரிசனத்தோடு தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கிறார்கள். அவர் கவிதைகளை வெளியிடாத பத்திரிகைகளும் அவர் படத்தைப் போட்டுத் தகவல் குறிப்பு வெளியிடத் தவறுவதில்லை. ஏதோ ஒரு பேட்டியில், தாம் பிறந்து வளர்ந்த ஊரை அவர் குறிப்பிடப்

போய், அது நாலு வரித் தகவலாய் நான்கு லட்சம் பிரதிகளில் வெளியாகி, அந்த ஊர் இலக்கிய அபிமானிகளுக்கு உடம்பெல்லாம் புல்லரித்துப் போய்விட்டது. தாய் நாட்டிற்கு அவர் எப்போது வருகிறார் என்று பார்த்திருந்து அவர் வந்த சமயம் சட்டென்று அவரைத் தங்கள் ஊருக்கு அழைத்து வரவேற்புக் கொடுக்க ஏற்பாடு செய்து விட்டார்கள்.

கவிஞர் ஒரு பலவீனமான தருணத்தில் மிகவும் கிளர்ச்சியுற்று அந்த அழைப்புக்கு ஒப்புக் கொண்டு விட்டார். பிறந்து வளர்ந்த ஊரே தவிர, இப்போது அவருக்கு அதனுடன் பிணைப்பேதும் இல்லாமல் போய்விட்டது. அதுவே அவரை இந்த அழைப்புக்கு உடன்படச் செய்தது.

சரியாக மூன்று மணிக்கு அவர்கள் வந்து விட்டார்கள். கவிஞரும் புறப்படத் தயாராக இருந்தார்.

விசாரிப்புகள் முடிந்து எல்லாருமாக ஒரு முறை காபி வரவழைத்துச் சாப்பிட்டார்கள்.

''புறப்படலாங்களா? நீங்க சொன்ன எடங்களை யெல்லாம் பார்த்துட்டு அப்பிடியே ஜோதி நகரையும் ஒரு ரவுண்டு அடிச்சுட்டுப் போனச் சரியா இருக்கும்.''

''ஜோதிநகர்?'' கவிஞர் ஒரு கணம் தடுமாறினர்.

''அதாங்க, நீங்க சொன்னீங்களே, அந்தக் கள்ளிக்காடு,''

''ஓ! தோப்பு. தோப்புன்னு சொல்லுங்க.''

பதிலுக்கு எல்லாரும் சிரித்தார்கள். கவிஞரும் சிரித்துக்கொண்டார்.

''சரி, கௌம்பலாம்'' என்று கவிஞர் எழுந்தார். கூடவே எல்லாரும் எழுந்துகொண்டார்கள்.

முதலில் அனுமார் கோவிலுக்குப் போனர்கள். அந்த ஊர் அனுமாரின் சக்தி இந்த இருபது வருஷங்களில் நாடு முழுவதும் பரவிவிட்டிருக்கிறதென்பது கோவிலைப் பார்த்தபோதே தெரிந்தது. அலுமினிய வர்ணம் அடித்தகம்பிகளை நட்டுக் கோவில் பிராகாரங்களையெல்லாம் சிறைக்கொட்டடிகளாக மாற்றியிருந்தார்கள். கவிஞருக்கு மிகவும் பிரியமான பிராகாரங்கள் அவை. பகல்நேரங்களில் கூடக் குளிர்ச்சியான இருள் கவிந்த பிராகாரங்கள். இருட்டென்றல் பார்வையை மறைத்து மருட்டுகிற இருட்டல்ல. கண்களுக்கு இதமான சொப்பன இருள். இந்த இருளுக்குள் மூழ்கித் திளைப்பதற்காகவே பிராகாரங்களில் வளையவரத் தோன்றும். அந்தப் பிராகாரங்கள் இப்போது கண்களைப் பிடுங்கியெடுக்கிற மின்சார வெளிச்சத்தில் கூட்டம் நிரம்பிய ரெயில்வே பிளாட்பாரங்களைப் போலிருந்தன. கவிஞர் அவசர அவசரமாகக் கோவிலைச் சுற்றி விட்டு வெளியே வந்தார்.

அடுத்தது வாசகசாலை.

விசாலமான திண்ணைகளுடன் கிராமாந்தரத்துச் சத்திரம்போல் இருந்த ராமானுஜர் வாசகசாலை, இப்போது கானகிரீட் கட்டிடமாக உருமாறி இருந்தது. கவிஞர் வண்டியை விட்டு இறங்காமலே 'போகலாம்' என்று சைகை செய்துவிட்டார். வண்டி ஜோதி நகருக்கு விரைந்தது.

''ஏங்க, ஏரி இன்னும் வரலே? அதைத் தாண்டித்தானே போகணும் தோப்புக்கு?'' என்று சந்தேகத்துடன் கேட்டார் கவிஞர்.

''இப்ப நாம போயிக்கிட்டிருக்கறது ஏரிமேலேதான். ஏரியெக்கூடத் தூர்த்துட்டு வீடுங்க கட்டியாச்சு. இதோ ஜோதி நகரும் வந்தாச்சு.''

மண்ணிலிருந்து நேர்கோடாய் வானை நோக்கி விறைத்து நிற்கிற கட்டிடங்கள் நிரம்பிய அந்த இடந்தான் 'தோப்பு, தோப்பு' என்று தம் மனத்தில் பதிந்து போயிருக்கிற இடமென்று கவிஞரால் நம்ப முடியவில்லை. ''இதுவா? இதுவா?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டார்.

திட்டமிட்டுக் கட்டிய ஒரு பெரிய குடியிருப்பு வழியாகத் தாம் போய்க் கொண்டிருப்பதையே கவிஞரால் உணர முடிந்தது. வரிசை வரிசையாகக் கட்டிடங்கள். அவற்றையொட்டிக் குறுக்கும் நெடுக்குமாக விசாலமான தெருக்கள். தெருக்களையெல்லாம் இணைத்துக் குடியிருப்பு முழுவதையும் வளைத்துக் கொள்ளும் பெரிய சாலை. ஓரங்களில் இடைவெளி விட்டு இரும்பு வேலிகளுக்குள் நட்டு வைத்த பதியன்கள். பல வருஷங்களுக்குப் பிறகு வேலியைத் தகர்த்துக்கொண்டு அவை பெரிய மரங்களாய் எழும்பியாக வேண்டும். அங்குள்ள மனிதர்களுக்குக் கட்டுப்பட்ட மரங்களாய் அவை இருக்கும். அப்படிப்பட்ட மரங்கள்தாம் மனிதர்களுக்கு வேண்டும். வீட்டு மிருகங்களை வளர்க்கிற மாதிரி மரங்களையும் அவர்கள் வளர்ப்பார்கள். தங்களுக்காகத் தங்களுடைய சௌகரியங்களுக்காகத் தங்களுடைய சந்தோஷத்துக்காக, தாமாக மண்டிய மரங்களை வெட்டியெறிந்து விட்டுத் தாங்களாக வேலி கட்டி மரங்களை நட்டு வைத்திருக்கிறர்கள். எல்லாவற்றையுமே தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும், மனிதர்களுக்கு.

''தப்புப் பண்ணிட்டோம், இங்க வந்திருக்கப்படாது. வராம இருந்திருந்தா நம்ம ஊரு நம் ஊராவே மனசுக்குள்ளே பத்திரமா இருந்திருக்கும்'' என்று தமக்குள் முனகிக் கொண்டார் கவிஞர்.

கார் ஒரு வளைவில் திரும்பியதும் திடீரென்று எதிர்ப்பட்ட காட்சி கவிஞரை ஈர்த்தது.

வெயிலில் பளபளத்த அகன்ற தார்ச் சாலையின் நடுவே இரண்டு மரங்கள் கொஞ்சங்கூட அலட்டிக் கொள்ளாமல் நின்றிருந்தன. நட்ட நடுச்சாலையில் அந்த இடத்துக்கே ஒவ்வாதவாறு வளர்ந்த இரண்டு பெரிய மரங்களைச் சுற்றிச் சிமெண்டால் மேடை கட்டி வைத்திருந்தார்கள்.

''உங்க தோப்புன்னு சொல்றதுக்கு இந்த ரெண்டு மரங்களைத்தான் இப்ப அடையாளம் காட்ட முடியும்; இல்லையா?'' என்று சிரித்தார் ஒருவர்.

''எப்படி இதுங்களை மட்டும் விட்டு வெச்சாங்க? அதுவும், போக்குவரத்துக்கு இடைஞ்சலா நட்ட நடு ரோட்டிலே இதுங்க இருக்கும்போது?''

''என்ன, இப்படிக் கேக்கறீங்க? நல்லாப்பாருங்க.டிரைவர், வண்டியெ நிப்பாட்டிக்க.''

நின்ற வண்டியிலிருந்து கவிஞர் அந்த மரங்களைக் கூர்ந்து கவனித்தார்.

தனித்தனியே வளர்ந்து கொஞ்ச உயரத்துக்குப் பிறகு ஒன்றையொன்று கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிற மரங்கள் அரசும். வேம்பும். அடி மரங்களில் மஞ்சளும் குங்குமமும் அப்பிக் கிடந்தன. சிமெண்ட் மேடையில் கர்ப்பூரம் ஏற்றி ஏற்றிக் கறுத்துப் போன தடங்கள், எண்ணெய்க் கறைகள், காய்ந்த பூச்சரங்கள்.

கவிஞர் சிரித்தார். மனசுக்குள் சந்தோஷம் மெதுவாக ஊறத் தொடங்குவது போல் உணர்ந்தார். வெகுசீக்கிரமே இதைப்பற்றித் தாம் ஒரு கவிதை எழுத வேண்டுமென்று தோன்றியது. முதலில் தமிழிலும் பிறகு ஆங்கிலத்திலுமாக அந்தக் கவிதையை எழுதுவார். ஆனல் அது முதலில் ஆங்கிலத்திலும் அதற்கப்புறம் தமிழிலும் பிரசுரமாகும். ❋

Imageads-AL-1240 R-Tam.

அரசன் ஆண்டி கிளி

எல் ரகே

மணிபுரம் ராஜா தலைமாட்டில் ஒரு நரி வந்து சிரிப்பது போலக் கனவு கண்டான். திடுக்கிட்டுக் கண் விழித்தான். பள்ளியறையை விட்டுப் பரபரவென்று வெளியே வந்தான். நாட்டிலுள்ள அறிவாளிகளை யெல்லாம் தன் சபைக்கு வரவழைத்தான். அவர்களிடம், கனவில் நரி வந்து சிரித்ததை எடுத்துச் சொன்னான். அதற்கான பலனைத் தெரிவிக்கும்படி கேட்டான்.

ஆனால் அவர்கள் யாராலும் ராஜா கண்ட கனவுக்குச் சரியாகப் பலன் சொல்ல முடியவில்லை.

அப்போது ஓர் ஆண்டி ஆற்றங் கரையோரமாக வந்துகொண் டிருந்தான். திடீரென்று ஆலமரப் பொந்தி லிருந்து ஒரு கிளி அவனிடம் பறந்து வந்தது.

''சற்று நில், ஆண்டி! ராஜா கண்ட கனவுக்கு உண்டான பலனை நான் உனக்குச் சொல்கிறேன். நீ அப்படியே அதை ராஜாவிடம் போய்த் தெரிவி. அவர் கொடுக்கிற சம்மானத்தை நமக்குள்ளே பங்கிட்டுக் கொள்வோம்'' என்றது கிளி.

''அதற்கென்ன?'' என்றான் ஆண்டி. அப்புறம் சொன்னான்:

''ராஜா கண்ட கனவுக்கான பலனை நீ என்னிடம் சொல்லு. நான் ராஜாவிடம் போய்த் தெரிவிக்கிறேன். அவர் கொடுத்ததை நாம் இருவருமாக எடுத்துக்கொள்வோம்.''

கிளி ஆண்டியிடம் சொல்லிற்று:

''நீ நேரே ராஜாவிடம் போய்த் தெரிவி. 'அரசே, இந்த ஒரு வருஷத்துக்கு நாட்டு நிலவரம் மிக மோசமாக இருக்கும். எங்கும் பொய்யும் வஞ்சனையும் தலை விரித்தாடும். நீர் சட்டென்று யாரையும் நம்பிவிட வேண்டாம். உறவினரையும் ஊழியரையுங்கூடக் கண்காணித்து வாரும்!' இவ்வளவுதான், போய்விட்டு வா!''

கிளி சொன்னதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டான் ஆண்டி. நேரே ராஜ சபைக்குப் போனான். ராஜாவின் கனவில் நரி வந்து சிரித்ததற்கான பலனைத் தெரிவித்தான். ராஜா தாராளமாகக் கொடுத்த பொன்னையும் மணியையும் அள்ளிக் கொண்டான். ஆனால் அதைக் கிளியின் கண்ணிலே காட்ட விரும்பாமல் சுற்று வழியாகத் தன் குடிலுக்குத் திரும்பினான்.

ஒரு வருஷம் ஓடிற்று. மணிபுரம் ராஜா வேறொரு கனவு கண்டான். அவன் தலைக்குமேல் ஒரு வாளும் பூமாலையும் தொங்குவது போன்ற காட்சி. திடுக்கிட்டுக் கண் விழித்தான் ராஜா. பரபரவென்று பள்ளியறையை விட்டு வெளியே வந்தான்

''உடனே போய் அந்த ஆண்டியை இங்கே அழைத்து வாருங்கள். அவன் வந்து இந்தக் கனவுக்கான பலனையும் தெரிவிக்கட்டும்!'' என்று உத்தரவிட்டான்.

சேவகர்கள் ஓடிப் போய் அந்த ஆண்டியை அழைத்தார்கள். அவர்களிடம் ராஜா கண்ட கனவின் விவரத்தைக் கேட்டுக் கொண்டான் ஆண்டி. சற்று நேரத்திலே தான் அரண்மனைக்கு வருவதாகச் சொல்லிச் சேவகர்களை அனுப்பினான். ஏதேதோ யோசித்தபடி ஆற்றங்கரை ஓரமாக நடந்து வந்தான்.

ஆலமரப் பொந்திலிருந்து அந்தக் கிளி அவனிடம் பறந்து வந்தது.

''சற்று நில், ஆண்டி!'' என்றது கிளி, பழையபடியே. ''நான் சொல்கிற பலனைக் கேட்டுக் கொண்டு போய் ராஜாவிடம் தெரிவி!''

ஆண்டி திடுக்கிட்டு நின்றான். போன தடவை அந்தக் கிளியைத் தான் வஞ்சித்தது குறித்து அவன் மனம் குறுகுறுத்தது. கிளியை நாணத்தோடு ஏறிட்டுப் பார்த்தான்.

''ராஜாவிடம் போய்த் தெரிவி. 'அரசே, இந்த வருஷம் நாட்டில் ரத்த ஆறு ஓடும். பெரிய போர் நடக்கும். ஆனால் முடிவில் நீர்தாம் வெற்றி பெறுவீர்!' இவ்வளவுதான். போய் வா!'' என்றது கிளி.

''நல்லது'' என்றான் ஆண்டி. ''நீ சொன்னபடியே ராஜாவிடம் போய்த் தெரிவிக்கிறேன். அதோடு இந்தத் தடவை நியாயமாக உனக்குச் சேர வேண்டிய சம்மானத்தையும் கொண்டு வந்து கொடுக்கிறேன்!''

''சம்மானம் கிடக்கட்டும், ஆண்டி. உன் வாக்கை நீ காப்பாற்றுவது அவ்வளவு யோக்கியம் இல்லைதான். ஆனாலும் அது எனக்கு ஒரு பொருட்டில்லை'' என்றபடி கிளி பறந்து போய்விட்டது.

ஆண்டி அரண்மனைக்குப் போனான். ராஜாவிடம் 'போர்வாள்—பூமாலை'க் கனவுக்கான பலனைத் தெரிவித்தான். முன்னைவிட நிறையச் சம்மானம் தந்தான் ராஜா. அதோடு விசேஷ மரியாதையாக ஒரு சால்வையையும் பிரம்பையும் அவனிடம் கொடுத்தனுப்பினான்.

ஆண்டி மிகவும் மிதப்பாக வீடு நோக்கிப் புறப்பட்டான். வழியில் அந்த ஆலமரத்துக் கிளி எதிர்ப்பட்டு, 'கிக்கீ! கிக்கீ!' என்று குரல் கொடுத்தது. ராஜ சம்மானத்தில் அதற்கும் பங்கு தர வேண்டுமே என்று நினைக்கையில் ஆண்டிக்கு ஆத்திரம் வந்தது.

''தினம் மிளகாய்ப்பழம் தின்கிற உனக்கு இன்று பிரப்பம்பழம் சம்மானம்!'' என்று சொல்லிக் கைப் பிரம்பைக் கிளியின் மேல் வீசினான்.

கிளியின் காலில் பிரம்படி பட்டது. ரத்தம் கசிந்தது. ஆண்டியை ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டுக் கிளி பொந்துக்குள் போய்விட்டது.

மேலும் ஒரு வருஷம் ஓடிற்று. இரண்டாம் வருஷத்தைப் போலவே முந்திய வருஷமும் கிளி தெரிவித்தபடி எல்லாம் நடைபெற்றன. ராஜாவின் அந்தரங்க ஊழியனே எதிரி ராஜாவுடன் சேர்ந்து போருக்கு வழி வகுத்தான். பெரிய யுத்தம் நடந்தது. ரத்த ஆறே ஓடிற்று. முடிவில் மணிபுரம் ராஜாதான் வெற்றிமாலை சூடினான்.

அப்பால் ஒரு நாள் ராஜாவுக்கு மேலும் ஒரு விநோதமான கனவு வந்தது. மானும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்துவது போன்ற காட்சி. கண் விழித்த ராஜா உடனே போய் அந்த ஆண்டியை அழைத்து வர உத்தரவிட்டான்.

ஆண்டியும் அரண்மனைக்குப் புறப்பட்டு வந்தான். அப்போது அவன் ஆண்டிப் பரதேசி அல்ல. நாடறிந்த பெருந்தனக்காரன். வழி நெடுக, ராஜாவின் கனவுக்கு என்ன பலன் சொல்வதென்று யோசித்தபடி நடந்தான்.

''நான் ஏன் அந்த ஆலமரத்துக் கிளியைப் பிரம்பால் அடித்துத் துரத்தினேன்? அதன் உதவியில்லாமல் கனவுக்கான பலனை நான் எப்படி ராஜாவிடம் சொல்வேன்? நான் சரிவரப் பலன் சொல்லாவிட்டால் ராஜா என் தலையைச் சீவினாலும் சீவலாம்!'' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான். அவனுக்குத் தலை சுற்றுவது போல இருந்தது. நடை தள்ளாடிற்று.

அப்போது அந்தக் கிளி எங்கிருந்தோ ஆண்டியிடம் பறந்து வந்தது.

''கவலைப்படாதே, ஆண்டி! நேரே போய் ராஜாவிடத்திலே தெரிவி. நாட்டில் இந்த வருஷம் அமைதியும்

பலே பல்லிகள்!

'லெமன்'

கச்சி வரதர் கோவில் மச்சில்
காணும் பல்லிகள் ;
உச்சி நேரே கல் தளத்தில்
உள்ள பல்லிகள்.

தங்க மேனி வெள்ளி மேனி
தாங்கும் பல்லிகள் ;
சங்கு சக்கர ஸாமி மெச்சும்
தவஸுப் பல்லிகள்.

அண்ணன் தம்பி உறவு கொண்ட
அதிர்ஷ்டப் பல்லிகள் ;
திண்ணம் நமது தோஷ மெல்லாம்
தீர்க்கும் பல்லிகள்.

சந்திரப் பிரபை சூர்யப் பிரபை
சார்ந்த பல்லிகள் ;
எந்தப் பொழுதும் உண்மை பேச
உணர்த்தும் பல்லிகள்.

சத்திய விரதப் பெருமாளின்
சந்நிதிப் பல்லிகள் ;
அத்தி வரதர் ஆலயத்தை
ஆளும் பல்லிகள்.

வருடி நீவி மனிதர் தொட்டு
வணங்கும் பல்லிகள் ;
கருட ஸேவை நிகழும் புகழ்க்
காஞ்சிப் பல்லிகள் !

ஆனந்தமும் நிலவும். புலியும் மானும் ஒரு துறையிலே நீர் அருந்துவதால் மக்களிடையே அன்பும் ஆதரவும் பெருகும்.''

ஆண்டி மனம் தெளிந்து ராஜாவிடம் வந்து வணங்கினான்; வாழ்த்தினான். ராஜா கண்ட 'புலி—மான்' கனவுக்கான நற்பலன்களைத் தெரிவித்தான். ஏராளமாகச் சம்மானம் பெற்றுக்கொண்டான்.

திரும்பும் வழியில் ஆற்றோரமாக அந்த ஆலமரத்தருகே வந்து நின்றான் ஆண்டி. பொந்துக்குள் பார்த்துக் கிளியை அழைத்தான். ''நட்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய பறவையே! இதோ, மணிபுரம் ராஜா எனக்குத் தந்த சம்மானங்கள். எல்லாவற்றையும் நீயே எடுத்துக் கொள். வீட்டுக்குப் போய் முன்னே கிடைத்த சம்மானங்களையும் கொண்டு வருகிறேன். நான் உனக்குச் செய்த தீங்குகளையெல்லாம் மறந்து என்னை மன்னித்துவிடு!''

அந்த ஆண்டி உண்மையாகவே மனம் வருந்திக் கிளியிடம் வேண்டிக்கொண்டான்.

கிளி பேசிற்று. ''வேண்டாம் ஆண்டி, வேண்டாம். இந்தப் பொன்னையும் மணியையும் வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்? எல்லாவற்றையும் நீயே எடுத்துக் கொள். நாலு பேருக்குக் கொடுத்து நீயும் சுகப்படு!''

''ஆனால், அது எப்படி நியாயமாகும், கிளியே? நான் உனக்கு வஞ்சனை செய்தேன்; வாக்குத் தவறினேன். கைப்பிரம்பை வீசி உன்னைக் காயப்படுத்தினேன். நீயோ சற்றும் மனம் கோணாமல் எனக்கு மேலும் மேலும் உதவினாய்!'' என்று குரல் தழுதழுக்கச் சொன்னான் ஆண்டி.

''அதெல்லாம் நடந்து போன கதை, ஆண்டி. அந்த நடப்புக்கெல்லாம் நீயும் நானும் காரணம் அல்ல. மூன்றாம் வருஷம் ராஜா கனவில் நரி சிரித்தது. சூதும் வஞ்சனையுமான வருஷம் அது. நீ வாக்களித்தபடி சம்மானத்தில் எனக்குப் பங்கு தராமல் வஞ்சித்தாய். இரண்டாம் வருஷம் ராஜா கனவில் வாளும் பூமாலையும் தென்பட்டன. போர்க் கலவரம் மூண்டது. நீயும் பகைவனாகி என்னைப் பிரம்பால் அடித்தாய். இந்த வருஷம் மானும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்துவது போலக் கனவு வந்திருக்கிறது. நாட்டில் அன்பும் அரவணைப்பும் காண்கின்றன. நீயும் நல்லெண்ணத்தோடு என் நட்புறவை நாடி வந்திருக்கிறாய். எல்லாமே காலத்தின் கோலம், ஆண்டி! யாரும் யாரையும் நோவதற்கில்லை.''

ஆலமரத்துக் கிளி அற்புதமாய்ப் பேசிற்று. ஆண்டி அயர்ந்து போய் நின்றான்.

''போய் வா, ஆண்டி! சுகமாய் இரு!'' என்று வாழ்த்திவிட்டுப் பறந்தது கிளி.

*

CYCLON
சைக்ளான்

தீபாவளி வாழ்த்துக்கள்

சைக்ளான், செயின் தயாரிப்பில் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்றவை. உலகெங்கிலும் சிறந்த சைக்கிள் தயாரிப்பாளர்கள் சைக்ளான் செயின்களையே விரும்பிப் பொருத்துகிறார்கள். நீடித்த உழைப்பிற்கு சைக்ளான் செயின்களையே கேட்டு வாங்குங்கள்.

சைக்கிள், ஹெவி டியூட்டி, சைக்கிள் ரிக்ஷா செயின்கள்

சைக்ளான் பிராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
கணபதி P. O. கோயமுத்தூர்-641006



பேபி விஜயா (வயது 6)

படத்திலுள்ள குழந்தைக்குப் (போலியோ) இளம்பிள்ளை வாதம் வந்து, எங்கும் குணமாகாமல் கடைசியாக, கோவை தெலுங்கு பாளையம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்து 15 நாளில் குணமாயிற்று. இங்கு ஆங்கில முறையில் குணமாகாத எலும்பு முறிவு, (Spondiloschisis) இடுப்புவலி, மூட்டு களில் வலி, (Rheumatoid Arthritis) பிறவி ஊனம், (Club foot) கூன் முதுகு, (Hunch back) Fits, Tetanus, Sciatica, Scoliosis - Haemophilia, cerebral - palsy (Shaking Palsy) நடுக்கம், முதலிய நோய்கள் ஆச்சரியப்படும்படி, அற்புதமாகக் குணமாகிறது.

Hospital Phone: 23150 **City Branch Phone: 32150**

தெலுங்குபாளையம் வைத்தியசாலை

REGISTERED MEDICAL PRACTITIONER
Regd. No. 17488

டாக்டர் V. அர்ஜுனன்
தெலுங்குபாளையம் P. O.
கோயமுத்தூர்-641 039

Dr. V. ARJUNAN
Bone Specialist
Telungupalayam Hospital
Coimbatore-641 039

சிறுவர் சிரிப்பு!


மறுபடியும் அந்த ஆமையோட ஓட்டப்பந்தயம் வேண்டாண்டா. ஏற்கனவே ஒரு முயல் அதன்கிட்டே ஓடித் தோத்துச் சந்திரனுக்குப் போயிடுத்து!
"உன்னைப் பெற்றதுக்கு நான் குட்டிச் சுவரிலே தான் போய் முட்டிக்கணும்... ஹூம்!"
எத்தனை சொன்னாலும் உன் மண்டையிலே ஏறலியே; எல்லாம் என் பாலை ஊட்டி வளர்த்த தோஷம்!
என்ன அண்ணா இது! ஒண்ணோ க்ளாக் சரி; ரெண்டோ க்ளாக் தப்பா?!
இது க்ளாக்ஸோ பேபி; நீ க்ளாக்ஸோ மம்மி!
DOGTOR
"என்னடி இது DOGTOR னு போர்டு போட்டுண்டிருக்கார்"
"நாய் வியாதிகளிலே அவர் ஸ்பெஷலிஸ்டாம்!"
"அன்பார்ந்த ஆஞ்சநேயர்களே - மன்னிக்கவும் - ஆஞ்சநேய பக்தர்களே! இனிமேல் ராம நாம பஜனை..."
ஹனுமத் ஜயந்தி விழா

தசாவதாரம் ட்ரிக்!

1. மச்சாவதாரம், 2, கூர்மாவதாரம், 3. வராஹாவதாரம், 4. நரஸிம்மாவதாரம், 5. வாமனாவதாரம், 6. பரசுராமாவதாரம், 7. ராமாவதாரம், 8. பலராமாவதாரம், 9. கிருஷ்ணாவதாரம், 10. கல்கியவதாரம்.

மகாவிஷ்ணுவின் இந்தப் பத்து அவதாரங்களும் நமக்குத் தெரியும். இவற்றை 1 முதல் 10 முடிய முறையாக நினைவு வைத்துக் கொள்வதும் சுலபந்தான். இனி இந்த ட்ரிக்கைச் செய்துக்காட்டி நண்பர்களிடையே நீங்கள் பிரபலமடையலாம்.

முன்னதாகப் பத்து அவதாரங்களுக்கும் 10 அட்டை டோக்கன்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். படத்தில் காட்டியுள்ளது போல அவற்றை முக்கோணமாக அமையுங்கள்.

இப்படி அமைத்ததை 7,4,2,1;8,5 3;9,6;10 என்று குறுக்குவாட்டில் டோக்கன்களை எடுத்து அடுக்குங்கள். பிறகு வேறொரு வகையில் டோக்கன்களை இடம்மாற்றி முக்கோணமாக அமையுங்கள். படம் இருக்கும் பக்கத்தைக் காட்டாமல் வெற்றுப் பக்கம் வெளிப்படும்படி டோக்கன்களைத் திருப்பி வையுங்கள். அப்புறம் நண்பர்கள் குறிப்பிட்டுக் கேட்கும் எந்த அவதார டோக்கனையும் நீங்கள் எடுத்துக் கொடுக்கலாம். (எந்த எண் டோக்கனுக்கு எந்த எண் டோக்கன் இடம் மாறுகிறது என்பதைத் தனிச்சீட்டில் குறித்துக் கொண்டு பயிற்சி செய்யலாம்.)

அந்த அந்த அவதாரத்துக்குரிய டோக்கன் எண்ணை நினைவில் இருத்திக் கொள்வதும், அதுஅது இடம் மாறியிருப்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்வதும் இந்த ட்ரிக்கை வெற்றிகரமாக்கும். —எஸ்ஸெல்



பிளாடினம் ஜூபிலி நர்சிங் ஹோம்

கோட்டக்கல்

ஆயுர்வேத விசேட சிகிச்சைக்காக கோட்டக்-கல்லில் அமைந்துள்ள இன்றைய சொர்க்கம். ஆயுர்வேத சிகிக்சைக்கு இந்தியா மட்டுமின்றி, அகில உலகத்திலிருந்தும் எழும் அதிக அளவு தேவைக்கு, நவீன சௌகரியங்கள், மற்றும் சுகம் நிறைந்த இந்த அடுக்கு மாடி கட்டிட பகுதி ஓர் சிறந்த பதிலாகும். சீரிய பயிற்சி பெற்ற மருத்து-வர்கள். இன்பகரமான சூழ்நிலை.

ஆயுர்வேத விசேட சிகிச்சைகளான, தாரா, பிழிச்சல், நவரக்கிழி, சிரோவஸ்தி மற்றும் பல சிகிச்சைகள் மிக்க கவனத்துடன் பண்டைய வழக்கத்தையும், இன்றைய மக்களுக்கு தேவைப் படும் சேவையை ஒட்டியே செயலாற்றபபடுகிறது.

அன்றைய மகான்களின் மருத்துவ முறைகளை இன்று பின் பற்றும் சிறப்பிடம் -கோடடககல்

வைத்ய ரத்னம் P.S. வாரியரின்
ஆர்ய வைத்திய சாலை
கோட்டக்கல், கேரளா.

இந்தியா முழுவதிலும், வெளிநாட்டிலும் மக்கள் சேவைக்காக. 200க்கு மேற்பட்ட கிளைகள், ஏஜன்சிகள் செயலாற்றுகின்றன.

ARIES AVS 247

HEARTY DEEPAVALI GREETINGS

G.E.M

FULFILS ALL YOUR ELECTRICAL NEEDS



GANAPATHY ENGINEERING MANUFACTURERS PRIVATE LIMITED

POST BOX NO. 2006 ● GANAPATHY POST ● COIMBATORE-641006
PHONE: 23024 & 30808 ● TELEX No. 855 - 338 GEM.

WITH BEST WISHES FROM

THE MAYAVARAM FINANCIAL
CORPORATION LIMITED

Regd. Office :

13-H, Cutchery Road, Mayavaram 609 001

CONVENTIONAL CHIT CONDUCTORS SINCE, 1947

Offices at :

Madras - Kancheepuram - Pondicherry - Thirupapuliyur - Chidambaram - Karaikal - Kumbakonam - Thanjavur - Salem and Coimbatore

காது கேளாதவர்களே! வாருங்கள்...

கடந்த 15 ஆண்டுகளாக, கோவை மாநகரிலே பல்லாயிரக்கணக்கான காது கேளாதவர்களுக்குக் காது கேட்கச் செய்து பல்லாயிரக்கணக்கான பாராட்டுப் பத்திரங்கள் பெற்றிருக்கிறார். வெளி நாட்டினரும் காது சிகிச்சை பெற்றுக் குணமடைந்து வியந்து செல்கிறார்கள். தினந்தோறும், இந்தியப் பேரரசின் எல்லா மாநிலங்களிலிருந்தும், காது கேளாதவர்கள் வந்து சிகிச்சை பெற்று, காது கேட்டு மகிழ்ச்சியோடு சென்ற வண்ணம் இருக்கிறார்கள்.

* காதில் வலியா? இரைச்சலா? சீழ் வடிகிறதா? சரியாகக் காது கேட்கவில்லையா? உங்கள் நலனில் அக்கறை கொண்டோருடன் நேரில் வாருங்கள். 3 நாள் - 6 வேளை, சித்த வைத்திய சிகிச்சை பெறுங்கள். * சந்தேகமில்லாத சந்தோஷத்தோடு காது கேட்டுச் செல்லுங்கள். * காதுக் கருவி உபயோகித்தவர்களுக்கும் ஊமைத்தன்மை உள்ளவர்களுக்கும் சிகிச்சை அளிப்பதில்லை. * அறுவைச் சிகிச்சை செய்தும் குணமாகாதவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். * இயற்கைச் சிகிச்சை இது. என்றும் பலன் அளிக்கும். காதுகளைப் பரிசோதித்த பிறகே சிகிச்சைக்கு ஏற்கப்படுவர்.

கடித விவரங்களுக்கு:

Dr. சாமிகிரி சித்தர் காதொலி நிலைய மருத்துவமனை

97, சரோஜினி ரோடு, ராம் நகர், கோயமுத்தூர் - 641009, தமிழ்நாடு,



சகோதரனே, நீ வாழ்க!

'ராக்கி' வடநாட்டில் கொண்டாடப்படும் பண்டிகைகளில் முக்கியமானது. உடன்பிறந்தவன் நன்றாக நீடூழி வாழ வேண்டும் என்று வாழ்த்தி, சகோ[illegible], தங்கள் சகோதரர் கையில் ரக்ஷையைக் கட்டி[illegible]. இந்த ரக்ஷை வண்ணம் வண்ணமான [illegible] வேலைப்பாட்டுடன் மிக்க கவர்ச்சியாக இருக்கு[illegible].

சொந்தச் சகோதரன் இல்லாவி[illegible]லும், தமக்குத் தெரிந்த வீட்டுப் பிள்[illegible]ராகப் பாவித்து 'ராக்கி' அன்று, [illegible]றுவதும் உண்டு. அத்தகைய சகோ[illegible]நாள் முழுவதும் சகோதரர்களா[illegible] பொல்லாத[illegible] எல்லாவற்றுக்[illegible].

சகோத[illegible]த உடன்பி[illegible] தானுக்கு [illegible]ன் நீராடி [illegible] மிட்டு, 'உ[illegible]யாக, கா[illegible]க, அமையட்டு[illegible] கையில் ரா[illegible]க் கட்டி, இனிப்[illegible]. ராக்கியை[illegible]டிக் கொண்ட ச[illegible] வசதிக்கேற்பப் [illegible]ளும் பொருளும் [illegible]டவையும் அளித்து மகிழ்வான்.

தமி[illegible]திலும் உடன்பிறந்தாளின் மேன்[illegible]காகக் கொண்[illegible]டும் ஒரு பண்டிகை இருந்து வருகிறது. பொங்[illegible]க்கு மறுநாள் தங்கள் [illegible]காதரனின் நன்மைக்காக [illegible]விடியற்காலையில் 'க[illegible]' [illegible]ப்பதும் இதே அடிப்படையில்தான்.

வடக்கேயும் சரி, [illegible]கேயும் சரி, சகோதர சகோதரி[illegible]டையே பாச[illegible]ருந்து உண்மை அன்பு பெருக [illegible]ண்டும் என்ப[illegible] இத்தகைய கொண்டாட்டங்களின் அடிப்படை[illegible]அறிவுரையாக எதையும் சொல்லாமல் அதையே[illegible] பண்டிகையாகக் கொண்டாடச் செய்வதே பாரதப் பண்பாட்டின் சிறப்பு.

இனிமையான வஸ்துக்கள்
சொற்பமான இந்த உலகில்
ஆம்ப்ரோ குழந்தைகளை
ராஜாக்கள் போல் சந்தோஷமாக
இருக்கச் செய்கிறது

IS:1011

ஆம்ப்ரோ ®

க்ளுகோஸ் பிஸ்கோத்துகள்

வளர்வதற்கு இன்பமானது


FOR BRIGHT IDEAS IN PACKAGING......
GOOD Packaging does not "just happen". It takes a lot of experience — plus — a willingness to "find the right combination" for a satisfactory solution.
CARTONS & CONTAINERS
MFRS. OF COLOUR CARTONS
Office: 87, M. K. Amman Koil Street, Madras-600 004. Phone: 76011

சேஷ நாராயணா

பைராம் சிங் என்பது அவன் பெயர். அவன் நேப்பாளத்தில் பிறந்தான். இமயமலைத் தொடரிலுள்ள அந்தப் பிரதேசத்தில் அவன் பாலியத்தில் வாழ்ந்தான். அவனையும், அவன் இனத்தாரையும் மக்கள் 'கூர்க்கா' என்று அழைப்பார்கள்.

நம்மில் பல சாதிகள் இருக்கின்றன அல்லவா? பல உட்சாதிகளும் உண்டு. அதைப் போலவே கூர்க்காக்கள் பார்ப்பதற்கு ஒரே மாதிரி காணப்பட்டாலும் அவர்களிலும் மேல்சாதி, கீழ்ச் சாதி எல்லாம் உண்டு. பொதுவாகக் கூர்க்காக்கள் இராணுவத்தில் சேருவது வழக்கம். அந்த நாட்டில் ஒரு வீட்டில் நான்கு பேர் இருந்தால் இரண்டு பேர் கண்டிப்பாகப் படையில் சேர்ந்து விடுவார்கள். குடகுநாட்டவரும் கூர்க்காக்களுமே நம் இராணுவப் படையில் அதிகம்.

பைராம் சிங்கும் படையில் சேர முயன்றான். ஆனால் மருத்துவத் தேர்வில் தகுதி இல்லையென்று அனுப்பிவிட்டார்கள். அவனைப் போலவே எத்தனையோ கூர்க்காக்கள் உண்டு. அவர்கள் நாடு முழுவதும் இரவில் காவல் காக்கும் காவலாளிகள். பெரிய பெரிய கட்டடங்கள், ஆபீசுகள் ஆகிய இடங்களில் ரோந்து சுற்றிப் பிழைப்பது அவர்கள் வேலை. தம் நாட்டில் வசதி இல்லாததனால் இப்படி அவர்கள் ஊழியம் செய்கிறார்கள்.

பைராம் சிங்கும் இப்படி வடக்கேயிருந்து தெற்கே வந்தான். அந்தப் பட்டணத்தின் ஒரு பகுதியில் இரவில் கடைத்தெருவில் பல கடைகளைக் காவல் காக்கும் வேலையில் சேர்ந்தான். எப்படியோ தன் சாதியிலே ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான். இல்லற வாழ்க்கையையும் இப்பொழுது நடத்திக்கொண்டிருக்கிறான்.

கூர்க்காக்கள் அல்லது நேபாளிகள் என்றவுடன் அவர்களெல்லாரும் தீரம் மிக்கவர்கள், அச்சம் இல்லாதவர்கள் என்று ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டுவிட முடியாது. உழைப்பாளிகள் என்று வேண்டுமானால் சொல்லலாம். நம்மவர்களில் இருப்பது போல, அவர்களிலும் துணிச்சல் மிக்கவர்கள் இருக்கிறார்கள்; பயங்கொள்ளிகளும் இருக்கிறார்கள்.

பேய், பிசாசு, மாயம், மந்திரம், மூடநம்பிக்கை, ஆசாரம் இப்படி அவர்களிலும் உண்டு. நமக்கு மாரியம்மன், காட்டேரி என்று இருந்தால், அவர்களுக்கும் உண்டு; ஆனால் பெயர்கள் வேறே.

பைராம் சிங் மிகவும் பயந்தாங்கொள்ளி. பேய் என்றால் வெடவெடவென நடுங்கி விடுவான். அவன் சிறுவனாக இருந்த பொழுது பேய்களைப் பற்றிப் பல கதைகளைக் கேட்டிருக்கிறான். அந்தக் கதைகளையெல்லாம் அவனுக்குச் சொன்னவள் அவன் பாட்டியே.

பேய்களுக்குக் கால் இல்லை. கை இல்லை. மூக்கு இல்லை. நீண்ட கோரப்பற்கள், பயங்கரத் தோற்றம். இப்படியெல்லாம் இங்கே என்ன என்ன கதைகள் இருக்கின்றனவோ அவையெல்லாம் ஏறக்குறைய அவன் நாட்டிலும் பழக்கத்தில் உண்டு. அவற்றைக் கேட்டிருக்கிறான்.

அவன் சுபாவத்திலே சாது; பயந்தாங் கொள்ளி. இப்படிப் பயங்கரமான கதைகள் காதில் விழுந்தால் என்ன ஆகும்? ஒரே நடுக்கந்தான்.

பைராம்சிங் பேய் என்றால் நடுங்குவான்; ஓடுவான்.

ஆனால் அவன் தொழில் இருக்கிறதே, அது இரவிலேயே வேலை செய்யும் தொழில். காவல் காக்கும் வேலை. பேய்கள் அதிகமாக நடமாடுவது இரவில்தான், பைராம்சிங்குக்கு அது நன்றாகத் தெரியும். ஆனால் என்ன செய்வது? பிழைப்பு ஒன்று இருக்கிறதே! வயிறு என்று ஒன்று இருந்து வாட்டுகிறதே!

பேய்கள் நடமாடும் சமயத்தில் தான் அவனும் நடமாடவேண்டும். மாடமாளிகை, கூட கோபுரம் உள்ளவர்களும் அவை இல்லாத சேரிகளில் வசிப்பவர்களும் யாவருமே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும் இரவு நேரங்களில், பைராம்சிங்கும், அவனைப் போன்றவர்களும் சிர்ர் சிர்ர் என்று சீட்டி அடித்துக் கொண்டு பேய்களைப் போலவே சுற்றி அலைய வேண்டும்.

பேய்க்குப் பயந்தால் பசி சும்மா விடுமா? பேயை விடப் பயங்கரமானது பசி.

அமாவாசைத் தினங்களில் இரவில் பைராம் சிங் அதிகமாக நடுங்குவான். ஏனென்றால் பேய்கள் அமாவாசை இரவுகளில் செய்யும் அட்டகாசங்களைப் பற்றி அவன் ஏராளமான கதைகள் கேட்டிருக்கிறான்.

அப்படிப்பட்ட இரவுகளில் பேய்கள் மயானங்களில் கூட்டம் போடுமாம். அங்கேதான் அவை திட்டங்களைத் தீட்டுகின்றன; கோஷங்களை எழுப்புகின்றன; முழங்குகின்றனவாம். நம் அரசியல் கட்சிக்காரர்களும் தலைவர்களும் முழங்குகிறார்களே, அதே மாதிரி முழக்கங்களாம்!

வேங்கடேச தீட்சிதரும் பேய் என்றால் நடுங்குபவர்தாம். ஆனால் அவர் நேப்பாளத்தில் பிறக்கவில்லை. வடக்கேயிருந்து தெற்கே வரவில்லை. இங்கேதான் பிறந்தார்; வளர்ந்தார். பாலியத்தில் அவரும் பைராம்சிங்கைப் போலவே பேய்க் கதைகளை நிறையக் கேட்டே வளர்ந்திருக்கிறார். அவரும் பைராம் சிங்கைப் போலவே கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார். குழந்தை குட்டிகளும் இருக்கின்றன. பாலியத்தில் அவர் ஆங்கிலப் பள்ளிக்குப் போகவில்லை; வேத பாடசாலைக்குச் சென்றார். வேத அத்தியயனம் முழுதும் செய்யவில்லை; அரைகுறைப் படிப்பு. அந்த அரைகுறைப் படிப்பை வைத்துக் கொண்டே இப்பொழுது அவர் தம் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்.

ஆம். கல்யாணம், நாமகரணம் ஆகியன நடத்துவது, திதி, கருமாந்தரம் ஆகியவற்றில் பங்கு கொள்வது, சாப்பிடுவது, தட்சிணை வாங்குவது - இதுதான் அவர் பிழைப்பு.

எந்த வேலையும் கிடைக்காத நாட்களில் தீட்சிதரும், அவரைப் போன்ற சிலரும் கும்பலாகக் கடைத் தெருவில் கடைகளின் முன்பு உட்கார்ந்து விடுவார்கள். விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்து, குளித்துச் சந்தியாவந்தனம் முடித்துக் கடைகளின் முன்பு வந்து விடுவார்கள். அவர்களிலும் பல ரகம்; திருநீறு இட்டவர், நாமம் தீட்டினவர், முத்திரை

தரித்தவர் என்று இப்படிப் பலவகையினர்.

கடைகள் திறப்பதற்கு முன்பாகவே, பொழுது இன்னும் விடியவில்லை என்னும் போதே, இவர்கள் ஆங்காங்கே கூடி ஏது ஏதோ சாஸ்திரம், வெட்டிப் பேச்சு எல்லாம் பேசுவார்கள். யாராவது எதற்காவது வந்து அழைப்பார்களா என்று தவியாய்த் தவிப்பார்கள்.

எப்படியும் அந்தச் சமயத்தில் உடுப்பிக்காரர் தம் கடையைத் திறந்துதான் இருப்பார். அங்கே இவர்கள் சுடச்சுட ஒரு கப் காபி சாப்பிட்டு வந்து உட்கார்ந்து விடுவார்கள். சிலர் தர்ப்பை, பூணூல் ஆகியவற்றை முன்னால் வைத்துக் கொண்டு யாராவது வாங்குகிறார்களா என்று ஏங்குவதும் உண்டு.

தீட்சிதரும் இப்படியே பிழைத்துக் கொண்டிருந்தார்.

அன்று அமாவாசை; வானத்தில் எண்ணிப் பார்ப்பதற்கு ஒரு நட்சத்திரங்கூட இல்லை. எங்கே பார்த்தாலும் கனமான மேகமூட்டம். இந்த இருட்டுக்கும் மின்சாரத்துக்கும் ஏதாவது ஒப்பந்தமோ? இருக்கலாம். அதனால்தான் அந்தப் பட்டணம் முழுவதும் அன்று மின்சாரக் கோளாறினால் பாதிக்கப்பட்டு, தெருக்களெல்லாம் ஒரே இருளாகக் காட்சியளித்தன.

அந்தப் பட்டணத்துக்குப் பதினாறு மைல் தொலைவில் ஒரு கிராமம். அங்கே யாரோ ஒரு பணக்காரர் இறந்து விட்டார். ஈமக்கடன்களைச் செய்விக்கத் தீட்சிதரை அங்கே அழைத்திருந்தார்கள். இதற்கு முன்பும் அவர் பல தடவை அந்தக் கிராமத்துக்குச் சென்றிருக்கிறார்.

அந்த வேலையெல்லாம் முடிவதற்கு மாலை நான்கு மணி ஆகிவிட்டது. சாப்பிட்டுப் படுத்துத் தூங்கி, அரிசி தேங்காய் முதலியவற்றைக் கட்டின சின்ன மூட்டையைச் சுமந்து கொண்டு தீட்சிதர் பஸ் ஸ்டாண்டுக்கு வந்தார், கடைசிப் பஸ்ஸைப் பிடிக்க. அப்பொழுது இரவு எட்டு மணி.

பஸ்ஸில் அவரைப்போலப் பிரயாணிகளும் ஏறி உட்கார்ந்து பஸ்ஸும் புறப்பட்டு நான்கைந்து மைல் வந்திருக்கும். ஓட்டுநர் ஒரு கூச்சல் எழுப்பினார். "டேய், டேய்! முத்து!"

இந்தக் கோடியில் இருந்த நடத்துநர், தலையைத் தெற்கே திருப்பிக் கேட்டார்.

"என்னண்ணே!"

"வண்டி என்னமோ குடுகுடுன்னு ஆடுதடா!"

"பட்டணம் இன்னும் எட்டு மைல் தானே இருக்குது? எப்படியாவது ஓட்டிப்பிடு அண்ணே."

ஓட்டுநர் ஓட்டினார் வண்டியை. மேலும் இரண்டு மைல் போயிற்று. மறுபடியும் அவர் சத்தமிட்டார்.

"டேய்! பலமா இஞ்சினிலே கிருகிருன்னு சத்தம் வர்றதுடா!"

நடத்துநர் மேலே என்னவோ சொல்ல வாய் எடுப்பதற்குள் இஞ்சினிக்குள்ளிருந்து டமார் என்ற சத்தம் கேட்டது. வண்டி முழுவதும் ஒரே புகை. வண்டி நின்றுவிட்டது: ஓட்டுநரும் நடத்துநரும் கீழே இறங்க, பிரயாணிகளும் குபுகுபு என்று இறங்கினார்கள்.

இப்பொழுது ஓட்டுநர் ஸ்பானரைப் பிடித்துப் பானெட்டைத் தூக்கினார். அதைத் திறந்து இதை மூடி என்ன வெல்லாமோ ஜாலவித்தைகளைச் செய்தார். கீழே படுத்தார். திருகினார். பிறகு எழுந்தார். தலையாட்டினார். "வண்டி ஓட்டமுடியாதடா! மெயின் ராடே ஒடிஞ்சு போய்க் கெடக்கு. சனியன்!"

பிரயாணிகள் கூச்சலிட்டனர். அரசாங்கத்தையும், அரசாங்கப் போக்குவரத்தையும் சபித்தனர். கூச்சல் அதிகமாகவே நடத்துநருக்கும் கோபம் பொங்கி வந்தது. அவரும் கூச்சலிட்டார்.

"எங்கிட்டே சத்தம் போட்டு என்ன ஐயா பிரயோசனம்? நாங்க இங்கே சாகறோம். போடற இடத்திலே போடுங்கோ! போங்களய்யா; நாம என்னத்தைச் செய்ய?"

பிரயாணிகளில் ஒருவன் உரக்கக் கூச்சலிட்டான்.

"எங்கே போய்ச் சத்தம் போடணும், சொல்லு."

"மந்திரி வீட்டுக்கு முன்னாலே போய்" போடுங்க. நீங்கதானே ஓட்டுப் போட்டு அனுப்பியிருக்கீங்க? அவர் பதில் சொல்லுவார்."

இனி இவர்களிடத்தில் பேசிக் கூச்சலிட்டுப் பிரயோசனம் இல்லை என்று பயணிகள் ஒட்டு மொத்தமாக அரசியல் கட்சிகள், தலைவர், பஸ் கார் ஓட்டுநர், நடத்துநர், இப்படி எல்லாரையும் திட்டிக்கொண்டு நடக்கத் தொடங்கினர். பஸ் நின்று தவம் செய்த அந்த இடத்திலிருந்து பட்டணம் ஆறு மைல். தீட்சிதரும் இப்பொழுது அவர்களுடன் ஒருவராகச் சேர்ந்து கொண்டு, பாழாய்ப் போக என்னும் மந்திரத்தை ஜபித்துக் கொண்டு வயிற்றையும் சுமையையும் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நடையைக் கட்டினார்.

அந்தப் பட்டணத்தில் ஒரு மயானம், எல்லாப் பட்டணங்களிலும் இருப்பது போல அங்கேயும் இருந்தது; ஆனால் இந்தப் பட்டணத்தில் ஒரு காலத்தில் ஊர் சின்னதாக இருந்து மயானம் வெளிப்புறமாக அமைந்திருந்தது. பிறகு ஊர் வளர்ந்து பட்டணமானது. மயானத்துக்கு அந்தப் பக்கமும் நகரம் வளரத் தொடங்கிவிட்டது. பல பகுதிகள் தோன்றின. மூலை முடுக்குகளிலெல்லாம் சிலைகள்: நம் நாட்டில் உணவுக்குந் உடைக்கும் தான் பஞ்சம். சிலைகளுக்கு ஏது பஞ்சம்?

மயானம் இப்பொழுது பட்டணத்தின் நடுமத்தியில் இருந்தது.

அந்தப் பட்டணத்தில் யார் செத்தாலும் இந்த மயானத்துக்குத் தான் கொண்டு வருவார்கள்; கொளுத்துவார்கள்; இல்லையேல் புதைப்பார்கள்.

தீட்சிதர் இப்பொழுது அந்த மயானத்தின் அருகே வந்துவிட்டார். மயானத்தின் நடு மத்தியிலேயே ரஸ்தா. ஆம், அது அவ்வளவு பெரிய மயானம்; ரஸ்தாவின் ஓரமாக, இருபுறமும் சுவரை எழுப்பிப் பிரித்திருந்தாலும், அங்கே வரும் பொழுது, மயானத்துக்குள்ளேயே செல்வது போலத் தோன்றும். இருட்டுச் சமயங்களில் பயமும் கூட உண்டாகும்.

தீட்சிதர் அங்கு வரும்போது அவருடன் யாரும் இல்லை. பிரயாணிகள் ஆங்காங்கே சென்று விட்டனர். அவர் மயானத்தைச் சமீபிக்கும்போது அவர் தனியாகவே இருந்தார்.

கும்மிருட்டு. வெளிச்சம் இல்லை. அதுவோ அமாவாசைத் தினம். இப்பொழுது நள்ளிரவு; அதாவது பேய்கள் கூட்டம் போடும் சமயம்.

என்ன செய்வது என்று புரியாமல் தீட்சிதர் நடுங்கிக் கொண்டே, அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் பார்த்துக் கொண்டு அடிமேல் அடி வைத்து நடந்தார். வேகமாக நடந்து மயானத்தைத் தாண்டவும் வழியில்லை. தலைமீது சுமை இருந்தது; அரிசி, தேங்காய், வெல்ல மூட்டை.

மயானத்தின் மத்தியில் அவர் இப்போது வந்துகொண்டிருந்தார். பொழுது தட்டென்று அவருக்கு ஓர் உபாயம் தோன்றியது. கந்த சஷ்டி கவசத்தைப் பாராயணம் செய்தால் பேய்கள் பயந்து ஓடிவிடும் என்று அவர் எங்கேயோ படித்த நினைவு. ஏதோ உபந்நியாசத்திலும் கேட்டிருக்கிறார். அவருக்குக் கந்த சஷ்டி கவசம் மனப்பாடம். இனிக் கவலை ஏன்?

உடனே அவர் அந்த மயானமே எதிரொலிக்கும்படியாக உரக்க அந்தக் கவசத்தின் வரிகளைச் சொல்லலானார்.

"குத்து குத்து கூர்வடி வேலால்
வெட்டு வெட்டு வேலவன் தணலேரி. தணலேரி...தணலேரி...."

"குத்து..குத்து..வெட்டு ... வெட்டு, வெட்டு..வெட்டு...குத்து...குத்து.."

பைராம்சிங் அந்த மயானத்தின் அருகில் வந்தான். அவனுக்கு ஒரே நடுக்கம். மயானத்தைத் தாண்டி அந்தப் பக்கம் செல்ல வேண்டுமே! கும் இருட்டு, எப்படி அந்தப் பக்கம் செல்வது?

மயானத்தின் இந்தப் பக்கம் காவல் காக்கும் பொறுப்பு, பைராம் சிங்குக்கு; அந்தப் பக்கம் ஷேகாலத் சிங்குக்கு. இன்று ஷேகாலத்துக்குக் காய்ச்சல். "சற்று அந்தப் பக்கமும் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று அவன் சொல்லியிருந்தான். "சரி" என்று இவனும் ஒப்புக்கொண்டிருந்தான். இருவரும் நண்பர்கள் மட்டும் அல்ல; உறவினர்களும் கூட.

இப்போது பைராம்சிங் அங்கு வந்ததும் வெட வெடத்து விட்டான். தெருவிளக்குகள்கூட இல்லை. வானில் ஒரு நட்சத்திரமும் இல்லை. மரங்களும் உருவம் தெரியாமல் பேய்களைப் போலவே நின்றிருந்தன. எப்படி இந்த மயானத்தைத் தாண்டி அந்தப் பக்கம் செல்லுவது?

அந்தப் பக்கம் செல்லாமலே, 'இரவு பார்த்துக்கொண்டேன்' என்று நாளை ஷேகாலத்திடம் சொல்லி விட்டால் என்ன என்று கூட அவன் மனம் எண்ணியது. ஆனால் பைராம்

சிங்குக்கு அப்படிச் செய்ய மனம் வரவில்லை. காவல் காக்காமல், 'நான் காவல் காத்திருந்தேன்' என்று கூர்க்காக்கள் பொய் சொல்ல மாட்டார்கள். அதுதான் அவர்களிடம் இருக்கும் விசேஷ குணம். நம்மவர்களானால் எங்கேயாவது படுத்துத் தூங்கிவிட்டுக் காவல் காத்தேன் என்று சொல்லி விடுவார்கள்.

ஆனால் கூர்க்காக்கள் இரவு முழுதும் விழிப்பாக இருந்து ஒப்புக்கொண்ட வேலையை நிறைவேற்ற, அங்கும் இங்கும் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். பீடி இழுத்துத் தட் தட் என்று கடைகளின் முன்னால் தடியால் அடித்துச் சத்தம் எழுப்பிக் கொண்டு கடமையை நிறைவேற்றுவார்கள்.

பைராம் சிங் அப்படியும் இப்படியும் தள்ளாடிக்கொண்டு, மயானத்துக்குள் பிரவேசித்து விட்டான், 'வேகமாக நடந்து அந்தப் பக்கம் சென்று விட வேண்டும்' என்று எண்ணி வேகமாகக் கால்களை எட்டிப் போட்டான். அப்பொழுது அந்த மயானமே எதிரொலிக்கும்படியாக ஒரே சத்தம்; பெரும் சத்தம்!

''குத்து:குத்து:.வெட்டு.:வெட்டு.''

பைராம்சிங்குக்குத் தமிழ் தெரியாது. அந்தப் பட்டணத்துக்கு வந்து தமிழர்களுடன் வாழ்ந்ததனால் ஏதோ ஓரளவு மிகவும் பிரயாசைப்பட்டுப் புரிந்துகொள்ளுவான். அவ்வளவுதான்.

ஆனால் 'குத்து' 'வெட்டு' என்பதன் அர்த்தம் அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆம். அவன் அடிக்கடி கசாப்புக் கடைக்குச் செல்லுவான், மாமிசம் வாங்கிவர. அங்கே ஆட்டையோ கோழியையோ வெட்டுவதை அவன் பார்த்திருக்கிறான். அப்பொழுது அவை உடலை உதறிக் கொண்டு அவஸ்தைப்படும்போது, அவர்கள் சத்தம் எழுப்புவர்ர்கள்.

''விடாதே. பத்திரமாப் பிடி.''

''குத்து, குத்து, பலமாகக் குத்து, சொல்றேன்.''

''வெட்டுடா வெட்டு, வெட்டு.''

இப்பொழுது பேய்களே தன்னைக் குத்தவும், வெட்டவும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றன என்று எண்ணி விட்டான். அதுவுமல்லாமல் அவன் எதிரே ஓர் உருவம் வந்து கொண்டிருந்தது. அதன் தலை மீது ஒரு மூட்டை. பேய்கள் எலும்புகளை மூட்டை கட்டித் தலைமீது வைத்துக் கொள்ளுமாம். அவற்றிற்கு அதுதான் முக்கிய ஆகாரமாம். கடக் கடக் என்று அவைகள் எலும்புகளைக் கடித்துச் சாப்பிடுவதென்றால் நாம் முருங்கைக்காய் சாப்பிடுவது மாதிரியாம். இப்படி அவன் கேட்டிருக்கிறான்?

ஸ்பென்ஸர்ஸ் லெமெனேட் அருந்தி ஆனந்தம் அடையுங்கள்



ஆம், ஸ்பென்ஸர்ஸ் லெமெனேட் கலந்து குடிப்பதற்கு ஏற்ற சிறந்த பானம்.

வேறு எந்த குளிர்பானமும் இதற்கு தரத்தில் இணையாகாது. அவ்வளவு சுகாதாரமான, சுவையான, புத்துணர்ச்சி தரும் பானம் இது.

1865ம் வருடம் முதல் குளிர்பான தயாரிப்பில் அனுபவம் பெற்று தரமான தயாரிப்பையே நாடுபவர்களை திருப்தி செய்து வருகிறது ஸ்பென்ஸர் நிறுவனம்.

ஸ்பென்ஸர்ஸ் லெமெனேட்

ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்,
769, அண்ணாசாலை, சென்னை 600 002.

S 3327 TAM

உடனே அவன், ''ஐயையோ! பேய்! பேய்!'' என்று தமிழிலேயே சொல்லிக் கொண்டு சத்தமிட்டுப் பின்னாலேயே திரும்பி ஓடத் தொடங்கினான். அந்த மயானத்தின் நடுமத்தியிலிருந்து இப்படி ஒரு சத்தம் எழவே, தீட்சிதர் பதைபதைத்து விட்டார். பேய்கள் தாமே வேணுமென்று ''பேய்!'' பேய்!'' என்று சத்தம் போட்டு மனிதர்கள் பயத்தால் ஓடி ஓடிப் பிறகு அயர்ந்து கீழே விழுந்ததும், விழுந்தவரின் கழுத்தை அவை நன்றாகப் பிசையுமாம், கோதுமை மாவைப் பிசைவது மாதிரி.

தீட்சிதர் இந்த மாதிரியான கதைகளை நிறையக் கேட்டிருக்கிறார். அதுவும் அல்லாமல் அவருக்கு இந்த இருட்டில் பைராம்சிங்கின் முகமும் தெரியவில்லை; மூக்கும் தெரியவில்லை, பாவம்!

உடனே அவர் பைராம்சிங்கின் பின்னாலேயே ஓடத் தொடங்கிவிட்டார். தலைமீது இருந்த மூட்டை தொப்பென்று கீழே விழுந்துவிட்டது. ஓடும் பொழுதும் அவர், ''குத்து! குத்து... வெட்டு....வெட்டு...தணலெரி. தணலெரி!'' என்று கூச்சல் எழுப்பிக் கொண்டே அவன் பின்னால் ஓடினான்.

பைராம்சிங்கோ பேயே தன்னைப் பின் தொடர்ந்து, ''குத்து! வெட்டு!'' என்று இரைச்சலிட்டு, தன்னைப் பிடிக்க வருகிறது என்றே நினைத்து, ''ஐயையோ! பேய்! பேய்! பேய்!'' என்று மேலும் கூச்சல் போட்டுக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

அப்பொழுது இரவுக் காவலுக்காக ரோந்து சுற்றிக்கொண்டிருந்த இரு போலீஸ்காரர்கள் நிறையச் சாராயம் குடித்துத் தள்ளாடித் தள்ளாடி அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தனர். இப்படி மயானத்தின் நடுமத்தியில் இருவர் ஓடுவதை அவர்கள் பார்த்துவிட்டனர்.

ஒரே மாதத்திற்குள்ளாக அந்தப் பகுதியில் இரண்டு நாள் இரவு பெரிய திருட்டு நடந்தது. திருடர்கள் இன்னும் அகப்படாதது போலீசுக்குப் பெரிய தலைவலியாயிருந்தது. இப்பொழுது இங்கே ஓடுபவர்கள் திருடர்களே, தம்மைப் பார்த்தே ஓடுகின்றனர் என்றே அவர்கள் தீர்மானித்து விட்டார்கள்.

''கழுதைப் பசங்களா! ஓடறீங்களா? எப்படித் தப்பிச்சிக்கிறீங்களோ பார்த்துடறோம்!'' என்று அவர்களும் இந்தத் திருடர்கள் பின்னால் மிக வேகமாக ஓடத் தொடங்கிவிட்டனர்.

முன்னால் பைராம்சிங், பின்னால் தீட்சிதர், அவர் பின்னால் இரண்டு போலீஸ்காரர்கள்!

ஒரே ஓட்டம். ஓட்டமான ஓட்டம்! கிண்டி ரேஸ், பெங்களூர் ரேஸ், ஊட்டி ரேஸ் குதிரைகள் போல அவர்கள் ஓடிக்கொண்டிருந்தனர். விடுவார்களா போலீஸ்காரர்கள்?

ஓடி ஓடி அந்த இருவரும் இந்த இருவரைப் பிடித்தே விட்டனர். போலீஸ் மொழியில் அழகாகத் திட்டினர். ''கழுதைப் பசங்களா! ஏய்!'' என்று அவர்கள் மேலும் சத்தம் எழுப்புவதற்குள் பளபள என்று தெரு விளக்குகளெல்லாம் எரிய ஆரம்பித்துவிட்டன; மின்சாரம் வந்துவிட்டது.

வெளிச்சம் பிரவாகமாக வீசியவுடனே போலீஸ்காரர்களுக்கு ஒரே திகைப்பு. ''இதென்ன ஐயரே?'' என்று ஒரு போலீஸ்காரன் வினவ, ''இதென்னடா கூர்க்கா?'' என்று மற்றொருவன் கேட்க, வானத்தில் முகிலும் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் சரிந்தது.

இந்த வேடிக்கையைப் பார்த்து ஆயிரக்கணக்கான தாரகைகளும் களக் களக் களக் களக் என்று சிரிக்கத் தொடங்கிவிட்டன. ❋

தீபாவளி விருந்து!


கம்ப்யூட்டர் மூலம் தீபாவளி வாழ்த்து அனுப்பினேனே! வந்ததா?
ஓ! 'ஹாப்பி கிறிஸ்துமஸ்'னு வந்தது.
போலீஸ்காரி வேலைக்கு ஆள் சேர்க்கிறார்களாமே! எந்த இடத்திலே அப்பா?
இதென்ன புது முத்திரை?
சிட்டிகை வாங்கணும். பத்து காசு தா, பத்மா!
தம்பி லட்சுமணா! இந்தப் பாணத்தை எங்கே பிரயோகம் பண்ணலாம்?
அதோ நாலாவது வரிசையில் இடது பக்கக் கோடியில் தூங்கி வழிந்து கொண்டிருக்கும் என் மாமியார் மீது விடு, அண்ணா!
அந்த ரெண்டு பேரில் நாப்பிச்சை யார்? நம்ப அத்திம்பேர் யார்? சொல்லு.
சீ, போடி! நாப்பிச்சைக்காரங்களையெல்லாம் நாம் கேவலமாக ஒப்பிடறது தப்புடி!
கவலையாக இருக்கிறீரே! என்ன கவலை?
இட்லிக்கு மாவாட்டணும். ஸ்வீட்டுக்கு மாவு சலிக்கணும். வீட்டை மெழுகித் தரையில் கோலம் போடணும். வீடு பூராவும் ஒட்டடை அடிக்கணும். இன்னும் என் மாப்பிள்ளையைக் காணோம், சார்!

WISH YOU ALL A HAPPY DEEPAVALI

THE PALGHAT CREDIT CORPORATION (Regd.)

Established: 1950

No. 16, NANA RAO NAIDU STREET, T. NAGAR, MADRAS-600 017
(Near Head Post Office, Phone: 442583)

PCC Estd 1950

RE-INVESTMENT DEPOSIT SCHEME

INVEST Rs. 10,000/- AND DRAW Rs. 43,600/-
after 145 Months.

Rs. 500/- and multiples thereof can be invested under this Scheme.

FIXED DEPOSITS:	1 Year	2 Years	3 Years
Rs. 500/- and above	11% P.A.	12% P.A.	13% P.A.

RECURRING DEPOSITS FROM 9% UPTO 20%

A.S.P. AYYAR
Managing Partner

BRANCHES: GEORGE TOWN-Phone: 23651, T. NAGAR-Phone: 442583
AYANAVARAM-Phone: 664050, PURASAWALKAM-Phone: 662315,
PALGHAT-Phone: 4403, COIMBATORE-Phone: 22491 and
HYDERABAD-Phone: 35935

LR. Swami/pp

LR. Swamip/p.

Grams: "CARMATTING"

Phones Off: 23361, 23362
Res: 32631

Auto & Machinery Equipment Co.

KOYAS BUILDING

192-A, Dr. NANJAPPA ROAD

COIMBATORE-641 018

Use TSRM TORSTEEL and TISCON (Cold Twisted Deformed Bars) Tested to IS: 1786 for your Building constructions and save 40% in Steel Costs in TOR 40 and TISCON 42 and 50% in TOR 50 and TISCON 50

For your requirements please contact your nearest TSRM Dealers or write to

The Commercial Manager

Trichy Steel Rolling Mills Limited

Senthannipuram
TIRUCHIRAPALLI - 620 004
TAMIL NADU
INDIA

Phone: 25301 (4 Lines)

Grams: ROLMILL

Manufacturers of:

Tiscon, Tor Steel, Mild Steel Reinforcing Round Bars, MS Flats, MS Angles, MS Squares, Gate Channels, Special Steel Rounds and Steel Castings.

Registered Office & Madurai Sales Office:
290, West Masi Street
MADURAI - 625 001
Phone: 24385

வாமன விஸ்வரூப மஹிமை...

அவதாரங்கள் அதர்மம் அதிகமாகி தர்மம் குறையும் போது சம்பவிக்கின்றன என்பது நமது புராணங்களின் கூற்று. இந்த அவதாரங்கள் மனிதர்களின் நன்மைக்கே. நமது வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை விளக்கும் இந்த அவதாரங்கள் இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கும் லௌகீக தத்துவங்களை உணர்த்துகின்றன.

வாமனமாக (சிறிதாக) நீங்கள் சேமிப்பது விச்வருபமாக (பெரிதாக) வளர்ந்து உங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்கிறது. அதுவே எங்கள் வாமன விச்வருப திட்டம். இதேபோல, உங்கள் தேவைகளுக்கேற்ற பல திட்டங்கள் எங்களிடம் உள்ளன.

இன்றே எங்களிடம் வாருங்கள் ஆலோசனை பெறுங்கள்

KCUB 75 Growing to 100

தமிழகம் எங்கும் 53 கிளைகள்.
பெங்களூரில் எங்களது புதிய கிளை திறக்கப்பட்டுள்ளது.

தி கும்பகோணம் ஸிடி யூனியன் பாங்க் லிட்.
கும்பகோணம்.

துரித, பாதுகாப்பான வங்கி சேவைக்கே....

APRC 111

கர்நாடக சங்கீதம் எதிர்காலம்



எம்.எஸ்.ராமஸ்வாமி

கர்நாடக இசை அரங்கங்களில் இளைஞர்கள் காணப்படுவதில்லை. சபாக் கச்சேரிகளில் கர்நாடக சங்கீத வித்துவான்களின் நிகழ்ச்சிகளுக்கு வருவாய் மிகவும் குறைவாக இருக்கிறது.

இதை நமது சங்கீதத்தில் பற்றுக் கொண்டவர்கள் கவலைக்கு இடமான திருப்பமாகக் கருதுகிறார்கள். ஒரு பிரபலமான பழம் பெரும் சங்கீத வித்துவான் தம் வீட்டுப் பையன்களை சினிமாச் சங்கீதத்தில் மோகம் கொண்டு அதையே விரும்புகிறார்கள் என்று கூறி வருத்தப்பட்டார்.

மேலும், இளம் சங்கீத வித்துவான்கள் சங்கீதத்தில் கையாளும் முறையும் ஓரளவு ஏமாற்றத்தை அளிக்கிறது. ராகம், பாவம், தாளம் என்னும் மூன்று அம்சங்களும் நமது சங்கீதத்துக்குச் சிறப்பு ஊட்டுகின்றன. முத்துஸ்வாமி தீட்சிதர் இதை, அம்பாளைப் பற்றிப் பாடும் எல்லாக் கிருதிகளிலும் புகுத்திவிடுவார். 'பாவ, ராக, மோஹினி, பக்தா பீஷ்டப்ரதாயினி'. இதுமாதிரியாகப் பல இடங்களில் வரும். இதில் முக்கியமானவை ராகமும் பாவமும். தாளம் இதற்கு அனுகுணமாக அமையும். ஆனால் தாள ப்ரஸ்தாரங்களையே முக்கியமாக வைத்து, பாவமும் ராகமும் பின்தங்கி இசை அமைத்தால், அது ஓர் இயந்திரச் சாதனையாக மாறிவிடும். சங்கீதத்தில் ஜீவசக்தி குறையும். கேட்பவர்களுக்குப் பிரமிப்பை உண்டாக்கலாம். ஆனால் உண்மைச் சங்கீதத்தின் மதிப்பு என் அவற்றுக்கு மிகவும் குறைவு. இதைச் சமீபத்தில் பாலக்காடு மணி ஐயர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். ''வித்துவான்கள் பாடாமல் எதற்காகப் பாட்டில் மிருதங்கமே வாசிக்கிறார்கள்? இதை எங்களுக்கு விட்டுவிடலாமே!'' என்று சொல்லி இருக்கிறார்.

ஆனால் வருங்காலச் சங்கீதத்துக்குக் கவலை தரும் இந்த அறிகுறிகள், பதக்கத்தின் ஒரு பக்கத்துத் தோற்றமே. மறுபுறத்தை அடுத்துக் கவனிப்போம்.

இந்த ஐம்பது வருஷத்தில் சங்கீதம் நன்றாக வளர்ந்திருக்கிறது; வளர்ந்து கொண்டும் வருகிறது. சங்கீதப் பிரவாகத்தில் ஆழம் குறைந்து அகலம் அதிகரித்திருக்கிறது என்று சிலர் கூறலாம். ஆழம் அதிகம் குறைந்ததாக நான் கருதவில்லை. முன்பு, ஆழ்ந்த சங்கீத ஞானம் உடைய மேதைகள் சிலர் இருந்திருக்கிறார்கள். மேதைகள் எந்தச் சூழ்நிலையிலும் தோன்றுவார்கள். அவர்களுடைய தோற்றம் சூழ்நிலையைப் பொறுத்ததல்ல.

இன்று நூற்றுக் கணக்கான வித்துவான்களும் விதுஷிகளும் நமது சங்கீதத்தின் நுட்பங்களை அறிந்தவர்களாக இருக்கிறார்கள். சங்கீத ரஸிகர்களின் எண்ணிக்கையும் உயர்ந்திருக்கிறது.

ரஸிகத் தன்மையும் சிறப்படைந்திருக்கிறது. நமது சங்கீதம் அமெரிக்காவின் பல இடங்களிலும், இங்கிலாந்திலும், மேற்கு ஜெர்மனியிலும் முழங்குகிறது. மேல்நாட்டுக் கல்லூரிகளில் கர்நாடக சங்கீதத்தைப் பயிற்சிப் பாடமாக வைத்திருக்கிறார்கள். நம் வித்துவான்கள், அங்கே தொண்டு ஆற்றுகிறார்கள். முன்பெல்லாம், மும்மணிகளின் கிருதிகளில், பெரும்பாலும் தியாகராஜருடையவையும், சாமா சாஸ்திரி, தீட்சிதர்களுடையவை சிலவும் பட்டணம் சுப்பிரமணிய ஐயர், பூச்சி ஐயங்கார் கீர்த்தனங்களில் சிலவும் பாடப்பட்டு வந்தன. இப்பொழுது தீட்சிதர் கிருதிகள் நிறையப் பாடக் கேட்கிறோம். சாமா சாஸ்திரி சாகித்தியங்களும், முன்னைவிட அதிகமாக வெளிவந்திருக்கின்றன.

தியாகராஜ சுவாமிகள்

முத்துசாமி தீட்சிதர்

சாமா சாஸ்திரி

புரந்தரதாஸர்

ஸ்வாதித் திருநாள்

இப்போது பாடாந்தரத்தில் இருக்கும் சாகித்தியங்கள் பன்மடங்கு அதிகரித்திருக்கின்றன. ஐம்பது வருஷத்துக்கு முன் சென்னையில் ஐந்து சபாக்கள் இருந்தன. இப்பொழுது சுமார் ஐம்பது இருக்கலாம். ஆண்டு தோறும், நாலு ஐந்து இடங்களில் சங்கீத விழாக்கள் நடக்கின்றன. மக்களும் கூட்டமாக வந்து ரசித்துக் கேட்கின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளில் உலகம் முழுவதுமே எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாடு தளர்ந்து விட்டது. இளைஞர் சமூகம் எல்லாக் கட்டுப்பாடுகளையும் எதிர்க்கிறது. இந்தப் பரந்த போக்கின் விளைவே இளைஞர்களுக்குப் பாப் இசையில் இருக்கும் மோகம். சமூக வளர்ச்சியில் கட்டுப்பாடு உள்ள காலமும் அதை எதிர்த்துத் தளர்ந்த காலமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கும். கட்டுப்பாடுகள் எதனால் ஏற்பட்டன என்ற அடிப்படையைச் சமுதாயம் மறந்து விடுகிறதே இதற்குக் காரணம். கட்டுப்பாடு இல்லாமல் ஏற்படும் விபரீதங்கள் சமூகத்தை வருத்தினால் கட்டுப்பாடுகள் இன்னும் அதிகமாகவே ஏற்படும். இது உலக இயல்பு. அதனால் இதுபற்றிக் கவலைப்பட வேண்டாம்.

சங்கீத மும்மணிகளின் காலத்திலும், அதற்கு முன்பும் வித்துவான்கள் சங்கீத இலக்கணத்தையும் தாளத்தையும் முக்கியமாக வைத்துச் சங்கீத அட்டஹாஸம் செய்து ஜனங்களைப் பிரமிக்க வைத்தார்கள். இதைப் பொப்பிலி கேசவையா ரகம் என்று சொல்லலாம். அதனால் இதுவும் புதிதல்ல. பாவ சங்கீதம் ஹரிகதை செய்பவர்களிடமே காணப்பட்டது. சங்கீத பிதாமகரான புரந்தரதாஸரும், மும்மூர்த்திகளும் சங்கீதத்தை ஆத்ம சாதனையாகக் கொண்டவர்கள். பாவம், உணர்ச்சி, அவற்றால் ஏற்படும் ஜீவன் இவற்றை அடிப்படையாகக் கொண்டவை அவர்களுடைய கிருதிகள்.

இலக்கண சங்கீதத்தை, பாவத்தோடு சேர்த்து ஜீவன் ததும்பும்படி செய்தது இவர்களின் மகத்தான சாதனை. கர்நாடக சங்கீதத்தின் தனிச் சிறப்பே அதனுடைய கட்டுப்பாடும், உயர்ந்த லட்சியமுமாகும். மனத்தில் உள்ள கசடுகளைக் கரைத்து, தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகச் செய்து, இறைவனை அடைவதற்கு ஒரு பாலமாக நமது சங்கீதம் விளங்குகிறது. ஓர் ஆத்ம சாதனை என்றும் இதைச் சொல்லலாம். ராகங்கள் மனத்தில் தோன்றும் உயர்ந்த எண்ணங்களுடைய வடிவம். இந்த எண்ணங்கள் கட்டுப்பாட்டுடன் கூடின ஸ்வரச் சேர்க்கையால் ஏற்படுகின்றன. நமது சங்கீதத்தின் முக்கியமான ராகங்கள் எல்லாம் உபாங்க ராகங்கள். குறிப்பிட்ட ஸ்வரங்கள்தான் வரும். அந்நிய ஸ்வரங்கள் குறுக்கிடா. அப்படிச் சில ராகங்களில் பாஷாங்க ராகங்கள்தாம் வரும். அந்நிய ஸ்வரங்கள் வந்தாலும், அந்தப் பிரயோகங்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன.

இந்தக் கட்டுப்பாட்டுடன் கூடிய சங்கீதம், ஆத்ம சாதனைக்கு எவ்வளவு உகந்தது என்பது பற்றி, யெஹூதி மெனுஹின் என்ற மேல்நாட்டு வயலின் மேதை விளக்கியிருக்கிறார். சில சமயம் நமது பெருமைகளை அயல் நாட்டினரிடமிருந்தே அறிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

அவர் சொல்வது: இந்திய சங்கீதம் மனிதனுக்கும் பிரபஞ்சத்துக்கும் இடையேயுள்ள உறவை வலியுறுத்துகிறது. இந்த லட்சியத்துக்காக ஓர் ஆதார சுருதியில் குறிப்பிட்ட ஸ்வரங்களைத் தேர்ந்தெடுத்து, அதை ஒரு தாளக் கட்டுடன் ஒருமைப்படுத்தும் உபாயம், படிப்படியாக மனத்தை வசிகரித்து, பண்பட்ட மனத்தை ஸ்தூல வடிவங்களிலிருந்து விடுபடச் செய்கிறது. மனிதன் தெய்வத்தை அடையும் பாதையில் கடைசிப் படி சங்கீதம்.

இது கற்பனை அல்ல. நிகழ்ந்த சம்பவம். தீபாவளித் தினத்தன்று ஒரு நாத ஜோதி அகண்ட தீப ஜோதியுடன் 'மீன லோசனி, பாச மோசனி' என்னும் இசை ஒலிக்கும் போது ஐக்கியமாகியது. ✳

பிளாக் உதவி: சென்னை, சங்கீத வித்வத் சபை

இன்று நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது

CD TVS

உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

அன்றும், இன்றும், லாரி, பஸ் மற்றும்.
எல்லா வாகன உரிமையாளர்களும்
போற்றுவது—CD-TVS பிரேக் சிஸ்டம்

உங்கள் பாதுகாப்பு
எங்கள் பொறுப்பு

சுந்தரம் க்ளேட்டன் லிமிடெட்
பாடி, சென்னை 600 050

CD TVS

We make your safety
our business.

SAA/SC/1554


Prompt after-sales service
-cuts down-tool time.
Wolf
That's value added to reliability.
In the field for decades, Wolf has the age, the experience, and the understanding of power tool users' needs. We know that your industrial development and growing production needs call for more efficient servicing of your power tools. Our nationwide service network is organised to provide preventive, regular and breakdown maintenance services within easy reach—and to render them promptly.
Wolf
ELECTRIC TOOLS
Manufactured by Ralliwolf Limited.
Marketed by Rallis India Limited.
Bombay • Calcutta • Delhi • Madras
Creative Unit 4579

அவசர யுகத்தில் நாம் வாழ்கிறோம். எதைச் செய்தாலும் அவசரந்தான். அதுவும் நகரவாழ்க்கையில் அவசரத்துக்கு எல்லையே இல்லை. பொழுது விடிந்து பொழுது போகும் வரையில்தான் எத்தனை அவசர மாகப் பல செயல்களைச் செய்கிறோம்! நிதானமாகச் செய்வது என்பதே நமக்கு மறந்து போய்விட்டதே! அப்படி ஓர் அவசரம், ஒரு பரபரப்பு, ஒரு வேகம். காலைப்போதில் தெருவில் தலை நீட்டினால் பேப்பர் போடும் பையனிலிருந்து கறிகாய் விற்கும் கூடைக்காரி வரையில் எல்லாருக்கும் ஒரே அவசரந்தான்.



எதிலும் அவசரம்!

எங்கும் அவசரம்!



தினசரித் தாளையும்,

கண்ணை மேயவிடும் அவசரக்காரர்களுக்கு வாய்த்த மனைவிமார்கள் பரிதாபத்துக்குரியவர்கள். கணவன் 'எள்' என்பதற்குள் எண்ணெயாக, கணவனுக்குத் தேவையான பொருள்களை எடுத்துத் தயாராகக் கொடுக்க வேண்டும். அலுவலகம் புறப்படும் அவன் அவசரத்துக்கு அவளும் ஈடு கொடுக்கவேண்டும்.

தினசரித்தாளின் முகத்தில் கண்விழிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். 'என்னப்பா லேட்?' என்று யாரும் கேட்பதற்கு முன் பேப்பர் பையன், வாடிக்கை வீட்டுக்கெல்லாம் காலையில் பேப்பர் போட்டாக வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்காரரையும் அழைத்து அவர்கள் கையில் பேப்பரைக் கொடுக்க ஏது நேரம்? சைக்கிளில் இருந்தபடியே வாசல் குறட்டில் ஒரு காலை ஊன்றிக் கொண்டு, பேப்பரை விசிறி எறிந்தால் முதல் மாடியில் போய் அது தஞ்சம் அடையும் லாகவம் அவனுக்குக் கைவந்த கலை.

குறித்த நேரத்துக்கு ஆபீஸ் போய்ச் சேர வேண்டுமே என்ற அவசரம். ரெயில்வே டிக்கெட் வாங்குமிடத்தில்தான் எத்தனை நெரிசல்! எத்தனை அவசரம்! கியூவில் நின்று வாங்கவேண்டும் என்ற நியதி தெரிந்தும் அவரவர்கள் அவசரம் அவரவர்களுக்கு. டிக்கெட் வாங்கினால் மட்டும் போதுமா?

ரெயிலைப் பிடிக்கவேண்டிய அவசரம் இருக்கிறதே? புறப்பட்ட ரெயிலில் அவசர அவசரமாக ஓடி ஏறுகிறார்கள்! இந்த அவசரத்தினால் சில சமயங்களில் விபத்தும் ஏற்படுகிறது! அதைப் பற்றிச் சிந்திக்க ஏது நேரம்?

காரிலும் ஸ்கூட்டரிலும் சவாரி செய்யும் புண்ணியவான்களுக்கும் அவசரந்தான். ஒருத்தரை ஒருத்தர் முந்திக்கொண்டு போகும் துடிப்பு. இவர்களுக்கிடையில் ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள். மூக்கு நுழைய இடம் கிடைக்காதா என்று சந்து பொந்திலும் நுழைந்து ஓடும்

லாகவம். சைக்கிளில் செல்கிறவர்களுக்குச் சாலையில் தனியிடம் ஒதுக்கியிருந்தாலும், அவர்களுக்கும் அந்த வாகனங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு நடுச் சாலையில் போவதில் ஓர் அலாதி குஷி. ரேஸ் குதிரை மாதிரி 'சிக்னலை' எதிர் பார்த்துக் காத்திருக்கும் ஆட்டோ ரிக்ஷாக்களைப் பாருங்களேன்; 'சிக்னல்' விழுந்ததும் கப்பென்று பாயத்துடிக்கும் அவசரம்!

அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் பார்த்துக்கொண்டு, குதிகால் பிடரியில் பட ஓடிச் சாலையைக் கடக்கும் அவசரக் குடுக்கைகள் பலர் இருக்கிறார்

பவர்களுக்கு அவசரம் என்றால் 'நடராஜா சர்வீஸ்'காரர்களுக்கு மட்டும் அவசரம் இல்லையா, என்ன?

ஆபீசுக்கோ, வீட்டுக்கோ, பள்ளிக்கூடத்துக்கோ போகும் அவசரத்திலும் மின்சார ரெயில் வருவதற்குள் பிளாட்பாரக் காண்டீன்களில் இரண்டு இட்டிலி வடையைச் சாம்பார் சட்னியில் கலந்து முக்கிச் சுவைக்கும் பரபரப்பைப் பாருங்கள்.

'எப்போதடா ஆபீஸ் விட்டு வீட்டுக்குப் போவோம்' என்ற துடிப்புடன் அலுவலகத்திலிருந்து புறப்படும் ஆண்களும் பெண்களும் பஸ்

ஸைப்பார்த்ததும் முண்டியடித்துக்கொண்டு இடம் பிடிக்கும் அவசரம். பஸ்ஸில் ஓர் இடம் பிடிக்க வேண்டும் என்று குரங்குத் தாவலாகத் தாவத் துடிப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்!

பகல் முழுவதும் தூங்கிவிட்டு, 'அடடே! மறந்து போச்சே!' என்று மொபைல் தபால் வண்டியைப் பிடிக்க ஓடும் ஆத்மாக்கள் எத்தனை பேர்! வண்டியின் 'மட்கார்டி'லும், துடையிலும் வைத்துக்கொண்டு அவசர அவசரமாகக் கடிதங்கள் எழுதும் பிரகிருதிகளுக்குக் குறைவே

இல்லை. கவரை ஒட்ட 'நாக்கு'த்தான் அவர்களுக்குச் சமய சஞ்சீவி. டின், பிளாஸ்டிக் டப்பா, கேனைத் தூக்கிக்கொண்டு மண்ணெண்ணெய் வாங்க நிற்பவர்களின் கூட்டத்தைப் பாருங்களேன்! கொஞ்சமாவது அமைதி தெரிகிறதா? எல்லாருக்கும் தாமே 'முதலில்' வாங்கிவிட வேண்டும் என்ற அவசரம்.

ஸிக்ஸரும் ஃபோரும் அடிக்கும்போது கைதட்டி ஆர்ப்பரிக்கும் ரசிகர்கள்,





இப்படி ஓர் அவலம் நிகழும்போது சாம்பிப் போவது இயற்கை.

ரன்னை எடுத்துக் குவிக்க வேண்டும் என்ற வெறியில் அடித்த பந்தின் வேகத்தையும் அங்கிருக்கும் பீல்டரின் திறமையையும் யோசிக்காமல் அவசர அவசரமாக ஓடி 'ரன் அவுட்' ஆகிப் பெவிலியன் திரும்பும் கண்றாவியைப் பார்க்கச் சகிக்காது.

கடலில் பகலெல்லாம் வலைவீசிக் கிடைத்த மீனுடன் வீட்டுக்கு அவசர அவசரமாகத் திரும்பும் மீனவர்கள்.

படகையும் துடுப்பையும் பாய்மரத்தையும் அப்படி அப்படியே கரையில் போட்டுவிட்டுக் குடிசைக்குத் திரும்பும் அவசரம்!

—போட்டோக்கள்:
பிரவீன் குமார்
பாபா, சீனிவாசலு
என். பாலாஜி
தில்லை குமார்

நடுப்பகலில் வந்த தீபாவளி

லட்சுமி ராஜரத்தினம்

அவள் மென்குரலில் சங்கீதமாகப் படித்தாள். ஓரக் கண்களில் அவன் முகத்தைக் கவனித்தாள். பார்வையற்ற விழிகள் நிறத்தை இழந்த சூனியமாய் அவள் பக்கம் நிலைத்திருந்தன. மனம் அவள் படிப்பதில் ஒன்றியிருந்ததைப் புரிந்து கொண்டாள். குரலின் நயத்தில் இளஞ்சிரிப்புக் கிளர்ந்தது.

''சிரிக்கிறீர்களா, மிஸ் ரம்யா?''

மனத்தை மறைக்க இயலாத பேச்சு அவனுடையது. ஆனால் என்ன வென்று சொல்வது?

''ஒன்றும் இல்லை காமேஷ்; இந்த நாவலின் வரிகள் எதையோ நினைப் பூட்டின. அதனால் சிரிப்பு வந்தது.''

விரல்களைப் பின்னிப் பிணைந்து பிரித்து, ''மேலே படிக்கிறீர்களா? அன்பு என்பது ஓர் ஊற்றைப் போன்றது. அதற்கு இனம், சாதி, மதம் ஒன்றுமில்லை. காதலுக்குக் கண்ணில்லை என்பதை அன்பிற்கும் வைத்துக் கொள்ளலாம். என்ன ரம்யா, நான் சொல்வது சரிதானா? நீங்கள் படித்தபடியே சொல்கிறேன், இல்லையா?''

அவள் கண்களில் வியப்புச் சுடர் விட்டது:

''எவ்வளவு ஞாபகசக்தி உங்களுக்கு, காமேஷ்?''

அவன் இதழ்களில் விரக்திப் புன்னகை ஓடியது. காற்று நிரம்பிய பலூனில் ஒரு துளி விழுந்து சுருங்கும் அயர்ச்சி சட்டென்று நிரம்பித் நிறை வைத்தது. மனம் ஆடியது.

''இன்றைக்குப் போதும் ரம்யா.''

அவள் புத்தகத்தை மூடினாள். தூரத்தில் எங்கோ வெடி ஒன்று சிதறியது.

''தீபாவளிக்கு எத்தனை நாட்கள் இருக்கின்றன ரம்யா?''

''இன்னும் இருபது தினங்கள்.''

''ஓ! கிட்டத்தில்தான் வந்துவிட்டது. ரம்யா, எனக்கு பாண்ட், ஷர்ட் வாங்கவேண்டும். ஒரே ஒரு நாள் என் கூடக் கடைக்கு வரமுடியுமா?''

''ஓ! ரொம்ப மகிழ்ச்சி! வருகிறேன், காமேஷ்.''

அவள் விடைபெற்றுக் கொண்டு போனாள். அவனும் வாசல் வரை வந்து வழியனுப்பினான். அவளது கையசைவை அவனால் பார்க்க முடியாது. கையை அசைத்திருப்பாளா? அவன் கையை அசைத்தான்.

பார்வையற்றவர்களுக்குப் பணி புரியும் சங்கத்திலிருந்து அவள் வந்து போகிறாள். ஓய்வு நேரத்தில் வந்து படித்துக் காண்பிப்பாள். ஒரு கம்பெனியில் பணி புரிகிறாள். கை நிறையச் சம்பளம். பணத்தேவையில்லாத மனத்தின் திருப்திக்காகச் செய்யும் பணி இது.

அவனுக்கு ஐந்து வயதில் பார்வை போயிற்று. அப்பா சேர்த்து வைத்திருக்கும் சொத்து, அம்மா இன்னும் வேலைக்குப் போய்க் கொண்டு வரும் சம்பளம்; பணக்கவலை இல்லை. பார்வை வருமா வருமா என்று செலவழித்தும் பயன் இல்லை. நடு நடுவே விரக்தியில் படிப்பு நின்று இருபத்து நான்காவது வயதில் எம்.ஏ. எழுதப் போகிறான்.

இன்றும் ரம்யா சீக்கிரம் வந்து விட்டுப் போயிருக்கிறாள். அம்மா இன்னும் வரவில்லை. வாசற்படியிலிருந்து ஐந்தடியில் காம்பௌண்ட் சுவர். இரும்புக் கேட்டைப் பற்றியபடி நிற்கும் பொழுது முல்லையின் மணத்துடன் ரம்யாவும் மணக்கிறாள். அம்மா, ரம்யாவுக்கு இருபது வயதிருக்கும் என்று சொல்லுகிறாள். நல்ல துறுதுறுப்பு. எப்படி இருப்பாள்?

ஐந்து வயதில் பார்வை போகும் முன்பு பார்த்த பக்கத்து வீட்டு அக்காவின் நினைவுதான் வந்தது. பார்வதி. நிருநிருவென்று தீபக் கொழுந்தாய், மத்தாப்புச் சுடராய்ச் சிவந்த இதழ்களுடன் கார்மேகக் கூந்தல் பறக்கச் சிவப்பாய் இருப்பாளே! சிவப்பு என்றதும் பக்கத்துத் தெருத் தூர்க்கை நினைவும் வருகிறது.

பக்கத்தில் எங்கோ கமாஸ் வயலினில் குழைந்து மனத்தை இழுக்கிறது. இரும்புக் கதவின் கொடூரத் தொனி!

''என்ன காமேஷ், வாசற்படியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?''

அம்மாவைத் தொடர்ந்து உள்ளே போகிறான். மறுநாள் காலை அம்மா தன் அலுவலகம் கிளம்பும் வரையில் இந்தத் தனிமை குறுக்கிடாது.

''காமேஷ், காபி குடிக்கவில்லை?''

மறந்தே போய்விட்டான். ரம்யாவுக்கும் காபி தரவில்லை. பக்கத்து வீட்டு அம்மாள் நடுப்பகலில் பிளாஸ்கில் விட்டு வைத்த காபி அப்படியே இருந்தது. அம்மா காபியை அவனிடம் நீட்டினாள். ரம்யா எப்படி இருப்பாள் என்று அம்மாவிடம் கேட்டால் என்ன? தன் கற்பனையில் அந்த வர்ணனையில் ஓர் உருவைச் சமைக்க முடியாதா என்ன?

இரண்டு தினங்கள் கழித்து ரம்யா படிக்க வந்தாள்.

''ரம்யா, இன்றைக்குக் கடைக்குப் போய்விட்டு வரலாமா?''

ரம்யா சம்மதித்தாள். காபி குடித்துவிட்டு, பணத்தை அவனிடம் கொடுத்து, கதவைப் பூட்டி எல்லாவற்றையும் ரம்யாவின் துணையுடன் செய்த பொழுது அவன் குறையெல்லாம் மறந்து போகின்றன. கடைவாசலில் இறங்கும் பொழுது அவனது கரத்தைப் பற்றிக்கொண்டு இறக்கி விடுகிறாள் ரம்யா.

அந்தக் கைதான் எத்தனை மென்மை! நடுவே தன்னுடன் அவனை அழைத்துப்போய், படிகளில் நிறுத்தி,

எதிரே வருபவர்கள் மீது மோதாமல், ''காமேஷ், உங்களுக்கு என்ன கலர் பிடிக்கும்?'' என்ருள்.

இள நகை மலர்கிறது. ''உங்களுக்குப் பிடித்த கலர்'' என்கிருன் சுருக்கமாக. 'இதற்கு இவ்வளவு சிரமப்பட்டு வர வேண்டுமா?' என்று நினைத்துக்கொள்கிருள் ரம்யா.

பலவற்றைப் புரட்டிக் கடைசியில் அவள் தேர்ந்தெடுக்கிருள். அவள் எதை எடுத்து என்ன, அவன் பாராட்டவா போகிருன்?

''கிளம்பலாம் காமேஷ்.''

''இருநூறு ரூபாயில் ஒரு நல்ல புடைவை வாங்க வேண்டும்.''

''யாருக்குக் காமேஷ்? அம்மாவுக்கா? நான் வாங்கிஞல் அவர்களுக்குப் பிடிக்குமா?''

''அம்மாவுக்கு இல்லே. நான் உங்களுக்குத் தரும் தீபாவளி அன்பளிப்பு''.

''எனக்கு எதற்கு, காமேஷ்?''

''என் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளக் கூடாதா ரம்யா?'' அவன் அவளது கரத்தைப் பற்றினுன். குழம்பிஞள் ரம்யா.

''அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.'' கணீர் என்று ஒலித்த குரலேக் கேட்டுத் திரும்பிஞள் ரம்யா.

பின்ஞல் ராஜன் நின்று கொண்டிருந்தான்.

''ராஜன், எங்கே இப்படி? இவர் தாம் மிஸ்டர் காமேஷ்.''

அறிமுகம் முடிந்தது. ராஜன் அவளுடன் வேலே பார்ப்பவன். இன்னும் சொல்லப் போஞல் அவள் இதயக்கதவைத் தட்டித் திறந்தவன்.

''நீங்கள் சொல்லுங்கள், ரம்யா நான் தரும் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளக்கூடாதா, ராஜன்?''

''ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான்தான் சொன்னேனே! நெருங்கிவிட்டவரின் ஆசையைப் புறக்கணிக்கக் கூடாது'' என்ருன் ராஜன்.

ரம்யா அவன் முகத்தைப் பார்த்தாள். ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லே.

''ரம்யாவிற்குப் பொருத்தமான வண்ணத்தில் நீங்களே ஒரு புடைவையைத் தேர்ந்தெடுங்கள், மிஸ்டர் ராஜன்'' என்று கேட்டுக்கொண்டான் காமேஷ்.

''எனக்கு அவசர வேலே இருக்கிறது, மிஸ்டர் காமேஷ். ரம்யா, நீயே உனக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்'' என்ருன் ராஜன்.

குழம்பித் தவித்தாள் ரம்யா. 'இதென்ன வார்த்தை? 'இதற்குப் பொருள் உண்டா?' அவன் விடைபெற்றுப் போவதைக்கண்டு நின்ருள்.

மறுநாள். உணவு வேளேயில் ராஜனேப் பார்த்தாள் ரம்யா.

''ராஜன், எனக்கு நேற்றுப் புடைவை வாங்க உதவியிருக்கக் கூடாதா?''

''நான் வாங்கிஞல் சரி. மற்றவர்கள் வாங்கித் தரும் பொழுது எதற்காக என் உதவி தேவை?''

ஓ! தன்ஞல் வாங்கித் தர முடியவில்லே என்ற தாழ்வு மனப்பான்மையா? அவள் போய் விட்டாள்.

இரவு பூராவும் தூக்கமின்றிப் புரண்டான் காமேஷ். ஏஞே தூக்கம் வரவில்லே. எழுந்து போய் ஜன்னல் அருகில் நின்ருன்.

''என்னப்பா, தூக்கம் வரவில்லேயா?'' கேட்டவாறு அம்மா பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''அம்மா, ரம்யா படித்து வைத்த நாவலே நீங்கள் தொடர்ந்து படிக்கிறீர்களா? கேட்டுக்கொண்டே தூங்குகிறேன்.''

அம்மா நாவலே எடுத்துக் கொண்டு வந்தாள். மெல்லப் படித்தாள். சில சமயங்களில் வரிகள் பிறழ்ந்தன. வார்த்தைகள் குழறின. ஆஞல் அவன் காதுகளில் ரம்யாவின் குரலே ஒலித்தது. அம்மா படிப்பதில் திருப்தி இல்லே. ஆஞலும் மனம் நழுவி நழுவி ரம்யாவிடம் ஓடியது.

மகனுடைய மன உளேச்சல்கள் அந்தத் தாய்க்குப் புரியத்தான் புரிந்தன. ஆஞல் எப்படித் தீர்ப்பது?

அவன் அந்த நினைவிலேயே தூங்கிப் போனான்.

மறுநாள் ரம்யாவின் வரவை எதிர்பார்த்து மேஜை மீது புத்தகத்துடன் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான், காமேஷ். ஆனால் ரம்யா வரவில்லை. அம்மாதான் வழக்கமான நேரத்தில் வந்தாள்;

இன்றைக்கும்] ரம்யா வரவில்லை அம்மா.''

''ரம்யா வரமாட்டாள். இன்னும் ஒரு வாரத்திற்கு. அவள் அக்காவிற்குக் கல்யாணம்'' என்ற 'அம்மா சமயலறையில் நுழைந்தாள்.

அவன் முகத்தில் ஏமாற்றம் கவிழ்ந்தது. அக்காவுக்குக் கல்யாணம் என்றால் இவளுக்கு என்னவாம்? மனம் பொங்கிக் குமைந்தது.!ஆனால் இரண்டு தினங்களில் கல்யாணத்திற்கு அழைக்க வந்தாள்! ரம்யா. அவனுக்கு அவள் வரவு திருப்தியாக இருந்தது.

''கல்யாணத்திற்கு வந்து விடுங்கள்'' என்று அழைத்தாள் ரம்யா.

''வரவேற்பிற்கு வருகிறேன் காமேஷுடன்'' என்றாள் அவன் அம்மா.|

''சற்று நேரம் இருந்துவிட்டுப் போகலாமே. ரொம்ப அவசரமா ரம்யா?''

அவள் அவனைப் பார்த்தாள். பார்வையற்ற கண்களில் ஊசலாடிய நிராசைகள். மோகன வடிவம்! இவனுக்கு மட்டும் பார்வை இருந்தால் எப்படி இருப்பான்? தலையைத் தலையை உசுப்பிக் கொண்டாள்.

''என்ன ரம்யா, பதில் சொல்லவில்லை?''

''எனக்கு ராஜனுடன் ஒரு நிகழ்ச்சிக்குப் போக வேண்டும்.''

சொல்லே ஓர் அடியாக விழுந்தது. அவனுக்கும் கண் இருந்தால் இப்படி ரம்யாவுடன் வெளியே போகலாம். அவனை ஏன் தடுத்து நிறுத்த வேண்டும்?

அம்மாவுடன் அவன் வரவேற்பிற்குப் போனான். பிரபல ஹோட்டலில் விருந்து. அம்மா ஏதோ ஒன்றைப் பரிசாகச் சுமந்துகொண்டு வந்திருந்தாள். கூட்டத்தில் அவனைத் தனியாகவிடாது எச்சரிக்கைப் பிடி. அவனைப் பொறுத்த வரை இரவு பகல் எல்லாமே ஒன்றுதான்.

சாப்பிடும் பொழுது அம்மா உதவ அவன் சாப்பிட்டான். நடுவே ரம்யா வந்து உபசரித்து விட்டுப் போனாள். சாப்பிட்ட பின்பு திறந்தவெளி நாற்காலிகளில் அவர்கள் உட்கார்ந்தார்கள். மெல்லிசை நிகழ்ச்சி, தன்னை அறியாமல் தாளமிட வைத்தது இசை. அம்மா அருகில் உள்ள!பெண்களிடம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

ரம்யா அவனிடம் வந்தாள். ''காமேஷ், என்னிடம் சொல்லாமல் போய் விடாதீர்கள்'' என்றவாறே திரும்பிப் போனாள்.

''ரம்யா!'' அந்தக் குரல் ராஜனுடையது என்பது புரிந்தது காமேஷிற்கு.

''எங்கே ஓடுகிறாய் ரம்யா?''

காமேஷின் காதுகள் வழக்கத்தை விடக் கூர்மையாயின.

''ஒன்றுமில்லை. ராஜன். காமேஷ் போய்விடப் போகிறாரே என்று சொல்லத்தான் ஓடி வந்தேன். அவருக்குப் பால் அல்வா என்றால் மிகவும் பிடிக்கும். கொஞ்சம் கொடுத்தனுப்பலாம் என்றுதான்.''

ராஜனின் சீறலான பதில் தணலாக வந்தது. ''அந்தக் குருடன் கிட்டே உனக்கு ஏன் இவ்வளவு பரிவு? இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. இனிமேல் நீ அவனுக்குப் பாடம் படிக்கக் கூடாது.''

ரம்யா என்ன பதிலைச் சொல்லப் போகிறாள்? காமேஷின் மனம் ஒரு கணம் நின்று இயங்கியது. ஆனால் ரம்யாவின் குரல் வரவே இல்லை. ஏன் ரம்யா பேசவே இல்லை? ராஜன் சொல்வதைக் கேட்கப் போகிறாளா?

''காமேஷ், கிளம்பலாமா?''

''அம்மா, ரம்யா தன் கிட்டே சொல்லிக் கொண்டு போகச் சொன்னாள்.''

''சொல்லிக் கொண்டு விட்டேன் காமேஷ். உனக்காகப் பால் அல்வா கொடுத்திருக்கிறாள்.''

அவன் மனம் மகிழ்ந்தாலும், ஏன் தன்னிடம் ரம்யா வந்து பேசவில்லை என்ற மனத்தாங்கல் இருக்கத்தான் இருந்தது. ஒரு வேளை ராஜன்



தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

Literoof

12 ஆண்டுகள்
உங்கள் சேவையில் ஊட்ரூ:ப்

நீடித்து உழைப்பவை— சிக்கனமானவை
ஆஸ்:பால்டிக், காருகேடட் மற்றும்
ப்ளேன் கூரைத் தகடுகள்
கல்:ப்ரெட் ஷீட்டுகள் எங்களின் புதுமைப் படைப்பு

ஜனதா, பாபுலர்,
டிலக்ஸ் மற்றும்
ஸூபர் டிலக்ஸ் ரகங்களில்

தயாரிப்பாளர்கள்:
ஊட்ரூ:பிங்ஸ் லிமிடெட்
பதிவு பெற்ற அலுவலகம்: 226, லாயிட்ஸ் ரோடு, சென்னை-600 086
தந்தி: "LITEROOF" ஃபோன்: 810725/6/7
பிராந்திய அலுவலகங்கள்:
டெல்லி— 110 021 போன்: 653515 (Res)
பம்பாய்— 400 070 போன்: 675487 (PP)
கல்கத்தா— 700 001 போன்: 229953 (PP)

அருகில் இருந்திருப்பான். இவன் யார் தன்னுடன் ரம்யாவைப் பேச வேண்டாம் என்று சொல்ல?

தீபாவளிக்கு இன்னும் இரண்டே தினங்கள் இருந்தன. அம்மா அலுவலகம் செல்லாமல் பலகாரங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். பாகின் மணமும், எண்ணெய் நெடியும் வீட்டைச் சூழ்ந்தன. சூடாகத் தயாரான உடனே அவனிடம் மாதிரிக்குக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''போம்மா, சாப்பிடுவதும் தூங்குவதும் எனக்கு அலுத்துவிட்டன.''

அம்மாவால் என்ன செய்ய முடியும்? வேதனை மனத்திற்குள்ளாகவே நுரைத்து நுரைத்துப் பொங்கி அடங்கியது. அவளும் மனம் தளர்ந்துபோனால் எப்படி?

''இப்படி வேதனையை வளர்த்துக் கொள்ளக் கூடாது, காமேஷ்.''

அவனுடைய வேதனை அவளுக்குத் தெரியுமா?

அன்று மாலை ரம்யா வந்து விட்டாள். வரும் பொழுதே கலகல வென்று அருவி விழும் பேச்சு. அவனைப் பற்றிய விசாரிப்பு. பலகாரத்தின் நெடியை மூக்கில் இழுத்தவாறு கேட்கும் உரிமை. அக்காவின் கல்யாணத்தைப் பற்றி அம்மாவின் கேள்விகளுக்கு நடுநடுவே பதில்கள்-அப்பா! அவளுடைய குரலைக் கேட்டதும் எத்தனை நிம்மதி!

ரம்யா சற்றுநேரம் அவன் பாடங்களைப் படித்தாள். கீட்ஸின் கவிதைகள், கம்பனின் கவிதை ரஸம் அவள் குரலில் வடிந்தன.

''ரம்யா, நாம் சற்று உலாவி வரலாமா? தெரு முனையில் உள்ள பூங்கா வரை போய் வரலாமா?''

அவள் சம்மதித்தாள். ஆனால் தெருவின் வெடிகளிலிருந்து தப்பி அவனைக் கூட்டிக் கொண்டு போவதற்குள் அவள் பட்ட பாடு! அவளது மென் கரத்தைப் பற்றி, தோளோடு தோள் இணைய நடக்கும் பொழுது அவன் அநுபவித்த சுகம்!

மின் விளக்குகளின் சிதறிய பால் ஒளிப்பரப்பில் அவர்கள் அமர்ந்தார்கள்.

''ரம்யா, எனக்குப் பார்வை இல்லை. ஆனால் என் ஆசைக்குப் பார்வை இருக்கிறது. அந்தப் பார்வை உங்கள் மீது விழுகிறது. என்ன சொல்கிறீர்கள், ரம்யா?''

சற்று நேரம் வரை புரியாமல் தவித்தாள் ரம்யா. 'இவனுக்கு இப்படி ஓர் ஆசையா? இதை எப்படித் தவிர்ப்பது?'

''அவசரமில்லை ரம்யா. நிதானமாகப் பதில் சொல்லுங்கள். இதற்காகத்தான் உங்களுடன் இங்கே வந்தேன்.''

சிறுசிறு புற்களைப் பிடுங்கினாள் ரம்யா.

''தங்கள் ஆசையை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறேன். ஏற்கனவே என் மனத்தில் ராஜன் இருக்கிறார்.''

காமேஷ் இதழ்களைக் கடித்துக் கொண்டான்.

தீபாவளி அன்று காலை.புத்தாடை உடுத்து, புதுப் பொலிவுடன் திகழ்ந்தாள் ரம்யா. தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். அவள்தான் எத்தனை அழகு!

''ரம்யா, நீதான் எத்தனை அழகு!'' என்று கூறமுடியாத குருடனுடனா வாழ வேண்டும்? முடியவே முடியாது. ராஜன் எத்தனை கம்பீரமானவன்!

அன்றைய நடுப்பகலில் அவள் 'அலுவலக நண்பர் சங்க'ச் சார்பில் ஒரு சினிமாக் காட்டப் போவதாக இருந்தது. முன்னதாகவே வந்து விட்டாள். வாசலிலேயே ராஜன் நின்றுகொண் டிருந்தான்.

''ஹாய், ரமி, இதுதான் தீபாவளிப் புடைவையா?''

''இல்லை; இது காமேஷ் கொடுத்த அன்பளிப்பு.''

அவன் முகம் கறுத்தது; ''நீ இன்னும் அவன் வீட்டிற்குப் போகிறாயா?''

''ஏன், போகாமல்..''

''அன்றே போக வேண்டாம் என்று சொன்னேனே!''

''எனக்கென்று விருப்பம் ஒன்றும் இல்லையா!''

''நான் உன்னை மணக்கப் போகிறவன்.''

''நான் அடிமையல்ல.''

டமால் என்று சத்தம் கேட்டது. அலுவலக நண்பன் சுந்தரின் சைக்கிள் மீது ஒரு ஸ்கூட்டர் மோதி, சுந்தர் சுருண்டு கீழே விழுந்தான். சுய நினைவு பெற்றவள் ரம்யாதான். ஓடிப் போய்ச் சுந்தரைப் புரட்டினாள். ஸ்கூட்டர் மெல்லத்தான் மோதியது. முனகினான் சுந்தர். ஸ்கூட்டர் ஓட்டியவனின் பக்கத்தில் பெரிய கும்பல். அவனும் எழுந்து கொண்டான்.

விழுந்த வேகத்தில் சுந்தரின் நெற்றியில் இரத்தம் கசிந்தது. ரம்யா தனது கைக்குட்டையை எடுத்தாள்.

''ராஜ், நனைத்துக் கொண்டு வாருங்களேன்.''

''தேவையானால் நீயே நனைத்துக் கொண்டு வா.''

அவளே நனைத்து வந்து நெற்றியைத் துடைத்தாள். காபி வாங்கி வந்து வாயில் ஊற்றினாள். இதற்குள் மற்றவர்கள் சூழ்ந்து சுந்தரை அழைத்துக்கொண்டுபோய் ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார்கள்.

''ரம்யா, இங்கே வா.''

''என்ன ராஜன்?''

''நீ இப்படி ஓர் ஆண்மகனைத் தொட்டுச் செய்வதெல்லாம் எனக்குப் பிடிக்கவே இல்லை!''

''என்ன சொல்கிறீர்கள்?''

''நீ எனக்குத்தான் மனைவி.''

அவள் எதிரே நின்ற டாக்ஸியைக் கூப்பிட்டாள்.

''வா, உள்ளே போகலாம்.''

''வேண்டாம் ராஜன். எனக்கு வேறு ஒரு வேலை இருக்கிறது.''

டாக்ஸி ஓடியது.

கை நிறைய இனிப்புடன் அவள் காமேஷின் வீட்டுப் படியில் ஏறினாள்.

''வா, ரம்யா!''

''காமேஷ் எங்கேம்மா?''

''அதை ஏன் கேட்கிறாய்? இரண்டு தினங்களாக அவன் எழுந்திருக்கவே யில்லை. என்னவென்று புரியவில்லை.''

காமேஷின் அறையில் நுழைந்தாள் ரம்யா.

''காமேஷ், இந்தாங்க இனிப்பு.''

''ஓ! ரம்யாவா? தீபாவளி இனிப்பா? எனக்கு எந்த இனிப்பும் வேண்டாம், ரம்யா.''

அவள் அவனருகில் அமர்ந்தாள். ''நேற்று முன் தினம் அவசரப்பட்டுப் பதில் சொல்லிவிட்டேன், காமேஷ். தங்களின் உள்ளத்து அழகைப் பெற வந்துவிட்டேன். அது போதும் எனக்கு.''

காமேஷ் எழுந்து நின்றான்.

''ரம்யா, இரு. குளித்துப் புது உடை உடுத்தி வருகிறேன். பட்டாசு வெடிக்கலாமா?''

''ஓ! காத்துக் கொண்டிருக்கிறேன்.''

நரகாசுரனைக் கண்ணன் வதைத்திருக்கலாம். அவளது அகத்தை ராஜன் திறந்துவிட்டான். அதில் அகம்பாவம் ஒழிந்துவிட்டது. ராஜனைப் போலக் காமேஷ் சந்தேகப்பட மாட்டான்.

''வா, ரம்யா!''

ஒருமையான அழைப்பில் ஒன்றினார்கள். அவன் கொடுத்த இனிப்பை உண்டு, அவன் நீட்டிய வெடியை வெடித்து...

இது முதல் தீபாவளி; நடுப்பகலில் வந்த தலை தீபாவளி. ❋

ஓம் ஸ்ரீமாத்ரே நம:

அன்பர்களுக்கு ஓர் அரியசெய்தி

ஜகத்குருக்கள் ஸ்ரீகாஞ்சி காமகோடி ஸ்ரீஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீசிருங்கேரி சாரதா பீட மகா சந்நிதானம், ஸ்ரீ கொண்டால் ஆசார்ய ஸ்ரீசரண தீர்த்த மகராஜ் போன்ற மகான்களின் ஸ்ரீமுகங்களும் ஆசிகளும் அருளப் பெற்று நவசக்தி நிலையத்தில் உருவாக்கப் படும் பூஜைக்குரிய தெய்விகச் சாதனங்கள்:

I. **பூஜையில் வைக்கும் சக்கரங்கள்:** (உபாசனா தேவதை, மற்றும் பலன்களுடன்)

1. **ஸ்ரீமகாமேரு (பஞ்ச லோகம்)** 4 cms × 4 cms விலை ரூ. 215.00
2. **ஸ்ரீ சக்கரம் (தாமிரம்)** 8 cm. × 8 cm. விலை ரூ. 105.00

ஸ்ரீ மகாமேரு மற்றும் ஸ்ரீசக்கரத்துக்குரிய அதிதேவதை ஸ்ரீலலிதா திரிபுரசுந்தரி. பூர்வ புண்ணிய வசம் உள்ளவர்களுக்கே இதைப் பூஜிக்கும் எண்ணம் ஏற்படும். சக்கரங்களில் அதி விசேஷமானதும் மகா சக்தி பொருந்தியதுமான மேற்படி மகாமேரு - ஸ்ரீ சக்கர பூஜைகளைப் பக்தியுடன் செய்வோருக்கு இக லோகத்தில் சகல சௌபாக்கியமும், வெற்றியும் - பரத்தில் மோக்ஷமும் பிறவா நிலையும் சித்திக்கும். ஜாதி பேத இன பேதமின்றி எவரும் இல்லத்தில் வைத்து ஆராதிக்கப் பலன் கிடைக்கும் அரிய சக்தி வாய்ந்தவை.

3. **தனாகர்ஷண மகா சக்கரம்:** மகாலக்ஷ்மி இதன் அதி தேவதை. கிருகத்தில் செல்வம் கொழிக்கச் செய்யும். வியாபார விருத்தி, மனை, மங்கலப் பொருள் சேர்க்கை, சுப காரிய நிகழ்ச்சிகள், மன சந்துஷ்டி, பிரம்ம தேஜஸ், இவை யாவும், இதை வைத்துப் பூஜிப்போர்க்குத் தரக்கூடியது. விலை ரூ. 105.00

4. **ஸ்ரீமகா கணபதி சக்கரம்:** இந்தச் சக்கரத்தின் நாயகர் ஸ்ரீ ஓம்கார ஸ்வரூபமான கணபதி. சர்வ வல்லமை படைத்த இந்தச் சக்கரம், பூஜிப்பவரின் சகல கஷ்டங்களையும் நிவர்த்தி செய்து எடுத்த காரியங்கள் யாவும் தங்கு தடையின்றி நடைபெற உதவுவது. விலை ரூ. 105.00.

5. **சியாமளா சக்கரம்:** ஸ்ரீ சரஸ்வதி இதன் பூஜா தெய்வம். இதை வைத்துப் பூஜை செய்வோர்க்குக் கல்வி கேள்விகளில் தேர்ச்சியும், வாக்குவன்மையும், போட்டி பரிட்சைகளில் வெற்றியும் கவி எழுதும் ஆற்றலும் தாமாக வந்தடையும். விலை ரூ. 105.00.

6. **திருஷ்டி நிவர்த்தி யந்திரம்:** ஸ்ரீ தத்தாத்ரேய மகானால் மந்திர உருப் பெற்றது. வீட்டிலோ வியாபார ஸ்தலத்திலோ இதை மாட்டி வைத்தால் கண் திருஷ்டியால் வரக்கூடிய எல்லாத் துன்பங்களையும் நீக்கிவிடும். காரியத் தடையைப் போக்கும். கார், லாரி, ஸ்கூட்டர் முதலிய வாகனங்களில் வைத்தால் விபத்து நேராமல் தடுக்கும். விலை ரூ. 42.00.

II. **உடம்பில் அணியக்கூடிய தெய்விக டாலர்கள்:** (வெள்ளியில் செய்யப்பட்டவை)

1. **காமாக்ஷி டாலர்:** காரிய சித்தி, வெற்றி, செல்வ அபிவிருத்தி, முக்தி தர வல்லது. விலை ரூ. 45.00.
2. **ஸ்ரீ தேவி கருமாரியம்மன் டாலர்:** வெள்ளியில் விலை ரூ. 45.00. தாமிரத்தில் விலை ரூ. 16.00
   ஸ்ரீ ஐயப்பன் டாலர்: விலை ரூ. 35.00

3. **விவாக பிராப்தி டாலர்:** விவாகங்கள் தடையின்றிச் சீக்கிரம் நடைபெற, காதல் விவாகமாகக் கனிய, நட்சத்திரத்தைத் தெரியப்படுத்தி எழுதினால் அதற்குரிய பூஜை செய்து சக்கரத்தை அனுப்புகிறோம். 108 நாட்களுக்குள் திருமணம் நடைபெற அனுக்கிரகம் கிட்டும். விலை ரூ. 45.00
4. **தன பிராப்தி டாலர்:** வேலை வாய்ப்புகள், மேல் பதவிகள், செல்வம் செழிக்க, சொத்துக்கள் சேர வல்லது. விலை ரூ. 35.00

5. **பாலாரிஷ்ட டாலர்:** (ஒன்றிலிருந்து ஏழு வயதுக் குழந்தைகள் வரை அணியக்கூடியது): பால ரோகங்களான கரப்பான், கக்குவான், இரும்பல், இழுப்பு இவைகள் வராமற் காக்க ஆதி சங்கரரால் உருவாக்கப் பெற்றது. விலை ரூ. 25.

6. **மாங்கல்ய பாக்கிய டாலர்:** திருமணமான பெண்களின் மாங்கல்யம் நிலைத்திட, கணவன்மார் ஆயுள் பெருக, நீண்ட தாம்பத்திய வாழ்வு தொடர, சுமங்கலியாய் மிளிர வைப்பது. விலை ரூ. 35.00

7. **கண் திருஷ்டி நிவர்த்தி டாலர்:** ஸ்ரீ தத்தாத்ரேய மகானால் மந்திர உருப்பெற்ற இந்த டாலரை அணிந்தால் கண் திருஷ்டியினால் ஏற்படும் எல்லா இடர்களையும் களையும்; காரியத் தடைகளை நீக்கும். விலை ரூ. 35.00.

III. **ஜெபமாலைகள்:** (வெள்ளியில் கட்டியவை)

1. **ஒரிஜனல் தாமரை மணி மாலை:** (54 மணி) விலை ரூ. 100.00; 2 ஸ்படிக மணி மாலை; (54 மணி) விலை ரூ. 60.00; துளசி மணி மாலை; (54 மணி) விலை ரூ. 60.00.

இந்தச் சாதனங்கள் தேவைப்படுவோர் சாதனத்தின் விலையில் பாதிப் பணம் முன் பணமாக அனுப்ப வேண்டும். சாதனம் வி.பி.யில் பிரசாதத்துடன் அனுப்பிவைக்கப்படும். ஆர்டர் செய்வோர் தமது நட்சத்திரத்தைக் குறிப்பிட்டு எழுதவும்.



விஸ்வகர்மக்ஞ்ய ஸ்வாமி

ஸ்ரீ S. T. முருகபூஷணம்,

ஸ்ரீ வித்யா உபாசகர் / தலைவர்

நவசக்தி நிலையம்

153, லாயிட்ஸ் ரோடு, (ஸ்டேட் பாங்க் எதிரில்)
கோபாலபுரம், சென்னை-600086 (போன்: 812013)

"லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து"

அசுணம்

-துறவி-

மாடியிலிருந்து இருள் நடுவே 'ஹா' வென்று சூனியங் கொண்டு விரியும் ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ரகு.

நீண்ட நாட்களாகிவிட்டன.

இந்த மாடியில், இப்படியொரு தனிமையில் உட்கார்ந்து, ஏதோ ஒரு தேவனின் அர்ச்சனைக்காக விழுந்து கிடக்கும் நட்சத்திரப் பூக்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பது ரகுவிற்கு ரசானுபவமாக இருந்தது, ஒரு காலம். அந்த நாட்கள் இப்படியொரு பூதாகாரமான பயமாகித் தன்னை விழுங்க முனையும் என்று அப்பொழுது அவன் நினைத்ததில்லை.

நினைவின் உக்கிரம் ரகுவின் மனத்தில் 'சுள்' ளென்று உறைத்தது. ஆகாயத்தில் நட்டிருந்த பார்வையைப் பிடுங்கிக் கொண்டு கீழே எதிர்ப்புறமாய் இருக்கும் ஸ்ரீநிவாச ஐயரின் வீட்டைப் பார்த்தான். ஜன்னலை அடைத்துக் கொண்டு போட்டிருந்த இரும்பின் உருளைக் கம்பிகள், உள்ளிருந்து விசிறியடித்த வெளிச்சத்தில் முற்றத்தில் நிழற் கோலமிட்டு நீண்டு கிடந்தன.

அந்த ஜன்னலுக்கு அப்புறமாய் நின்று கம்பியின் இடுக்கு வழியாகச் சில அபூர்வ முகூர்த்தங்களில் தன்னைத் தேடிக் கொண்டு வருகிற அந்தப் பார்வையைப் பொருட்படுத்தி இப்போது அவள் கண்களுக்காக ரகுவின் மனம் ஏங்கியது.

'ஜானு!'

எதிர்த்த வீட்டின் இடுங்கிய முன்னறையில் நாலைந்து பேர், பெண்களும் ஆடவர்களும் கூடியிருக்கிறார்கள். ''இன்னிக்கு எதிர்த்தாத்துச் ஸ்ரீநிவாசையர் இளைய மகள் லெச்சுமிக்கு நிச்சயம் பண்ணறார்'' என்று வீட்டுக்கார அம்மாள், கூடத்தில் யாரிடமோ சொன்ன வார்த்தைகள் ரகுவின் நினைவுக்கு வருகின்றன. ஏராளமாய் நெஞ்சினுள்ளே கப கப வென்று பற்றிக் கொள்கிறது.

சட்டைப் பையிலிருந்து தப்பி எடுத்த ஒரு சிகரெட்டை, 'பளிச்' சென்று எரியவிட்ட 'சிகார்' விளக்கில் பற்ற வைத்துக் கொண்டான் ரகு. கையிலிருந்த சிகார்த் தீபத்தை அணைக்க மனமில்லாதவனாய் அதையே உறுத்துப் பார்த்தபோது காற்றிலாடிய தீப நாளத்தின் நடுவிலிருந்து ஒரு மங்கிய உருவம் தோன்றியது போலிருந்தது. அதற்கு முன்னால் நீளநீளமாய்க் கம்பிகள் அவனைச் சிறைப்படுத்தியிருந்த காராக்கிருகம்.

'விசுக்' கென்று வீசிச் சுழன்ற காற்றில் சிகார்த் தீபம் பொட்டென்று அணைந்தது. பெட்ரோல் மணத்துடன், இலேசான புகை காற்றில் கலந்து பரவியது, அந்தக் கதையின் உச்சம் மீண்டும் மனத்தில் வந்து குத்திட்டு விட்டது போல் நடுங்கிப் போனவனாய் மதிலை நெருங்கிக் கீழே எட்டிப் பார்த்தான் ரகு.

'அமானுஷ்ய வெளிகளைக் கிழித்துக் கொண்டு வந்து எங்காவது ஜானுவின் உருவம் தெரிகிறதா?

காற்றில் கரைந்து கொண்டிருந்த புகைச் சுருளில் தானே மிதப்பது போல் உறுத்த, தன்னைச் சுற்றிப் புகை வளையங்களை உருளவிட்ட ரகு, 'எத்தனை நாட்களுக்குப் பிறகு இந்த மாடியில் வந்து உட்காருகிறேம்?' என்று நினைத்தான்.

'இத்தனை நாட்கள்; ஏன். இன்னும் கூடத்தான். ஏன் என்னால் இந்த மாடியில் வந்து உட்கார முடியவில்லை? இன்னும் அந்த நிழல்கள் ஜ்வாலையிட்டுத் தெரிகின்றனவோ? என்னை வியப்பான ஆவேசத்தோடு விழுங்கிக் கொண்டிருந்த கண்கள் அழிந்த பின்னும் அருபமான பார்வை தன்னைச் சுற்றிச் சுழன்று வந்து துரத்துமென்ற பயமா?'

ஜானுவின் கண்களில் எப்படிப்பட்ட பார்வை இருந்தது? கருங்கல்லையும் நொடிக்குள் கரைத்து விடும் மகா சோகமான பார்வை. வாளை ஓங்கிய வெட்டியான் முன் 'மே' என்று உயிரைச் சுருட்டிக் கொண்டு வெள்ளாடு பார்க்குமே, அந்தத் தைனியமான பார்வை.

ரகுவின் கண்களுக்கு முன்பாக அந்த நினைவுகள் தண்ணீரில் அமுந்திய பந்தைப் போலப் புடைத்துக் கொண்டு வெளி வருகின்றன.

ரகு ஆபீஸ் மாற்றலாகி இந்தப் புதிய ஊருக்கு வந்து இந்த மாடி அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தான். தூக்கம் பிடிக்காத நள்ளிரவில், வானில் அரைகுறையாய்ச் சிதறிக் கிடந்த விண்மலர்களை உறுத்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தவன், எதிர்த்த வீட்டின் முற்றத்தில் இருண்டு கிடக்கும் ஜன்னல் நிழலைப் பார்த்தான்.

உள்ளே ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு வெளேர் என்று யாரோ நிற்பது தெரிந்தது. தலையைச் சுற்றி வெள்ளைச் சேலையின் முக்காட்டைச் சுற்றிக்கொண்டு, சபிக்கப்பட்ட ஒரு தேவதையைப் போல் நிற்கும் ஜானுவின் கண்களைத் தான் பார்த்தான் ரகு., எவ்வளவு பெரிய கண்கள்! கருகருவென்று பால் குவளையில் பெரிதாய் உருளவிட்ட குண்டு முந்திரிபோல் கருவிழிகள், நிலா வெளிச்சத்தில் அவனை வசப்படுத்தின.

அவன் உறங்காத இரவுகளின் பெருமூச்சு வெப்பமாய் மூட்டமிட்டுக்கொண்டு அந்தத் தெரு முழுவதும் கவிந்து நிற்பதுபோல் உணர்ந்தான் ரகு.

ஒரு தேவ கன்னிகையை இழுத்துக்கொண்டு வந்து யாரோ குரூரமாய்ப் பழிதீர்ப்பதுபோல் இருக்கிறது. உணர்வின் சூட்டில் ரகுவின் மனம் வலிக்கிறது. ரகு தன்னைப் பார்க்கிறான் என்று உணர்ந்ததும் ஜானு தன்னை உள்ளுக்குள் இழுத்துக் கொள்கிறாள்: மின் அலைகளின்

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

AMBIKA APPALAM DEPOT
12 RANGANATHAN ST. T. NAGAR MADRAS
TRADE MARK

வெளியூர் ஆர்டர்கள் உடனடியாக கவனிக்கப்படும்

அம்பிகா அப்பளம் டிப்போ

45-A, வடக்கு மாடவீதி,
மைலாப்பூர் சென்னை-4.
போன் : 74840

* மாம்பலத்திலும் கிளைகள் உள்ளன.

இந்தியாவிலேயே
சிறந்த
அப்பளம்
யாவரும் விரும்புவது
அம்பிகா
அப்பளம்
அழகாய் பொரியும்
அம்பிகா
அப்பளம்

தித்திக்கும் தீபாவளித் திருநாள்
தின்பண்டங்களின் பெருநாள்

தின்பண்டங்களின்
தரமான தயாரிப்பிற்கு
நெய்வேலி லீக்கோ

நவதானியங்களின்
அமோக விளைச்சலுக்கு
நெய்வேலி யூரியா

தித்திக்கும் தின்பண்டங்களின் மூலப்பொருள்
நவதானியமணிகள், தினுசான தின்பண்டங்களின்
தயாரிப்பின் துணை பொருள் தரமான ஒரு எரிபொருள்.

தித்திக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்!

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட்
(இந்திய அரசின் நிறுவனம்)
நெய்வேலி 607 801

FDS NLC 3325 A

தாக்குதல் உடலில் பரவிவிடுபெற்றது போல் படபடப்பாய் வருகிறது ரகுவுக்கு.

'ஒரு தங்க விக்கிரகத்துக்கா இந்தத் திருஷ்டிக் கோலம்?'

கரிந்து கையைச் சுட்டுவிட்ட சிகரெட்டைக் கைப்பிடிச் சுவரில் நெருக்கி அணைத்துவிட்டு வெளியே தூக்கி எறிந்தான் ரகு. விரலுக்குத் தகுந்த விக்கமாய்ப் பெண்ணுக்குச் சம்பந்தம் நடந்துகொண்டிருக்கும் வேளையிலும், நாளைய வியாபாரத்துக்கான பட்சணங்கள் எண்ணெயில் வெந்து மணக்கிற மணம் ஸ்ரீநிவாசையர் வீட்டிலிருந்து வருகிறது. ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று பட்சணம் விற்பார் ஸ்ரீநிவாச ஐயர். ஒரு கையில் சுக்குக் காபிப் பாத்திரமும், மறு கையில் வடை, முறுக்குள்ள பட்சணத் தட்டும் ஏந்திக் கொண்டு ஓடி ஓடி அவர் விற்பதை ரகு எத்தனையோ முறை பார்த்திருக்கிறான். இந்த வருவாயில் அந்தக் குடும்பம் முழுவதும் எப்படி நடக்கிறது? அவர் வீடு நிறையக் குஞ்சும் குளுவானுமாய்க் குழந்தைகள்.

இந்த ஊருக்கு ரகு மாற்றலாகி வந்த மறுநாள் தெரு நடுவில் கண்டதும் தாமாகவே எந்தவிதச் சங்கோஜமுமின்றித் தம்மை அறிமுகம் செய்துகொண்டார் ஸ்ரீநிவாசையர்:

''ஸார், அக்ரிகல்சுரல் ஆபீசுக்குப் புதுசா வந்திருக்கிறதா அறிஞ்சேன். நான் உங்க போர்ஷனுக்கு எதிராக இருக்கிற சின்ன ஆத்திலே இருக்கேன்'' என்றவர் அசட்டுச் சிரிப்புடன், ''ஸார் வீட்டம்மாளை அழைச்சிண்டு வரலியோ?'' என்று கேட்டார்.

ரகு அவரைப் பார்த்துப் புன்னகை செய்தான். ''எனக்கு இன்னும் கல்யாணமே ஆகல்லே.''

''ஓ! அப்படியா? உங்களுக்குச் சாயங்காலம் காபியோ பட்சணமோ வேணுமானுச் சொல்லுங்கோ. என் மகன் சுப்புடு இருக்கான். சமர்த்தன். உங்க அறையிலே வந்து குடுத்துடுவான்.''

''ஓ! எனக்கென்ன? அப்படியே செய்யுங்கோ. எனக்கும் உதவியாயிருக்கும்.''

ரகுவின் சம்மதத்தில் திருப்தி கொண்டவராய், ''வரேன், வரேன்'' என்று கூறிவிட்டுச் செல்லும் ஸ்ரீநிவாசையரின் நைந்த கோலத்தை மனம் வலிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான் ரகு.

சொன்னதுபோலவே ஸ்ரீநிவாசையர் மகன் சுப்புடுவின் கையில் காபியும் பட்சணங்களும் அனுப்பியிருந்தார். குச்சிகுச்சியாய் நீண்ட கைகளும் சோகை ஏறிய முகமுமாக வந்த சுப்புடுவிடம், அவன் கொண்டுவந்த பட்சணங்களை ரகு எடுத்து நீட்டி, ''நீயும் சாப்பிடு'' என்று சொன்னபோது சுப்புடுவின் முட்டைக் கண்கள் நம்ப இயலாமல் பெரிதாய் உருண்டன.

''எனக்கா தரேள்?''

''ஆமாம்'' என்று ரகு தலையை ஆட்டிச் சிரித்ததும், சொந்தங் கொண்டவன்போல் நெருங்கிவிட்டான் சுப்புடு. ''ஸார், நீங்க நல்லவரா இருக்கேள். இந்தச் சுகியன் சாப்பிடணும்னு எனக்கு ஆசை. எங்க ஆத்திலே செய்யற பண்டந்தான். ஒண்ணு தொட்டேனே, அப்பா நொறுக்கிப்புடுவார்.''

ரகுவின் மனம் நெகிழ்ந்தது.

சுப்புடுதான், மாலை நேரங்களில் பொழுது போவதற்கு ரகுவின் துணையாக இருந்தான் ரகுவின் அறைக்கு வந்தால் துறுதுறுவென்று கை கால்கள் பரபரக்க வாய் ஓயாமல் பேசுவான்.

ஒரு நாள் ரகு தவித்துத் திணறி, அந்தக் கேள்வியைக் கேட்டான். ஏனோ மனமெல்லாம் பதைத்தது. ''சுப்புடு, உங்க வீட்டிலே யாரது, ஒரு பெண், விதவை மாதிரி?''

சுப்புடுவின் முகம் 'உர்'ரென்று தேங்கிற்று. ''யாரு? அந்த மொட்டச்சியப்பத்தியா கேக்கறேள்? பேசிடாதீங்கோ. அவளைப் பத்திப் பேசினாலே உங்க நாக்கிலே சனி வந்திடும். மகா அசத்து!''

ரகுவின் கண்கோடியில் இரத்தம் உறைந்தது. சுப்புடு தொடர்ந்து சொன்னான்: ''என்ன பண்றது ஸார்? சொல்லுங்கோ. ஆத்திலே படற கஷ்டத்திலே, இவளைப் பண்ணிக்கக் கலெக்டரா வருவான்.? மூணாந்தாரமோ, நாலாந்தாரமோ ஒரு கிழவன் வந்து பண்ணிண்டு போனான். அப்போவே அவனுக்கு அறுபது இருக்கும். ஜானு போன முகூர்த்தம் அடுத்த வருஷமே கெழவன் காலை நீட்டிக் கட்டையைப் போட்டுட்டான். இவ மொட்டச்சியா வந்து மூலையிலே நின்னுட்டா!''

எவ்வளவு அலட்சியமாக, அவன் வயதிற்கே உரிய அறியாமையோடு இந்தச் சுப்புடு பேசுகிறான்! ரகுவிற்குத் தனிமையில் உட்கார்ந்து வாய்விட்டுக் கதறி அழ வேண்டும் போலிருந்தது.

சுப்புடு போனபிறகு தன் படுக்கையில் விழுந்து சிறு பையனைப்போல் கண்ணீர் வடித்தான் ரகு.

நாளைக்கு இந்த வீட்டை விட்டு மாற்றலாகி இந்த ஊரை விட்டே போக இருக்கிறான் ரகு. அதனால் தானோ என்னவோ, அந்தக் கடைசி நாளின் துணிச்சலோடு இருளைக் கிழிப்பதுபோல் மாடியில் முன்னும் பின்னுமாக நடந்துகொண்டிருந்தான். நடந்துவிட்ட அந்த நிஜத்தை இன்னும் நம்ப மறுப்பதுபோல் அவன் கண்கள் எதிர்த்த வீட்டின் இரும்புக் கம்பிகளிடையே இழைந்து, அப்புறமாய்க் கடந்து, 'ஜானு! ஜானு!' என்று அரற்றிக்கொண்டு தேடியது. திருவிழாக் கூட்டத்தில் கைப்பிடியைக் கழற்றிக்கொண்டு காணுமல் போய்விட்ட குழந்தையைப் பதைபதைத்துத் தேடுவதுபோல் மனம், 'ஜானு! ஜானு!' என்று ஜபமாய் ஜபிக்கிறது.

மனம் ஏனோ வெருண்டுகொண்டு பின்னோக்கி ஓடுகிறது. ரகுவிற்கும் ஜானுவிற்கும் அது பழக்கமாகிவிட்டது. உலகம் அடங்கிப்போன நள்ளிரவுக்கும் மேல், சோகத்தோடு மினுக்கும் நட்சத்திரங்களின் மங்கல் வெளிச்சத்தில் மாடியில் நின்று கீழே பார்ப்பான் ரகு. அந்தப் பார்வைக்கு எதிர்ப்பார்வை தந்து நிற்கும் ஜானுவோடு அர்த்தம் நிறைந்த மௌன பாஷையில் சம்பாஷிப்பதற்காக ரகு எத்தனை நாட்களில் தூக்கத்தைத் தியாகம் செய்திருக்கிறான்! அந்தக் கண்கள், சாலை போட்டு நீள்கிற அந்தப் பார்வை, தாபத்தின் சாபல்யத்துக்கு என்னதான் செய்துவிடக் கூடாது என்ற தவிப்பு அவனுக்குள்.

ஒருநாள் மாலை சுப்புடு கொண்டு வைத்துவிட்டுப் போன பட்சணத்தைச் சுற்றியிருந்த தாளில், எண்ணெய்ச் சுவடுகளுக்கிடையே மழுங்கிய பென்சில் முனையால் கோணல் மாணலாக என்னவோ கிறுக்கி இருந்தது. சுப்புடு போன பிறகு எடுத்து வைத்துக்கொண்டு வாசித்தான் ரகு.

'உங்களை எப்படிக் கூப்பிடறதுன்னு நேக்குத் தெரியலே. பரபுருஷாளோட இப்படியெல்லாம் நடந்துக்கறது மகா பாபம்னு தெரியறது. ஆனாலும். ஏதோ என்னை மயக்கறது. ராத்திரி முழுக்க நான் ஜன்னலை அடைக்கிறதில்லே. வேணும்னு இல்லே. என்னவோ அடைக்க மறந்துடறேன். நீங்க இல்லாத நேரத்திலேயுங்கூட உங்க பார்வை சிறையைக் கடந்து வந்து என்னைத் தொடர்றதுபோலத் தோணறது. போரும். நான் மனுஷர் பார்க்கக்கூடாத மகா பாவியான அமங்கலி; மொட்டைச்சி; இதைத் தவிர நான் ஒண்ணையும் உங்ககிட்டே இருந்து எதிர்பார்க்கல்லே. இதெல்லாம் சரியோ, பாவமோ, உங்க பார்வை என் ஜன்மத்துக்குச் சாபல்யம் கொடுக்கறது. அதுமட்டும் நெஜம். அது போரும். ஆகாசத்திலே மொதக்கற சந்திரனை மண்ணிலே நெளியற புழு பாக்கற மாதிரி உங்க தரிசனம் எனக்கு வேணும். அவ்வளவுதான்.''

ரகுவின் கண்களில் நீர் தளும்பியது. 'ஜானு, உன் நட்பிற்கு நான் என்ன செய்ய வேண்டும்?' மனம் உள்ளுக்குள் குரலிட்டு ஊமையாய் அழுதது.

மிகவும் அதிகாலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்துவிடும் ஜானு தெருக்கோடியில் இருக்கும் கோவிலை ஒட்டிய குளத்தில் யாருக்கும் அபசகுனமாய் எதிர்ப்பட்டுவிடுமுன் ஸ்நானம் செய்துவிட்டு வருவதைத் தெரிந்துகொண்டு ஒரு நாள் அந்த நேரத்துக்கு வந்து படித்துறையில் காத்துக்கொண்டிருந்தான் ரகு. சுற்றுப்புறத்தில் அவர்களைத் தவிர்த்து ஈ காக்கை யில்லை.

ஈர உடை உடம்பைக் கவிய முண்டிதமான தலையைச் சுற்றி ஈரப் புடைவையின் முன்றானை ஓரத்தை இழுத்து விட்டுக்கொண்டு குளத்து நீரில் 'சளக்'கென்று ஒலி எழும்ப

தந்தி: வெண் சங்கு போன்: 108

45 ஆண்டுகளாகத் தமிழ் மக்களின்
நல் ஆதரவு பெற்றது! நறுமணம் உள்ளது

நிறுவனர்

வெண்சங்கு ஸ்பெஷல் சீயக்காய்த் தூள்

5 காசு, 10 காசு, 100gm, 200gm
பொட்டலங்களாகக் கிடைக்கும்

நறுமண சீயக்காய்த் தூள்
வெண்சங்கு
REGD № 13817

மணத்தில் சிறந்தது !!
செல்வம்ராணி ஊதுபத்திகள்
(ஸ்பெஷல் மனோரஞ்சிதம், தாழம்பூ பத்திகள்)

அமர்ஜோதி பிராண்ட்
சுத்தமான
அரப்புத் தூள்
500 gm பொட்டலமாகக் கிடைக்கும்

M/s S. பெத்தண்ண நாடார், தஞ்சாவூர்

ஜானு படிக்கட்டில் ஏறிவரும்போது, அவள் பெரிய கண்கள்தாம் பளீரென்று தெரிந்தன. அகோரமாய்ச் சபிக்கப்பட்ட தேவதை போன்ற அவள் தோற்றம் ரகுவின் மனத்தைக் கசக்கிப் பிழிந்தது. படித்துறை மண்டபத்தின் மறைவான இருட்டிலிருந்து நேராக வெளிப்பட்டு எதிரே வந்து நின்றான்.

''ஜானு!''

சற்றும் எதிர்பாராத அவன் பிரத்தியட்சத்தில், அவன் அழைப்பில், விதிர்த்துப் போனவளாய், ரகுவின் முகத்தை ஏறிட்ட ஜானு, யாரும் தங்களைக் கண்டுவிடக்கூடாதே என்ற பீதி உடலை உதறிப் போடச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''பகவானே! ஏன் இப்போ வந்தேள்?''

ரகுவுக்கு நெஞ்சுக்குள் புரண்ட வார்த்தைகள் தொண்டையில் தடுமாறின. ஜானுவிடம் தன் அந்தரங்கத்தை வெளிப்படுத்திவிடவேண்டும் என்று துடிப்பாய் வருகிறது. அவள் மென்மையான கரத்தைப் பற்றி இழுத்து அதில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு ஆறுதல் பூரணமாய்ச் சூழும்வரை சோகமாய் அழுது தீர்க்க வேண்டும்போல் இருக்கிறது.

''ஜானு!...ஜானு!''

சட்டென்று தன்னிலையை உணர்ந்த துடிப்போடு ஜானு மளமளவென்று படியேறி மேலே வந்து நின்றாள். ஒரு கணம் 'சட்'டென்று திரும்பி அவனைப் பார்த்தாள். இப்போது, இவ்வளவு நெருக்கத்தில் அந்தப் பார்வை தன்னைக் கவிகையில் ரகுவின் நெஞ்சம் அதிகமாய் வலித்தது.

''நீங்க தெய்வம். என் அலங்கோலமான தோற்றத்துக்கு உள்ளே வந்து அங்கே தெரியற மனசைப் பாக்கறீங்க; நீங்க மேலேயே இருங்கோ, எனக்காக இப்படிக் கீழேயெல்லாம் நீங்க இறங்கி வரவேண்டாம். அதுக்கெல்லாம் நான் கொடுத்துவச்சிருக்கல்லே; நீசத்தி நான். என்னையும் மனுஷியா நெனைக்கிற ஆறுதல் இந்த ஜென்மாவிலே எனக்குப் போதும். அதுக்கும் மேலே ஒண்ணுக்கும் நான் ஆசைப்படலே.''

இருட்டினிடையே மெல்லிய சத்தத்தில் வார்த்தைகளை வீசிவிட்டு ஜானு அவன் பதிலுக்குக்கூடக் காத்திராமல் விடுவிடுவென்று நடந்து பார்வையில் கரைகிறாள்.

முதலாவதாகவும், கடைசியாகவும் ரகுவிடம் ஜானு பேசிய வார்த்தைகள்! அதன் பிறகு ரகு ஜானுவைப் பார்த்தது எந்த நிலையில்? நினைவின் தகிப்பால் ரகுவின் உடல் இப்போது கூட வியர்த்துப் பெருகியது. அந்த இடை கவிந்த காற்றிலெல்லாம் பெருமூச்சின் தாபமான உஷ்ணம் கலந்து குமிழியிட்டுக்கொண்டு அவனைக் கையாலாகாதவன் என்று குற்றம் சுமத்துகிறதோ?

எதிரே பார்த்தான் ரகு. அந்தக் கம்பி ஜன்னலின் கதவு சாத்தப்படாமல் திறந்தே கிடக்கிறது. யாராவது வந்து அதை அடைத்துவிட்டால்கூடத் தேவலை என்று படுகிறது.

இன்னும் அந்த ஜன்னல் ஏன் திறந்தே கிடக்கிறது?

இதே ஜன்னலின் இடைவெளியில் ஜானுவைப் பார்த்த கடைசித் தோற்றம் மனத்தை முட்ட, வெலவெலத்துப் போனான் ரகு.

அன்று இரவும், இரகசியம் தேங்கும் அர்த்த ஜாமத்தில் மாடியில் வந்து நின்ற ரகு, திறந்த எதிர்வீட்டு ஜன்னலின் வழியாக மகாப் பிரகாசமாக ஜானுவைக் கண்டான். ஜன்னலை ஒட்டிய தனி அறையை அவள் பூட்டிக்கொண்டிருக்க வேண்டும். சிரசிலிருந்து பாதம் வரையிலும் மண்ணெண்ணெயைக் குளிரக் குளிரக் கொட்டியிருக்க வேண்டும். 'சரக்'கென்று கிழித்துப் போட்ட அக்கினித் துண்டில் லயமாகித் திகுதிகுவென்று ஒரு பெரிய ஜோதியாய் எரிந்து கொண்டு நின்றாள் ஜானு.

''ஜானு!''

தெரு முழுவதுமே அந்த நள்ளிரவில் திரண்டு கூடிவிட்டது. உயிரைச் சுண்டி, ரகுவை நோக்கிப் பார்வையாக எறிந்துவிட்டிருந்த ஜானுவின், கருகிச் சின்னபின்னமாகி, பொசுங்கல் நாற்றம் தீய்ந்து கொண்டிருக்கும் உடலைத்தான் அவர்களால் மீட்டு எடுக்க முடிந்தது.

கண்டவர் மனத்தையெல்லாம் உலுக்கிவிட்ட அந்தச் சம்பவம் நடந்து மூன்று நாட்கள் ஆகவில்லை. வழக்கம்போன்ற குஷியோடு பட்சணங்களையும், காபியையும் ஏந்திக் கொண்டு சுப்புடு வந்தான்.

''ஸார்! காபி சாப்பிடுங்கோ.''

ரகுவின் மனத்தைக் குமட்டிக் கொண்டு அருவருப்பாய் வந்தது. எத்தனை நிச்சலனமாய் அந்த நிகழ்ச்சியை மனத்திலிருந்து ஒதுக்கிவிட்டு வந்து நிற்கிறான் சுப்புடு!

பிரமை கொண்டவன்போல் பட்சணத் தாளை அவசரமாய்ப் பிரித்து அருபமாய் ஏதேனும் எழுத்துத் தெரிகிறதா என்று பார்த்தான் ரகு. அங்கே கண்ட வெறுமை மனத்தில் சுட்டுத் தீய்த்தது. ''சுப்புடு, சுப்புடு! ஏண்டா உன் அக்கா ஜானு அப்படிச் செஞ்சுட்டா? ஏண்டா அக்கினியில் குளிச்சிட்டா?'' கண்களில் பிதுங்கிய நீர் கன்னத்தில் கோடிட்டுப் பொலபொலக்க, குரல் அடைக்கக் கேட்டான் ரகு.

சுப்புடு ரகுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். 'என்னமோ ஒரு மொட்டச்சிக்காக இந்த ஸார் ஏன் இப்படி வியாகூலப்பட்டிண்டிருக்கார்?' என்ற வியப்பு அவன் முகத்தில் தெரிந்தது. ரகுவின் அருகில் நெருங்கி வந்து சுற்றுமுற்றும் பார்த்தான் சுப்புடு. ''ஸார், ஜானு ரொம்ப மானஸ்தி. சுடுசொல் பொறுக்க மாட்டா. அக்கிரகாரத்தைச் சுத்தி, குண்டு சீதம்மாங்கற ஒருத்தி கோவில் யானை மாதிரி வலம் வரா பாருங்கோ; அவ அன்னிக்கு எங்கம்மாகிட்டே வந்து, மகா அபாண்டமா ஜானுவைப்பத்தி வத்தி வெச்சா. வெடியறதுக்கு முந்திக் குளத்துக்குப் போனாளாம் சீதம்மா. ஏதோ சத்தம் வரதேன்னு மண்டபத்து நிழல்லே ஒதுங்கியிருந்து கவனிச்சாளாம். இந்த ஜானு, ஏதோ ஒரு பரபுருஷனோடே பேசிண்டிருந்தாளாம்.

''பாருங்கோ ஸார்! எப்படியிருக்கிறது கதை? அபாண்டமா இப்படி ஏதோ சொன்னாள் சீதம்மா. அம்மாவுக்கு மகா ஆங்காரம் வந்துடுத்து. 'நெஜந்தானாடி? இது 'நெஜந்தானா? என்னைப் பழியெடுக்க வந்தவளே!'ன்னு ஜானுவைத் தொவச்சி எடுத்துட்டா.''

ஒருநொடி சுப்புடுவின் மனத்தை அந்த வேதனை கனமாய்ப் போட்டுப் புரட்டி எடுத்திருக்கவேண்டும். 'ஸார், கவனித்துவிடக் கூடாதே' என்பது போல் பெருகிய கண்ணீரை ஒற்றித் துடைத்துக்கொண்ட சுப்புடு, ஒரு வேதாந்தியின் குரலில் கூறினான்: ''நம்ம பொண்ணுங்கள்ளாம் தன்னைப் புனிதமானவள்ங்கறதை நிருபிக்க இருக்கற ஒரே வழி இந்த அக்கினிப் பிரவேசந்தானே ஸார்? டின்னிலே இருந்த மண்ணெண்ணெயைத் திரேகம் பூரா ஊத்திண்டு நீக்குளிச்சிட்டா ஜானு!''

''ஜானு!''

கையிலிருந்த சிகரெட் புகை கண்ணை உறுத்துகிறது. ஜன்னலின் கம்பிகள் எதிர்வீட்டு முற்றத்தில் வெளிச்ச மாறுபாட்டிற்கேற்ப நீண்டும் குறுகியும் ஜாலம் காட்டுகின்றன. லட்சுமியின் கல்யாணம் நிச்சயமாகிவிட்டதுபோலும்! கலகலப்புக் குறைந்து எல்லாரும் தூக்கக் கடையை விரித்து விட்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் பின்னால் தோற்றமற்ற கண்களிலிருந்து பிரவகித்துத் தன்னைச் சுற்றிச் சுற்றி வருகிற ஜானுவின் பார்வையைக் காட்சியற்ற ஸ்பரிசமாய் உணர முடிகிறது ரகுவுக்கு. 'இன்னிசையை மட்டுமே உண்டு அபசுருதி கேட்டால் தாளாமல் மாண்டுபோகுமாமே அசுணம்! ஜானு! நீயும் அதுதானோ?'

ரகு தனக்குத்தானே புலம்புவது போல் பேசினான். 'நாளைக்கு இந்த நேரத்தில் ஒரு புதுப்பாதையில் என் ரெயில் வண்டி புகையிட்டுக்கொண்டு ஓடும்.'

''ஜானு!'' அந்த இரண்டெழுத்தை அழுத்தமாய் உச்சரித்துப் பெருமூச்செறிந்த ரகு, யதேச்சையாய் வானத்தைப் பார்த்தான். எரியீட்டியைப் போல் குபீரென்று பற்றிக்கொண்டு எரிந்த ஒரு நட்சத்திரம் கண்விழியைப் பொசுக்குவதுபோல் பொறியடித்துக்கொண்டு நீலவானில் கரிந்து கண் மயங்கும் தொலைவில் மங்கலடித்துப்போய் விழுகிறது.

'அந்த நட்சத்திரம் தன்னை ஏன் இப்படி எரித்துக்கொண்டு விட்டது?'

*

இப்போது கெல்ட்ரான் அளிக்கிறது
டி.வி: வானில் புதியதோர் நட்சத்திரம் ஒளிவிடுகிறது. டி.வி. மாடல் TM 951. ஒரு டி.வி. சிறப்பு வாய்ந்ததாய் இருக்க வேண்டுமென்றால் விலை உயர்ந்ததாக இருக்க வேண்டியதில்லை என்பதற்கு ஓர் அத்தாட்சி. புகழ் வாய்ந்த கெல்ட்ரான் டி.வி. TM851ஐ உங்களுக்களித்த கெல்ட்ரான் நிறுவனம் உங்களுக்களிக்கிறது. உண்மையில் இது ஹை-பிடலிட்டி ஒலிபெருக்கியுடன் உள்ளடங்கிய வோல்டேஜ் ஸ்டபிலைஸரும் கொண்ட பல சானல்கள் உடைய விலைகுறைந்த புதிய மாடல் ஆகும். நீங்கள் TM 951 மாடலை வாங்கும்போது பழுதற்ற சிறந்த செயல் திறத்துக்கும தன்னிகரற்ற கெல்ட்ரான சேவைக்கும் உத்தரவாதம் உங்களுக்குக் கிடைக்கிறது.
TM 951 கெல்ட்ரான் டிவியின் சிறப்பம்சங்கள்:
● 12 சானல் தேர்வு
● துல்லியமான டியூனிங் ஏற்பாட்டால் மிகத் தெளிவான படமும் தரமான ஒலியும் கிடைக்கிறது
● 50 செ.மீ. திரையில் பிசிறற்ற தெளிவான படங்கள்
● இடையற்ற பட ஸ்திரத்தன்மை
● முன்னோக்கும் 15 செ.மீ ஹை-பிடலிட்டி ஒலிபெருக்கி உங்களுக்குத் தருவது தரமான ஒலி 3.5 வாட் ஒலி அளவு
● உள்ளடங்கிய வோல்டேஜ் ஸ்டபிலைஸர்
உங்கள் அருகிலுள்ள கெல்ட்ரான் டி.வி. விற்பனை நிலையத்தில் TM 951 கெல்ட்ரான் டி.வியைக் கண்டு உய்த்துணருங்கள்.
KELTRON
know-how to serve the people.
கேரளா ஸ்டேட் எலக்ட்ரானிக்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிட்.
பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை பங்களூர், திருவனந்தபுரம், ஹைதராபாத், அஹமதாபாத்
கிளை அலுவலகம்/டிவி சர்வீஸ் சென்டர்:
சந்தா பில்டிங், 551, மவுண்ட் ரோடு, சென்னை-600 018.
தொலைபேசி: 442310, 442216
FDS KE 852
புதிய எகானமி மாடல்
TM 951
12 சானல் சாலிட் ஸ்டேட் டி.வி.
கெல்ட்ரான் டி.வி.
வியத்தகு சாதனை

ELEGANT

கலைமகள் வாசகர்களுக்கு எம் தீபாவளி வாழ்த்து

ஸ்ரீ அகிலா ஆட்டோமோபைல்ஸ்

லாரி, பஸ், டிராக்டர் ஸ்பேர் பார்ட்ஸ்

கிடைக்குமிடம்:

101, கிழக்கு அரண்சாலை,

திருச்சிராப்பள்ளி - 600 008.

அலுவலகம் தொலைபேசி: *24911* : : வீடு தொலைபேசி: *27775*

மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் கோழி வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் லிமிடெட்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

சென்னை-18

செயல்படுத்தப்படும் திட்டங்களில் சில:

இந்நிறுவனம் மத்திய மாநில அரசுகளின் மான்ய உதவி பெற்றுச் செங்கை, வடஆற்காடு, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் சிறப்பு கோழி அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தினால் இதுவரை சிறுவிவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும், நிலமற்ற விவசாயிகளும் மொத்தம் 3611 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். இவர்களின் மாத வருமானம் சராசரி ரூ 100/- முதல் ரூ 150/-வரை அதிகரித்துள்ளது.

இந்நிறுவனம் மாநில அரசு செயல்படுத்தும் கோழிவளர்ப்புத் திட்டங்களுக்குத் தேவையான கோழிக் குஞ்சுகள், கோழித் தீவனம் முதலியன வழங்கி வருகிறது.

கோவையில் அரசூர் என்ற இடத்திலும், மதுரையில் கப்பலூர் என்ற இடத்திலும் நவீன சாதனங்களுடன் கூடிய இரண்டு குஞ்சு பொறிப்பகங்கள் நடத்திவருவதன் மூலம் மக்களுக்குத் தேவையான விரிய இனக் கோழிக் குஞ்சுகள் வழங்கி வருகிறது. மேலும் ஐ. எஸ். ஐ. சான்று பெற்ற தரமுள்ள தீவனம் தயார் செய்து விற்பனை செய்து வருகிறது.

மக்களுக்குத் தேவையான முட்டைகள், கோழியிறைச்சி முதலியன சீரான முறையில் தயார் செய்து நியாய விலையில் விற்பனை செய்து வருகிறது.

இந்நிறுவனத்தின் முயற்சியால் கோழிப்பண்ணைகளுக்கான மின்சார கட்டணம் 50 சத வீதம் குறைக்கப்பட்டுள்ளது. கோழிப்பண்ணைகளுக்குக் காப்புறுதி (இன்சூரன்ஸ்) வசதியும் செய்யப்பட்டுள்ளது.

கோழி வளர்ப்பு ஓர் இலாபகரமான தொழில்: நீங்களும் கோழி வளர்ப்பில் ஈடுபட ஆவலாக உள்ளீர்களா? உடனே தொடர்பு கொண்டு பயனடைவீர்.

டாப்கோ நிறுவனங்கள் உள்ள மாவட்டங்களில்:

உதவி மேலாளர்கள்,
தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் *(டாப்கோ)*

சென்னையில்:

நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம்,
561, அண்ணா சாலை, சென்னை-600018;
(தொலைபேசி: 443164)

DIPR/7113/80-17/AA

அமிர்தாஞ்சன்

தலைவலி, ஜலதோஷம், உடல்வலி இவை அனைத்தையும் போக்க இல்லந்தோறும் இருக்கவேண்டிய நல்ல மருந்து

தலைவலி, ஜலதோஷம், உடல்வலி ஆகியவற்றுக்கு சிறிதளவு அமிர்தாஞ்சன் தடவுங்கள். அதிலுள்ள அருமையான பத்து மருந்துப் பொருள்களின் கலவை, வியக்கத்தக்க வகையில் மிக விரைவில் நிவாரணம் அளிக்கும்.

சிக்கனமான ஜாடி, சிறிய பாட்டில் மற்றும் கைக்கு அடக்கமான சிறிய டப்பா — மூன்று அளவுகளில் கிடைக்கிறது அமிர்தாஞ்சன்.

அமிர்தாஞ்சன் — 60 ஆண்டுகளுக்கு மேலாக குடும்பங்களில் பயன்பட்டு வரும் நம்பகமான மருந்து

அமிர்தாஞ்சன் லிமிடெட்

WITH BEST COMPLIMENTS

&

HEARTY DEEPAVALI GREETINGS

FROM

LOTUS OFFSET PRESS

(QUALITY PRINTERS OF MULTICOLOUR LABELS, POSTERS, MAGAZINE WRAPPERS ETC.,)

9, Lotus Ramasamy Street

Royapuram, Madras 600 013

PH. 553422

தீபாவளி நல் வாழ்த்துக்கள்

செழுஞ் "சுடர்த் தீபம் போல்"

செயலெல்லாம் சிறப்பாகத்

தொழுந் தெய்வம் அருள்புரிக!

தூய்மை எங்கும் நிலவுகவே!

தி பாண்டிச்சேரி பேப்பர்ஸ் லிமிடெட்

பிள்ளையார் குப்பம்

பாகூர் கம்யூன்

பாண்டிச்சேரி

வடை செய்யும் நேரமோ மிகவும் குறைவு
40% எண்ணெய் மிகுவதால் மனதிற்கும் நிறைவு.

ஆர்கே
வடை மிக்ஸ்,
இன்ஸ்டன்ட் ஜாமூன் மிக்ஸ்
இட்லி மிக்ஸ்
மற்றும் தோசை மிக்ஸ்.

ORKAY

ஸ்ரீ
ராமகிருஷ்ணு
டேய்ரி,
179, விஸ்வேஸ்வரபுரம்
பெங்களூர் 560004.
போன்: 603482.

Dattaram RD 6

சுவை-மென்மை-வெண்மை இவை-மூன்றும்
சேர்ந்தே- ஆர்கே இட்லி ஆயிற்றே

ஆர்கே
இட்லி மிக்ஸ்,
இன்ஸ்டன்ட் ஜாமூன் மிக்ஸ்
வடை மிக்ஸ்
மற்றும் தோசை மிக்ஸ்.

ORKAY

ராமகிருஷ்ணு
டேய்ரி,
179, விஸ்வேஸ்வரபுரம்
பெங்களூர் 560004.
போன்: 603482.

Dattaram RD 7

வாயில் கரைந்ததே-மாயமாய்
மறைந்ததே-ஆர்கே குலாப் ஜாமூன்

ஆர்கே
ஜாமூன் மிக்ஸ்,
இன்ஸ்டன்ட் இட்லி மிக்ஸ்
வடை மிக்ஸ்
மற்றும் தோசை மிக்ஸ்.

ORKAY INSTANT JAMOON MIX

ஸ்ரீ
ராமகிருஷ்ணு
டேய்ரி,
179, விஸ்வேஸ்வரபுரம்
பெங்களூர் 560004.
போன்: 603482.

Dattaram RD 5

அனைவருக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்

'விரைவில்' தர நிர்ணயம் செய்யப்பட்டு
வெளி வர இருக்கிறது:-
"ராஜா ஸ்பெஷல் பைன்"
எமது விசேஷத் தயாரிப்பு:-
ஜாகுனுபைன், சுடர் டெக்ஸ்பைன்

சுடர்மணி
பனியன்கள்
&
பேன்ஸிரகங்கள்

TRADE MARK



சுடர்மணி நிட்டிங்ஸ்
திருப்பூர்-638604.

ஸ்டாக்கிஸ்ட் :
சபாபதி ஸ்டோர்ஸ், கிடங்குத் தெரு, சென்னை-600001
ஹமீதியா டெக்ஸ்டைல்ஸ், செக்காலை ரோடு, காரைக்குடி.
K. பூராசாமி, தேரடித் தெரு, திருவண்ணாமலை (N. A.)

Buma

இன்பம் பொங்கும்
தீப ஒளித் திருநாளில்
அனைவருக்கும் எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்

உங்கள் எதிர்காலம்
வளமுடனும் பிரகாசமாகவும்
இருக்க வேண்டும் என்பதற்காக
பாங்க் ஆப் தஞ்சாவூர் அநேக சீரிய சேமிப்பு
திட்டங்களை உருவாக்கியுள்ளது.
இவையனைத்தும் உங்கள் வாழ்வு புத்தொளி
பெற்று பிரகாசிக்க உதவும்.
மேலும் விபரங்களுக்கு இன்றே உங்கள்
அருகிலுள்ள பாங்க் ஆப் தஞ்சாவூர்
கிளை மேலாளரை சந்திக்கவும்.

SERVICE · SECURITY · STABILITY
ESTD : 1901

பாங்க் ஆப்
தஞ்சாவூர் லிமிடெட்

(வாழ்விற்கு வழிகாட்டும் சிறந்த வங்கி)
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : தஞ்சாவூர் - 613 001 (தமிழ்நாடு)

R. சொக்கப்பா — ஜெனரல் மானேஜர்
B.K. மாதவன் — சேர்மன்

உங்கள் குழந்தைகளுக்குச் சிறந்தது

ஆனந்தா கிரைப் வாட்டர்

இது குழந்தைகளின் வயிற்றுக்கோளாறு,
முக்கியமாக வயிற்றுவலி, மாந்தம்,
★ பொருமல், அஜீரணம், பல் முளைக்கும்போது ★
ஏற்படும் வயிற்றுப்போக்கு, தூக்கமின்மை
இவைகளைத் தடுக்க உதவுகிறது.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

use **Ananda Gripe Water** and

Keep Your Baby Well

தயாரிப்பாளர்:	*விநியோகிப்பாளர்:*
ஆனந்தா பார்மாசூட்டிகல்ஸ்	ஆனந்தா எம்போரியம்
பாண்டிச்சேரி-605009.	பாண்டிச்சேரி-605001.
Phone: 3063	**Phone:** 124

டா:.பே பிரதான விற்பனை உரிமை
பெருமையுடன் வழிவழியாக வளர்ந்துவரும் ஸ்தாபனம்.

MF
Massey Ferguson

TAFE

டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் இந்திய வேளாண்மைக்கு கடப்பாடு உடையவர்கள். அவர்களின் பரஸ்பர நம்பிக்கையால்தான், இந்தியநாடு முழுவதிலும் சிறந்த முறையில் அனைத்திந்திய பிரதான விற்பனை அமைப்பின் கீழ் விற்பனை மற்றும் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அவர்களின் கூட்டு முயற்சியால்தான் பல விற்பனை மையங்கள் ஒரு தலைமுறையையும் தாண்டி இயங்கி வருகின்றன. இதில் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மையங்கள் கால் நூற்றாண்டுக்கான பணிக்கென விருதுகள் பெற்றுள்ளன.

தொழில் ரீதியாக போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் வளர்ந்துவரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத் தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இந்திய வேளாண்மையை வளப்படுத்துவதைத் தத்துவமாகக் கொண்டுள்ளது—டா:.பே.

MF
Massey Ferguson

TAFE

ட்ராக்டர்ஸ் அண்ட் :.பார்ம் எக்விப்மென்ட் லிமிடெட்
சென்னை

MAC/T/45-A/Tam

தீபாவளி வாழ்த்துக்கள்



SHARDLOW

ஷார்ட்லோ இந்தியா லிமிடெட்

''ஹுஸூர் கார்டன்ஸ்'', செம்பியம்,

சென்னை-600 011

MAC/4

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

மின்னுவதெல்லாம் கவரிங் அல்ல! வேறு எந்தக் கவரிங் நகைகளிலும் அலிமா தங்கக் கவரிங் நகைகளில் உள்ள சிறப்பு அம்சங்களை நீங்கள் காணமுடியாது. மற்றக் கவரிங் நகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மின்னுவதெல்லாம் கவரிங் அல்ல என்பதை உணருவீர்கள்.

நீடித்த உழைப்பு மற்றும் கண்கவர் டிசைன்களுக்குப் பெயர் பெற்றது அலிமா கவரிங் நகைகள் ஒன்றே!

வளையல் மற்றும் காதணிகளுக்கு ஒரு ஜோடிக்குரிய விலை குறிப்பிடப்பட்டுள்ளது. வி. பி. மூலம் நகைகள் பெற நகைகளின் நம்பரையும் விலையையும் குறிப்பிட்டு எழுதவும். வி. பி. சார்ஜ் தனி. கேட்லாக் புத்தகம் வேண்டுவோர் 60 பைசா தபால் தலை அனுப்பவும்.

அலிமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

No. 34&46, ரங்கநாதன் தெரு, தி. நகர்,

சென்னை - 600017 (போன்: 446884&442715)

May this Festival of Lights bring Peace, Happiness and Prosperity unlimited

FROM

The House of 'Diana', the makers of quality 'Diana' Rolling Shutters and Rolling Grills with ISI mark

'Diana' in the Nation's Service for over 25 years

DIANA ROLLING SHUTTERS (MADRAS)

DIANA HOUSE

31, Walltax Road, Madras-600001

Telephone: 39682/83 Grams: 'MAZALTOB' Telex: 041-7385

MAY THIS DEEPAVALI AND THE ONES IN THE FUTURE BRING YOU HAPPINESS, PEACE AND PROSPERITY UNLIMITED

From

THE OWNERS OF THE OCEAN GOING VESSEL

m. v. VISALAKSHI

SPECIALLY CATERING TO THE NEEDS OF THE ANDAMAN & NICOBAR ISLANDS. OUR OTHER VESSELS:

m. v. KAMAKSHI - m. v. ISLAND GLORY

HAUERS LINES PRIVATE LTD.

DIANA HOUSE
31, WALLTAX ROAD, MADRAS 600 001
Phone: 39382 Grams: POTENTIAL
Telex: 041-7385

HEAD OFFICE

9, STEPHEN HOUSE
5, DALHOUSIE SQR. EAST
CALCUTTA - 700 001
Phones: 239444, 231683, 231762 & 232735
Grams: SUNNYISLES Telex: 021-3100

BRANCHES

61, Rajat Apartments
Mount Pleasant Road
Malabar Hills
BOMBAY-400 006
Phone: 819867 & 828205
Grams: POTENTIAL

Aberdeen Bazaar
PORT BLAIR-744 101
ANDAMANS.
Phone: 609 Grams: SRIKANTH

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 87, Mundakakanni Amman Koil Street, Madras-600 004.
Managing Editor: K. V. Jagannathan.

Fashion shows...
t every turn it's fun to be in Khatau voiles.
Khatau
VOILES